**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அது குறித்துப் பரிசீலிக்கும்.

**திரு. பி. ஆர். தாமஸ் :** மேல் பட்டப் படிப்பு சம்பந்தப்பட்ட வரையிலும், பல்கலைக் கழகமானாலும், கல்லூரிகளானாலும், அநேக இடங்களைக் காலி யாக வைத்திருக்கிறார்கள். இத்தகைய இடங்களை உடனுக்குடன் நிரப்ப வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பிக்குமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இடங்களைக் காலியாக வைத் திருக்க வேண்டுமென்று அரசு விரும்பவில்லை. ஆகவே அந்த இடங்களை நிறைவு செய்ய, வருகின்ற மாணவர்களுக்கு அந்த வாய்ப்பைத் தர வேண்டிய பொறுப்பு கல்லூரிகளுக்கும், பல்கலைக் கழகத்திற்கும் உண்டு. அதை அரசு வலியுறுத்தும்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** அரிசன மாணவர்களுடைய முன்னேற்றத் தைக் கருதி, தனியார் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளி கள் அரிசன மாணவர்களுக்கென்று தனியாக நடத்தப்படுகின்றன. அதைப் போல அரிசன மாணவர்களுக்கென்று கல்லூரிகள் ஆரம்பிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா ?

(பிற்பகல் 4-30)

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அப்படிப்பட்ட கருத்துரு ஒன்றும் இல்லை. முதலில் புதிய கல்லூரிகள் துவங்குகின்ற எண்ணம் அரசுக்கு இல்லை. கல்லூரிகளைத் தனிப்பட்ட முறையில் அரிசன மாணவர்களுக்கு என நாம் நடத்துவது என்பது வளர்ந்து வருகின்ற உலகில் அவ்வளவு சரியாக இருக் காது. அரிசன மாணவர்களுக்கு என்று நடத்தப்படுகின்ற பள்ளிக்கூடங்களில் கூட மற்றவர்களும் சேர்க்கப்படுகிறார்கள். பெயருக்கு வேண்டுமானால் அரிசன பள்ளிக்கூடம் என்று இருக்கலாம்.

**Thiru D. V. D'MONTE :** Sir, does the 18 per cent roservation for Harijans also include Harijan-converts to Christianity ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அரிசன மாணவர்கள் என்பது மதம் மாறியவர்களைக் குறிக்காது. ஆனால் கல்லூரியைப் பொறுத்தமட்டில், இப்பொழுது இருக்கின்ற பெரிய பிரச்சினை பல்வேறு வகுப்புக்களுக்கு மாண வர்கள் வருவதில்லை என்பதுதான்.

1979 மார்ச் 12]

(இ) ஏனைய வகுப்பைச் சேர்ந்த மாணவர்களால் மட்டுமல்லாமல் அரிசன மாணவர்களாலும் மறுக்கப்பட்ட சில பாடப்பிரிவுகளில் மட்டுமே, அரிசன மாணவர்கள் அனுமதிக்கப்படுகின்றனர் என்று புகார்கள் எவையேனும் வந்துள்ளனவா ?

(உ) ஆம் எனில், அரிசன மாணவர்கள் விரும்புகின்ற பாடப் பிரிவுகளில், அவர்களுக்கு என ஒதுக்கப்பட்டுள்ள இடங்கள் காலியாக இருந்தால், அவர்கள் சேர்க்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(இ) இல்லை.

(உ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ம. சங்கரலிங்கம் : அரிசன மாணவர்கள் சில பெரிய கல்லூரிகளிலே சயன்ஸ் அல்லது கணக்கு போன்ற பாடங்களைக் கேட்கும்போது, அவர்களைச் சேர்த்தால், தங்கள் கல்லூரி வெற்றிச் சதவிகிதம் குறைந்துவிடுமென்று கருதி, அந்தப் பாடங்களில் அவர்களைச் சேர்த்துக்கொள்ள மறுக்கிறார்கள். ஆனால் அப்படிச் சொல்லாமல், 'ஈ' குரூப்பில் தமிழ் மீடியத்தில் சேர்ந்துகொள் அல்லது சரித்திரப் பாடத்தை எடுத்துக்கொள் என்று சொல்லி, அதில் அவர்களைச் சேர்த்துவிடுகிறார்கள். அரிசன நலத்துறை சார்பில் அரிசன மாணவர்கள் உதவி பெறுகிறார்கள். எனவே எந்தெந்த வகுப்புகளிலே அவர்கள் சேர வேண்டுமென்று நினைக்கிறார்களோ, அந்த வகுப்புகளில் அவர்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று அரிசன நலத்துறை சிபாரிசு செய்யும் முறையை அரசு ஏற்படுத்துமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அரிசன மாணவர்களுக்கென எல்லாப் பிரிவுகளிலும், பாடங்களிலும் ஒதுக்கப்பட வேண்டிய இடங்கள் 18 விழுக்காட்டுக்குக் குறையாமல் செய்யப்படுகின்றனவா என அரிசன நலத்துறையினராலும், கல்லூரிக் கல்வித் துறையினராலும் பொது ஆய்வு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. மேலும் கல்லூரிகளின் தணிக்கை ஆய்வுகளின்போதும் 18 விழுக்காடு இடங்கள் அரிசன மாணவர்களுக்கு ஒதுக்கப்பட்டதில் எத்தனை அரிசன மாணவர்கள் சேர்க்கப்பட்டனர் என்றும், குறைவு ஏற்பட்டிருந்தால் என்ன காரணம் என்பதும் கவனிக்கப்படுகின்றன. அரிசன மாணவர்களிடமிருந்து மாணவர் சேர்க்கையின்போது, அவ்வப்போது பெறப்படும் கோரிக்கைகள். சம்பந்தப்பட்ட கல்லூரி முதல்வர்களுக்கு விதிமுறைகளின்படி நடவடிக்கை எடுக்க உடனுக்குடன் அனுப்பப்படுகின்றன. ஒதுக்கப்பட்ட இடங்களில் காலியிருந்தால் விரும்பப்படும் அரிசன மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதில் முறை பிறழ்வு ஏற்படுவதில்லை.

## Students' Note Books.

* 165 *Q.*—THIRU K. MEENAKSHISUNDARAM: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it has been brought to the notice of the Government that the note-books sold for the school students in shops are sold at a high price;

(*b*) if, so the action taken thereon; and

(*c*) whether the Government will insist on the traders in note-books, to indicate compulsorily the number of pages contained in the note-books sold by them?

## மாணவர்களின் குறிப்பேடுகள்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பள்ளி மாணவர்களுக்கு கடைகளில் விற்கப்படும் குறிப்பேடுகள் உயர்ந்த விலைகளுக்கு விற்க்கப்படுவது அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப் பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

(உ) குறிப்பேடுகளில், அவை எத்தனை பக்கங்களை கொண்டவை எனக் கட்டாயமாகக் குறிப்பிட்டு விற்பனை செய்யவேண்டுமென்று வியாபாரி களை அரசு வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(இ) மற்றும் (உ) கடைகளில் இருவகை குறிப்பேடுகள் விற்கப்படு கின்றன. ஒன்று மத்திய அரசினால் மலிவு விலையில் அளிக்கப்படும் காகிதத் தினால் தயார் செய்யப்பட்ட மலிவு விலைக் குறிப்பேடுகள், மற்றொன்று சாதாரண காகிதத்தில் செய்யப்பட்ட குறிப்பேடுகள், மலிவு விலை குறிப் பேடுகளில் அரசினால் நிர்ணயிக்கப்பட்ட விலை, பக்கங்கள் ஒவ்வொரு குறிப் பேட்டிலும் அச்சடிக்கப்பட்டுள்ளன. இக்குறிப்பேடுகளுக்கு அதிக விலை கொடுக்க வேண்டாமெனவும், யாராவது அதிக விலை கோரினால் காவல் துறை யினருக்குத் தெரிவிக்கும்படியும் விளம்பரங்கள் செய்தித்தாள்களில் செய்யப்பட் டுள்ளன. அவ்வாறு செய்யாத வியாபாரிகளுக்கு மலிவு விலை காகித ஒதுக்கீடு ரத்து செய்யப்படுவதுடன், காவல்துறையினருக்குத் தெரியப்படுத்தி நடவ டிக்கை எடுக்கப்படுகிறது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** [1979 மார்ச் 12 இந்த வினா சென்ற ஆண்டு பள்ளிகள் துவக்கப்பட்ட நாளில் தரப்பட்ட வினா. இப்பொழுதுதான் சேர்க்கப்பட் டிருக்கிறது. வரும் ஆண்டிலேயாவது இந்தக் குறைபாடுகள் இல்லாமல் நோட்டுப் புத்தகங்கள் குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட விலைக்குக கிடைக்கும் என்ற முறையில் அரசு இதை ஏற்றுக்கொண்டதற்கு நன்றி. இருந்தாலும், நோட்டுப் புத்தகங்களில் ஓரப் பகுதியில் இத்தனை பக்கங்கள் கொண்ட நோட்டுப் புத்தகம் என்று எண் குறிப்பிடுகிறார்கள். 100 பக்கங்கள், 200 பக்கங்கள், 300 பக்கங்கள் என்று ஒவ்வொரு நோட்டுப் புத்தகத்தின் ஓரங்களிலும் எண் குறிப்பிடுகிறார்கள். வாங்க வருகிறவர்களும் அப்படியே எண்களைப் பார்த்து வாங்கிச் சென்று விடுகிறார்கள். 300 பக்கங்கள் கொண்ட நோட்டுப் புத்தகத்தை வாங்குகிறவர்கள் அதற்கான பணத்தையும் செலுத்திவிட்டு, வீட்டில் போய் பார்த்தால், பக்கங்கள் சரியாக இருக்காது. நோட்டுப் புத்தகங்களில் எண்கள்தான் இருக்கின்றன. பக்கங்கள் சரியாக இல்லை. அப்படி வியாபாரிகள் நோட்டுப் புத்தகத்தில் மோசடி செய்கி றார்கள். அதையும்தான் நான் கேட்டேன். அப்படிப்பட்ட குறைபாடுகள், மோசடிகள் வருங்காலத்தில் இல்லாமல் அதற்குரிய ஏற்பாட்டினை மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் செய்வார்களா என்று நான் கேட்டுக்கொள்வ தோடு . . . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** முதல் வினா, துணை வினா. அடுத்தது துணைத் துணை வினாவா ? (சிரிப்பு).

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு தலைவரவர்களே, ஒன்றுக்கு மேல் அனுமதிக்கமாட்டார்களோ, சான்ஸ் கொடுப்பார்களோ என்று பயந்து கொண்டு அப்படிக் கேட்டேன். நோட்டுப் புத்தகங்கள் தயாரிப்பதைப் பொறுத்தவரை, இரண்டு விதமான வியாபாரிகள் இருக்கிறார்கள். ஒரு சாரார் பெரும் முதல் வைத்து நடத்துகின்ற மலர்ஸ். இன்னொரு சாரார் மேனுபேக்சரர்ஸ். நம்முடைய சென்னையிலே கூட ஏறத்தாழ 70 யூனிட் மேனுபேக்சரர்ஸ், சிறு தொழில் உற்பத்தியாளர்கள், சிறுதொழில் வளர்ச்சிக்கு உள் கமிஷன் இருக்காது. இந்தச் சிறு தொழிலை உற்பத்தி செய்பவர்களுக்கே நேரடியாகத் தந்தால், விலை குறைவாகவும் தரமாகவும் அவர்களால் தர முடியும். இதையும் அரசு பரிசீலிக்குமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாணவர்களுக்குக் குறிப்பேடுகள், பாடப் புத்தகங்கள் போன்றவற்றைத் தயாரிப்பதற்காக மத்திய அரசு ஆண்டுதோறும் மலிவு விலைக்குப் பேப்பர்களைத் தருகிறது. உற்பத்தி யாளர் சங்கத்தின் மூலமாக பல்வேறு இடங்களிலும் உள்ள நோட்டுப் புத்தக

உற்பத்தியாளர்களுக்கு அவை தரப்படுகின்றன. அந்த வகையில்தான் அவர்கள் அவற்றைப் பெற்றுத் தயாரிக்கிறார்கள். இதில் தவறு செய்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கின்ற வகையில் அத்தியாவசியப் பண்டங்களின் பட்டியலில் நோட்டுப் புத்தகங்களையும் சேர்த்து மத்திய அரசு ஆணை வெளியிட்டுள்ளது. மத்திய அரசின் வேண்டுகோளின்படி, அதற்கான கட்டுப்பாட்டு ஆணையை அரசு வெளியிட இருக்கிறது. அப்படிப்பட்ட ஆணை வெளியிடப்பட்ட பின்பு அவ்வாறு தவறு செய்பவர்களுக்கு சட்டப்படி தண்டனை வழங்க முடியும்.

**புலவர் புலமைப்பித்தன்:** ஒரு சில பள்ளிகளில் குறிப்பேடுகளுக்காகக் குறிப்பிட்ட தொகையை வாங்கிக்கொண்டு ஒரு சில குறிப்பேடுகளைக் கொடுத்து சரியாகப் போய்விட்டது என்று சொல்வதாக நான் கேள்விப்பட்டேன். அவ்வாறு பள்ளிகளில் தவறு செய்யப்படுவதைக் கண்காணித்து, அப்படிப்பட்டவர்கள் மீது அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா என்று, அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** ஒரு சில பள்ளிகள் என்று பொதுவாகச் சொல்வதால், நாம் எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது. குறிப்பாக இந்தப் பள்ளிக்கூடம் என்று சொன்னால், நடவடிக்கை எடுக்கலாம்.

**திரு. பி. மாணிக்கம்:** 1980 ஆம் ஆண்டிலிருந்து பேப்பர் நெருக்கடி ஏற்படும் என்று உலக ரீதியாக எச்சரிக்கை உள்ளது. மேலும் தமிழகத்தில் மாணவர்கள் குறிப்பேடுகளை ஒரு பெரிய சுமையாகச் சுமந்து செல்கிறார்கள். இந்தக் குறிப்பேடுகளின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கு அரசு யோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தேவையைப் பொறுத்துத்தான் நோட்டுப் புத்தகங்களை வாங்க வேண்டுமென்று ஆசிரியர்கள் மாணவர்களைக் கேட்டுக்கொள்கிறார்கள். அந்த அடிப்படையில்தான் அவர்கள் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஒருவேளை நாம் வாங்கிப் படித்த புத்தகங்களை விட இப்பொழுது மாணவர்களுக்கு அதிகமாகப் புத்தகங்கள் இருக்கின்ற நிலை இருக்குமானால், அது எல்லாம் அறிவு வளர்ச்சி சம்பந்தப்பட்டது.

**திரு. க. அறிவழகன்:** குறிப்பேடுகள் நியாயமான விலைக்கு விற்கப்பட வேண்டுமென்ற நல்ல எண்ணத்தின் அடிப்படையில் கடந்த 4, 5 ஆண்டுகளாக எடுத்திருக்கக்கூடிய முயற்சிகளின் விளைவாக விலை குறைவாக இருக்கிறது. அதுபோல் எழுத உபயோகிக்கப்படுகிற பென்சில்கள், பேனாக்கள், பேப்பர்கள் போன்றவை குறைந்த விலைக்கு விற்கப்பட வேண்டியவைகள்.

அவை இன்றைக்குக் குறைந்த விலைக்குத் தரமாகக் கிடைப்பதில்லை. அவை குறைந்த விலைக்கு, தரமாகக் கிடைப்பதற்கேற்ற வகையில் அரசு புதிய முயற்சியை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அவைகளெல்லாம் இப்பொழுதே தாராளமாக நல்ல முறையில் கிடைத்து வருகின்றன.

**திரு. பி. ஆர். தாமஸ் :** பாடப் புத்தக நிறுவனம் இந்தப் பொறுப்பினை ஏற்று நோட்டுப் புத்தகங்களைத் தயாரித்து, பள்ளிக்கூட மாணவர்களுக்குக் குறைந்த விலைக்கு, தரமாக வழங்கலாம். அத்தகைய கருத்து அரசுக்கு இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாணவர்களுக்குத் தேவையான பாடப் புத்தகங்களை இப்பொழுது தமிழ் நாடு பாடநூல் நிறுவனம் வெளியிட்டு செயல்படுத்தி வருகிறது. அதே நிறுவனம் மாணவர்களுக்குத் தேவைப்படுகின்ற நோட்டுப் புத்தகங்களையும் ஏன் வெளியிடக் கூடாது என்கின்ற யோசனையை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். பல தரப்பிலிருந்தும் அப்படிப்பட்ட யோசனைகள் வந்து கொண்டிருக்கின்றன. அதை அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது.

THIRU G. VASANTHA PAI : Sir, will the Government consider the possibility of these wholesalers supplying the note-books to the schools themselves for distribution to the students because it will save these middlemen making any profits besides ensuring easy distribution to the students as well ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** உயர்நிலைப் பள்ளிகளிலும் மேல் நிலைப் பள்ளிகளிலும் கூட்டுறவுக் கடைகளின் மூலம் அவைகளை வழங்க வேண்டுமென்று அரசு தெரிவித்திருக்கிறது. அவைகள் துவங்கப்படுமானால், இடையில் இருக்கின்றவர்களால் விளைவிக்கப்படுகின்ற சங்கடங்கள், மோசடிகள் இருக்காது. நேரடியாக மாணவர்களுக்குக் குறைந்த விலையில் கிடைப்பதற்கான வாய்ப்பு உண்டாகும்.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** காகிதக் கட்டுப்பாடு இருக்கின்ற காரணத்தால், மாணவர்களுக்குத் தேவைப்படுகின்ற அளவுக்கு நோட்டுப் புத்தகங்களை உற்பத்தியாளர்களால் பள்ளிக்கூடம் ஆரம்பிக்கும்போதே, கல்வியாண்டுத் துவக்கத்திலேயே கொடுக்க முடியவில்லை. காகிதக் கோட்டாவை நோட்டுப் புத்தக உற்பத்தியாளர்களுக்கு அதிகமாகக் கொடுக்க நடவடிக்கை எடுக்க இந்த அரசு முன்வருமா ? அதேசமயம், பாடநூல்



நிறுவனத்தின் மூலம் நோட்டுப் புத்தகங்களை உற்பத்தி செய்து வழங்குவது பற்றிப் பரிசீலிக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். புத்தகங்களை இந்த நிறுவனம் வழங்குவதிலேயே தாமதம் இருக்கிறது. டிசம்பர், ஜனவரி மாதங்களில்தான் மாணவர்களுக்குப் புத்தகங்கள் கிடைக்கின்றன. இந்நிலையில் நோட்டுப் புத்தகங்களை உற்பத்தி செய்கிற பணியினையும் தமிழ் நாட்டு பாடநூல் நிறுவனத்துக்குக் கொடுத்தால் இன்னும் நிலைமை மோசமாகாதா என்பதை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவதோடு, நோட்டுப் புத்தக உற்பத்தியாளர்களுக்கு இப்பொழுது வழங்கப்படுகிற காகிதக் கோட்டாவின் அளவை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தமிழ நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் மூலம் இப்பொழுது மாணவர்களுக்கான பாடப் புத்தகங்கள் மட்டும் தான் வெளியிடப்படுகின்றன. மத்திய அரசினால் மலிவு விலையில் நோட்டுப் புத்தக உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்படுகிற காகிதங்களை, அவர்கள் நோட்டுப் புத்தகங்கள் தயாரிக்காமல், அண்டை மாநிலங்களுக்கு குறிப்பாக கேரளம் போன்ற பகுதிகளுக்குக் கடத்தியதாகக் குற்றச்சாட்டு வந்தது. தனிப்பட்டவர்களுக்கு உரிமை கொடுக்கப்பட்டதால், இத்தகைய குற்றச்சாட்டு வந்தது. அந்தக் குற்றச்சாட்டுக்கு நாம் மறுபடியும் ஆளாகாமலிருக்க, இந்த முறைகளைக் கையாண்டால், நன்றாக இருக்கும் என்ற யோசனை அரசுக்கு இருக்கிறது.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** தவறு வியாபாரிகளால் தான் வருகிறது. அவர்கள் முறையாக அதைச் செய்யாததால், நேரடியாக ஈடுபட்டிருக்கிற சிறு சிறு அச்சகங்களுக்கு இந்த வாய்ப்பினைத் தந்து அவர்களை அரசு பயன் படுத்துமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அவர்களும் நாளடைவில் வியாபாரிகளாக ஆகிவிடுவார்கள்.

## *V. C. High School, Omalur.*

*** 166 *Q.*—THIRU C. R. LAKSHMIKANDHAN (on behalf of THIRU S. MUTHUSWAMY) : Will the Hon. the Minister for Education be pleased to state—**

**(*a*) the basis on which vacancies in the post of Headmasters, arising in the Private High Schools taken over temporarily by the Government are filled up ; and**

(*b*) whether this basis was followed in the case of V. C. High School at Omalur, Salem district, which was taken over by the Government?

**ஓமலூர் வி. சி. உயர்நிலைப் பள்ளி.**

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் (திரு. செ. முத்துசாமி சார்பில்):** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசு தற்காலிகமாக சட்டப்படி ஏற்றுள்ள தனியார் உயர்நிலைப் பள்ளிகளில், காலி ஏற்படும் தலைமை ஆசிரியர்கள் பதவிகளுக்கு நியமனம் எந்த அடிப்படையில் செய்யப்படுகிறது?

(இ) இப்படி ஏற்றுக்கொண்டுள்ள சேலம் மாவட்டம், ஓமலூரில் உள்ள வி. சி. உயர்நிலைப் பள்ளியின் தேர்வில் இந்த அடிப்படை பின்பற்றப் பட்டதா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) தமிழ் நாடு தனியார் பள்ளிகள் (ஒழுங்கு முறைப்படுத்தும்) விதிகள், 1974, பிரிவுகள் 15 (4) (i) மற்றும் (ii)க் கிணங்க, பள்ளியில் பணி புரியும் ஆசிரியர்களுள் தகுதி வாய்ந்தவர் ஒருவர் தலைமை ஆசிரியராக நியமிக்கப்படுவார்.

(இ) இந்தப் பள்ளி நிர்வாக உறுப்பினர்களில் சச்சரவு ஏற்பட்டதன் காரணமாக அரசாணை நிலை எண் 1863, கல்வி, 25—8—1976-ன்படி அரசு உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் ஒருவர் அயற்பணி நிபந்தனையின் கீழ் நியமிக்கப்பட்டிருந்தார். அவாது அயற்பணி காலம் முடிவுற்றதும் 11—9—1978 அன்று இந்தப் பள்ளியில் மூத்த பட்டதாரி ஆசிரியர் திரு. அ. கோவிந்தராஜன் தலைமையாசிரியராக நியமிக்கப்பட்டார்.

(பிற்பகல் 4-40)

**திரு. ம. சங்கரலிங்கம் :** தாற்காலிகச் சட்டப்படி ஒரு தகுதி வாய்ந்த தலைமை ஆசிரியரை அரசு நியமிப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படி தலைமையாசிரியரை நியமிக்கும்போது, பணி மூப்பை அடிப்படையாகக் கொண்டுதான் நியமிக்க வேண்டுமென்று தனியார்த் துறைப் பள்ளிகளுக்கு அரசு அறிவுறுத்துவதைப்போல், அரசு ஏற்றிருக்கிற பள்ளிகளிலும் தாற்காலிகமாக ஒரு தலைமையாசிரியரை நியமிக்கும்போதும், பணிமூப்பின் அடிப்படையிலேயே நியமிக்கும் கொள்கையை அரசு ஏற்குமா?



**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** பதவி உயர்வு அளித்து தலைமையாசிரியர் நியமனம் செய்யப்படும்போது, ஆசிரியர்களின் பணிமூப்பு நிலையை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு நியமிப்பதில்லை,

**திரு. சி. இராமலிங்கம் :** தலைமை ஆசிரியர் பதவி உயர்வுக்காக, ஆசிரியர்கள் எம்.ஏ. பட்டம் பெற உதவியாக பரிட்சைக்குப் போக என்று 4 மாத அளவுக்கு லீவு எடுக்கிறார்கள். இந்த லீவை மாணவர்களின் பரீட்சை காலத்தில் எடுப்பதால் அந்த வகுப்புகளை நடத்த வேறு ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்களா? அதன் மூலம் வகுப்பு மாணவர்களின் படிப்பு கெடாமலிருக்க அரசு உத்தரவாதம் கொடுக்குமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** உறுப்பினர் அவர்கள் இதற்கான பதிலைப் பெற தனிக் கேள்வி போட வேண்டும்.

**திரு. பி. ஆர். தாமஸ் :** பொதுவாக, தனியார் துறைப் பள்ளிகளில் பதவி உயர்வு என்பது, ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், வேண்டியவர்களுக்கு ஒரு சட்டம், வேண்டாதவர்களுக்கு ஒரு சட்டம் என்ற முறையில்தான் பின்பற்றப்படுகிறது. எனவே கல்வித் துறையினர், பணி மூப்பின் அடிப்படையில்தான் ஆசிரியர்களுக்குப் பதவி உயர்வு வழங்க வேண்டுமென்று தனியார் துறை நிருவாகங்களுக்கு அறிவுரை வழங்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** பணிமூப்பு அடிப்படையை மட்டுமே வைத்து, பதவி உயர்வு தரப்பட வேண்டுமென்று வற்புறுத்தினால், அதன் காரணமாக கல்வியின் முன்னேற்றம் பாதிக்கப்படும் வாய்ப்பும் இருக்கிறது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** அரசுத் துறைப் பள்ளிகளைப் பொறுத்தவரையில், தலைமையாசிரியர் பதவி உயர்வு என்பது ஆசிரியர்களின் பணிமூப்பின் அடிப்படையில்—அதாவது சீனியாரிட்டி பேசில்—கொடுக்கப்படுகிறது. எனவே அதைப்போலவே தனியார் துறைப் பள்ளிகளில் தலைமை ஆசிரியர் பதவி உயர்வு இல்லாமல் அந்தத் தனியார் துறை பள்ளிகளின் பாதுகாப்புச் சட்டத்தில் 'மெரிட்' என்ற வார்த்தையையும் சேர்த்திருப்பதால், அதை நிருவாகம் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்துவதன் காரணமாக, பலர் பாதிக்கப்படுகிறார்கள். அதன் காரணமாகத்தான் உறுப்பினர் திரு. தாமஸ் அவர்கள் ஒரு கேள்வியைக் கேட்டார்கள். எனவே அரசு தனது கருத்தை மறுபரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

## நகராட்சி பேருந்து நிலையங்கள்.

**திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

பேருந்து நிலையங்களில் உள்ள பொது கழிப்பிடங்களை பயன்படுத்திக் கொள்வதற்காக, பொது மக்களிடமிருந்து கட்டணங்கள் வசூலிக்கின்ற நகராட்சிகளின் பெயர்கள் யாவை?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :**

1. கம்பம்.
2. செங்கற்பட்டு.
3. ராசிபுரம்.
4. ஆத்தூர்.
5. திருச்செங்கோடு.
6. ஸ்ரீரங்கம்.
7. தஞ்சாவூர்.
8. மன்னார்குடி.
9. கத்திவாக்கம் நகரியம்.
10. ஈரோடு.
11. மாயூரம்.
12. பட்டுக்கோட்டை.
13. பொள்ளாச்சி.
14. கோபிசெட்டிபாளையம்.
15. விழுப்புரம்.
16. திருச்சிராப்பள்ளி.
17. கோயம்புத்தூர்.
18. நாமக்கல்.
19. சத்தியமங்கலம்.
20. கும்பகோணம்.
21. குன்னூர்.
22. கரூர்.
23. சேலம்.
24. காரைக்குடி.
25. திருப்பத்தூர்.
26. இராமநாதபுரம்.
27. பழனி.
28. உடுமலைப்பேட்டை.

**திரு. க. இராமமூர்த்தி :** நான் இந்தக் கேள்வியை திண்டிவனம் நகராட்சியை மனதில் வைத்துக்கொண்டுதான் கேட்டேன். ஆனால் இங்கே படிக்கப்பட்ட பட்டியலில் திண்டிவனம் நகராட்சியின் பெயர் வரவில்லை. திண்டிவனத்தில் காண்ட்ராக்டர்கள் மூலமாக பேருந்து நிலையக் கழிப்பிடங்களில் கட்டணம் வசூலிக்கிறார்கள். எனவே அரசுக்குத் தகவல் தவறாக வந்துள்ளதா அல்லது உண்மையிலேயே திண்டிவனம் நகராட்சிப் பேருந்து நிலையக் கழிப்பிடங்களில் கட்டணம் வசூலிக்கப்படுவதேயில்லையா?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** திண்டிவனம் நகராட்சிப் பேருந்து நிலையக் கழிப்பிடங்களில் நேரடியாகக் கட்டணம் வசூலிக்கிற முறையில்லை. ஆனால் தவறாக அங்கே நடைபெற்றால், அரசு அதுபற்றி விசாரித்து நடவடிக்கை எடுக்க முன்வரும்.

**திரு. க. இராமமூர்த்தி :** அமைச்சர் அவர்கள் சொல்வதை நான் ஏற்றுக் கொள்கிறேன். என்றாலும் திண்டிவனத்தில் நிச்சயமாகக் கட்டணம் வசூலித்துக் கொண்டிருக்கிறார்கள். பல பேருந்து நிலையங்களில் இது போன்ற வசூலில் ஈடுபட்டிருக்கிறார்கள். பெரும்பாலான இடங்களில் காண்ட்ராக்டர்கள் மூலமாக இந்த வசூல் நடைபெறுகிறது. சில இடங்களில் நகராட்சிகளே நேரடியாக இந்த வசூலை நடத்துகிறார்கள். இதன் விளைவாக பேருந்துகளின் மூலம் ஒரு ஊரிலிருந்து மற்றொரு ஊருக்குச் செல்லும் பயணிகள் இடையில் பஸ்கள் மாறும் போது, அவசரமாக இப்படிப்பட்ட கழிப்பிடங்களுக்குப் போக வேண்டியதிருக்கிறது. அப்படிச் செல்லும்போது, அந்தக் கழிப்பிடங்களில் கட்டணம் வசூலிக்கிறார்கள் என்று தெரியாமல், அவைகளை உபயோகப்படுத்துவதன் காரணமாக அவர்களை அலட்சியமாகவும் அசிங்கமாகவும் பேசுகிற நிலை ஏற்படுகிறது. குறிப்பாக, பெண்கள் அந்தக் கழிப்பிடங்களுக்குப் போகிறபோது, அவர்களை மிகக் கேவலமாக நடத்துகிற நிலை இருக்கிறது. எனவே இதைத் தவிர்க்க இதுபோன்ற கழிப்பிடங்களைப் பயன்படுத்த பணம் வசூலிக்கிற முறையை அரசு ரத்து செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** ஏற்கெனவே இருக்கிற கழிப்பிடங்களோடு கூடுதலாக இந்தக் கழிப்பிடங்கள் அமைக்கப்படுகின்றன. இது எல்லா இடங்களிலும் சிறப்போடு நடைபெறுவதாகத்தான் தகவல் இருக்கிறது. இதனால் நகரசபைகளுக்குக்கூட நிறைய வருமானம் கிடைப்பதாகத் தெரிகிறது. இங்கெல்லாம் தவறு நடைபெறுவதாகவோ, முறைப்படி நடக்கவில்லையென்றோ புகார் வந்தால் அவைகளை நீக்க அரசு முன்வரும்.



**திரு. வே. தங்கப்பாண்டியன் :** உள்ளாட்சி மன்றங்கள், நகராட்சி மன்றங்கள் மற்றும் மாநகராட்சி மன்றங்கள் தங்கள் எல்லையில் கழிப்பிடங்களை வைப்பது என்பது ஒரு அத்தியாவசியமான நடவடிக்கை. எனவே இந்த வசதிக்காக கட்டணம் வசூலிப்பது முறையா? இந்த முறை மற்ற மாநிலங்களெவைகளிலேனும் பின்பற்றப்படுகிறதா? எனவே அரசு இந்தக் \ கட்டணம் வசூலிப்பதை ரத்து செய்ய முன்வருமா?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** நீண்ட காலமாக இந்த முறை பின்பற்றப்பட்டு வருகிறது. கழிப்பிடங்கள் சீராக இருக்க வேண்டும், சுத்தமாக இருக்க வேண்டும் என்ற அடிப்படையில்தான் அங்கே ஒரு முழுநேர ஊழியர் ஒருவர் அமர்த்தப்பட்டிருக்கிறார். அதைத் தவிர அங்கே கண்ணாடி போன்ற வேறு வசதிகளும் செய்யப்பட்டிருப்பதால் அதற்காகக் கட்டணம் கொடுப்பது தவறு இல்லை என்றே கருதுகிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** இங்கே தவறுகள் நிகழாத வகையில் பெண்களின் கழிப்பிடங்களில் பெண் ஊழியர்களை நியமிக்கவும், ஆண்களை நியமித்து பெண்களை அசிங்கப்படுத்தாமல் இருக்கவும் அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** அரசு அதை நிச்சயமாகப் பரிசீலிக்கும்.

**திரு. எம். சங்கரலிங்கம் :** நகராட்சி மன்றங்களிலே இருக்கிற பேருந்து நிலையங்களில் உள்ள கழிப்பிடங்களை எப்போதும் சுத்தமாக வைத்துக் கொள்ள, தனியாக அலுவலர்களை, அதிகாரிகளை, துப்புரவாளர்களை நியமிக்கிற உத்தேசம் அரசுக்கு உண்டா? உதாரணமாக திருநெல்வேலி நகராட்சி மன்றப் பேருந்து நிலையக் கழிப்பிடத்தில் யாரும் போய்விட்டு வரமுடியாதபடி அலங்கோலமாக இருக்கிறது. எனவே நகராட்சி மன்றங்களைச் சார்ந்த இந்தப் பேருந்து நிலையக் கழிப்பிடங்களை எப்போதும் சுத்தமாக வைத்துக்கொள்ள தனித் துப்புரவாளர்களை நியமிக்க அரசு வழிவகை செய்யுமா?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** நகராட்சி சுகாதார அதிகாரியும், சுகாதாரப் பணியாளர்களும் அப்படிப்பட்ட பணிகளுக்காகத்தான் அமர்த்தப்பட்டிருக்கின்றனர். இந்தப் பணி ஒழுங்காக நடக்கவில்லை என்றால், நிச்சயமாக அவைகளைக் கண்டுபிடித்துத் திருத்த, வேண்டிய நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும்.

**வினாக்கள்—விடைகள்**

[1979 மார்ச் 12

**திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் :** இந்தக் கழிப்பிடங்களை எல்லா இடங்களிலும் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டியது அவசியம். அங்கே கண்ணாடி வைத்திருக்கிறார்கள், ஆகவே, அதற்காக பணம் வசூலிக்கிறோம் என்பது நியாயமில்லை. ஒருவருக்குக் கையிலே பணமில்லை; அவசரமாகக் கழிப்பிடத்திற்குச் செல்ல வேண்டுமென்றால், அப்படிப்பட்டவர்களுக்குப் பணம் கொடுப்பதிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** அதற்காகத்தான் ஏற்கெனவே அங்கெல்லாம் இலவசக் கழிப்பிடங்கள் இருக்கின்றன. இலவசக் கழிப்பிடங்களாக உபயோகிக்கும் வசதி ஏற்கெனவே இருப்பதால், அவைகளைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** பேருந்து நிலையங்களில் உள்ள கழிப்பிடங்களில் கட்டணம் வசூலிக்கப்படும் இடங்கள் என்று 20, 25 இடங்களின் பெயர்களைப் படித்தார்கள். உண்மையில் பெருவாரியான கழிப்பிடங்கள் சுத்தமாக இல்லை. அங்கே துப்புரவாளர்கள் இல்லை, தண்ணீரும் இல்லை. எனவே பஸ்களில் செக்கிங் இன்ஸ்பெக்டர்கள் போடப்பட்டிருப்பதைப் போல் இவைகளையும் சூப்பர்வைஸ் செய்து சுத்தமாக வைத்துக்கொள்ள அரசு ஏற்பாடு செய்யுமா ?

(பிற்பகல் 4-50)

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** மேற்பார்வைக்காகத்தான் 'சானிட்டரி இன்ஸ்பெக்டர்கள்' மற்றும் சுகாதார அதிகாரிகள் இருக்கிறார்கள். அதற்கும் மேலாக நகராட்சி ஆணையாளர் இருக்கிறார். அவருக்கு மேலாக, உள்ளாட்சித் துறை அமைச்சர்கூட அடிக்கடி பார்வையிடுகிறார்.

**திரு. ஆ. இராவிடமணி :** ஊருக்கு உள்ளே இருக்கின்ற பொதுக் கழிப்பிடங்களுக்குக் கட்டணம் வசூலிக்கலாம். ஆனால் பஸ் நிலையத்திலே இருப்பதற்கு கட்டணம் வசூலித்தால் அதிலே பல சிக்கல்கள் இருக்கின்றன. கணவன் மனைவி போகிறார்கள் என்றால், மனைவி கழிப்பிடத்துக்கு உள்ளே சென்று, அவசர அவசரமாகத் திரும்பும்போது 10 காசு, 10 காசு என்று அங்கிருப்பவர்கள் கேட்டு, 10 காசு கொடுப்பதற்குள்ளே பஸ் போய்விடும் நிலை இருக்கிறது. இந்தக் கடுமையான நிலையைத் தடுப்பதற்கு, பஸ் நிலையத்துக்கு உள்ளே இருக்கும் கழிப்பிடத்திற்குக் காசு இல்லை என்றும் ஊருக்கு உள்ளே இருப்பதிலே காசு கொடுத்தால்தான் உள்ளே அனுப்புவோம் என்ற நிலைமையையும் ஏற்படுத்தலாம்.

**திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் :** இந்தக் கழிப்பிடங்களை எல்லா இடங்களிலும் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டியது அவசியம். அங்கே கண்ணாடி வைத்திருக்கிறார்கள், ஆகவே, அதற்காக பணம் வசூலிக்கிறோம் என்பது நியாயமில்லை. ஒருவருக்குக் கையிலே பணமில்லை; அவசரமாகக் கழிப்பிடத்திற்குச் செல்ல வேண்டுமென்றால், அப்படிப்பட்டவர்களுக்குப் பணம் கொடுப்பதிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** அதற்காகத்தான் ஏற்கெனவே அங்கெல்லாம் இலவசக் கழிப்பிடங்கள் இருக்கின்றன. இலவசக் கழிப்பிடங்களாக உபயோகிக்கும் வசதி ஏற்கெனவே இருப்பதால், அவைகளைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** பேருந்து நிலையங்களில் உள்ள கழிப்பிடங்களில் கட்டணம் வசூலிக்கப்படும் இடங்கள் என்று 20, 25 இடங்களின் பெயர்களைப் படித்தார்கள். உண்மையில் பெருவாரியான கழிப்பிடங்கள் சுத்தமாக இல்லை. அங்கே துப்புரவாளர்கள் இல்லை, தண்ணீரும் இல்லை. எனவே பஸ்களில் செக்கிங் இன்ஸ்பெக்டர்கள் போடப்பட்டிருப்பதைப் போல் இவைகளையும் சூப்பர்வைஸ் செய்து சுத்தமாக வைத்துக்கொள்ள அரசு ஏற்பாடு செய்யுமா ?

(பிற்பகல் 4-50)

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** மேற்பார்வைக்காகத்தான் 'சானிட்டரி இன்ஸ்பெக்டர்கள்' மற்றும் சுகாதார அதிகாரிகள் இருக்கிறார்கள். அதற்கும் மேலாக நகராட்சி ஆணையாளர் இருக்கிறார். அவருக்கு மேலாக, உள்ளாட்சித் துறை அமைச்சர்கூட அடிக்கடி பார்வையிடுகிறார்.

**திரு. ஆ. திராவிடமணி :** ஊருக்கு உள்ளே இருக்கின்ற பொதுக் கழிப்பிடங்களுக்குக் கட்டணம் வசூலிக்கலாம். ஆனால் பஸ் நிலையத்திலே இருப்பதற்கு கட்டணம் வசூலித்தால் அதிலே பல சிக்கல்கள் இருக்கின்றன. கணவன் மனைவி போகிறார்கள் என்றால், மனைவி கழிப்பிடத்துக்கு உள்ளே சென்று, அவசர அவசரமாகத் திரும்பும்போது 10 காசு, 10 காசு என்று அங்கிருப்பவர்கள் கேட்டு, 10 காசு கொடுப்பதற்குள்ளே பஸ் போய்விடும் நிலை இருக்கிறது. இந்தக் கடுமையான நிலையைத் தடுப்பதற்கு, பஸ் நிலையத்துக்கு உள்ளே இருக்கும் கழிப்பிடத்திற்குக் காசு இல்லை என்றும் ஊருக்கு உள்ளே இருப்பதிலே காசு கொடுத்தால்தான் உள்ளே அனுப்புவோம் என்ற நிலைமையையும் ஏற்படுத்தலாம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: கழிப்பிட விஷயத்தை சீக்கிரம் முடியுங்கள்.

திரு. ஆ. திராவிடமணி: ஆகவே, இவ்வாறு ஏற்படுத்தி பல நிலையங் களில் உள்ள கழிப்பிடங்களில் உள்ள இந்த நெருக்கடி நிலையைக் களைய அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: பேருந்து நிலையங்களிலே இது போன்ற கழிப்பிடங்கள் தேவைப்படுகின்றன என்பதால்தான், கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

THIRU G. VASANTHA PAI: Sir, is the Hon. Minister aware that similar systems prevail in other countries also? But they always leave one or two lavatories for free use and money is collected only in the others. Could not such a system be adopted in this State also?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: உறுப்பினர் அவர்களுடைய கருத்து, என் கருத்துக்கு வலிமை சேர்ப்பதற்கு என் நன்றி. அதைப்போல இங்கேயும் இலவசக் கழிப்பிடமும், கட்டணம் வசூலிக்கப்படும் கழிப்பிடங்களும் இருக்கின்றன.

டாக்டர் இரா. சனார்த்தனம்: கழிப்பிடங்களில் சேரும் கழிப்பிடப் பொருளை வைத்து மின்சாரம் தயாரிக்கும்—'கோபர்கேஸ்' முறையில் தயாரிக்கும்—முறை இருக்கிறது. இம்முறையை பல்வேறு இடங்களில் பயன்படுத்து கிறார்கள்; குற்றாலத்தில் பராசக்தி மகளிர் கல்லூரியில் இம்முறையைப் பயன்படுத்தி வருகிறார்கள். ஆகவே, இம்முறையில் மின்சாரம் தயாரித்தால், அதிலிருந்து கூட வருமானம் கிடைக்கும். அப்படி வருமானம் கிடைக்கும் போது இந்தக் கழிப்பிடங்களை இலவசக் கழிப்பிடங்களாகக்கூட வைக்கலாம். ஆகவே அதுபற்றி அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கு இதைப் பரிந்துரை செய்கிறேன்.

திரு. வி. ஆர். பெரியண்ணன்: அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது, சில பேருந்து நிலையங்களில் காசு இல்லாமல் செல்லக்கூடிய கழிப் பிடங்கள் இருக்கின்றன என்று சொன்னார்கள். பல பேருந்து நிலையங்களில் காசு இல்லாமல் போகக்கூடிய கழிப்பிடங்கள் இல்லை. உதாரணத்திற்கு எங்கள் ஊரிலே சேலத்திலே கூட காசு கொடுத்துப் போகும் கழிப்பிட வசதி தான் இருக்கிறது. ஆகவே அங்கு இலவசமாகக் கழிப்பிட வசதி ஏற்படுத்த அரசு முன்வருமா என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: நகராட்சியின் நிதி நிலையைப் பார்த்து நிச்சயமாக அமைக்க முன்வரும்.

## *Street Lights in Municipalities.*

* 168 *Q.*—THIRU K. RAMAMOORTHI: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) the basis on which steps are taken to replace the fused bulbs of street lights, which come under the jurisdiction of Municipalities; and

(*b*) whether the Government have prescribed any time-limit for repairing the street lights which have gone out of order or to replace them with new bulbs?

## நகராட்சிகளில் தெரு விளக்குகள்

திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நகராட்சி மன்றங்களின் அதிகாரத்திற்குட்பட்ட எரியாத தெரு விளக்குகளை மாற்றுவதற்கு எந்த அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது?

(இ) எரியாத விளக்குகளைப் பழுது பார்ப்பதற்கும் புதிய விளக்குகளைக் கொண்டு மாற்றுவதற்கும் அரசு ஏதேனும் காலக்கெடு வைத்துள்ளதா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) & (இ) எரியாத தெரு விளக்குகளில் புதிய பல்புகள் மின்சார வாரியத்தின் உதவியுடன் மாதத்திற்கு இருமுறை பொருத்தப்படுகிறது.

திரு. க. இராமமூர்த்தி: திண்டிவனம் நகராட்சியில் பல மாதங்களாக எரியாத விளக்குகள் மாற்றப்படவில்லை. இன்றைக்கு திடீரென்று போய்ப் பார்ப்பதாக இருந்தாலும், நகரத்திலேயே ஒரு 100 அல்லது 150 விளக்குகள் இருந்தால் அதிகம். எரியாத விளக்குகளை மாற்ற வேண்டும் என்பது மட்டுமல்ல, மாற்றுவதற்கு முயற்சிகள் எடுக்கின்றபோது, பெரும்பாலும் பெரும் பணக்காரர்கள் இருக்கின்ற வீதியைத்தான் நகராட்சி ஆணையர் தேர்ந்தெடுக்கிறார். ஏழைகள், பின்தங்கியவர்கள், அரிசனங்கள் வாழ்கின்ற பகுதிகளில் உள்ள எரியாத விளக்குகள் மாற்றப்படுவதில்லை. ஆகவே, இவற்றை நிவர்த்திக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்கும்?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** இதுபோன்ற புகார்கள் பரவலாக
பல்வேறு நகரங்களிலேயிருந்து வந்து கொண்டிருக்கின்றன. இப்படிப்பட்ட
குறைபாடுகளைக் களைவதற்கு மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர்
அவர்களோடு பேச்சுவார்த்தை நடத்தி சில திட்டங்கள் வகுக்கப்பட்
டிருக்கின்றன. விரைவில் செயலுக்கு வரும்.

**புலவர் புலமைப்பித்தன் :** எரியாத தெரு என்று போட்டிருக்கிறார்கள்.
எரியாத தெரு, எரியும் தெரு என்று பேதம் இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** எரியாத கட்சி, எரியும் கட்சி என்று
இதிலே பேதம் இல்லை. எரியாத தெரு விளக்குகள் என்று சேர்த்து
மாண்புமிகு உறுப்பினர் படிக்க வேண்டும்.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப்:** எரியாத தெரு விளக்குகள் நகராட்சி
எல்லையிலே பரவலாகக் காணப்படுகின்றன. இதற்குக் காரணம் என்ன
வென்று கேட்டால் பல்புகள், ட்யூப் லைட்கள் திருட்டுப்போய் விடுகின்றன
என்று சொல்லப்படுகிறது. இந்த பல்புகள், ட்யூப் லைட்கள் ஆகியவற்றை
இப்போது வேறு கம்பெனிகளிடமிருந்து ஆர்டர்கள் கொடுத்து வாங்கு
கிறார்கள் என்று சொல்கிறார்கள். அப்படியில்லாமல் அரசு சார்பிலே
தயாரித்து 'டிரேட் மார்க்' போட்டு, அந்தந்த முனிசிபாலிட்டி பெயர்
போட்டு விட்டால், திருட்டுப் போவதைக் குறைக்க வாய்ப்பு ஏற்படுமே,
ஆகவே அதற்கு அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** இந்தத் திருட்டுபற்றி அதிகமான
புகார்கள் வரவில்லை. புகார்கள் வருமேயானால், அரசு இது பற்றிப்
பரிசீலிக்கும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தெரு மின்விளக்குகளைப் பராமரிக்கும்
பொறுப்பு நகராட்சிகளிடத்திலே ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில்
நகராட்சி நிர்வாகத்தினருக்கும் அப்பகுதியில் உள்ள மின்சாரத்துறை
அதிகாரிகளுக்கும் இடையே சுமுக நிலை இல்லாததால், பல நகரங்களிலே
விளக்குகள் எரியாது இருப்பதை அரசு அறியுமா? உதாரணத்துக்கு
பல்லவபுரம் பகுதிகளைச் சேர்ந்த விளக்குகள் எரியவில்லை. உடனே
புகார்கள் செய்தோம். இருந்தும் மின்சாரத்துறை நிர்வாகம் எந்தவிதமான
நடவடிக்கையும் எடுக்கவில்லை; பொது மக்களும் புகார் செய்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அறிக்கை படிக்கிறீர்களா? அல்லது கேள்வி கேட்கிறீர்களா?

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** ஆகவே, அரசு இதன் மீது நடவடிக்கை எடுக்குமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** இதுபோன்ற புகார்கள் அடிப்படையிலே பரிசீலனை நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.

**திரு. க. இராமமூர்த்தி:** நகராட்சிகளுக்கும் ஊராட்சி மன்றங்களுக்கும் இந்த விளக்குகளை மாற்றுகின்ற உரிமை வேண்டும் என்று கேட்டு வாங்கப்பட்டது. ஆனால் இப்போது கிடைத்துள்ள அனுபவத்தின் அடிப்படையில், மின்சாரத் துறையிடம் இது இருந்தால், இப்போது இருப்பதைவிட அதிகம் பலன் கிடைக்கும் என்ற நிலை இருப்பதால், அந்த நிலையை அனைவரும் உணர்வதால், உள்ளாட்சித் துறை மீண்டும் இந்தப் பொறுப்பை மின்சார வாரியத்திற்கு அளிக்க முன்வருமா?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** தந்த அதிகாரத்தை இன்னும் எப்படி சரியான முறையில் நடைமுறைப்படுத்துவது என்று ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். நிச்சயமாக வெற்றி கிடைக்கும். ஒருவேளை தோல்வி கண்டால், மீண்டும் மாற்றுவது பற்றி யோசிக்கலாம்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னதைப் போல, அது சம்பந்தமாகப் பரிசீலிக்கப்பட்டு சில உத்தரவுகள் விரைவில் பிறப்பிக்கப்பட இருக்கின்றன. அதை மாற்றுகின்ற மின்சாரத் துறை ஊழியர்களுக்கு ஒரு பல்புக்கு 8 அணா வீதமும், ட்யூப்-லைட் ரிப்பேர் செய்தால் ட்யூப் லைட் ஒன்றுக்கு 1 ரூபாய் வீதமும் ஊக்க ஊதியம் வழங்குவது என்று முடிவெடுத்து விரைவில் அரசு உத்தரவு பிறப்பிக்க இருக்கிறது. இதன் மூலம் மின்வாரியத் தொழிலாளர்கள் பல்புகளை மாற்றுவதற்கு வரவில்லை என்கின்ற குறை, நகராட்சி மன்றம் ஆனாலும் சரி, ஊராட்சி மன்றம் ஆனாலும் சரி, ஒன்றியம் ஆனாலும் சரி, வேகமாக நீங்கும் என்று அரசு கருதுகிறது.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** வெளிநாடுகளில் இதுபோன்ற விளக்குகளையெல்லாம் மஞ்சள் நிறத்திலே வைத்திருக்கிறார்கள். அதனாலே விபத்துக்கள் தவிர்க்கப்படுவதாகவும், நகர் இதனால் அழகாக இருப்பதாகவும் கருதுகிறார்கள். ஆகவே, அதைப்போல இங்கே அமைக்கும் உத்தேசம் இருக்கிறதா?

1979 மார்ச் 12]

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, அழகை விட வெளிச்சத்தைத்தான் கவனிக்க வேண்டும்.

**திரு. வே. தங்கப்பாண்டியன்:** மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் புதிதாக பல்புகள் மாற்றுவதற்கு விசேஷ ஊக்க போனஸ் கொடுப்பதாகச் சொன்னார்கள். அந்தத் தொகையை மின்சார வாரியம் ஏற்குமா அல்லது உள்ளாட்சி மன்றம் ஏற்குமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** உள்ளாட்சி மன்றங்கள் தான் அந்தத் தொகையை ஏற்க வேண்டும்.

**திரு. ஆ. திராவிடமணி:** சென்னை மாநகரிலே, அசோக் நகரிலே உள்ள ட்யூப் லைட்டுகள் எல்லாம் அப்படியே இருக்கின்றன. ஆனால் அதே இடத்தில் 25 வாட் பல்ப் மட்டும் போடப்பட்டிருக்கிறது. அது அரசு உத்தரவின் மீது போடப்பட்டதா? அல்லது தற்காலிகமாக ஏதாவது வெளிச்சம் ஏற்படுத்த வேண்டும் என்று போடப்பட்டதா?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** கேள்வியில் தகவல் சரியாக இல்லை, இன்னும் வெளிச்சம் தேவை.

**திரு. சி. இராமலிங்கம்:** இந்த மின்சார பல்புகளுக்குப் போடப்பட்டுள்ள கம்பிகள் எல்லாம் பழுதடைந்துபோய் இருக்கின்றன. அதை மாற்றி புதிய லைன்கள் போட்டுக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** நிதி நிலைமையைக் கருத்தில் கொண்டு செய்யப்படும்.

**திரு. ப. மாணிக்கம்:** கோவை நகரத்தில் இந்த மின்சார விளக்குகளைப் பராமரிப்பதற்கு நகராட்சியிலே ஒரு தனிப் பிரிவு ஏற்படுத்தப்பட்டு பொறுப்பும் நகராட்சியிடமே இருக்கின்றது. அதன் மூலம் அது லாபகரமாக நடைபெறுகிறது. அதே முறையை மற்ற நகராட்சிகளுக்கும் கொண்டுவர அரசு முயலுமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** படிப்படியாக அந்த நடவடிக்கைகள் கொண்டு வரப்படும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் முடியும் வரை வினா நேரம் நீட்டிக்கப்படுகிறது.

## Cashew Cultivation.

* 169 Q.—THIRU K. RAMAMOORTHI: Will the Hon. the Minister for Agriculture and Irrigation be pleased to state—

(a) the extent of the land in the State under Cashew cultivation; and

(b) the extent of Foreign Exchange earning capacity of the same?

## முந்திரி சாகுபடி.

திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு வேளாண்மை-நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்தில் முந்திரி சாகுபடி செய்யப்படும் நிலத்தின் பரப்பளவு எவ்வளவு?

(இ) இதனால் ஈட்டப்படும் அன்னிய நாட்டுச் செலாவணி எவ்வளவு?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) 1976-77 புள்ளி விபர கணக்கின்படி தமிழகத்தில் 92,360 ஹெக்டேர் நிலப்பரப்பில் முந்திரி பயிர் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

(இ) தமிழ் நாட்டிலிருந்து ஏற்றுமதியாகும் முந்திரி மூலம் ஆண்டுக்கு சுமார் ரூபாய் 1.2 முதல் 1.6 கோடி வரை அந்நிய செலாவணி கிடைக்கிறது.

(பிற்பகல் 5-00)

திரு. க. இராமமூர்த்தி: அரசுக்குச் சொந்தமான முந்திரிக் காடுகள் எத்தனை ஏக்கரில் இருக்கின்றன, தனியாருக்குச் சொந்தமான முந்திரிக் காடுகள் எத்தனை ஏக்கரில் இருக்கின்றன? தென்னாற்காடு மாவட்டத்தில் பண்ருட்டி பகுதியிலே முந்திரிக் காடுகள் இருப்பதால், ஒரு முந்திரிப் பருப்புத் தொழிற்சாலையை அரசுத் துறையிலே ஏற்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பல்வேறு திட்டங்களின் மூலமாக இன்று முந்திரி இனப் பெருக்கம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. தமிழகத்திலே, பிச்சவாக்கம், நாட்டமங்கலம், தேவகோட்டை ஆகிய மூன்று பகுதிகளில் ஏறத்தாழ 271.68 ஏக்கரில் முந்திரியைப் பயிர் செய்து கொண்டிருக்கிறோம். மேலும் அதிகமாக விளையக்கூடிய பகுதிகளான புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, தென்னாற்காடு, இராமநாதபுரம், செங்கற்பட்டு ஆகிய மாவட்டங்களிலும் முந்திரி பயிர் செய்யப்படுகிறது

ஈட்டுகிற அளவிற்கு பயிர் செய்துகொண்டிருக்கிறோம். இந்தியாவில்
ஏறத்தாழ 145 கோடி ரூபாய் அளவிற்கு அன்னியச் செலாவணியை ஈட்டுகிற
வகையிலே இந்தியா முழுவதும் பயிர் செய்யப்படுகிறது. கன்னியாகுமரி
மாவட்டத்திலே விளைகிற முந்திரி அங்குள்ள ஆலைகளுக்கே சரியாக
இருப்பதால், மேலும் இன அபிவிருத்தியின் அடிப்படையிலே முந்திரியை
அதிகப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தோடு தமிழக அரசு பல்வேறு
திட்டங்களை வேளாண்மைத் துறையின் மூலமாகவும், விவசாய மறுநிதி
அமைப்பு நிறுவனத்தின் உதவித் திட்டத்தின் கீழும், மத்திய அரசின்
உதவித் திட்டத்தின் கீழும் நிறைவேற்றி வருகிறது. நமக்கு வேண்டிய
அளவுக்குக் கிடைத்தால், புதிய ஆலைகளை ஏற்படுத்துகின்றவர்களுக்கும்
தேவையான அளவுக்குக் கொடுக்க ஏற்பாடுகளைச் செய்யலாம்.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப்:** பலவகையான பழங்களைப் பார்க்கும்
போது, பழத்திற்குள்ளேதான் கொட்டை இருக்கின்றது. ஆனால் முந்திரிப்
பழத்தில் பழத்திற்கு வெளியே கொட்டை இருக்கிறது. அதுபோன்று வேறு
ஏதாவது கொட்டை வெளியே உள்ள பழம் தமிழகத்திலே இருக்கிறதா?
அதற்குப் பெயர் என்ன? (சிரிப்பு).

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** யாராவது ஒருவர் பதில் சொல்ல
முற்படும்போது அவரை முந்திக்கொண்டு ஒருவர் பதில் சொன்னால் அப்படிப்
பட்டவரை 'முந்திரிக்கொட்டை' என்று சொல்லுகிறோம். முந்திரிப் பழத்
திற்கு முன்னால் கொட்டை இருப்பதால்தான் அப்படிச் சொல்லிக்கொண்டி
ருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், வேறு ஏதாவது பழத்தில்
இதுபோன்று கொட்டை வெளியே இருக்கிறதா என்று அவரே சொன்னால்
நன்றாக இருக்கும்.

THIRU G. VASANTHA PAI: Sir, is the Hon. Minister aware
that in the neighbouring State of Goa, the fruit as well as the
shell of cashew is used for manufacturing liquor which gets
enromous foreign exhange? Will the Government considers
starting such a factory here and export such liquor abroad?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** நம்முடைய தமிழகத்தில் மது
விலக்குச் சட்டம் அமுல் நடந்துகொண்டிருப்பதால், வெளிநாடுகளுக்கு
ஏற்றுமதி செய்யும் அளவுக்கு உற்பத்தி கிடைக்குமா என்பதைக் கணக்கிட்டுப்
பார்த்துத்தான் பதில் சொல்ல முடியும்.

**திரு. க. இராமமூர்த்தி:** தென்னார்க்காடு மாவட்டத்திலே முந்திரிப்
பழத்திலிருந்து சாராயம் தயாரிக்கிற தொழிற்சாலை அமைக்கப்பட்டதா?
அதற்காக எத்தனை ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டது?

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : எந்தெந்த மாவட்டங்களில் முந்திரி பயிரிடப்படுகிறது ? எந்த மாவட்டத்தில் சிறப்பாகக் கிடைக்கிறது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: ஏற்கெனவே பதில் சொல்லப்பட்டிருக்கிறது.

திரு. க. இராமமூர்த்தி : முந்திரிப் பயிர் பெருமளவு அன்னியச் செலாவணியை ஈட்டித் தருவதால், இதைப் பயிரிடுகின்றவர்களுக்குப் பெரும் இலாபம் வந்து கொண்டிருக்கிறது. நில உச்சவரம்புச் சட்டத்தில் இதற்கு விதிவிலக்கு இருப்பதால், பல நூறு ஏக்கர்களை ஒருவரே வைத்துக்கொண்டிருக்கிற நிலை இருக்கிறது. ஆகவே இதைத் தவிர்க்க, விவசாய நிலங்களைப் பொறுத்த வரையில் உச்சவரம்பை நிர்ணயிக்கிற இந்த அரசு, இதற்கும் உச்ச வரம்புச் சட்டத்தைக் கொண்டுவர முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: முந்திரி விளைச்சலைப் பொறுத்த வரையில், மற்ற மாநிலங்களில் ஒரு ஏக்கரில் உள்ள விளைச்சலை விட நம்முடைய மாநிலத்தில் விளைச்சல் குறைவாக இருக்கிறது. குறிப்பாக கேரளாவில் ஒரு ஏக்கரிலே விளையக்கூடிய முந்திரிக்கும், தமிழ் நாட்டிலே விளையக்கூடிய முந்திரிக்கும் வித்தியாசம் இருக்கிறது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுவதைப் போல, நம்முடைய மாநிலத்தில் ஒவ்வொரு ஏக்கரிலும் முந்திரியை உற்பத்தி செய்கிறோம் என்று சொல்லுவதற்கில்லை. முந்திரியின் இனப் பெருக்கத்தை அதிகரிக்க வேண்டும் என்ற அடிப்படையில்தான், அதிகமாக முந்திரி பயிரிடப்படுகிற மாவட்டங்களில் உள்ள நல்ல செடிகளிலிருந்து மொட்டுக்களைக் கொண்டு வந்து எந்தெந்த மாவட்டங்களில் குறைவாக விளைச்சலைக் கொடுக்கிறதோ அந்த மாவட்டங்களில் உள்ள செடிகளில் இன அபிவிருத்தி செய்து கொண்டிருக்கிறோம்.

திரு. ஆ. நல்லசிவன்: தமிழ் நாட்டில் உற்பத்தியாகிற முந்திரி முழுவதையும் தமிழக அரசே கொள்முதல் செய்து, தமிழ் நாட்டிலே இருக்கக் கூடிய ஆலைகளில், அதுவும் குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள ஆலைகளில் உள்ளவர்களுக்கு வருடம் முழுவதும் வேலை அளிக்கும் அளவுக்கு வழங்க முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரையில், நான் ஏற்கெனவே சொன்னதைப் போல 1.2 கோடி ரூபாயிலிருந்து 1.6 கோடி ரூபாய் வரையில் அன்னியச் செலாவணியை

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: திரு. வசந்த வை அவர்கள் சொன்னதுபோல, 'காஷ்யூ' ஆப்பிளிலிருந்து 'ஃபென்னி' என்கிற மதுபானத்தை கோவாவில் தயாரிக்கிறார்கள். தென்னாற்காடு மாவட்டத்திலே என்னுடைய தொகுதியிலே அதேபோல தயாரிக்கிறோம் என்று சொல்லி, ஒரு டிஸ்டிலரியை வைத்திருக்கிறார்கள். காஷ்யூ ஆப்பிலைப் பயன்படுத்துவதாகச் சொல்லி விட்டு கரும்பில் உள்ளவற்றைப் பயன்படுத்துகிறார்கள்.

THIRU D. V. D'MONTE : Sir, cashewnut, raw or roasted, has become almost a luxury today and is beyond the reach of the middle-class and upper middle-class families. Its price has been rising steeply over the last two or three years. Is there no means by which Government can put a price-ceiling on these cashewnuts so far as cultivation in Tamil Nadu is concerned ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: உற்பத்திப் பொருள்களைப் பொறுத்த வரையிலே 'காஸ்ட் ஆஃப் புரொடெக்ஷன் பேசிசில்' விற்பனை விலையை நிர்ணயிக்கிறோம். முந்திரி மரங்களை வளர்க்க எவ்வளவு செல விடப்படுகிறதோ அதன் அடிப்படையிலே முந்திரிப் பருப்பின் விலை நிர்ண யிக்கப்படுகிறது. அதற்கு ஒரு வரம்பை ஏற்படுத்தும் எண்ணம் இந்த அரசின் யோசனையில் இல்லை.

திரு. க. இராமமூர்த்தி: தென்னாற்காடு மாவட்டத்திலே முந்திரிப் பழத்தின் மூலமாகச் சாராயம் தயாரிக்க ஏற்படுத்தப்பட்ட தொழிற்சாலை வேண்டுமென்றே சட்டத்தை மீறிச் செயல்படுகிற வகையில் திட்டமிடப்பட்டி ருக்கிறதா? முந்திரிப் பழத்தைக் கொண்டு சாராயம் தயாரிக்கிறேன் என்று சொல்லிவிட்டு வெல்லப் பாகைக் கொண்டு சாராயம் தயாரிக்க ஏற்பாடு செய் திருக்கிறார்கள் என்றால், அதைத் தடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு உறுப்பினர் தனியாகக் கேள்வி போட்டால், தனியாக விடை சொல்லுகிறேன்.

## *Kannootru Odai Reservoir Scheme.*

* 170. Q.—THIRU C. R. LAKSHMIKANDHAN (on behalf of THIRU S. MUTHUSWAMY): Will the Hon. the Minister for Agriculture and Irrigation be pleased to state—

(*a*) whether it is a fact that the provision of a River Sluice made in the "Kannootru Odai Reservoir Scheme" in Tiruchirappalli district at the time of its approval, does not find place in the present project ;

(*b*) if so, the reason therefor ;

(c) whether it is a fact that the existing Ayacutdars who get irrigation for 219 acres will be affected thereby ; and

(*d*) if so, the alternative arrangement which the Government propose to make ?

**கண்ணூற்று ஓடை நீர்த்தேக்கத் திட்டம்**

*திரு. சி.ரா. லெட்சுமிகாந்தன் (திரு. செ. முத்துசாமி சார்பில்): மாண்புமிகு வேளாண்மை நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—*

*(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில், "கண்ணூற்று ஓடை நீர்த் தேக்கத் திட்டம்" அனுமதிக்கப்பட்டபோது சேர்க்கப்பட்டிருந்த "ஆற்றுக் குழுமி" ( river sluice ) அமைப்பு, தற்சமயம் அதில் இடம் பெறவில்லை என்பது உண்மையா?*

*(இ) ஆம் எனில், காரணம் என்ன?*

*(உ) இதனால் 219 ஏக்கர் பாசன வசதி பெற்றுவரும் முன் உரிமைக் காரர்கள் பாதிக்கப்படுவார்கள் என்பது உண்மையா ?*

*(எ) ஆம் எனில், இதற்கு என்ன மாற்று ஏற்பாடு செய்ய அரசு உத்தேசித்துள்ளது?*

*மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.*

*(இ) இந்த மதகு அந்த இடத்தில் மிகையாகக் காணப்பட்டது. அதோடு இந்த ஆற்று மதகின் பணிகள் ஏற்கெனவே உள்ள மற்றொரு மதகின் மூலம் நிறைவேற்றப்படும்.*

*(உ) ஏற்கெனவே உள்ள ஆயக்கட்டுகளின் முன்னுரிமை பாதிக்கப் படாது.*

*(எ) இக்கேள்விக்கு இடமில்லை.*

*மாண்புமிகு மேலவைத் தலைவர்: 5—3—1979-லிருந்து 12—3—1979-க்கு ஒத்திப்போடப்பட்ட வினாக்கள் எண் 101-ம், 102-ம் ஒரே விஷயமாக இருப்பதால், சேர்த்து எடுத்துக் கொள்ளப்படுகின்றன.*



*Defalcation of Funds.*

@ * 101. *Q.*—Thiru K. RAMAMOORTHI: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether action has been taken on anybody, who held managerial responsibilities in Tirunelveli District Central Co-operative Organisations on charge of misappropriation of money ;

(*b*) if so, the amount involved in such misappropriation ; and

(c) the action taken in this regard ?

**பணம் கையாடல்**

*திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—*

*(அ) திருநெல்வேலி மாவட்ட மத்திய கூட்டுறவு அமைப்புகளில் தலைமைப் பொறுப்பை வகித்தவர்கள் யார் மீதாவது இதுவரை பணம் கையாடல்களுக்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?*

*(இ) ஆம் எனில், கையாடல் செய்யப்பட்ட தொகை எவ்வளவு?*

*(உ) எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?*

*மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: (அ) ஆம்.*

*(இ) ரூ. 460.80.*

*(உ) சம்பந்தப்பட்டவர் மீது குற்றவழக்குத் தொடர்பு மேற்கொள்ளப் பட்டுள்ளது.*

@ * 102. Q.—Thiru K. RAMAMOORTHY: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) the number of persons who were holding administrative responsibilities in co-operative societies against whom Departmental Enquiries were ordered to be held, after 1st July 1977 on grounds of misappropriation and misuse of power ; and

(*b*) the number of persons against whom Criminal proceedings were launched ?

*திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—*

---

*@ 5—3—1979 ஆம் நாள் வினாப்பட்டியலிலிருந்து ஒத்திப் போடப் பட்டது.*

(அ) கூட்டுறவு சங்கங்களின் நிர்வாகப் பொறுப்பினை ஏற்றிருந்தவர்களில் எத்தனை பேர் மீது 1—7—1977-க்குப் பிறகு கையாடல், பதவியை தவறாகப் பயன்படுத்தியவை ஆகிய காரணங்களுக்காக இலாக்கா பூர்வ விசாரணைக்கு உத்திரவிடப்பட்டுள்ளது?

(இ) எத்தனை பேர்மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :

(அ) 1,051.

(இ) 335.

திரு. க. இராமமூர்த்தி : கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் கையாடல் செய்தவர்கள் எத்தனை பேர்? கையாடல் செய்யப்பட்ட தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மூலக் கேள்வி மத்திய கூட்டுறவு அமைப்புகளைப் பற்றியது. ஆகவே தனிக் கேள்வி போட்டால், விவரம் சேகரித்து அளிக்க அரசு தயாராக இருக்கிறது.

(பிற்பகல் 5-10)

திரு. க. இராமமூர்த்தி : மீதம் இருக்கின்ற ஏறத்தாழ 700 பேர்கள்மீது வழக்குத் தொடர்வதற்கு கால கெடு ஏதும் உள்ளதா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : 1,051 பேர்கள் மீது கூட்டுறவுத் துறை மூலமும், 335 பேர்கள் மீது காவல் துறை மூலமும் வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது.

திரு. க. இராமமூர்த்தி : இதன் தொடர்பாக மோசடி செய்யப்பட்டிருக்கின்ற தொகை எவ்வளவு? இன்னும் எவ்வளவு வழக்குகள் பதிவு செய்யப்படவேண்டும்? எவ்வளவு பேர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : ஏறத்தாழ 18½ லட்சம் ரூபாய்க்குத் தவறு நடந்திருக்கிறது. 1,051 பேர்கள் மீது சர்சார்ஜ் புரோசிடிங்ஸும் உள்படவும், 335 பேர்கள் மீது கிரிமினல் குற்றத்திற்காக இந்தியன் பீனல் கோட் படியும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

---

@ 5—3—1979 ஆம் நாள் வினாப்பட்டியலிலிருந்து ஒத்திப் போடப்பட்டது.

திரு. வே. தங்கப்பாண்டியன் : கூட்டுறவுத் துறை மூலமாக எடுக்கப்பட்ட வழக்குகளைத் தொடர்ந்து நடத்தி, விரைவிலே தீர்ப்பு வழங்க மாவட்ட அளவிலே ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : ஏற்கெனவே மதுரையிலேயும், சென்னையிலேயும் என்று இரண்டு டிரிபூனல்கள் இருக்கின்றன. அவைகளை விரைவுபடுத்த தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. க. இராமமூர்த்தி : கிரிமினல் வழக்குகள் எந்த அடிப்படையிலே தீர்மானிக்கப்படுகின்றன? எந்தெந்த அடிப்படையிலே இந்த வழக்குகளை இரண்டாகப் பிரிக்கிறார்கள்? எதைப் பொறுத்து வழக்கு தொடரப்படுகிறது? ஒரே நபர் பேரில் இரண்டு துறையும் வழக்குகள் தொடருகின்றதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : அப்படிப்பட்ட வழக்குகள் வருகின்ற நேரத்தில், அரசு வழக்கறிஞர்களிடத்திலே சர்சார்ஜ் புரோசீடிங்ஸ் எடுக்க வழி இருக்கிறதா அல்லது கிரிமினல் நடவடிக்கை எடுக்க வழி இருக்கிறதா அல்லது இரண்டு நடவடிக்கைகளுக்கும் வழி இருக்கிறதா என்று கேட்டுக்கொள்கிறார்கள். இரண்டும் இருந்தால், இரண்டு தரப்பிலும் வழக்குப் போடுகிறார்கள். சர்சார்ஜ் புரோசீடிங்ஸ் மட்டும் இருந்தால், அதைப் போடுவார்கள். கிரிமினல் குற்றம் மட்டும் இருந்தால் கிரிமினல் வழக்கு போடுவார்கள். இரண்டும் இருந்தால், இரண்டின் மீதும் வழக்குகள் தொடரப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு க. இராமமூர்த்தி : இதில் உத்தியோகப் பற்று அற்றவர்கள் எத்தனை பேர்கள்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : அதற்கான புள்ளி விவரங்கள் என்னிடம் இல்லை. அது குறித்து தனிக் கேள்வி போட்டால், நான் பதில் அளிக்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : விரைவிலே திருத்தப்பட்ட கூட்டுறவுச் சட்டம் வர இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இதிலே உத்தியோகப் பற்றற்றவர்கள் நிலையையும் மனதில் கொண்டு சட்டம் திருத்தப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : சட்ட முன்வடிவு வருகின்ற நேரத்திலே, நிச்சயமாக மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுடைய கவனத்திற்கு அந்த விஷயங்கள் கொண்டுவரப்படும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

---

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** இந்த முறையினால் எங்காவது தவறுகள் நடைபெற்றிருக்கின்றனவா என்பதைப் பார்க்க வேண்டும். பொதுவாக பள்ளிக்கூடம் நடத்துகிறவர்கள் யாராக இருந்தாலும், அந்தப் பள்ளிகள் நல்ல முறையில் நடத்தப்பட வேண்டுமென்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில்தான் செயல்படுவார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. எனவே அதனடிப்படையில்தான் அவர்கள் ஆசிரியர்களின் 'மெரிட்டை'யும் பார்த்து பதவி உயர்வு அளிப்பது என்கிற வகையில், கூடுமானவரையில் முறையாகச் செயல்படுகிறது என்றுதான் நம்புகிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** அரசுப் பள்ளிகளைப் பொறுத்தவரையிலும்கூட பணிமூப்பின் அடிப்படையில்தான் தலைமையாசிரியர் பதவி உயர்வு என்பது கொடுக்கப்பட்டு வருகிறது. மெரிட்டையும் பார்க்க வேண்டுமென்று இருந்தாலும்கூட அதனடிப்படையில் எந்த ஒரு ஆசிரியரும் தலைமையாசிரியர் பதவி உயர்வு மறுக்கப்பட்டதாக கழிந்த 10 ஆண்டுகளில் எங்கேயும் இல்லை என்பதுதான் நாங்கள் அறிந்த உண்மை. தனியார் துறைப் பள்ளிகளைப் பொறுத்தவரையில், தங்களுக்கு வேண்டியவர்கள், தங்கள் ஜாதியைச் சேர்ந்தவர்கள் என்ற அடிப்படையில் முதலிடம் கொடுக்கப்படுகிறது. எனவே ஒரு ஆசிரியர் தலைமையாசிரியர் பதவிக்குப் போகும்போது மட்டும் மெரிட்டைப் பார்ப்பது என்றில்லாமல் அந்த ஆசிரியரை பதவியில் உறுதி செய்யும்போதே—கன்பர்ம் செய்யும்போதே—அவர் தலைமை ஆசிரியர் பதவிக்குத் தகுதி உள்ளவரா இல்லையா என்பதை நிருவாகம் அவருடைய சர்வீஸ் ரெக்காரிடிலேயே எழுதும் வகையில் அரசு தனியார் நிருவாகங்களுக்குக் குறிப்பு அனுப்ப முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மெரிட் என்கிற தகுதியைப் பல்வேறு பள்ளி நிர்வாகங்களும் ஒழுங்காக ஆராய்ந்து செயல்படுகின்றனவா, அந்த அடிப்படையில்தான் பதவி உயர்வு ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படுகின்றனவா என்று ஆராய்ந்து, குறைபாடுகள் இருந்தால், அத்தகைய குறைபாட்டைப் போக்க இந்த அரசு பரிசீலனை செய்யும்.

## *Municipal Bus Stands.*

* 167 Q.—THIRU K. RAMAMOORTHI: Will the Hon. the Minister for Local Administration be pleased to state the names of the Municipalities which collect fees from the public for using the public conveniences in their Bus Stands ?

3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

(1) செஞ்சித் தொகுதி சட்ட மன்றப் பேரவை உறுப்பினர் திரு. என். ராமச்சந்திரன் மீது கார் மோதி காயமேற்படுத்தப்பட்டது குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஆற்காடு நா. வீராசாமி அவர்களும், திரு. கே. எம். அப்துல் வகாப் அவர்களும் ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு முன்னறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். அது எவ்வாறு ஒத்தி வைப்புத் தீர்மானத்தின் கீழ் வருகிறது என்பதை மாண்புமிகு அங்கத்தினர்கள் சுருக்கமாக விளக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, செஞ்சித் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினராக இருக்கும் மாண்புமிகு உறுப்பினர் திரு. ராமச்சந்திரன் அவர்கள் இந்த மாதம் 10-ம் தேதி பகல் சுமார் 2 மணி அளவில், செஞ்சி சாலையிலே காரை நிறுத்திவிட்டு நண்பர்களோடு பேசிக்கொண்டிருந்த நேரத்தில், திட்டமிட்டு அவரைக் கொலை செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு, ஒரு காரிலே உட்கார்ந்திருந்தார்கள், அவரைக் குறிபார்த்து, "இவனை விடாதே, இவன் மீது ஏற்று" என்று சொல்லக்கூடிய அளவுக்கு கார் மோதி, அதனாலே பலத்த காயங்களோடு இன்று மருத்துவ மனையிலே அவர்கள் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். தலைவர் அவர்களே, இது சட்ட மன்ற உறுப்பினர் பொறுத்த பிரச்சினை என்ற காரணத்தினால், நீங்கள் இது எப்படி ஒத்தி வைப்புத் தீர்மானத்தின் கீழ் வருகிறது என்று சுருக்கமாகச் சொல்லி விளக்க வேண்டும் என்று சொல்லியிருந்தாலும், இதனுடைய பின்னணியை எடுத்துச் சொல்ல வேண்டும் என்று நினைக்கிறேன். நீங்களும் இதிலே முழுமையான உணர்வைக் காட்டுகின்ற காரணத்தினாலே . . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவையில் என்னுடைய உணர்வை எதிலேயும் காட்டுவதாக இல்லை.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : நான் எதிர் பார்த்தது, தாங்களும் சட்ட மன்ற உறுப்பினராக இருந்திருக்கிறீர்கள். எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு இன்றையதினம் பாதுகாப்பற்ற நிலை இருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : தனிப்பட்ட முறையிலே வேண்டுமானால் சொல்லலாம், தலைவர் என்ற முறையிலே எந்த உணர்வைக் கட்டுப்படுத்திக்கொள்ள வேண்டுமோ, அதைக் கட்டாயம் கட்டுப்படுத்திக்கொள்ள வேண்டும்.

## செஞ்சி தொகுதி சட்டமன்றப் பேரவை உறுப்பினர் திரு. என். ராமச்சந்திரன் மீது கார் மோதி காய மேற்படுத்தப்பட்டது குறித்து

[1979 மார்ச் 12

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ஒத்தி வைத்துப் பேசுவதற்கு அவசியம் ஏற்படுமானால், அப்போது வேண்டுமானால் சொல்லலாம்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** காலையிலே சட்டமன்றப் பேரவையிலே கூடப் பேசியிருக்கிறார்கள். அதாவது இந்த நாட்டிலே ஒரு அரசாங்கம் இருக்கிறது. நீங்கள் 'பேசவேண்டாம்' என்றால், பேசாமலேயே இருந்து விடுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இங்கே உட்கார்ந்து கொண்டு நீங்கள் கேட்டால்கூட, அப்படித்தான் கட்டுப்படுத்தவேண்டியிருக்கும். அதற்கென ஒதுக்கிய நேரத்திற்கு அதிகமாக 2 நிமிடங்கள் என்றாலும்கூட, கவலைப்பட வேண்டியதில்லை. ஆனால் நான் அதிகமாகத்தான் பேசுவேன் என்றால் எப்படி? ஆரம்பத்திலிருந்தே அப்படித்தான் பேசுகிறீர்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** ஒத்திவைப்புத் தீர்மானத்தின்கீழ் இது எப்படி வருகிறது? எப்படிப்பட்ட நிகழ்ச்சி நடைபெற்றிருக்கிறது என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு பள்ளிக் கட்டிடத்தைத் திறக்கின்ற விவரத்தைப் பற்றித்தான் சொல்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** நானும் ஒருமுறை ஒத்திவைத்துப் பேச அனுமதித்தால், அப்போது என்ன பேசுவீர்கள்? சுருக்கமாகப் பேசுங்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** நான் சுருக்கமாகவே சொல்வதற்கு முயற்சிக்கிறேன். பள்ளிக் கட்டிடத்தைத் திறக்க வேண்டும் என்று அந்தத் தொகுதி சட்ட மன்றப் பேரவை உறுப்பினர் ஏற்பாடு செய்து, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சட்ட மன்றத் துணைத் தலைவர் பேராசிரியர் 11 ஆம் தேதி இந்தப் பள்ளியைத் திறக்க ஏற்பாடு செய்திருந்தார்கள். அந்த ஊராட்சி மன்றத் தலைவர் அதற்கான ஏற்பாட்டை, அழைப்பிதழை அனைவருக்கும் அனுப்பியிருந்தார். ஆனால் 11ஆம் தேதி நிகழ்ச்சி நடைபெற இருக்கிறது என்று தெரிந்துகொண்ட ஆளுங்கட்சியினர், குறிப்பாக அந்தத் தொகுதியினுடைய நாடாளுமன்ற உறுப்பினர், செஞ்சி தொகுதியினுடைய ஆளுங்கட்சி அமைப்பாளர், செஞ்சியிலே இருக்கக்கூடிய முன்னாள் ஒன்றியப் பெருந்தலைவர் ஆகியோர் 10ஆம் தேதி காலையில் அந்தக் கிராமத்திற்குச் சென்று, எப்படியும் 11ஆம் தேதிக்கு முன்பே பள்ளியைத் திறக்க வேண்டும் என்று முயற்சி எடுத்திருக்கிறார்கள். அந்நேரத்தில், ஊராட்சி மன்றத் தலைவரும், ஊர்மக்களும் ஒன்றாகத் திரண்டு, "திறப்பு விழா நிச்சயமாக

**மேற்கு தொகுதி சட்டமன்றப் பேரவை உறுப்பினர் திரு. என். ராமச்சந்திரன் மீது கார் மோதி காய மேற்படுத்தப்பட்டது குறித்து**



**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, பொதுவாக றுப்பினர்களுக்கு ஏற்படுகின்ற விபத்துக்களிலே தலைவர் அவர்களுடைய னர்வும் இருக்கும் என்ற எண்ணத்திலேதான் அப்படிக் குறிப்பிட்டேன். பாதுவாக இன்றைய ஆட்சியில் பொதுப் பணியில் ஈடுபட்டிருப்பவர்களுக்குப் ாதுகாப்பற்ற நிலைமைகள் இருக்கின்றன என்பதை அனைவரும் உணர்வார் ள். இரண்டு மாதங்களுக்கு முன்னாலே ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் காலை செய்யப்பட்டார். அதற்குப் பிறகு இந்த நாட்டில் எதிர்க் கட்சித் லைவராக இருக்கக்கூடிய டாக்டர் கலைஞர் அவர்கள் மீது உளி வீசிய ம்பவம் நடைபெற்றிருக்கிறது. இரண்டு தினங்களுக்கு முன்னாலே சட்ட ன்ற உறுப்பினர் கொலை செய்யப்படுவதற்கு திட்டமிடப்பட்டு இந்தச் சம்பவம் நடைபெற்றிருக்கிறது. அடுத்து அப்படிப்பட்ட சம்பவங்களுக்கு இந்த மேலவையிலுடைய உறுப்பினர்களில் யார் ஆளாக்கப்படுவார்களோ என்று எண்ணக்கூடிய அளவுக்கு எதிர்க் கட்சியிலே இருப்பவர்கள் தங்க ளுடைய கடமைகளை ஆற்றுகின்ற ஒரே ஒரு காரணத்தினாலேயே இன்றைய தினம் பாதுகாப்பற்ற நிலை இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்பு கிறேன். நானும் 10 ஆண்டுக்காலம் சட்டமன்றப் பேரவை உறுப்பினராக இருந்தேன். அதுவும் ஆளுங்கட்சியிலே, அப்படி இருந்த நேரத்தில், எங்க ளுடைய தொகுதிகளிலேகூட, அன்றையதினம் எதிர்க்கட்சியாக இருந்தவர்கள் கூட, பஞ்சாயத்துத் தலைவர், ஊராட்சி ஒன்றியத் தலைவர் எல்லாம், அவர வர்களுடைய கட்சித் தலைவர்களை அழைத்து சில நிகழ்ச்சிகள் நடத்து வார்கள். பள்ளிக் கட்டிடத்தைத் திறத்தல் அல்லது குடிநீர்த் திட்டத்தைத் திறந்து வைத்தல் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்திருப் பார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** சம்பவங்களைச் சொன்னது சரி. அதற்குப் பின்னணியாக இருப்பதற்கும், பின்னணியாகப் போய்ப் பேசிக் கொண்டிருந்தால் எப்போது முடிகிறது?

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** நடந்த சம்பவம் பற்றித்தான் சொல்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** எல்லோருக்கும் இல்லாத உரிமையை உங்களுக்கு மட்டும் கொடுக்க முடியுமா?

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** இந்தப் பிரச்சினையிலே உள்ள அடிப் படை தெரிந்தால்தான், இது எந்த அளவுக்கு ஒத்திவைப்புப் பிரச்சினையில் வரும் என்பதை அறிய முடியும்.

## திரு. எஸ். ராமச்சந்திரன் மீது கார் மோதி காயம் ஏற்படுத்தப்பட்டது குறித்து

1979 மார்ச் 14] (திரு. ஆற்காடு ந. வீராசாமி)

10ஆம் தேதி நடக்கக்கூடாது, 11ஆம் [illegible] விழா வைத்திருக்கிறோம். அப்படி திறப்பு விழா இன்று நடப்பதாக இருந்தால், என்னுடைய பிணத்தின் மீது தான், நீங்கள் இந்தப் பள்ளியைத் திறக்க வேண்டும்" என்று ஊராட்சி மன்றத் தலைவர் சொன்னபோது, "அப்படியானால் சரி, திறக்க வில்லை" என்று சொல்லிவிட்டு, கலைந்து போவதைப் போலப் போய், பிறகு அரை மணி நேரத்திற்குப் பிறகு, பின் பக்கமாக வந்து பூட்டை உடைத்து, கதவுகளை உடைத்து அங்கே அந்தப் பள்ளி திறக்கப் பட்டது என்ற சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறார்கள். இந்தச் சம்பவம் நடை பெறுவதற்கு முன்னால், சட்டமன்றப் பேரவை உறுப்பினர் அவர் களுக்குத் தெரிந்த உடனே அவர் மாவட்ட ஆட்சித் தலைவர், போலீஸ் அதிகாரிகள் ஆகியோரோடு தொடர்பு கொண்டு அவர்கள் 11ஆம் தேதி இந்த நிகழ்ச்சி வைத்திருக்கின்ற நேரத்திலே "ஆளுங்கட்சிக்காரர்கள் இப்படி 10ஆம் தேதியே திறக்க முயற்சிப்பதாக எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது, ஆகவே இதைத் தடுத்து நிறுத்துங்கள்" என்று சொல்லியிருக்கிறார்கள். அதிகாரிகள் "அப்படிப்பட்ட சம்பவங்கள் நடக்காது, ஆளுங்கட்சிக்காரர்களிடம் சொல்லி யிருக்கிறோம்" என்று வாக்குறுதி அளித்திருந்தும்கூட, அந்தப் பள்ளிக்கூடம் 10ஆம் தேதியே திறக்கப்பட்டிருக்கிறது. இதைத் தொடர்ந்து கொதிப் படைந்த பொதுமக்கள், அதற்குப் பின்னாலே எம்.பி.யை விரட்டியிருக் கிறார்கள். அவர் அந்தக் கிராமத்தை விட்டு வந்திருக்கிறார், வருகின்ற நேரத்திலே செஞ்சியிலே ஒரு ஓரத்தில் சட்டமன்றப் பேரவை உறுப்பினர் காரை நிறுத்திவிட்டு அவர் நண்பர்களோடு பேசிக்கொண்டிருந்ததைப் பார்த்த உடனே, காரிலே வந்துகொண்டிருந்த, முன்னாள் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் திரு. வேணுகோபால் அவர்கள், சட்டமன்றத் தேர்தலிலே போட்டியிட்டுத் தோற்றுப்போன ஆளுங்கட்சி வேட்பாளர் எல்லோரும் சேர்ந்து, "இவ்வளவுக்கும் காரணம் நின்று கொண்டிருக்கின்ற இந்த எம்.எல்.ஏ. தான்", "அவனை விடாதே, அவன் மீது காரை ஏற்று" என்று சொன்னதன் காரணமாக அப்படியே அந்த டிரைவர் காரைக் கொண்டுபோய் அங்கே நிறுத்தி வைத்திருந்த காரின் மீது மோதுகின்ற நேரத்திலே காருக்குப் பக்கத்திலே இருந்த திரு. ராமச்சந்திரன் அவர்கள் தாக்கிப்போடப்பட்டபோது, அவரைப் பிடிக்க வேண்டும் என்று நண்பர்கள் முயற்சித்த நேரத்தில், முடியாமல் போய் அவர் கீழே விழுந்துவிட்ட காரணத் தினாலே இன்றைய தினம் அவர் மருத்துவ மனையிலே சேர்க்கப்பட்டிருக்

(பிற்பகல் 5-20)

கிறார். எனக்குக் கிடைத்த தகவல், அந்த டிரைவர் சரியாக அந்தச் சட்ட மன்ற உறுப்பினர்மீது ஏற்றவில்லை என்பதால், அவரைக்கூடத் தாக்கியிருக்

## [illegible] தொகுதி சட்டமன்றப் பேரவை உறுப்பினர் திரு. என். ராமச்சந்திரன் மீது கார் மோதி காயம் ஏற்படுத்தப்பட்டது குறித்து



கிறார்கள் என்பதுதான். அதுமட்டுமல்ல. இதைத் தொடர்ந்து அந்தப் பகுதியிலே எப்படிப்பட்ட வன்முறைகள் நடந்திருக்கின்றன என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நம்முடைய மாண்புமிகு மின் துறை அமைச்சரவர்கள் காலையிலேகூட இன்னொரு அவையிலே சொல்லிக்கொண்டிருந்தார்கள். 7 ஆம் தேதி ஊராட்சித் தலைவருக்கு, இந்த விழா நடக்கக் கூடாதென்று ஆணையர் கடிதம் எழுதியிருந்தார்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொஞ்சம் தயவு செய்ய வேண்டும். எந்த உறுப்பினரும் இதுவரையில் ஒத்தி வைப்புத் தீர்மானத்தில் இவ்வளவு நேரம் பேசுவேன் என்று டிக்ளேர் பண்ணி விட்டு, அதிகமாகப் பேசியதில்லை. இது முறையில்லை, சுருக்கமாகப் பேசுங்கள். இந்த அவையின் மரபைக் காப்பாற்றுங்கள். மற்றவர்களும் இப்படிப் பேசினால் என்னவாகும் ?

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** தலைவரவர்கள் மற்ற சம்பவங்களுக்கும் இதற்கும் இருக்கின்ற வேறுபாட்டை உணருகின்ற காரணத்தால் சொல்கிறேன். விவரங்கள் அதிகமாகச் சொல்ல வேண்டுமென்ற எண்ணமில்லை. எப்படிப்பட்ட நிலை உருவாகியிருக்கிறது என்பதைச் சொன்னால்தானே தெரியும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** இப்படி ஒரு சட்டமன்ற உறுப்பினர் அடிபட்டிருக்கும் நேரத்தில், அந்தச் சட்டமன்ற உறுப்பினரைக் கொலை செய்ய முயற்சி நடந்தது என்று சொல்கிற சூழ்நிலையில், அவர்மீது 307 பிரிவுப்படி வழக்குப் போட்டிருக்கிறார்கள். இந்த அரசாங்கத்தில், சமீப காலமாக எதிர்க் கட்சிக்காரர்கள் தாக்கப்படுவதும், அவர்களைக் கொலை செய்ய முயற்சிப்பதும், அப்படிப்பட்ட நிலைக்கு ஆளாக்கப்பட்டவர்கள்மீது 307 செக்ஷன்படி வழக்குகள் போடுவதும் போன்ற கொடுமைகள் தொடர்ந்து நடந்துகொண்டிருக்கின்றன. ஆனால் எதிர்த் தரப்பில் குற்றம் சாட்டப்பட்ட சட்டமன்ற உறுப்பினர் கைது செய்யப்படவில்லை. காரிலிருந்து, 'விடாதே, அவன்தான் காரணம், அவனைக் கொல்லுங்கள்' என்று கத்திய அமைப்பாளர் கைது செய்யப்படவில்லை. ஆனால் வேறு ஒருவர் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இதில் அவசரப் பொது முக்கியத்துவம் என்ன என்று கூறுங்கள். இதுவரையில் ஒரு உறுப்பினரும் இப்படி நடந்து கொண்டதில்லை. ஒரு சீனியர் மெம்பர் என்று நீங்களே சொல்கிறீர்கள். 16 ஆண்டுகள் சட்டமன்றப் பேரவையில் இருந்தேன் என்று சொல்லுகிறீர்கள்.

ஆனால் அடங்கமாட்டேன் என்று சொல்லி, டிக்ளேர் பண்ணிவிட்டுப் பேசு கிறீர்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** 'அடங்க மாட்டேன்' என்று நான் சொல்லாத வார்த்தையை . . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** முடியுங்கள், சீக்கிரம்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** ஆளுங்கட்சி அமைப்பாளர் இதிலே ஈடுபட்டிருக்கிறார். அவரைக் கைது செய்யவில்லை. அவர் மீது வழக்கு பதிவு செய்யவில்லை. அடிபட்டவர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது, 307-வது செக்ஷன்படி. இதனால் கொந்தளிப்பு ஏற்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** சொல்ல வேண்டியவைகளையெல்லாம் சொல்லியாகிவிட்டது. அப்படிச் சொல்லிய பிறகு திருப்பிச் சொல்ல என்ன இருக்கிறது ?

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** இப்படிப்பட்ட கொடுமைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. எதிர்க் கட்சிக்காரர்களுக்குப் பாதுகாப்பில்லை. இந்த அரசாங்கத்திடம் இப்படி எதிர்க் கட்சிக்காரர்களைக் கொலை செய்து ஒழித்துவிட திட்டம் இருக்கிறதோ என்ற அச்சம் மக்கள் மத்தியில் பரவலாக ஏற்பட்டிருக்கிற காரணத்தால், இதைப் பற்றி விவாதிக்க, அவையின் மற்ற அலுவல்களை ஒத்தி வைக்க அனுமதி வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஜே. எஸ். அப்துல் வகாப் :** தலைவரவர்களே, செஞ்சி நகரத்திற்குச் சமீபத்திலுள்ள மட்டப்பாறை என்ற கிராமத்தில் ஆரம்பப் பள்ளிக்கூடம் ஒன்று புதிதாகக் கட்டி, அதற்குத் திறப்புவிழா நடத்த பஞ்சாயத்து சார்பிலே தீர்மானம் போட்டு, பேராசிரியர் அன்பழகன் அவர்கள் வந்து திறக்க வேண்டுமென்று ஏற்பாடு செய்து, 11ஆம் தேதி அந்த விழா நடக்க வேண்டுமென்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில் செஞ்சி எம்.எல்.ஏ., செஞ்சி இராமச்சந்திரன் பங்குகொள்வதாக நோட்டீஸ் வெளியிடப்பட்டிருந்தது. அந்தத் தொகுதியினுடைய பாராளுமன்ற உறுப்பினர் திரு. வேணுகோபால் அவர்களின் பெயர் அந்த நோட்டீசிலே இல்லை. அதனால் அவர் ஆத்திரப்பட்டு, இந்த விழா எப்படி நடக்குமென்று பார்க்கிறேன் என்ற அளவிலே வேறொரு நோட்டீஸ் வெளியிட்டு, 11 ஆம் தேதி திறப்பு விழா நடப்பதாக இருந்ததை மாற்றி, 10ஆம் தேதியே திறப்பு விழா நடத்துவோமென்று சொல்லி, தன்னுடைய பெயரை வைத்துத் திறப்பு விழா நடத்தப்படுமென்று சொல்லி, நோட்டீஸ் வெளியிட்டு, 10 ஆம் தேதி பள்ளிக்கூடம் திறப்பதற்கு வந்து

## செஞ்சித் தொகுதி சட்டமன்றப் பேரவை உறுப்பினர் திரு. என். ராமச்சந்திரன் மீது கார் மோதி காய மேற்படுத்தப்பட்டது குறித்து

[திரு. கே.எஸ். அப்துல் வகாப்] [1979 மார்ச் 12

விட்டார். ஆனால் ஊர் மக்கள், அவரைத் திறக்கவிடாமல் தடுத்துவிட்டனர். அதனால் அப்போது சென்றுவிட்டு, பிறகு பின் கதவு வழியாகப் பூட்டை உடைத்து உள்ளே வந்து, திறப்பு விழா நடந்ததாகப் பிரகடனப்படுத்திவிட்டுச் சென்றுவிட்டார்கள். இதைத் தொடர்ந்து அந்தக் கிராம மக்கள் அவர் கார் மீது கல் வீசி, அவரைத் தாக்கியிருக்கிறார்கள். அந்தத் தாக்குதல் காரணமாக எம்.பி. காயப்பட்டிருக்கிறார். கார் கண்ணாடிகள் உடைந்திருக்கின்றன. அவருடன் இருந்த ஒருவரின் 6 பற்கள் உடைந்து, கீழே விழுந்துவிட்டன என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த அளவிற்கு அவர் தாக்கப்பட்டார். பிறகு அவர் சென்றுவிட்டார். 6, 7 மைல்களுக்கு அப்பாலுள்ள செஞ்சிக்குப் போய்ப் பார்க்கும்போது, செஞ்சி இராமச்சந்திரன் அவர்கள், அந்தத் தொகுதி எம்.எல்.ஏ., தன்னுடைய காரை சாலையோரத்தில் நிறுத்திவிட்டு, நின்று கொண்டிருக்கிறார்கள். இவனால்தான் இவ்வளவு வம்பும், இவன்மீது காரை ஏற்றுங்கள் என்று எம்.பி. சொன்னதாகவும், கார் டிரைவர் காரைக் கொண்டு வந்து அந்தக் காரை இடித்ததாகவும், காருக்கு கார் மோதிக் கொண்டதால், செஞ்சி இராமச்சந்திரன் தூக்கி எறியப்பட்டார் என்றும், படுகாயப்பட்ட நிலையிலே 6 மணி நேரம் அவர் பிரக்ஞை இல்லாத நிலையில் இருந்து, ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோனார்கள் என்றும், கால் எலும்பு முறிந்துவிட்டதாகவும் பத்திரிகையில் செய்தி போடப்பட்டிருக்கிறது. இதிலே எம்.பி.யும் காயப்பட்டிருக்கிறார், எம்.எல்.ஏ.வும் காயப்பட்டிருக்கிறார். எம்.பி.-க்குச் சிறு காயமென்று அறிகிறேன். ஏனென்றால் நேற்றைய சாயந்திரம் பிண்டிவனத்தில் நடந்த பொதுக்கூட்டத்தில் அவர் பேசியதாகத் தகவல். ஆகவே அவருக்கு பலமான காயமில்லை. செஞ்சி இராமச்சந்திரன், உயிருக்கு ஆபத்தான நிலையிலிருந்து தப்பி, இன்றைக்கு கடலூர் ஆஸ்பத்திரியில் இருக்கிறார் என்று கேள்விப்படுகிறேன்.

இதிலே பிரச்சினை என்னவென்றால் அடிபட்டு, உயிர் இழக்கக்கூடிய நிலையில் இருந்த செஞ்சி இராமச்சந்திரன்மீது 307-வது செக்ஷன்படி கேஸ் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இந்தக் கலவரத்திற்கு அடிப்படைக் காரணமாக இருந்தது பூட்டு உடைப்பு, கார் ஏற்றியது. இதைத் தூண்டிவிட்டவர் எம்.பி., திரு. வேணுகோபால் அவர்கள். அவர்மீது 307 செக்ஷன்படி வழக்குப் போடப்படவில்லை. அவர் அரெஸ்ட் செய்யப்படவில்லை. இது நியாயமா? இந்த அநியாயத்தைத் தெரிந்த மக்கள் பதட்ட நிலை அடைந்திருக்கிறார்கள். அவர்கள் பீதி அடைந்திருக்கிறார்கள். இது அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயம் என்ற அடிப்படையிலே, இதைப்பற்றிப் பேச விதி 43-ன்படி இந்தச் சபையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[illegible]
திரு. என். ராமச்சந்திரன் மீது கார் மோதி
காய மேற்படுத்தப்பட்டது குறித்து



(பிற்பகல் 5.[illegible])

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, திருவத்திகுன்னம் ஊராட்சி மன்ற எல்லைக்குட்பட்ட மட்டப்பாறை என்னும் கிராமத்தில், ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி ஒன்றின் திறப்பு விழாவினை திரு. என். இராமசந்திரன், எம்.எல்.ஏ. அவர்களின் தலைமையின் கீழ், செஞ்சி ஊராட்சி ஒன்றிய முன்னாள் தலைவர் திரு. பெருமாள் நயினார் அவர்களது முன்னிலையில் முன்னாள் அமைச்சர் திரு. க. அன்பழகன் அவர்களால் 11—3—1979 அன்று நடத்தி வைக்கப்படும் என்று திருவத்திக்குன்னம் ஊராட்சி மன்றத் தலைவர் திரு. பெரியசாமி என்பவரால் நோட்டீஸ் வெளியிடப்பட்டது. ஊராட்சி ஒன்றியத்திற்கு சொந்தமான பள்ளிக்கூடத்தினை ஊராட்சி ஒன்றியத்தின் அனுமதியின்றி திறப்பு விழா ஏற்பாடு செய்தது சரியல்ல என்று ஆட்சேபித்து, விழாவினைத் தொடர வேண்டாம் என்று ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் ஊராட்சி மன்றத் தலைவரை 7—3—1979 தேதியன்று அறிவுறுத்தினார். ஊராட்சி ஒன்றியத்தினைக் கலக்காமல் பள்ளிக்கூடக் கட்டிடத் திறப்பு விழாவினை ஏற்பாடு செய்தது கண்டு அதிர்ச்சியுற்ற உள்ளூர் அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள், திரு. தேவநாதன் என்பவரது தலைமையில் திரு. பெருமாள் நயினார் அவர்களது முன்னிலையில், வந்தவாசி தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சி. வேணுகோபால் அவர்களால் அந்தப் பள்ளிக்கூடக் கட்டிடத் திறப்பு விழாவினை நடத்தப் போவதாக 10—3—1979 அன்று துண்டுப் பிரசுரங்கள் விநியோகித்தனர். இந்த விஷயத்தில் எச்சரிக்கையாக இருக்கும்பொருட்டும், சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பதற்காகவும் தேவையான அளவு காவல் துறையினர் செஞ்சிக்கு அனுப்பப்பட்டு நிறுத்தி வைக்கப்பட்டனர். நடுப்பகல் வரை எந்த விதமான அசம்பாவிதங்களும் நடைபெறவில்லை. பகல் 12-30 மணிக்குப் பிறகு நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சி. வேணுகோபால் அவர்களும், திரு. பெருமாள் நயினார் அவர்களும் மற்றும் சிலரும் மட்டப்பாறை சென்று, பள்ளிக்கூடக் கட்டிடத்திற்குள் நுழைந்து அதனைத் திறந்து வைத்தனர். சுவரில் பள்ளிக்கூடம் திறந்து வைக்கப்பட்டதாக எழுதி வைத்ததாகத் தெரிகிறது. இதற்கிடையில் செஞ்சி வட்டாட்சியரும் திண்டிவனம் துணைக் காவல் கண்காணிப்பாளரும் கிராமத்திற்கு வந்து, விழா அங்கீகரிக்கப்படாததால், அதனை நடத்த வேண்டாம் என்று அறிவுறுத்தினர். நாடாளுமன்ற உறுப்பினரும் மற்றவர்களும் அந்த அறிவுரையைக் கேட்டு, செஞ்சிக்குத் திரும்பினதாகத் தெரிகிறது. எந்தவிதமான அசம்பாவிதங்களும் மட்டப்பாறையில் நடைபெறவில்லை. நாடாளுமன்ற உறுப்பினரும் மற்றவர்களும் பயணம் செய்த கார் செஞ்சியை அடைந்தபோது, கூட்டமாகக் கூடியிருந்த வன்முறைக் கும்பல் ஒன்று காரின்

## ... சட்டமன்றப் பேரவை உறுப்பினர் திரு. என். ராமச்சந்திரன் மீது கார் மோதி காய் மேற்படுத்தப்பட்டது குறித்து

[திரு. கா. இராசா முகமது] [1979 மார்ச் 12

மீது கல்லெறிந்து தாக்கியதாகவும், அந்தக் தாக்குதலினால் காரின் முன்புறக் கண்ணாடி உடைந்தது, காரின் உள்ளிருந்த பாபு என்பவரின் முகத்தின்மீது அடிபட்டு அவர் சில பற்களை இழந்ததாகவும் தெரிகிறது. அவர் உடனே காவல் நிலையத்திற்குக் கொண்டு வரப்பட்டார். நாடாளுமன்ற உறுப்பினர் கொடுத்த புகாரின் மீது இ.பி.கோ. 147, 341, 325, 323, 307, 109 ஆகிய பிரிவு களின் கீழ் வழக்கு ஒன்று குற்ற எண் 225/79-ல் பதிவு செய்யப்பட்டது. இருசப்பன் என்பவரால் கல்லெறியப்பட்டது என புகாரில் கூறப்பட்டது. இருசப்பன் பெல்ட்டால் தன்னைத் தாக்கியதாகவும் நாடாளுமன்ற உறுப் பினரின் புகாரில் கூறப்பட்டுள்ளது. இருசப்பன் கைது செய்யப்பட்டுள்ளார் கல்லெறி சம்பவம் முடிந்த சிறிது நேரத்திற்குப் பிறகு செஞ்சி மார்க்கெட் ரோடில் தனது காருக்குப் பக்கத்தில் நின்று கொண்டிருந்த திரு. என். இராமச் சந்திரன், எம்.எல்.ஏ. அவர்கள் மீது திரு. பெருமாள் நயினாருக்குச் சொந்த மான டி.எம்.டபிள்யூ 9565 என்ற எண்ணுள்ள கார் மோதியது. திரு. ராமச் சந்திரன் கீழே விழுந்து அவரது வலது முழங்கையிலும் வலது தொடை யிலும் சொற்ப காயங்கள் ஏற்பட்டன. உடனடியாக அவர் காவல் நிலையத் திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, அங்கிருந்து மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, சிகிச்சை அளிக்கப்பட்டார். அன்று மாலையிலேயே அவர் கடலூர் மாவட்டத் தலைமை மருத்துவ மனைக்குச் சென்று அங்கு சிகிச்சைக் காக அனுமதிக்கப்பட்டார். திரு. இராமச்சந்திரன் மீது கார் மோதியது சம்பந்தமாக இ.பி.கோ. 279, 307, 337 ஆகிய பிரிவுகளின் கீழ் ஒரு வழக்கு குற்ற எண் 226/79-ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்தச் சம்பவங்களின் தொடர்ச்சியாக இரு கட்சித் தொண்டர்களிடையேயும் மோதல்கள் ஏற்படும் என்று கருதியதால், செஞ்சி வட்டாட்சியரால் 10—3—1979 அன்று பிற்பகல் மூன்று மணியிலிருந்து 10 நாட்களுக்கு செஞ்சி வட்டம் முழுதும் 144 தடை யுத்தரவு அமுல் செய்யப்பட்டுள்ளது. மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் அங்கு முகாம் இட்டுள்ளார். போலீஸ் பாதுகாப்பும், ரோந்தும் போடப் பட்டுள்ளன. 10—3—1979 அன்று மாலை மாவட்ட ஆட்சியாளரும் அங்கு சென்று நிலைமைகளை ஆராய்ந்து வந்துள்ளார். நிலைமை அமைதியாக உள்ளது. வழக்குகள் புலனாய்வில் இருக்கின்றன. 10—3—1979 மாலை திரு. பெருமாள் நயினாருக்குச் சொந்தமான ஒரு சினிமா தியேட்டர் மீது வன்முறைக் கும்பல் ஒன்றினால் கல்லெறியப்பட்டது. செஞ்சி காவல் நிலையக் குற்ற எண் 227/79-ல் செக்ஷன் இ.பி.கோ. 147, 427, 379 மற்றும் 436-ன் கீழ் ஒரு வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. கார் டி.எம்.டபிள்யூ. 9565 திரு. இராமச்சந்திரன், எம்.எல்.ஏ. அவர்கள் மீது மோதியபோது, திரு. பெருமாள் நயினார் அவர்களும் காரில் இருந்ததாகத் தெரிய வந்ததால், திரு.

## திரு. எம். [illegible] கார் மோதி
## [illegible] மேற்படுத்தப்பட்டது குறித்து

1979 மார்ச் 12]  [திரு. கா. இராசா முகமது]

பெருமாள் நயினார் கைது செய்யப்பட்டுள்ளார். செக்ஷன் 144, சி.ஆர்.பி.சி.
தடையுத்தரவை மீறியதாக 12 நபர் கைது செய்யப்பட்டுள்ளனர். நிலைமை
அமைதியாகவும் சாதாரணமாகவும் இருக்கின்ற காரணத்தாலே, இந்த
அவையை ஒத்தி வைத்து விவாதிக்கத் தேவையில்லை என்று கேட்டுக்
கொள்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** தலைவருடைய தீர்ப்புக்கு முன்னால் ஒரே ஒரு
விளக்கத்தை மாண்புமிகு அமைச்சரிடமிருந்து தெரிந்துகொள்ள விரும்பு
கிறேன். மாண்புமிகு அவை முன்னவருடைய விளக்கத்திலே அந்தச் சம்ப
வங்கள் நடைபெற்றதை ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். அங்கு பதட்ட
நிலை இருப்பதை அது தெரிவிக்கின்றது. ஆனால் எம்.பி. இருந்த காரைக்
கொண்டு மோதி கொலை செய்யும் முயற்சிக்குக் காரணமாக இருந்தவர்கள்
மீது செக்ஷன் 307-ன் கீழ் வழக்குப் போடப்படவில்லை. மற்றவர்கள் மீது
செக்ஷன் 307-ன் கீழ் வழக்குப் போடப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு
அவை முன்னவர் அவர்கள் அளித்த விளக்கத்தில் மற்றவர்கள் மீது செக்ஷன்
307-ன் கீழ் வழக்குப் போடப்பட்டிருப்பதாக இல்லை.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** போடப்பட்டிருக்கிறது.

**திரு. ம. சங்கரலிங்கம் :** போடப்பட்டிருந்தாலும், நிர்வாக நிலையில்
இல்லாமல், ஒரு நீதி விசாரணை செய்வதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள்
உறுதியளித்தால், இந்தத் தீர்மானத்தை நாங்கள் வற்புறுத்தவில்லை. அப்படிப்
பட்ட ஒரு உறுதிமொழியை மாண்புமிகு அமைச்சரவர்கள் அளிப்பார்களா
என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்
சொல்லுவார்கள். அவர் சொல்லிய பிறகு, நான் தீர்ப்பளிக்கிறேன்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மரபுப்படி என்னுடைய
அறிக்கையை நான் வாசித்ததற்குப் பிறகு இதிலே விவாதம் தேவையில்லை
யென்று கருதுகிறேன். ஆனால் ஒரு தகவலுக்காகச் சொல்கிறேன். கார்
மோதியது சம்பந்தமாக இ.பி.கோ. 279, 307, 337 ஆகிய பிரிவுகளின் கீழ்
ஒரு குற்ற வழக்கு. இவர்கள் புகார் மீதும் அவர்கள் புகார் மீதும், இரு
சாராரும் புகார் கொடுத்திருப்பதால் போடப்பட்டிருப்பதாக நான் விசித்
திருக்கிறேன். எனவே, அதன் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது
என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். நடைமுறைக்கு மாறாக
உள்ள இந்த இரண்டு பேர் பேசியதையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கி
விடலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## சென்னைத் தொகுதி சட்டமன்றப் பேரவை உறுப்பினர் திரு. என். ராமச்சந்திரன் மீது கார் மோதி காய மேற்படுத்தப்பட்டது குறித்து

[1979 மார்ச் 12

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** செக்ஷன் 307ன் கீழ் எம்.பி. மீது வழக்குப்போடப்படவில்லை என்ற தகவல் எனக்குக் கிடைத்திருக்கிறது. இதற்கு விளக்கம் தேவை.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எம்.பி. அவர்கள் மீது ஏன் இவ்வளவு ஆத்திரமாக இருக்கிறார்கள் என்பது தெரியவில்லை. அந்தக் காரில் யார் இருந்தார்கள், அந்தக் கார் யாருக்குச் சொந்தமானது என்பதைத் தான் நான் தெளிவுபடுத்தியிருக்கிறேன். அறிக்கையிலேயும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நாம் எப்படி பாதுகாப்புத் தரக் கடமைப்பட்டிருக்கிறோமோ அதேபோல நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் நாம் பாதுகாப்பு தரக் கடமைப்பட்டிருக்கிறோம். நாம் இந்தியாவிலே தான் இருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆற்காடு நா. வீராசாமி அவர்கள் இருக்கையிலிருந்து எழுந்தார்கள்).

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** தயவுசெய்து உட்காருங்கள். எவ்வளவு தூரம் அளவுக்கு மீறி அனுமதிக்க முடியுமோ அவ்வளவு அனுமதி கொடுத்து விட்டேன். தயவு செய்து நான் சொல்வதைக் கேளுங்கள். இதுவரை என்னுடைய 7 வருட அனுபவத்தில் ஒத்திவைப்புத் தீர்மானத்தின் பேரில் அரசாங்கத்தின் பதிலைச் சொல்லிய பிறகு ஒரு வார்த்தையும் யாரும் பேசினதும் கிடையாது. அனுமதித்ததும் கிடையாது. அதற்கு மீறியும் அனுமதித்து விட்டேன். அது மரபாக ஆகி விடக்கூடாது. மாண்புமிகு அவை முன்னவர் அவர்களுடைய விளக்கத்திற்குப் பிறகு இப்பொருள் குறித்து அவையை ஒத்திவைத்து விவாதிக்கத் தேவையில்லையென்று கருதி என் அனுமதியை மறுக்கிறேன்.

**திரு. எம். சங்கரலிங்கம் :** இந்தத் தீர்ப்பு மீது எங்களுக்கு எந்தவிதமான ஆட்சேபமும் இல்லை. ஆனால் அரசு இதில் நடந்து கொள்கிற ஒருபட்சமான நிலையை எதிர்த்தும், நீதி விசாரணைக்கு ஒப்புக்கொள்ளாத நிலையில் அரசு நிர்வாக ரீதியாக தான் நினைத்ததைச் செய்து கொள்ள வேண்டுமென்று நினைத்திருக்கிறது என்பதையும் தெரிவித்து எங்களுடைய கண்டனத்தைத் தெரிவிக்கின்ற நிலையில் வெளியேறுகிறோம்.

(மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரும் அவரைச் சார்ந்த உறுப்பினர்களும் அவையிலிருந்து வெளியேறினார்கள்).

(2) மதுரையில் சிவாஜியின் 200-வது படம் திரிசூலம் பட விழா நடந்தபோது, மாட்டு வண்டி ஊர்வலத்தைக் காவலர் தடுத்தபோது ஏற்பட்ட கலவரம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம். திரு. என். இராமகிருஷ்ணத் தேவர், திரு. கே. எம். அப்துல் வகாப் ஆகியோர் கொடுத்துள்ளார்கள். அது எவ்வாறு ஒத்திவைப்புத் தீர்மான விதிகளுக்குட்பட்டதாகும் என்பதைச் சுருக்கமாக விளக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. என். இராமகிருஷ்ணத் தேவர்: தலைவரவர்களே, மார்ச் 10 ஆம் தேதி அன்று அகில இந்திய சிவாஜி ரசிகர் மன்ற சார்பில் சிவாஜியின் 200-வது படம் திரிசூலம் பட விழா மதுரையில் நடந்தது. நானும் அகில இந்திய சிவாஜி ரசிகர் மன்றச் செயலாளரும் அதில் கலந்து கொண்டோம். அந்த பகுதி ஊர்வலமான விழாக்கள் இதற்கு முன்னால் அங்கே நடந்துள்ளன. அந்த நேரத்தில் 50 இரசிகர் மன்ற வாலிபர்கள் இரத்த தானம் கொடுக்க வேண்டுமென்று சொல்லி என்னிடம் வந்தார்கள். என்னிடம் அவர்கள் வந்து சொன்னதால் நான் அவர்களைப் பெரிய ஆஸ்பத்திரிக்கு கூட்டிக் கொண்டு . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களையா இரத்த தானம் கொடுக்கச் சொன்னார்கள் (சிரிப்பு).

திரு. என். இராமகிருஷ்ணத் தேவர்: இரசிகர் மன்ற வாலிபர்கள் இரத்த தானம் கொடுக்கப் போகிறோம் என்று சொல்லி முன்வந்தார்கள். ஆஸ்பத்திரிக்கு அழைத்துக்கொண்டு . . . .

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இரத்த தானத்திற்கு தங்களையா கேட்டார்கள் என்று மாண்புமிகு பேரவைத் தலைவரவர்கள் கேட்கிறார்கள்.

திரு. என். இராமகிருஷ்ணத் தேவர்: கொடுக்கச் சொன்னால் நானும் தயாராக இருக்கிறேன். (சிரிப்பு). அவர்களை ஆஸ்பத்திரிக்கு அழைத்துப் போய் இரத்த தானத்திற்கான ஏற்பாடுகளைச் செய்து டாக்டர்களைப் பார்த்து, அதன் பிறகு சிவாஜி முன்னிலையில் அவர் கையால் அவர்களுக்குப் பாராட்டு வழங்க வேண்டுமென்பதற்காக அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்வதற்காக ஆஸ்பத்திரிக்குப் போய் விட்டேன். அப்போது அகில இந்திய இரசிகர் மன்றக் காரியதரிசியும் என்னுடன் வந்தார். ஆஸ்பத்திரிக்குப் போய் டாக்டர்களைப் பார்த்து, அதற்கான வேலைகள் நடந்துகொண்டிருக்கும் போது, அந்தக் காரியதரிசி என்னிடம் வந்து 'உங்களுடைய காரில் நான்

நடந்தபோது, மாட்டுவண்டி ஊர்வலத்தைத் தடுத்து
நிறுத்தியபோது ஏற்பட்ட கலவரம் குறித்து.



(பிற்பகல் 5-40)

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: தலைவர் அவர்களே, மதுரை மாநகரில் 10—3—1979 அன்று சிவாஜி கணேசன் அவர்களுடைய 200-வது பட வெளியீட்டு விழாவை மிகச் சிறப்பான முறையில் கொண்டாட ஏற்பாடு செய்திருந்தார்கள். அன்றைய தினம் அவ்விழாவினையொட்டி ஒரு மாபெரும் ஊர்வலம் எடுத்தார்கள். அந்த ஊர்வலத்தில் 500க்கும் மேற்பட்ட கார்கள் 1,000க்கும் குறைவான மாட்டு வண்டிகள் எதிர்பாராமல் கிராமங்களிலிருந்து வந்தவைகள், தாங்களும் அந்த ஊர்வலத்தில் கலந்து கொள்வதாகச் சொன்னார்கள். ஊர்வலத்தில் மாட்டு வண்டிகள் போவது என்பது முதலில் போடப்பட்ட திட்டமில்லை. ஆனாலும் பல கிராமங்களிலிருந்து மக்கள் ஆயிரக்கணக்கான அளவில் மாட்டு வண்டிகளில் மதுரைக்கு இந்த விழாவைக் காண வந்திருந்த காரணத்தால், அவர்களும் அந்த ஊர்வலத்தில் கலந்துகொள்ள வேண்டுமென்ற விருப்பத்தைத் தெரிவித்தார்கள். மேலும் அந்த ஊர்வலம் 8 மைல் தூரத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. எனவே அவர்கள் தங்கள் வண்டிகளில் தான் வருவோம் என்று பிடிவாதமாகச் சொன்னார்கள். ஊர்வலத்தில் மாட்டு வண்டிகள் போகக்கூடாது என்பது போலீஸ் தரப்பில் போடப்பட்ட தடையாகும். மாட்டு வண்டிக்காரர்கள் ஊர்வலத்தில் போக வேண்டுமென்று சொல்ல போலீஸ் தரப்பில் போகக்கூடாது என்று சொல்ல, அதன் காரணமாக அங்கே விவகாரம் ஏற்பட்டது. ஆனால் இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் என்ன செய்தி வெளியிட்டார்கள் என்றால், The condition of licence for procession was that it should not pass through certain streets with bullock carts.

அதாவது சில தெருக்களின் வழியாகப் போகக்கூடாது என்று சொல்லப்பட்டது. ஊர்வலத்தினர் அந்த ரூட்டிலிருந்து மாறிப் போனதால், இந்தச் சம்பவம் நடைபெற்றதாகச் செய்தி வந்திருக்கிறது. அது உண்மை இல்லை. மாட்டு வண்டிகளை ஊர்வலத்தில் போக அனுமதிக்க மாட்டோம் என்று போலீஸ் தரப்பில் சொன்னார்கள். இதுதான் உண்மை. ஆனால் வண்டிக்குச் சொந்தக்காரர்கள் இதைக் கேட்கவில்லை [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible]

நடந்தபோது, மாட்டுவண்டி ஊர்வலத்தைக் காவலர்
தடுத்தபோது ஏற்பட்ட கலவரம் குறித்து.



போகிறேன்" என்று சொன்னார். அவரை உடனே போகச் சொல்லி விட்டேன். இவர் போகிற வழியில் பல்லாயிரக்கணக்கான வண்டிகள் ஊர்வலமாகப் போய்கொண்டிருந்தன. அந்த நேரத்திலே வண்டிகள் போகக் கூடாது என்று தடுத்திருக்கிறார்கள். ஆர்டர் வாங்கிக் கொண்டுதான் நாங்கள் ஏற்பாடு செய்திருக்கிறோம், இதற்கு முன்னாலே கூட வண்டிகள் ஊர்வலம் சென்றது உண்டு. அப்படியும் போலீசார் வண்டிகள் போகக் கூடாது என்று தடுத்து நிறுத்தி வைத்திருந்தார்கள். இந்த நேரத்திலே திரு. ராஜசேகரன் அவர்கள் போலீசாரிடம் சென்று "எங்கள் வண்டிகள் செல்லும்வண்ணம் ஆர்டர் வாங்கித்தான் செல்கிறோம். ஆகவே போக விடுங்கள்" என்று சொல்லியிருக்கிறார்கள். ஒரு வண்டியையும் போலீசார் விடவில்லை. பிறகு அவர் "முதல் வண்டியில் நான் ஏறி வண்டியை விடுகிறேன், என்னைத் தடு" என்று சொல்லி வண்டியை விட்டிருக்கிறார். அவரை அடித்த அடியில் துணி எல்லாம் கிழிந்து விட்டது. முதுகிலே 5 அடி. நல்ல தடிப்பான அடி. இந்த நிலையிலே மேலதிகாரிகள் வண்டிகளை விட்டு விடு என்கிற தகவலைக் கொடுத்ததாக நானே சொன்னேன். அந்தமாதிரி மேலதிகாரிகளிடத்திலிருந்து தகவல் வந்ததும் உடனே போலீசார் அத்தனை பேரும் வாபஸ் வாங்கி வண்டியைப் போக விட்டார்கள். இரண்டு இலட்சம் ஜனங்கள் கூடியிருந்தார்கள். அங்கே நின்ற போலீசார் வாபஸ் வாங்கிவிட்டார்கள். இவர் அடியைக் காட்டினார். எல்லோருக்கும் ஒரு பெரிய பதட்டம் ஏற்பட்டிருந்தாலும், சிவாஜி வந்து நாம் அதிகாரிகளை எல்லாம் கலந்து பேசலாம், இங்கே எந்தவிதமான நிலையையும் ஏற்படுத்தக்கூடாது என்று இரசிகர்களைத் தடுத்து விட்டார்கள். மதுரையே இதுவரை பார்க்க முடியாத அளவில் கூட்டப்பட்ட மக்கள் திரள் கூட்டத்தில் இவர்கள் இந்தமாதிரி நடந்துகொண்டதையும், போலீசார் வாபஸ் வாங்கிக் கொண்டு போய் விட்டதையும் பற்றி நான் இந்த அவையில் கொடுத்திருக்கின்ற ஒத்தி வைப்புத் தீர்மானம் மிக முக்கியமான ஒன்றாக இருப்பதனால் . . . . . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர்: "இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இதைப் பற்றி விவாதிக்க வேண்டுமென்று" பேசி முடித்து விடுங்கள்.

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர்: இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இதைப்பற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்

[திரு. கே. எஸ். அப்துல் வகாப்] [1979 மார்ச் 12

மாட்டு வண்டிக்காரர்களை ஊர்வலமாகப் போகக்கூடாது என்று போலீஸ் தரப்பில் தடுத்ததில் எந்த நியாயமுமில்லை. காரணம் கோவையில் அனுமதித் திருக்கிறார்கள். சென்னையில் அனுமதித்திருக்கிறார்கள். மதுரையில் மட்டும் சென்றால், என்ன கெட்டுப்போய் விடும்? அவர்களைத் தடுக்காமல் இருந்திருந்தால், இந்தச் சம்பவமே ஏற்பட்டிருக்காது. இறுதியில் போலீஸ் தரப்பில் மாட்டு வண்டிகள் ஊர்வலத்தில் போக ஒப்புக்கொண்டு அனுமதியும் வழங்கியிருக்கிறார்கள். நான் என்ன சொல்லுகிறேன் என்றால், இப்படி கைகலப்பு ஏற்படுவதற்கு முன்னாலேயே அவர்களை ஊர்வலமாகப் போக அனுமதித்திருந்தால், இந்த நிலை ஏற்பட்டிருக்காது. அதையொட்டிப் பல விரும்பத்தகாத விவகாரங்கள் ஏற்பட்டிருக்காது. இந்த மாதிரி மதுரையில் கலவரம் ஏற்பட்டதன் காரணமாக, அங்கே ஒரு பதட்டமான சூழ்நிலை உருவாகி மக்களிடையே ஒரு பீதி ஏற்பட்டிருக்கிறது. எனவே இந்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வைக் குறித்து இந்த அவையில் பேசுவதற்காக, அவையின் மற்ற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே.

2—3—1979 அன்று அகில இந்திய சிவாஜி கணேசன் ரசிக மன்றத்தின் துணைத் தலைவர் திரு. மகாமுனி, 10—3—1979 அன்று காலை மாரியம்மன் தெப்பக்குளத்திலிருந்து தமுக்கம் கலையரங்கத்திற்கு திரு. சிவாஜி கணேசனின் 200-வது படம் வெளியிட்டு விழாவையொட்டி ஒரு ஊர்வலம் எடுத்துச் செல்வதற்கு அனுமதி கோரினர். ஊர்வலத்தில் மாட்டு வண்டிகளையும் தொண்டர்களை லாரிகளிலும் ஏற்றிச் செல்லக்கூடாது என்ற நிபந்தனையுடன் காவல் துறையினரால் அனுமதி அளிக்கப்பட்டது. அனுமதி அளிக்கப்பட்ட உத்தரவு 5—3—1979 அன்று சம்பந்தப்பட்டவர்களிடம் கொடுக்கப்பட்டது.

10—3—1979 அன்று காலை சுமார் 10-30 மணி அளவில் திருவாளர்கள் மகாமுனி, சண்முகம், ராஜசேகரன் மற்றும் பலரின் தலைமையின்கீழ் சுமார் 10,000 தொண்டர்கள் மதுரை [illegible] குளத்தில் கூடினர். 34 லாரிகள். 218 மாட்டு வண்டிகள், 14 பேருந்துகள், 19 டிராக்டர்கள், 3 கார்கள், 6 வேன்கள், 6 ஆட்டோ ரிக்ஷாக்கள், 3 குதிரைகள் ஊர்வலத்தில் பங்கேற்க வந்தன. காவல் துறை உதவி கண்காணிப்பாளர் (சட்டமும் ஒழுங்கும் மற்றும் போக்குவரத்து)



1979 மார்ச் 12] [திரு. கா. இராசா முகமது]

பாதுகாப்புக்காக இருந்தனர். அவர்கள் ஊர்வலத்தில் மாட்டு வண்டிகளை எடுத்துச் செல்லக்கூடாது என்று எச்சரித்தனர். அந்த எச்சரிக்கைக்குச் செவி மடுக்காமல் ஊர்வலத்தை மாட்டு வண்டிகளுடன் தொடர்ந்தனர். கூட்டம் ஒழுங்கற்று, கட்டுப்பாட்டை மீறி காவலர்கள்மேல் கற்களை எறிந்தனர். காவலர்கள் அவர்களைத் தடுத்தனர். ஒரு ரிசர்வ் இன்ஸ்பெக்டர் மற்றும் மூன்று காவலர்கள் காயமடைந்தனர். ஒரு காவலர் மருத்துவ மனையில் உட்புற நோயாளியாகச் சிகிச்சைக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்டார். மற்றவர்கள் வெளி நோயாளிகளாகச் சிகிச்சை அளிக்கப்பட்டனர். காவலர்கள் கூட்டத்தினரைத் துரத்திய பொழுது, குப்பமுத்து, அலிகான் என்ற இருவர் காயமடைந்தனர். அவர்கள் இருவரும் வெளி நோயாளிகளாகச் சிகிச்சை அளிக்கப்பட்டனர். பி-2 காவல் நிலையத்தில் இ.பி.கோ. 147, 148, 336, 332, 337 மற்றும் 118 பிரிவுகளின்கீழ் குற்ற எண் 193/79-ல் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. தொண்டர்களை லாரிகளில் ஏற்றிச் சென்றதற்காக வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஊர்வலம் மதுரையின் முக்கிய வீதிகளின் வழியாகச் சென்று மாலை சுமார் 1-50 மணி அளவில் தமுக்கம் கலை அரங்கத்தை அடைந்தது.

இந்நிகழ்ச்சியில் கூட்டத்தினரில் இருவர்தான் காயமடைந்தனர். கூட்டத்தினரைத் துரத்துவதற்கு, காவலர்கள் பிரம்பைத்தான் உபயோகித்தனர். திரு. ராஜசேகரன் காவலர்களால் தாக்கப்படவில்லை. நிலைமை அமைதியாகவே உள்ளது. எனவே இந்நிகழ்ச்சி குறித்து விவாதிக்க இம்மன்றத்தின் ஏனைய அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டிய அவசியம் இல்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு இப்பொருள் குறித்து, மேலும் விவாதிக்க அவையின் மற்ற அலுவல்களை ஒத்தி வைக்கத் தேவையில்லை என்று கருதி எனது அனுமதியை மறுக்கிறேன்.

## 4. கவன ஈர்ப்பு.

**(1) தென்னாற்காடு மாவட்டத்தில் தனியார் உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளிலிருந்து வேறு தனியார் பள்ளிகளுக்கு மாற்றப்பட்ட உபரி ஆசிரியர்களுக்கு ஆண்டு ஊதிய உயர்வு, விடுப்பு வசதிகள், கோடை விடுமுறைக்கான ஊதியம் போன்றவை மறுக்கப்படுவது குறித்து.**

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்—

"தென்னாற்காடு மாவட்டத்தில் தனியார் உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் மாணவர் எண்ணிக்கை குறைவு, வகுப்புகள் மூடப்படுதல், பதினோராம் வகுப்பு நீக்கம் போன்ற காரணங்களினால் உபரியாகக் கருதப்பட்டு, வேறு தனியார் பள்ளிகளுக்கு மாற்றப்பட்டுள்ள (Deployment) ஆசிரியர்களது பணியைத் தொடர்ச்சியான பணியாக கடலூர் மாவட்டக் கல்வி அலுவலகம் கருதாததால், அவ்வாசிரியர்களுக்கு ஆண்டு ஊதிய உயர்வு, விடுப்பு வசதிகள், கோடை விடுமுறைக்கான ஊதியம் போன்றவை மறுக்கப்படுவது குறித்து".'

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவர் அவர்களே, தனியார் பள்ளிகளில் எந்தக் காரணத்தாலாவது ஆசிரியர் பதவிகள் ஆசிரிய-மாணவர் விகித அடிப்படையில் உபரியாக, பள்ளிக் கல்வித் துறையால் கருதப்பட்டு அவற்றை ஆசிரியர்களுடன் ஒரு பள்ளியிலிருந்து இன்னொரு பள்ளிக்கு அத்துறை மாற்றும்பொழுது அவ்வாசிரியர்களுக்கு ஊதிய உயர்வு, விடுப்பு வசதிகள், கோடை விடுமுறைக்கான ஊதியம் போன்ற எந்த வகையிலும் பாதிப்பு ஏற்படக்கூடாது என்று அரசு தெளிவான விளக்கம் வெளியிட்டுள்ளது. ஆகவே, இந்த அறிவுரையால் தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள இவ்வகையைச் சார்ந்த ஆசிரியர்களும் பயனடைவார்கள்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, அநேகமாக அமைச்சர் அவர்கள் இங்கே அளித்த விளக்கமானது நான் இந்த கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்த பிறகுதான் கல்வித் துறை அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டிருக்கும் என்று நினைக்கிறேன். எனினும் அந்த அளவுக்கு மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

தனியார் துறைப் பள்ளிகளில் உபரியாகக் கருதப்படுகிற ஆசிரியர்களை வேறு பள்ளிகளுக்கு மாற்றி அனுப்பக்கூடிய ஆணையை, பள்ளிக் கல்வி இயக்குநர் 1976ஆம் ஆண்டு மே மாதம் அனுப்பினார். அந்த ஆணை வெளியிடப்பட்ட





பிறகும், அதை அமுல்படுத்தாத காரணத்தால், இந்தப் பிரச்சினை குறித்து பலமுறை சங்கத்தின் மூலமாகவும், தனிப்பட்ட முறையிலும் எடுத்துக் கூறியும் தீர்க்கப்படாமலேயே கால தாமதப்படுத்தினார்கள். இந்த கவன ஈர்ப்பின் மூலம் அந்தப் பிரச்சினை தீர்ந்திருக்கிறது. எனவே எதிர்காலத்தில் இப்படி சாதாரணமாகத் தீர்க்கப்படக்கூடிய பிரச்சினைகளைச் சங்கப் பிரதிநிதிகள் அல்லது மேலவை உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லும்போது, அவைகளை உடனுக்குடன் தீர்த்து வைக்க மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஆணையிடுவார்களா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** சென்னையிலிருந்து ஒரு உத்தரவைப் போடுகிறபோது, பல்வேறு இடங்களில் அதை முறையாக அமுல்படுத்துகிற நிலையும் ஒரு சில இடங்களிலிருக்கிற அதிகாரிகள் அதைத் தவறான முறையில் அமுல்படுத்துகிற நிலைமையும் இருக்கிறது. அது மாவட்ட முதன்மைக் கல்வி அதிகாரிகள் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட தவறுகளின் காரணமாக, சில இடங்களில் ஆசிரியர்கள் பாதிக்கப்படுகிற காரணத்தால், எதிர்காலத்தில் அப்படிப்பட்ட தவறுகள் அதிகாரிகளால் ஏற்படுமானால், அத்தகைய தவறுகளுக்கு அதிகாரிகளே பொறுப்பேற்க வேண்டுமென்ற அறிவுரை தரப்பட்டிருக்கிறது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** அமைச்சர் அவர்களுடைய அறிவிப்புக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அரசாணையின் காரணமாக அல்லது நிர்வாகக் காரணங்களுக்காக அரசுப் பள்ளிகளிலிருந்து வேறொரு பள்ளிக்கு ஆசிரியர்கள் மாற்றப்பட்டால், அவர்களுக்குப் பயணப்படியும் தினப்படியும் கொடுக்கப்படுகின்றன. தனியார் துறைப் பள்ளிகளில் உபரியாகக் கருதப்பட்டு, அரசின் விதிமுறைகளுக்கு ஏற்ப நிர்வாகக் காரணத்திற்காக ஆசிரியர்கள் மாற்றப்பட்டாலும் அல்லது உபரி என்ற காரணத்திற்காக மாற்றப்பட்டாலும், அவர்களுக்கும் தினப்படியும் பயணப்படியும் வழங்க அரசு ஆணையிடுமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அப்படிப்பட்ட எண்ணமில்லை.

(பிற்பகல் 5-50)

(2) மதுரை மாவட்டத்தில் கல்லூரிகளில் பயிலும் அரிசன, மற்றும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு 1978-79 ஆம் ஆண்டுக்கான உதவித் தொகையை வழங்காதது குறித்து.

**திரு. ஆ. நல்லசிவன் :** தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக்குறித்து மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

"மதுரை மாவட்டத்தில் உள்ள கல்லூரிகளில் பயிலும் அரிசன, மற்றும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு இவ்வாண்டு (1978-79) வழங்க வேண்டிய உதவித் தொகையை (ஸ்காலர்ஷிப்) இன்றுவரை வழங்காததால் ஆம் மாணவர்கள் மத்தியில் எழுந்துள்ள பதட்ட நிலை குறித்து".

**மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மேலவைத் தலைவர் அவர்களே, அவை முன் விவர அறிக்கை @ வைக்கப்பட்டுள்ளது.

**திரு. ஆ. நல்லசிவன் :** தலைவர் அவர்களே, திருப்பி அனுப்பப்பட்ட விண்ணப்பங்கள் தவிர மற்ற விண்ணப்பங்களுக்கு ஸ்காலர்சிப் வழங்குவதில் காலதாமதம் ஏற்படவில்லை என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். எனக்கு கிடைத்துள்ள தகவல், நான் பெப்ரவரி மாதம் மத்தியிலே இந்தத் தீர்மானத்தைக் கொடுத்தது முதல் இதுவரையிலும் அது கொடுக்கப்படவில்லை என்பது 1978-79ல் கொடுக்கப்பட்ட தொகை எந்த மாதத்தில் ஆரம்பித்து எந்த மாதம் வரை விநியோகம் செய்யப்பட்டது என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவர்களுக்குக் கிடைத்த தகவலைச் சொல்கிறார்கள். அரசாங்கத்தின் மூலமாக எப்போது உபகாரச் சம்பளம் வழங்கப்பட்டது என்ற விவரத்தை நான் இந்த அவைக்குத் தெரிவித்திருக்கிறேன் மாணவ, மாணவியர்களால் அனுப்பப்படுகின்ற விண்ணப்ப பாரங்கள் சரியாக இல்லாத காரணத்தால், திரும்பவும் 'சரி செய்து அனுப்ப வேண்டும்' என்று அந்த விண்ணப்பப் பாரங்களை அவர்களுக்கு அனுப்பினோம். அவர்கள் தாமதமாகத் திருப்பி அனுப்புகின்ற காரணத்தால்தான் தாமதம் ஏற்படுகிறதே தவிர, துறையில் எந்தத் தாமதமும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

@ 92-94-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.





**திரு. ஆ. நல்லசிவன் :** தலைவர் அவர்களே, நான் கேட்டது, திருப்பி அனுப்பப்பட்ட விண்ணப்பங்களைத் தவிர, திருப்பி அனுப்ப வேண்டிய அவசியம் இல்லாத விண்ணப்பங்களுக்கு அரசு எப்போது பணம் கொடுத்தது. எப்போது விநியோகம் செய்தார்கள் என்பதுதான். அமைச்சர் அவர்கள் வேறு பதில் சொல்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கு விவரம் அறிக்கையிலேயே இருக்கிறது. இந்த விண்ணப்பம் குறித்து ஏன் தாமதம் ஏற்பட்டது என்றால் தற்போது மேல்நிலைப் பள்ளிகளில் தனியாக சில வகுப்புகளைச் சேர்த்திருக்கிறோம். மத்திய அரசாங்கம் தருகின்ற உபகாரச் சம்பளத்தைப் பொறுத்தவரையில் புகுமுக வகுப்பு சம்பந்தமாய் அவர்கள் தந்திருக்கின்ற ஆணையை நிறைவேற்ற வேண்டுமா அல்லது ஆணையை மாற்றி அமைப்பதா என்று மத்திய அரசிடம் ஒப்புதல் பெற வேண்டியிருக்கிறது. ஒப்புதல் அண்மையில் தான் வந்தது. அது அரசின் பரிசீலனையில் உள்ளது.

(மீண்டும் திரு. ஆ. நல்லசிவன் எழுந்திருந்தார்.)

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இரண்டு தடவை எழுந்து விட்டீர்கள்.

**திரு. அ. நல்லசிவன்:** தலைவர் அவர்களே, மொத்தம் 4037 S.C.S.T. அப்ளிகேஷன்களிலே 392 அப்ளிகேஷன்கள் ஹையர் செகன்டரிக்கு. 15,179 பிற்பட்ட வகுப்பார் அப்ளிகேஷன்களிலே 2,313 அப்ளிகேஷன்கள் ஹையர் செகன்டரிக்கு. இந்த 2,313க்கும், 392க்கும் மத்திய அரசிலிருந்து அனுமதி வரவேண்டும் என்றால்கூட, பாக்கி உள்ள சுமார் 10 ஆயிரத்துச் சொச்சம் விண்ணப்பங்களுக்கும் பணம் எப்போது கொடுக்கப்பட்டது என்பதுதான் நான் கேட்ட கேள்வி. அந்தக் கேள்விக்கு அமைச்சர் அவர்கள் பதிலளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, இன்னும் மேல்நிலைப் பள்ளியின் புதிய மாணவர்களுக்குத்தான் தரப்படவில்லை. மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வந்த பிறகு, உடனடியாக வழங்கப்படும்

மனையினுடைய சேவையைப் பாராட்டுகிறார்கள். அந்த அடிப்படையிலே சமூக நலப்பிரிவு, தொண்டு செய்யக்கூடிய நிறுவனங்களின் மூலமாக நடை பெறுகிற நல்ல மருத்துவ மனைகள், ஏனைய தனிப்பட்டவர்களுடைய மருத்துவ மனைகள் ஆகியவற்றுக்கு அதிகமான அளவு நிதி ஒதுக்கீடு செய்து, அங்கெல்லாம் இந்தக் குடும்ப நலத் திட்டத்தை அமுலாக்கினால், நாட்டில் எதிர் காலத்தில் ஏற்படக்கூடிய பிரச்சினைகளை ஓரளவு சமாளிக்க முடியும் என்ற கருத்தை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வேளாண்மைத் துறையைப் பொறுத்தமட்டில், உணவு உற்பத்தி, தானிய உற்பத்தி இவைகள் நம்முடைய மாநிலத்தில் இன்றைய தினம் எவ்வாறு உள்ளது என்பதை நாம் பார்க்க வேண்டும். விவசாயிகளைப் பொறுத்தமட்டில், அவர்களது உற்பத்திச் செலவை ஈடுகட்டக்கூடிய அளவிற்கு இந்த விளை பொருட்களின் விற்பனை விலை அமையவில்லை. அவ்வாறு அமையாத காரணத்தினால், தற்போது விவசாயிகள் உற்பத்தியை நிறுத்தி விடக்கூடிய சூழ்நிலைகள் உருவாகிக்கொண்டிருக்கின்றன என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 6-00)

விவசாயிகளைப் பொறுத்த வரையில், நாம் அதிகமான இரசாயன உரங் களைக் கொடுக்கிறோம். மத்தியிலுள்ள மாண்புமிகு அமைச்சர் திரு. சரண் சிங் அவர்கள் கூட சமீபத்திலே ஒரு கருத்தை வெளியிட்டார்கள். "நம் முடைய நாட்டிலே இரசாயன உரத்திற்குத்தான் அதிக கவனம் செலுத்து கிறோம். இயற்கையாகவுள்ள உரங்களைப் புறக்கணிக்கிறோம்" என்று கூறி யுள்ளார். மரங்களின் தழைகள், கழிவுப் பொருள்கள் இவைகளையெல்லாம் சேர்த்து கிராமங்களில் "கம்போஸ்ட் பிட்" என்ற முறையிலே இயற்கை உரத் தைத் தயாரிக்க வேண்டும். பசுந்தழை உரங்களுக்கு இப்போது நாம் முக்கி யத்துவம் கொடுப்பதில்லை. விவசாயிகளுக்கு, ஓரளவுக்குச் சாதாரணமான வர்களுக்குக்கூட இதைப் பற்றிய அனுபவம் இருக்கும். இரசாயன உரங் களை நாம் எந்த அளவுக்கு உபயோகப்படுத்துகிறோமோ அந்த அளவுக்கு நாளடைவிலே உணவுப் பொருள்களின் உற்பத்தி குறைந்து கொண்டேபோகும். விளைவதற்கே கூட வாய்ப்பில்லை என்ற நிலை ஏற்படுகிறது. ஆகவே கிராமங் களில் இயற்கையான உரத்தை உற்பத்தி செய்கிற பொது முறையை அனுசரிக்க வேண்டும். அரசு இதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கி றேன்.





நிதிநிலை அறிக்கையிலே, பழத் தோட்டங்களை உருவாக்கி, ஏராளமான பழங்களை உற்பத்தி செய்ய வேண்டுமென்ற கருத்தைக் கூறியிருக்கிறார்கள். ஒவ்வொரு மாவட்டத்திலும் சில வகையான பழங்கள் அதிகமான அளவில் உற்பத்தியாகின்றன. அந்த வகையிலே பார்க்கும்போது, மதுரை மாவட்டத் திலே ஏராளமான திராட்சைப் பழங்கள் உற்பத்தியாகின்றன. சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையின் பேரில் பேசும்போதுகூட கூறினேன். திராட்சைப் பழங்களைப் பக்குவப்படுத்தி அவற்றில் உள்ள சாறை எடுத்து பிற மாநிலங் களுக்கு ஏற்றுமதி செய்தால், அங்கே பழங்களை உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகளுக்கும் நல்ல விலை, கட்டுப்படியான விலை கிடைக்கும், தொழிற் சாலை வளர்வதற்கும் வாய்ப்பு இருக்கும், மக்களுக்கும் வேலைவாய்ப்பு உரு வாகும் என்ற கருத்தைக் கூறி அந்தந்த மாவட்டங்களுக்கேற்ப பழத் தோட்டங் களை உருவாக்கும்போது, பழங்களைப் பதப்படுத்தி அவற்றிலிருந்து சாறை எடுத்து மற்ற மாநிலங்களுக்கு அனுப்ப முடியுமா என்ற முயற்சியையும் செய்ய வேண்டுமென்ற கருத்தையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

கால்நடையைப் பொறுத்த வரையில், மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமி காந்தன் அவர்கள், "உலகத்திலுள்ள கால்நடைகளின் எண்ணிக்கையில் ஐந்தில் ஒரு பங்கு நம்முடைய நாட்டிலே இருக்கிறது" என்று கூறினார்கள். எருமை மாட்டின் எண்ணிக்கையில் பாதி நம்முடைய நாட்டிலே இருக்கிறது என்றும் கூறினார்கள். ஆனால் மாடுகளின் தரம் நல்ல முறையில் பால் கொடுக்கக்கூடிய அளவுக்கு இருக்கிறதா என்றால், இல்லை. சில மாடுகள் கால் படி, அரைப்படி என்று கறக்கக்கூடிய நிலையிலும் அவற்றை வைத்து வளர்த்துக்கொண்டிருக்கிறார்கள். நேற்றுகூட பத்திரிகையிலே பார்த்தேன், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், விமானத்தின் மூலமாக ஜெர்சி கன்றுகளை வரவழைத்திருக்கிறார்கள் என்ற செய்தியை. அது மகிழ்ச்சிக்குரிய காரியம். பாராட்டுகிற முறைதான். இதிலே நடைமுறையிலே பல இடர்ப்பாடுகள் இருக்கின்றன. அவற்றை வளர்க்கும்போது, ஆரம்பத்திலே நல்ல வம்சத்தைச் சேர்ந்த மாடுகள் அதிகமான பாலைக் கொடுக்கின்றன. பிறகு சரியான தீவனம், சத்துள்ள உணவு கொடுக்கப்படாததால், ஒன்றரை, இரண்டு ஆண்டு களுக்குப் பிறகு குறைவாகப் பால் கொடுக்கின்றன. தன்னுடைய சத்தை இழந்து மூன்று ஆண்டுக் காலத்திற்குப் பிறகு, கருத்தரிக்கக்கூட முடியாத நிலையிலே மலடு மாடுகளாக ஆகிவிடுகின்றன. அப்படிப்பட்ட மாடுகளுக்கு ஒன்றும் தீவனம் கூட போடமாட்டார்கள். ஆகவே பால் உற்பத்தி குறை கிறது. நம்முடைய நாட்டிற்கு நாம் கொண்டு வரக்கூடிய உயர்ந்த ரக

**5. 1979-80 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மீது பொது விவாதம்.**

**திரு. பி. ஆர். தாமஸ்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, 1979-80-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு சில கருத்துக்களைக் கூற வாய்ப்புக் கொடுத்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுவாக நிதிநிலை அறிக்கை என்பது ஒரு வரவு செலவுக் கணக்கு என்று கொள்ளப்படாத நிலையில், அது ஆட்சி புரிகிற கட்சியினுடைய கருத்துக்கள், கொள்கைகள், திட்டங்கள் இவைகளை அமுலாக்க வேண்டிய ஒரு விளக்கம் என்றுதான் பொருள்படுகிறது. நடப்பாண்டிலே அரசுக்கு வருமானம் என்ற வகையிலே 849.8 கோடி ரூபாய் என்றும், செலவினத்திலே ரூபாய் 849.25 கோடி என்றும் கூறப்பட்டிருக்கிறது. இதிலே உபரியாக 55 லட்சம் ரூபாய் இருக்கிறது. அடுத்து மொத்தக் கணக்கு அடிப்படையிலே 9.98 கோடி ரூபாய் இழப்பு இருக்கிறது. இதைச் சரிக்கட்ட 3 வகையில் வரிவிதிப்பு அமுலாக்கப்பட இருக்கிறது. இப்படி வரி விதிப்பதன் மூலமாக ரூபாய் 2 கோடி மட்டும் கட்ட இருப்பது தேவைதானா என்பதைப் பார்க்க வேண்டும். காரணம் சென்ற ஆண்டு மத்திய ஆயத் தீர்வைப்படி, வரவைப் பார்க்கும்போது ரூபாய் 94 கோடி இருந்தது. ஆனால் நடப்பாண்டிலே 194 கோடி ரூபாய் மத்திய ஆயத் தீர்வை வரியின் மூலமாக மாநிலத்திற்கு வருகிறது. மத்திய ஆயத் தீர்வை மூலமாக உபரியாக ரூபாய் 100 கோடி வருவது இந்த மாநில அரசுக்குக் கிடைத்த ஒரு பெரும் லாபம், பெரும் யோகம் என்றுதான் கூற வேண்டும். இதோடுகூட வருவாய் மற்றொரு வகையிலும் அதிகரித்திருக்கிறது. விற்பனை வரியின் மூலமாக 291 கோடி ரூபாய் மாநிலத்திற்கு வருகிறது. சென்ற ஆண்டை விட இது 23 கோடி அதிகமாக இருக்கிறது. ஆனால் உதவி மானியங்கள் அடிப்படையிலே சென்ற ஆண்டு 77 கோடி ரூபாய் வந்திருந்தாலும், இந்த ஆண்டு 64 கோடி ரூபாய் என்று குறைந்திருக்கிறது. இருந்தபோதிலும் பொதுவாக ஏராளமாக நிதி வாயில்கள் இருக்கும் காரணத்தினாலே, இந்த வரி விதிப்பைத் தவிர்த்திருக்கலாம் என்று நான் கருதுகிறேன். சாதாரணமாக ஏழை மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். ஐந்து விழுக்காடு மேல் வரியும், அதைப் போல தேங்காய்க்கு 2 விழுக்காடு வரியும், தீப்பெட்டிக்கு 2 விழுக்காடு வரியும் போட்டிருப்பதைத் தவிர்த்திருக்கலாம். இதற்கு மாறாக ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். பொதுவாக மாநிலத்திலே ஏராளமான தென்னை மரங்கள் புறம்போக்கு நிலங்களிலே இருக்கின்றன. இவைகள் எல்லாம் குத்தகைக்கோ, ஒரு ஒப்பந்தம் மூலமாகவோ, மக்களுக்கு விடப்பட வேண்டும். ஒரு தென்னை மரத்திற்கு 1 ரூபாய் என்று மாதத்திற்கு வைத்து ஆண்டு



ஒன்றுக்கு 12 ரூபாய் என்று கணக்கெடுத்துப் பார்த்தால், இந்த வரி மூலம் வரக்கூடிய வருமானத்தை விட அதிகமாகக் கிடைக்கும் என்பதால், தேங்காய்க்கு விதித்திருக்கிற வரியை புறம்போக்கு நிலங்களிலே உள்ள தென்னை மரங்களுக்கு விதிக்கலாம் என்ற கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த வரவு செலவுத் திட்டத்திலே குடும்ப நலத் திட்டத்திற்கு சென்ற ஆண்டை விட 5 லட்சம் ரூபாய் குறைவாக ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. பொதுவாக மக்களுடைய எண்ணிக்கையைப் பார்க்கும்போது, ஒரு நாட்டினுடைய பொருளாதார முன்னேற்றம் பெரிதும் பாதிக்கப்பட்டு வேலை வாய்ப்புத் திட்டங்கள் எல்லாம் நல்ல முறையில் செயல்பட முடியாமல் போய் மாநிலத்தின் வளர்ச்சியைப் பெரிதும் பாதிக்கும் நிலையைப் பார்க்கிறோம். அகில இந்திய அடிப்படையிலே பார்க்கும்போது, ஐந்தாண்டுத் திட்டத்தின் இலக்கை அடைய முடியாமல், மக்கள் தொகை அதிகரிப்பைக் குறைக்க முடியாமல், திட்டங்களும் வெற்றியடைய முடியாமல் பெரும் ஏமாற்றம்தான் ஏற்பட்டு வருகிறது. ஒவ்வொரு நாளும் நம்முடைய நாட்டிலே 60 ஆயிரம் மக்கள் பிறந்துகொண்டிருக்கிறார்கள். ஒரு நிமிடத்திலே 50 பேர் பிறக்கிறார்கள் என்ற நிலைமையைப் பார்க்கும்போது, ஒரு ஆண்டிலே 2 விழுக்காடு மக்கள் தொகை நம் நாட்டிலே அதிகரிக்கின்றது. அப்படியானால், இந்திய நாட்டின் மொத்த ஜனத்தொகை அடிப்படையிலே பார்த்தால், ஒவ்வொரு ஆண்டும் நாம் ஒரு ஆஸ்திரேலியா கண்டத்தினுடைய மக்கள் தொகை எண்ணிக்கையை உண்டாக்கிக்கொண்டிருக்கிறோம். அப்படியானால் ஒவ்வொரு ஆண்டும் நாம் ஒரு ஆஸ்திரேலியா கண்டத்தை உருவாக்குகிறோம். இந்தக் குழந்தைகள் எல்லாம், வாயும், வயிறும் கொண்டு தான் பிறக்கிறார்கள். இந்நிலைமை இல்லாவிட்டால், ஒருவேளை நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்படாமலிருக்கும். இந்தக் குழந்தைகளுக்கு உணவு கொடுப்பது, வளர்ப்பது, வாழ்வு கொடுப்பது மட்டுமல்லாமல், வருங்காலத்தில் அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் பொறுப்பு, இதுபோன்று இவர்களைத் தாங்கக்கூடிய பொறுப்பு ஆகியவை எல்லாம் மாநிலங்களுக்கும், மத்திய அரசுக்கும் வரக்கூடிய காரணத்தினால், இந்த மக்கள் தொகை எண்ணிக்கையைக் கட்டுப்படுத்துவதற்குத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறு நடவடிக்கை எடுக்கும்போது அரசுத்துறை மருத்துவ மனைகள் தான் இந்தக் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை அமுலாக்குவது என்று இருக்கக்கூடாது. பொதுவாக மதுரை மாவட்டத்தில் உள்ள காந்தி கிராமம் என்ற ஊரிலே, அங்குள்ள மருத்துவ மனையிலே நல்ல முறையில் குடும்பக் கட்டுப்பாடு சிகிச்சை செய்கிறார்கள். காந்தி கிராமத்தில் நடைபெறும் அந்தக் கட்டுப்பாடு முறையைப் பற்றி மக்கள் யாரும் குறை கூறுவதும் இல்லை. அனைவரும் அந்த மருத்துவ

மாடுகளை நல்ல முறையிலே பேண வேண்டும், காக்க வேண்டும். அதற்கேற்ற உணவுகளை வழங்க அரசு திட்டமிட வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அதிகமாகப் பால் கறக்கக்கூடிய மாடுகளுக்குப் பொதுவாக மடி வியாதி உண்டாகிறது. அந்த நோய் வந்துவிட்டால், முன்பு கொடுத்த அதே அளவு பாலைக் கொடுக்க முடியாத நிலை ஏற்படுகிறது. அந்த வியாதியைப் போக்கத் தகுந்த சிகிச்சை அளிக்க வேண்டும். அப்படிப்பட்ட சிகிச்சைகளை கிராமப் புறத்திலே நல்ல முறையிலே செய்ய முடியவில்லை. தொடர்ந்து சிகிச்சை செய்தால்தான், அந்த வியாதி குணம் அடையும். இந்த வியாதியால் பால் தரக்கூடிய தகுதியை மாடுகள் இழந்துவிடுகின்றன. மேல்நாடுகளில், பத்து லிட்டர், பன்னிரெண்டு லிட்டர் பால் கொடுக்கக்கூடிய மாடுகளையெல்லாம் தொடர்ந்து பயன்படுத்துகிறார்கள். பொதுவாக மாட்டின் வயதை அதன் பல்லில் இருந்துதான் கணக்கிடுகிறோம். மூன்றரை ஆண்டு ஆன மாடு என்றால் 2 பல் என்றும் நாலரை ஆண்டு மாடு என்றால் 4 பல் என்றும், ஐந்தரை ஆண்டு மாடு என்றால் 6 பல் என்றும் சொல்லுகிறோம். இந்த மாடுகளுக்கு ஏற்படுகிற குறைபாடு என்னவென்றால், அசைபோட்டு அசைபோட்டு கடவாய்ப்பற்கள் தேய்ந்து போகின்றன. மேல் நாடுகளில் பத்து லிட்டர், பதினைந்து லிட்டர் கொடுக்கக்கூடிய மாடுகளுக்கு இவ்வாறு வயது முதிர்ந்த காலத்தில் பல் தேய்ந்துவிட்டால், இங்கே எப்படி மனிதர்களுக்குப் பல் கட்டுகிறோமோ அதைப் போலவே, சிகிச்சை செய்து பல் கட்டுகிறார்கள். (சிரிப்பு) பன்னம் விழுந்துவிட்ட கடவாய்ப்பற்களை எடுத்துவிட்டு புதிதாகப் பற்களைக் கட்டுவதால், அந்த மாடுகள் அதிகமான அளவிலே பால் கறக்கின்றன. இதில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தி இத்திட்டத்தை இங்கேயும் உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமஸ் அவர்கள், மாடுகளுக்குப் பல் கட்டி அதன் மூலமாகப் பால் அபிவிருத்தி செய்கிறார்கள் டாக்டர்கள் என்று சொல்லுகிறார்கள். அந்த முறை வேறு எந்த மாநிலத்தில் அல்லது எந்த நாட்டிலே நடைபெறுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

திரு. பி. ஆர். தாமஸ் : அமெரிக்க நாட்டிலே இவ்வாறு மாடுகளுக்குக் கடவாய்ப் பற்களைப் புதுப்பித்து விடுகிறார்கள். மாடுகள் தீவனத்தை அசை போட்டு, அசை போட்டு விழுங்குவதால் தங்களுடைய சக்தியை இழந்து அந்தப் பற்கள் செயல்பட முடியாமல் போய்விடுகின்றன. அவற்றை எடுத்து விட்டு வேறு பற்களைக் கட்டுகிறார்கள்.



மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, கன்று போட்டால்தான், பசு பால் தரும் என்று நாம் தெரிந்து வைத்திருக்கிறோம். பல் கட்டினால் பால் தரும் என்ற புதிய தத்துவத்தைச் சொல்லுகிறார். இது சரிதானா?

திரு. பி. ஆர். தாமஸ் : பொதுவாக மாடுகள் வயதான பிறகு கொடுக்கக் கூடிய பால் குறைந்து போய்விடும். இதற்குக் காரணம் அந்த மாடுகளால் உட்கொள்ளும் உணவை ஜீரணிக்க முடிவதில்லை. பற்கள் சரியாக இல்லாததால், அதை அசை போட்டு விழுங்க முடியவில்லை. ஆகவே அப்படிப்பட்ட மாடுகளை நாம் தள்ளிவிடுகிறோம். ஆனால் மேல் நாடுகளில் அப்படிப்பட்ட மாடுகளுக்குப் பற்களைக் கட்டுவதன் மூலம் பாலையும் தரும், கன்றும் போடும் என்று அப்படிச் செய்கிறார்கள்.

புலவர் புலமைப்பித்தன் : தலைவர் அவர்களே, கால்நடை என்பதனாலே 'பல்'லுக்குக் கால் (ா) வைத்தால் 'பால்' வரும் என்ற கருத்திலே சொல்லுகிறாரோ என்று சந்தேகமாக இருக்கிறது.

திரு. பி. ஆர். தாமஸ் : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள், கன்று போடாமலே பால் கறக்க முடியுமா என்று கேட்டார்கள். அப்படி கறக்கிறார்கள் என்ற கருத்தை இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். சில நாடுகளில் மாடுகளுக்கு ஊசியைப் போட்டு அதனுடைய 'மெமரி கிளாண்ட்ஸைத்' (Mammary glands) துரிதப்படுத்தி, கன்று போடாமலே பால் கறக்கிறார்கள் என்பதைச் சொல்லி, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

காடுகள் வளர்ப்பதுபற்றி திட்டநிலை அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. மாநிலத்தினுடைய வருவாயை அதிகப்படுத்துவதற்காக ஏராளமான காடுகள் அழிக்கப்படுகின்றன. காடுகளை வளர்ப்பதோடு மட்டுமல்லாமல், காடுகளை அழிப்பதையும் அரசு தவிர்க்க வேண்டும் என்று வலியுறுத்த விரும்புகிறேன்.

கிராம வளர்ச்சித் திட்டம் என்ற அடிப்படையிலே 161 பஞ்சாயத்துக்களுக்கு மட்டும் இந்தத் திட்டம் அமுலாக்கப்படுகிறது. மாநிலத்தில் 374 பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. அடுத்த ஆண்டு மேலும் 30 பஞ்சாயத்துக்களில் கிராம வளர்ச்சித் திட்டம் அமுலாக்கப்படுமென்று சொன்னாலும், தொடர்ந்து எல்லாப் பஞ்சாயத்துக்களிலும் இத்திட்டம் பரவலாக்கப்பட

வேண்டும், ஒரு சில பஞ்சாயத்துக்களுக்கு மட்டும் இந்த வசதியைக் கொடுப்பதால், பஞ்சாயத்துக்களிடையே ஏற்றத்தாழ்வு ஏற்படும். அந்த நிலைமையைத் தவிர்க்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்த விரும்புகிறேன்.

வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ஏறத்தாழ பத்தாயிரம் இளைஞர்களுக்கு வேலை அளிக்கப்படுகிறது. கிராமங்களிலே கைத்தொழில் பயிற்சி கொடுக்கப் போகிறோம் என்று சொல்லுகிறார்கள். "கைத்தொழிலுக்கு கிராமத்திலே என்ன வாய்ப்பு இருக்கிறது? இவர்களுக்குள்ள திறமை என்ன? தகுதி என்ன? எவ்வாறு பயிற்சி கொடுப்பது?" என்பதோடு மட்டும் நின்று விடாமல் கைத்தொழில் சாதனங்களையும் வழங்கினால், மக்கள் பயன்பெற முடியும் என்பதையும் வலியுறுத்துகிறேன்.

அனைவருக்கும் வேலை வாய்ப்பு என்ற திட்டத்திலே, தம்முடைய கிராமங்களில் உள்ள 18 வயது முடிந்த வாலிபர்களுக்கு ஏறத்தாழ மூன்று ரூபாயும் அத்துடன் அரிசி அல்லது கோதுமை வழங்கப்படும் என்ற திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். இத்திட்டம் மத்திய அரசினுடைய திட்டம் என்று கருதுகிறேன். 1977-78 ஆம் ஆண்டில் கேரளம், கருநாடகம், பீகார், ஒரிசா, பஞ்சாப், உத்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் இத்திட்டத்தின் கீழ் ஏராளமான உதவியை மத்திய அரசிடத்திலிருந்து பெற்றிருக்கின்றன. கேரளாவிலே 61 இலட்சம் பேர் வேலை வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள். ஒரிசாவிலே 68 இலட்சம் பேர், உத்தரப் பிரதேசத்தில் 78 இலட்சம் பேர் இந்த வேலை வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள். அந்தத் திட்டத்திலே என்ன குறிப்பிடுகிறார்கள் என்றால், மாநில அரசு எவ்வளவு ஒதுக்கிட்டுச் செலவிடுகிறார்களோ அதிலே 30 விழுக்காட்டை தானியமாக வழங்குகிறார்கள் என்று சொல்லுகிறார்கள். ஆகவே ஒரு வாலிபருக்கு மூன்று ரூபாய் என்று இருப்பது ஒரு

(பிற்பகல் 6-10)

நல்ல முறையாகாது. கூடுமானவரையில், குறைந்தது 18 வயது முடிந்த ஒரு வாலிபருக்கு வேலை வாய்ப்பு வழங்கும்போது, ஐந்து ரூபாயாவது வழங்க வேண்டும். மூன்று ரூபாய் மாநில அரசு ஒதுக்கீடு செய்திருப்பது மிகவும் குறைவு. குறைந்த அளவு ரூபாய் ஐந்து இருக்க வேண்டும். அதற்கு மேலாக அரிசி வழங்க வேண்டும் என்று கூறிக்கொள்கிறேன்.

இந்த வேலைவாய்ப்பு வழங்கும் திட்டத்தின் அடிப்படையிலேயே, கல்விப் பணியையும் சேர்த்து செயல்படுத்த வேண்டும். சுகாதாரப் பணியையும் அத்தோடு செயல்படுத்த வேண்டும்.



மின்சாரத்தைப் பொறுத்த அளவில், ஒரு மாநிலத்தினுடைய எதிர்காலம், மின்சார வளர்ச்சியை பொறுத்ததுதான், வேலைவாய்ப்பு மின்சார வளர்ச்சியைப் பொறுத்துதான், விவசாய உற்பத்தி மின்சாரத்தைப் பொறுத்துதான் என்று சொல்ல வேண்டும். மின்சாரம் என்ற இலத்திலே, நம்முடைய மாநிலத்தில் 114 கோடி ரூபாய் செலவழிக்கின்றோம் என்று சொன்னாலும்கூட, உலகத்தில் மின்சாரம் உபயோகிக்கப்படுகின்ற நிலைமைகளை ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது, ஏறத்தாழ வளர்ந்த நாடுகளில், மேல் நிலையிலுள்ள நாடுகளில் ஒரு தனி நபருக்கு 9,338 யூனிட்டுகள் செலவழிக்கின்றார்கள் என்றும், நம் நாட்டில் 118 யூனிட்டுதான் ஒரு தனி நபர் எடுத்துக் கொள்கிறார் என்றும் கூறப்படுகிறது. அன்றைக்குக்கூட மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரை என் கடல் அலைகளைப் பயன்படுத்தி, நாம் மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடாது என்று கேட்டோம். காரணம் என்னவென்றால், தமிழகத்தைப் பொறுத்த அளவிலே, அனல் மின் உற்பத்தியோ, நீர் மின் உற்பத்தியோ, அணுமின் உற்பத்தியோ, ஒவ்வொன்றிலும் இடர்ப்பாடுகள், தடைகள் இருக்கின்றன. முழுமையாகச் செய்ய முடியவில்லை. ஏறத்தாழ ஆயிரம் கிலோ மீட்டர் நீளமுள்ள தமிழ் நாட்டுக் கடற்கரையைப் பயன்படுத்தி, அலைகளை எடுத்து, அந்த அலைகளின் நீரை அணைக்கட்டுகள் மூலமாகத் தேக்கி வைத்து, தாழ்வான பகுதிகளிலே நீரை விழச்செய்து அதன் மூலம் இயந்திரங்களை ஓடவைத்து அதன் தொடர்பாக மின் ஜெனரேட்டரை ஓட வைத்து மின்சாரம் எடுக்கலாம். இந்த முறையை பிரான்ஸ் நாட்டிலே பயன்படுத்தி மின்சாரம் உற்பத்தி செய்யப்படுவதாகச் சொல்லப்படுகிறது. அநேக நாடுகளில் இந்த ஆராய்ச்சிகளைத் தொடர்ந்து செய்துகொண்டிருக்கிறார்கள். இவற்றைச் சென்று பார்த்து நம் நாட்டிலும் இந்த முறையைப் பின்பற்றி மின்சார உற்பத்திக்கு வாய்ப்பு வசதிகளை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சூரிய வெப்பத்தினாலே கடலினுடைய மேல்மட்ட நீர் வெப்பம் அடைகிறது. இந்த வெப்பம் அடைந்த நீரை எடுத்து சில கொதிகலன்களுக்குள் அனுப்பி, அந்தக் கொதிகலன்களின் உதவியாலே அதிக அழுத்தமுள்ள திரவங்களைக் கொதிக்கச் செய்து, அந்த ஆவியின் மூலம் இயந்திரங்களை ஓடச் செய்து, மின்சாரம் உற்பத்தி செய்யலாம். தெர்மல் பவர், வேவ் பவர் அல்லது டைடல் பவர் உற்பத்தி செய்யலாம். இந்த இரண்டு முறைகளையும் நம் நாட்டிலே பயன்படுத்தக்கூடிய அளவுக்கு ஏராளமான வல்லுநர்கள் இருக்கிறார்கள். இந்தத் திட்டத்தை ஆய்வாக, சோதனையாக நம் நாட்டுக் கடற்கரைப் பகுதிகளிலும் நிறுவ ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. பி. ஆர். தாமஸ்] [1979 மார்ச் 12

கல்வியைப் பொறுத்த அளவிலே, ஏறத்தாழ 205 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்தினுடைய வருவாயிலே பார்க்கப் போனால், 24 விழுக்காடுதான் இது வருகிறது. ஏராளமான நிதி வசதி பெற்ற இந்த ஆண்டிலே இதைவிட அதிகமாக ஒதுக்கியிருக்கலாம். இதைவிட அதிகமாக, கேரள மாநிலம் ஒதுக்கியுள்ளது. குறைந்தது 30 விழுக்காடு ஒதுக்கியிருக்கலாம் என்று கருதுகிறேன்.

புதிதாக இரண்டு மூன்று ஆண்டுகளாக பி. டி. ஆசிரியர்கள் பணியிடங்கள் வழங்கவில்லை. இந்த இரண்டு பணியிடங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. பாராட்டுத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஆண்டு தமிழாசிரியர்களுக்கு உயர்நிலைப் பள்ளிகளிலே புதிய பணியிடங்கள் வழங்கவில்லை. அரசு கைத்தொழில் வளர வேண்டும் என்பதைக் கொள்கையாகக் கொண்டிருக்கிறது. புதிய கைத்தொழில் ஆசிரியர் பணியிடங்கள் வழங்கவில்லை. இந்த இரண்டு துறைகளிலே, கைத்தறி ஆசிரியர் பணியிடங்கள், தமிழாசிரியர் பணியிடங்கள் வழங்க வேண்டுமென்று வலியுறுத்திக்கொள்கிறேன்.

நண்பகல் உணவுத் திட்டம் என்ற முறையிலே வட ஆற்காடு, தென் ஆற்காடு, செங்கற்பட்டு என்ற இந்த மூன்று மாவட்டங்களிலேதான் மையச் சமையல் கூடங்கள் இருக்கின்றன. வரும் நடப்பாண்டிலே மேலும் இரண்டு மாவட்டங்களுக்கு தர்மபுரி, முகவை மாவட்டங்களுக்கு மையச் சமையல் கூடம் விரிவாக்கப்பட இருக்கிறது என்பது பாராட்டுக்குரியது. பிற மாவட்டங்களுக்கும் தொடர்ந்து இதை விரிவாக்கும் திட்டத்தை வகுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆசிரியர்கள் பணி சிறப்பாக நடை பெறவேண்டுமென்றால், இந்த மதிய உணவுத் திட்டம் ஆசிரியர்களுக்குப் பளு கொடுக்காத முறையிலே, மையச் சமையல் கூடங்கள் அமைய வேண்டும் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேல்நிலைப் பள்ளியைப் பொறுத்த அளவிலே, அறிவியல் கல்விக் கருவியன், தொழிற் கல்விக் கருவிகள் இந்த இரண்டிற்கும் ஈட்டு மான்யம் வழங்க அரசு திட்டமிட்டிருக்கிறது. ஈட்டு மானியம் வழங்குவது என்றால், தனியார் பள்ளிகளைப் பொறுத்த வரையில், 405 பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக இன்று உயர்த்தப்படுகின்றன. அரசுப் பள்ளிகளைப் பொறுத்த அளவிலே, 403 பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப் பட்டிருக்கின்றன ஈட்டு மான்யம் என்பது இடவசதிக்காகத்தான்



1979 மார்ச் 12] [திரு. பி. ஆர். தாமஸ்]

இருக்க வேண்டுமே தவிர, தொழிற் கல்விக்கோ, அறிவியல் கல்விக்கோ என்று இருக்கக் கூடாது. முழுமையாக அரசு தன்னுடைய நிதியிலிருந்து தொழில் கல்விக் கருவிகைளையும், அறிவியல் கல்விக் கருவிகளையும் வழங்க வேண்டுமென்று அரசை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

நூலகங்களைப் பொறுத்தவரையில், நூலகங்கள் எல்லாம் வெறும் காட்சிப் பொருளாகத்தான் ஆகிவிடும். திட்டத்திலே நூலகர்களை நியமிக்கக்கூடிய வசதி இல்லை என்று சொல்லலாம.

"without a librarian it will only be a museum."

நூலகங்கள் மாணவர்களுக்குப் பயன்பட வேண்டும். அவை மாணவர்களுக்குப் பயன்பட வேண்டுமென்றால், நூலகர்களை நியமிக்க வேண்டும். ஆகவே அனைத்து மேல்நிலைப் பள்ளிகளுக்கும் நூலகர்களை நியமிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தனியார் மேல்நிலைப் பள்ளிகளுக்குக் கட்டட வசதிக்காகவும், ஆய்வுக்கூட வசதிக்காகவும், கருவிகள் வசதிகளுக்காகவும், ஒன்றே முக்கால் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் 405 மேல்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. ஒரு பள்ளிக்கு ஒரு லட்சம் ரூபாய் வரையில் மானியம் வழங்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த மதிப்பீடு குறைவானது என்று கருதுகிறேன். ஒரு பள்ளிக்கு ஒரு லட்சம் ரூபாய் என்று எடுத்துக்கொண்டு பார்த்தால்கூட, 4 கோடியே 5 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு தேவை. அரசுப் பள்ளிகளைப் பொறுத்து, 6 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் தனியார் பள்ளிகளுக்கு ஒன்றேமுக்கால் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்தது பொருந்தாது, போதாது என்று கூறி, அதைக் குறைந்தது 5 கோடியாக உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஆண்டு உலகக் குழந்தைகள் ஆண்டு என்று சொல்கிறோம். உலகத்தில் சிலி நாட்டிலுள்ள ஒரு கவிஞர் ஆங்கிலத்தில் ஒரு கவிதையை இயற்றியிருக்கிறார்கள்.

"Many of the things we need can wait ;
The child cannot ;
Right now is the time ;
When his bones are formed ;

His blood is being made;
His senses are being developed;
To him we cannot answer tomorrow;
His name is Todoy"

ஆகவே குழந்தைகள், வாய்ப்புள்ள குழந்தைகள், வசதி உள்ள குழந்தைகளுக்குத் தினமும் குழந்தைகள் ஆண்டுதான். வசதியற்ற குழந்தைகளுக்காக அரசு பல திட்டங்கள் வகுத்துச் செயல்படுத்தியிருக்கின்றது. நான் அதைப் பாராட்டுகிறேன். ஆனால் வசதியற்ற குழந்தைகளுக்கு, கீழ் நிலையில் உள்ள குழந்தைகளுக்கு, ஏழை எளிய குழந்தைகளுக்கு இந்த ஆண்டு என்ன செய்யப் போகிறோம் என்று திட்டம் தீட்ட வேண்டும். நம்முடைய நாட்டினுடைய குழந்தைகள் ஆண்டுச் சின்னம் என்னவாக இருக்கிறது என்றால், ஒரு கரும்பலகைச் சின்னமாக இருக்கிறது. அந்தக் கரும்பலகையிலே ஒரு ஆண் குழந்தை ஒரு பெண் குழந்தை, அதற்கும் மேலே ஒரு சூரியனுடைய சின்னம். இந்தச் சின்னங்கள் எதைக் குறிப்பிடுகின்றன? கரும்பலகை என்பது எதிர்காலத்திலே குழந்தைகளுக்குக் கல்வி அடிப்படை, கல்வி அவசியம் எவ்வளவு என்பதைக் குறிப்பதாகவும், இந்த இரண்டு குழந்தைகள், ஆண் குழந்தை, பெண் குழந்தை இரண்டும் சமமாக நடத்தப்பட வேண்டும் என்பதைக் குறிப்பதாகவும், சூரியன் என்பது குழந்தைகளுக்குள்ள ஆரோக்கியத்தை, அவர்களுக்குள்ள வலிமையைக் குறிப்பிடுவதாகவும் இருக்கின்றன. அடிப்படையிலே குழந்தைகளுக்கு நாம் எவ்வாறு கல்வி புகட்டுகிறோம்? நாம் இந்த ஆண்டு எத்தனை குழந்தைகளைப் பள்ளிகளிலே சேர்க்கப்போகிறோம்? 20 சதவிகிதத்திற்குமேல் பள்ளிக்குச் செல்லாமல் குழந்தைகள் இருக்கின்றார்களே அவர்களுக்கு என்ன வழிவகை செய்யப்போகிறோம்? மருத்துவ சோதனை என்ற அடிப்படையிலே கிராமப்புறக் குழந்தைகளுக்கு மருத்துவ வசதிகள் செய்யப் போகிறோமா? நாட்டில் கண்பார்வை இழக்கக்கூடிய நிலையில் குழந்தைகள் அதிகமாக இருக்கின்றன. ஏறத்தாழ 30 விழுக்காடுக்குக் கண் பார்வை இழப்பதை, நாம் இளைஞர்கள் ஆவதற்கு முன்னாலேயே தடுத்து விடலாம் என்று சொல்கிறார்கள். அவர்களுக்கு விட்டமின் எ சத்தில்லாது இருப்பதால், இந்த நிலை ஏற்படுகிறது. இந்த மாதிரிக் குழந்தைகளுக்காகவும், அவர்களுடைய கல்விக்காகவும் அவர்கள் தேக ஆரோக்கியத்திற்காகவும் அதிகமான பணத்தை ஒதுக்கீடு செய்து அவர்களை வளர்க்க வழி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



ஊதியக் குழுவைப் பொறுத்தவரையில், நாம் ஓரளவுக்கு ஏமாற்றம் அடைந்துதான் இருக்கிறோம். நேரம் இல்லை என்றாலும், நான் அதை இப்போது சொல்லித்தான் ஆகவேண்டும். பட்டதாரி ஆசிரியர்களைப் பொறுத்த வரையில், ஆசிரியர்கள், தமிழ் ஆசிரியர்களுக்கு இணையாக உள்ளவர்களுக்கு, குறைந்தது ரூ. 525 அடிப்படைச் சம்பளம் கிடைக்கும் என்று எதிர்பார்த்தோம். ரூபாய் 450 அடிப்படை ஊதியம்தான் கொடுத்திருக்கிறார்கள். இது பெருத்த ஏமாற்றமாக இருக்கிறது. இதையும் மாற்றியமைக்க வேண்டும்.

இடைநிலை ஆசிரியர்களுடைய அடிப்படை ஊதியத்தையும் மற்ற தொடர்பான ஆசிரியர்களுடைய ஊதியத்தையும் மாற்றியமைக்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துகிறேன். அரசு பல வகைகளிலே அரசு ஊழியர்களுக்குப் பல சலுகைகள் வழங்கியிருக்கிறது. நன்றி, பாராட்டு. இது சமமாகத் தனியார் பள்ளிகளிலே, பணியாற்றுகிறவர்களுக்கு வழங்கப் படவேண்டும். தனியார் பள்ளியிலே இருக்கும் ஆசிரியர்கள் கொத்தடிமைகளைப் போல் வாழக்கூடிய நிலைமை இருக்கின்றது. அவர்கள் நிர்வாகத்தின் கொத்தடிமைகளைப் போல வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் அப்படி நடத்தப்படுகிறார்கள். அவர்கள் கொத்தடிமைகளாக இல்லாமல் இருக்கக்கூடிய நிலைமைகளை உருவாக்க வேண்டும். எந்தெந்தச் சலுகைகளை அரசு ஊழியர்களுக்கு வழங்குவதாக இருக்கின்றதோ, அவைகளை இந்தத் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் வழங்க அரசு உத்தரவு பிறப்பிக்க வேண்டும்.

தேர்வு நிலையைப் பொறுத்த அளவிலே, மாநிலத்தில் பல பகுதி ஆசிரியர்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். முதல்நிலை உடல் பயிற்சி ஆசிரியர்கள் 1—4—1975 ஆம் ஆண்டிலேயே தேர்வு நிலை பெற்றிருக்கிறார்

(மாற்றுத் தலைவர் திரு. க. எஸ். வெங்கடேசன் தலைமை)

(பிற்பகல் 6-20)

கள். முதன்முதலாக விழுக்காடு அடிப்படையிலே 1—1—1971-ல் தேர்வுநிலை கொடுக்கப்பட்டது. பிறகு 10 ஆண்டுக்கால அடிப்படையிலே பட்டதாரி ஆசிரியர்களுக்கும், தமிழாசிரியர்களுக்கும் 1—4—1973 முதல் தேர்வு நிலை வழங்கப்பட்டது. இடைநிலை ஆசிரியர்களுக்கும், இளநிலை ஆசிரியர்களுக்கும் 1—1—1974 முதல் தேர்வு நிலை வழங்கப்பட்டது. முதல் நிலை உடற்பயிற்சிக் கல்வி ஆசிரியர்களுக்கு 1—4—1975 முதல்,

அதாவது 5 ஆண்டுகள் கழித்து தேர்வுநிலை வழங்கியுள்ளதால், புதிய ஊதியக் குழுவின் பரிந்துரைகளை அமுலாக்கும்போது, அவர்களுக்குப் பெரும் இழப்பு ஏற்பட்டிருக்கிறது. இதைத் தவிர்க்கும் வகையிலே 1—1—1971 லிருந்து விழுக்காடு அடிப்படையிலும், 1—4—1973 லிருந்து 10 ஆண்டுகள் என்ற அடிப்படையிலேயும் தேர்வுநிலையை 'நோஷனல்' ஆகக் கொடுத்து, 1—4—1975 லிருந்து பணப் பலன் அடையும்படி செய்ய வேண்டும். அதன் அடிப்படையிலே புதிய ஊதியத்தை நிர்ணயிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

சிறப்புத் தேர்வுநிலை என்பது புதிதாக வந்திருக்கிறது. தேர்வு நிலை வழங்கப்பட்டது 1971 ஆம் ஆண்டுதான். எனவே அவர்கள் 1981 ஆம் ஆண்டுதான் சிறப்புத் தேர்வு நிலை பெற முடியும். பல ஆசிரியர்கள் 25 ஆண்டுகள் பணியாற்றியிருக்கிறார்கள். எனவே, ஆசிரியர் பணியிலே ஆற்றிய மொத்தப் பணிக் காலத்தை அடிப்படையாகக் கொண்டு, அவர்கள் பணியில் சேர்ந்த தேதியை அடிப்படையாக வைத்து, 20 ஆண்டுகள் பணி முடித்திருந்தால், அவர்களுக்குச் சிறப்புத் தேர்வு நிலை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்

அடுத்து, கிராம ஈட்டுப்படி தர வேண்டுமென்று எல்லா உறுப்பினர்களும் பேசினார்கள். 'ரூரல் காம்பன்சேட்டரி அலவன்ஸ்' கொடுக்கப்பட வேண்டும். நகரத்தில் இருப்பவர்களுக்கு நகர ஈட்டுப் படி தருகிறோம். கிராமங்களில் வாழும் ஆசிரியர்கள், ஊழியர்கள் பலவாறாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்குக் கிராம ஈட்டுப் படி தரப்படுமென்று எதிர்பார்த்தோம். ஆனால் பெரிதும் ஏமாற்றம்தான் அடைந்திருக்கிறோம். அதை வழங்க வேண்டும். மேலும் கிராமங்களில் இருக்கிறவர்களுக்கு வீட்டு வாடகைப் படி வழங்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது ஆண்டில் 4 தேதிகளில் ஊதிய உயர்வு பெறுகிறார்கள். முதல் மாதம் முதல் தேதி; நான்காம் மாதம் முதல் தேதி; ஏழாம் மாதம் முதல் தேதி; பத்தாம் மாதம் முதல் தேதி என்று நான்கு தேதிகளில் ஊதிய உயர்வு பெறுகிறார்கள். புதிய ஊதிய விகிதங்கள் 1—4—1978 முதல் அமுலாயிற்று. எந்தெந்தத் தேதிகளில் ஊதிய உயர்வு பெறுவதற்குத் தகுதி பெற்றவர்களாக இருக்கிறார்களோ, அந்தத் தேதிகளில் புதிய ஊதிய விகிதத்திற்கு வர வாய்ப்பு அளிக்க வேண்டும். 1—4—1978-ல் வந்தால்தான், 5-விழுக்காடு அடிப்படை ஊதியத்திலே உயர்வு கொடுக்கப்படும் என்று சொல்வது பெரிதும் ஏமாற்றத்தையும், பெரிய இழப்பையும்



ஏற்படுத்தியிருக்கிறது. ஏப்ரல் 1 ஆம் தேதியிலிருந்து அமுலாக்கப்பட்டாலும், அவர்கள் புதிய ஊதிய விகிதத்திற்கு ஜூலை 1-ல் வரலாம் அல்லது அக்டோபர் 1-ல் வரலாம் அல்லது சனவரி 1-ல் வரலாமென்ற முறையில் ஆணைகள் பிறப்பிக்கப்பட வேண்டுமென்று வலியுறுத்த விரும்புகிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன்): அரை மணி நேரம் ஆகிவிட்டது. இன்னும் பல உறுப்பினர்கள் பேச வேண்டும். இன்னும் எவ்வளவு நேரம் பேசுவதாக உத்தேசம்?

திரு. பி. ஆர். தாமஸ்: தலைவரவர்களே, இன்னும் மூன்று நிமிடங்களில் முடித்துக்கொள்கிறேன். கடைநிலை ஊழியர்களாக அரசுத் துறையிலே இருப்பவர்களுக்கு ஒரு நியாயம், தனியார் துறையிலே இருப்பவர்களுக்கு ஒரு நியாயம் என்று இருக்கிறது. தனியார் துறையிலே அவர்களுக்கு 18 ரூபாய்தான் அடிப்படை ஊதியமாக வழங்கப்படுகிறது. இதை மாற்றி, அவர்களுக்கும் வளர் ஊதியம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

Time-scale salary for the contingent staff in aided schools must also be given.

அவர்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிறார்கள்.

பென்ஷனர்களைப் பொறுத்து, ஓரிரு கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். மாற்றுத் தலைவர் அவர்கள் அந்தச் சங்கத்தின் உப-தலைவராக இருக்கிறார்கள். 1—6—1970-க்கு முன்பு ஒரு நியாயம், 1—6—1970-க்குப் பின்பு ஒரு நியாயம் என்றிருக்கிறது. ஒரு எடுத்துக்காட்டைக் கூற விரும்புகிறேன். ஒரு பள்ளியில் ஒரு தலைமை ஆசிரியர், பி.டி. ஆசிரியர் பணியாற்றுகிறார்கள். அவர்கள் 1—6—1970 க்கு முன்பு ஓய்வு பெற்றிருக்கிறார்கள். அவர்களுக்கு அதிகபட்ச ஓய்வூதியம் என்ன என்றால், 104 அல்லது 105 ரூபாய்தான். ஆனால் அவர்களிடம் பணியாற்றிய ஏவலர் 1—6—1970 க்குப் பின்பு ஓய்வு பெற்றதால் 120 ரூபாய் ஓய்வூதியம் பெறுகிறார். தலைமை ஆசிரியர், பி.டி. ஆசிரியருக்கு 104 ரூபாய் 105 ரூபாய்தான் ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. இப்போது குறைந்த ஓய்வூதியம் 100 ரூபாய் என்று மாற்றியிருக்கிறார்கள். ஆனால் அவர்களிடம் பணியாற்றிய, தலைமை ஆசிரியருக்குக் கீழே பணியாற்றிய ஊழியர் 150 ரூபாய் பெறுகிறார். தலைமை ஆசிரியர் 104 ரூபாய் ஓய்வூதியம் பெறுகிறார். பி. டி. ஆசிரியர் 105 ரூபாய் ஓய்வூதியம் பெறுகிறார். இது கேவலமாக இருக்கிறது. இதை மாற்ற வேண்டும். 1—6—1970-க்கு

முன்பு ஓய்வூதியம் பெற்றவர்களுக்கு, 1—6—1970 க்குப் பின்னதாக எந்த முறையில் ஓய்வூதியம் நிர்ணயிக்கப் படுகிறதோ அந்த முறையில் நிர்ணயிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக ஒன்றைக் கூற விரும்புகிறேன். 1979 டிசம்பர் முதல் அகவிலைப்படி உயர்வு ஒன்று வழங்கப்பட வேண்டும். 320 ஆக இருந்த விலைவாசிப் புள்ளி, டிசம்பர் 1978-ல் 328 ஆக உயர்ந்திருக்கிறது. எனவே அகவிலைப்படி உயர்வு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இவ்வளவு நேரம் பேச வாய்ப்பு அளித்த மாற்றுத் தலைவரவர்களுக்கு நன்றி கூறி, முடிக்கிறேன்.

**மாற்றுத் தலைவர் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன்):** இன்னும் மூன்று மாண்புமிகு உறுப்பினர்கள் பேச வேண்டியிருக்கிறது. எனவே பேசுகிறவர்கள் 10 நிமிடங்களுக்குள் தங்கள் உரையை முடித்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**புலவர் புலமைப்பித்தன்:** மாற்றுத் தலைவரவர்களே, 1979-80 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை குறித்து ஒரு சூடும், சுவையுமான திறனாய்வு நடந்துக் கொண்டிருக்கிறது. இதிலே கலந்துகொண்டு பேசிய ஒருசில பேர், எதையுமே காண மறுத்தார்கள். பல பேர்கள் இருக்கிற நல்லதைப் பாராட்டினார்கள், குறைகளையும் எடுத்துக் காட்டினார்கள். ஒருசில பேர் இது கடன்கார நிதிநிலை அறிக்கை என்று சொன்னார்கள். நான் அப்போதுதான் மகிழ்ச்சி அடைந்தேன். காரணம், கடன் என்பதற்குப் பொருள். 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்று சொன்னதுபோல், கடமை என்பதுதான். வாங்குகிற காசை நாம் திருப்பிக் கொடுப்பது நம்முடைய கடமை என்பதால், அதற்குக்கூட கடன் என்று பெயர் வந்திருக்கிறது. அந்த அடிப்படையிலே இந்த அரசு ஒரு நல்ல கடமையை இந்த நிதிநிலை அறிக்கையின் வாயிலாகச் செய்திருக்கிறது என்பதற்கு எடுத்துக் காட்டாக, இதனை நண்பர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் கடன்கார அறிக்கை என்றார்கள். பாராட்டுகிறேன்.

அதுபோல, அருமைச் சகோதரி திருமதி தமிழரசி அவர்கள் நிதிநிலை அறிக்கை பற்றிக் குறிப்பிடுகிறபோது, ஒரு பட்டிமண்டபத்திற்கு ஒத்திகை பார்த்தார்கள் என்றுதான் சுருக்கமாகச் சொல்ல முடியுமென்று சொன்னார்கள். நிதிநிலை அறிக்கையிலே தந்த மாளிகையிலிருந்து



தாழ்வாரங்களுக்கு வர வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கும் வரி எவ்வளவு அருமையான முறையிலே உறுப்பினர்களின் கவனத்தை ஈர்த்திருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கும்போது, அந்த வரியை உருவாக்கிய நிதி அமைச்சர் அவர்களைப் பாராட்ட வேண்டும். தந்த மாளிகையிலே இருப்பவர்கள் தாழ்வாரத்திற்கு வர வேண்டுமென்று சொன்னவுடன், அதற்கு விளக்கங்களைப் பார்க்கிறவர்கள் பார்க்கிற விதமாகச் சொல்லலாம். நான் எடுத்துக் காட்டாக ஒன்று சொல்ல விரும்புகிறேன். 'தட்டுங்கள் திறக்கப் படும், கேளுங்கள் கொடுக்கப்படும்' என்று எழுதி வைத்ததால், பல பேர் பலவற்றை போய் கேட்டார்களா? அதிலே கேட்கக் கூடாதவைகள், கேட்க வேண்டியவைகள் என்ற வேறுபாடு இல்லாமல், பல பேர் பலவற்றைக் கேட்பதற்கா, தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படுமென்று எழுதி வைத்தார்கள். தட்டினால் இதயம் திறக்கப்படும் என்பது பொருள், கேட்டால் கொடுக்கப்படும் என்றால் அன்பும், கருணையும் வாரி, வாரி வழங்கப்படும் என்பது பொருள். அந்த அடிப்படையிலே தந்த மாளிகையில் இருக்கிறவர்கள் தாழ்வாரத்திற்கு வர வேண்டுமென்று சொன்னால், பணக்காரர்களாக இருக்கிறவர்கள் முழுக்க முழுக்க பராரிகளாக ஆக வேண்டுமென்று பொருளல்ல. உழைத்து வாழ வேண்டும், பிறர் உழைப்பில் வாழ்ந்திடாதே என்று தலைவர் அவர்களின் படத்தில் பாட்டு வந்தது. உப்பரிகையில் இருக்கிறவர்கள் ஊரணிக்கு வர வேண்டும்; கண்ணாடி மாளிகையில் கண் துயில பஞ்சணையும், கால் பிடிக்க வஞ்சிகளும் இருக்கும் நிலையில் இருக்கிறவர்கள் காடு கரைகளுக்கு வந்து பாடுபட வேண்டுமென்பதுதான் அதன் உட்பொருளே தவிர, தந்த மாளிகையில் இருக்கிறவர்கள் தாழ்வாரத்திற்கு வர வேண்டுமென்று சொல்லவில்லை. அதுமாத்திரமல்ல. குப்பை மேட்டில் இருக்கிறவர்களெல்லாம் கோபுரத்திற்கு வர வேண்டுமென்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்களென்று சொன்னார்கள். பல பேர், பல நேரங்களில் தவறாக வார்த்தைகளைப் பயன்படுத்திக்கொள்கிறார்கள். அதற்கு எடுத்துக் காட்டாக ஒன்று சொல்வேன். பாக்கட்டிலே இருக்கிற பேனாவை எடுத்துக்கொண்டு, என்னுடையது என்றான். நண்பர் எப்படி என்று கேட்கிறபோது விளக்கம் சொன்னான். எல்லோருடைய பொருளையும், தன்னுடைய பொருளைப் போல் கருத வேண்டுமென்ற மனோபாவம் வேண்டுமென்று பெரியவர்கள் சொன்னார்கள், அதனால் வைத்துக்கொண்டேன் என்று சொன்னான். அப்படி குப்பை மேட்டிலே இருக்கிறவர்கள் கோபுரத்திற்கு வர வேண்டுமென்று அண்ணா சொன்னதால், 7 ஆண்டுக்கால ஆட்சியில் குப்பை மேட்டிலிருந்து கோபுரத்திற்கு வந்த கதையைச் சொன்னார்களோ என்று சந்தேகம் எழுகிறது.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மத்திய அரசு கொண்டு வந்திருப்பது 'Food for work' என்ற திட்டம். இது Employment guarantee scheme.

THIRU P. YELLAMANDA: It is also a piecemeal arrangement because they are not guaranteeing full-time work in the Budget.

புலவர் புலமைப்பித்தன்: மாற்றுத் தலைவரவர்களே, குறுக்கீடு நேரங்களைக் கழித்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களைத் தேடி வேலை வாய்ப்புகளை இப்படிச் செய்து கொடுக்கிறோம் என்றால், அவர்களுடைய வேதனையைப் போக்குவதற்குரிய முயற்சியைச் செய்கிறோம் என்றால், அதைப் பாராட்ட வேண்டுமேயொழிய, இப்படியெல்லாம் பேசுவது நல்லதல்ல. இதை அமுல்படுத்துகிறபோது, நடைமுறைப் படுத்துகிறபோது, இன்னின்ன சிக்கல்கள் வரும், இவ்வின்ன வகையில் அவற்றைப் போக்கலாம் என்கின்ற வகையில் ஆலோசனை தந்திருப்பார்களே யானால், அதைப் பாராட்டியிருக்கலாம். நம்முடைய மன்றத்திலுள்ள உறுப்பினர்கள் அவ்வாறு யோசனை தந்திருப்பார்களேயானால், அது இந்த மன்றத்தினுடைய நீங்காத கடமையாக இருந்திருக்கும், பிறக்கிற போதே இந்தக் குழந்தை அங்கே பிழைக்கப் போகிறது என்று சொல்வது முறை தானா? குழந்தை பிறக்கிறபோது, அதற்கு நோய் வந்தாலும், அதை மருத்துவரிடம் காண்பித்து, குழந்தையினுடைய நோயைக் குணப்படுத்த இன்னின்ன வழிகளைப் பின்பற்றலாம் என்று வழி சொல்ல வேண்டுமே தவிர, குழந்தை பிறக்கிறபோதே இது பிழைக்காது என்று சொல்வது, அமங்கலமான வார்த்தையைச் சொல்வது அவ்வளவு நல்லதல்ல. எனக்கு அமங்கலத்தில் நம்பிக்கை இல்லை. இருப்பினும் அவர்கள் அமங்கலமான வார்த்தையைப் பயன்படுத்தியதால் தான், அதை இங்கே குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, கல்வித் துறையிலே ஒன்றும் செய்யவில்லையென்று சொன்னார்கள். மூன்றாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகள் நிறைவேற்றப் பட்டிருக்கின்றன. முதல் காலத்திலே வந்த முதலாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகள் இருக்கிறதே அது பிறப்பதற்கு, பிரசவிப்பதற்கு 18 மாதங்கள் ஆயின.

அதற்குப் பிறகு வந்த மதிப்பிற்குரிய கலைஞர் அரசிலே இரண்டாவது ஊதியக் குழுவினுடைய பரிந்துரை வெளி வருகிறபோது, 15 மாதங்கள் எடுத்துக்கொண்டு பிள்ளை பெற்றார்கள். ஆனால் இந்த அரசு வந்ததற்குப் பிறகு 8 மாதத்திலே அதை நிறைவேற்றி வைத்திருக்கிறது என்பதை தயவுசெய்து மாண்புமிகு உறுப்பினர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். அது



மாத்திரமல்ல, நிலுவைத் தொகையாக வழங்கிய அரசே இந்த அரசு தான். யு.ஜி.சி. ஸ்கேல் என்று சொல்லுகிறார்கள். எல்லா உதவியையும் இந்த அரசு செய்திருக்கிறது என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது. மறப்பது என்பது வேறு. மறுப்பது என்பது வேறு. மறதி என்றால் அது இயற்கை என்று சொல்லிவிடலாம். ஆனால் இருட்டடிப்பு, அதாவது மறைப்பது இருக்கிறதே, அது அவ்வளவு நல்லதல்ல. கல்வித் துறையைப் பொறுத்தவரையில், இந்த அரசு நல்ல பல முன்னேற்றங்களை உருவாக்க வேண்டுமென்று நானும் கூட ஆசைப்படுகிறேன். அதை மாண்புமிகு கல்வி அமைச்சரவர்களுக்குப் பணிவுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு தமிழ் ஆசிரியர்களுடைய நிலைமையைப் பார்க்கும்போது, கிட்டத்தட்ட 4 ஆயிரம் தமிழ் ஆசிரியர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். தமிழ் புலவன் பாரதியார் சொல்லிய "தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்" என்கின்ற நிலை மாறி, அப்படிப்பட்ட தத்துவம் மாறி "தமிழ் படித்தவனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்" என்கிற தத்துவம் பரவ வேண்டும் என்பது என்னுடைய ஆசை. அதனால் கோயில்களிலே பணியாற்றுகின்ற வாய்ப்பினைத் தருவதைவிட நான் இன்னொன்றைக் கூட ஒரு யோசனையாக அரசுக்குக் கூறுகிறேன். நானேகூட அப்படிப் பட்ட ஒரு பணியை நடத்திக்கொண்டிருந்தவன் தான். பிறகு நான் அங்காடி நாய் போல் அலைந்து திரிகிற காட்சியில் ஈடுபட்ட பின்னால் அதனைச் செய்ய முடியாமல் போய்விட்டது. கிறிஸ்தவர்களின் பைபிள் அதாவது விவிலியம் இருக்கிறதே அதையும் கிறிஸ்தவ மதத்தையும் பரப்ப வேண்டுமென்கிற முயற்சியில் அவர்கள் எப்படி எப்படி உலகெல்லாம் ஈடுபட்டிருக்கிறார்களோ அதைப்போல தமிழ் ஆசிரியர்கள் மாவட்டம் தோறும் பிரச்சாரம் செய்வதற்கான ஒரு அமைப்பை உருவாக்கி, அதை நடைமுறைப்படுத்த வேண்டும். சமுதாயம் செல்லரித்துக்கொண்டிருக்கிறது. இதை ஒருவரும் மறந்துவிடக் கூடாது. சமுதாயத்தில் கட்டுப்பாடின்மை வளர்ந்து கொண்டி கொண்டிருக்கிறது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. படிக்கிறோமே தவிர, அது பண்பாட்டிற்கு உகந்ததாக, பண்பாட்டைக் கற்றுத் தருகிற படிப்பாக இல்லை என்பதை மனதில் வைத்து எல்லாச் சட்டத்தைக் காட்டிலும் மாபெரும் சட்டமாகக் கருதப்பட்டிருக்கிற, அறம்பாடி அன்பைப் போதித்த திருக்குறளை நாடெங்கிலும் உள்ள மக்களிடத்திலே, பிரச்சாரம் செய்வது நல்லதாக இருக்கும், சமுதாயப் பயனை உருவாக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த அடிப்படையிலே திருக்குறள் பிரச்சாரம் செய்வதற்காக ஒரு அமைப்பை ஏற்படுத்தி அதன் மூலமாக புலவர்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 6-30)

எது எப்படி இருந்தாலும், நான் ஒன்றை நினைவுபடுத்த வேண்டும். இதிலே நான் எதைப்பற்றியும் அதிகமாகப் பேசாவிட்டாலும் காடு கழனிகளிலே, கிராமப் புறங்களிலே நலிந்து போய் கிடக்கிறார்களே அவர்களை இந்த அரசு நினைத்துப் பார்த்திருக்கிறது. பேரறிஞர் அண்ணா மொழியிச் சொல்லப்போனால், "இந்த நாட்டிலே வற்றாத ஆறு வந்தென்ன, எங்களுடைய வாழ்க்கை பாலைவனம் தானே; இங்கே சொர்ணம் விளைந்தென்ன, நாங்கள் சோற்றுக்கு இல்லாதவர்கள் தானே" என்கிற நிலைமையிலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்களே அவர்களுக்கு ஒரு நாளைக்கு 4 அணா கூட கிடைக்காமல் வாழ்ந்து கொண்டிருக்கிறார்களே, நலிந்து போய் கிடக்கிறார்களே, அவர்களைப்பற்றிச் சிந்திக்கக் கூடிய ஒரு சிந்தனை வந்திருப்பதுகூட ஒரு நல்ல தலைமுறைக்கு ஒரு நல்ல எதிர்காலம் உருவாவதற்கு அச்சாரமாக, ஒரு நம்பிக்கை நட்சத்திரமாகத் திகழக்கூடிய ஒரு வாய்ப்பினை இந்த அரசு உண்டாக்கிக் கொடுத்திருக்கிறது என்பதை நான் மனப்பூர்வமாகச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நாடாளுமன்றத்தில் ஒரு முறை நேரு பேசியதாக எனக்கு நினைவு. "நாட்டிலே பல ஐந்தாண்டுத் திட்டங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. என்றாலும் அந்த ஐந்தாண்டுத் திட்டத்தின் வாயிலாக மொத்த மக்களுடைய தேசிய வருமானம் இருக்கிறதே, அது நாம் எதிர்பார்த்த அளவுக்கு வந்து தான் இருக்கின்றது என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால் அந்த தேசிய வருமானம் எங்கே சென்று சேர்ந்திருக்கிறது என்பதுதான் வியப்புக்குரிய கண்டு பிடிக்க முடியாத ஒன்றாக இருக்கிறது" என்று சொல்லி அதற்குப் பின்னாலே ஒரு வேதனையான நிலைமையிலே அதைக் கண்டுபிடிப்பதற்கு என்று ஒரு குழு அமைத்தார்கள். அந்தக் குழுவுக்குத்தான் 'Monopoly Commission' என்று பெயர். நாம் இங்கே நினைத்துப் பார்க்க வேண்டும். சுதந்திரம் கிடைத்து 30 ஆண்டுகள் கழிந்த பின்னால்கூட, ஒரு நாட்டிலே இருக்கிறவனுக்கு ஒரு 3 ரூபாயுடன் கோதுமையாவது அரிசியாவது அரசு வழங்கி அவனைப் பாதுகாத்துத் தீர வேண்டிய நெருக்கடிக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறது என்கிற காரணத்திற்காக, நாம் வெட்கப்பட வேண்டுமே தவிர, வேதனைப்பட வேண்டுமே தவிர, இதைப் பற்றிக் கூட விமர்சனம் செய்வது அவ்வளவு உகந்தது அல்ல என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். மூன்று ரூபாய் கிடைத்தால் அதை 3 ஆயிரம் ரூபாயாகக் கருதுகிற மனோபாவம் படைத்தவர்கள் இன்றைக்கும் கிராமப்புறங்களிலே, ஊர்ப்புறங்களிலே, காட்டுப்புறங்களிலே வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள் என்பதை தயவுசெய்து யாரும் மறந்துவிட வேண்டாம்; வேலை வாய்ப்பு, வேலை வாய்ப்புக்கு உத்தரவாதம் என்றெல்லாம்



நாம் பேசுகிறோம். ஆனால் நாம் எப்படிப் பழகிவிட்டோம் என்று கேட்டால், நான் கூட ஒரு பஞ்சாலையிலே பணியாற்றிக் கொண்டிருந்தவன் என்ற முறையில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். யார் யாருக்கு வருமானம் வருகிறதோ அவர்களுக்கெல்லாம் சங்கங்களை அமைப்பதும் அதன் மூலம் அவர்களுக்கு இன்னும் வசதிகளையும் வாய்ப்புகளையும் தேடிக்கொள்வதுமான நிலைமைகள் இந்த நாட்டிலே பழகிப்போய் விட்டதே தவிர, வேலையில்லாமல் தவித்துக்கொண்டிருக்கிறார்களே, வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறார்களே, விதியோர விணர்களாக்கப்பட்டிருக்கிறார்களே, சாப்பாட்டுக்கில்லாமல் தவித்துக்கொண்டிருக்கிறார்களே அவர்களைப்பற்றிய கவலை நம்மில் பெரும்பாலானவர்களுக்கு இல்லை, இன்னும் சொல்லப்போனால் சமுதாயத்தை வழி நடத்திக் கொண்டிருக்கக் கூடியவர்கள் என்று சொல்லக்கூடிய பல தலைவர்களுக்கே கூட இல்லை என்பது மிக வேதனைப்படக்கூடிய ஒரு செய்தியாகும். ஆனால் இன்றைக்கு இந்த அரசு வந்ததற்குப் பின்னாலே சிற்றூர்களிலே, கிராமங்களிலே வேலையில்லாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கக் கூடியவர்களைக் கண்டு அறிந்து அந்தந்தப் பகுதியிலேயே வேலையைத் தேடித் தருவதும், உத்தரவாதம் தருவதும், அவர்கள் செய்கிற வேலைக்குப் பதிலாக 3 ரூபாயும் அத்துடன் கோதுமையையோ அரிசியையோ தருவதும் இருக்கிறதே, இதைக் காட்டிலும் ஒரு புரட்சிகரமான திட்டம் நிச்சயமாக எதுவும் இருக்க முடியாது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய அருமை நண்பருக்கும் புரட்சித் தலைவர் என்றால் என்ன பொருள் என்று கேட்டாரே அதற்கும் இதனையே நான் விடையாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

THIRU P. YELLAMANDA: This scheme has been brought by the Central Government. This is not a new scheme.

**புலவர் புலமைப்பித்தன்:** வள்ளுவர் சொன்னார் என்ற காரணத்திற்காக நான் நடக்க மாட்டேன் என்று சொல்வது பிடிவாத குணமே தவிர, அது அறிவுடைமையாகாது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். யார் கொண்டு வந்திருந்தாலும் ஏற்றுக்கொள்கிறோம். நல்ல திட்டம் என்கிற போது, யார் கொண்டு வந்தால் என்ன?

"எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு"

என்பதை உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

"எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே;
அவர் நல்லவராவதும், தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே"

என்று தாயை முன்வைத்து எழுதினேன். ஆனால் மாணவர்களுக்குத் தாயாகவும் தந்தையாகவும் இருக்கிற ஆசிரியர்கள் அந்தக் குழந்தைகளெல்லாம் நல்ல குழந்தைகளாக உருவாவதற்கும், நம்மைப் பார்த்து அவர்கள் தவறாக நடக்கக்கூடாது என்று மனோபாவம் உருவாவதற்கும் உறுதுணையாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆசிரியர்களே வீதிக்குச் சென்று போராடுகிற நிலை வந்துவிட்டால், பிறகு மாணவர்கள் ஒரு கட்டுப்பாட்டுக்கு அடங்காமல் மீறிப் போய்விட்டால், நம்முடைய எதிர்காலச் சமுதாயம் முழுக்க முழுக்கக் கெட்டுப் போய்விடும்.

திரு. மீனாட்சிசுந்தரம் : மாணவர்களுடைய எதிர்காலத்தில் இவ்வளவு அக்கறையோடு ஆசிரியர்கள் நடந்து கொள்ள வேண்டுமென்று கூறுகின்ற அந்த நேரத்தில் ஆசிரியர்களுடைய எதிர்காலமும் எந்தவிதமான தொல்லையுமில்லாமல் இருக்கும், எந்தவிதமான வசதிக் குறைவும் இல்லாமல் இருக்கும் என்ற உத்தரவாதம் இருந்துவிட்டால், சாதாரண மனித நிலையைவிட்டு ஆசிரியர்களேகூட அந்த நிலைக்கு உயர்ந்து வந்துவிடுவார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

புலவர் புலமைப்பித்தன் : மகிழ்ச்சி. நானேகூட கோவை இடைநிலை ஆசிரியர்கள் மாநாட்டில் கலந்துகொண்டு பேசுகிறபோது, ஒரு கருத்தினைச் சொன்னதை இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன். "பள்ளிக்குச் செல்லுகிற ஆசிரியர்கள் வீட்டைப்பற்றிய கவலையோடு பள்ளிக்குச் செல்வார்களானால், அவர்கள் மாணவர்களுக்குக் கல்வியைச் சொல்லித்தர முடியாது. மாறாக, கவலையைத்தான் சொல்லித்தர முடியும்" என்று சொன்னேன். அந்தக் கருத்தை இப்போதும் வற்புறுத்துகிறேன். அதற்கு மாறான கருத்தைச் சொல்லவில்லை; அறம் பிறழ்கிற எண்ணத்தில் நான் எதையும் சொல்லவில்லை. நான் குறிப்பிட விரும்புவது, ஒரு குழுவை உருவாக்க வேண்டும். அதில் இங்கேயிருக்கிற மேலவை உறுப்பினர்களும் இருக்கலாம், மற்றவர்களும் இருக்கலாம், அதில் யார் யார் இருக்கலாம் என்று முடிவு செய்வதை அரசினுடைய ஆலோசனைக்கு விட்டுவிடுகிறேன். எந்தக் காரணத்தைக் கொண்டும் பள்ளிகளுடைய கதவுகள் மூடப்படாமலிருக்க நான் சொல்வது கல்விப் பள்ளிகளினுடைய கதவுகள் மூடப்படாமலிருக்க—தேவையான முயற்சிகளில் எல்லோரும் முனைந்து ஈடுபடவேண்டுமென்று கேட்டுக்





கொள்கிறேன். அரசையும் கேட்டுக்கொள்கிறேன். ஆசிரியர்களையும் கேட்டுக் கொள்கிறேன். எதிர்காலத்தைப் பற்றிய கவலையால்தான் இதைச் சொல்கிறேனே தவிர, வேறு எண்ணத்தில் அல்ல என்பதையும் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்து, தொழில் வளர்ச்சியில் 1,30,000 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைப்பதற்குரிய முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். சிறு தொழில் மூலமாக இதைச் செய்வதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் அருள்கூர்ந்து இதை எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 1947-லிருந்து 1979 ஆம் ஆண்டு வரை ஆண்டொன்றுக்கு 1,30,000 பேருக்கு வேலை கிடைத்திருக்குமானால், இந்த நாட்டில் வேலைக்கு வெளிநாடுகளிலிருந்துதான் ஆட்களைத் தேடிக்கொண்டு வரவேண்டிய நிலை வந்திருக்கும். ஏற்கெனவே இருந்தவர்கள்—இதைச் செய்யவில்லை. செல்லரித்துப்போன திட்டங்கள்—பட்டுப்போன திட்டங்கள்—7 ஆண்டுக் காலத்திலே உதவாக்கரைத் திட்டங்கள் என்று பேசிக் கொண்டிருப்பதால் அந்தத் திட்டங்களையெல்லாம் நிறைவேற்றியாகிவிட்டதாகக் கருதிக் கொண்டிருப்பது நம்மை நாமே ஏமாற்றிக்கொண்டு, நம் எதிர்கால சமுதாயத்தையும் ஏமாற்றுகிற செயல் என்பதைப் பொறுப்புணர்ச்சியோடு சொல்லுகிறேன். இப்படிப்பட்ட திட்டங்களைத் தீட்டுவதன் வாயிலாக கடந்த 30 ஆண்டுக் காலத்திலே காரியமாற்றியிருப்பார்களானால், நாட்டில் வேலை இல்லாதவர்கள், வேலை இல்லை என்பதையே இல்லாமல் செய்திருக்க முடியும் என்பதையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அடுத்து, மீனவர்களுக்கு ஏறத்தாழ 2¾ கோடி ரூபாய் செலவில் 120 விசைப் படகுகள் வாங்கித் தருவதாகவும் அவர்கள் வாழ்வில் வெளிச்சம் ஏற்படுத்தித் தருவதாகவும் சொல்லப்பட்டிருப்பது ஒரு கலங்கரை விளக்கமான செயல் என்பதை யாரும் மறுக்க முடியாது. அதைத் தவிர ஒரு கோடி ரூபாய் செலவில் வீடு கட்டித் தரும் திட்டம் வேறு இருக்கிறது. தூண்டில் போட்டோம், மீன்கள் இல்லை, நாங்கள் இங்கே தூண்டில் மீன்களானோம் என்று வாழ்கிறவர்களுக்கு இது ஒரு அருமையான திட்டம் என்பதை மறந்துவிடக் கூடாது.

மின்சாரத்திற்காக 117 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மின்சாரம் அறிவியல் வளர்ச்சி பெற்றுவருகிற நாட்டில் எவ்வளவு இன்றியமையாதது என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. ஒரு நாடு வளர்ந்து வருகிறது என்றால், அதற்கு எடுத்துக்காட்டு அந்த நாட்டின் கல்வி வளர்ச்சியும், அதற்கு அடுத்து மின்சார வளர்ச்சியும் தானே தவிர, வேறல்ல. இவ்விரண்டின்

[புலவர் புலமைப்பித்தன்] [1979 மார்ச் 12

கிராமப் பணியைப்பற்றிச் சொன்னார்கள், பெரும்பாலும் நகரிலே இருக்கிறவர்கள் உல்லாசமாக வாழ வேண்டுமென்ற காரணத்திற்காக கிராமங்களிலிருந்து வந்தவர்கள் தான். அவர்கள் நகரிலே உல்லாசமாக வாழ வேண்டுமென்ற காரணத்திற்காக கிராமத்திலேயிருந்து இங்கே இறக்குமதியாகிக் கொண்டிருக்கிறார்கள். இங்கே ஒரு பெரிய கவர்ச்சி இருக்கிறது. சென்னைக்குப் போனால், அங்கே பட்டணத்துக்குரிய நகர ஈட்டுப்படி, வீட்டு வாடகைப்படி எல்லாம் கிடைக்கும் என்கிற நிலையிலே எல்லாம் அதிகமாக இருக்கிறதினாலே, அவர்கள் நகருக்கு ஈர்க்கப்படுகிறார்கள் என்று நான் கருதுகிறேன். இவர்களையெல்லாம் கிராமங்களுக்கு ஈர்க்க வேண்டுமென்பதற்காக கிராமங்களிலுள்ளவர்களுக்கு அதிகப்படியான வாய்ப்பினைத் தர வேண்டும் என்பது என்னுடைய ஆசை. இன்னொன்றையும் நான் குறிப்பிட்டாக வேண்டும். கிராமங்களில் ஆசிரியர்களாக இருக்கின்றவர்களுக்கு வீடுகள் கிடைக்காமல் இருக்குமேயானால், அவர்களுக்கு வீடுகள் கட்டித் தருகிற ஒரு திட்டத்தை அரசு வைத்திருக்கிறது. கிராமத்திலே வேண்டுமானால் 5 அல்லது 10 பேர் ஆசிரியர்களாக இருப்பார்கள். அவர்களுக்கு வீடு கட்டித் தருகிற திட்டத்திலே முன்னுரிமை வழங்க வேண்டும். அது மட்டுமல்ல, கல்வி சீரமைப்பு காரணமாக மேல்நிலைப் பள்ளிகள் என்று வைத்திருக்கிறார்கள். இந்த மேல்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரையில், நான் மீண்டும் பணிவன்போடு ஒன்றை மாண்புமிகு கல்வியமைச்சரவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன். எனக்குத் தமிழ் ஆசிரியராக இருந்தவர் கூட இன்றைக்கு மேல்நிலைப் பள்ளியிலே இடம் பெற முடியாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறார். 10 ஆண்டுக் காலம், 15 ஆண்டுக் காலம் ஊழியம் செய்திருப்பவர்கள், சிறப்பாகத் தமிழ் படித்திருக்கிறவர்கள், பாடத் தமிழைச் சொல்லித் தருகிறவர்கள், பக்குவமாகச் சொல்லித் தருகிறவர்கள் இப்படிப் பட்டவர்களிடத்திலே அந்தப் பணியை ஒப்படைக்க வேண்டும் என்பதைப் பற்றி நான் மாண்புமிகு கல்வி அமைச்சரவர்களைப் பார்த்து அருள் உள்ளத்தோடு சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

(பிற்பகல் 6.40)

ஆசிரியர்களின் போராட்டத்தைப்பற்றி ஆசிரியர்கள் போராடிக் கொண்டிருந்த காலத்திலேயே பேச வேண்டுமென்று ஆசைப்பட்டேன். காரணம் நானே ஆசிரியனாக ஒரு 10, 12 ஆண்டுக் காலம் வாழ்ந்தவன் என்பதனால். என்னுடைய கருத்தைக்கூட நடுநிலையான செய்தியாகச் சொல்ல வேண்டுமென்று விரும்புகிறேன். ஆசிரியர்களுடைய பிரச்சினைகள், அவர்களால் கேட்கப்படாமலேயே தீர்க்கப்பட வேண்டுமென்பதில் எப்போதும் எனக்கு



1979 மார்ச் 12] [புலவர் புலமைப்பித்தன்]

மாறுபட்ட கருத்தில்லை. ஆனால் அதே நேரத்தில் ஆசிரியர்களைப்பற்றி மிக விநயமாக மிகப் பணிவன்போடு வேண்டிக் கொள்வதொன்றுண்டு. எதிர்காலத் தலைமுறையை உங்களிடம் இந்த நாட்டு மக்கள் ஒப்படைத்திருக்கிற காரணத்தால், கூடுமான வரையில் அவர்களை நல்வழிப்படுத்தும் வகையில் நடந்து கொள்ளுங்கள். ஏதோ ஆலைத் தொழிலாளர்களைப்போல் தங்களைக் கருதிக்கொள்ளுகிற மனோபாவம் ஆசிரியர்களிடத்திலே வருவது என்பதேகூட அவ்வளவு நல்லதல்ல. வகுப்பறையிலே மட்டுமல்லாமல், வாழ்க்கையிலும் எடுத்துக்காட்டாக இருக்க வேண்டியவர்கள் ஆசிரியர்கள். பிள்ளைகளின் எதிர்காலத்தைப்பற்றிக் கவலைப்படுகிற நிலைமை ஆசிரியர்களிடத்திலே குறைந்துபோய் விட்டதோ என்று அச்சப்படுகிற நிலைமை இன்றைக்கிருக்கிறது. இது நியாயமாக இருக்குமானால்—இதை நியாயமில்லை என்று யாரும் சொல்லமாட்டார்கள்—இந்த நிலைமையை மாற்ற நாம் முயற்சிகளை மேற்கொண்டாக வேண்டும்.

நான் பஞ்சாலைத் தொழிலாளியாகப் பாடுபட்டுக் கொண்டிருந்தபோது, அந்தத் தொழிலுக்கு முத்தரப்பு கமிட்டி என்று ஒரு அமைப்பை வைத்திருந்தார்கள். அந்த முத்தரப்புக் கமிட்டியின் இலக்கணம் என்னவென்றால், பஞ்சாலைகளில் எந்தக் காரணத்தைக்கொண்டும் உற்பத்தியைப் பாதிக்கிற வகையில் வேலை நிறுத்தம் நடக்கக்கூடாது. அப்படி வேலை நிறுத்தத்திற்குரிய அடிப்படையான கோரிக்கைகள் இருக்குமானால், அவைகளை மூன்று தரப்பாரும் சேர்ந்து பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டும். மூன்று தரப்பினர் யார் யார் என்றால், ஒன்று பஞ்சாலையின் முதலாளி, அடுத்தவர்கள் அரசு அதிகாரிகள், மூன்றாவது தரப்பினர் தொழிற் சங்கத் தலைவர்கள். இந்த 3 பேரும் சேர்ந்து பிரச்சினைகளைப் பரிசீலித்து கோரிக்கைகளை ஆராய்ந்து பார்த்து, அவற்றைத் தீர்த்துக்கொள்வதன் மூலமாக நாட்டினுடைய உற்பத்தி தடைபடாமல், நாட்டின் பொருளாதார வளர்ச்சி நிலைகுலையாமல் இருக்கச் செய்ய வாய்ப்பாக இருக்கும் என்று அந்த அமைப்பை உருவாக்கி வைத்திருந்தார்கள்.

அதைப் போலவே கல்வித் துறையிலும் இதுபோன்ற இன்றியமையாத கூறு ஒன்றை உருவாக்கி, எந்தக் காரணத்தைக் கொண்டும் ஆசிரியர்கள் வீதிக்கு வராத வகையில் தடுத்து நிறுத்தி, ஆசிரியர்களும் பொறுப்புணர்ச்சியோடு நடந்துகொண்டு, அரசும் அதைப் பரிசீலித்து நல்ல நிலைமையை உருவாக்காவிட்டால் என்ன நிலைமை இனி உருவாகும் என்றால், "ஆசிரியர்களே போராடுகிறபோது நாம் ஏன் போராடக் கூடாது?" என்று எண்ணுகிற மனோபாவம் மாணவர்கள் மத்தியிலே வந்துவிடும். நான் கூட அந்த எண்ணத்தில்தான் ஒரு பாடலை எழுதினேன்.

வளர்ச்சியை ஒட்டித்தான் ஒரு நாட்டின் முன்னேற்றமே கணக்கிடப்படுகிறது என்பதை நாம் மறக்கக் கூடாது. எனவே முன்னேற்றத்திற்கு அடிப்படையான மின்சாரம் மேலும் வளர்வதற்கு அறிவியல் அடிப்படையில் எல்லாத் தொழில்களும் முன்னேறுவதற்கும் அதன் மூலம் நாட்டின் பொருளாதாரத் துறையில் நல்ல சூழ்நிலை உருவாகவும், இந்த அரசு எடுத்துக்கொண்டிருக்கிற முயற்சிகளைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, முதியோர் உதவித் தொகையைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். பெற்ற பிள்ளையேகூட தீபாவளிக்கு மனைவிக்குத்தான் புடவை எடுத்துத் தரவேண்டுமென்று நினைக்கிறான். தன்னைப் பெற்றெடுத்த தாய் தந்தையருக்கு, புடவையும் வேட்டியும் எடுத்துத் தர வேண்டும் என்று நினைக்கிற மனோபாவம் வளரவில்லை. ஏதோ வளர்த்துவிடுகிற வரைதான் பிள்ளை பெற்றோர் என்று இருந்து, வளர்ந்துவிட்ட பிறகு பிள்ளைக்கும் பெற்றோர்களுக்கும் சம்பந்தமில்லை என்ற நிலைதான் இருக்கிறது. பிள்ளை எப்படி இருக்க வேண்டுமென்றால், ஆல மரத்திற்கு விழுதாக இருக்க வேண்டும். அப்படி விழுதாக இருக்க வேண்டிய பிள்ளை பழுதாகப் போனால் என்ன செய்வது என்ற முறையில், நலிந்துபோய்க் கிடக்கிற பெற்றோர்களுக்கு உதவுகிற வகையில் கைத்தறி வேட்டியும், புடவையும் ஆண்டுக்கு இரண்டு முறை—சுதந்திரத் திருநாளிலும், பொங்கல் திருநாளிலும்—கொடுப்பது என்பது, ஒரு பிள்ளை, பெற்றோருக்குச் செய்ய வேண்டிய கடமையை இந்த அரசு செய்கிறது என்று பொருளாகும். எங்கள் வீட்டுப் பிள்ளையாக முதல்வர் அவர்கள் இருப்பதால், இதைச் செய்கிறார் என்று நினைத்து அவரை பாராட்ட ஆசைப்படுகிறேன்.

விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு ரூ. 75 உதவிப் பணம் தந்திருந்ததை ரூ. 100—ஆக மாற்றியிருக்கிறார்கள். இந்த நேரத்தில் ஒன்றை மறந்துவிடாமல் சொல்லிவிட வேண்டும் என்ற அடிப்படையில் ஒரு வேண்டுகோளை விடுக்க ஆசைப்படுகிறேன்.

முன்பு அரசு அவைக்கவிஞராக இருந்த திரு. நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை அவர்கள் இறந்துவிட்ட பிறகு,—அவருடைய குடும்பத்தின் நிதி யாதாரம் எப்படி இருக்கிறது என்று எனக்குத் தெரியாது . .

திரு. க. அறிவழகன் : மறைந்த நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை அவர்களின் துணைவியார் மிகுந்த சிரமத்துடன்தான் வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கிறார்.

**புலவர் புலமைப்பித்தன்** : அவருடைய துணைவியாருக்கு மாதம் ரூ. 250 உதவிப் பணம் தரப்படுவதாகக் கேள்விப்பட்டேன். நான் நேற்று சுடலையில் ஒரு சுந்தரக் கவிஞனை இழந்துவிட்டு வந்திருக்கிறேன். எனவே ஆழ்ந்த வருத்தத்தோடு அவரது மறைவைச் சொல்லி இந்த வேண்டுகோளை விடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அவருடைய குடும்பம் மிகுந்த வேதனையில் இருக்கிறது. அவர் எந்தக் கட்சியைச் சார்ந்தவர் என்று பாராமல், சுதந்திரத்திற்காக, இந்த நாட்டு விடுதலைக்காகப் பாடுபட்ட ஒருவர் என்பதை இதயத்தில் இருத்தி திரு. இராமலிங்கம் பிள்ளை அவர்களின் குடும்பத்திற்கு அளித்த உதவியை முன்மாதிரியாக வைத்து, அவருடைய குடும்பத்திற்கும் உதவித் தொகை அளிக்கப்படுமானால், நானும் ஒரு கவிஞன் என்ற முறையில் அதை மகிழ்ச்சியோடு வரவேற்பேன். கவிஞர்கள் என்பவர்கள் பெரும்பாலும் வாழ்கிறபோது செத்து, செத்ததற்குப் பின்னால் வாழ்ந்து கொண்டிருக்கிற வாழ்க்கையை இயற்கையாகக் கொண்டவர்களாக இருக்கிற காரணத்தால், அவருடைய குடும்பத்திற்குக் கொஞ்சம்கூட அலட்சியம் காட்டாது நமது பொன்மனச் செம்மல், புரட்சித் தலைவர் அவர்கள், முதல்வராக இருக்கிற இந்த நேரத்தில் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 'பாரி' என்றெல்லாம்கூடச் சொன்னார்கள். இலக்கியத்திலிருந்து தொகுத்து வந்திருக்கிறேன் என்றுகூட சொன்னார்கள். தொகுத்துச் சொல்ல நேரம் இல்லை, அதனால் அப்படிப்பட்ட புரட்சித் தலைவர் அவர்கள் இறந்த அந்தக் கவிஞனுடைய குடும்பத்திற்கு ஏதாவது உதவி செய்வார்களானால், அதை எனக்குச் செய்த உதவியாக நான் மகிழ்ச்சியோடு வரவேற்பேன் என்று கூறி, அவருடைய குடும்பத்திற்கு எதையாவது செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த அவையில் அவரோடு நெருங்கிப் பழகிய நண்பர்களாக இருப்பவர்கள் பலர் இருக்கிறார்கள்.

(பிற்பகல் 6.50)

மாண்புமிகு அமைச்சர் அண்ணன் எனக்கு முன்னாலே உட்கார்ந்து கொண்டிருக்கிறார். அவர் எல்லாம் யோசனை சொல்லி நல்ல முடிவுகளை உருவாக்கி அந்தக் குடும்பத்திற்கு ஏதாவது செய்ய வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மதுவிலக்கைப்பற்றி ஒரு செய்தி குறிப்பிட வேண்டும். மதுவிலக்கு தவறு என்று மாறுபட்ட கருத்துடையவர்களை நான் ஒப்புக் கொள்ளத் தயாராக இல்லை. அது வேறு சிந்தனை. ஆனால் மதுவிலக்கைப் பொறுத்த வேதனைகளை நான் சொல்கிறேன். அரசு பிடிவாதமாக

[புலவர் புலமைப்பித்தன்] [1979 மார்ச் 12

இருக்கிறது, அரசு பிடிவாதமாக இருக்கிறது என்பதை நான் மறுக்கவில்லை. பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழகத்தினுடைய ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு விட்ட பின்னாலே, ஒரு 7 ஆண்டுக் காலம் நிலைமை எப்படி நடந்து கொண்டிருந்தது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டுவிட்ட பின்னாலே, "நான் இந்த நாட்டுத் தாய்மார்களுடைய கண்ணீரைப் பார்த்துவிட்ட பின்னாலேயும் மதுவிலக்கை ரத்து செய்யத் தயாராக இல்லை. வேண்டுமானால் பொருளாதார நெருக்கடி காரணமாக நான் ஆட்சியைவிட்டு இறங்கிப் போகும் நிலைமை ஏற்பட்டாலும், அதை ஒப்புக்கொள்வேனே தவிர, எந்தக் காரணத்தைக் கொண்டும் மதுவிலக்கை ரத்து செய்யத் தயாராக இல்லை" என்று சொன்னார்கள். அந்த மாமேதை, கருணையுள்ளம் கொண்டவர் கண்ணீரைத் துடைக்க வேண்டும் என்று கருதுகிறவர், கடைந்தெடுத்த மனம் கொண்டவர், அந்தப் பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். அதற்குப் பின்னாலே வந்தவர்கள் ஒரு 7 ஆண்டுக் காலத்திலே அப்படிப்பட்ட நிலைகள் போய்விட்ட காரணத்தினாலே, குடி என்றால் என்னவென்றே தெரியாதவர்கள் எல்லாம் குடித்து கெட்டுப் போயிருக்கிறார்கள். இது சமுதாயத்திற்கு நாம் செய்த மாபெரும் தீமை என்பதனைக் கருதி, மீண்டும் குடித்துப் பழகியவர்களை குடிக்காதே என்று சொல்லி; தடுத்து நிறுத்தி அதிலே எவ்வளவு சிக்கல்கள் ஏற்பட்டாலும், எவ்வளவு தடைகள் ஏற்பட்டாலும், எதிர்காலத் தலைமுறையினரின் நன்மையைக் கருதி மதுவிலக்கை அமுல்படுத்துவதிலே எல்லாக் கட்சிக்காரர்களும் கட்சி பேதம் பாராட்டாமல் துணை நிற்க வேண்டும். தந்தை பெரியார் அவர்களுடைய நூற்றாண்டு விழாவை நாம் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். தந்தை பெரியார் அவர்கள் மதுவிலக்குக் கொள்கையிலே எவ்வளவு அழுத்தமானவர் என்று சொல்ல வேண்டும். மோகனூரிலே காந்தியடிகள் கள்ளுக்கடைகளை மூட வேண்டி மறியல் செய்ய வேண்டும் என்று சொன்னவுடனே, மோகனூரிலே தனக்குச் சொந்தமாக இருந்த தோப்புகளிலே இருந்த தென்னை மரங்களையெல்லாம்—"கொண்டை இருந்தால் அல்லவா சீண்டு கேட்கிறாள், ஆகவே கொண்டையை வெட்டி விடுவோம்" என்று சொல்வதைப்போல—தென்னை மரங்கள் இருப்பதால் தானே, கள்ளை இறக்குகிறார்கள், எனவே மரங்களை வெட்டிவிட வேண்டும் என்று துணிந்து தன்னுடைய மரங்களை—மாற்றான் தோட்டத்து மரங்களை அல்ல—தன்னுடைய தோட்டத்து மரங்களைத் தந்தை பெரியார் அவர்கள் வெட்டச் சொன்னார்கள். ஆகவே, தந்தை பெரியாருக்கு எந்த அளவிலே மதுவிலக்குக் கொள்கையிலே அழுத்தமான நம்பிக்கை இருந்திருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். கள்ளுக்கடைகளை எதற்காக ஒழிக்கச் சொல்கிறீர்கள் என்று கேட்டபோது, அந்தக் கொள்கையை

விட்டுவிட வேண்டும் என்று கேட்டபோது—காந்தியடிகளே கூட "ஈரோட்டிலே 2 பெண்மணிகள் இருக்கிறார்கள், அவர்களைச் சமாதானப்படுத்திவிட்டு வந்துவிட்டால், நான் மதுவிலக்கை விட்டுவிடத் தயாராக இருக்கிறேன்" என்று சொன்னது நம்முடைய தந்தை பெரியார் அவர்களுடைய குடும்பத்தைச் சேர்ந்த பெண்மணிகளைத்தான் என்பதை மறந்துவிடக் கூடாது. தந்தை பெரியார் அவர்கள் காட்டிய வழி மதுவிலக்குக் கொள்கை என்பதை மனதிலே நிறுத்தி, அதனை வெற்றிகரமாக ஆக்கும் முயற்சியிலே ஏதாவது தவறு, பழுது இருக்குமானால், அவற்றைச் சுட்டிக்காட்டி எப்படி வெற்றி பெறச் செய்வது என்பதிலே நம்முடைய நாட்டம் இருக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஒன்றை நான் சொல்ல வேண்டும். ஒருசில இடங்களிலே காவல் துறையைச் சேர்ந்தவர்களே கூட இந்த மதுவிலக்குச் சட்டம் நிறைவேற முடியாமல் தடுத்துக்கொண்டிருப்பதாக நான் ஆங்காங்கே போகிறபோது சொல்கிறார்கள்.

"இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும்"

என்ற குறள்மொழிக்கேற்ப, நான் கோபிச்செட்டிப்பாளையம் போகிறபோது, சத்தியமங்கலம் போகிறபோது, புளியம்பட்டி போகிறபோது, மற்றைய பகுதி களுக்கு எல்லாம் போகிறபோது, நண்பர்கள் சொல்கிறார்கள். காவல் துறையைச் சேர்ந்த பலர், பணம் இல்லாமல் சாராயம் காய்ச்சுகிற தொழிலை விட்டுவிட்டவர்களைப் பார்த்து, அணுகி, நானே பணம் தருகிறேன் என்று 500, 1,000 தந்து காய்ச்சச் சொல்லி அவர்கள் குற்றங்களை விளைவித்துக் கொண்டிருக்கிறார்கள், பயிர் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதைக் கேள்விப்பட்டேன் பயிர் விளைகின்ற நிலங்களிலே களைகளும் இருக்கும். தொகையும் கேட்பதாகச் சொன்னார்கள். அது மட்டுமல்ல, ஒருசில இடங்களிலே சட்டத்திற்குப் பயந்துபோய் சாராயம் காய்ச்சாமல் இருந்த வர்களை அழைத்து வைத்து, காய்ச்சச் சொல்லி வற்புறுத்தியதாகவும் நான் கேள்விப்பட்டேன். பயிர் விளைகின்ற நிலங்களிலே களைகளும் இருக்கும். இந்தக் களைகள் எங்கே என்று கண்டறிய வேண்டும். எல்லோரும் அப்படிச் செய்கிறார்கள் என்று நான் சொல்ல மாட்டேன். பயிர் இருக்கிற இடத்திலே, நல்ல தஞ்சைத் தரணியிலே இருக்கக்கூடிய கழனிகளிலே களைகளும் வளர் கின்றன. அந்தக் களைகளைப் பிடுங்கி எறியும் முயற்சியிலே, அந்தக் களை வளராமல் தடுப்பதற்கு உரிய முயற்சியிலே இந்த அரசு ஈடுபடுமானால், நிச்சயமாக மதுவிலக்குத் திட்டம் வெற்றிபெறும், போகின்ற இடங்களிலே எல்லாம் தாய்மார்கள் பாராட்டுகிறார்கள். புரட்சித் தலைவர் அவர்கள் மது விலக்குச் சட்டத்தை கடுமையாக அமுல்படுத்துவது குறித்து எல்லோரும் தங்களுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் இப்படி

சின்னச் சின்ன இடையூறுகள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன என்பதை மனதிலே வைத்து, முழுமையான அளவிலே அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் அத்தனை பேரும் கூட காவல் துறையினருடைய பொறுப்புகளை ஏற்றுக்கொண்டு செய்ய வேண்டும். நான் கூட பல நேரங்களில் காவல் துறையோடு சேர்ந்து, கோவையில் இருக்கிறபோது, கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களைப் பிடித்துத் தருகிற முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறேன். பல நேரங்களிலே அவர்கள் அடிக்க வருகிறபோது, காவல் துறையைச் சேர்ந்தவர்கள் ஓடி விடுவார்கள், நான் அடிப்பட்டிருக்கிறேன். அதனாலே அந்த முயற்சியிலே . . . .

திரு. ம. சங்கரலிங்கம்: ஒருவேளை இவர்கள் ஓடுகிற இடங்களிலே எல்லாம், இவரோடு ஓடியவர்கள் எல்லாம் சாராயம் காய்ச்சச் சொன்ன போலீஸ்காரர்களாக இருப்பார்கள். ஆகவே, இவர்கள் போலீசாரோடு ஒத்துழைக்கிறபோது, சாராயம் காய்ச்சச் சொன்ன போலீசார் யார், மற்றவர்கள் யார் என்று தெரிந்து செய்தார்களா?

புலவர் புலமைப்பித்தன்: ஒரு புலமைப்பித்தனுடைய வீரத்தை ஒப்புக் கொள்ளக் கூடாது என்று கருதித்தான் இப்படிச் சொல்கிறார்கள் என்று கருதுகிறேன். எனக்கும் கொஞ்சம் வீரம் உண்டு என்று எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதனாலே நல்ல திட்டங்களை உருவாக்கி வருகிற இந்த ஆட்சி செய்வதில் இருக்கிற குறைகளை கண்ணாடி விமர்சனம் செய்வதைப்போல சொல்லுங்கள், நாங்கள் வேண்டாம் என்று சொல்லவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய நண்பர் கவிதை ஒன்றைச் சொன்னார்கள். நாம் நான் இங்கே கவிதை மரபைத் தொடங்கி வைத்தோம் என்ற காரணத்தினாலே, ஒரு கவிதையை மட்டும் சொல்லி விடைபெறலாம் என்று கருதுகிறேன். நம்முடைய—என்னுடைய அருமை நண்பர்—கெழுதகு நண்பர்—ஏட்டிலே சுரைக்காய் என்று சொன்னார்கள். நான் இந்தக் கவியரங்கு மேடையாகக் கருதி, அவருக்குப் பதில் சொல்ல வேண்டும் என்ற அடிப்படையில்

"ஏட்டிலே சுரைக்காய் என்று என்னரும் நண்பர்—சொன்ன
பாட்டிலே வறட்சி, பார்க்கும் பார்வையில் வறட்சி,
சேர்ந்த கூட்டிலே வறட்சி, கொண்ட கொள்கையில் வறட்சி
"சன்னல் காட்டினை மூங்கில் காடு என்றால்
கண்ணில் குற்றம்"—

எவருக்கும் கவிதை பாட இருக்கலாம் ஆசை,
ஆனால் தவறுக்கும் பிழைகளுக்கும் தமிழ்க் கவி
இடம் கொடுத்தால் கவிதை நலம் கெடாதா?

இவருடைய பாட்டை நான் தினமணியிலே படித்தேன். அறுசீர் விருத்தம் என்ற பெயரிலே எழுதியிருப்பதாக எண்ணுகிறேன். இங்கே பக்கத்திலே தான் அமர்ந்திருக்கிறார். அதிலே கொஞ்சம் எதுகை மோனை எல்லாம் சரியாகப் போட்டு எழுதுகிற பயிற்சி அவருக்கு வர வேண்டும் என்பது என்னுடைய ஆசை. அதனாலே தான் பக்கத்திலே வந்திருக்கிறார் என்று கருதுகிறேன். எவருக்கும் கவிதை பாட இருக்கலாம் ஆசை. ஆனால் தவறுக்கும் பிழைகளுக்கும் தமிழ்க் கவி இடம் கொடுத்தால், கவி நலம் கெடாதா? நண்பர் கண்டிப்பாய் இனிமேலேனும்—போனது போகட்டும்—அவையினிலே எதுகை மோனை அகலாமல் பாட வேண்டும் என்று கேட்டு, இந்த நிதி நிலை அறிக்கை வாயிலாக ஒரு நல்ல நீதியும், நிதியும் இந்த நாட்டுக்குக் கிடைத்து எல்லோரும் நிம்மதி பெறுவார்கள், நிம்மதி பெறும் நிலை வரவேண்டும் என்ற வாழ்த்தைத் தெரிவித்து அமைகிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன்) : அவையின் நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை மாலை 4 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 7-00)

6. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

*A. Statutory Rules and Orders.*

110. Notification issued in G.O. Ms. No. 1752, Rural Development and Local Administration, dated the 15th November 1978 in regard to amendments to the Tamil Nadu Panchayats (Duty on Transfer of Property) Rules, 1961. [Laid on the table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958)].

*B. Reports, Notifications and other Papers.*

Nil.

படிப்புதவித்தொகை அனுப்புவதில் காலதாமதம் ஏற்பட்டது. ஆயினும் 1977-78-ம் ஆண்டில் இரண்டு தவணைகளுமே சேர்த்து ஒரே தவணையாகக் கொடுக்கப்பட்டு மாணவர்களுக்கு எவ்விதத் தொல்லையும் ஏற்படா வண்ணம் பார்த்துக் கொள்ளப்பட்டதாக அரிசனம் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் தெரிவித்துள்ளார். படிப்புதவித்தொகை வழங்குவதில் பொதுவாகவும், விடுதிகளில் தங்கிப் பயில்வதற்கென வழங்கப்படும் படிப்புதவித் தொகை வழங்குவதில் குறிப்பாகவும் முறையீடு எதும் 1977-78-ம் ஆண்டில் வரவில்லை என்பதாக பிற்பட்டோர் நல இயக்குநரும் தெரிவித்துள்ளார்.

2. 1978-79-ம் ஆண்டைப் பொறுத்தவரையில், குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக கல்வி நிலையங்களுக்குத் திருப்பி அனுப்பி வைக்கப்பட்ட விண்ணப்பங்களைத்தவிர, மதுரை மாவட்டத்தில் உள்ள கலை மற்றும் தொழிற் கல்லூரிகளில் பயிலும் பழங்குடியினர், தாழ்த்தப்பட்டோர் மற்றும் அதிலிருந்து மதம் மாறியோர் பிற்பட்ட வகுப்பைச் சார்ந்த மாணவ, மாணவியர்க்குப் படிப்புதவித்தொகை வழங்குவதில் காலதாமதம் ஏற்படவில்லை என்று அரிசனம் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர், பிற்பட்டோர் நல இயக்குநர் ஆகியோர் தெரிவித்துள்ளனர். பெறப்பட்ட விண்ணப்பங்கள், முறை செய்யப்பட்டவை முதலியன பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

**பழங்குடியினர், தாழ்த்தப்பட்டோர் மற்றும் அதிலிருந்து மதம் மாறிய மாணவ, மாணவியர்.**

| | இந்திய அரசு படிப்புதவித் தொகை | மாநில அரசு படிப்புதவித் தொகை |
|---|---|---|
| பெறப்பட்ட விண்ணப்பங்களின் மொத்த எண்ணிக்கை | 4,037 | 1,090 |
| அளிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 1,990 | 478 |
| தள்ளுபடி செய்யப்பட்டவை | 25 | 17 |
| திருப்பி அனுப்பப்பட்டவை | 1,630 | 532 |
| நிலுவையில் உள்ள மேல் இடைநிலைக்கல்வி விண்ணப்பங்கள் | 392 | 127 |

## இணைப்பு

[60 ஆம் பக்கத்தில் இனம் 3 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

இந்த அரசு பதவி ஏற்றவுடன் 1977 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 8 ஆம் நாள், மருத்துவம், பொறியியல் கல்லூரிகள் உட்பட சென்னையில் உள்ள அனைத்துக் கல்லூரி முதல்வர்களையும் அழைத்து அரிசன நல அமைச்சர் அவர்களால் ஒரு கூட்டம் நடத்தப்பட்டது. அதில் தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர், பின்தங்கிய வகுப்பினர் இனத்தைச் சார்ந்த மாணவ மாணவியர்க்குப் படிப்புதவித் தொகை வழங்கும் திட்டத்தை தாமதமின்றி வெற்றிகரமாக செயல்படுத்துவது சம்பந்தமாக ஆலோசிக்கப்பட்டது. 1977-78-ம் ஆண்டில் படிப்புதவித் தொகையை வழங்குவதில் எவ்விதச் சிரமமும் இல்லை என்று அனைத்து முதல்வர்களும் எடுத்துக் கூறினார்கள். துறை அல்லது கல்லூரிகள் மட்டத்தில் மாணவ மாணவியர்க்கு படிப்புதவித் தொகை வழங்குவதில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி, குறிக்கப்பட்டுள்ள கால வரம்பை ஒட்டி ஒழுகி, அடுத்த ஆண்டு முதல் விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்தல், படிப்புதவித் தொகை வழங்குதல் அனைத்தும் ஒரு மாத காலத்துக்குள் முடிக்கப்பட்டு, எப்பகுதியிலிருந்தும் புகார் வராமல் பார்த்துக்கொள்ளுமாறும் அமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டார்கள். 1977-78-ல் மதுரை மாவட்டத்தைத் தவிர பிற மாவட்டங்களில் உள்ள கல்லூரி விடுதிகளில் தங்கிப்பயிலும் பழங்குடியினர், தாழ்த்தப்பட்டோர் மற்றும் அதிலிருந்து மதம் மாறிய மாணவ மாணவியர்க்கு அளிக்கப்படும் படிப்புதவித்தொகை உரிய காலத்தில் அளிக்கப்பட்டு மாணவ மாணவியர்க்குப் பட்டுவாடா செய்யப்பட்டு விட்டதால் மேற்கண்ட மாணவ மாணவியர் எவ்விதத் தொல்லைகளுக்கும் ஆளாக்கப்படவில்லை என்று அரிசனம் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் தெரிவித்துள்ளார். மதுரை மாவட்டத்தைப் பொறுத்தவரை, பொதுவாக எல்லாக் கல்லூரிகளிலிருந்தும் அனுப்பப்பட்ட படிப்புதவித்தொகை விண்ணப்பங்கள் மிகவும் குறைபாடுகள் உள்ளனவாக இருந்தமையால் அவைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு திருப்பி அனுப்பப்பட்டன. 1977 ஆம் ஆண்டு அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களில் இடையிடையே மாணவர் போராட்டங்களினால் கல்லூரிகளும், விடுதிகளும் மூடப்பட்டு விட்டன. கல்லூரிகளும், விடுதிகளும் திறக்கப்பட்ட பின்னர் படிப்புதவித்தொகை விண்ணப்பத்தில் உள்ள குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டு விண்ணப்பங்களைத் திரும்ப அனுப்புவதில் சில கல்லூரிகளில் காலதாமதம் ஏற்பட்டது. பல கல்லூரிகளில் குறிப்பாகவும், விவரமாகவும் எடுத்துச் சொல்லியும் இக்குறைபாடுகளைச் சரிவர நிவர்த்தி செய்யாமல் திரும்ப அனுப்பிக்கொண்டிருந்தார்கள். இதனால் சில கல்லூரிகளுக்கு

## தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

---

செவ்வாய்க்கிழமை, 1979 மார்ச் 13.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணி அளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்.

#### உடுக்குறியிட்ட வினாக்கள்.

*Co-operative Land Development Banks*

* 171. *Q.*—Thiru ARCOT N. VEERASAMI (on behalf of THIRU V. THANGAPANDIAN): Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether the Government propose to make changes in the working of Co-operative Land Development Banks in the State;

(*b*) whether there is any proposal under the consideration of the Government to close down the Land Development Banks which are running at a loss; and

(*c*) if so, the number of Land Development Banks which will be closed in Ramanathapuram district?

கூட்டுறவு நிலவள வங்கிகள்

திரு. ஆற்காடு நா. வீராசாமி (திரு. வே. தங்கப்பாண்டியன் சார்பில்): மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மாநிலத்திலுள்ள கூட்டுறவு நிலவள வங்கிகளின் பணித் திட்டங்களில் மாறுதல் செய்ய அரசு உத்தேசித்துள்ளதா?

(இ) இலாபகரமாக இயங்காத நிலவள வங்கிகளை மூடிடும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(உ) ஆம் எனில், இராமநாதபுரம் மாவட்டத்தில் எத்தனை நிலவள வங்கிகள் மூடப்படும்?

பிற்பட்ட வகுப்பு மற்றும் குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பைச் சார்ந்த மாணவ, மாணவியர்.

| | மதுரை மாவட்ட அரிசன நல அலுவலர். | மதுரை மாவட்ட சிறப்பு உதவி ஆட்சியர் (கள்ளர் சீரமைப்பு). |
|---|---|---|
| பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை. | 15,179 | 1,902 |
| ஒப்பளிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை. | 11,250 | 1,353 |
| தள்ளுபடி செய்யப்பட்டவை | 295 | 4 |
| திருப்பி அனுப்பப்பட்டவை | 1,321 | 189 |
| நிலுவையில் உள்ள மேல் இடைநிலைக் கல்வி விண்ணப்பங்கள். | 2,313 | 356 |

எனவே இதில் தவிர்க்கக்கூடிய தாமதம் ஏதும் ஏற்படவில்லை எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

3. இவ்வாண்டு முதல் புதிதாகத் துவக்கப்பட்டுள்ள மேல் இடைநிலைக் கல்வி பயிலும், மாணவ, மாணவியர்க்கு இந்திய அரசு படிப்புதவித் தொகை விதி முறைகளின் கீழ் படிப்புதவித்தொகை புதுமுக வகுப்பு மாணவர்க்கு வழங்கும் விகிதத்தில் வழங்க இந்திய அரசிடமிருந்து கோரப்பட்ட இசைவு அண்மையில்தான் கிடைக்கப்பெற்றது. இது பரிசீலனையில் உள்ளது. விரைவில் ஆணைகள் பிறப்பிக்கப்படும்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) பிரதம நிலவள வங்கிகளிலுள்ள செயலர்களுக்கு மட்டும் பொதுப்பணி அமைப்பு ஒன்றை (State Cadre) ஏற்படுத்துவதற்கான ஆணையை அரசு வெளியிட்டுள்ளது.

(இ) மற்றும் (ஈ) தனித்தியங்கும் திறனற்ற நிலவள வங்கிகளைத் தனித்தியங்கும் திறனுள்ள அண்டைய நிலவள வங்கிகளுடன் இணைப்பது பற்றிய ஆணைகளை அரசு வெளியிட்டுள்ளது. இதன்படி, இராமநாதபுரம் மாவட்டத்தில் மூன்று நிலவள வங்கிகள் அண்டைய நிலவள வங்கிகளுடன் இணைக்கப்படலாம்.

திரு. வி. ஆர். பெரியண்ணன் : தலைவர் அவர்களே, நிலவள வங்கிகள் வட்டத்திற்கு ஒன்று என்று இருந்தன. விவசாயிகள் அந்த வங்கிகளோடு தொடர்பு கொள்ளுவதில் சிரமம் இருக்கிறது என்ற காரணத்தால், ஒன்றியத்திற்கு ஒரு வங்கி என்று பிறகு அமைக்கப்பட்டது. இலாபகரமாக இல்லாததால், பக்கத்திலே உள்ள வங்கியோடு இணைப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். இதனால் விவசாயிகள் மீண்டும் அதிகத் தொலைவிற்குச் சென்று வர வேண்டிய நிலை ஏற்பட்டால், காலதாமதம் ஆகும். ஆகவே இப்போது இருக்கிற முறையை அப்படியே வைத்துக்கொண்டு, விவசாயிகளுக்குச் சௌகரியப்படுகிற அளவிலே வேறு ஏதாவது முறையிலே இந்த வங்கிகளை நடத்த அரசாங்கம் யோசனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : நிலவள வங்கிகள், இந்திய ரிசர்வ் வங்கியினுடைய பரிந்துரையின்படி, நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. திரு. கே. மாதவதாஸ் என்பவருடைய தலைமையில் சமீபத்தில் கூடிய குழு இதற்கான முறைகளை வகுத்திருக்கிறது. ஒரு நிலவள வங்கி தனித்து இயங்க வேண்டுமென்றால், கீழ்க்கண்ட மூன்று தகுதிகளைக் கொண்டதாக இருக்க வேண்டும்.

(1) நிலவள வங்கி வசூலிக்கும் வட்டியின் அளவு, அந்த வங்கிக்குத் தேவையான தகுதியுடைய பணியாளர்களை நியமிக்கப் போதுமானதாக இருக்க வேண்டும்.

(2) ஒரு வங்கி தனித்து இயங்கும் திறனுடையதாக இருக்க வேண்டுமென்றால், குறைந்தபட்சம் 35 இலட்சம் ரூபாய் கடன் நிலுவை உடையதாக இருக்க வேண்டும்.



(3) ஒரு வங்கி தனித்து இயங்க வேண்டுமென்றால், அந்த வங்கி தற்சமயம் 35 இலட்சம் ரூபாய் அளவுக்குத் தொழில் இல்லாவிடினும் மூன்று ஆண்டுக் காலத்திலே அந்த அளவுக்குத் தொழிலை ஈனும் திறன் உடையதாக இருக்க வேண்டும்.

இந்த மூன்று அளவுகோலை அடிப்படையாகக் கொண்டுதான் நிர்ணயிக்கப்படுகிறது. அப்படித் திறன் இல்லாத நிலவள வங்கிகளையெல்லாம் மற்ற வங்கிகளுடன் இணைக்கிற முயற்சியிலே இந்த அரசு ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது.

*Co-operation Loan Dues.*

* 172 *Q.*—THIRU ARCOT N. VEERASAMI (on behalf of THIRU V. THANGAPANDIAN): Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) the number of persons against whom distraint proceedings were initiated for Co-operative Loan Dues in Aruppukkottai taluk, Ramanathapuram district, during October, November and December 1978; and

(*b*) the amount of loan dues in the said taluk collected by the Ramanathapuram Central Co-operative Bank during these three months?

கூட்டுறவு கடன் பாக்கி

திரு. ஆற்காடு நா. வீராசாமி (திரு. வே. தங்கப்பாண்டியன் சார்பில்) : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், அருப்புக்கோட்டை தாலுக்காவில் கூட்டுறவு கடன் பாக்கிக்காக 1978 ஆம் ஆண்டு, அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களில் எத்தனை பேர் மீது ஜப்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன ?

(இ) இந்த மூன்று மாதங்களில், அந்த தாலுக்காவில் இராமநாதபுரம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிக்கு வசூலான கடன் பாக்கிப் பணம் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) ஒன்பது.

(இ) ரூபாய் 13.72 இலட்சம்.

The Hon. THIRU K. NARAYANASWAMY : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

THIRU E. S. VENKATESAN: Sir, the Jail Reforms Committee consisting of experts in prison administration and criminal justice, in their report on Probation given in 1950, on page 57 have expressly recommended that the service should be entirely separated from the Jail Department and constituted into an independent department. Again, reiterating their recommendation made in 1963, the Committee on Estimates of the Tamil Nadu Legislative Assembly, has reported in 1974-75 that the Probation branch may be made a separate department and placed under a Director. In view of this, will the Hon. Minister consider the feasibility of separating this department from the Jail Department?

THE HON. THIRU K. NARAYANASWAMY : This matter has been referred to the Prison Reforms Commission headed by Thiru R. L. Narasimhan, former Chief Justice of Patna High Court. The Government are awaiting the views of the Commission.

THIRU E. S. VENKATESAN : Sir, in the neighbouring State of Kerala, this branch of Probation has been separated from the Jail Department and the Chief Probation Superintendent has been designated as Joint Director of Social Welfare. In view of this, will the Government consider the desirability of adding this Probation Department to the Social Welfare Department?

The Hon. THIRU K. NARAYANASWAMY: The Government thank the hon. Member for the enlightening information. The points which have been stressed will be considered duly.

*டாக்டர் இரா. சனார்த்தனம் : சிறைச்சாலையில் இருப்பவர்களுக்கு நன்னடத்தையைப் போதிக்க, திருக்குறளைச் சொல்லித் தருவதற்கு ஆசிரியர்களை நியமிக்கும் உத்தேசம் உண்டா ?*

THE HON. THIRU K. NARAYANASWAMY : This does not arise from the main question.

## Hunger-Strike by Prisoners.

* 173. *Q.*—THIRU ARCOT N. VEERASAMI (on behalf of THIRU V. THANGAPANDIAN): Will the Hon. the Minister for Law be pleased to state—

(a) whether it is a fact that all the Prisoners of Coimbatore Jail went on hunger-strike during the 3rd week of June 1977;

(*b*) if so, the nature of their demands; and

(*c*) the action taken thereon by the Government?

### கைதிகள் உண்ணாவிரதம்

*திரு. ஆற்காடு நா. வீராசாமி (திரு. வே. தங்கப்பாண்டியன் சார்பில்): மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—*

*(அ) கோயம்புத்தூர் சிறையில் உள்ள கைதிகள் அனைவரும் 1977 ஜூன் மாதம் 3-வது வாரத்தில் உண்ணாவிரதம் இருந்தார்கள் என்பது உண்மையா?*

*(இ) ஆம் எனில், அவர்களது கோரிக்கைகள் யாவை?*

*(உ) அவைகளின்மீது அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன?*

THE HON. THIRU K. NARAYANASWAMY: (a), (b) and (c): A statement @ is placed on the table of the House.

*திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்திருக்கிற விவரக் குறிப்பில் இரண்டாவது டிமாண்டில்,*

"The matter is under correspondence with the Government of India" *என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. மத்திய அரசாங்கம் இதுபற்றி மாநில அரசுக்கு ஏதாவது பதில் அனுப்பியிருக்கிறதா? இல்லையென்றால், இது ஆயுள் கைதிகளுடைய இன்றியமையாத கோரிக்கை என்பதால், உடனடியாக மத்திய அரசாங்கம் நல்ல முடிவு எடுக்க வேண்டும் என்று இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்தை வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.*

THE HON. THIRU K. NARAYANASWAMY: The matter is still under correspondence with the Government of India. After knowing the contents of the reply which we are expecting, necessary steps will be taken appropriately to press this demand.

@ 93-99 ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



*திரு. ஆற்காடு நா. வீராசாமி: அதைப் போலவே ஏழாவது கோரிக்கையில், "சிறைச்சாலையிலே இருக்கிற கைதிகள் தங்களுடைய பிரச்சினைகளை மேலதிகாரிகளிடத்திலே சொல்லும்போது, அவர்களுக்கு எந்தவிதமான தண்டனைகளும் வழங்கப்படுவதில்லை" என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளித்திருக்கிறார்கள். இது அதிகாரிகள் எழுதிக் கொடுத்திருக்கிற பதிலே தவிர, நடைமுறையிலே அப்படியில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். சிறைச்சாலையில் இருக்கிற குறைபாடுகளை மேலதிகாரிகளிடத்திலே முறையிடுகிற கைதிகளைத் தனியாக அழைத்துச் சென்று பயங்கரமான தண்டனையை வழங்குகிறார்கள். மிசா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட நாங்களே கூட அப்படி பாதிக்கப்பட்டிருக்கிறோம். அப்படிப்பட்ட குறைகள் இல்லையென்று பதிலில் சொன்னாலும், நடைமுறையிலே குறைகள் இருக்கிற காரணத்தால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தக் கோரிக்கையை மறுபரிசீலனை செய்து அதற்குத் தகுந்த நடவடிக்கையை எடுக்க முன்வருவார்களா?*

THE HON. THIRU K. NARAYANASWAMY: The Government will invite some good suggestions from the hon. Member for redressing such grievances.

## Probation Service.

* 174 *Q.*—THIRU E. S. VENKATESAN: Will the Hon. the Minister for Law be pleased to state:

(*a*) whether there is any proposal to separate the Probation Service from the Jail Department and create an independent department or a separate Directorate under the Social Welfare Department; and

(*b*) if so, the stage at which the matter now stands?

### குற்றவாளிகள் நன்னடத்தைக் கண்காணிப்புப் பணி.

*திரு. ஈ. எஸ். வெங்கடேசன்: மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—*

*(அ) குற்றவாளிகள் நன்னடத்தைக் கண்காணிப்புப் பணியைச் சிறைச் சாலைத் துறையிலிருந்து பிரித்து தனித்துறையாக அல்லது சமூகநலத் துறையின் கீழ் தனியானதொரு இயக்குநர் அலுவலகமாக அமைப்பதற்கான செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?*

*(இ) ஆம் எனில், இது தற்போது எந்நிலையில் உள்ளது?*

*A.L.V. High School, Cumbum, Pudupatti.*

*175. *Q.*—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state :

(*a*) whether it is a fact that representation has been made by the Building Committee of K.L.S.S. Government High School, Cumbum, Pudukottai, about the mismanagement of A.L.V. High School, Cumbum Pudupatti, Madurai district: and

(*b*) if so, the action taken thereon ?

**கம்பம் புதுப்பட்டி ஏ.எல்.வி. உயர்நிலைப் பள்ளி.**

திரு. பி. ஆர். தாமஸ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கம்பம் புதுப்பட்டி, கே.எல்.எஸ்.எஸ். அரசு உயர் நிலைப் பள்ளியின் கட்டிடக்குழு, மதுரை மாவட்டம், கம்பம், புதுப்பட்டி, ஏ.எல்.வி. உயர்நிலைப் பள்ளியின் முறைகேடான நிர்வாகத்தைப்பற்றி, முறையீடு செய்துள்ளது என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(இ) பள்ளிகள் இயங்குவது குறித்து அரசு பிறப்பித்த ஆணையினை எதிர்த்து முதலில் ஏ.எல்.வி. பள்ளி நிர்வாகத்தினரும் பின்னர் அரசு பள்ளி கட்டிடக்குழுவின் தலைவரும் மாற்றி மாற்றி உயர்நீதி மன்றத்தில் [illegible]க்காடி வருகின்றனர். அரசுப் பள்ளிக் கட்டிடக் குழுவின் தலைவர் [illegible]ர்ந்த உரிமையியல் வழக்கு சென்னை உயர்நீதி மன்றத்தில் நடந்து வருகிறது. உயர்நீதி மன்ற ஆணை எதிர்பார்க்கப்படுகிறது.

*Higher Secondary Schools.*

*176 *Q.*—THIRU K. RAMAMOORTHI and THIRU K. MEENAKSHISUNDARAM: Will the Hon. the Minister for Education be pleased to state :

(*a*) the number of students expected to have their education in (i) English Medium and (ii) Tamil Medium in the High Schools in Tamil Nadu where the Higher Secondary Course (Plus 2 Course) has been introduced in the academic year 1978-79;

[1979 மார்ச் 13

(b) the number of Higher Secondary Schools, which have English Medium Classes;

(c) whether the Government have fixed any fees to be collected from students of such Schools;

(d) if so, the details thereof;

(e) whether the Government are aware of the collection of donations by such schools; and

(f) if so, the action proposed to be taken thereon?

### உயர் இடைநிலைப் பள்ளிகள்.

**திரு. க. இராமமூர்த்தி மற்றும் திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாட்டில், 1978-79 ஆம் கல்வி ஆண்டில் உயர் இடைநிலைப் பள்ளிப் பாடமுறை (+) 2 பாடமுறை) புகுத்தப்பட்ட உயர் நிலைப் பள்ளிகளில், (i)— ஆங்கிலப் பயிற்று மொழியிலும், (i) தமிழ் பயிற்று மொழியிலும் கல்வி பயில்வதற்கு எதிர்பார்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

(இ) ஆங்கிலப் பயிற்று மொழி வகுப்புகள் கொண்ட உயர் இடைநிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை எவ்வளவு ?

(உ) அத்தகைய பள்ளிகளில் படிக்கும் மாணவர்களிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டிய கட்டணம் எவையேனும் அரசு நிர்ணயித்துள்ளதா ?

(எ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

(ஐ) அப்பள்ளிகள் நன்கொடை வசூலிப்பதை அரசு அறியுமா ?

(ஒ) ஆமெனில், அது குறித்து எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) (1) ஆங்கிலத்தைப் பயிற்று மொழியாகக் கொண்டு, 23,358 மாணவர்களும் தமிழைப் பயிற்றுமொழியாகக் கொண்டு 88,346 மாணவர்களும் படித்து வருகிறார்கள்.

(இ) 418.

(உ) மற்றும் (எ) ஆம், கல்வி ஆண்டில் மாதம் ரூபாய் 20 விதம் 10 மாதங்களுக்கு ஆங்கிலத்தைப் பயிற்றுமொழியாகக் கொண்டு படிக்கும் மாணவன் கற்பிப்புக் கட்டணம் கட்டவேண்டும்.



[1979 மார்ச் 13

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மெட்ரிகுலேஷன் பள்ளிகளுக்கு, அவைகளை நடத்துவதற்கு என்று நாம் எந்தப் பணமும் தருவதில்லை. என்றாலும் அவற்றை அரசினுடைய கட்டுப்பாட்டில் கொண்டுவருவதற்கான வழிமுறைகள் இப்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** தமிழ் பயிற்று மொழி வகுப்புகளை அதிகப்படுத்தாத தனியார் பள்ளிகளின் அங்கீகாரத்தைத் தடுப்பதற்கும், சரியாக ஆசிரியர்களுக்குச் சம்பளம் தராமல் ஏமாற்றும் பள்ளிகளைக் கட்டுப்படுத்துவதற்கும், அது போன்று நடந்து வருகின்ற பள்ளிகளை அங்கேயுள்ள ஆசிரியர்களே நடத்த முன்வந்தால், அவர்களுக்கு அரசு உதவி செய்யுமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அது குறிப்பிட்ட பள்ளிகளைப் பொறுத்து நாம் எடுத்துக்கொள்ளவேண்டிய நடவடிக்கையாகும். தமிழைப் பயிற்றுமொழியாக எடுத்துக்கொள்வது என்பதுபற்றி நாம் கட்டாயப்படுத்த முடியாது. பெரும்பான்மையான மாணவர்கள் தமிழிலேயே படிக்க விரும்புவதால், நாளடைவில் அது சரியாகிவிடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பி. ஆர். தாமஸ் :** மேல்நிலை வகுப்பிலே ஆங்கில மொழியைப் பயிற்று மொழியாக எடுத்து படிக்கக்கூடியவர்களில் ஹரிஜன மாணவர்களுக்கு இந்தக் கட்டணத்திலிருந்து விலக்களிக்கப்பட்டிருக்கிறது. வருவாய் உச்ச வரம்பு இல்லாது சலுகை வழங்கப்படுகிறது. அதுபோலவே ஆங்கிலத்தைப் பயிற்றுமொழியாகக் கொண்டிருக்கும் பின் தங்கிய மாணவர்களுக்கும் வருமான வரம்பு வைத்து கட்டணம் வசூலிக்கப்படுகிறது. ஹரிஜன மாணவர்களுக்குள்ள சலுகையைப் பின்தங்கிய மாணவர்களுக்கும் அரசு அளிக்குமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இந்தச் சலுகைகளை எல்லாம் கொடுப்பது, பிற்பட்டோர் நலத் துறை, ஹரிஜன நலத் துறை ஆகும்.

**திரு. சி. சா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாணவர்கள் தமிழிலே படிக்க வேண்டும் என்பது அரசினுடைய கொள்கை என்று தெரிவித்தார்கள். அரசினுடைய கொள்கை அதுவாக இருக்கும்போது, ஏராளமான மாணவர்கள் ஆங்கில பயிற்று மொழியிலே படிப்பதற்கு வாய்ப்பு ஏற்படுத்திக்கொண்டிருந்தால், தமிழ் பயிற்று மொழியாக வேண்டும் என்ற திட்டத்தில் ஆர்வம் குறையாதா என்று கேட்டுக்கொள்கிறேன்.

(ஐ) மற்றும் (ஓ) தலைமையாசிரியரோ அல்லது ஆசிரியரோ கட்டாய நன்கொடை வசூல் செய்யத் தடை விதிக்கப்பட்டுள்ளது. மேலும் பள்ளியில் சேரும் மாணவர்களிடம் நன்கொடை வசூல் செய்யக்கூடாது என்று தலைமையாசிரியர்களுக்குப் பள்ளிக் கல்வி இயக்குநர் தனியான சுற்றறிக்கையும் அனுப்பியுள்ளார். ஏதாவது குறிப்பிட்ட பள்ளி மீது முறையீடு வந்தால் இதனை விதிமுறைகள் படி பரிசீலனை செய்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

(பிற்பகல் 4-10)

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்கின்ற வகையிலே தமிழைப் பரப்புவதற்கு முனைந்திருக்கின்ற இந்த அரசு தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு படிக்கின்ற மாணவர்களுக்கு வேலை வாய்ப்பிலே முன்னுரிமை உண்டு என்ற வகையில் சில சலுகைகளைத் தந்தால், அந்த நோக்கம் நிறைவேறுமே. அந்த ஆலோசனையை அரசு ஏற்குமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** ஆங்கிலத்திலே படிப்பதைவிட தமிழிலே படிப்பது எளிது என்பதை ஏற்றுக் கொள்வோமானால், தமிழில் நன்றாகப் படிப்பவர்களுக்கு முன்னுரிமை, வேலைவாய்ப்பு என்பது போன்ற பல்வேறு சலுகைகளுக்கு தேவையில்லாமல் போய்விடும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பி. ஆர். தாமஸ் :** ஏற்கெனவே 9-வது வகுப்பு வரையிலே ஆங்கிலப் பயிற்று மொழியிலே பாடம் கற்று வந்தவர்கள் எவ்வித கட்டணமும் கட்டவில்லை ; பத்தாவது வகுப்பு வரை படித்தவர்கள், 11-வது வகுப்பிலே, பிளஸ் 2 வகுப்பில் சேருபவர்கள் 20 ரூபாய் கட்டவேண்டியிருக்கிறது. இவ்வாறு ஆங்கிலத்திலே 10-வது வகுப்பு வரை படித்தவர்களுக்கு அரசு கட்டணம் கட்டுவதிலிருந்து விலக்களிக்குமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அப்படிப்பட்ட உத்தேசம் இல்லை. தமிழிலே படிக்க வேண்டும் என்பது அரசினுடைய கொள்கை. அவர்கள் கற்பிப்புப் பணம் கட்ட வேண்டும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** சென்னையிலே உள்ள ஒரு மெட்ரிகுலேஷன் பள்ளியிலே கட்டணம் கட்டவில்லை என்பதற்காக 200 ரூபாய் அபராதம் வசூலிப்பதாகத் தகவல் வந்துள்ளது. அந்தப் பள்ளி அரசினுடைய கட்டுப் பாட்டின்கீழ், அரசினுடைய சட்டதிட்டங்களின் கீழ் கொண்டு வரப்படுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.





**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** நாம் கட்டாயப்படுத்துவது இல்லை என்று நான் சொன்னேன். அதற்கு நேர்மாறாக ஆங்கிலத்தைப் பயிற்று மொழியாகக் கொண்டு படிப்பவர்களுக்குக் கட்டணம் விதித்து, அவர்களுடைய ஆர்வம் குறைவதற்கு வழி இருக்கிறது. தமிழைப் பயிற்று மொழியாக எடுத்துப் படிப்பவர்களுக்கு அதிக வேலை வாய்ப்புகள் கிடைக்கின்றன என்று அவர்களுக்குத் தெரிகின்ற நோக்கில், நிச்சயமாகத் தமிழில் படிப்பவர்கள் எண்ணிக்கை இன்னும் அதிகமாகும்.

**திரு. க. அறிவழகன் :** கிராமப்புறங்களில் இருக்கின்ற மேல் நிலைப் பள்ளிகளில் தமிழைப் பயிற்று மொழியாக எடுத்துக்கொண்டிருக்கின்ற மாணவர்கள் மிகவும் ஏழ்மையான நிலையில் இருப்பதால், அவர்களுக்கு தமிழ்ப் பயிற்று மொழியில் உள்ள புத்தகங்களை இலவசமாக அரசு அளிக்குமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அப்படிப்பட்ட எண்ணம் இல்லை.

**திரு. சி. இராமலிங்கம் :** சென்னை, செங்கற்பட்டு மாவட்டத்தில் தெலுங்கு மொழியில் போதிக்கின்ற உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. அவற்றிற்குத் தேவைப்பட்ட புத்தகங்கள் தெலுங்கிலே கிடைப்பதில்லை. அதுபோன்ற புத்தகங்கள் கிடைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இது குறித்து அரசு ஆவன செய்யும்.

THIRU A. R. DAMODARAN: Sir, in view of the fact that students admitted to English medium are formed to pay a fee of Rs. 20, may I know whether the Government will permit the starting of more English medium sections in private schools, if they apply for the said permission?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இருபது ரூபாய் கட்டணம் வாங்குகிறார்கள். பல பள்ளிகளிலே, குறிப்பாக மெட்ரிக்குலேஷன், ஆங்கிலோ-இந்தியன் பள்ளிகளிலே 11-வது வகுப்பு வரை நடத்த அனுமதி வழங்கும் காரணம், அவர்கள் மாணவர்களிடம் சம்பளம் வாங்கிக்கொள்வது. அரசினிட மிருந்து அவர்கள் எந்தப் பணத்தையும் எதிர்பார்ப்பதில்லை.

[1979 மார்ச் 13

*Vivekananda Elementary School, Therikudiyiruppu.*

*177. Q.—THIRU ARCOT N. VEERASAMI (on behalf of THIRU M. SANKARALINGAM): Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether the Government have received any representation from the public, requesting the merger of the Vivekananda Elementary School in Therikudiyiruppu, Tuticorin in Educational district, Tirunelveli district, with the Panchayat Union Middle School of the same village;

(b) if so, the action taken thereon; and

(c) whether any action has been taken to absorb all the teachers of the Vivekananda Elementary School in the Panchayat Union Middle School?

தேரிக்குடியிருப்பு விவேகானந்தா துவக்கப்பள்ளி.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி (திரு. ம. சங்கரலிங்கம் சார்பில்) :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தூத்துக்குடி கல்வி மாவட்டத்தில் தேரிக்குடியிருப்பில் உள்ள விவேகானந்தா துவக்கப்பள்ளியினை, அதே ஊரிலிருக்கும் ஒன்றிய நடுநிலைப் பள்ளியோடு இணைக்கவேண்டுமென, பொது மக்களிடமிருந்து முறையீடு ஏதும் அரசுக்கு வந்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன்மீது எடுத்த நடவடிக்கை யாது?

(உ) விவேகானந்தா துவக்கப்பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்கள் அனைவரையும் ஒன்றியப் பள்ளி ஆசிரியர்களாக நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) ஆம்.

(இ) இப்பள்ளி மாணவர்கள், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் 1977-78 முதல் 1-5 வகுப்புகள் துவக்கப்பட்டு சேர்த்துக் கொள்ளப்பட்டு விட்டார்கள்.

(உ) இப்பள்ளி அங்கீகாரம் இல்லாமல் துவக்கப்பட்டதால் அங்கிருந்த ஆசிரியர்களை ஒன்றியப் பள்ளி ஆசிரியர்களாக நியமிக்க நியதி இல்லை.



1979 மார்ச் 13]

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே படிக்கின்ற மாணவர்களை மட்டும் ஒன்றியப் பள்ளிகளிலே சேர்த்துவிடுவதாகச் சொன்னார்கள். ஆனால் இந்தப் பள்ளி தொடங்கப்பட்டு, அதிலே நீண்ட காலமாகப் பணியாற்றிக் கொண்டிருந்த ஆசிரியர்கள், பிரைமரி பள்ளி இன்றையதினம் வேலையில்லாமல் இருக்கிறார்கள். ஒன்றியப் பள்ளிகளில் இனுடைய மாணவர்கள் ஒன்றியப் பள்ளியிலே சேர்க்கப்படுவதனாலே ஆசிரியர்களை நியமிக்கும்போது, இப்போது இல்லாவிட்டாலும் எதிர் காலத்திலே வாய்ப்புகள் வரும்போதாவது, அவர்களுக்கு முன்னுரிமை கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அந்த பள்ளியைத் தொடங்கியது 7—12—1977 அன்று. இப்படி அனுமதியில்லாமல் நடக்கின்ற பள்ளிகளில் பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்குப் பாதுகாப்புத் தருகின்ற ஏற்பாடு அரசிடம் இல்லை.

**திரு. பி. ஆர். தாமஸ் :** அந்தப் பள்ளியில் பணியாற்றுகின்ற ஆசிரியர்கள் பயிற்சி பெற்ற ஆசிரியர்களாக இருந்தால், மாணவர்களுடைய எண்ணிக்கை விகிதங்களிலே பணியிடங்கள் வழங்கும்போது, அல்லது மாணவர்களை அந்த மாற்றுப்பள்ளிக்கு அனுப்பும்போது, அவர்களை அந்தப் பணியிடங்களில் அமர்த்தலாம். இந்த முறையை அரசு பின்பற்றுமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அனுமதி பெற்ற அனைத்துப் பள்ளிகளுக்கும் அரசு நிதியுதவிகளைச் செய்கிறது. அந்தப் பள்ளிகளில் இருக்கும் ஆசிரியர்களை மற்ற பள்ளிகளுக்கு மாற்றி பணிப்பாதுகாப்பைத் தருகிறோம். இந்தப் பள்ளி அனுமதி பெறாமல் தொடங்கப்பட்டதாகும். இன்றைக்கு அப்படித் தர ஆரம்பித்தால், 10 ஆயிரம் ஆசிரியர்களுக்குக் கொடுக்க வேண்டியதாகிவிடும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தனியார் பள்ளிகளை ஒன்றியப் பள்ளியாக மாற்றுவது சம்பந்தமாக அமைச்சர் அவர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அரசுப் பள்ளிகளாக மாநிலத்தில் எங்கேனும் ஒன்றியப் பள்ளிகளை மாற்ற உத்தேசித்திருக்கிறதா? தற்போது அதனுடைய நிலைமை என்ன என்பதை அறிந்துகொள்ள முடியுமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அதுபற்றிய விவரம் என்னிடம் இல்லை. தனிக் கேள்வி போட்டால், பதில் சொல்லலாம்.

[1979 மார்ச் 13

## Private Schools.

* 178. *Q.*—THIRU K. MEENAKSHISUNDARAM : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) the number of Pirvate Schools closed by the managements in this State during the academic year 1978-79; and

(*b*) the steps taken by the Government to provide employment opportunities in other Schools, for the teachers who have lost their employment due to the closure of those Schools?

### தனியார் பள்ளிகள்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1978-79 ஆம் கல்வியாண்டில் நிர்வாகத்தினரால் மூடப்பட்ட தனியார் பள்ளிகள் மாநிலத்தில் எத்தனை ?

(இ) அப்பள்ளிகள் மூடப்பட்டதனால் வேலையிழந்த ஆசிரியர்களுக்கு, வேறு பள்ளிகளில் வேலைவாய்ப்பு தர அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) ஒன்று, ஜெயலட்சுமி விலாஸ் உதவிபெறும் நடுநிலைப்பள்ளி, மன்னார்குடி, தஞ்சை மாவட்டம்.

(இ) மூடப்பட்ட பள்ளிகளில் 4 இடைநிலை ஆசிரியர்கள், 15 இடைநிலை ஆசிரியர்கள், 1 கைத்தொழிலாசிரியர், 1 தமிழாசிரியர் ஆகிய 21 ஆசிரியர்களும் வேறு பள்ளிகளில் நியமிக்கப்பட்டுவிட்டனர்.

(பிற்பகல் 4-20)

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மன்னார்குடி ஜெயலட்சுமி விலாஸ் நடுநிலைப் பள்ளியிலிருந்து வேலை நீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்களை வெவ்வேறு பள்ளிகளில், எங்களுடைய வேண்டுகோளுக்கிணங்க, நியமித்திருக்கிறார்கள். அதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். திருவாரூரிலே விஜயபுரம் தியாகராயா நடுநிலைப் பள்ளியை மூடப்போவதாக அறிவிப்பு தந்திருக்கிறார்கள். அந்த அறிவிப்பு அரசுக்கு வந்திருக்கிறதா? அவ்வப்போது இப்படிப் பள்ளிகள் மூடப்படும்போது, எந்தவிதமான நடவடிக்கை எடுத்து, மாணவர்களும், ஆசிரியர்களும் வாழ அரசு வகை செய்யும் என்பதை அறிய விரும்புகிறேன்.



1979 மார்ச் 13]

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிட்ட பள்ளியைப்பற்றிய விவரமில்லை. என்றாலும் எங்களுடைய அனுமதி பெற்று நடந்துகொண்டிருக்கும் பள்ளிக்கூடம் மூடப்படும்போது, நிச்சயமாக ஆசிரியர்களுக்குப் பாதுகாப்புத் தரும் நடவடிக்கை எடுக்கப்படும். மாணவர்கள் வேறு பள்ளிகளில் தாராளமாகச் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

## Promotion for M.Sc., Engineers.

* 179. *Q.*—THIRU C. R LAKSHMIKANDHAN: Will the Hon. the Minister for Transport be pleased to state:

(a) whether the Government have received any representation from the concerned Union to the effect that in giving promotion, certain percentage should be reserved to the Engineers with M.Sc., (Engineering) qualification ; and

(b) if so, the action taken thereon?

### எம்.எஸ்ஸி. பொறியாளர்களுக்குப் பதவி உயர்வு.

**திரு. சி.ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பொறியியல் எம்.எஸ்ஸி. பட்டம் பெற்ற பொறியாளர்களுக்கு பதவி உயர்வில் குறிப்பிட்ட சதவிகிதம் ஒதுக்கப்பட வேண்டுமென்று சம்பந்தப்பட்ட சங்கத்திடமிருந்து கோரிக்கை எதும் அரசுக்கு வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தற்போது பதவி உயர்வு டிப்ளமோ, படித்த இன்ஜினியர்களுக்கு ஒரு பங்கும், பி.ஈ., படித்த இன்ஜினியர்களுக்கு 3 பங்கும் என்ற அளவிலே கொடுக்கப்படுகிறது. அவர்களைவிட அதிகமான தகுதி பெற்ற, எம்.ஈ., எம்.எஸ்சி. (இன்ஜினியரிங்) படித்த பொறியாளர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு, தகுதி திறமைக்கு முன்னுரிமை கொடுக்கும் இந்த அரசு, அவர்களுக்குப் பதவி உயர்வு கொடுக்கும்போது ஒரு பங்கு ஒதுக்குவதுபற்றிப் பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** அத்தகையவர்களை ஊக்குவிக்கும் நோக்கத்தான் மூன் ஊதிய உயர்வாக 3 ஊதிய உயர்வுகள் அளிக்கப்படுகின்றன.

[1979 மார்ச் 13

## Conversion of Tirunelveli-Madras Railway Line into Broad Gauge.

* 180 Q.—THIRU ARCOT N. VEERASAMI (on behalf of THIRU M. SANKARALINGAM): Will the Hon. the Minister for Transport be pleased to state:

(a) whether the State Government have requested the Government of India, to take necessary action to convert the Tirunelveli-Madras Railway Line into broad gauge, as train services are to be operated in Kanyakumari-Tirunelveli line during 1980; and

(b) if so, the reply of the Government of India thereto?

## திருநெல்வேலி—சென்னை இருப்புப் பாதையை அகலப் பாதையாக மாற்றுதல்.

திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) 1980-ல் கன்னியாகுமரி—திருநெல்வேலி இருப்புப் பாதையில் போக்குவரத்து செயல்பட இருப்பதையொட்டி, திருநெல்வேலி—சென்னை இருப்புப் பாதையை அகலப்பாதையாக (Broad Gauge) மாற்ற போதிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மத்திய அரசை மாநில அரசு கேட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், அதற்கு மத்திய அரசு அளித்த பதில் என்ன ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மேல்வைத் தலைவரவர்களே, (அ) தூத்துக்குடி, திருநெல்வேலி, மதுரை ஆகியவற்றை சென்னையுடன் அகல இருப்புப் பாதையிலுள்ள மற்ற நிலையங்களுடன் இணைப்பதற்காக, தற்போதுள்ள அகல இருப்புப் பாதைத் தொகுதியில் உள்ள கரூருடன் அகல இருப்புப் பாதை மூலம் இந்த இடங்களை இணைக்க இந்த அரசு மத்திய அரசுக்குக் கடிதம் எழுதியுள்ளது. இச்செயற் குறிப்பு, தற்போதுள்ள இருப்புப் பாதைகளைத் தக்கவாறு மாற்றவும், கரூரிலிருந்து திண்டுக்கல் வரையில் புதிய அகல இருப்புப் பாதை ஒன்றைப் போடுவதற்கும் சம்பந்தப்பட்டதாகும்.

(இ) அந்த இருப்புப் பாதை ஆதாயந் தரத்தக்கதாக இராது என்று முன்னர் செய்யப்பட்ட ஆய்வு குறிப்பிட்டுள்ளதால், செயற்குறிப்பின் பொருளாதார சாத்தியக் கூறினை அவர்கள் மீண்டும் மதிப்பிட வேண்டுமென உத்திரவிடப்பட்டுள்ளதென்று தற்போதுகூட ரயில்வே நிதிநிலை அறிக்கையிலே மத்திய அரசு அறிவித்திருக்கிறது.



1979 மார்ச் 13]

திரு. ஆற்காடு நா. வீராசாமி : மத்திய அரசு ரயில் பாதைகளை அகலப்படுத்துவதாக இருந்தாலும் சரி, புதிய ரயில் பாதைகள் வருவதாக இருந்தாலும் சரி, பொதுவாகவே தமிழகத்தைப் புறக்கணித்து வருகிறது. அவர்கள் பரிசீலனை செய்வோமென்று கூறினாலும், காலம் கடத்துவதாக இருக்கிறது. இன்றைய தினம் அதிவேகமாக ஓடும் ரயில்கள் அகில இந்தியாவில் இருக்கும் நிலையில், குறிப்பாக சென்னையிலிருந்து மதுரை, திருநெல்வேலி போன்ற இடங்களுக்கு இப்படிப்பட்ட புதிய ரயில்கள் விடும் சூழ்நிலையில், பாதையை Broad Gauge ஆக உருவாக்க வேண்டுமென்று, இந்த அரசாங்கம் மத்திய அரசுக்கு வற்புறுத்துமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தமிழகம் மட்டுமல்ல, தற்போது மத்திய அரசு அறிவித்திருக்கிற ரயில்வே பட்ஜெட்டிலே தென்னகமே புறக்கணிக்கப்பட்டிருப்பதாக, அதைப் படித்துப் பார்த்த அளவிலே சொல்கிறேன். இது குறித்து மத்திய அரசுக்கு, தமிழக அரசு தன் உணர்வுகளை வலியுறுத்தித் தெரிவிக்குமென்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. க. அறிவழகன் : ரயில்வே துறை, தென்னக ரயில்வே பற்றி ஆய்வு நடத்தி, அதிலே பல்வழிப் பாதைகளிலே ஆதாயமில்லை என்ற கருத்தை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். அப்படி ஆதாயம் இல்லாமல் செய்யும் முறையில், திருச்சிக்கும் ஈரோட்டிற்கும் உள்ள ரயில் தொடர்பை சரியான முறையில் நடத்தாத நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே நடத்தியுள்ள ஆய்வுகள் சரியில்லை என்பதை நம்முடைய அரசு மத்திய அரசுக்கு வலியுறுத்திச் சொல்லுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மத்திய அரசின் ரயில்வே துறையின் ஆய்வு சரியானதல்ல என்று சொல்வதற்குரிய ஆதாரம் அரசிடம் தற்போதில்லை.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அண்மையில் தமிழகம் ரயில்வே துறையால் புறக்கணிக்கப்பட்டிருக்கிறதென்று குறைபட்டு, ரயில்வேயும், சர்வேயும் எப்படி இயக்குகிறதென்று திரு. ஓ. வி. அழகேசன் அவர்கள் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள்.

" If there is a will, there is a railway, if there is no will, then there is a survey "

என்று குறிப்பிட்டிருக்கிறார்கள் என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

(பிற்பகல் 4-30)

திரு. க. இராமமூர்த்தி : அகல இருப்புப் பாதையை அமைப்பதற்கு ஒரு துணையாகவும் இப்பொழுது இருக்கின்ற சங்கடங்களைப் போக்குகின்ற வகையிலும் எக்மோர் (Egmore) ரயில்வே நிலையத்தையும் சென்ட்ரல் ரெயில்வே நிலையத்தையும் இணைக்கின்ற வகையில் மீட்டர்கேஜை நீட்டிக்க முடியுமா? அதற்காக இந்த அரசு மத்திய அரசை வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : அதுபற்றிய குறிப்பு எதுவும் என்னிடம் இல்லை. தனிக் கேள்வி கேட்டால், விவரமாக பதில் தரலாம்.

THIRU G. VASANTHA PAI : To complete what the Hon. the Minister for Electricity said,

"If there is anything shady,
there is a subway".

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

2. தகவல் கோரல் உரிமைப் பிரச்சினை குறித்து.

திரு. க. இராமமூர்த்தி : தலைவரவர்களே, நான் ஒரு உரிமைப் பிரச்சினைக்கு முன்னறிவிப்பு கொடுத்திருக்கிறேன் என்பதை அவையினுடைய கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : உரிமைப் பிரச்சினை கொண்டு வருவதாக இருந்தால், ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு அப்புறம்தான் கொண்டு வரலாம். தாங்கள் என் அறைக்கு வந்தபோது, நான் இதைச் சொன்னேன். ஒரு பிரச்சினையாக மட்டும் பேசுங்கள், மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் தருவார்கள் என்று சொன்னேன்.

திரு. க. இராமமூர்த்தி : உரிமைப் பிரச்சினையாக, பின்னால் நான் கொண்டு வரத் தயாராக இருக்கிறேன். ஆனால் கூச்சப்படத்தக்க, வெட்கப்படத்தக்க சம்பவம் நடந்திருக்கிறது. மாண்புமிகு தலைவரவர்களுக்கே என்ன சம்பவம் நடந்திருக்கிறது என்பது தெரியும். எப்போது தாங்கள் அனுமதிக்கிறீர்களோ அப்போது உரிமைப் பிரச்சினை கொண்டு வருகிறேன்.





3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

விவசாயிகளுடைய மின் இணைப்புகள் துண்டிக்கப்படுவது குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் வே. தங்கப்பாண்டியன், ஆ. நல்லசிவன் ஆகியோர் ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு முன்னறிவிப்பு கொடுத்துள்ளார்கள். அது எவ்வாறு 'ஒத்தி வைப்புத் தீர்மான விதிகளுக்குட்பட்டதாகும் என்பதைச் சுருக்கமாக விளக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆ. நல்லசிவன் : தலைவரவர்களே, மின்சாரக் கட்டண பாக்கி என்று காரணம் கூறி மின் இணைப்புகள் துண்டிக்கப்படுவதைத் தொடர்ந்து தமிழ்நாட்டில் விவசாயிகள் மத்தியில் பதட்ட நிலை ஏற்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சமீபத்திலே எதிர்க் கட்சித் தலைவர்களையும் எல்லா அரசியல் கட்சித் தலைவர்களையும் கூட்டி பேச்சுவார்த்தை நடத்தினார்கள். அங்கே விவாதிக்கப்பட்ட பேச்சுவார்த்தையின் அடிப்படையில், அரசு இந்த மின் கட்டண பாக்கிகளைச் செலுத்துவதற்குச் சில சிறு சலுகைகள் அளித்து ஒரு அறிவிப்பை வெளியிட்டது. அந்த அறிவிப்பு விவசாயிகளுக்குத் திருப்தியை ஏற்படுத்தவில்லை, குறிப்பாக அரசாங்கத்துடனும் மின்சார வாரியத்துடனும் சில பிரச்சினைகளைப்பற்றிப் பேசி சுமுகமாகத் தீர்க்க வேண்டுமென்று நினைக்கிறார்கள். மீட்டர் வாடகை "பிக்சட் ரேட்"-ஆக இரண்டையும் சேர்த்து, ஒன்றாக்கி அந்த விகிதம் இன்னும் குறைவாக இருக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். கிணற்றடி லைட்டுக்கும் 12 அல்லது 14 பைசா விதம் வசூலிக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். மாதா மாதம் மின் கட்டணத்தைக் கட்டுவதற்கு பதிலாக 3 மாதத்திற்கு ஒரு முறை கட்ட அனுமதிக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். ஆக அவர்களுக்கு உள்ள மூன்று பிரச்சினைகளைப்பற்றி நான் மேலே குறிப்பிட்டுள்ளேன். இப்படிப்பட்ட பிரச்சினைகளைப்பற்றி அரசாங்கத்துடனும் மின் வாரியத்துடனும் அவர்கள் பேச வேண்டுமென்று விரும்புகிறார்கள். மேற்கொண்டு மின் இணைப்புகள் துண்டிக்கப்படாமலும், ஏற்கெனவே துண்டிக்கப்பட்ட இணைப்புகளைத் திரும்பக் கொடுக்கவும், அரசைப் பொறுத்தவரை, ஏற்பாடு செய்ய வேண்டும். விவசாயப் பிரச்சினைபற்றி ஆராய நியமிக்கப்பட்ட உச்ச மட்டக் குழுவுடன் இந்தப் பிரச்சினைகள் குறித்து மேலும் விவாதிப்பதன் மூலம் ஒரு நல்ல சுமுகமான நிலையை ஏற்படுத்த அரசு முன்வர வேண்டும். இந்த நிலையில் மின் இணைப்பு துண்டிக்கப்படுகின்ற நிலை மேலும் தமிழ்நாட்டில் மற்ற பகுதிகளிலும் நீடிக்குமோ என்ற அச்சம் விவசாயிகளிடம் ஏற்பட்டுள்ளதும், ஒரு

பதட்ட நிலை ஏற்பட்டுள்ளதும் விரும்பத்தக்கதல்ல என்கிற காரணத்தால், இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இதைப்பற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் குறிப்பிட்டது போல், விவசாயிகள் இன்னும் தங்களுடைய சில கோரிக்கைகள் அரசாங்கத்தால் நிறைவேற்றப்படவில்லை என்று சொல்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சரவர்களும், மின்சாரத் துறை அமைச்சரவர்களும் கடந்த வாரம் அனைத்துக் கட்சிக்காரர்களையும் கூட்டி பேச்சு வார்த்தை நடத்தி, ஒருசில முடிவுகளை அறிவித்தும் கூட அவர்களுக்கு அது திருப்தியை அளிக்கவில்லை. அவ்வாறு அரசு அறிவித்த பிறகும்கூட, மின்சார இணைப்பு துண்டிப்புச் சம்பவங்கள் நடைபெறுகின்றன என்றும் அரசாங்க அறிவிப்புக்கு மாறாக இலாக்கா செயல்படுகிறது என்றும் சொல்கிறார்கள். அந்தக் காரணத்தால், திரு. நாராயணசாமி நாயுடுவின் தலைமையிலுள்ள விவசாய சங்கம் ஆத்திரத்தில் இருக்கிறது. அவர்களுடைய தலைமையிலுள்ள சங்கம் மக்கள் மத்தியிலே வெகுவேகமாக வளர்ந்துகொண்டிருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். எங்களைப் போன்றவர்கள் வைக்கின்ற கோரிக்கைகளுக்கு அரசாங்கம் நியாயம் வழங்கக் கூடிய முறையில் அனைத்துக் கட்சிகளையும் கூட்டி நல்லமுறையில் ஒரு அறிவிப்பை அரசு வெளியிட்டது. மற்ற கோரிக்கைகளை நீங்கள் அரசாங்கத்தோடு விவாதித்து தீர்வு காண்பது அவசியம் என்று சொல்கிற அதே நேரத்தில் அரசாங்கம், விவசாயிகளைப் பொறுத்தவரையில், ஒரு தவறான கண்ணோட்டத்தோடு நடந்துகொள்கிறது என்று அவர்கள் கருதுகிறார்கள். அதிலும் குறிப்பாக மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் பேசிய ஒரு கருத்தை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் ஒரு கருத்தைச் சொல்லும்போது குரான் படி திருடனின் கையினை வெட்டுவது நியாயம் என்று கூறவும், விவசாயிகள் அரசாங்கத்திற்கு இந்தக் கடனைச் செலுத்தாமல் இருப்பது நியாயம்தானா என்று அவரைப் பார்த்து முதலமைச்சரவர்கள் கேட்டது, அரசாங்கம் தங்களை ஒரு தவறான கண்ணோட்டத்தோடு, திருடனோடு ஒப்பிட்டுப் பார்க்கின்ற சூழ்நிலையில் இருக்கும்போது, நாங்கள் எப்படி அரசாங்கத்துடன் பேசுவது என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இதில் நியாயம் இருக்கிறதா இல்லையா என்பதை விட அரசாங்கத்திற்கும் விவசாயிகளிடையேயும் ஏற்பட்டிருக்கக்கூடிய பிரச்சினையைக் குறித்து பேச்சுவார்த்தையின் மூலம் சுமுகமாகப் பேசி ஒரு நல்ல சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும். இந்நிலை

யில் இது ஒரு பரபரப்பான பிரச்சினையாகவே இன்னும் அவர்கள் மத்தியில் உள்ளது. விவசாயிகள் மத்தியில் பரபரப்பாக இவ்விஷயம் இருக்கின்ற இச் சூழ்நிலையில் அரசாங்கம் அவர்களிடத்தில் கருணைகாட்டி, இந்தப் பிரச்சினையிலே அவர்களை அணுகி விவாதித்து ஒரு முடிவு காண வேண்டுமென்பதற்காக, மாண்புமிகு தலைவரவர்களே, இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இதைப்பற்றி விவாதிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் விவசாயிகளைப் பற்றியும் கூரானைப் பற்றியும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்னதாக ஒன்றைச் சொல்லி அதற்கும் இந்தப் பிரச்சினைக்கும் மிகவும் திறமையாக முடிச்சுப் போட வேண்டுமென்று நினைக்கிறார் என்று கருதுகின்றேன். இதெல்லாம் தெரிந்துதானோ என்னவோ தமிழில் பழங்காலத்தில் ஒரு பழமொழியை வைத்துவிட்டுச் சென்றிருக்கிறார்கள். "மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவது" போல் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முடிச்சுப் போடப் பார்க்கிறார். மாண்புமிகு முதலமைச்சரவர்கள் திரு. லத்தீப் அவர்கள் பேசும் போது குறிப்பிட்டது வேறு Context-ல். விவசாயிகளிடமிருந்து பணம் வசூலிக்க வேண்டும் என்பதைச் சொல்லி அதற்கு அவர்கள் கையை, காலை வெட்ட வேண்டுமென்ற அடிப்படையில் முதல்வர் அவர்கள் சொல்லவில்லை என்பதை கூட்டத்திலே கலந்து கொண்டவன் என்ற முறையில் தெளிவுபடுத்துவது என்னுடைய கடமை என்பதால், குறிப்பிடுகிறேன்.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப்:** நான்தான் அதற்கு பதில் சொன்னேன். திரு. லத்தீப் அல்ல.

**மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்:** இதிலிருந்து யார் என்ன பேசினார்கள் என்பதைத் தெரிந்துகொள்ளலாம்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** முதலமைச்சருக்கு பதில் சொன்னதுதான் திரு. வகாப் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** அதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை என்பதை முதலிலே தெளிவாக்க விரும்புகின்றேன். அடுத்து, விவசாயிகள் என்று நினைக்கிறபோது, எந்த விவசாயிகளைப்பற்றி நாம் பேசுகிறோம் என்பதில் தெளிவாக இருக்க வேண்டும். ஏனென்றால் விவசாயிகள், விவசாயப் பொருளாதாரம், உணவு உற்பத்தி, கிராமப்புறம் இவைகளெல்லாம் அடிப்படையாகப் பேசப்படுகிற வார்த்தைகள். கிராமப்புறங்களையெல்லாம்

பட்டினி போட்டு விட்டால், நகர்ப்புறங்கள் வளர முடியுமா என்று கேட்கின்றார்கள். உண்மை நிலைமை என்னவென்றால், தமிழ்நாட்டிலுள்ள விவசாய பாசன நிலங்களில் 1/3 பகுதி நிலங்கள்தான் பம்ப்செட்டுகளைப் பயன் படுத்தி விவசாயம் செய்யப்படுகிறது. 9 இலட்சம் பம்ப்செட்டுகள் அப்படிப்பட்ட வேலைகளைச் செய்கின்றன. 9 இலட்சம் பம்ப்செட்டுக்கு உரியவர்கள்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி ஆயாசப்படுகிறாரே திரு. நாராயணசாமி நாயுடு அவர்கள், அந்த நாராயணசாமி நாயுடுவின் சங்கத்தில் இருக்கிறார்கள். அந்த மாபெரும் சங்கத்தின். சக்தியின் விளைவாகத்தான் 1¾ இலட்சம் பேர்கள் மின் கட்டணம் கட்டவில்லை. இவர்கள் மட்டும்தான் இரண்டு மூன்று ஆண்டுகளாக மின் கட்டணம் கட்டவில்லை. சிறுபான்மையினர்தான் அவர்களுடைய கருத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். பெரும்பான்மையினர் அவர்களுடைய கருத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. பெரும்பான்மையினர் ஒழுங்காகப் பணத்தைக் கட்டிக்கொண்டு விவசாயம் செய்து வருகின்றார்கள். இந்த 1¾ இலட்சம் பேரிலேகூட அவர்களுடைய பிரதிநிதிகளாக அன்றையதினம் கூட்டத்திலே கலந்துகொண்டவர்கள் வரியைச் செலுத்துவது சிரமமாக இருக்கிறது, சுலபமாக தவணை முறையில் கட்டுவதற்கு ஏற்பாடு செய்து தர வேண்டுமென்று கேட்டார்கள். ஏற்கெனவே இந்த மன்றத்தில் அவர்களுடைய பிரச்சினையின் மீது முடிவை அறிவிக்கும் வாய்ப்பினை நான் பெற்றபோது, எந்த அளவுக்கு அவர்களுடைய பிரச்சினைகளைச் சுலபமாக ஆக்கினோம் என்பதை மாண்புமிகு மன்ற உறுப்பினர்கள் நன்றாக அறிவார்கள். இந்த மாதத்திற்குரிய மின்

(பிற்பகல் 4-40)

கட்டணத் தொகையை மட்டும் கட்டினால் போதும். பழைய மின் கட்டண பாக்கியை, ஏப்ரல் மாதத்திலிருந்து அந்தந்த மாதத்திற்குரிய தொகையோடு ஒரு மாதத்திற்குரிய நிலுவைத் தொகையையும் சேர்த்துக் கட்டினால் போதும். 31—3—1979 வரை கடந்த இரண்டாண்டுகளிலோ, 3 ஆண்டுகளிலோ அபராத வட்டித் தொகை வருமானால் அதையும் தள்ளிவிட்டோம். இரண்டாண்டுகளுக்கு ஒருவர் மின் கட்டணத் தொகையைக் கட்டாமலிருந்தால், 24 தவணைகளில் ஏப்ரல் மாதத்திலிருந்து கட்டுவதற்கு வாய்ப்பை உருவாக்கியிருக்கிறோம். அந்த வகையில் மின் கட்டண பாக்கியைச் செலுத்துவதென்பது எளிதாக்கப்பட்டிருக்கிறது.

மின் துண்டிப்பு பல இடங்களில் நடத்தப்பட்டதாக இங்கே குறிப்பிட்டார்கள். அதைப்பற்றிய விவரம் ஒன்றையும் இங்கே அறிவிப்பது நல்லது என்று நினைக்கிறேன். சேலம், மேட்டூர் மின்திட்டம் இருக்கிற பகுதி. அங்கே 355 பேர்களுக்கு அவர்களுடைய மின் இணைப்புக் துண்டிக்கப்படும்





என்று நோட்டீஸ் தரப்பட்டிருக்கிறது. அந்த 255 விவசாயிகளில் 66 பேர் பணம் கட்டிவிட்டார்கள். மீதமிருந்தவர்கள் 187 பேர். இந்த 187 பேருக்குத்தான் மின் துண்டிப்பு செய்யப்பட்டது. இந்த 187 பேரிலும் மின் துண்டிப்பு செய்யப்பட்டவுடன் 9 பேர் பணம் கட்டிவிட்டார்கள்.

அதைப்போல கோவையில் 250 விவசாயிகளுக்கு மின் துண்டிப்புக்கான நோட்டீஸ் விடப்பட்டது. அதில் 8 பேர் பணம் கட்டிவிட்டார்கள். 123 பேர்களுக்கு மின் துண்டிப்பு செய்யப்பட்டது. பிறகு அதிலும் 2 பேர் பணத்தைக் கட்டி மின் இணைப்பைப் பெற்றுக்கொண்டார்கள். ஆக மொத்தம் 310 பேருக்குத்தான் இதுவரை மின் துண்டிப்பு செய்யப்பட்டிருக்கிறது.

1¾ லட்சம் விவசாயிகளில் 310 பேர்களுக்குத்தான் மின் துண்டிப்பு செய்யப்பட்டது. அதுவும்கூட எந்தவிதமான அமளியும் ஆர்ப்பாட்டமுமில்லாமல் செய்யப்பட்டது. அவர்களுக்கு மின் துண்டிப்பு செய்யப்பட்டபோது, அவர்களெல்லாம் “நாங்கள் மின் கட்டணத்தைக் கட்டினால், ஊரைவிட்டு வெளியே விலக்கப்படுவோம் என்று மிரட்டியிருக்கிறார்கள். ஆகவே பயந்துகொண்டு கட்டாமல் இருக்கிறோம்” என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே உண்மையில் விவசாயிகளே குமுறும் நிலையில்தான் இருக்கிறார்கள். இந்த வகையில் உண்மையான விவசாயிகளைக் காப்பாற்றவும் மின் துண்டிப்பைச் செய்ய வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். இருந்தாலும், தற்போது அறுவடைக் காலம் என்பதை நாம் மறந்துவிடுவதற்கில்லை. அதைப் போலவே பெரும்பாலான விவசாயிகள் தமிழகத்தில் மின் கட்டணத்தைக் கட்டிவிடுகிறார்கள் என்பதையும் மறந்துவிடுவதற்கில்லை. ஒரு பகுதி விவசாயிகள் அனாவசியமாக வேறு திசையில் அழைத்துச் செல்லப்பட்டிருக்கிறார்கள் என்பதை நாம் உணர வேண்டும். நாமே ஒரு தீய சக்தியை ஒரு பெரிய சக்தி என்று சொல்லுகிற அளவுக்கு உணர்ச்சிவயப்படுகிறோம் என்றால், சாதாரண விவசாயிகள் இந்தப் பிரச்சினையில் எளிதாக ஏமாற்றப்படுகிறார்கள் என்பதில் யாருக்கும் கருத்து வேற்றுமை இருக்க முடியாது.

தற்போது தவணைகளை எப்படி எளிதாக்கியிருக்கிறோமோ அதைப் போலவே அறுவடைக் காலத்தில் இந்த மின் துண்டிப்பை மிகவும் தீவிரப் படுத்த வேண்டாம் என்று சொல்லியிருக்கிறோம். விவசாயிகளும் முடிந்த வரை மாதாமாதம் மின்கட்டணத் தொகையையும் பாக்கியையும் கட்டுவதற்கு

ஏற்பாடு செய்ய வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்களின் விருப்பத்திற்கு ஏற்ப மூன்று வார காலத்திற்கு மின் துண்டிப்புச் செய்வதையும் தள்ளிப் போட்டிருக்கிறோம்.

அதாவது இன்று முதல் ஏப்ரல் 3 ஆம் தேதிவரை மின் துண்டிப்பு செய்ய வேண்டாம் என்று அதிகாரிகளுக்கு அறிவித்திருக்கிறோம். அதற்குக் காரணம் விவசாயிகளுக்கு எந்தவிதமான கஷ்டமும், தொந்தரவும், நீங்கும் ஏற்பட்டு விடக்கூடாது என்பதுதான். ஒரு சிறுபான்மையான விவசாயிகள் தவறான வழியில் இழுத்துச் செல்லப்படாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டியது பல்வேறு அரசியல் கட்சிகளை நடத்துகிற தலைவர்களுடைய பொறுப்பும் கடமையும் ஆகும் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட வேண்டிய அவசியமில்லை. ஏனென்றால் பேரறிஞர் அண்ணா அவர்களே ஒருமுறை அழகாகக் குறிப்பிட்டார்கள். "தனி மரம் தோப்பாகாது" என்றார்கள். ஒரு நாராயணசாமி நாயுடு நிச்சயமாக இந்த நாட்டுக்கு நல்வழி காட்ட முடியும் என்று நாம் எதிர்பார்க்க முடியாது. எனவே நாம் அனைவரும் சேர்ந்து இன்னும் பணம் கட்டாத விவசாயிகளைப் பார்த்து, அவர்களுக்கு எளிதான முறையில் பணம் கட்டுகின்ற வழிமுறையைச் சொல்லித் தர வேண்டுமென்ற அடிப்படையில் எதிர்க் கட்சிகளின் ஒத்துழைப்பும் தேவை. இந்த அளவுக்கு அரசு நல்ல காரியங்களைச் செய்து வருகிற காரணத்தால், இந்த அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்தி வைத்துத்தான் இந்தப் பிரச்சினையை விவாதிக்க வேண்டுமென்ற நிலையில்லை என்பதை, மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, தங்கள் மூலமாகத் தெரிவித்து இந்த அவை நடவடிக்கையை ஒத்தி வைக்க வேண்டியதில்லை என்று கூறி அமைகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, இப்பொருள் குறித்து விவாதிக்க அவையின் மற்ற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டிய அவசியமில்லை என்று கருதி என்னுடைய அனுமதியை மறுக்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. இராமமூர்த்தி அவர்களும், திரு. எல்லமந்தா அவர்களும் ஒவ்வொரு உரிமைப் பிரச்சினை எழுப்பியிருக்கிறார்கள். அவை இரண்டும் நாளைய தினம் எடுத்துக்கொள்ளப்படும்.



## 4. கவன ஈர்ப்பு.

**பதினைந்து ஆண்டு காலப் பணியை முடித்த பின்னர் வருங்கால வைப்பு நிதியிலிருந்து ஒரு பகுதியை இறுதியாகப் பெற்றுக்கொள்ளும் வசதியை ஆசிரியர்கள் உட்பட நகராட்சி, மாநகராட்சிப் பணியாளர்களுக்கு நீட்டிப்பது குறித்து.**

திரு. க. மீனாட்சிசுந்தரம் (திரு. செ. முத்துசாமி சார்பில்): மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

"ஆசிரியர்கள் உட்பட அரசுப் பணியாளர்கள், ஊராட்சி ஒன்றியப் பணியாளர்கள் ஆகியவர்களுக்கு, 15 ஆண்டு காலப் பணியை முடித்த பின்னர் வருங்கால வைப்பு நிதியிலிருந்து அதன் ஒரு பகுதியை இறுதியாகப் பெற்றுக் கொள்ளும் வசதியை பயன்படுத்துவதற்காக நீட்டிக்கப்பட்ட பயன், ஆசிரியர்கள் உட்பட நகராட்சி, மாநகராட்சிப் பணியாளர்களுக்கு நீட்டிக்கப்படாததால் அப்பணியாளர்கள் படும் இன்னல் குறித்து"

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மதுரை, சென்னை மாநகராட்சிகளில் பணியாற்றுகிறவர்களுக்கு, அரசினால் அப்போதைக்கப்போது திருத்தப்படும், வருங்கால சேமிப்பு நிதி விதிகள் பொருந்துமாதலால், அவர்களுக்கும் இத்தகைய சேமிப்பு நிதியிலிருந்து ஒரு பகுதியைத் திரும்பச் செலுத்தாவண்ணம் பெறும் முறையில் அளிக்கப்படுகிறது.

நகராட்சிப் பணியாளர்களைப் பொறுத்தவரையில், 22—2—1979 நாளிட்ட ஊர்வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் அரசாணை எண் 294 மற்றும் 295-ல் நகராட்சிப் பணியாளர்களில் 15 ஆண்டுகளுக்குக் குறையாமல் பணியாற்றுபவர்களுக்கு வருங்கால சேமிப்பு நிதியிலிருந்து திரும்பச் செலுத்தாவண்ணம் ஒரு பகுதியை அளிக்கும் முறையில் நகராட்சிகளின் வருங்கால சேமிப்பு நிதி விதிகளும், நகராட்சி குற்றேவலர் கீழ்நிலை பணியாளர்களின் வருங்கால சேமிப்பு நிதியின் விதிகளும் திருத்தப்பட்டுள்ளன.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்புத் தீர்மானம் ஒத்தி வைக்கப்படுகிறது.

## 5. 1979-80 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கைமீது பொது விவாதம்—தொடர்ச்சி.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உறுப்பினர்களுக்கு ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். ஏற்கெனவே அலுவல் ஆய்வுக் குழு நிதிநிலை அறிக்கையின் மீது விவாதிப்பதற்கு எத்தனை நாட்களை ஒதுக்கியதோ அதைவிட அதிகமான நாளைக் கொடுத்துவிட்டோம். இன்னும் ஒரு நாள்தான் இருக்கிறது. ஆகவே உறுப்பினர்கள் 15 நிமிடங்களும், கட்சித் தலைவர்கள் மட்டும் கூடுதலான நேரமும் எடுத்துக்கொண்டு பேசி முடிக்க வேண்டும். உறுப்பினர்கள் எப்படியும் 15 நிமிஷங்களில் முடித்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

*** திரு. நீலநாராயணன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, 1979-80 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது நடைபெறுகிற விவாதத்தில் கலந்துகொண்டு என்னுடைய கருத்தைச் சொல்லுகிற வாய்ப்பினைப் பெற்றமைக்காக நான் உண்மையிலேயே மகிழ்ச்சியடைகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கை இம்மன்றத்தில் வருவதற்கு முன்னால், இதைப் பற்றிய பரவலான ஒரு பிரச்சாரம், ஒரு பெரிய எதிர்பார்ப்பு நாடெங்கணும் இருந்ததை நாம் அறிவோம். ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் தங்களுடைய பிரச்சாரக் கூட்டங்களில் வர இருக்கின்ற நிதிநிலை அறிக்கை மகத்தானதொரு சாதனையாக இருக்கப் போகிறது என்ற அளவிலே இதைப் பற்றிப் பலப்பட பேசி வந்ததை நாடறியும். அது மட்டுமல்ல, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சமீபத்தில் தென் மாவட்டங்களில் சுற்றுப்பயணம் செய்தபோது, அவருடைய பிரச்சாரக் கூட்டங்களில் இந்த நிதிநிலை அறிக்கை பல்வேறு பிரச்சினைகளுக்கு ஒரு விடிவு காலமாக இருக்கும் என்பதைச் சூசகமாகச் சுட்டிக்காட்டியதையும் நாடு மறந்திருக்காது.

அப்படி ஒரு சர்வரோக நிவாரணியாக இந்த நிதிநிலை அறிக்கை அமையும் என்று உண்மையிலேயே இந்த நாட்டு மக்கள் எதிர் பார்த்தார்கள் என்று சொன்னால், அதில் தவறு இருக்காது. அப்படிப்பட்ட நிதிநிலை அறிக்கை எப்போது வரப்போகிறது, எப்போது வரப்போகிறது என்று ஒவ்வொருவரும் எதிர்பார்க்கிற சூழ்நிலையில்தான் நாம் இருந்துகொண்டிருந்தோம்.

மார்ச் 3 ஆம் நாள் நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தம்முடைய சங்கீதக் குரலில், சிங்காரத் தமிழில், கம்பீரமான வார்த்தைகளால் இந்த நிதிநிலை அறிக்கையை மன்றத்தின் முன்னால் வைத்தார்கள்.





(பிற்பகல் 4-50)

நாம் அனைவரும் அதைக் கேட்டோம். பலமுறை அதிலே ஏதாவது விடிவு காலம் சொல்லப்பட்டிருக்கிறதா என்று பன்னி பன்னிப் படித்துப் பார்த்தோம். எந்தப் பிரச்சினைக்காவது விடிவு காலம் தோன்றியிருக்கிறதா என்று ஆராய்ந்து பார்த்தோம்.

என்னைப் பொறுத்தவரையில், ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதற்கு முன்னாலே எந்த முறையில் நிதிநிலை அறிக்கை இந்த மன்றத்தில் ஆளும் கட்சியின் சார்பில் அளிக்கப்பட்டு வந்ததோ அதைவிட புதுமையானதாகவோ, புரட்சிகரமாகவோ இதிலே ஏதுமிருப்பதாக என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. இதை நான் சொல்லுகின்றபோது ஆளும் கட்சியிலே இருக்கின்றவர்கள் கோபித்துக்கொள்ளக்கூடாது. ஜனநாயகக் கடமைகளை ஆற்றுகின்றபோது உண்மையிலேயே, இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதற்கு அதைச் செயல்முறைப் படுத்துவதற்கு என்ன வழிமுறைகள் உண்டோ அத்தனையும் செய்து முடிக்க வேண்டிய கடமை எதிர்க்கட்சிகளுக்கு உண்டு என்ற அளவிலேதான் நான் இதை இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நிதிநிலை அறிக்கையிலே அலங்காரமான வார்த்தைகளைக் கொட்டிக் குவித்து வைத்திருக்கிறார்கள். புள்ளிவிவரங்களை அள்ளித் தந்திருக்கிறார்கள் என்று சொன்னால் ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் வெறும் வார்த்தைகளால் வயிற்றை நிரப்பிக்கொள்ள முடியுமா என்று கேட்டால் நிச்சயமாக முடியாது என்பதுதான் பதிலாக வர முடியும். அந்தக் கண்ணோட்டத்தோடு மட்டுமல்ல, மற்றொன்றையும்—இந்த பட்ஜெட்டைப்பற்றி நான் பேசுகின்றபோது—எண்ணிப் பார்க்கும்படி வேண்டுகின்றேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒருமுறை சுட்டிக்காட்டியதையும் குறிப்பிட விரும்புகிறேன். பட்ஜெட் உரை என்பது முடிவு அல்ல. அது 'ஆரம்பமாகும்' என்பதைப் பேரறிஞர் அண்ணா அவர்கள் சுட்டிக் காட்டினார்கள் "பட்ஜெட்டிலே நாட்டுக்குத் தேவையான பல திட்டங்களை ஆளும் கட்சியினர் குறிப்பிடுகின்றார்கள் என்று சொன்னால், அது ஆரம்பம். அந்தத் திட்டங்கள் எந்த வகையிலே நிறைவேற்றப்படுகின்றன என்பதுதான் முடிவு. அது ஆண்டினுடைய இறுதியிலேதான்—அதற்குரிய தீர்ப்பு மக்களாலே அளிக்கப் படவிருக்கிறது" என்பதை நம்முடைய அண்ணா அவர்கள் அன்றைக்கே சுட்டிக் காட்டினார்கள். அந்த அடிப்படையிலே பார்க்கின்றபோது, இந்த பட்ஜெட்டிலே இருக்கின்ற திட்டங்களைப்பற்றி நாம் சிந்திப்பதற்கு முன்னால், இந்த ஆளும் கட்சியினர் இதற்கு முன்னாலே இந்த மன்றத்திலே இரண்டு பட்ஜெட் உரைகளைத் தந்திருக்கிறார்கள் என்பதையும் பார்க்க

வேண்டும். அந்த இரண்டு பட்ஜெட் உரைகளிலேயும் என்னென்ன திட்டங்களை எல்லாம் கூறியிருக்கிறார்கள்? அவைகளை எந்த எந்த அளவுக்குச் செய்து முடித்திருக்கிறார்கள் என்பதை நாம் இந்தச் சந்தர்ப்பத்திலே எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அந்த முறையிலேதான் எங்கள் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர், அருமை நண்பர் திரு. தங்கப்பாண்டியன் அவர்கள் சென்ற பட்ஜெட்டிலே ஆளுங்கட்சியினர் குறிப்பிட்டிருந்த சில பல திட்டங்களைப் பற்றி இங்கே எடுத்துக் காட்டினார்கள். நிலப்படை என்று சொல்லப்பட்டது முதல் பட்ஜெட்டிலே, அதற்கென்று ஒரு லட்சம் ரூபாய் டோக்கன்-ஆக ஒதுக்கப்பட்டது. அந்தப் படை கிராமாந்திரங்களிலே இருக்கின்ற வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலையைத் தேடித் தரும் என்று அன்றையதினம் உறுதி கூறப்பட்டது. அதற்குப் பின்னால் அந்த நிலப்படையைப்பற்றி எந்தவிதமான தகவலும் இல்லை. அதற்குப் பின்னாலே காவல் துறையை விரிவுபடுத்தப் போகிறோம் என்று சொல்லி, அதனடிப்படையிலே நாங்கள் 10 ஆயிரம் போலீசாரைத் தேர்ந்தெடுக்கப் போகிறோம் என்று குறிப்பிட்டார்கள். என்ன ஆயிற்று அந்தத் திட்டம்? இதுவரையிலே தெரியவில்லை. அதைப் போலவே அந்நிய நாடுகளுக்கு, நம்முடைய நாட்டிலே இருந்து தொழிலாளர்களை, நிபுணர்களை அனுப்புவதற்காக தனி நிறுவனத்தை அமைக்கப் போகிறோம் என்று முதல் பட்ஜெட்டிலே சொன்னார்கள். இரண்டாவது பட்ஜெட்டிலேயும் சுட்டிக்காட்டினார்கள். இந்த மூன்றாவது பட்ஜெட்டிலேயும் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். ஆனால் அந்த நிறுவனம் அமைக்கப்பட்டதா, யார் யார் அந்த நிறுவனத்திலே இடம் பெற்றிருக்கிறார்கள் என்பதுபோன்ற தகவல்கள் இன்னும் இந்த மன்றத்திற்குத் தெரிவிக்கப்படவில்லை, விளக்கப்படவில்லை. ஆகவேதான் குறிப்பிட்டிருக்கின்ற திட்டங்கள் எல்லாம் பட்ஜெட்டிலே சொல்லப்பட்டிருக்கின்ற திட்டங்கள் எல்லாம் வெறும் வார்த்தைகளாக, காற்றிலே கட்டுகின்ற மாளிகையாக, கனவு மாளிகையாக அமைந்துவிட்டிருப்பதை நம்முடைய நண்பர் திரு. தங்கப்பாண்டியன் அவர்கள் இங்கே சுட்டிக் காட்டினார்கள். அதன் அடிப்படையிலேதான், இந்த பட்ஜெட்டிலேகூட அவர்கள் சுட்டிக் காட்டியிருக்கின்ற, கிராமாந்திரங்களிலே வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டங்களைப் பார்க்க வேண்டும். கிராமப்புறங்களிலே உள்ள இளைஞர்களுக்கு வேலை அளித்து தினசரி 3 ரூபாய் சம்பளமும், அரிசியும் அல்லது கோதுமையும் அளிக்கப் போகிறோம் என்றும், வேலை இல்லாவிட்டால் அவர்களுக்கு நாங்கள் 1 ரூபாய் அல்லது அதற்கு நிகரான அரிசியையோ கோதுமையையோ கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறோம் என்றும் சொல்லியிருக்கிறார்கள். சென்ற பட்ஜெட்டிலே குறிப்பிடப்பட்ட திட்டங்களுடைய நிலவரங்களை நாம் எண்ணிப் பார்க்கும்போது, இந்த பட்ஜெட்டிலே குறிப்பிடப்பட்டிருக்கின்ற இந்தத் திட்டத்தினுடைய நிலைமை எப்படி



இருக்கும் என்பதையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இதை எண்ணிப் பார்க்கின்றபோது, உண்மையிலேயே எப்படி இதைப் பாராட்டுவது என்றுதான் என்னைப் போன்றவர்கள் அங்கலாய்த்துக் கொண்டிருக்கிறார்கள். 3 ரூபாய் கொடுப்போம் என்று சுட்டிக்காட்டுகிறார்கள். அவர்களுக்கு உரிய வேலைகள் கொடுக்கப்படும் என்று சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். நிச்சயமாக நான் இதை வேண்டுமென்றோ கேலி பேச வேண்டும் என்பதற்காகவோ சுட்டிக் காட்டவில்லை. இது நடைமுறை சாத்தியமாகக் கூடிய ஒன்றா? 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் எல்லாம் தாங்கள் வேலைவாய்ப்புக்காகப் பதிவு செய்து கொள்ளலாம். அவர்களுக்கு உத்தரவாதமான வேலைகள் நாங்கள் கொடுக்கிறோம் என்று சுட்டிக்காட்டுகிறார்களே, இது நடைமுறை சாத்தியமான ஒன்றா என்பதை ஆளுங்கட்சியினர்கள் நிச்சயமாக எண்ணிப் பார்க்க வேண்டும் என்பதற்காகத்தான் நான் இதை இங்கே சுட்டிக்காட்டுகின்றேன்.

அதோடுகூட திட்டங்கள்தான் இந்த அளவிலே இருக்கின்றன என்று இங்கே கொடுத்திருக்கிறார்கள். அதிலே ஒன்றைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். பட்ஜெட் உரை என்பது பொதுவாக ஆளுங்கட்சியினுடைய கொள்கை விளக்கம்தான் என்பதைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அதனையேதான் அறிஞர் அண்ணா அவர்கள் ஒருமுறை இதைவிடத் தெளிவாக நமக்கு எடுத்துக் கூறினார்கள். ஆளுங்கட்சியினர் என்னென்ன திட்டங்களை நாட்டு மக்களுக்காக நிறைவேற்ற வைத்திருக்கிறார்களோ அவற்றை விட்டுவிடுவதற்கில்லை. மற்றொன்றை, 'திட்ட விளக்க நூல்' என்ற ஒன்றை பட்ஜெட்டிலே கூறி இன்னின்ன வகைகளிலே அவற்றுக்கு நாங்கள் நிதி நிலைகளை ஒதுக்கியிருக்கிறோம், அந்த நிதியைக் கொண்டு இந்தத் திட்டங்களை நிறைவேற்றப் போகிறோம் என்று கூறுகின்ற அரசியல் சாசனத்தைத்தான் பட்ஜெட் உரை என்பதாக பேரறிஞர் அண்ணா அவர்கள் நமக்குச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அந்த முறையிலே கூட இந்த பட்ஜெட்டை நாம் விமர்சனம் செய்து பார்த்தால், ஆளும் கட்சியினுடைய கொள்கை என்ன என்பதை நம்மாலே புரிந்துகொள்ள முடியும். ஆளுங்கட்சியினுடைய கொள்கை என்ன என்று நான் கேட்கின்றபோது, ஏற்கெனவே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தங்களுடைய கொள்கையைப் பற்றிப் பலபட பேசியிருக்கிறார்கள். அண்ணாயிசம் என்ற ஒரே வார்த்தையில் சொல்லிவிடுகிறார்கள். அண்ணாயிசம் என்றால் என்ன? அந்த வார்த்தைக்கு உள்ளே நான் புக முயலவில்லை. அது வாதத்திற்குரிய பிரச்சினையாக இருக்கலாம். ஆனால் அண்ணாவினுடைய கொள்கைகள் என்னென்ன, அந்தக் கொள்கைகளை எந்த அளவுக்கு இந்த அரசாங்கம் நிறைவேற்றத் தயாராக இருக்கின்றது? அதற்குரிய திட்டங்கள் எதையெதை இந்த பட்ஜெட்டிலே—இதிலே மட்டுமல்ல இதற்கு முன்னாலே இருந்த பட்ஜெட்களிலேகூட சொல்லியிருக்கிறார்கள் என்பதை நாம் எண்ணிப்

பார்க்க வேண்டும். அதற்கு முன்னால் அண்ணாவினுடைய திட்டங்கள், அண்ணாவினுடைய கொள்கைகள் இவைகளைப் பார்க்கின்றபோது— ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காண்போம் என்று அறிஞர் அண்ணா அவர்கள் சுட்டிக் காட்டியதற்கேற்ப எவன் ஒருவன் குந்த குடிசையின்றி சாக்கடை ஓரத்திலே நாய்களோடு படுத்துக்கொண்டிருக்கிறானோ அந்தக் கடைகோடி மக்களுக்கு குந்துவதற்கு ஒரு இடம் ஒதுக்கிக் கொடுக்க வேண்டும் என்பதிலே பேரறிஞர் அண்ணா அவர்கள் கொண்டிருந்த பேராசை, அந்த ஆசையை நிறைவேற்றுவதற்கு இப்படிப்பட்ட திட்டங்களிலே ஏதாவது இடம் இருக்கிறதா என்று பார்த்தால், நிச்சயமாக எதுவும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. இப்படி ஒவ்வொன்றாக நாம் பார்த்தால், எத்தனையோ விமர்சனங்களைச் சொல்லிக்கொண்டு போகலாம். ஆனால் அண்ணா அவர்களுடைய கொள்கைகள் இதிலே இடம்பெறவில்லை என்பது மட்டுமல்ல, அண்ணா அவர்கள் எந்த அடிப்படையிலே வரிகளை விதிக்க வேண்டும் என்று சுட்டிக்காட்டினார்களோ, அந்த அடிப்படையிலே வரிகள் விதிக்கப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால், நிச்சயமாக இல்லை என்று சொல்ல முடியும். தேங்காய்க்கு வரியைப் போட்டிருக்கிறார்கள். தீப்பெட்டிக்கு வரியைப் போட்டிருக்கிறார்கள். இதற்கெல்லாம் என்ன அர்த்தம்? ஏற்கெனவே உணவுப் பொருட்களுக்கு வரி கூடாது என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் நமக்கு போதித்திருக்கிறார்கள். திராவிட

(பிற்பகல் 5-00)

முன்னேற்றக் கழக அரசு அதனை சிரமேற்கொண்டு அந்த வரிகளை ரத்து செய்திருக்கிறது. ஆனால் இந்த அரசாங்கம் தேங்காய்க்கு வரி போட்டிருக்கிறது. அழுகும் பொருள்களில் ஒன்றாக இருக்கும் தேங்காய்க்கு வரி தேவைதானா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டாமா? அண்ணா அவர்கள் உயிரோடிருந்தால், இதை ஏற்றுக்கொள்வார்களா என்பதை யாராவது எண்ணிப் பார்த்திருக்கிறார்களா? தீப்பெட்டிக்கும் இப்போது வரி போட்டிருக்கிறார்கள் அதனால் வருகின்ற வருமானம் எவ்வளவு என்பதுகூட முக்கியமல்ல. ஆனால் அந்த வரி யார் யாரை எந்தெந்த அளவுக்குப் பாதிக்க வைத்திருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இன்றைய தினம் சமுதாயத்தில் இருக்கின்ற அத்தனை பேரும் உபயோகிக்கிற அளவுக்கு தீப்பெட்டி ஒரு பொருளாக இருந்து கொண்டிருக்கிறது. சாப்பாடு எவ்வளவு முக்கியமோ அந்த அளவுக்குப் புகை பிடிப்பது முக்கியம் என்பது இன்றைக்கு நாட்டிலே இருக்கக் கூடிய நிலைமை. நூற்றுக்கு 90 பேர் தீப்பெட்டியைக் கையாளுகிற நிலைமைக்கு நாடு வந்துவிட்டிருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமையில், நேற்று வரையிலே 10 காசு கொடுத்து வாங்கிய நெருப்புப் பெட்டியை இன்றையதினம் 12 காசு என்று வாங்குகிறபோது, அவனுடைய





வயிறு அந்த நெருப்பைப் போல் எரியாதா? எரிகின்ற அந்த வயிற்றோடு இந்த அரசை வாழ்த்துவான் என்று கருதுகிறார்களா? (சிரிப்பு) சிரிப்பதற்காக இதை நான் சுட்டிக்காட்டவில்லை. இதையெல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டும் என்பதற்காகத்தான் சுட்டிக்காட்டுகிறேன். அவன் சிகரெட்டைக் கொளுத்துவதற்காக பற்ற வைக்கிற நெருப்பு, சிகரெட்டை மட்டும் பற்ற வைப்பதற்காக என்று தயவு செய்து யாரும் கணக்கிடக்கூடாது. இந்த ஆட்சியினுடைய ஆணி வேருக்கு வைக்கிற நெருப்பாக எண்ணிக் கொண்டு தான் அவன் பற்ற வைக்கிறான் என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது. அந்த அளவுக்கு ஏழைகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த அளவுக்கு பேரறிஞர் அண்ணா அவர்களுடைய கனவுகள் இந்த நாட்டிலே பாழடிக்கப்பட்டு வந்திருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்டுவதற்காகத்தான் நான் இங்கே இதை எடுத்துக்காட்டுகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** தலைவர் அவர்களே, "ஆட்சிக்கு நெருப்பு வைக்கப்படுகிறது" என்ற வார்த்தைகளை நீங்கள் அனுமதிக்கிறீர்களா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** ஆட்சிக்கு நெருப்பு வைக்க முடியாது. ஆகையினால் அவர் எதை வேண்டுமானாலும் பேசலாம்.

**திரு. நீலநாராயணன்:** அரசாங்கத்திற்கோ, மற்றதற்கோ நெருப்பு வைக்கப்படுகிறது என்று சொல்லவில்லை. ஆளும் கட்சியினுடைய ஆணி வேருக்கு என்ற பொருளில்தான் சொல்லுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** சிகெரெட் பற்ற வைப்பவன் சொல்லுவதால் அது பலிக்குமா என்பது சந்தேகமாக இருக்கிறது.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** ஆணி வேருக்கு நெருப்பு வைக்க முடியாது என்பதைத் தெரிந்துகொண்டுதான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகிறார்கள். ஆகவே அவர் அப்படிச் சொல்லுவதில் ஆட்சேபணை ஒன்றுமில்லை.

**திரு. நீலநாராயணன்:** இந்த பட்ஜெட்டை 'சர்வரோக நிவாரணி' என்று ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் எல்லாம் வர்ணித்திருக்கிறார்கள். இதில் உள்ள குறைகளைப் பற்றியெல்லாம் எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே சுட்டிக் காட்டினார்கள். தங்களுடைய குறைகளைப் பற்றி ஆசிரியப் பெருமக்கள் தெரிவித்திருக்கிறார்கள். தங்களுடைய அவலன் போக்கப்பட்டிருக்கிறதா என்றால், இல்லையென்று சொல்லுகிறார்கள். ராக கல்லூரிப் பேராசிரியர்களுடைய கண்ணீர் துடைக்கப்பட்டிருக்கிறதா என்று தன்

இல்லையென்று கூறுகிறார்கள். விவசாயிகளுடைய வேதனைகள் போக்கப் பட்டிருக்கின்றனவா என்று கேட்டால், இல்லையென்று கூறுகிறார்கள். சமுதாயத்திலே இருக்கின்ற எந்தத் துறையை எடுத்துக்கொண்டாலும், அந்தந்தத் துறையிலே இருக்கின்றவர்களுக்கு குறைகளைப் போக்கத் தெளிவான திட்டங்கள் இருக்கின்றனவா என்று கேட்டால், நிச்சயமாக இல்லை. இல்லை என்ற பதிலைத்தான் கூறிக் கொண்டிருக்கிறார்கள். இந்த அறிக்கையைப் பாராட்டுகிறவர்கள்கூட, பாராட்டியே தீர வேண்டுமென்று கடமையில் இருக்கிறவர்கள்கூட என்ன பேசியிருக்கிறார்கள் என்று எண்ணிப் பார்க்க வேண்டும். நேற்றுகூட, புலவர் புலமைப்பித்தன் என்று கருதுகிறேன், ஒரு பாடலைப் பாடிக் காட்டினார். மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. மா. பாலசுப்பிரமணியம் அவர்கள் பாடலில் உள்ள குறையைத்தான் கூறினார்கள்.

(திரு. கு. மா. பாலசுப்பிரமணியம் எழுந்தார்)

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் முதலில் பேசி முடிக்கட்டும்.

* **திரு. கு. மா. பாலசுப்பிரமணியம் :** என்னுடைய கவிதையைச் சர்ச்சைக்குரியதாக ஆக்கிவிட்டதால், அதற்குப் பதில் சொல்ல வேண்டிய நிலை எனக்கு ஏற்பட்டுவிட்டது. நேற்று நான் இருக்கையில் இல்லாதபோது, புலவர் புலமைப்பித்தன் அவர்கள் தன்னுடைய பேச்சை முடிக்கிற கடைசி நிமிடத்தில் ஏதோ குறை சொன்னதாகக் கேள்வியுற்றேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ஒருவருக்கு ஒருவர் குறை சொல்லுவதற்காகத்தானா நாம் இங்கே இருக்கிறோம்? தயவு செய்து உறுப்பினர் உட்கார வேண்டும். திரு. நீலநாராயணன் அவர்கள் பேசலாம். நேற்று சொன்னதற்கு, இன்று பதில் சொல்ல அனுமதித்தால், பிறகு ஒன்றும் நடக்காது.

**திரு. நீலநாராயணன் :** தலைவர் அவர்களே, ஆளும் கட்சி சார்பாக நேற்றுப் பேசிய புலவர் புலமைப்பித்தன் அவர்கள்கூட திரு. கு. மா. பாலசுப்பிரமணியம் அவர்கள் பாடிய பாடலில் உள்ள சொற்குற்றத்தைத்தான் எடுத்துச் சொன்னாரே தவிர, பொருள் குற்றம் எதுவும் இருப்பதாகச் சொல்லவில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. மா. பாலசுப்பிரமணியம் அவர்கள் நிறைய குற்றங்களை பட்ஜெட்டிலுள்ள குறைபாடுகளையெல்லாம் சுட்டிக் காட்டினார்கள். அதையெல்லாம் அவர் மறுக்கவில்லை. அவருடைய பாட்டில் இருந்த, எதுகை, மோனை, யாப்பு, இலக்கணம் ஆகிய



வற்றைப்பற்றித்தான் சுட்டிக்காட்டினாரே தவிர, திரு. கு. மா. பாலசுப்பிரமணியம் அவர்கள் கூறிய குறைகளுக்கு மறுப்பு தெரிவித்ததாகத் தெரியவில்லை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அது நம்முடைய விஷயம் இல்லை. கவிஞர்களுடைய விஷயம். நீங்கள் சீக்கிரம் முடிக்க வேண்டும்.

**திரு. நீலநாராயணன் :** பேரறிஞர் அண்ணா அவர்கள் வரி விதிக்கும் முறையைப்பற்றிப் பேசுகிறபோது, "தாங்குகிறவர்கள் மீது வரியைப் போடுங்கள்; அதனை யார் தாங்கமாட்டார்களோ அவர்களுக்குச் சலுகையைக் காட்டுங்கள்" என்று கூறியிருக்கிறார்கள். நான் இந்த பட்ஜெட் வரியைப் பார்த்தேன். யார் யாருக்கு வரி போடப்பட்டிருக்கிறது என்பதை விளக்கியிருக்கிறார்கள். அதே சந்தர்ப்பத்திலே சில பேருக்கு உதவி செய்வதாகவும் நிலைமைகள் இருந்து கொண்டிருக்கின்றன. யார் யாருக்கு ஒத்தாசை செய்திருக்கிறார்கள் என்றால், 'சிம்சன்' நிறுவனத்திற்கும், 'அசோக் லேலண்ட்' நிறுவனத்திற்கும் அரசு உதவி செய்யப் போகிறது என்று தெரிகிறது. இது எப்படிப்பட்ட உதவி என்று எங்களுக்குத் தெரியவில்லை. ஆனால் இப்படிப்பட்ட பெரிய, பெரிய திமிங்கலத்திற்கு அரசு உதவி செய்கின்ற நிலைமையிலே இருந்து கொண்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டுகிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் "தாங்கக்கூடியவர்கள் மீது வரிகளைப் போட்டு, தாங்க முடியாதவர்களுக்குச் சலுகையைக் கொடுங்கள்" என்று கூறிய அந்தக் கொள்கை இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையிலே நிலைநாட்டப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால், நிச்சயமாக இல்லை இல்லை என்று தான் சொல்ல வேண்டியிருக்கிறது. ஆகவேதான் இந்த அரசை மிகப்பணிவோடு கேட்டுக்கொள்ளுகிறேன், கொள்ளை லாபம் தருகிற பல தொழில்கள் இந்த நாட்டிலே இருக்கின்றன. அவற்றையெல்லாம் தேசியமயமாக்க வேண்டும். தேசியமயமாக்க வேண்டும் என்பது பேரறிஞர் அண்ணா அவர்கள் கண்ட கனவு. அவருடைய முதல் திட்டம் பஸ்களை தேசியமயமாக்க வேண்டும் என்பது. டாக்டர் கலைஞர் அவர்கள் போக்குவரத்து அமைச்சராக இருந்தபோதே, அண்ணா அவருடைய காலத்திலேயே, மிகத் துணிவோடு பஸ்கள் தேசியமயத் திட்டத்தைக் கொண்டு வந்து அதை நிறைவேற்றிக் காட்டினார்கள். பிறகு அதைக் கொஞ்சம் கொஞ்சமாக விரிவுபடுத்தினார்கள். ஆனால் 1975-க்குப் பின்னாலே அத்திட்டம் நிறைவேற்றப்படவில்லை, விரிவுபடுத்தப்படவில்லை, அப்படியே நின்று போய்விட்டது. அப்படிப்பட்ட திட்டங்களை இந்த அரசு தன் கையில் எடுத்துக்கொள்ளக் கூடாதா? பெருந் தொழில்களை இந்த அரசு கையில் எடுத்து, தன்னுடைய நிர்வாகத்தின்கீழ் கொண்டு வந்து, அதன் மூலமாகத் தன்னுடைய வருவாயைப் பெருக்கிக்கொள்ளக் கூடாதா?

நான் இந்த மன்றத்திலே இருக்கின்ற சிலருக்குப் புதியவனாக இருந்தாலும், நான் இந்த மன்றத்திற்குப் பழையவன்தான். 10 ஆண்டுகளுக்கு முன்பு, நவசக்தி பத்திரிகையின் நிருபராக இங்கே இருந்தவன் நான். அப்போதெல்லாம் உரையாற்றுதல் நடந்து கொண்டிருக்கும்போது, ஒரு விளையாட்டை வேடிக்கை பார்ப்பவன், இந்த விளையாட்டு நடந்து கொண்டிருக்கும்போது ஆரம்பத்திலேயிருந்து, பந்தயத்திலே அவர்களுடைய கால்களையும் அவர்களுடைய உடம்பையும் பார்த்துக்கொண்டிருப்பது போல, எனக்குள்ளே நான் முணுமுணுத்துக்கொண்டிருந்தேன். இப்போது முழக்கமிட வந்திருக்கிறேன். நிருபர்களுடைய ஒரு பிரதிநிதி என்று சொல்லிக்கொள்வதிலேயும் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

கல்லூரி ஆசிரியர்களுடைய போராட்டம் ஒரு புறம், மருத்துவக் கல்லூரி ஆசிரியர்கள் ஒரு புறம், மாணவர்கள் போராட்டம் ஒரு புறம் என்று இருக்கின்றது. எல்லாக் கட்சிகளும் சொந்தம் எனக்கு என்பது ஒரு புறம். முதலாளி என்கின்ற அந்தஸ்து மறுபுறம். தேசிய நீரோட்டம், அது எனக்கு ஈரோட்டுப் பாதையாகின்ற நிலை ஒரு புறம். அத்தனையையும் சேர்த்து முறியடித்தேன். சேலம், கோவை, நீலகிரி, தர்மபுரி ஆகிய மாவட்டத்தில் இருக்கின்ற பட்டதாரிகள், இந்த ஆட்சி நியாயமான ஆட்சி என்றும், நீதியான ஆட்சி என்றும், நேர்மையான ஆட்சி என்றும், தலையீடு இல்லா ஆட்சி என்றும் தீர்ப்பு வழங்கியிருக்கிற அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மேலவையில் முதலிலே உறுப்பினராக, தற்போதைய முதலமைச்சர் அவர்கள், நுழைந்த காலத்திலே சொல்லிய கருத்துக்களை நான் நினைவு படுத்திக்கொள்ள வேண்டுகிறேன். அவர்கள் இதே மேலவையில் 1963 மார்ச் 8 ஆம் தேதி உரையாற்றும்போது, குறிப்பிட்டிருக்கிறார்கள். 'நான் பிரச்சாரத்திற்குச் செல்வதென்றால், நான் இங்கே வந்திருக்கவேண்டிய தேவையில்லை என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். எல்லோருக்கும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன் பிரச்சாரத்திற்கு வரவேண்டும் என்றால், இந்த மன்றத்தை விட, இன்னுட ஒரு பெரிய கூட்டமே, ஒரு ஆயிரம் பேருக்கு வெளியிலே விஷயம் சொல்ல முடியும். ஆனால் இந்த வேலையாக நான் இங்கே வரவில்லை. சட்டபூர்வமாக, ஜனநாயக முறைப்படி எதுவுமே இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தான் பேசுகின்றேனே தவிர, குறை கூறி அது பத்திரிகையிலே வந்தால், திருப்தி அடையலாம் என்ற எண்ணத்திலே அல்ல' என்று முதல்வர் அவர்கள் அன்று ஆற்றிய கருத்தின் அடிப்படையிலே, மிகப் பெரிய ஜனநாயகக் கடமையை ஆற்றவேண்டி வந்திருக்கிறேன் என்பதை நான் மனதார நம்புகிறேன். இங்கு நிதிநிலை அறிக்கையிலே உரையாற்றுகின்ற வாய்ப்பினை நான் பெற்றிருக்கிறேன். இது என்னுடைய கன்னிப் பேச்சு என்பதாலேயே





யாரும் குறுக்கிட மாட்டார்கள் என்று சொன்னார்கள். நான் குறுக்கிட மாட்டார்கள் என்ற காரணத்தினாலேயே எதையும் சொல்லாமல், எனக்கு நானே கட்டுப்பாடு செய்துகொண்டு என் உரையை ஆற்றத் தலைப்படுகிறேன்.

பொதுவாக நிதிநிலை அறிக்கை என்றாலே ஒரு புலம்பல் என்று சொல்வார்கள். நிதியைத் திரட்டுகிற ஆதாரங்கள், அதைத் திரட்டிப் பெறுவதில் உள்ள சிரமங்கள், இடைக்காலத்தில் ஏற்பட்ட புயல், வெள்ளம் போன்ற காரணங்களால் பாதிப்பு. அதனால் திட்டங்களை நிறைவேற்ற முடியாத நிலைமை என்று ஒரு புலம்பலாக இல்லாமல் மாறுபட்டிருக்கக்கூடிய ஒரு நிதிநிலை அறிக்கையாக, ஒரு மனோகரமான நிதிநிலை அறிக்கையை நான் காண முடிகிறது. அதிலே காணப்படுகின்ற சொற்கள், உள்ளத்தையே நெகிழ வைக்கின்ற சொற்களாக, வாழ்வை மலர வைக்கின்ற சொற்களாக இருப்பதைப் பார்க்கிறோம். இதை நான் சொல்லவில்லை. இந்த நிதிநிலை அறிக்கையிலே பழைய மரபுகளை மாற்றி ஒரு புதிய மரபை அரசு வகுத்திருக்கிறது என்று 'Economic Times' என்ற ஏடு குறிப்பிட்ட கருத்தைத் தான் உங்களுடைய பார்வைக்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

"The budget, which represents a departure in presentation, has given prominence to a large number of schemes—rather than the conventional elaboration of the finance intricacies—designed, as Mr. Manoharan explained, to increase employment opportunities for the poor people in the rural areas and for increasing and expanding the educational and medical facilities."

என்ற குறிப்பை இங்கே நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டுவருவது சிறப்பாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். நிதிநிலை அறிக்கையிலே குறிப்பாக கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது எண்ணி மகிழக்கூடிய ஒன்றாகும்.

"வயிற்றுக்குச் சோறுண்டு கண்டீர்,
இங்கு வாழும் மனிதர் எல்லோருக்கும்"

என்று சொல்வார்கள்.

"தனி ஒருவனுக்கு உணவில்லையெனில்
இந்த ஜெகத்தினை அழித்திடுவோம்"

என்ற கருத்தையும் சொல்வார்கள். தேசிய நீரோட்டத்தில் இருப்பவர்கள் பல ஆண்டுகளாக இந்த வரிகளைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அமரர் ஜீவா அவர்கள்கூட மேடைக்கு மேடை சொன்ன வரிகள் என்பது மட்டுமல்ல, இடம் வலமாக இருந்து இந்த எண்ணத்தைச் சொல்லியிருக்கிறார்கள். இந்த நிதிநிலை அறிக்கைபற்றிப் பேசும்போது அதைப்பற்றிப் பேசவேண்டாம் என்ற எண்ணத்திலே இதை நான் இப்போது விட்டுவிடுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** பல முறை சொல்லியும் முடிக்கவில்லையென்றால், அடுத்த உறுப்பினரைப் பேச அழைக்க வேண்டி வரும்.

**திரு. நீலநாராயணன் :** சென்னை மாநகரத்தைப் பற்றி மட்டும் இன்னும் ஒரே நிமிடத்திலே கூறி என்னுடைய உரையை முடித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையிலே பல செய்திகளைப்பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. உலக வங்கியின் மூலமாகப் பல கடன் உதவிகளைப் பெற்று சென்னையில் சீர்திருத்தங்களைச் செய்ய இருக்கிறார்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. புறநகர் வளர்ச்சிக்கு 14.5 கோடி ரூபாய் அளவில் திட்டம் தயாரித்திருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு சென்னை எப்படி இருந்து கொண்டிருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ரோடுகள் எல்லாம் 'பல்லாங்குழி' போல் காட்சி அளித்துக்கொண்டிருக்கின்றன. வேண்டுமானால் நம்முடைய அமைச்சர் அவர்கள் தயவுசெய்து, காரில் அல்ல, ஒரு ஆட்டோ ரிக்ஷாவில் ஜி.என். செட்டி ரோடுக்குச் சென்று பார்க்க வேண்டும். கழனிகளில் வரப்பை எப்படிக் கட்டியிருப்பார்களோ அதைப் போலவே இருபது அடி, முப்பது அடிக்கு ஒரு மேடு என்று பல மேடுகளை உருவாக்கிவிட்டிருக்கிறார்கள். மழைக்குப் பின்னால், பல ரோடுகள் பழுதடைந்துவிட்டன, அவற்றைச் சீர்திருத்த பல கோடி ரூபாய்களைச் செலவு செய்யப் போகிறோம் என்று அமைச்சர்களும், அரசாங்கமும் அறிக்கைகளாகவும் பத்திரிகைகளிலே செய்திகளாகவும் வெளியிட்டிருக்கிறார்கள். இதுவரையிலே 'Patch work' என்ற முறையிலே ஒரு சில வேலைகள் தான் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. வேறு ஏதும் நடைபெறுவதாகத் தெரியவில்லை. இப்படிப்பட்ட குறைகளை நாங்கள் யாரிடம் எடுத்துச் சொல்லுவது? நகராட்சியில் சொன்னால், "நீங்கள் எழுதி அனுப்புங்கள்" என்று சொல்லுகிறார்கள். எழுதிக் கொண்டு போனால், "தபாலில் அனுப்பியிருக்கலாமே" என்று சொல்லுகிறார்கள். தபாலில் அனுப்பினால், அதைப் பொருட்படுத்துகிறார்களா என்றால், நிச்சயமாக இல்லை.

(பிற்பகல் 5-10)

இப்படிப்பட்ட நிலவரங்களுக்கெல்லாம் காரணம் கார்ப்பரேஷனிலே மக்களுடைய பிரதிநிதிகள் இல்லை என்பதுதான். இந்தக் குறை நீண்ட நெடு நாட்களாக இருந்துகொண்டிருக்கிறது. அதற்குக் காரணங்கள் கூறப்பட்டிருக்கின்றன. நகராட்சிகள், பஞ்சாயத்துக்கள் எலக்ஷன் நடக்கின்ற போது, சென்னை நகரத்திற்கு எலக்ஷன் நடைபெற்றாக வேண்டும். அந்த அளவுக்கு மக்கள் இப்போது குமுறிக்கொண்டிருக்கிறார்கள். இல்லை





என்று சொன்னால், குஜராத் மாநிலமாக சென்னை மாநகரம் மாறிவிடுமோ என்று நான் சந்தேகப்படுகிறேன். தேர்தல் நடத்த வேண்டும் என்பதற்காக ஒரு போராட்டம் வேண்டுமா என்று மக்கள் கூக்குரல் எழுப்புகிறார்கள் என்பதை இந்த அமைச்சரவைக்குத் தெரிவித்துக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

*** மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, காரிலே போவதற்குப் பதிலாக ஒரு ஆட்டோவில் கூட போய் பார்க்கலாம் என்று சொன்னார்கள். நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களும் மற்றவர்களும் சென்று அங்கு இருந்து வருகின்ற குறைகளை கவனித்துக்கொண்டிருக்கிறோம். பல ஆண்டுகளாக இருப்பதை நாங்கள் சீர் செய்துகொண்டு வருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏறத்தாழ 15, 20 டிவிஷன்களுக்கு இதுவரைக்கும் சென்று பார்த்திருக்கிறோம். ஒரு நாளைக்கு 5, 6 மணி நேரம்கூட நடந்தே சென்றிருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அமைச்சர் அவர்கள் தகவல்தான் கொடுக்கிறார்கள். ஏற்கனவேதான் வேலைகள் நடக்க ஆரம்பித்து விட்டதே என்று நாம் சந்தோஷப்பட வேண்டும்.

**திரு. நீலநாராயணன்:** என்னுடைய பிரச்சினை ரோடுகள் பழுது அடைந்திருக்கிறதா இல்லையா என்பதுதான். அதனை அமைச்சர் அவர்கள் நடந்து போனால் கால புரியாது. எனவேதான் ஆட்டோவில் போக வேண்டுமென்று கூறினேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, "ஒளி உமிழும் விளக்குகள், உரையாற்றும்போது குறிப்பெடுக்கும் நிருபர்கள், ஒன்றுக்குப் பத்தான ஒலிபெருக்கிகள்."

"சமன் செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க்கு அணி".

என்று குறளில் சொல்லியிருப்பதுபோல் ஆட்சி செலுத்தும் ஆட்சியாளர்கள்

"இடிப்பாரை இல்லா ஏமரா மன்னன்
கெடுப்பாரிலானும் கெடும்"

என்ற குறளின் வழி, எதிர் வரிசையிலே இருக்கின்றவர்கள், இவர்கள் மத்தியிலே நானும் இருப்பதற்கு ஒரு வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்த தமிழக முதல்வர், புரட்சித் தலைவர் அவர்களுக்கு 'நான் இந்த மாமன்றத்தின் வாயிலாக என் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வள்ளுவர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

"உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேராதியல்வது நாடு" என்று.

அதனாலேதான் உணவு தருகிறோம், உங்களுடைய பிணி போக்குவதற்கு மருத்துவத் துறையிலே பல திட்டங்களை வகுத்திருக்கிறார்கள். அத்தோடு செறுபகை நாடாக இருக்க வேண்டாம் என்பதாலே எந்தப் பிரச்சினையானாலும் சரி, தொழிலாளர்களுடைய பிரச்சினையானாலும் சரி, விவசாயிகளுடைய பிரச்சினையானாலும் சரி, அந்தப் பிரச்சினைகளைப் பேசியே தீர்க்கக்கூடிய அளவிலே ஆட்சி இருப்பதை நாம் பார்க்க முடிகிறது.

கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டம் என்று சொன்ன உடனே, அதைப் பற்றி மூன்று விதமாக விமர்சிக்கிறார்கள். அது நடக்கக்கூடிய காரியமா என்று சொல்கிறார்கள். அது நடக்காது என்று சொல்கிறார்கள். இது மத்திய அரசின் திட்டம்தானே என்று சொல்கிறார்கள். இதுபோன்ற ஒரு திட்டத்தை ராஜஸ்தானிலே "Food for work" என்ற முறையிலே அவர்கள் நடைமுறைப்படுத்தினார்கள் என்கிறார்கள். மராட்டியத்திலே அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள், "ரூரல் எம்பிளாய்மெண்ட் ஸ்கீம்" என்ற அளவிலே என்று சொல்கிறார்கள். இந்த இரண்டு திட்டங்களிலே இருக்கின்ற குறைகளை, நிறைகளை எல்லாம் பார்த்து தமிழகத்திற்கு, தமிழ் நிலத்திற்கு என்று உருவாக்கப்பட்ட "எம்ப்ளாய்மெண்ட் காரண்டி ஸ்கீம்" என்கிற திட்டம்தான் அது என்று தெரிவித்துக் கொள்கிறேன். இதைப்பற்றிச் சொல்கின்றபோது, மூன்று ரூபாய் ஒரு காசா என்று மாண்புமிகு அங்கத்தினர் திரு. கு. மா. பாலசுப்பிரமணியம் அவர்கள் இந்த மாமன்றத்திலே சொன்னார்கள். மதிப்பிற்குரிய மேலவைத் துணைத் தலைவர் அவர்கள் சொன்னார்கள். வேலையில்லாமல் போனால், 4 கோடி செலவாகுமே என்ற ஒரு அச்சுறுத்தல் என்று சொல்லமாட்டேன், ஒரு எச்சரிக்கைதான் செய்திருக்கிறார் என்றுதான் சொல்ல வேண்டும். அந்த மாதிரிப் பார்க்கின்றபோது, இதிலே ஒரு உண்மை இருக்கிறது. இந்த மூன்று ரூபாயை கிராமப்புற மக்கள் இப்படிக் கருதுவார்களானால், அவர்கள் அவ்வளவு வளமாக நம் மக்கள் இருக்கிறார்களே என்று மகிழ்ச்சி அடையலாம். ரூபாய் 4 கோடி ஆகுமே என்று அல்ல, ரூ. 400 கோடி ஆனாலும் இந்த நாட்டு மக்களுடைய நலம்தான் முக்கியம், அவர்கள் நல்வாழ்வுதான் நம்முடைய லட்சியம் என்று இருக்கிற அரசு இது என்று சொல்கிறேன். பாராட்டுகிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் படி அரிசித் திட்டத்தைக் கொண்டு வந்த போது, இதுபோன்ற பயமும் இருந்தது, எச்சரிக்கையும் இருந்தது. ஆனால்





படி அரிசித் திட்டத்தைக் கொண்டு வந்து, பெரிய புகழை அண்ணா அவர்கள் பெற்றதுபோல, புரட்சித் தலைவர் அவர்களும் இந்தத் திட்டத்தாலே தமிழ் கூறும் நல் உலகத்தின் வாழ்த்துக்களைப் பெற இருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

எந்த அரசானாலும் ஒரு பெரிய திட்டத்தை அவர்கள் ஆட்சிக் காலத்திலேயே வகுத்து அந்தத் திட்டத்தை நிறைவேற்றி விட்டால் மகிழ்ச்சியும், தோல்விகள் சோதனைகளாகவும் ஆகிவிடுவது என்பது ஒவ்வொரு கால கட்டத்திலும் உள்ளதுதான். அதை நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். அதுபோலவே நூறு கோடி ரூபாயில் காகித ஆலைத் திட்டம் அரசின் ஒரு மகத்தான திட்டம் என்பதையும் அதற்கு என்று மத்திய அரசை இந்த அரசு வலியுறுத்திக் கொண்டிருக்கிறது என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். அது நல்ல நோக்கம். வீராணம் சிமெண்ட் குழாய்களை முந்தைய ஆட்சியின் சின்னங்களாக நாம் இன்று பார்த்துக்கொண்டிருக்கிறோம் என்று சிலர் குறிப்பிட்டார்கள். என்ன திட்டம்? நாங்கள் எல்லாம் போட்டு வைத்துவிட்டுப்போன திட்டம் தானே என்று சொல்கிறார்கள். உண்மைதான். காடம்பாறை நீர் மின் திட்டம் என்பதை எடுத்துக்கொள்ளுங்கள். பழைய அரசு போட்ட திட்டம்தானே. 1972-ல் இருந்து 6 ஆண்டுகளாக கிடப்பிலே போட்ட திட்டத்தை இந்த அரசு நிறைவேற்றியிருப்பதை நாம் பாராட்ட வேண்டும். இல்லையென்றால், திட்டாமலாவது இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். விவசாயத் துறையிலே இந்த அரசினுடைய கவனம் என்ன? இந்த அரசினுடைய கொள்கை என்ன என்பது, இந்த நிதிநிலையிலே மிகத் தெளிவாக விளக்கப்பட்டிருக்கிறது. நன்செய் நிலங்களைத்தான் இதுவரை நாட்டிலே நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். எப்படி நெல் பயிர் வளர்ச்சி பெறச் செய்வது, வசதிகளைச் செய்து தருவது, கரும்புப் பயிருக்கு என்ன செய்யலாம் என்றுதான் இதுவரை பல நிதிநிலை அறிக்கைகளும் பல நடைமுறை நிகழ்ச்சிகளும் இருந்தன. அதற்கு மாறாக புன்செய் நிலங்கள் பக்கம் கவனம் சென்றிருக்கிறது என்பதைப் பார்க்கிறேன். அந்தப் புன்செய் நிலங்களில் மழையையே எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்ற நிலத்தில், வறட்சி நிலத்தில் என்ன செய்யலாம் என்பதுபற்றியும், வறட்சி நிலங்களில் என்ன என்ன பயிர்களைக் கொண்டு வரலாம் என்பதைப்பற்றியும் இந்த அரசு புதிய நோக்கத்தோடு விவசாயத் துறையிலே தன்னுடைய பார்வையைச் செலுத்தியிருக்கிறது என்பதை இந்த நிதிநிலை அறிக்கையிலே காண முடிகிறது.

பாசனத் திட்டத்தை எடுத்துக்கொண்டால், அப்போதெல்லாம் லாப நோக்கத்துடன்தான் பாசனத் திட்டங்களை வகுத்திருக்கிறார்கள். இந்த

நிலையிலே போனால், அத்தனை நிலங்களுக்கும் நீர் பாயுமா, எவ்வளவு நிலங்கள் விளையும் என்கின்ற கணக்குகளை எல்லாம் பார்ப்பது உண்டு. அப்போது யாருக்குச் சலுகைகள் கொடுத்தால், எவ்வளவு வாக்குகள் கிடைக்கும் என்றெல்லாம் இருந்த நிலைமைகள் மாறி, இந்த நல்ல திட்டங்கள் இப்போது எத்தனை மக்களுக்குப் பயன்படும், இதனாலே எத்தனை ஆயிரம் மக்கள் பயனடைவார்கள் என்ற கணக்கில் செயல்படுகின்ற நிலைமைகளைப் பார்த்து, நான் உள்ளபடியே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாற்றுத் தலைவர் திரு. க. இராமமூர்த்தி தலைமை)

(பிற்பகல் 5-20)

நம்முடைய மாநிலத்தையும், அண்டை மாநிலங்களையும் ஒப்பிட்டுப் பார்க்கிறேன். கர்நாடகத்தில் நீர் இருக்கிறது, போதுமான நிலங்களில்லை. கேரளாவில் நீர் இருக்கிறது, நிலப்பரப்பு இல்லை. ஆந்திராவில் நிலமும் இருக்கிறது, நீரும் இருக்கிறது. ஆனால் நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தமட்டில், நிலம் இருக்கிறது, உழைப்பு இருக்கிறது, ஆனால் நதி நீர் இல்லை. இழந்துவிட்ட எல்லைகளை நினைவுபடுத்தச் சொல்லவில்லை இதை. இருக்கிற நிலைமைகளைச் சொல்கிறேன். "நல்லார் ஒருவர் உளரேல், அவர் பொருட்டு பெய்யும் மழை" என்ற முறையில் இப்போது மழை பெய்து கொண்டிருக்கிறது. நிலத்தடி நீரை வெளியே கொண்டு வந்திருக்கிறார்கள். எனவே இந்த நிதிநிலை அறிக்கையில் உள்ள திட்டங்கள் பாதிக்காதென்று நம்புகிறேன். அதோடு விவசாயத் துறையிலே ஒரு புதிய நிலையைப் பார்க்கிறோம். முன்பு படி அரிசித் திட்டம் கொண்டு வந்தபோது, அரிசியின் விலையைக் குறைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இப்போது விலையை ஏற்ற வேண்டிய நிலை இருக்கிறது. விவசாயிகளின் நிலையைப் பார்க்கிறபோது, அது தேவைப்படுகிறது. இன்று விவசாயத் துறையை நினைத்துப் பார்க்கிறபோது, குறிப்பாக விவசாயப் பட்டதாரிகளுக்கு வேலை கிடைத்திருக்கிறது. இதை அரசின் சாதனை என்று சொல்ல முடியும். இன்னும் சொல்லப்போனால், வேலை இருக்கிறது, விவசாயப் பட்டதாரிகள் இல்லை என்ற நிலை இருக்கிறது. எனவே அடுத்த கல்வி ஆண்டிலாவது கோவை விவசாயக் கல்லூரியிலே அதிக இடங்களை உருவாக்க வேண்டும் அல்லது புதிய விவசாயக் கல்லூரி ஒன்றைத் தோற்றுவிக்க வேண்டும். அப்படித் தோற்றுவிக்கும்போது, என்னுடைய தொகுதியான தர்மபுரியிலோ அல்லது நீலகிரியிலோ விவசாயக் கல்லூரியை ஏற்படுத்தினால், சிறப்பாக இருக்குமென்று அரசுக்கு என்னுடைய வேண்டுகோளாகத் தெரிவித்துக்கொள்கிறேன். இதுவரையில் இருந்த முறைகளை மாற்றி, அமைச்சர்களுக்குள்ள இலாக்காக்களைப் புதிய முறையில் இணைத்திருக்கி





றார்கள். விவசாயமும் நீர்ப் பாசனமும் ஒன்றாக இருக்கிறது; போக்குவரத்தும், நெடுஞ்சாலைத் துறையும் ஒன்றாக இருக்கிறது. எனவே இந்த அரசு ஒவ்வொன்றிலும் எந்த அளவிற்கு தனிக் கவனம் செலுத்தியிருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

பொருளாதார முன்னேற்றத்தை மூன்று நிலைகளிலே எண்ணிப் பார்க்க முடிகிறது. விவசாயம் பசுமைப்புரட்சி மூலம்; பால்வளத் துறை வெண்மைப் புரட்சி மூலம்; தொழில் துறை செம்மையான தொழில் புரட்சி மூலம் முன்னேற்றம் அடைந்திருக்கின்றன. பால்வளத் துறையை நாடு போற்றும் சூழ்நிலை இருக்கிறது. ஐந்து ஆண்டுகளில் 40 கோடி ரூபாய் செலவிடப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. 9.5 இலட்சம் கால்நடைகள் கொண்டு வரப்பட்டு, 8 இலட்சம் விவசாயிகள் பயன்பெற இருக்கிறார்கள்.

அடுத்து, பட்டதாரிகள் பிரச்சினையை அணுகுவதற்கு முன்பு, ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். பட்டதாரிகள் தொகுதியில் நான் வேட்பாளனாக நின்றபோது, ஒரு கருத்தைத் தெரிவித்தேன். மேலவையில் பட்டதாரிகள் பிரச்சினையை முழுவதும் பேசிக் கொண்டிருக்க மாட்டேன்; இந்த அமைப்பு முறை பட்டதாரிகளைப் பற்றி மட்டும் பேசுவதற்காக அமைந்த முறையல்ல; பல்வேறு பட்டதாரிகள்—அலுவலகங்கள், கல்லூரிகளில் இருக்கிறவர்கள், மருந்தகங்களில் இருக்கிறவர்கள் நாட்டின் பல்வேறு பிரச்சினைகளில் என்ன கருத்து வைத்திருக்கிறார்கள் என்பதைச் சொல்லத்தான் வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது; முழுக்க முழுக்க பட்டதாரிகள், வேலையில்லாத பட்டதாரிகளைப் பற்றியே சொன்னால், இவன் ஏதோ ஒன்றை 'ஸ்பெஷலைஸ்' செய்துவிட்டு வந்துவிட்டான் என்று கருதுவார்கள்; பட்டதாரிகள் நாட்டில் பல்வேறு பிரச்சினைகளைப் பற்றி என்ன கருத்து கொண்டிருக்கிறார்கள் என்பதைச் சொல்லத்தான் போகிறேன் என்று தெரிவித்தேன். இருந்தாலும் எனக்கு வாக்கு அளித்தவர்களுடைய சில கோரிக்கைகளைப் பற்றி நினைவுபடுத்துவது என்னுடைய தலையாய கடமை.

மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் முதுகலைப் பட்டம் பெற வசதி செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உயர்நிலைப் பள்ளிகளிலும், மேல்நிலைப் பள்ளிகளிலும் உதவித் தலைமை ஆசிரியர்கள் அமர்த்தப்பட வேண்டும். ஆயிரம் பேர்கள் இருக்கிற இடத்தில் இப்போது உதவித் தலைமை ஆசிரியர் இருப்பதுபோல், எல்லாப் பள்ளிகளிலும் உதவித் தலைமை ஆசிரியர் பதவி ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு இலவசக் கல்வி எல்லா நிலைகளிலும் வழங்கப்படவேண்டும். போக்குவரத்துத் துறையில் பணியாற்றுகிறவர்கள் பேருந்துகளில் செல்ல அனுமதிக்கப்படுகிறார்கள். அதுபோல ரயில்வேயில் பணி

யாற்றுகிறவர்கள் இலவசமாக ரயிலில் செல்ல வசதி இருக்கிறது. அதுபோல கல்விக்கூடங்களில் கல்வி கற்றுத் தரும் ஆசிரியர்களின் பிள்ளைகள் கல்லூரி களில் படிக்கவும், மேல்நிலைக் கல்வி பெறவும் இலவசமாக வசதி செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆசிரியர்கள் பணி செய்யும் நாட்களை அடிப்படையாகக் கொண்டு, ஆண்டுக்கு 23 நாட்கள் விடுப்பு அளிக்க வேண்டும். மற்ற பணியில் இருக்கிறவர்களுக்கு 33 நாட்கள் விடுப்பு இருக்கும்போது, ஆசிரியர்களுக்கு 21½ நாட்கள்தான் அனுமதிக்கப்படுகிறது என்பதை எண்ணிப் பார்த்து, அந்தச் சலுகையை வழங்க வேண்டும். ஆசிரியர்கள் ஒரு மணி நேரம் உரையாற்றினாலும், அது உடலைப் பாதிக்கிறது. ஓய்வு பெறும் ஆசிரியர்களில் எவ்வளவு பேர் நோயாளிகள் இருக்கிறார்கள் என்பதைக் கவனித்து, அவர்களுக்கும் தகுந்த அளவிற்கு ஓய்வு தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

புலவர் தகுதி பெற்ற பி.டி. பட்டம் பெற்ற இடைநிலை ஆசிரியர்கள், சிறப்பு ஆசிரியர்களுக்கு உயர் கல்வித் தகுதி பெற்ற நாளிலிருந்து பதவி உயர்வு தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எப்படி 'Bar Council இருக்கிறதோ அப்படி "Teachers Council" உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்போதிருக்கும் சூழ்நிலையில், இருக்கும் இடைஞ்சல் களை ஆசிரியப் பெருமக்கள் உணர்ந்திருப்பார்கள். மெக்காலே காலத்து கல்வி முறை மட்டுமல்ல. அன்றிலிருந்து இன்றுவரை ஆசிரியர்கள் பல்வேறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்குள்ளே மோதிக் கொள்வதற்குரிய முறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. வக்கீல்களைப் பொறுத்தவரையில், ஒரே நிலை, ஒரே விவகாரம். இந்த நிலை இவர்களிடை யேயும் வர வேண்டும். அப்படி வருவதற்கு முன்னால் ஆசிரியர்கள் தங்க ளிடையே இருக்கும் சிக்கல்களையும், அவர்கள் தங்களிடையே மோதிக் கொள்ளும் முறைகளையும் மாற்றி, அவர்களை ஒருங்கிணைக்கும் முறையை அரசு வகுக்க வேண்டும். அதுவும் ஒரு ஆசிரியர் கல்வி அமைச்சராக இருக்கும்போது, அதைச் செய்ய முடியுமென்று நான் மனதார நம்புகிறேன்.

அடுத்து, தமிழாசிரியர்களைப் பற்றி ஓரிரு கருத்துக்களைக் கூற விரும்பு கிறேன். ஏறத்தாழ 2,000, 3,000 தமிழாசிரியர்கள், புலவர்கள் இன்றைக்கு வேலையில்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் ஏதேனும் பொறுப்பு தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கோவில்களில் அவர்களை ஏற்றுக்கொள்கிற நிலை வருமென்று முதல்வரவர்கள் தெரிவித்திருப்பது அவர்களுக்கு மகிழ்ச்சி தருகிறது. அதுமட்டுமல்ல. கோவில்களில் மட்டு மல்லாமல், சுற்றுலா வாரியப் பொறுப்பை வைத்திருக்கிற மாண்புமிகு அமைச் சரவர்கள் சுற்றுலா வளர்ச்சியைக் கருதி, சில முக்கியமான இடங்களைப்





பற்றி விளக்கம் சொல்ல, கல்வெட்டுக்களின் கதைகளைச் சொல்ல தமிழாசிரி யர்களை ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தமிழாசிரி யர்களை, வெளிநாடுகளில் இருக்கும் தமிழ்ச் சங்கங்களுக்கு தூதுவர்களாக அனுப்ப வேண்டுமென்று சொல்லி, அவர்களைப் பல நிலைகளில் பயன் படுத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் புலவர் புலமைப்பித்தன் அவர்கள் குறிப்பிட்டதுபோல், வீதி களிலே திருக்குறளுக்கு விளக்கம் சொல்ல அவர்களைப் பயன்படுத்தி, அவர் களுக்கும் வேலை தந்து, தமிழுக்கும் வாழ்வு தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தச் சபையினுடைய முன்னவர் அவர்கள் ஓரிடத்தில் பேசும்போது, நிதிநிலை அறிக்கைபற்றி அழகாகக் குறிப்பிட்டார்கள். நிதிநிலை அறிக்கை என்பது கவிதை; அதைத் தொடர்ந்து வருகிற மானியக் கோரிக்கைகள் அதற்கான பதவுரை பொழிப்புரை என்று சொன்னார்கள். அதனாலே இந்த நிதிநிலை அறிக்கையைப் பார்த்து, ஒன்றுமே இல்லை ஒன்றுமே இல்லை என்று சொல்பவர்கள் முதலிலேயே ஒரு கருத்தைப் புரிந்துகொள்ள முடியாது. பதவுரையும், பொழிப்புரையும் கொடுக்கும் போது கவிதையைப் புரிந்துகொள்ளும் நிலைபோல, மானியக் கோரிக்கைகள் வரும்போது, அவர்கள் மனம் தெளிவார்கள் என்று மனதார நம்புகிறேன். நிதிநிலை அறிக்கையிலே எதையெதைப் படித்தார்களோ தெரியவில்லை, ஆனால், இரண்டை விடாமல் படித்தார்கள், விடாமல் சொன்னார்கள். அந்தத் தமிழ்ச் சுவையை நீங்கள் மீண்டும் பருகுகிற வாய்ப்பைப் பெற, நான் அதைப் படிக்கிறேன். "செல்லரித்துப் போன சித்தாந்தங்களும், உளுத்து மக்கிப் போன உதவாக்கரைத் திட்டங்களும் நாட்டைக் காப்பாற்றாது"; "தந்த மாளிகையில் இருப்பவர்கள் தாழ்வாரத்திற்கு வர வேண்டும். அப்போது தான் தீட்டப்படுகின்ற திட்டங்களில் உண்மைப் படம் தெரியும்" என்ற இந்த இரண்டு வரிகளையும் திரும்பத் திரும்பச் சொன்னார்கள். "Ivory Tower" என்ற ஆங்கில மரபுச் சொல்லிற்கு விளக்கம் A place or altitude without practical approach" என்பதுதான். ஏழைகளும், எளியவர் களும் எட்ட முடியாத தூரத்தில் கற்பனாவாதிகள் சஞ்சரித்துக்கொண் டிருக்கிற போக்குக்கு 'ஐவரி டவர்' என்று பொருள். பிரஞ்சுக் கவிஞராகிய செயிண்ட் பீவ் , un-tour-d'ivoire , என பிரஞ்சு மொழியில் கூறியது, பின்னர் ஆங்கிலத்தில் Ivory Tower என்று ஆகியது. மனித வாழ்க்கையின் கடமைகளிலிருந்து தொலைவாய் ஒதுங்கிய இடம் என்பதுதான் இதிலேயே பொருளாகும். கற்பனா வாதத்திலிருந்து நடைமுறை வாதத்திற்கு நீராட்டு வாருங்கள் என்ற அழைப்புதான் இந்த வரிகளின் விளக்கமாகும். பா சர்க்கரையில்லை என்பவர்களின் வருத்தத்தைக் காட்டிலும்

உப்பில்லை என்பது குறித்துதான் இந்த ஆட்சி கவலைப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். 'தந்த மாளிகை' என்று சொன்னாலும்கூட, 'பிறர் தந்த மாளிகையில்' இருக்கிறவர்கள் கொஞ்சம் கீழே இறங்கி வாருங்கள், இதில் ஒன்றுமில்லை என்று கருத வேண்டாமென்று, இதை அன்பழைப்பாக ஏற்றுக்கொள்ளுங்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அண்ணா அவர்கள் குடிசையில் உள்ளவர்களை கோபுரத்திற்கு ஏற்றி வைத்தார்கள், இவர்கள் மாளிகையிலிருந்து மண்ணுக்கு வரச் சொல்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் திருமதி தமிழரசி அவர்கள் வருந்தப்பட்டார்கள். அதே அண்ணா அவர்கள், குபேரபுரியில் குடியிருக்கிறவர்கள் கொஞ்சம் குசேலர் வீட்டிற்கு வாருங்கள் என்றும் சொன்னார்கள். அண்ணா அவர்கள், தொழிலாளர் தலைவரை அல்ல, பல குழந்தைகளைப் பெற்ற குசேலரைத்தான் குறிப்பிட்டார்கள்.

இந்த ஆண்டு குழந்தைகள் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் குழந்தைகளுக்காக நல்ல கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். இந்தியாவிலே ஆண்டு ஒன்றுக்கு, ஒரு குழந்தைக்கு 50 பைசா செலவு செய்கிறார்கள். ருஷ்யாவில் 20 ரூபாய் ஒரு குழந்தைக்குச் செலவழிக்கிறார்கள். ஜப்பானில் 25 ரூபாய் செலவழிக்கிறார்கள். மலேசியா, தாய்லாந்து ஆகிய நாடுகளில் 5 ரூபாய் செலவழிக்கிறார்கள். நம்முடைய மாநிலத்திலே 10 வயதிற்கு மேற்பட்டவர்களில் 60 சதவிகிதத்தினர் கல்வி கற்காதவர்களாக இருக்கிறார்கள். மத்திய அரசு தன்னுடைய நிதியிலே 3 சதவிகிதம்தான் கல்விக்காக ஒதுக்குகிறது. இன்றைக்கு 70 சதவிகிதம் பள்ளிகள் கிராமங்களிலே ஒரு ஆசிரியரைக் கொண்டு, மரத்தடியில் நடத்தப்படுகின்றன. 1.5 லட்சம் குழந்தைகள் இந்த நாட்டில் பிச்சைக்காரர்கள் இருக்கிறார்கள். இதையெல்லாம் மனதிலே எண்ணி, குழந்தைகளுடைய நல்வாழ்விற்காக அரும்பொருட் காட்சியகத்தை 6 லட்சம் ரூபாய் செலவிலும், இந்த ஆண்டு 250 காப்பகங்களையும், அடுத்த ஆண்டு 400 காப்பகங்களையும் இந்த அரசு கட்ட இருக்கிறது. 700 குழந்தைகளுக்கு காது கேட்கும் கருவிகள்; 1,000 ஊனமுற்ற குழந்தைகளுக்கு நடமாட உதவ ஊன்றுகோல்கள் வழங்கியிருப்பதற்காக இந்த அரசை மனதாரப் பாராட்டியாக வேண்டும். கிராமப்புறத்திலென்றால் இளை

(பிற்பகல் 5-30)

ஏ...

அவர்க 10 ஆயிரம் பேருக்குக் கைத்தொழில் பயிற்சி. படித்த-படிக்காத
மல்லாமல், ல்லாத அனைவருக்கும் உறுதியான வேலை வாய்ப்புத் திட்டம்
சரவர்கள் ற்சியில் தொழில் செய்ய இளைஞர்கள் முன் வந்தால், அவர்களுக்கு



வாய்ப்பளிக்கும் திட்டம். அவர்களுக்கு உதவியளிக்கும் திட்டம். டாக்டர் நாயுடம்மா குழு அறிக்கையின்படி பட்டுத் தொழில், தீப்பெட்டித் தொழில், தேயிலைத் தொழில் போன்ற சிறு தொழில்களின் மூலம், ஒரு ஆண்டுக்குள் 1,30,000 பேருக்குக் கூடுதல் வேலை வாய்ப்புக்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது.

300-க்கு மேற்பட்ட சிறு தொழில் வாய்ப்புகளுக்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதற்காக மாவட்ட மையங்களுக்கு 153 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பது உண்மையிலேயே பாராட்டத்தக்கது. இந்த ஆண்டில் சிறு தொழில் நடத்த 900 தொழில் கூடங்கள் ஏற்படுத்தப்படும். 310 தொழில் கூடங்கள் கட்டி முடிக்கப்பட்டு 590 தொழில்கூடங்கள் கட்ட வேண்டிய நிலையில் இருக்கின்றது. அடுத்தபடியாக, சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் அடுத்த ஆண்டு 200 இடங்களில் 2,000 தொழில் கூடங்களை 1.5 கோடி ரூபாய் செலவில் கட்ட இருப்பதைப் பாராட்ட வேண்டும். சிறு தொழிலில் ஈடுபட்டோர் மூலதனத்தை அதிகப்படுத்தி இருக்கும் சிரமம் போக்க சிட்கோ அடுத்த ஆண்டு முதல் கட்டமாக 25 இலட்சம் ரூபாய் ஒதுக்கி செலவு செய்ய முன்வந்திருப்பது வருங்காலத்தில் சிறு தொழிலுக்கு ஒரு நல்வாழ்வு, முன்னேற்றம் ஏற்படப் போகிறது என்பதற்கு ஒரு நல்ல அறிகுறி. மகிழ்ச்சியடையத்தக்க விஷயம்.

கைத்தறித் துறையை எடுத்துக்கொண்டால், 1976-77-ல் கோ-ஆப்டெக்ஸின் விற்பனை ரூ. 18 கோடியாக இருந்தது. 1978-79-ல் ரூ. 30 கோடியாக உயர்ந்திருக்கிறது. 12 கூட்டுறவு நூற்பாலைகளை விரிவாக்க 12 கோடி ரூபாய் செலவு செய்து மொத்தக் கதிர்கள் 2 இலட்சத்திலிருந்து 2.94 இலட்சமாக உயர்ந்துள்ளது. 1977 ஆம் ஆண்டில் 114 இலட்சம் ரூபாய் நஷ்டத்திற்கு மாறாக, இன்றையதினம் 200 லட்சம் ரூபாய் லாபத்தில் இது இயங்கத் துவங்கியுள்ளதற்காக அன்றைய மாண்புமிகு கைத்தறி அமைச்சரவர்களையும் இன்றைய கைத்தறி அமைச்சரவர்களையும் நாம் மனதாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

போக்குவரத்துக் கழகங்களில் வரும் இலாபத்தின் ஒரு பகுதியை போக்குவரத்துப் பேருந்துகள் செல்லக்கூடிய பழுதடைந்த சாலைகளின் மேம்பாட்டிற்காக, அவைகளைச் சரி செய்வதற்காக, செப்பனிடுவதற்காகச் செலவு செய்ய முடிவு செய்திருக்கக்கூடிய அறிவிப்பைப் பார்த்து உண்மையிலேயே மகிழ்ச்சியடைகிறேன். அதற்காக நிச்சயமாக இந்த அரசைப் பாராட்டித்தான் வேண்டும்.

அடுத்தபடியாக, கல்வித் துறையை எடுத்துக்கொண்டால், 14 வயது நிரம்பியபின் நேரடியாக எட்டாம் வகுப்புப் பொதுத் தேர்வு எழுத, தேர்வு ஒன்றை நடத்த அரசு முடிவு செய்துள்ளது. இது பாராட்டப்பட வேண்டிய அம்சம். பள்ளி இறுதித் தேர்வில் ஏதாவது பாடத்தில் தோல்வியுற்றிருந்தால், அப்படிப்பட்டவர்கள் தேர்ச்சி பெறாத தனித் தனிப் பாடங்களை எழுதி தேர்ச்சி பெறுகின்ற முறையை அரசு அனுமதித்திருக்கிறது. இதுவும் பாராட்டக்கூடிய ஒன்று. தேர்வில் ஏதாவது ஒரு பாடத்தில் தவறியவர்கள் மீண்டும் அந்தப் பாடத்தை மட்டும் எழுதித் தேர்ச்சி பெறுவதற்கான ஒரு வாய்ப்பை உருவாக்கிக் கொடுத்த அந்த நல்ல எண்ணத்தை உண்மையிலேயே பாராட்டுகிறேன். மேல்நிலைக் கல்வி பெறுகின்ற வாய்ப்பு முன்பு 78,000 பேருக்கு மட்டும்தான் இருந்தது. இப்பொழுது உயர்நிலைக் கல்விக்கு மேற்பட்ட 2 ஆண்டுப் படிப்புத் திட்டங்கள் என்ற வகையில் மேல்நிலை வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டதன் விளைவாகப் புதிய 11-வது வகுப்பில் மாணவர்களின் எண்ணிக்கை 1,14,000 ஆக உயர்ந்துள்ளது. இவ்வளவு எண்ணிக்கை அதிகத்திற்குக் காரணம் மேல்நிலைக் கல்வியை கிராமங்களுக்கு விரிவுபடுத்தியதால் ஏற்பட்ட மாற்றமே. மேல்படிப்பு வாய்ப்பு 187 கல்லூரிகளில் இருந்த நிலை மாற்றப்பட்டு இன்றையதினம் 912 உயர்நிலைப் பள்ளிகளில் அத்தகைய வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. சிறிய கிராமங்களில் வசிப்பவர்களாக இருந்தாலும், அவர்கள் நகரத்திற்கு வந்து சிரமப்பட்டு படித்துப் போகின்ற நிலை போக்கப்பட்டு, கிராமத்திலேயே உள்ள உயர்நிலைப் பள்ளிகளில் அவர்கள் மேல்படிப்பு படிப்பதற்குரிய வாய்ப்புக்களை அரசு ஏற்படுத்திக் கொடுத்திருப்பதற்காக இந்த அரசை மனதாரப் பாராட்டுகின்றேன்.

அடுத்தபடியாக, அறிவியல் ஆய்வுக் கூடங்களுக்கு 6 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பது பாராட்டத்தக்கது. விஞ்ஞான வசதி, கல்விக்கூடங்களில் இல்லையே என்று சொல்பவர்களுக்கு பதிலளிக்கும் விதத்தில் 6 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பது பாராட்டக்கூடிய ஒன்று. தொழில் கல்வியை எடுத்துக்கொண்டால், 709 பள்ளிகளில், 1,153 பிரிவுகளில், 24,000 மாணவர்கள் தொழில் பயிற்சி பெறுகிறார்கள் என்பதை எண்ணும்போது, விரைவில் தமிழ் நாடும் பஞ்சாப் மாநிலம் போல் ஒரு பெரிய தொழில் மைய மாநிலமாக ஆவதற்கான வழிவகைகள் உருவாகியிருக்கின்றன. தர்மபுரி மாவட்டத்தில் புதிய பாலிடெக்னிக் கல்லூரி வருவது குறித்து மகிழ்ச்சியடைகின்றேன். மேலும் அந்தத் தொகுதியிலிருந்து வந்துள்ள பிரதிநிதி என்ற முறையில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.



கப்பற் கட்டுமானத் தொழில் பயிற்சி தருவதற்கு வழிவகை செய்திருப்பது போற்றத்தக்க ஒன்று. பண்டைக் காலத்தில் கப்பல் பயணத்தில் தமிழர்கள் முன்னோடிகளாகத் திகழ்ந்திருக்கிறார்கள். ஆனால் இன்றையதினம் கப்பல் கட்டுமானத் தொழில் பயிற்சி பெற பம்பாய்க்கும் கல்கத்தாவுக்கும் போக வேண்டுமென்ற நிலை உள்ளது. அப்படிப் பயிற்சி பெறுபவர்களும் பெரும்பான்மையானவர்கள் வேறு மாநிலத்தில் உள்ளவர்களே. கப்பலில் பயணம் செய்யும்போது, நம் மாநிலத்தில் உள்ளவர்கள் அந்தக் கப்பலில் ஒருவர்கூட பணியாற்றவில்லையே என்ற குறையைப் போக்குவதற்காக இத்தகைய முயற்சியை செய்திருப்பதற்காக நான் அரசைப் பாராட்டுகிறேன்.

சட்டக் கல்லூரி வசதிகளை மேலும் விரிவுபடுத்தும் நோக்கத்துடன் கோவை, திருச்சி ஆகிய பகுதிகளில் சட்டக் கல்லூரிகள் அடுத்த ஆண்டு துவக்கப்படும் என்று அரசு அறிவித்திருப்பது பாராட்டத்தக்கது. சேலத்திலும் அதுமாதிரி ஒரு சட்டக் கல்லூரி ஏற்படுத்த வேண்டுமென்கின்ற கோரிக்கையை நான் இந்த நேரத்தில் வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். சேலத்திலும் ஒரு சட்டக் கல்லூரி அமைத்தால், அங்குள்ளவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

அடுத்தபடியாக, மருத்துவத் துறையை எடுத்துக்கொண்டால், வரும் ஆண்டில் மேலும் 100 ஆரம்ப சுகாதார நிலையங்களில் 62 இலட்சம் ரூபாய் செலவில் நடமாடும் மருத்துவப் பிரிவுகள் அமைக்கப்போவது இனிய செய்தி. செவிலியர் பயிற்சிக்கான வசதியைப் பொறுத்தவரையில், இப்பொழுது 300 பயிற்சி இடங்கள் உள்ளன; வரும் ஆண்டில் இதனை மேலும் விரிவுபடுத்தி, 550 பயிற்சி இடங்களாக உயர்த்தப்படவிருப்பது போற்றத்தக்கது. இது ஒரு நல்ல காரியம். இப்படி அதிகப்படியாக நம்முடைய பெண்கள் பயிற்சி பெறுவதன் மூலம் குடும்பத்திற்கும் நாட்டின் நலனுக்கும் பயனுடையவர்களாக இருப்பார்கள். அத்துடன் அவர்களுக்கு வெளிநாடுகளிலும் வேலை வாய்ப்பு காத்திருக்கிறது. அயல் நாடுகளில் செவிலியர் பயிற்சி பெற்றுள்ளவர்களுக்கு இன்றையதினம் வேலைவாய்ப்பு அதிக அளவில் உள்ளது.

அடுத்தபடியாக, 16.16 கோடி ரூபாய் செலவில் சிறுவாணி நீர் திட்டத்திற்கு இந்த ஆண்டு 3.46 கோடி ரூபாயும், வரும் ஆண்டு 4.87 கோடி ரூபாயும் செலவிடுவது அறிய மகிழ்ச்சி. அடுத்த ஆண்டு இத்திட்டம் முடியும் என்ற செய்தி கோவை வாழ் மக்களுக்குச் சிறுவாணி நீரின் சுவையை விடச் சுவை மிகுந்த செய்தியாகும். கோவை மக்களுக்கு மகிழ்ச்சி பளிக்கக்கூடிய சேதி.

பெறச் செய்ய இருப்பது பாராட்டத்தக்கது. அப்படிச் செய்ய இருப்பது சுற்றுலாப் பயணிகளுக்குப் பொழுதுபோக்காக இருப்பதோடு சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வண்ணம் அமையும்.

வன வளத்தைப் பொறுத்தவரையில், அடுத்த ஆண்டு 30,700 ஹெக்டேர் பகுதியில் 263 இலட்சம் ரூபாய் செலவில் மரங்கள் வளர்க்க வகை செய்திருப்பது பாராட்டத்தக்கது. நீலகிரியில் நிலச்சரிவு ஏற்பட்ட பகுதிகள் உட்பட இவ்வாண்டு 23,300 ஹெக்டேர் பகுதியில் 239 லட்சம் செலவிட்டு மரங்கள் வளர்க்கச் செய்துள்ள முயற்சி அரிய ஒன்று. இயற்கைச் செல்வங்களான வன வளத்தைப் பாதுகாக்க அரசு செய்திருக்கின்ற முயற்சிகளைப் பாராட்டுகின்றேன். 35 இலட்சம் ரூபாய் செலவில் கட்டி ரப்பர் தொழிற்சாலை நிறுவும் முயற்சியும் பாராட்டத்தக்கது.

அடுத்தபடியாக, தமிழ் வளர்ச்சி என்று வருகிறபோது, ஏதோ அக்கறை இல்லையென்று சிலர் நினைக்கலாம். நடந்த நிகழ்ச்சி ஒன்றை நான் இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். பாவாணர் அவர்களின்

(பிற்பகல் 5-40)

மாணவர் ஒருவர் இங்கே தலைமைச் செயலகத்தில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார். ஒருநாள் என்னைப் பார்க்கும்போது, திடீரென்று அந்த மாணவர் என்னைக் கட்டிப் பிடித்துக்கொண்டார். என்ன காரணம் என்று நான் அவரைக் கேட்டபோது, "உங்களுடைய முதல்வர் அவர்களும், மற்றைய அமைச்சர்களும் தமிழிலேதான் குறிப்புகள் அனைத்தும் வந்தாக வேண்டும் என்று சொல்லுகிற காரணத்தால், எங்கள் அறையில் இருப்பவர்களுக்கு அவ்வளவாகத் தமிழ் மொழியில் சரியாக எழுதத் தெரியாத காரணத்தால், அவர்கள் எல்லோரும் என்னைத் தேடி வருகிற நிலை ஏற்பட்டிருக்கிறது. பாவாணரின் மாணவரான எனக்கு இது மெத்த மகிழ்ச்சியைத் தருகிறது என்றார்கள். இந்த அரசின் தமிழ் உணர்வை நான் மதிக்கிறேன். அய்.ஏ.எஸ். அதிகாரிகள் எல்லாம்கூட தமிழில் கையெழுத்துப் போட வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிற காரணத்தால், இன்றையதினம் அவர்களும் தமிழில் 'அ, ஆ' என்று எழுத்துக்களைக் கற்றுக்கொள்ளுகிற—பால பாடத்தைக் கற்றுக்கொள்கிற அளவுக்கு தமிழ் மொழிக்கு மரியாதையும் அந்தஸ்தும் இந்த அரசால் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

நிதிநிலை அறிக்கையில் மாவட்டத் தலைமையிடங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு அரும்பொருள் காட்சியகம் அமைக்க அரசு முடிவு செய்துள்ளது என்பதும், தமிழ்க் கலைக் களஞ்சியத்தின் இரண்டாம் பதிப்பை வெளியிட அரசு முடிவு செய்திருக்கிறது என்பதும் மகிழ்ச்சிக்குரிய முடிவுகளாகும்.



அரசு அலுவலருக்காக நியமிக்கப்பட்ட 3-வது ஊதியக் குழுவின் பரிந்துரைகளின்மீது அரசு முடிவெடுத்துள்ளது. இதனால் அரசுக்கு இந்த ஆண்டுக்கு மட்டும் ரூ. 37 கோடி செலவாகும் என்றும் நாளடைவில் ரூபாய் 67 கோடி செலவாகும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் அலுவலர்கள் வீடு கட்ட கடன் உதவி அளிப்பது விரைவுபடுத்தப்படுமென்றும், ஊழியர்களின் குழந்தைகளின் கல்வி வசதிக்காக முன் பணம் வழங்குவது என்றும், அரசு ஊழியர்கள் சைக்கிள், ஸ்கூட்டர் வாங்க அளிக்கப்படும் முன்பணமும், பண்டிகை முன்பணமும் இன்றையதினம் உயர்த்தப்படுமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த அடிப்படையில் எண்ணிப் பார்க்கிறபோது, இந்த நிதிநிலை அறிக்கையின் பின்னணியில் இன்னும் ஒன்றை நாம் உணர வேண்டியிருக்கிறது.

அரசு ஊழியர்களுக்கு இந்த அரசு எவ்வளவோ செய்ய விரும்புகிறது என்றாலும், நம்முடைய நிதியாதாரங்களை நாம் எண்ணிப் பார்க்க வேண்டியுள்ளது. மத்திய, மாநில அரசு நிதிப் பங்கீடு பற்றியும் மத்திய அரசு ஊழியர்களுடைய நலத்திற்காகவும் இங்கேயிருக்கிற கட்சிகள் அனைத்தும் மத்திய அரசை வலியுறுத்தி ஒரு கமிஷனை நியமித்தேனும் மாநில அரசுக்கு அதிகமான நிதிப்பங்கீடு கிடைக்கும்படி செய்ய வேண்டும். அப்படிப்பட்ட ஒரு நிலையை விரைவில் உருவாக்குவது மிகவும் பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். இந்தக் கருத்துக்கொப்ப இன்றைய தமிழக முதல்வர் அவர்கள் 1962 ஆம் ஆண்டு ஜூலை 5 ஆம் நாள் இதே மேலவையில் கூறிய கருத்தை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். "இந்த நாட்டில் ஏற்படுகிற போராட்டம், புரட்சி, குழப்பம், ஏழ்மை, வறுமை ஆகிய இவைகளுக்கு பதில் சொல்ல வேண்டியது தமிழக சர்க்கார். இதைப் போக்கக்கூடிய அதிகாரம் டெல்லி சர்க்காரிடம் இருக்கிறது. அந்த அதிகாரத்தை நீங்கள் கேட்க வேண்டும் அல்லது வலியுறுத்த வேண்டும் அல்லது கெஞ்ச வேண்டும். நம்முடைய தலைவர்களைப் பார்த்து நீங்கள் கெஞ்ச வேண்டும் என்று சொல்வதை நான் ஆதரிக்கவில்லை; வற்புறுத்திப் பெறவேண்டும்" என்று சொல்லியிருக்கிறார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள்கூட இதே கருத்தை இந்த மேலவையில் ஒருமுறை சொல்லியிருக்கிறார்கள்.

"Sir, on the budget as a whole, most of the members of this House and the other House and the people outside have recognised the necessity for tapping some more resources because the need of our State is growing and everyone will accept that our resources are not elastic and all the elastic sources of revenue are monopolised by the Central Government and what is left for us is to elastic enough or commensurate enough for what we need for the welfare of the State."

ஊனமுற்றோர் நல்வாழ்வுக்காக 1,000 மூன்று சக்கர வண்டிகள் அடுத்த ஆண்டில் வழங்கவிருப்பது குறித்து அக மகிழ்கிறேன். தீண்டாமையை ஒழிக்க, குற்றம் இழைப்போர் மீது தீவிர நடவடிக்கை எடுக்க 6 நடமாடும் பிரிவுகள் செயல்பட்டு வருவதோடு மேலும் கூடுதலாக 7 பிரிவுகள் நடப்பாண்டில் அமைக்க இருப்பது குற்றம் கூடியதால் ஏற்பட்ட விளைவல்ல, குற்றங்கள் முழுவதும் அறவே ஒழிக்கப்பட வேண்டுமென்கிற நல்ல எண்ணத்தால்தான்.

அடுத்தபடியாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. எல்லமந்தா அவர்கள் அரிசனங்களுக்கு இந்த அரசு என்னென்ன காரியங்களைச் செய்திருக்கிறது என்று கேட்டார்கள். நான் அவரை தயவுசெய்து "நிதிநிலை அறிக்கை புத்தகத்திலுள்ள பக்கங்களைப் புரட்டிப் பாருங்கள்" என்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். மொத்தமுள்ள 25,526 அரிசன குடியிருப்புகளில் 25,304 குடியிருப்புகளுக்கு மின்னொளி வழங்கப்பட்டு விட்டது. மீதமுள்ள குடியிருப்புகளுக்கும் விரைவில் மின்னொளி வழங்கப்பட இருக்கிறது. அரிசன வீட்டு வசதிக்கென்று அடுத்த ஆண்டும் 2.20 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. வரும் ஆண்டில் அரிசன, பழங்குடி மக்கள் நல வளர்ச்சிக்கு 18.3 கோடி ரூபாய் செலவு செய்யப்படும் என்ற சேதி தேனாய் இனிக்கிறது. தொழிலாளர் நல நிதி வாயிலாக தொழிலாளர் குழந்தைகள் கல்வி வசதிக்கு உதவும் செயற்குறிப்பு பரிசிலனையில் இருப்பது மகிழ்வைத் தருகிறது. அதேபோல அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் செயல்படத் தொடங்கியிருப்பது உண்மையிலேயே மட்டற்ற மகிழ்வைத் தருகிறது. அண்டை மாநிலமான கேரளாவில் இந்த மாதிரி அயல் நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் மூலம் பலர் நல்ல வேலை வாய்ப்பினைப் பெற்று அயல்நாடுகளிலிருந்து கோடிக்கணக்கான அந்நியச் செலாவணியைக் கொண்டு வந்து கேரளாவில் குவிப்பதுபோல் இந்த நிறுவனமும் நல்ல முறையில் செயல்பட்டு உலக நாடுகளிலெல்லாம் நம்முடைய வாலிபர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த அமைப்பை உருவாக்கியதற்காக என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சென்றிடுவீர் எட்டுத்திக்கும்
கலைச் செல்வங்கள் யாவும்
கொணர்ந்திங்கு சேர்ப்பீர்.
மறைவாக நமக்குள்ளே
பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை இல்லை.



திறமையான புலமையெனில்
வெளிநாட்டோர்
அதை வணக்கஞ் செய்தல் வேண்டும்.

என்ற வகையில் நம்முடைய நாட்டிலுள்ள திறமை வாய்ந்தவர்களையும், அறிவாளிகளையும், ஆற்றல் மிகுந்தவர்களையும் அயல் நாடுகளுக்கு அனுப்பி, இத்திட்டம் வெற்றி பெறச் செய்ய வேண்டும். இதை நான் பாராட்டுகின்றேன்.

குழந்தைகளிலிருந்து ஓய்வு பெற்றவர்கள் வரை அனைவரையும் இந்த அரசு நல்ல முறையில் கவனித்திருக்கிறது. பொங்கலின்போதும் விடுதலை நாளின் போதும் முதியோர் உதவித் தொகை பெறுவோர்க்கு வேட்டியும், கைத்தறிச் சேலையும் வழங்கவும், உதவித் தொகையை 20 ரூபாயிலிருந்து 25 ரூபாயாக வழங்கவும் முன்வந்திருப்பது பாராட்டத்தக்கது. அத்துடன் பார்வையிழந்தவர்கள், ஆதரவு அற்றவர்களுக்கு வயது எல்லை பாராது உதவ அரசு முன்வந்திருப்பது இரட்டிப்பு மகிழ்ச்சியை அளிக்கிறது. பாரி மகளிர் நனைந்து வந்த ஔவைக்கு மேலாடை தர "நீலச்சிற்றாடைக்கு ஏது நிகர்" என்று ஔவையார், சேலையின் பெருமையைச் சொல்லாமல் சொல்லியது போல் இந்த அரசு முதியோர்களுக்குக் கைத்தறிச் சேலை தந்திருப்பது போற்றத்தக்க ஒன்று.

அடுத்தபடியாக, சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு 75 ரூபாயிலிருந்து 100 ரூபாயாக உதவியை அதிகரித்திருப்பதும் எல்லைக்குப் போராடியோருக்கும் ஆதிக்க இந்தியை எதிர்த்து நீதிக்குப் போராடியிருப்போருக்கும் உதவியளிப்பதற்காக சட்டவரைவு வரவிருப்பது இனிய செய்தி.

மீனள வளர்ச்சி நிறுவனம் நேரடியாக இறால் ஏற்றுமதியில் இறங்குகிறது. 2.25 கோடி ரூபாய் செலவில் நவீன ஆட்டு இறைச்சிக் கொட்டில் அமைக்கப்பட இருக்கிறது. பிற நாடுகள் மலேசியா, ஆஸ்திரேலியா நாட்டை இறைச்சிக்காக நாடுவதை விட தமிழ் நாட்டை நாடும் நிலை விரைவில் வரலாம்.

மனித நலன் மட்டுமல்ல, கால்நடைகளையும் கவனிக்கத் தவறாத அரசு தமிழக அரசு. 16 கால்நடை கிராம வட்டாரங்களையும், 2 கால்நடை வளர்ச்சி மும்முரத் திட்டங்களையும், 10 கால்நடை மருந்தகங்களையும், 5 கால்நடை மருந்தகங்களின் தரம் உயர்த்தி அமைக்கப்படவும் அரசு முடிவு செய்திருப்பதை மகிழ்ச்சியோடு நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். சென்னை மிருகக் காட்சிசாலையை 105 இலட்சம் ரூபாய் செலவில் வனத்துறை வளம்

என்று அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள். அதைப் போலவே இந்த நாட்டின் மக்களவைத் தலைவர் அவர்கள் சென்ற பிப்ரவரித் திங்கள் 24 ஆம் நாள் சென்னை நகரில் பேசும்போது,

"One way of solving the language issue would be for the Centre to give away as many subjects as possible to the States. The Centr might have to shed some of its powers to the States not because the Centre could not be trusted, but because it would not be able to deliver the goods."

என்ற கருத்தினைச் சொல்லியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் மாநிலங்கள் அதிக நிதி வசதிகளைப் பெறுகிற நிலை வருமானால், நமது மாநில அரசு அலுவலாளர்களுக்கு நம்மால் அதிக உதவி செய்ய முடியும். ஆனால் இன்றைய நிலைமை எவ்வாறு இருக்கிறது என்றால், மாநிலங்களிலும் அரசு ஊழியர்கள் இருக்கிறார்கள். மத்திய அரசிலும் அரசு ஊழியர்கள் இருக்கிறார்கள். இருவருக்கும் ஒரே தகுதி, ஒரே திறமை. ஆனால் இருவருக்கும் சம்பளத்திலே வித்தியாசம் இருக்கிறது. இந்த வித்தியாசத்தின் அடிப்படையில் மாநில அரசு ஊழியர்கள் எப்படி நியாயமாகப் பணியாற்ற முடியும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். மத்திய அரசு தனது ஊழியர்களுக்கான சம்பளத்தை உயர்த்துகிறபோது, அதன் காரணமாக நாட்டில் விலைவாசிகள் கூடுகின்றன. விலைவாசிகள் கூடுகிறபோது, அதனால் பாதிக்கப்படுகிறவர்கள் மாநில அரசு ஊழியர்களும், மாநில அரசும்தான். இந்த நிலைமையைப் போக்க மத்திய அரசு ஊழியர்களுக்கும் மாநில அரசு ஊழியர்களுக்கும் இடைப்பட்டிருக்கிற சம்பள வித்தியாசத்தை முதலில் மத்திய அரசு தனது நிதியிலிருந்து தந்துவிட்டு, இனி மத்திய அரசு தனது ஊழியர்களுக்கு சம்பளத்தை உயர்த்துவதானால் மாநில அரசுக்கும் அதற்கான தொகையைத் தருகிற வகையில் நிலைமையை உருவாக்க வேண்டும். அதைப் போன்ற நிலைமை நாட்டில் உருவாகும்வரை, அரசின் நிதிநிலை அறிக்கையை யார் தயாரித்தாலும், இந்த நிதிநிலை அறிக்கையை இன்று எதிர்ப்பவர்களே தயாரித்தாலும்கூட, அது முழு நிறைவோடு இருக்காது, என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தமிழக அரசு என்பது ஏதோ இங்கேயிருக்கிற நாலரைக் கோடி தமிழர்களுக்காக மட்டும் இருக்கிற அரசு அல்ல. தமிழர்கள் உலகத்தில் எங்கெங்கே இருந்தாலும் அந்தத் தமிழர்களுக்கெல்லாம் இருக்கிற அரசு இந்த அரசு. உலகத்தில் இருக்கிற அனைத்துத் தமிழர்களும் தங்கள் மொழியை, கலையை வளர்த்துக்கொள்ள இருக்கிற அரசு இது என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தக் கருத்துக்கு ஒப்பதான்



நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பண்பாட்டுக் கழகத்தைச் சேர்ந்த பல நாட்டுக்காரர்கள் தமிழகத்திற்கு வந்திருந்தபோது, அவர்கள் இந்த அரசை அணுகாத நேரத்திலும், அவர்களை முதல்வர் அவர்களே அழைத்து ஒரு நல்ல விருந்து கொடுத்து ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். "நீங்கள் தமிழக அரசை அணுகுங்கள். நான் முதலமைச்சராக இருக்கிறேனா இல்லையா என்பதல்ல பிரச்சினை. தமிழ் நாட்டில் ஒரு அரசாங்கம் இருக்குமானால், அது தமிழர்களுக்கான நலனைக் காப்பதற்காக, உலகத் தமிழர்களுடைய நலனைக் காப்பதற்காகத்தான் இருக்கும்" என்று தெரிவித்தார்கள்.

அதை மனதில் கொண்டு தமிழ் நாட்டில் இருக்கிற பல்கலைக் கழகங்கள் வெளிநாடுகளில் இருக்கிற தமிழ் அறிஞர்களை அழைத்துப் பாராட்ட வேண்டும். அப்படிச் செய்தார்கள். எங்கே செய்தார்கள் என்றால், கல்கத்தாவில் செய்தார்கள். திரு. முஜுபிர் ரகுமான் அவர்களைப் பாராட்டி அவர்களுக்கு டாக்டர் பட்டம் அங்கே வழங்கப்பட்டது. அதைப் போலவே ஆந்திரத்தில் உள்ள பல்கலைக் கழகத்தில் செய்தார்கள். மலேசியாவில் இருக்கிற திரு. ராவ் அவர்களைப் பாராட்டிப் பட்டமளித்தார்கள். அந்த உணர்வு தமிழ் நாட்டுப் பல்கலைக் கழகங்களுக்கு வர வேண்டும். அப்படி வருகிறபோது, மலேசியாவில் இருக்கிற டேவிட் அவர்களையும் சிங்கப்பூரில் அமைச்சராக இருக்கிற திரு. இராஜரத்தினம் அவர்களையும் ஈழத்திலிருக்கிற திரு. அமிர்தலிங்கம் அவர்களையும் இங்கே உள்ள பல்கலைக் கழகங்களில் அழைத்து உரையாற்றச் செய்து அவர்களுக்கு டாக்டர் பட்டம் தருகிற நாளை நான் எதிர்பார்க்கிறேன்.

இறுதியாக மொழிப் பிரச்சினைபற்றி ஒரு கருத்தை இங்கே சொல்ல விரும்புகிறேன். பண்டித நேரு அவர்கள் என்ன வாக்குறுதி அளித்தார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இந்தியை நாம் ஏற்றுக்கொள்ளுகிறவரை, நாம் விரும்புகிற வரை, ஆங்கிலம் தொடர்ந்து இந்த நாட்டின் ஆட்சி மொழியாக இருக்கும் என்று வாக்குறுதி அளித்தார்கள். இன்று இந்தியை நாம் விரும்பவில்லை. இப்போது நாம் இந்தியை விரும்பவில்லை என்றாலும், இந்தி நுழைகிறது. நாம் விரும்பவில்லை என்றாலும், எல்.ஐ.சி. உத்தரவுகளில் இந்தி வருகிறது. நாம் விரும்பவில்லை என்றாலும், மத்திய அரசின் குறிப்புகளில் இந்தி வருகிறது. அதனால்தான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதற்காக ஒரு வாக்கெடுப்பு நடத்துவோம் என்றார்கள். மக்கள் இந்தியை எதிர்க்கிறார்களா இல்லையா என்பதை அதன் மூலம் மத்திய அரசுக்குத் தெரிவிப்போம் என்றார்கள். ஆனால் மதிப்பிற்குரிய சட்டப் பேரவையின் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், "சட்டமன்றமே எதிர்ப்பு தெரிவித்துவிட்ட

பிறகு இது எதற்கு?" என்றார்கள். அவர் சொன்ன வார்த்தை எங்கே எதிரொலிக்கிறது என்றால், டெல்லியில் இருக்கிற கல்வி அமைச்சர் அவர்கள் கருத்தின் மூலமாக எதிரொலித்தது. அவர் என்ன சொன்னார் என்றால், தமிழ்நாடு அரசுதான் இந்தியை எதிர்க்கிறது, நாட்டு மக்கள் எதிர்க்கவில்லை என்றார்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இதற்காகத்தான் அந்தக் கருத்தைச் சொன்னார்கள். தமிழக அரசு என்பது ஆட்சியில் இருப்பவர்களைக் குறிக்கும். அவர் பெரும்பான்மையோர் சொல்வதைக் கேட்கிற காரியமாக இதைக் கருதிவிடக்கூடாது என்றுதான் மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதை மத்திய அரசுக்குத் தெரிவிப்போம் என்றார்கள். இந்த நேரத்தில் நான் இன்னொன்றையும் சொல்லிக்கொள்வேன். கோவை, நீலகிரி, தருமபுரி, சேலம் ஆகிய மாவட்டங்கள் அடங்கிய பட்டதாரிகள் தொகுதியில் நான் போட்டியிட்டு வெற்றிபெற்று இந்த அவைக்கு வந்திருக்கிறேன். நான் தேர்தலில் போட்டியிடும்போது என்னுடைய முதல் கோரிக்கையே "இந்தித் திணிப்பிலிருந்து தமிழ் மொழியைக் காக்க வேண்டும்" என்பதுதான். அதைத் தெளிவாக்க விரும்புகிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெரிவித்த மொழிப் பிரச்சினைபற்றிய கருத்தை அடிப்படையாக வைத்து, இந்தித் திணிப்பை நாம் எதிர்க்கிறோம் என்ற உணர்வை அடிப்படையாக வைத்துத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்று வந்திருக்கிறேன். தென்னிந்தியாவின் இதயமான இந்த நான்கு மாவட்டங்களிலும் உள்ள பட்டதாரிகள் ஒரு நல்ல தீர்ப்பை வழங்கியிருக்கிறார்கள். கடலூரிலிருந்து ஓமலூர் வரை, ஏற்காட்டிலிருந்து வால்பாரை வரை பரவியிருக்கிற பட்டதாரிகள் இந்தித் திணிப்பை எதிர்த்து ஒரு தீர்ப்பை வழங்கியிருக்கிறார்கள். இந்தத் தீர்ப்புதான் தமிழகத்தின் தீர்ப்பாகும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, மாண்புமிகு முதல்வர் அவர்களைப் "புரட்சித் தலைவர்" என்று அழைக்கிறீர்களே, அவருக்கு என்ன தகுதி இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. எல்லமந்தா அவர்கள் கேட்டார்கள். அவருடைய தகுதியை நீண்ட விளக்கத்தைச் சொல்லி, தெளிவுபடுத்த விரும்பவில்லை. அவர் கேட்கிற கேள்வி எப்படி இருக்கிறது என்றால், "தந்தை பெரியார் என்று சொல்லுகிறீர்களே, அவருக்கு எத்தனை குழந்தைகள்?" என்பதுபோல் இருக்கிறது. தந்தை என்று சொல்லுகிறபோது இந்த நாட்டின் தன்மான இயக்கத்திற்கு, சுயமரியாதைக் கருத்துக்குத் தந்தை என்ற காரணத்தால், அவரைத் தந்தை பெரியார் என்று அழைக்கிறோம். அதைப் போலவே புரட்சித் தலைவர் என்று சொல்லுவதற்குக் காரணம் பேரறிஞர் அண்ணா அவர்களைப் புதைத்தபோது, அண்ணாவின் இலட்சியங்களும் புதைக்கப் பட்டுவிட்டனவோ என்று நாட்டு மக்கள் எண்ணியபோது அந்த



இலட்சியங்கள் உயிரோடுதான் இருக்கின்றன என்று அவர் காட்டியதால், அவரைப் புரட்சித் தலைவர் என்கிறோம். ஆட்சிப் பொறுப்புக்கு அவர் வந்த போது, ஆட்சிக் கட்டிலுக்கு அவர் வந்தபோது, அதை இந்த நாட்டுச் செய்தி ஏடுகள் ஒரு அமைதியான புரட்சி என்று எழுதினார்கள். அதனால் அவரைப் புரட்சித் தலைவர் என்கிறோம். அந்தப் புரட்சித் தலைவரின் பொன்னான பாதங்களுக்கு என்னுடைய வணக்கங்களைத் தெரிவித்துக் கொண்டு, பேசுவதற்கு இன்னும் பல கருத்துக்கள் இருந்தாலும், நேரம் இல்லாத காரணத்தால் இதோடு முடித்து விடை பெறுகிறேன். வணக்கம்.

**திரு. வி. ஆர். பெரியண்ணன்:** தலைவர் அவர்களே, 1979-80 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கைமீது நான் ஒரு சில கருத்துக்களை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த மன்றத்தில் சில முக்கியமான பிரச்சினைகளை எடுத்துச் சொல்லுகிறபோது, அவைகள் கவனிக்கப்படாமலேயே இருப்பது குறித்து முதலில் என்னுடைய வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். 1977 ஆம் ஆண்டு தமிழகத்தில் புயல் வெள்ளம் ஏற்பட்டபோது, நான் சார்ந்துள்ள பகுதியான சேந்தமங்கலம் ஒன்றியத்தில் புதுக்குளம் ஏரிக்குத் தண்ணீர் வருகிற ஏரியின் கரை உடைந்துவிட்டது என்பதைப்பற்றிப் புயல் வெள்ள நிவாரண அறிக்கையின்மீது பேசும்போது, இங்கே அவையில் எடுத்துச் சொன்னேன்.

அதற்குப் பிறகு கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையின்மீது பேசுகிற போதும், அதைப்பற்றிக் குறிப்பிட்டு அந்தப் பணி செய்து முடிக்கப்பட வில்லை என்பதைச் சுட்டிக்காட்டினேன். மீண்டும் இடைக்காலத்தில் சப்ளிமெண்ட்டரி பட்ஜெட்டின்மீது பேசுகிறபோதுகூட, 1977 ஆம் ஆண்டு புயல் வெள்ளத்தின்போது பாதிக்கப்பட்ட இந்தப் பகுதி இன்னும் சீரமைக்கப்படாமலே இருக்கிறது என்று குறிப்பிட்டேன். சேந்தமங்கலம் ஒன்றியத்தில் வெள்ள நிவாரணப் பணியின்கீழ் எந்த வேலையும் செய்யப் படவில்லை என்பதையும் தெரிவித்தேன்.

(பிற்பகல் 5-50)

கடந்த "சப்ளிமெண்டரி" பட்ஜெட் விவாதத்துக்குப் பதில் சொல்லும் போது, நம்முடைய மின்துறை அமைச்சர் அவர்கள் "உங்களுடைய மாவட்டத்தினுடைய அமைச்சரைப் பாராட்டக்கூட முடியாமல் குறை சொல்கிறீர்கள்" என்று சொல்லி உடனடியாக அந்த வேலை கவனிக்கப்படும், துவங்கப்படும் என்று சொன்னார்கள். ஆனால், இதுவரையில் அந்த வேலை துவக்கப்படவில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. வி. ஆர். பெரியண்ணன்] [1979 மார்ச் 13

காங்கிரஸ் கட்சி ஆளுகின்ற நேரத்தில் 1962 முதல் 1967 வரை நான் சட்ட மன்றப் பேரவையிலே உறுப்பினராக இருந்தேன். அப்போதெல்லாம் அங்கே பேசும் பேச்சைக் குறிப்பெடுத்து எந்த இடத்தைப்பற்றிப் பேசினோமோ அந்த இடத்தில் இருக்கும் அதிகாரிகளுக்கு அந்தக் குறிப்பை அனுப்பி, உடனடியாக நடவடிக்கை எடுக்கச் சொல்வார்கள். இவைகள் எப்படி எனக்குத் தெரியும் என்று சொன்னால், சட்டமன்றக் கூட்டத்தொடர் முடிந்து நான் ஊருக்குச் சென்ற உடனே, அந்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மேற்கொண்டு விவரங்களைத் தெரிந்துகொள்வதற்காக என்னிடத்திலே வந்து, அய்யா, இதைப்போய் அங்கே சொல்லிவிட்டீர்களே, இங்கேயே சொல்லியிருக்கலாமே என்று அனுதாபத்துடன் கேட்பார்கள். அந்த நிலை அன்றைக்கு இருந்தது. அதன் பிறகு எங்களுடைய கட்சி ஆட்சி இருந்தபோது, நான் இந்த அவையில் உறுப்பினராக இருந்தேன். அப்போது இங்கே பல காரியங்களை எடுத்துச்சொல்லியிருக்கிறேன். ஆனால், இந்தக் கட்சி ஆட்சிப்பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு, 1976-ல் எவ்வளவோ முறை பல விஷயங்களைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறேன், இருந்தாலும் நடவடிக்கை ஏதும் இல்லை. சென்ற முறை நான் பேசும்போது, சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களிடம் கொல்லிமலையைச் சுற்றுலாத் துறை இடமாக அறிவிக்க வேண்டும் என்று சொன்னேன். இந்த ஆண்டு சில இடங்களை அறிவித்து விட்டோம், அடுத்த ஆண்டு அதுபற்றிப் பரிசீலிக்கப்படும் என்று சொன்னார்கள். அதை நான் வரவேற்கிறேன். சென்ற புயல் வெள்ளத்திலே ஓடையிலே ஒரு கரை உடைந்து போயிருக்கிறது. இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டன. புயல் மழையால் ஏற்பட்ட சேதத்திற்கு கோடிக் கணக்கான ரூபாய் செலவு செய்துவிட்டோம் என்று பேசிக்கொண்டிருக்கின்ற நேரத்திலே, இந்த தண்ணீர் வரக்கூடிய ஓடையிலே மணல் ஏறியிருக்கிறது, அதை நாம் அப்புறப்படுத்தவில்லை என்பதைப் பார்க்கிறபோது, மீண்டும் இந்த ஆண்டு மழை பெய்யக்கூடிய நேரத்திலே 1 ஏக்கர் நிலம் கூட அதனால் விவசாயம் செய்ய முடியாத நிலை ஏற்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதனுடைய கரையிலே ஒரு நடைபாதை இருந்தது. அதுவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. இவைகள் இதுவரையிலே சீர் செய்யப்படவில்லை. ஆகவே, இனிமேலாவது சீர்செய்யப் பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாவட்ட வளர்ச்சிக் கூட்டத்திலே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடமும் இதுபற்றி நேரடியாகக் கூறியிருக் கிறேன். மாவட்ட வளர்ச்சி அதிகாரி என்று ஒருவர் இருக்கிறார். அவரை அழைத்துச் சென்று நேரடியாகக் காட்டியிருக்கிறேன். இவ்வளவுக்குப் பிறகும் இந்த வேலைகள் செய்யப்படவில்லை என்றால், எங்களைப் போன்ற வர்கள் இருக்கிற பகுதிகளுக்கு எதுவும் செய்யக்கூடாது என்ற எண்ணம் அரசுக்கு இருக்கிறதோ என்று கூட எனக்குச் சந்தேகம் ஏற்படுகிறது என் பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1979 மார்ச் 13] [திரு. வி. ஆர். பெரியண்ணன்]

(மாற்றுத் தலைவர் திரு. க. இராமமூர்த்தி தலைமை)

அடுத்தபடியாக, விவசாயிகள் பிரச்சினை. நாம் இப்போது இந்த வாரம் பூராவுமே விவசாயிகள்பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறோம். விவசாயிகளைப் பற்றிய பிரச்சினை, மின் இணைப்பு, மின் இணைப்பைத் துண்டிப்பது போன்ற பிரச்சினைகள் எல்லாம் இருக்கின்றன. இருந்தாலும், அவர்களுடைய முக்கியமான பிரச்சினை என்னவென்றால், இன்றைக்கு விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய விளைபொருள்களுக்குத் தகுந்த விலை இல்லை. உற்பத்திச் செலவு இன்றையதினம் அதிகமாகிவிட்டது. நெல் மட்டுமல்ல, எந்தப் பொருளை உற்பத்தி செய்தாலும், நிச்சயமாக அதற்கு உரிய விலை இல்லை. நம்முடைய கவர்னர் அவர்கள் உரையிலேகூட, மத்திய அரசு கோதுமை உற்பத்தி செய்பவர்களுக்கு உற்பத்திச் செலவைக் கணக்கில் கொண்டு அவர்கள் கோதுமைக்கு விலை நிர்ணயம் செய்கிறார்கள்; ஆகவே அந்த மாதிரி நெல் உற்பத்தி செய்பவர்களுக்கும் உற்பத்தி ஆகும் செலவைக் கணக்கில கொண்டு நெல் விலையை உயர்த்தித் தர வேண்டும் என்று வற்புறுத்தினோம் என்றும், அதை வைத்து தற்போது கொஞ்சம் உயர்த்தி யிருக்கிறார்கள் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. மேலும், இந்த உயர்வுகூட போதுமானதாக இல்லை என்றும், மீண்டும் வற்புறுத்திக்கொண்டிருக்கிறோம் என்றும் அறிக்கை இருக்கிறது. நான் இந்த நேரத்திலே அமைச்சரவையைக் கேட்டுக்கொள்ள விரும்புவது எல்லாம் அரசு மத்திய அரசுக்குத் தமிழ் நாட்டினுடைய நிலைமையை எடுத்துச்சொல்லி, இப்போது இருக்கும் இந்த விவசாயிகள் போராட்டத்தைப் பயன்படுத்தி, ஏன் இரு அவைகளிலும் ஒரு தீர்மானத்தைப் போட்டு, அதை மத்திய அரசுக்கு அனுப்பக் கூடாது என்பதும், கோதுமைக்கு உற்பத்தி ஆகிய செலவுக்கேற்ப அவர்கள் விலை தரும்போது நெல்லுக்கும் அவ்வாறு தராவிட்டால் நாங்கள் எங்களுடைய மந்திரி சபையைக்கூட கலைத்துவிட்டுப் போவோமென்று மத்திய அரசாங்கத்திலே இருப்பவர்களுக்கு நாம் ஏன் எடுத்துச்சொல்லக்கூடாது என்பதுதான்.

விவசாயிகளுடைய நிலைமை இவ்வாறு இருக்கும்போது, அரிசன நலத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு செய்தி சொன்னதாகப் பத்திரிகையிலே பார்த்தேன். தமிழ் நாட்டிலே உள்ள பழங்குடி மக்களுக்குக் கடன் நிவாரணம் வழங்கவும், அவர்கள் இழந்த நிலங்களை அவர்களுக்கு மீண்டும் பெற்றுத்தரவும் தமிழ் நாடு அரசு இரண்டு திட்டங்களைக் கொண்டு வர இருக்கிறது என்ற செய்தியைப் பார்த்தேன். கடன் நிவாரணம் அளிக்கப்பட இருப்பதை வரவேற்கிறேன். ஆனால், இந்த இழக்கப்பட்ட நிலம் என்று சொன்னால், எந்த நிலம் என்பது எனக்குத் தெரியவில்லை. இப்போது

பிணம் அழுகிவிடுகிறது. அதனாலே அங்கே நடக்கும் கொலை கேஸ் எதுவும் வெற்றி பெறுவதில்லை. ஆகவே, ஆரம்ப சுகாதார நிலையங்களிலே இதுபோன்ற வசதிகள் செய்யப்படுவதில்லை என்ற நிலை இருந்தாலும்கூட, இதுபோன்ற சில தவிர்க்க முடியாத, பிணப் பரிசோதனை செய்ய வேண்டுமானால், அதிக தூரம் செல்ல வேண்டும் என்ற நிலை இருக்கக்கூடிய இடங்களிலே இருக்கும் ஆரம்ப சுகாதார நிலையங்களிலே அங்குள்ள மருத்துவர்கள் இதுபோன்ற பிணப் பரிசோதனை செய்யலாம் என்ற அதிகாரத்தை வழங்க அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மூலிகைப் பண்ணையைப்பற்றி ஒருசில கூற விரும்புகிறேன். கடந்த கூட்டத் தொடரிலே உறுப்பினர் திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள்கூட 'கொல்லிமலையிலே இருக்கின்ற மூலிகைகள் மட்டுமல்ல, கொல்லிமலை என்று சொன்னால், அங்கே இருக்கின்ற காற்றை உட்கொண்டால்கூட உடல் நலத்துக்கு நல்லது என்று சொன்னார்கள். கொல்லிமலையிலே வல்வில் ஓரி ஆண்ட ஒரு வரலாறும் இருக்கிறது. ஆகவே அங்கு ஒரு மூலிகைப் பண்ணை வைக்க வேண்டும் என்று கேட்டபோது, அமைச்சர் அவர்கள் தங்களது பதிலிலே அப்படிப்பட்ட தகவல் எதுவும் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். இவ்வாறெல்லாம் சிறப்புக்களையுடைய அந்த இடத்தில் இந்த மூலிகைகள் பயிரிடப்பட்டால், நல்ல தரமான மூலிகைகளாக அவைகள் வளர வாய்ப்பு இருப்பதால், கொல்லிமலையிலே ஒரு மூலிகைப் பண்ணை ஏற்படுத்த அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, காளப்பநாயக்கன்பட்டி குடிநீர்த் திட்டத்தை எடுத்துக் கொண்டால், கடந்த 7, 8 ஆண்டுகளுக்கு முன்பு, அந்தத் திட்டத்துக்கான 'இன்வெஸ்டிகேஷன்', பரிசோதனைக்காகப் பணம் கட்டி, இன்வெஸ்டிகேஷன் பண்ணி, அந்தத் திட்டம் வெற்றிகரமாக முடியும் என்று அறிக்கை வந்த பிறகு, மாதிரிக் கிணறு 'டெஸ்ட் வெல்' வெட்ட வேண்டும் என்றும் அதற்காக 35 ஆயிரம் ரூபாய் கட்ட வேண்டும் என்றும் சொன்னார்கள். அந்த 35 ஆயிரம் ரூபாய் கட்டுவதற்குப் பணம் இல்லை. ஆகவே, ஸ்கீம் வெற்றிகரமாக ஆன பிறகு மீதிப் பணத்தைக் கட்ட வேண்டும் என்று சொல்லி, 1/3 பங்கை உடனடியாகக் கட்டச் சொன்னார்கள். டெஸ்ட் வெல் கட்டுவதற்கு வட்டார ஒன்றியத்திலே இருந்து 8 ஆயிரம் ரூபாய் கொடுத்துக் கட்டினார்கள் இருந்தும், இன்னும் அந்தத் திட்டம் தொடங்குவதற்கான அறிகுறி எதுவுமில்லை. ஆகவே, இந்த நிதி நிலைக் கூட்டம் முடிந்த உடனே, அமைச்சர் அவர்கள் காளப்பநாயக்கன்பட்டிக்கு வந்து, அந்தக் குடிநீர்த் திட்டத்தை துவக்கி வைக்க ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



(பிற்பகல் 6-00)

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லுவது 'இன்வெஸ்டிகேஷன் சார்ஜஸ்' என்று நினைக்கிறேன். இன்வெஸ்டிகேஷன் சார்ஜஸ் என்றால், ஆய்வுப் பணம். ஆய்வுப் பணம் கிடைத்த பிறகு, ஆய்வு செய்து எத்தனை இலட்சம் ரூபாய் திட்டத்திற்கு ஆகும் என்றும், ஆண்டுக்கு எவ்வளவு பராமரிப்புச் செலவு ஆகும் என்றும், ஆண்டுக்கு எவ்வளவு கட்ட வேண்டும் என்றும் விவரங்களைக் கொடுத்த பிறகு, அது ஏற்றுக்கொள்ளப்படுமானால், குடிநீர் வடிகால் வாரியம் அந்தக் கோப்பை அரசுக்கு அனுப்பி, அரசின் அனுமதியைப் பெற்ற பிறகு செயல்படுத்தும்.

**திரு. வி. ஆர். பெரியண்ணன் :** Investigation fees கட்டி ஆய்வு முடிந்து திட்டம் வெற்றிகரம் என்று அறிக்கை கொடுத்தாகிவிட்டது. 'டெஸ்ட் வெல்' லுக்கு ரூபாய் எட்டாயிரம் கட்ட வேண்டும் என்று கேட்கப்பட்டு, அதுவும் கட்டப்பட்டுவிட்டது. திட்டம் ஏற்கெனவே ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆகவே இதை அமுலாக்க உடனடியாக ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

தீண்டாமை ஒழிப்புபற்றிப் பேசிக்கொண்டிருக்கிறோம். அதற்காக சட்டங்களைக் கூட ஏற்படுத்தியிருக்கிறோம். அது குறித்த ஒரு கருத்தை இங்கே சொல்ல வருத்தப்படுகிறேன். ஜாதி இந்துக்களும், தாழ்த்தப்பட்டவர்களும் தந்தை பெரியார் அவர்களும், பேறிஞர் அண்ணா அவர்களும் எடுத்துக் கொண்ட முயற்சியின் காரணமாக, ஓரளவுக்கு ஒன்றி விட்டார்கள். ஆனால் தாழ்த்தப்பட்டவர்களுக்குள்ளேயே சக்கிலி, பறையர், பள்ளன் என்று பல உட்பிரிவுகள் இருக்கின்றன.. கொங்கு பறையர்கள், தங்கள் கிணற்றிலிருந்து சக்கிலிப் பறையர்கள் தண்ணீரை எடுக்க விடுவதில்லை. சக்கிலி வீட்டில் பள்ளர்களுக்குத் தண்ணீர் கொடுப்பதில்லை. ஜாதி இந்துக்களுடைய இடத்திலிருந்து அரிசனங்கள் தண்ணீர் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அவர்கள் மூவரையும் ஒன்றாக்கி ஒருவரிடத்தில் ஒருவர் தண்ணீர் எடுக்க வைத்துவிட்டாலே, நிச்சயமாகத் தீண்டாமை ஒழிப்பில் வெற்றி பெற்றுவிடுவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். திரு. கக்கன் அவர்கள் அமைச்சராக இருந்தபோது, இது பற்றிய விவாதம் ஏற்பட்டது. பள்ளர், பறையர், சக்கிலி ஆகிய மூவருக்கும் ஒரே இடத்தில் வீடு கட்டிக் கொடுக்கிறோம் என்று சொல்லி, நிலம் ஒதுக்கியபோது, அவர்கள் மூன்று பிரிவினரும் ஒத்துக்கொள்ள மாட்டார்கள் என்றுகூட அப்போது சொல்லப்பட்டது. இந்த நிலைமைகள் இன்றும் இருக்கின்றன. கிராமங்களில் தாழ்த்தப்பட்ட உட்பிரிவுகள் பல இருக்கின்றன. அவர்கள் பகுதியிலே நிலம்

விவசாயிகள் மத்தியிலே பெரிய இன்னல்கள் இருக்கின்றன. இன்னும் என்னென்ன துன்பங்கள், கஷ்டங்கள் வருமோ என்று அவர்கள் நினைத்துக் கொண்டிருக்கும்போது, இப்படி அமைச்சர் அவர்கள் சொன்ன கருத்தை அவர்கள் பார்த்து அதனால் வேதனையடைந்து பலபேர் எனக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். இப்போது தாழ்த்தப்பட்டவர்கள் மட்டுமல்ல, சில நேரங்களிலே சில சாதாரண இந்துக்கள் கூட தங்களுக்குக் கடன் வரும்போது, தங்களது நிலங்களை விற்கிறார்கள். சர்க்காரேகூட புறம்போக்கு நிலங்களைத் தனிப்பட்டவர்களுக்குப் பட்டா செய்து கொடுத்திருக்கிறார்கள். அப்படி பட்டா செய்து கொடுக்கப்பட்ட நிலத்தை ஓராண்டு, ஈராண்டு கூட அவர்கள் பார்க்காமல் யாராவது ஜாதி இந்துக்களுக்கு விற்கப்பட்டோ, கொடுக்கப்பட்டோ இருந்தால், அப்படிப்பட்ட நிலங்களை மீட்க இருக்கிறார்கள் என்று இருக்கிறது. எங்களுடைய கொல்லிமலை, பச்சை மலை, கல்ராயன்மலை போன்ற பகுதிகளிலே 20, 30 ஆண்டுகளுக்கு முன்னாலேயே அங்குள்ள நிலங்களை விலைகொடுத்து வாங்கி அவர்களுடைய கடின உழைப்பினால் இன்றையதினம் அதிலே விவசாயம் நல்லமுறையில் செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்களிடமிருந்து பிடுங்கிக் கொடுக்கப் போகிறார்களா என்ற குழப்பம் இருக்கிறது. ஆகவே, இனிமேல் புறம்போக்கு நிலத்தைப் பட்டா செய்து கொடுக்கும்போது, முன்பு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எப்படி நிலம் வழங்கப்பட வேண்டும் என்று ஒரு சட்டத்தைக் கொண்டுவந்தார்களோ, அதுபோன்ற ஒரு சட்டத்தைத்தான் கொண்டுவர வேண்டும் என்று விவசாயிகள் விரும்புகிறார்கள். மேலும், ஏற்கனவே 20, 30 ஆண்டுகளுக்கு முன்பே அந்த நிலங்களை வாங்கி, அவற்றைப் பண்படுத்தி, பலவகைகளிலே கஷ்டப்பட்டுச் சீர்படுத்தி, இன்றைக்கு நல்ல முறையில் வைத்துக்கொண்டிருக்கும் அந்த நிலங்களை அவர்களிடமிருந்து திரும்பவும் பிடுங்கி எடுத்துக் கொடுக்கும் நிலைக்கு இந்த அரசு வரக்கூடாது என்று இந்தச் சந்தர்ப்பத்திலே எடுத்துச்சொல்ல விரும்புகிறேன்.

காடுகள் வளர்ப்பைப்பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவற்றை வரவேற்கிறோம். இப்போது காடுகள் அழிக்கப்படுவது கொஞ்சம் அதிகமாக இருக்கிறது. மதுவிலக்குக்கு என்று ஒரு சட்டம் கொண்டு வந்து அமுல் படுத்தப்படுவது போல கூட, இதற்கென்று ஒரு சட்டம் கொண்டு வரலாம். ஒவ்வொரு பகுதியிலேயும் சில மரங்கள், குறிப்பிட்ட வயது வந்த மரங்கள் தமக்கு விறகுக்கு வேண்டும் என்று சொல்லி, சில ஏரியாக்களை நாம கொடுக்கும்போது, அதிலே பல தவறுகள் ஏற்பட்டுவிடுகின்றன. ஆகவே, அதற்காகத் தனிப் பிரிவுகளை ஏற்படுத்தி, பல இடங்களிலே இவ்வாறு காடுகள் அழிக்கப்படுவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.





அடுத்தபடியாக, நடமாடும் மருத்துவமனைகள் பற்றி ஒருசில குறிப்பிட விரும்புகிறேன். ஏற்கெனவே இருக்கக்கூடிய ஆரம்ப சுகாதார நிலையங்களிலே இந்த நடமாடும் மருத்துவமனைகளைத் தொடங்கினோம். இந்த ஆண்டு இன்னும் சில பிரிவுகளைத் தொடங்க இருக்கிறோம். நான் இந்த சந்தர்ப்பத்திலே எடுத்துச்சொல்ல விரும்புவதெல்லாம், இப்படிப்பட்ட திட்டங்களை நாம் சொல்லுகின்றபோது அவற்றுக்கு வேண்டிய அலுவலகங்கள், அதிகாரிகள், போதிய மருத்துவ வசதி இவைகளையும் கூடவே ஏற்படுத்த வேண்டும். ஆனால் இன்றைக்கு இவைகள் எதுவும் இல்லாமல் வெறும் திட்ட அறிவிப்பாகவே இருக்கிறது. இந்த வசதிகள் இல்லாததால், அரசால் அறிவிக்கப்பட்ட திட்டங்கள் செயல்படவில்லை என்ற கருத்து மக்கள் மத்தியிலே இருக்கிறது. அரசு ஒரு திட்டத்தை அறிவிக்கின்ற போது, அந்தத் திட்டத்தை அறிவிப்பதற்கு முன்னதாகவே அதற்கு வேண்டிய உபகரணங்கள் போன்றவற்றுக்கு வழி செய்து, அலுவலகக் கட்டிடம் போன்றவற்றை அமைத்து, அங்கு வேண்டிய அலுவலர்களையும் நியமித்தால், அந்தத் திட்டம் நல்லமுறையில் செயல்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த ஆண்டு தொடங்கப்பட்ட நடமாடும் மருத்தகம் நல்லமுறையில் இயங்காமல் இருக்கும்நிலையில், இந்த ஆண்டு இன்னும் பல துவங்கப் போகிறோம் என்று சொல்கிறபோது, இதுவும் இயங்காமல் போகும் என்ற அய்யம்தான் எங்களைப் போன்றவர்களுக்கு இருக்கிறது. ஆகவே, திட்டம் போட்டவுடனேயே, அதற்கு வேண்டிய அலுவலர்களையும், மற்றும் தேவைகளையும் பூர்த்தி செய்ய வழிவகுத்து அந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்குத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஆரம்ப சுகாதார நிலையங்களிலே இருக்கக் கூடிய மருத்துவர்களுக்குப் பிரேத பரிசோதனை செய்யக்கூடிய—'போஸ்ட் மார்ட்டம்' செய்யக்கூடிய—அதிகாரம் மருத்துவர்களுக்கு இல்லாமல் இருக்கிறது. எங்களுடைய சேந்தமங்கலம் பகுதியிலே கொல்லிமலை இருக்கிறது. அங்கே ஆரம்ப சுகாதார நிலையம்தான் இருக்கிறது. கொல்லிமலைப் பகுதியிலே கொலை செய்யப்பட்டு ஒருவர் இறந்துவிட்டால்—அவருடைய உடலைப் பிரேத பரிசோதனை செய்ய வேண்டும் என்றால், அதற்கான வசதி கொல்லிமலையிலே இல்லை. கொல்லிமலையிலே இருந்து ஆட்களைத் தேடி, ஆட்கள் மூலமாக அந்தப் பிணத்தைக் கீழே சேந்தமங்கலத்திற்குக் கொண்டு வந்து பிரேத பரிசோதனை செய்வதற்குள் 2, 3 நாட்கள் ஆகிவிடுகிறது. அப்படி ஆகும்போது, அவன் என்ன காரணத்தினாலே கொலை செய்யப்பட்டான், எப்படிக் கொலை செய்யப் பட்டான் என்று குறிப்பு எடுப்பதற்குக் கூட முடியாத நிலையில் அந்தப்

வாங்கி காலனி கட்டி அவர்களையெல்லாம் ஒரே இடத்திலே குடி வைத்து விட்டால், நாம் இந்தத் திட்டத்தை வெற்றிகரமாகச் செய்தவர்களாக ஆவோம். வேறு ஜாதி இந்துக்களுக்கும் மற்றவர்களுக்குமிடையில் பிரச்சினை இல்லை என்பதைச் சொல்லிக்கொண்டு, தாழ்த்தப்பட்டவர்களில் உள்ள உட்பிரிவில் உள்ளவர்கள் தங்களுக்குள் ஒருவருக்கொருவர் தண்ணீர் கொடுக்க வேண்டிய முயற்சிகளை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

கிராமங்களிலே குழந்தைகள் காப்பகம் இருக்க வேண்டும். இங்கே செக்ரடேரியட்டில் கூட ஒன்று இருக்கிறது என்று சொன்னார்கள். கிராமங்களில் விவசாயக் கூலிகள், கூலி வேலைக்குப் போகிற நேரத்தில், இளம் குழந்தைகளை வீட்டிலே விட்டுவிட்டுப் போக முடியவில்லை. அதனால் பள்ளிக்குப் போக வேண்டிய நிலையில் உள்ள குழந்தைகளிடம் இந்தக் குழந்தைகளைப் பார்த்துக்கொள்ளும்படி சொல்லிவிட்டு, வேலைக்குச் செல்லு கிறார்கள். இதனால் பள்ளிக்குப் போக வேண்டிய வயதில் உள்ள குழந்தைகள் பள்ளிக்குப் போக முடியாத நிலை ஏற்படுகிறது. ஆகவே கிராமங்களில் குழந்தைகள் காப்பகத்தை ஏற்படுத்தி அங்கே ஆயாவை நியமித்து, விவசாயக் கூலிகள் விவசாயத்தை முடித்துவிட்டு வருகிற வரையிலும் அந்தக் குழந்தைகளைப் பார்த்துக்கொள்ள வேண்டும் என்ற நிலைமையை கிராமப் பகுதியிலே ஏற்படுத்த அரசு முன்வர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, நாங்கள் தங்கியிருக்கக் கூடிய ஹாஸ்டலைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு. க. இராமமூர்த்தி) : உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே 20 நிமிடங்களாகப் பேசியிருக்கிறார்கள். சீக்கிரம் முடிக்க வேண்டும்.

திரு. வி. ஆர். பெரியண்ணன் : முடித்துவிடுகிறேன். உறுப்பினர்கள் தங்கும் பழைய ஹாஸ்டலில் தண்ணீர் எடுத்துச் செல்ல பிளாஸ்டிக் குவளைகளைத் தான் வைத்திருக்கிறார்கள். அதை எடுத்துக்கொண்டுதான் நாங்கள் செல்ல வேண்டியிருக்கிறது. சேரியில் இருப்பதைப் போல ஹாஸ்டலிலும் இருக்கிறது. டெலிபோன்கள் ஒவ்வொரு மாடியிலும் இரண்டு மூன்று இருக்கின்றன, ஆனால் சரியாக வேலை செய்யவில்லை. பழைய விடுதியில் உள்ள எங்களையெல்லாம் மாற்றாந் தாய்ப் பிள்ளைகள் மாதிரி நடத்துகிறார்கள். இல்லையென்றால், எங்களுக்கும் புதிய விடுதியில் இடம் கொடுத்துவிடுங்கள். தண்ணீர் வைக்கக் கூடிய குவளைகளை எப்போது கழுவுகிறார்கள் என்பது தெரியவில்லை.





தண்ணீர் தொட்டிகளையும் எப்போது சுத்தம் பண்ணுகிறார்கள் என்பது தெரியவில்லை. எப்போது பார்த்தாலும், அந்தத் தண்ணீரின் அடியில் பாசி, தூசு நிறைய இருக்கின்றன. ஆகவே இதைப் போக்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

தந்த மாளிகையில் இருப்பவர்கள் தாழ்வாரத்திற்கு வர வேண்டும் என்று நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்கான விளக்கத்தைக் கூட இங்கே பல உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். தந்த மாளிகையில் இருப்பவர்கள் தாழ்வாரத்திற்கு வர வேண்டுமென்று சொன்னால், அதற்கு முன்னுதாரணமாக இப்போது இருக்கக் கூடிய அமைச்சர்கள் அத்தனை பேரும் தங்களுடைய பங்களாவிலிருந்து 'கோஷன் பிளாக்கில்' உள்ள வீடுகளில் வந்து வாழ வேண்டும் என்று கூறி என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

* திரு. ப. மாணிக்கம் : மாற்றுத் தலைவர் அவர்களே, 1979-80 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்மீது என்னுடைய கருத்துக்களைத் தெரிவிப் பதற்கு முன் ஒரு மனக் குறையை அல்லது என்னுடைய உரிமை சம்பந்தப் பட்ட பிரச்சினையை முதலில் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இந்த ஆண்டு மின்சார பட்ஜெட் இந்த அவையின் முன்னால் வைக்கப்பட வில்லை. அதற்குரிய காரணமும் நமக்குத் தெரிவிக்கப்படவில்லை. இந்தக் குறைபாடு ஏதோ தவறுதலாக, slip என்று சொல்லுவார்களே அது மாதிரி ஏற்பட்டுவிட்ட குறைபாடு அல்ல. தமிழ் நாட்டில் மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கையை ஆண்டுதோறும் விவாதித்து வந்தோம். என்ன காரணத்தாலே இந்த ஆண்டு அந்த பட்ஜெட்டை இங்கே வைக்கவில்லை என்பதை அரசு தெரிவிக்க வேண்டும். அந்த வாய்ப்பை நாம் இழந்திருக் கிறோம். வரக்கூடிய ஆண்டில் இப்படிப்பட்ட குறைபாடு ஏற்படக்கூடாது.

இந்த நிதிநிலை அறிக்கையிலே, மின்சார உற்பத்தியை 17 சதவீதம் அதிகரித்திருக்கிறோம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். எனவே அந்தத் துறையைப்பற்றித் தனி விவாதம் நடத்துவது எந்தக் காரணத்தால் தடுக்கப் பட்டது என்பது விளங்காமலே இருக்கிறது.

இந்த அறிக்கை இந்த அரசால் வைக்கப்பட்ட மூன்றாவது நிதிநிலை அறிக்கை. முதல் அறிக்கை ரூபாய் 670 கோடிக்கும், இரண்டாவது நிதிநிலை அறிக்கை 700 கோடி ரூபாய்க்கும், மூன்றாவது நிதிநிலை அறிக்கை 849.83 கோடி ரூபாய்க்கும் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. அதாவது சுமார் 150 கோடி ரூபாய் கூடுதலாக இந்த பட்ஜெட் போடப்பட்டிருந்தும், இதனால் தமிழ் நாட்டில் ஏற்படக்கூடிய பலன் என்ன, இந்த ஆண்டில் நம்முடைய மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு எந்த வகையில் இது உதவுகிறது என்பதை நாம்

[திரு. ப. மாணிக்கம்] [1979 மார்ச் 13

பார்க்க வேண்டும். இந்த அறிக்கையின் துவக்கத்திலும் சரி, முடிவிலும் சரி, அமைச்சர் அவர்கள் இலக்கிய பாணியில் கருத்துக்களைக் கூறியிருக்கிறார்கள். ஆனால் அவை பொருளாதார உண்மைகளுக்கு முற்றிலும் நேர் விரோதமாக இருக்கின்றன. நிதிநிலை சம்பந்தமாகக் கையாளப்பட்டிருக்கிற கொள்கை சரியான கொள்கையா என்றால், அது இல்லை என்பதைச் சொல்ல விரும்புகிறேன். காரணம், தமிழ் நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சிக்கான முறையில் எந்தத் திட்டமும் அமைக்கப்படவில்லை. இரண்டு மூன்று அம்சங்களில் அதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். விவசாயத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. ஒதுக்கீடு செய்யப்பட்ட போதிலும், தமிழகத்திலே மிகப் பெரிய அளவிற்கு நெல், பருத்தி, கடலை, கரும்பு போன்ற நான்கு பயிர்களின் உற்பத்தியில் ஈடுபட்டிருக்கக்கூடிய விவசாயிகளுக்கு விலை வீழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது. மிளகாய் வற்றல் இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்னால் 900 ரூபாய்க்கு விற்றது இன்றைக்கு 500 ரூபாய்க்கு வந்துவிட்டது. காரணம் அறுவடை நேரம். அறுவடை நேரத்தில் விலை வீழ்வதும், அறுவடை இல்லாத நேரத்தில் விலை ஏறுவதும் நம்முடைய நாட்டுப் பொருளாதாரத்தில் நிலவி வருகிற நிலைமை. தமிழகத்திலே, மேலே குறிப்பிட்ட இந்த நான்கு பயிர்களோடு, கம்பு, கேழ்வரகு போன்ற பயிர்களின் விலையும் வீழ்ச்சியடைவதால், விவசாயிகளுடைய வாழ்க்கையில் மிகப் பெரிய கஷ்டம் ஏற்படுகிறது. அவர்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்க அரசு என்ன அணுகு முறையை இந்த நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறது என்று பார்த்தால், ஒன்றுமில்லை. இதன் காரணமாகத்தான் இன்றைக்கும் தமிழகத்திலே கொந்தளிப்பான நிலை நிலவுகிறது. அணுகு முறை சம்பந்தமாக அரசுக்கும், எதிர்க் கட்சியில் உள்ளவர்களுக்கும் கருத்து வேறுபாடு இருக்கலாம். மொத்தத்திலே, விலை வீழ்ச்சியடைந்தால், அடுத்த ஆண்டு பல இடங்களில், கரும்பு உற்பத்தி செய்வதற்குத் தயங்குகிறார்கள். காரணம், விறகை விட கரும்பு விலை மலிவு. எரிபொருளான விறகின் விலை உயர்ந்துவிட்டது என்பது உண்மை. இப்படிப்பட்ட நிலைமை இருப்பதால், விவசாயிகள் அஞ்சுகிறார்கள். நெல்லுக்கும் கட்டுப்படியாகக் கூடிய விலை கிடைக்கவில்லை. சாதாரணமாக பல மாநிலங்களில் இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது. Agricultural input and output என்று பார்க்கும் போது, Input -க்கு அதிக விலை ஆகிறது, ஆனால் விளைச்சலுக்கு உரிய விலை கிடைக்கவில்லை. இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நம்முடைய

(பிற்பகல் 6-10)

அரசு என்ன அணுகு முறையை, என்ன கொள்கையைக் கையாளுகிறது என்பதை அறவே காண முடியவில்லை. விலை சம்பந்தமாக வரும்போது, மாநிலத்திற்கு அதிகாரம் இல்லை என்பதை உணர்கிறோம். விலை நிர்ணயம்



1979 மார்ச் 13] [திரு. ப. மாணிக்கம்]

செய்வதற்கு மத்திய அரசுக்குத்தான் அதிகாரம் இருக்கிறது. விலைக் கட்டுப்பாடு செய்வது அக்ரிகல்சரல் பிரைசஸ் கமிஷனுக்கு உரியது. நம்முடைய மாநிலத்திலே உள்ள திட்டக் கமிஷன்கூட கொள்முதல், மற்றும் உற்பத்திச் செலவுகள் அதிகமாவதால் ஏற்பட்டுள்ள விளைவுகள் குறித்து அக்ரிகல்சரல் பிரைசஸ் கமிஷன் முன் வைப்பதானாலும் சரி, மத்திய அரசினுடைய அந்தக் கொள்கைகளில் மாறுதல் கொண்டு வருவதானாலும் சரி, மாற்றுக் கட்சிகளின் ஒத்துழைப்புடன் அவைகளைச் செய்யலாம். அப்படிப்பட்ட ஒரு அணுகு முறை எதுவும் இதில் காணவில்லை

தமிழ் நாட்டில் நவீன விவசாயம் பற்றி நம்முடைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்கூட சிறிது நேரத்திற்கு முன்னால் குறிப்பிட்டார்கள். நம் நாட்டில் சுமார் 9 லட்சம் பம்புசெட்டுகள் இருக்கின்றன என்றார்கள். பம்புசெட்டுக்கள் நிலத்தடி நீரை எடுத்து வெளியேற்றுகின்றன. நம்முடைய மாநிலத்திலே விவசாயி பத்தாண்டுகளாக, விலை இழப்பு, கடன் என்பது போன்ற இரண்டு காரணங்களினால், பிரச்சினைகளுக்கு ஆளாகின்ற நிலைமையில் இருக்கிறான். இந்தப் பிரச்சினையை நம்முடைய அரசு எப்படித் தீர்க்கப்போகிறது என்பது தெரியவில்லை. விலை சம்பந்தமாக நம்முடைய மாநில அரசினுடைய அறிக்கையிலே எந்த அம்சமும் காணப்படவில்லை. இதில் ஒரு சிறிய விஷயத்தைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய நிலத்தடி நீர் வளம் குறைந்திருக்கிறது என்று சொல்லப்படுகிறது. நான் சொல்லும் விவரங்கள் அதிகாரபூர்வமாகச் சேகரிக்கப்பட்ட விவரம்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய நிலம் உறிஞ்சும் அளவைவிட உள்ள நீரை அதிகமாக எடுக்கிறோம். அதனால் தமிழகத்தில் வறட்சி ஏற்படக்கூடிய ஆபத்து இருக்கிறது என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அப்படி இருந்தும் நிலத்தடி நீரைப் பெருக்குவதற்கு என்று 'பர்கோலேஷன் பாண்ட்ஸ்' அமைத்திருக்கிறார்கள். நீர் ஊற்றுக்கள், ஊற்றுக்குட்டைகள் என்று அமைப்பது, அவைகளைப் பராமரிப்பது யார்? அவைகளைப் பராமரிப்பதற்கு எவ்வளவு நிதி ஒதுக்கீடு என்பதும் இன்னும் அரசால் தீர்மானிக்கப்படவில்லை. இது ஏனென்று தெரியவில்லை. இந்தக் கூட்டத்தொடர் முடிவிலாவது அதுகுறித்து முடிவெடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த விவரங்கள் அதிகாரிகள் மூலம் கிடைத்த விவரங்களிலே ஒன்றாகும். விவசாயத்தைப் பெருக்க வேண்டும். அந்தப் 'பெர்கோலேஷன் பாண்ட்ஸ்' திட்டத்தை யார் நிறைவேற்றுவது, யார் பராமரிப்பது, எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்வது என்பதெல்லாம் தீர்மானிக்கப்படாமலிருப்பது நல்லதல்ல.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவர் அவர்களே, 'பெர்கோலேஷன் பாண்ட்ஸ்' என்று சொல்லக்கூடிய கசிவு நீர்க் குட்டைகள் இன்று தர்மபுரி, இராமநாதபுரம் போன்ற மாவட்டங்களில் Drought Prone Area Programme -ல் (D.P.A.P.) ல் வருகிறது. ஒரு குட்டைக்கு ரூ. 25 ஆயிரம் என்று ஒரு இலக்கு வைத்துக்கொண்டு அந்த 'பெர்குலேஷன் பாண்ட்ஸ்'-அய் ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். அடுத்து, தமிழகத்தில் சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமாகவும் இன்டக்ரேட்டட் ரூரல் டெவலப்மெண்ட் புரோகிராம், ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டத்தின் மூலமாகவும் இது போன்ற 'பெர்கொலேஷன் பாண்ட்ஸ்' ரூ. 25 ஆயிரம் அளவிலே செலவு செய்து ஒவ்வொரு இடத்திலும் அமைத்துக்கொண்டு வருகிறோம்.

**திரு. ப. மாணிக்கம் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்னை வெளியே இழுத்துப்போட்டிருக்கிறார்கள். He drew me out. எனக்கு வேறு வழியே இல்லை. அதனால்தான் தற்காப்புக்காக நான் அப்படிச் சொல்லிக் கொண்டேன்.

*** திரு. வே. தங்கப்பாண்டியன் :** Sir, on a point of order. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், முன்பொருமுறை மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்கள் பேசுகின்றபோது, இப்படிப்பட்ட குறிப்புகளைக் கொடுத்தால், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கலாம், அதிகாரிகளிடமிருந்து எதிர்க்கட்சிகளுக்கு விவரங்கள் போய்ச் சேர்கின்றன என்ற எண்ணத்தை வெளியிட்டார்கள். எதிர்க்கட்சிகளுக்கு சில குறிப்புகள் கிடைக்கின்றன. அந்தக் குறிப்புகளை வைத்துக்கொண்டு பேசும் போது, அதில் நியாயம் இருந்தால், அதற்குப் பரிகாரம் காண வேண்டுமே தவிர, குறிப்புக் கொடுத்த அதிகாரியைப் பழிவாங்க வேண்டும் என்று முடிவு எடுத்தால், அது ஆளுங்கட்சிக்கும் பயனளிக்காது, எதிர்க்கட்சிகளும் ஜனநாயக முறையில் நடப்பதற்கு வாய்ப்பு இராது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாற்றுத் தலைவர் (திரு. க. இராமமூர்த்தி) :** அமைச்சர் அவர்கள் கேட்பதற்கு உரிமையிருக்கிறது.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** எதிர்க் கட்சிகளுக்குச் சரியான தகவல்கள் கிடைக்கவில்லையே என்ற கருத்தினாலேதான் அப்படி அவர்கள் சொன்னார்கள். வேறு ஒன்றுமில்லை.



**மாற்றுத் தலைவர் (திரு. க. இராமமூர்த்தி) :** பொதுவாகவே, பல்வேறு கமிட்டிகளில் அங்கத்தினராக இடம் வகிக்கின்ற காரணத்தினாலே, இந்தக் கமிட்டியினுடைய அறிக்கை இங்கே அதிகாரபூர்வமாக வைக்கப்படுகின்ற வரையிலும் இந்த இடத்திலிருந்துதான் அந்தத் தகவல் வந்தது என்று சொல்ல வேண்டிய அவசியமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ப. மாணிக்கம் :** தலைவர் அவர்களே, நான் இழந்திருக்கின்ற நேரத்தைத் தாங்கள் தயவுகூர்ந்து மீட்டுத்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஒன்றைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். நான் அறிக்கையை வாசிக்கவும் இல்லை. அதைப்பற்றி மேற்கோள் காட்டவுமில்லை. என்னுடைய நிலையைத் திரும்பவும் எடுத்துச் சொல்கிறேன். 'அதிகாரியிடமிருந்துதான் என்று நான் முதலில் குறிப்பிட்டேன். பதிவேட்டிலே ஒழுங்காகப் போக வேண்டும் என்பதற்காகத்தான் சொல்கிறேன். அதிகாரி என்று சொன்னேன். அமைச்சர் அவர்கள் தலையிட்டு மீண்டும் தெளிவாக வேண்டும் என்று கேட்டார்கள். அதனால்தான் மீண்டும் மீண்டும் சொன்னேன். ஏற்கெனவே நான் தெளிவாகக் கேட்டபோது, எடுத்துச் சொல்லியதன் விளைவை நான் அனுபவித்து விட்டேன். ஆகவேதான் இதைத் தவிர்த்தேன். அமைச்சர் அவர்கள்தான் தவிர்க்க விடவில்லை. அதுதான் நிலை. இருக்கட்டும் அடுத்து, அமைச்சர் அவர்கள் விவரங்களைக் கேட்கும்போது, நான் பதில் சொல்லும்போது, இந்த நிலையை மேற்கொண்டால் நல்லதாக இருக்கும். கூடுமானவரை நான் எச்சரிக்கையாகவே இருக்கிறேன்.

விவசாய அபிவிருத்தி என்பதிலே நான் ஒன்றைக் குறிப்பிட வேண்டும். கிராமப்புற கடனாளித் தன்மையில் நம்முடைய தமிழ்நாடு மிக உச்ச நிலையில் இருக்கிறது. இதை மாற்றுவதற்கு இந்த அரசு யோசிக்க வேண்டும். ஒரு ஆண்டு நிதிநிலை அறிக்கையிலேயே அவ்வளவையும் தீர்க்க முடியாது. இது ஒரு 'மாஜிக்' அல்ல. இருப்பினும் ஒரு அணுகுமுறை வேண்டும் என்று தான் சொல்கிறேன். அதைத்தான் நான் வலியுறுத்துகிறேன்.

அடுத்து, தொழில் சம்பந்தமாக வருகிறபோது, தொழிலுக்கான நிதி ஒதுக்கீடு மட்டுமல்ல, கொள்கையை அறிவித்திருக்கிறதா என்று சொன்னால், இதிலே உள்ள வாக்குறுதியை அப்படியே மேற்கொள்ளாவிட்டாலும், சிறு தொழில்களை வளர்ப்பதற்காக, அதாவது வேலை வாய்ப்புகளை அதிகரிக்கக் கூடிய முறையில் ஏதாவது தொழில் கொள்கை சொல்லப்பட்டிருக்கிறதா என்றால், இல்லை. நான் அவர்கள் நோக்கத்தைக் குறை சொல்லவில்லை. பொருளாதார ரீதியாகப் பார்த்தால், இந்த நோக்கம் 1,30,000 பேர்களுக்குக் கூடுதலாக வேலை வாய்ப்புக் கொடுப்பது என்பது. அதற்குத் திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. அதிலே சிறு

[திரு. ப. மாணிக்கம்] [1979 மார்ச் 13

தொழில், குடிசைத் தொழில் வளர்ச்சியில் சிறப்புக் கவனம் செலுத்துவதாகவும், நம்முடைய நாட்டில் சிறு தொழில், குடிசைத் தொழில் வளர்ச்சிக்குச் சிறப்புக் கவனம் செலுத்தும் கொள்கையை மேற்கொண்டு, அதற்கான முறையிலேதான் இந்த அரசு செயல்பட்டு வருகிறது என்றும் அதுதான் லட்சியம் என்றும் சொன்னால், நான் இதை வேண்டாம் என்று சொல்லவில்லை. இப்படிப்பட்ட கொள்கையை இந்த நேரம், 1979-ல் அதுவும் நம்முடைய இந்தியப் பொருளாதாரத்தில் நம்முடைய மாநிலம் இருக்கக்கூடிய நிலைமையில், வேலையின்மை மட்டுமல்ல, பொருளாதார வளர்ச்சி, பொருளாதாரம் மீண்டும், மீண்டும் வளரக்கூடிய, 'ஜெனரேட்டிங் எகானமி' என்ற பொருளிலே சொல்வார்கள், அந்த அடிப்படையில் செல்வ விருத்தி செய்யக்கூடிய கொள்கையா என்ற முறையிலே பார்த்தால், இது பலகீனமானது. அது மட்டுமல்ல, நவீன பொருளாதார நிபுணர்கள் சொல்வது போல, இது ஒரு தவறான கொள்கையேகூட. நடைமுறையிலே வேலை வாய்ப்புத் தருகிறோம், இது Populis கொள்கை என்று சொல்லலாம். அதாவது ஜனங்களைக் கவர்ச்சிக்கின்ற, ஈர்க்கின்ற முறையிலே இது தற்காலிகமாகப் பலனைத் தரலாம். ஒரு 'ஸ்டிமுலெண்ட்' போல உதவலாம். ஆனால் தற்காலிகமாகக் கொடுத்து, அஸ்திவாரத்தையே பலகீனம் ஆக்கிவிடும் நிலை ஏற்படும்.

(பிற்பகல் 6-20)

நிதிநிலைக் கொள்கை சம்பந்தமான விவாதம் என்பதால், கொள்கைப் பிரச்சினையாக எழுப்புகிறேன். எனவே இந்தக் கொள்கையை இந்த ஆண்டில் மாற்றுவார்களென்று என்னால் நம்ப முடியவில்லை. ஆனால் அடுத்த ஆண்டிலாவது இந்தக் கொள்கை மாற்றப்பட வேண்டும். தொழில் வளர்ச்சி என்று வரும்போது, ஆளுநர் அவர்கள் உரையில் உப்பை ஆதாரமாகக் கொண்டு, சால்ட் பேஸ்டு கெமிகல் இன்டஸ்டிரி—ரசாயனத் தொழிற்சாலை நிறுவப்படும் என்றார்கள். அதற்கான முயற்சிகளைப்பற்றி நிதிநிலை அறிக்கையில் ஒன்றுமில்லை. எனவே கொள்கை என்ற பார்வையை வைத்துக் கொண்டு, இந்த ஆண்டு அறிக்கையில் என்ன முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன என்று பார்க்கும்போது, ஒன்றுமே குறிப்பிடப்படவில்லை. கொள்கை கேட்க நன்றாக இருக்கிறது. தமிழகத்தில் சால்ட் பேஸ்டு இன்டஸ்டிரி ஆரம்பிக்க முடியும். எனக்கு ஒரு தகவல் கிடைத்திருக்கிறது. தவறாக இருந்தால், திருத்திக்கொள்கிறேன். ஏற்கெனவே முந்தைய அமைச்சரவை எடுத்த முடிவிற்கு பாராட்டுதல் அல்லது அதை விமர்சனம் செய்தல் என்ற அளவிற்குப் போகவில்லை. ஏற்கெனவே கடலூர் பக்கத்தில்—சந்தர்ப்பவசமாக அது என்னுடைய ஊர்—உப்பை அடிப்படையாகக் கொண்டு ரசாயனத் தொழிற்சாலை ஆரம்பிப்பதாகப் பேச்சு நடந்தது. கடலூர்



1979 மார்ச் 13] [திரு. ப. மாணிக்கம்]

என்பதைவிட தென் ஆற்காடு மாவட்டம் என்று சொன்னால், வேறு சில உறுப்பினர்களும் சேருவார்கள், ஆதரவு பெருகும். எனவே சால்ட் பேஸ்டு கெமிகல் இன்டஸ்டிரி ஏற்படுத்த தமிழகத்தில் நிறைய வாய்ப்புகள் உள்ளன. அதில் இந்த அரசு கவனம் செலுத்த வேண்டும். ஏன் அதில் கவனம் செலுத்தவில்லை என்பது தெரியவில்லை. கடலூரில் ஆரம்பிக்கப் போவதாகப் பேச்சு நடந்தது. என்ன காரணத்தாலே நின்றுவிட்டது. எனவே வாய்ப்புகள் எங்கிருந்தாலும்—அது வேதாரண்யத்தில் ஆரம்பித்தாலும் சரி, கடலூரில் ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்கவில்லை, எங்காவது ஆரம்பிக்க வேண்டும். கடலூர் வாய்ப்பு உள்ள இடம் என்று சொல்கிறார்கள். நீண்ட உப்பளக் கடற்கரை பல மைல் நீளத்திற்கு இருக்கிறது. துறைமுகம் இருக்கிறது. பல்வேறு வாய்ப்புகள் இருக்கின்றன. இயந்திரம் இறக்குமதி செய்ய, தொழிற்சாலை கட்ட வாய்ப்புகள் இருக்கின்றன. மேலும் கடலூருக்கு இணையாக நெய்வேலி இருப்பதால், 'பவர்' கிடைக்கும். எனவே அரசு வரக்கூடிய ஆண்டிலாவது இந்த அம்சத்தில் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தொழில் துறை கொள்கை சம்பந்தமாக, தொழில் வளர்ச்சி சம்பந்தமாக என் கருத்துக்களைக் குறிப்பிட்டிருக்கிறேன்.

அடுத்து, சில நாட்களுக்கு முன்னால்தான் 3-வது நிதிக் கமிஷனுக்கு நம்முடைய மாநில அரசின் சார்பாக சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை நம் முன்னாலே வைக்கப்பட்டது. சென்ற ஆண்டு பேசும்போது, நிதிக் கமிஷனுக்கு நம்முடைய மாநிலத்தின் சார்பாக சமர்ப்பிக்கக்கூடிய சிபாரிசுகளை, அறிக்கைகளை, எல்லோரையும் கலந்து பேசி, தயாரிக்கலாமென்று கூறப்பட்டது. ஆனால் நிதிக் கமிஷன் வந்து செல்லும்போது, அவர்களுக்குக் கொடுத்த விருந்திற்குத்தான் அழைப்பு வந்ததே தவிர, கலந்து ஆலோசிக்கப் படவில்லை. அரசு சார்பாகக் கலந்து ஆலோசிக்கப்படுமென்று சொல்லப் பட்டது. ஆனால் கலந்து ஆலோசிக்கப்படவில்லை. இருப்பினும் சமர்ப்பித்துள்ள, நம் முன்னால் வைத்திருக்கக்கூடிய அறிக்கை ஓரளவிற்கு மாநிலத்தினுடைய நிதி நிலையைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, மாநிலத்தின் தேவையை ஆதாரமாகக் கொண்டு, பொதுவிலே நன்றாகத் தயாரிக்கப்பட்டிருக்கிறது. அவர்களே அறிக்கையிலே ஒன்று சொல்கிறார்கள். 1979-80 ஆம் ஆண்டிலே மது விலக்குக் காரணமாக 152.88 கோடி ரூபாய் நஷ்டம் என்று, எஸ்டிமேட்டாகச் சொல்லப்படுகிறது. நிதிக் கொள்கை என்று வரும்போது, மது விலக்கு ஒரு சிக்கலான பிரச்சினையாக இருக்கிறது. இன்னும் சொல்லப் போனால், அது ஜனரஞ்சகமான பிரச்சினை, நெறி சம்பந்தமான பிரச்சினை. இப்படிச் சொல்லும்போது, இது கட்சியின் அணுகுமுறை என்று அதைத் திருப்பிவிடலாம். அதை ஆங்கிலத்தில் twisting என்று சொல்லுவார்கள். பிரச்சினை அப்படிப்பட்டது. பொருளாதாரத்தில் மாநிலத்தின் வேளாண்மை வளர்ச்சியைப் பார்த்தால், இதில் அரசின் நிலை வெறும்

'பாபலிஸ்ட் அப்ரோச்' என்று நான் சொன்னால் மட்டும் சரியாகாது. என்னைப் பொறுத்தவரையில், நான் சிறு வயதிலிருந்தே காந்தியவாதியாக இருந்தவன். இப்போது காந்தியத்தை அன்றாட வாழ்க்கையில் நடைமுறைப் படுத்துகிறவன், நான் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவனாக இருந்தாலும், நான் இதை எச்சரிக்கையோடு சொல்ல வேண்டியிருக்கிறது. ஏனென்றால் பத்திரிகை உலகைப் பார்க்க வேண்டியதாக இருக்கிறது. இருப்பினும் இவ்வளவு பெரிய நஷ்டத்தை ஏற்படுத்திக்கொண்டு, இதில் என்ன ஆதாயம்? அசெஸ்மென்ட் என்ன? நம்முடைய பொருளாதாரத்திற்கு என்ன ஆதாயம்? ராஜாஜி அவர்கள் காலத்தில் மதுவிலக்கும், விற்பனை வரியும் வந்தன. இன்றைக்குள்ள நிலைமையிலே மது விலக்குக் கொள்கையால் என்ன ஆதாயம்? நிதிக்கொள்கை என்று சொல்லும்போது, ஒரு பக்கம் நஷ்டம்; மத்திய அரசு நஷ்ட ஈடு கொடுக்குமென்று எதிர்பார்க்கிறோம். ஓரளவிற்குக் கொடுத்திருக்கிறார்கள். 152 கோடி ரூபாய் நஷ்டம் வைத்துக்கொண்டு, மத்திய அரசு தருமென்று எதிர்பார்க்கிறோம். ஆனால் அவர்கள் தரவில்லை. இன்னும் கேட்கிறோம். மாநில அரசு கேட்கக்கூடிய சகல கோரிக்கைகளையும், நான் இந்த அவை உறுப்பினர் என்ற முறையில் மட்டுமல்லாமல் நான் சார்ந்துள்ள கட்சியும் முழுமையாக ஆதரிக்கிறது. எங்களுடைய கட்சி, மாநில மத்திய அரசு நிதி நிலைமை எப்படி இருக்க வேண்டுமென்று சொல்லப்படுகிறதோ, அதையெல்லாம் கேட்டிருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், அந்தத் தீர்மானத்தின் நகலைக் கொண்டு வந்திருக்கிறேன். சந்தேகம் இருந்தால், அதை எடுத்துக்காட்டத் தயாராக உள்ளேன். நமக்குத் தேவை இருக்கிறது. வேண்டுமென்று கேட்கிறோம். ஆனால் ஒரு பக்கம் நஷ்டத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறோம். மத்திய அரசு சொல்கிறது என்பதற்காக அப்படியே நிறைவேற்றாமல், இதைக் கட்டுப்படுத்தி—மதுவிலக்கைக் கட்டுப்படுத்தி நடத்தக்கூடிய முறையில் நவீனப்படுத்தலாம், காலத்திற்கு ஏற்றவாறு பழைய காலத்தில் சில கொள்கைகள் உண்டு. அதைக் காலத்திற்கு ஏற்றவாறு மாற்றிக் கொள்ள வேண்டும்.

இந்து சாஸ்திர முறையில் அனுஷ்டானம் என்று சொல்லலாம். நூறு வருடங்களுக்கு முன்பு ஒரு அனுஷ்டானம் இருந்தது. இப்போது வேறு ஒரு அனுஷ்டானம் இருக்கிறது. ரொம்ப ஆசாரத்தில் நம்பிக்கை உள்ளவர்கள்கூட மாற்றிக் கொள்கிறார்கள். மதுவிலக்கு நல்ல கொள்கை. ஆனால் அதை எப்படி நிறைவேற்றுவது? டெம்பரேட் டிரிங்கிங்—இதைப்பற்றிப் போன தடவைகூட சொன்னேன், இப்போதும் சொல்கிறேன். மேற்கு மாம்பலத்தில் சண்டை நடந்திருக்கிறது. இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் இதுகுறித்துச் செய்தி வந்திருக்கிறது. மன்னிக்க வேண்டும், பத்திரிகை பெயரைச் சொல்லிவிட்டேன். சண்டை நடக்கிறது, பார் 'இன்வால்வ்ட்' . . .





**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** எந்தப் பத்திரிகை என்பதில் சந்தேகமில்லை. இந்துப் பத்திரிகையிலும் செய்தி வந்திருக்கிறது.

**திரு. ப. மாணிக்கம்:** கூடுதலாக இன்னொரு பத்திரிகையின் பெயரையும் சொல்லியிருக்கிறார்கள். நன்றி. சண்டை சென்னையில் நடக்கிறது. சில மாதங்களுக்கு முன்பு ஓட்டேரியில் நடந்தது. இப்போது மேற்கு மாம்பலத்தில் நடக்கிறது. இன்னும் ஊருக்குள்ளே பல நடக்கின்றன. இதனால் பொருளாதார நஷ்டம் ஏற்படுகிறது. காவல் துறை அநேகமாக நாளடைவில் சீர் குலையுமென்று எச்சரிக்கிறேன். பொருளாதாரத்திற்காக மட்டுமல்ல, எப்படியும் நாட்டு மக்களைக் காப்பாற்ற வேண்டும். தாய்மார்களின் கண்ணீரைத் துடைக்க வேண்டும். உண்மை. அந்த முறையில் பார்த்தால், மதுவிலக்கு என்பது பெண்களுக்கு நிவாரணம். அதைக் கண்ணால் பார்த்தவன். சிறு வயதிலிருந்து—ஐந்து வயதிலிருந்து பார்த்து, வேதனைப் பட்டவன் நான். மதுவிலக்கில் நம்பிக்கை உள்ளவன். ஆனால் அரசு வெறும் நெறி முறைகளை மாத்திரம் வைத்துக்கொள்ளக் கூடாது. காவல் துறையில் இதனால் பல்வேறு சீர்கேடுகள் வந்துவிட்டன. காவல் துறை, கட்டுப்பாட்டை நிலைநாட்ட முடியாது. உங்கள் கட்சி இன்றைக்கு ஆட்சியில் இருக்கிறது. இன்னொரு கட்சி நாளை ஆட்சிக்கு வந்தாலும், இந்தமாதிரிக் கொள்கை இருந்தால், ஒழுங்கு இராது. எனவே அணுகக்கூடிய முறையில் கொள்கையை மாற்ற முடியுமா என்று பார்க்க வேண்டும். இது குறித்து சட்டமுன்வடிவு வரப்போகிறது. கொள்கை முறையில் பார்த்தால், இந்தக் கொள்கை சரியல்ல. இதனால் ஏற்பட்ட சீர்கேடுகள் ஒன்றிரண்டல்ல. நம்முடைய பொருளாதாரத்தைப் பாதிக்கிறது. காவல் துறையைப் பாதிக்கிறது. பல இடங்களில் அப்பாவி மக்கள் வாழும் இடங்களில் ஓயாத தொல்லை. இன்னும் சொல்லப்போனால், எங்கள் கட்சி அலுவலகம் இருக்கும் இடத்தில், இரவு 10 மணிக்குமேல் தொல்லை. அடிதடி நடத்தி, எங்கள் அலுவலகத்திற்கு வந்து ஃபோன் செய்யுங்கள் என்று சொல்கிறார்கள் ஒரு பகுதியினர் இங்கேயிருந்து தான் ஃபோன் பண்ணியிருக்கிறீர்கள், அதனால் போலீஸ் வந்திருக்கிறது என்று சொல்லி, மற்றொரு பகுதியைத் தாக்குகிறார்கள். இந்த அளவிற்கு இருக்கிறது. எனவே இந்த மாதிரி மதுவிலக்குக் கொள்கையை அனுஷ்டிக்க வேண்டுமா? இதை மாற்ற வேண்டும். மதுவிலக்கை ரத்து செய்ய வேண்டுமென்று சொல்லவில்லை. மாற்றி அமைக்க வேண்டுமென்று சொல்கிறேன். இவ்வளவு நஷ்டம், நிர்வாகச் சீர்குலைவு, பல்வேறு கேடுகள் இந்தக் கொள்கையால் ஏற்படுகின்றன. எனவே இந்தக் கொள்கையை நவீன வாழ்க்கைக்கு ஏற்றவாறு நாம் மாற்றியமைக்க வேண்டும். இதனால் இந்தக் கொள்கையைக் கைவிடுவதாக அர்த்தமில்லை. இன்னும் சொல்லப்போனால், இந்த மூலக் கொள்கைக்குக் காரணமாக இருந்தவர்கள்கூட, இதைக்

காலத்திற்கு ஏற்றவாறு மாற்றியமைத்தால், ஆட்சேபிக்க மாட்டார்கள். அந்த முறையிலே அரசு யோசிக்க வேண்டும். இவ்வளவு நஷ்டத்தை வைத்துக் கொண்டு, இதில் நடக்கும் சீர்கேடுகளைப் பார்க்கும்போது, ஒன்றிரண்டல்ல. எந்த அளவிற்கு நிர்வாகத்தைக் காப்பாற்ற முடியுமென்று பாருங்கள், மக்களைக் காப்பாற்ற முடியுமென்று பாருங்கள்.

(பிற்பகல் 6-30)

அடுத்து வெள்ளம், புயல் நிவாரணம் என்று சில திட்டங்கள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. பல இடங்களில் தொடர்ச்சியாக வெள்ளம் வருகிறது. தஞ்சை ஜில்லாவிலும் சென்னையைச் சுற்றியும் வெள்ளம் வருகிறது. ஆண்டுக்காண்டு வெள்ளம் வரும். அப்படி வெள்ளம் வரும்போதெல்லாம், வெள்ள நிவாரணம் கொடுக்கலாம். ஆனாலும் சரியான வடிகால் திட்டங்களை அமைத்தும், தாழ்வான பகுதிகளை மேடாக்கியும் நிரந்தரமான பாதுகாப்பை அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுக்க முடியாதா? தமிழ் நாட்டுப் பகுதிகள் ஏற்கெனவே புயல்பிரதேசம் என்று சொல்லப்பட்டவை. நாகப்பட்டிணத்திலிருந்து விசாகப்பட்டினம் வரை அதிகமான புயல் உள்ள பகுதி என்று விஞ்ஞான ரீதியாகச் சொல்லப்பட்ட உண்மை. அந்த முறையில் எந்தெந்தப் பகுதிகள் இதற்கு முன்னால் அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்ற ஒரு புள்ளி விவரத்தை எடுத்து, அதை நிரந்தரமாகத் தடுப்பதற்கான ஒரு ஏற்பாட்டை அரசாங்கம் செய்ய முடியாதா? நிவாரணம் கொடுக்க வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. ஆண்டுதோறும் புயல் அடிப்பதும், வெள்ளம் வருவதும் உடனே நிவாரணம் கொடுப்பதுமான நிலைமைகள் நம்மைக் காப்பாற்றாது. ஐந்து நாள் மழை பெய்தாலே செம்பரம்பாக்கம் ஏரி உடைந்து விடுமோ என்று குறிப்பாக சைதாப்பேட்டை போன்ற பகுதிகளிலுள்ளவர்கள் இரவெல்லாம் தவிக்க வேண்டியிருக்கிறது. சென்னை நகரம் மட்டுமல்ல, மற்ற இடங்களிலும் இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்றன. அவர்களுக்கு ஆபத்துக் காலங்களில் ஒரு நிரந்தர ஏற்பாட்டைச் செய்து கொடுக்கக் கூடாதா என்று நான் இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கின்றேன்.

திரு. ஆ. பாலசுப்ரமணியம்: சபையில் உறுப்பினர்கள் சாப்பிடலாமா? மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் வகாப் சபையில் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார். (சிரிப்பு)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: சாப்பிடலாம், ஆனால் துப்பக் கூடாது. (சிரிப்பு).





திரு. பி. மாணிக்கம்: இதற்கு நிச்சயமாக ஒரு நிரந்தர ஏற்பாடு செய்யலாம். வெறும் நிவாரணம் என்று மட்டும் ஆண்டுதோறும் அளிக்கக் கூடாது.

1,30,000 நபருக்குக் கூடுதல் வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன என்று கணக்கிடப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. தீப்பெட்டித் தொழில் பெருக்கத்தின் வாயிலாக 30,000 பேருக்குக் கூடுதல் வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தத் தொழில்கள் எல்லாம் ஏற்கெனவே சிறு தொழில் மூலம் வளர்ச்சியடைந்திருக் கின்றன. அதுமாதிரி வேலைவாய்ப்புக்கு உத்தரவாதம் என்று சொல்லியிருக் கிறார்கள். ஆனால் 3 வருடம் இந்தத் திட்டம் நடைபெறுமா என்று நான் கேட்கிறேன். "Idle Man Power Scheme" என்ற அடிப்படையில் ஏற்கெனவே கொண்டு வரப்பட்டவைகூட சரியாக நடக்கவில்லை. நான் வேண்டுமென்றே கெட்ட எண்ணத்தில், கெட்ட நோக்கத்தில் இதைச் சொல்ல வில்லை. நிதி வசதிகளை இப்படித்தான் செலவழிக்க வேண்டுமா? எவ்வளவு நாளைக்கு எத்தனை பேருக்கு இந்த வசதிகள் கிடைக்கும் என்பது திட்டவட்டமாகத் தெரிய வேண்டும். எதிலும் நிவாரணம், நிவாரணம் என்று சொல்வது தமிழ் நாட்டுப் பொருளாதாரத்தை எங்கு கொண்டு போய் நிறுத்தும் என்று சொல்ல முடியாது. இம்மாதிரிக் கொள்கைகளை இன்றைக்கு அரசுக்கு சொல்வதற்கு நயமாக இருக்கலாம். ஆனால் 6 மாதத்திற்குப் பிறகு அதுவே எதிர் விளைவுகளை உண்டாக்கும். மூன்றாவதாக, மற்றொரு விஷயத்தை நான் இங்கே சொல்லக் கடமைப்பட் டிருக்கின்றேன். தொழில் சம்பந்தமாக 4, 5 நிறுவனங்கள் ஏற்படுத்தப்பட் டிருக்கின்றன. டிட்கோ, சிப்காட், டிக் என்று பல்வேறு நிறுவனங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இதனுடைய செயல்முறைகளை நான் சொல்ல விரும்புகிறேன். ஆந்திராவில் தடா என்ற இடத்தில் ஒரு தொழில் நிறு வனத்தை ஆரம்பித்திருக்கிறார்கள். அந்த நிறுவனம் தமிழ் நாட்டிலுள்ள நிறுவனங்களைவிட நல்ல முறையில் துரிதமாக நடப்பதாகச் சொல்கிறார்கள். மாண்புமிகு அமைச்சரவர்கள் யார் யார் அங்கே தொழில் நடத்துகிறார்கள் என்பது போன்ற புள்ளிவிவரங்களையெல்லாம், பெயர்களையெல்லாம் குறிப் பிட்டுக் கொடுங்கள் என்று கேட்டால், பலருடைய பெயரைச் சந்திக்கு இழுக்க வேண்டியிருக்கும். எனக்குத் தெரிந்ததைச் சொல்கிறேன். நாம் ஓசூரில் ஆரம்பித்தோம். கர்நாடக எல்லையில் அவர்கள் ஒன்று ஆரம் பித்தார்கள். நம்முடைய மாநிலத்தில் சிறு தொழில் நிறுவனங்களிலுள்ள வர்கள் பொறுப்பாளர்களாக வந்து தொழிலை ஆரம்பிக்கிறார்கள். அவர்க ளெல்லாம் கொஞ்சம் மூலதனம் வைத்துக்கொண்டு, முன் முயற்சியோடு வருகி றவர்கள். அவர்களுக்கு அந்த முன் முயற்சியே போய்விடுகிறது. Do not

[திரு. ப. மாணிக்கம்] [1979 மார்ச் 13

Kill the initiative என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள். முன் முயற்சியைக் கொல்லக்கூடாது என்று சொல்லுவார்கள். அதைக்கூடப் போக்குகின்ற செயல் முறைகள் இன்றையதினம் இருக்கின்றன என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். அத்தகைய போக்குகளை மாற்றியமைக்க வேண்டும்.

மூன்றாவது ஊதியக் குழு அரசு ஊழியர்களுக்கு வீட்டு வாடகைப் படி வழங்குவதைப் பொறுத்தவரை, அவர்கள் அரசாங்க வீட்டில் குடியிருந்தால், வீட்டு வாடகை கிடையாது என்றும், அரசாங்க வீட்டில் குடியிருக்காவிட்டால் வீட்டு வாடகைப் படி உண்டு என்றும் சொல்லியிருக்கிறது. அரசாங்கக் குடியிருப்புகளில் குடியிருப்பவர்களிடமிருந்து அதிகமான பணம் பிடித்தம் செய்யப்படுவதாக ஒரு குறைபாடு, ஒரு புகைச்சல் அவர்கள் மத்தியில் இருக்கிறது. அதைத் தீர்க்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

அடுத்தபடியாக, மூன்றாவது சம்பளக் கமிஷனின் பரிந்துரைகளிலுள்ள ஏற்றத்தாழ்வுகளைப்பற்றி ஒன்றைக் குறிப்பிட விரும்புகின்றேன். கால்நடை மருத்துவர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் சென்ற ஆண்டு கிளர்ச்சி நடத்தி பல துன்பங்களுக்கு ஆளானார்கள். இப்பொழுது மனிதர்களுக்குச் சிகிச்சை செய்கின்ற மருத்துவர்களுக்கும், பல் மருத்துவர்களுக்கும் கூடுதல் சம்பளம் கொடுக்கப்படுகிறது. இவர்களில் மனிதனுக்கு வைத்தியம் செய்வது உயர்ந்தது, கால்நடைகளுக்கு வைத்தியம் செய்வது தாழ்ந்தது என்பதுமாதிரியான பாகுபாடுகள் இந்த 20 ஆம் நூற்றாண்டிலும் இருப்பது ஆபத்தான கருத்து என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் ஒன்றை மிகவும் அழகாகத், தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். "செல்லரித்துப் போன சித்தாந்தங்களும், உளுத்து மக்கிப் போன உதவாக்கரைத் திட்டங்களும் நாட்டைக் காப்பாற்றாது" என்று மிக அழகாகக் கூறியிருக்கிறார்கள். மாட்டு வைத்தியர்களுக்கும் மற்ற வைத்தியர்களுக்கும் சம்பளத்தில் 125 ரூபாய் வித்தியாசம் இருப்பதாகச் சொல்கிறார்கள். மருத்துவக் கல்லூரியில் படிப்பதும் 5 வருடக் கல்விதான். கால்நடை மருத்துவக் கல்லூரியில் படிப்பதும் 5 வருடக் கல்விதான். படிப்பைப் பொறுத்தவரை எம்.பி.பி.எஸ். படிப்பும் 5 வருடம். அனுபவத்தில் வித்தியாசம் வரலாம். நம்முடைய கால்நடைச் செல்வங்கள் சம்பந்தப்பட்ட பணி என்ற முறையில் அவர்களைக் கவனித்து, அந்தக் கல்வியின் தரம் மேலும் உயர வேண்டுமென்ற முயற்சியிலே இவர்களுக்கும் அவர்களுக்கும், தொழிலைப் பொறுத்தவரை-



1979 மார்ச் 13] [திரு. ப. மாணிக்கம்]

வித்தியாசம் காட்ட வேண்டாம். அவர்கள் செய்வது அத்தியாவசியமான சேவை, நாட்டு சேவை. அந்த முறையில் அவர்களுக்கும் இவர்களுக்கும் சம்பள விகிதத்தில் வித்தியாசம் வேண்டாம்.

அடுத்தபடியாக, ஆசிரியர்கள் இன்னும் மற்ற பகுதியினரை எடுத்துக் கொண்டால், Anomalies இருப்பதாகச் சொல்கிறார்கள். இன்றையதினம் N.G.G.Os கூட பாத யாத்திரை நடத்துகிறார்கள். இரண்டாவது ஊதியக் குழுவின் அறிக்கை வந்ததும் அதில் முரண்பாடுகள் இருக்கின்றன என்று சொன்னதன் அடிப்படையில் Anomalies சம்பளக் கமிஷன் என்ற ஒன்று அமைக்கப்பட்டது. இப்பொழுது கூட மூன்றாவது ஊதியக் குழுவின் அறிக்கை வந்ததும், அனாமலிஸ் முரண்பாடுகள் இருக்கின்றன என்று சொல்லுகிறார்கள். ஆகவே அரசாங்கம் ஒரு Anomalies Commission போடுவது நல்லது என்கிற என்னுடைய கருத்தினைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

அடுத்தபடியாக, அரசு ஊழியர்களுக்குக் கட்டாய ஓய்வு, கம்பல்சரி ஓய்வு கொடுப்பதுபற்றி ஒருசில வார்த்தைகள் கூற ஆசைப்படுகிறேன். கட்டாய ஓய்வு பெறுபவர்களைப்பற்றி F.R. 56 (d) ல் விதிகள் உள்ளன. ஏற்கெனவே நான் சென்ற ஆண்டு பேசும்போதும் குறிப்பிட்டேன். இந்த ஆண்டும் குறிப்பிடுகிறேன். கட்டாய ஓய்வினால் ஏற்கெனவே பாதிக்கப்பட்டவர்கள் பலர் இன்னும் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். அது அரசின் பரிசீலனையிலும் இல்லை என்று நினைக்கிறேன். அரசு ஊழியர்களுடைய பிரச்சினை சம்பந்தப்பட்ட காரியத்திலேயேகூட அரசு நிர்வாகத்திலே இவ்வளவு காலதாமதம், அலட்சியம் இருப்பது ஆபத்து. ஏற்கெனவே 800 பேர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். peons, constables போன்றவர்களெல்லாம் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். சிறிய அதிகாரிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்குக் கட்டாய ஓய்வு கொடுத்ததை மறுபடியும் அவசியம் பரிசீலனை செய்ய வேண்டும். சட்டத்திலே இந்த விதி இருக்க வேண்டாம். ஒவ்வாத விதியை வைத்துக் கொண்டிருப்பதைவிட அதை ரத்து செய்வதுபற்றி அரசு யோசிக்க வேண்டுமென்று நான் இந்நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். இந்த நிதி நிலை அறிக்கை மீதான விவாதத்திற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது இந்தக் கூட்டத் தொடரிலேயே இதை ரத்து செய்வதற்கான கருத்தினைச் சொல்ல வேண்டும். ஆகவே இது குறித்து அரசு "ஆலோசனை செய்கிறது" என்றாவது ஒரு வாக்குறுதியைத் தர வேண்டுமென்று எதிர்பார்க்கின்றேன்.

அடுத்தபடியாக, நிர்வாகத்திற்கு வருகிறேன். நிர்வாகம் செம்மையாக நடைபெற வேண்டுமென்பதற்காக நாம் பல கோடி ரூபாயைச் செலவு செய்கிறோம். இருந்தும் நிர்வாகத்தினுடைய போக்கு ஒரு வளர்ச்சி சம்பந்தமாக, Development-oriented out look என்ற அடிப்படையில் செல்கிறது என்று சொல்ல முடியவில்லை. வழக்கம்போல் திட்டங்களைத் தயாரிப்பது, அரசாங்க விதிகளுக்கு உட்பட்டுச் செயல்படுவது என்கிற நிலை, போக்கு நீடிக்கிறது என்பதை வருத்தத்துடன் குறிப்பிடுகிறேன். இது நாட்டுக்கு உகந்ததல்ல. இந்தப் போக்கு உடனடியாக மாற்றப்பட்டாக வேண்டும். எந்தத் துறையைச் சார்ந்தவர்கள் அரசாங்க நிர்வாகத்தை அணுகினாலும், முறையிட்டாலும் காலத்தில் அவர்களுடைய பிரச்சினைகள் தீர்க்கப்படுவதில்லை. உதாரணத்திற்கு ஒன்றைக் குறிப்பிடுகிறேன். நடைபெற்ற ஒரு சம்பவத்தை இங்கே குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும் என்கிற காரணத்தால் சொல்கிறேன். நான் குடியிருக்கின்ற பல்லவபுரம் நகராட்சியிலே 8 ஆண்டுகளுக்கு முன்பு வடிகால் திட்டம் சம்பந்தமாக 18 ஆயிரம் ரூபாய் கட்டியிருக்கிறார்கள். அந்த drainage சம்பந்தமாக 8 ஆண்டுகள் முடிவடைந்த பிறகும் கூட, இதுவரை இன்வெஸ்டிகேஷன் கூட எடுத்துக் கொள்ளப்படவில்லை. புதிய நகராட்சிதான். இதுவரை தேர்தல்கூட நடக்கவில்லை. இப்படிப்பட்ட பல காரியங்கள் நகராட்சிகளிலே காலத்தில் நடைபெற முடியவில்லை. அதுபோல் சென்னையை அடுத்து பல்லவபுரம், ஆலந்தூர், தாம்பரம் என்றெல்லாம் நகராட்சிகள் இருக்கின்றன. ஆலந்தூர், பல்லவபுரம் போன்ற நகராட்சிகளுக்கு எஞ்சினியர் கிடையாது, ஹெல்த் ஆபீசர் கிடையாது. இப்பொழுதுதான் தாம்பரத்திற்கு Second Class Engineer போடப்பட்டிருக்கிறார்.

அடுத்தபடியாக, கொசுக்கடியின் காரணமாக கடந்த ஒரு வாரமாக பெரிய வேதனைக்கு உள்ளாகியிருக்கிறேன். கை எல்லாம் கொசுக் கடித்த தழும்புகள். மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்கள் அனுமதித்தால், அவரிடம் நேரில் காட்டத் தயாராக இருக்கிறேன். அந்த அளவு இருக்கிறது. கொசுவைச் சாகடிக்க போடக்கூடிய மருந்து (Spray) என்ன மருந்து என்று கேட்டபோது, அவர்கள் சொன்னது மிகவும் ஏமாற்றமாக இருந்தது. இந்த மருந்து கொசுவினுடைய முட்டைகளைத்தான் அழிக்குமாம். பறக்கும் கொசுவை அழிக்காதாம். எந்த நிபுணர் சொன்ன யோசனையின் பேரில் இந்த மருந்து பயன்படுத்தப்படுகிறது என்பது எனக்கு விளங்கவில்லை. கொசுவை அழிக்க முடியாதென்றால், எதற்காக இந்த மருந்து? இதிலே இன்னொரு வேடிக்கை என்னவென்றால், பல ஆண்டுகளாக ஒரே மருந்துதான் பயன்படுத்தப்படுகிறதாம். கொசு காரணமாக பலவிதமான தொல்லைகள், நோய்கள் ஏற்படுகின்றன. அந்த அளவுக்கு

நிர்வாகம் இருக்கிறது. பல்லவபுரத்தில் டிரெயினேஜ் ஸ்கீம் சம்பந்தமாக 8 ஆண்டுகளுக்கு முன்பு பணம் கட்டியும், இன்னும் எந்த வேலையும் நடக்கவில்லை. கட்டிய பணத்திற்கு என்ன வட்டி என்பதையெல்லாம் தயவு செய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். கொசுவைக் கொல்ல அடிக்கும்

(பிற்பகல் 6-40)

மருந்து பறக்கும் கொசுவைக் கொல்லாது, முட்டையை மட்டும்தான் அழிக்கும் என்றால், இதை எதற்காக உபயோகப்படுத்த வேண்டும்? கொசுக்கடியால்தான் நாம் பலவிதமான நோய்களுக்கு ஆளாகிறோம். இதன் காரணமாக வைத்திய செலவும் அதிகமாகிறது. இந்த நிலையில் அடிக்கப்படும் கொசு மருந்து கொசுவைக் கொல்ல உபயோகப்படாது என்றால் அதனால் என்ன பலன் என்று எண்ணிப் பார்க்க வேண்டும். இப்படிப்பட்ட குறைபாடுகள் நிர்வாகத்தில் மலிந்து இருக்கின்றன.

கடைசியாக, காவல் துறையைப்பற்றி ஒன்றிரண்டு கருத்துக்களைக் குறிப்பிட விரும்புகிறேன். நமது மாநிலத்தில் ஏற்கெனவே போலீஸ் கமிஷன் அறிக்கை ஒன்று உள்ளது. அதில் காவல் துறையினரின் போக்கை மாற்ற வேண்டும் என்று கருத்து சொல்லப்பட்டிருக்கிறது. தருமபுரி மாவட்டத்தில் ஒரு கிராமத்தில் சிலர்மீது திருட்டுக் குற்றம் சொல்லி, கிராமத்தில் இருந்தவர்கள் ஒரு புகார் கொடுத்திருக்கிறார்கள். யார்மீது புகார் கொடுக்கப்பட்டதோ அவர்கள் புகார் கொடுத்தவர்கள்மீது எதிர்ப் புகார் கொடுத்திருக்கிறார்கள். உண்மை நிலையை எடுத்துச் சொல்லி, அந்தப் புகாரை எடுத்துக்கொள்ளுங்கள் என்று சொன்ன தர்மபுரி மாவட்ட கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் காவல் துறையினரால் கடுமையாகத் தாக்கப்பட்டிருக்கிறார். இது சம்பந்தமாக அதிகாரிகளிடம் முறையீடு செய்யப்பட்டு, உண்ணாவிரதம் எல்லாம் மேற்கொண்ட பிறகு, இறுதியாக 'ஆர்.டி.ஓ.' விசாரணைக்கு உத்தரவிட்டார்கள். அந்த விசாரணை இன்னும் நடைபெறவில்லை. ஏதாவது கிளர்ச்சி நடக்கும்போது, ஏதாவது ஒரு வாக்குறுதி கொடுப்பது. அதற்குப் பிறகு அதைப்பற்றிக் கவலைப்படுவதில்லை என்ற நிலை இருக்கக் கூடாது. இது காவல் துறையில் மட்டுமல்ல, பல துறைகளிலும் இப்படித்தான் இருக்கிறது. விழுப்புரத்திற்குப் பக்கத்திலே ஒரு இன்ன சேரி. அங்கே ஒரு தகராறு நடக்கிறது. சேரியை அடித்து நொறுக்கியிருக்கிறார்கள். அதைப்பற்றி இதுவரை ஒரு நடவடிக்கையும் இல்லை. அதைப் போலவே பொள்ளாச்சிக்குப் பக்கத்திலே கடந்த இருபது ஆண்டுகளாக அங்கே உள்ள பொதுமக்கள் ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். 250 அடி நீளமுள்ள ஒரு பாலம் கட்ட வேண்டும். அதற்கு சுமார் 20 லட்சம் ரூபாய் செலவாகும். இதற்காக அந்தப் பகுதி மக்கள்

கடந்த 20 ஆண்டுகளாக முயற்சித்து வருகிறார்கள். மகஜர் தொடர்ந்து கொடுக்கப்பட்டு வருகிறது. வேண்டுமானால் ஆட்சியில் இருப்பவர்கள் என்னைப் பார்த்து, "20 ஆண்டுக்காலமாக நடக்காததை நாங்கள் வந்த 2 ஆண்டுகளில் நடத்திவிட முடியுமா? அதற்கு அவ்வளவு அவசரப் படுகிறீர்களே?" என்று கேட்கலாம். எதற்குச் சொல்லுகிறேன் என்றால், நிர்வாகம் தொடர்ந்து இப்படித்தான் நடைபெற்று வருகிறது என்பதை எடுத்துக்காட்டத்தான்.

கல்வித் துறையில் 1976-77 ஆம் ஆண்டில் நேஷனல் ஸ்காலர்ஷிப் ஸ்கீமில் பணம் தர வேண்டும் என்று ஒரு மாணவர் விண்ணப்பித்திருக்கிறார். 2, 3 வருஷமாக முயன்று வந்தும் இதுவரையிலும் உதவிப் பணம் கிடைக்க வில்லை. இந்த ஆண்டு தரப்படவேண்டிய பின்தங்கியோருக்கான உதவிப் பணம்கூட காலாகாலத்தில் கிடைக்கவில்லை. இப்படிப்பட்ட குறைபாடுகள் ஏன் அதிகரித்திருக்கின்றன என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். நிர்வாகத்தைச் சீர் செய்ய வேண்டும். ஜனநாயக அரசு, ஜனங்களோடு தொடர்புள்ள அரசு என்று சொல்லப்படும் ஒரு அரசு நல்ல முறையில் நிர்வாகத்தை நடத்த வேண்டும். ஆனால் பல ஆண்டுகளாக எந்தத் துறையிலும் எந்த முன்னேற்றத்தையும் காண முடியவில்லை. 850 கோடி ரூபாய் செலவு செய்யப்படுவதாக நிதிநிலை அறிக்கையில் சொல்லப்பட்ட போதிலும், 342 கோடிக்குத் திட்டம் போட்டிருந்தபோதிலும், அரசாங்க நிர்வாகத்தில் எந்த விதமான முன்னேற்றமும், வளர்ச்சிப் போக்கும் காணப்பட முடியவில்லை. தவறான நிதிக் கொள்கையும், தவறான மக்கள் விரோத கொள்கையும்தான் கையாளப்படுகின்றன. இவைகளை மாற்றக்கூடிய முறையில் அமைச்சரவையில் பல்வேறு அம்சங்களைப்பற்றி மறு பரிசீலனை செய்து, அவையில் பதிலளிக்கும் போதாவது தெளிவான பதிலைத் தருவார்கள் என்று நம்பி அமைகிறேன்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது பேசுவதற்கான வாய்ப்புத் தந்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். அதில் சில சிறப்பான அம்சங்களும் இருக்கின்றன; சில குறைபாடுகளும் இருக்கின்றன. என்னைப் பொறுத்தமட்டில், சிறப்புகளைப் பாராட்டுவேன், குறைபாடுகளைச் சுட்டிக்காட்டுவேன். அதுதான் எப்போதும் நான் கையாண்டு வருகிற முறை. அந்த முறையில்தான் இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையையும் நான் அணுகுகிறேன்.



மார்ச் 8 ஆம் தேதியன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விவசாயம்-மின்சாரம் சம்பந்தமான ஒரு அனைத்துக் கட்சி மாநாட்டையும், சிம்கோ மீட்டர் தொழிலாளர் பிரச்சினை சம்பந்தமாக அனைத்துக் கட்சி மாநாட்டையும் நடத்தினார்கள். அதிலே நானும் கலந்து கொண்டேன். காலை 10 மணி அளவுக்குத் துவங்கிய அந்த மாநாடு இரவு 10½ மணி அளவுக்குத் தான் முடிந்தது. அந்த மாநாட்டிற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்துக்கொண்ட அக்கறை, சிரத்தை உண்மையிலேயே பாராட்டிற் குரியதாகும். உண்மையிலேயே ஒரு நல்ல முடிவு காண அவர் உளமார முயற்சித்தார்கள். அது வெற்றிகரமாக அமைந்ததா அல்லது தோல்வியாக முடிந்ததா என்று சொல்ல முடியாத நிலையில் நான் இருந்தாலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய "sincerity of approach" ஐப் பாராட்டுகிறேன், போற்றுகிறேன்.

அடுத்து, ஒரு நல்ல காரியத்திற்காகவும் இந்த அரசை நான் பாராட்ட விரும்புகிறேன். அதாவது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி எங்களுடைய—இஸ்லாமியர்களுடைய—தலைவரான கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்களுடைய திருவுருவப் படத்தைத் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் அமைக்கப் போவதாக அறிவிப்பு கொடுத்திருக்கிறது. இது தமிழகத்தில் உள்ள முஸ்லீம்களுக்கு மாத்திரமல்ல, இந்தியாவிலுள்ள அனைத்து முஸ்லீம்களுக்கும் மகிழ்ச்சி தரும் அறிவிப்பாகும். எனவே அனைவருடைய சார்பிலும் இந்த ஆட்சிக்கு நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன் என்பதைச் சொல்லிக்கொள்வதோடு, எங்கள் உணர்வையும் புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சிக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, சென்ற கூட்டத் தொடரில் நான் ஒரு கருத்தைச் சொன்னேன். அந்தக் கருத்து அமுல்படுத்தப்பட்டதாக நான் உணருகிறேன். அதாவது இந்தித் திணிப்புப் பிரச்சினையைப்பற்றி நான் பேசும்போது இந்தித் திணிப்பை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் அதனுடைய ஆட்சியும் எதிர்க்கின்றன, திராவிட முன்னேற்றக் கழகமும் எதிர்க்கிறது, முஸ்லீம் லீக் கட்சியும் எதிர்க்கிறது, கம்யூனிஸ்ட் கட்சியும் எதிர்க்கிறது, ஜனதா கட்சியும் எதிர்க்கிறது, காங்கிரஸ் கட்சியும் எதிர்க்கிறது. தமிழ் நாட்டில் உள்ள அத்தனை கட்சிகளும் இந்தித் திணிப்பை எதிர்க்கின்றன. ஆனாலும் அவர்கள் இந்தித் திணிப்பை எதிர்க்கக் கையாளுகிற முறையைப் பார்த்தால், வெவ்வேறு வகையாக இருக்கிறது. அதைப் பார்க்கிறபோது, இந்தித் திணிப்பு என்ற பெயரில் கட்சிகளை வளர்க்கிற முயற்சியை எடுக்கிறார்களோ என்ற ஐயம் ஏற்படுகிறது. இந்தித் திணிப்பை எதிர்ப்பதில் மாறுபட்ட போக்கு கையாளப்பட்டால், அது பயங்கரமான ஆபத்தை விளைவிக்கக்

கூடும். ஆங்கிலேயர்கள் காலத்தில் "Divide and rule" என்ற கொள்கை பின்பற்றப்பட்டது. அதாவது ஆங்கிலேயன் இந்தியாவைப் பிரித்து வைத்து ஆட்சி நடத்தினான். அதைப்போல இந்தித் திணிப்பை எதிர்க்கும் போது, மாறுபட்ட அணுகுமுறையைக் கைக்கொண்டால் அதன் காரணமாக இந்திக்காரர்கள் தமிழர்களை "Divide and rule" என்ற அடிப்படையில் அடக்கியாளக்கூடிய நிலை வரும். ஆகவே மாறுபட்ட கருத்துக்களுக்கு இடமின்றி, இந்தித் திணிப்பை எதிர்க்கும் அத்தனை பேரையும் ஒன்றாகச் திரட்டி, அவர்கள் எதிர்ப்பை ஒருமுனைப்படுத்தி, channlise பண்ணி, ஒரு மாநாடு நடத்தி, அவர்கள் எல்லோரும் ஏகோபித்து ஒருமித்த குரலில் இந்தித் திணிப்பை எதிர்க்கிறார்கள் என்ற நிலையை உருவாக்குவது நல்லது என்ற கருத்தினை நான் சென்ற கூட்டத் தொடரின்போது பேசுகையில் சொன்னேன். நான் சென்ற கூட்டத்தொடரின்போது பேசிய கருத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடைமுறைப்படுத்தும் வகையில் குடியரசு நாளுக்கு முன்பாக ஒரு மாநாட்டைக் கூட்டினார்கள். அந்த மாநாட்டில் எல்லா எதிர்க் கட்சித் தலைவர்களையும் அழைத்து, இந்தித் திணிப்பை எதிர்ப்பது சம்பந்தமாக ஆலோசனை நடத்தியதை நான் பாராட்டுகிறேன். முதலமைச்சர் அவர்களுடைய முயற்சியை நான் பாராட்டுகிறேன், போற்றுகிறேன். அந்த முயற்சி வெற்றி பெற்றதா இல்லையா என்பது வேறு விஷயம். ஆனால் எல்லாக் கட்சியைச் சேர்ந்தவர்களையும் அழைத்து, அவர்களுடைய எதிர்ப்பை ஒருமுனைப்படுத்தி, சட்டப் பேரவை, மேலவை ஆகிய இரண்டிலும் இந்தித் திணிப்பை எதிர்த்துத் தீர்மானம் போட்டு, அதை மத்திய அரசுக்கு அனுப்புவது என்று முடிவெடுத்திருக்கிறார்கள். இதுபோன்ற முயற்சிகளை மேலும் மேலும் எடுப்பதில் சிக்கல்கள் இருக்கின்றன, தடைகள் இருக்கின்றன. ஆனாலும் அதைப் பொருட்படுத்தாமல் நம்முடைய முதல்வர் அவர்கள் இந்த முயற்சியைத் தொடர்ந்து கைக்கொள்ள வேண்டும் என்ற கருத்தினை நான் மீண்டும் மீண்டும் வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து, நிதிநிலை அறிக்கையைப்பற்றிச் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். சுமார் 3 வரிகளைப் போட்டு அதன் மூலமாக சுமார் 2 கோடி ரூபாய் அரசுக்கு வருவாய் வரும் என்று இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. பட்ஜெட்டில் பொதுவாகப் புது வரிகள் போட்டால், அதிலிருந்து எதிர்பார்க்கும் வருமானத்தை நடைமுறையில் குறைத்துத்தான் காட்டுவார்கள். உண்மையில் வசூலாவது அதிகமாக இருக்கும். நான்கில் ஒரு பங்கு அல்லது 2-ல் ஒரு பங்கு என்றுதான் அந்த இனத்திலிருந்து எதிர்பார்ப்பதாகக் காட்டுவது வழக்கம். அதே முறையில் 2 கோடிக்கு இப்போது



வரி போடப்பட்டிருக்கிறதாகச் சொல்கிறார்கள். உண்மையில் 10 கோடி ரூபாய்க்கு மேல் இதன் மூலம் அரசாங்கத்திற்கு வருவாய் கிடைக்கும் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

(பிற்பகல் 6-50)

தேங்காய் மீது வரி போட்டிருக்கிறார்கள். இது விரும்பத்தகாத ஒன்று என்பது என்னுடைய கருத்து. ஏழை, பணக்காரர்கள் என்ற பாகுபாடு இல்லாமல் அத்தனை பேரும் உபயோகப்படுத்தும் பொருள் தேங்காய். தேங்காய் மீது வரி போடுவதனால் பணக்காரர்களுக்கு ஒன்றுமில்லை. ஆனால், ஏழைகளுக்கு உள்ள சிரமம் இன்னும் கூடுதல் ஆக்கப்படக்கூடிய நிலைதான் இருக்கிறது. முன்பு கொப்பரை மீது 2 பைசா வரி இருந்தது. தேங்காய் மீது வரி போட்டதனால், ஏழைகள் பாதிக்கப்படுவார்களே என்று கேட்டால், அரசாங்கத்தின் சார்பில் ஒரு பதில் சொல்லப்பட்டது. அது என்னவென்றால், "கொப்பரைக்கு வரி ஏய்ப்புச் செய்கிறார்கள், ஆகவேதான் தேங்காய்க்கும் சேர்த்து வரி போட்டிருக்கிறோம்" என்று சொல்கிறார்கள். உருதுவிலே ஒரு பழமொழி சொல்வார்கள்—"மூங்கில் இருந்தால்தானே புல்லாங்குழல் வாசிக்க முடியும், மூங்கிலே இல்லாவிட்டால் புல்லாங்குழல் ஓசை இல்லாமல் போய் விடும்" என்று. அதைப் போல கொப்பரைக்கு வரி ஏய்ப்பு செய்கிறார்கள் என்று சொல்லி, தேங்காய்க்கு வரி போட்டால், தேங்காயே இல்லாமல் போகும் ஒரு நிலை ஏற்படும் என்பதையும், இது நியாயம் இல்லாத ஒரு வரி என்பதையும் இந்த வரியை ரத்து செய்ய வேண்டும் என்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தீப்பெட்டி மீது 2 பைசா வரி போட்டிருக்கிறார்கள். அதுவும் கையால் செய்யக்கூடிய தீப்பெட்டிக்கு 2 பைசா வரி போட்டிருக்கிறார்கள். மெஷினால் செய்யக்கூடிய தீப்பெட்டிக்கு 2 பைசாவுடன் மேலும் ஒரு 2 பைசா போட்டு 4 பைசா என்று வைத்தால்கூட, அதைத் தாங்கிக்கொள்ள முடியும். இது குடிசைத் தொழிலாக இருக்கிறது. ஏழையெளிய மக்கள் தங்கள் முயற்சியாலே சம்பாதித்து, கூலி வாங்கிச் சாப்பிடக்கூடிய தொழிலாக இருப்பதை மத்திய அரசு உணர்ந்து இந்தச் சிறு தொழிலுக்கு—கையால் செய்யப்படும் தீப்பெட்டிக்கு—இந்த வருஷத்திய பட்ஜெட்டிலே வரி குறைப்பு செய்திருக்கிறது. மத்திய அரசு அறிவிப்பு 28 ஆம் தேதி வந்தது. மூன்று நாட்களில் நம்முடைய அரசு, மத்திய அரசு யாருக்கு வரிக் குறைப்பு செய்ததோ, அவர்களுக்கு வரி போட்டிருக்கிறார்கள். இது ஒரு நியாயமற்ற வரி. இந்த வரியை ரத்து செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை இந்த அரசுக்குச் சமர்ப்பிக்க விரும்புகிறேன்.

பத்திரிகைகளிலே பார்த்தேன், பீஹாரிலே மதுவிலக்குச் சட்டம் வரக்கூடிய ஏப்ரல் முதல் தேதியிலிருந்து அமுலுக்கு வருவதாக அறிவித்திருக்கிறார்கள். முன்பெல்லாம் தமிழகத்தில் மதுவிலக்கு இருந்தது. குஜராத்திலே மதுவிலக்கு இருந்தது. இந்தியா பூராவும் இந்த இரண்டு மாநிலங்களுக்கு மட்டும்தான் அந்தப் பெருமை இருந்தது. இப்போது பீஹாரும் மூன்றாவது மாநிலமாக மதுவிலக்குச் சட்டத்திற்கு உள்ளே வருகிறது. இது வரவேற்கத்தக்க ஒன்று. பாராட்டத்தக்க ஒன்று. ஆனால் இதிலே கவனிக்கப்பட வேண்டிய அம்சம் என்னவென்றால் பீஹாரிலே மதுவிலக்குச் சட்டம் கொண்டுவரப்படுவதன் மூலமாக 36 கோடி ரூபாய் இழப்பு அவர்களுக்கு ஏற்படுகிறதாம். அந்த இழப்பில் பாதித் தொகையான 18 கோடி ரூபாயை மத்திய அரசு நிவாரணத் தொகையாகக் கொடுப்பதாக அறிவித்திருக்கிறது. எந்த மத்திய அரசு அங்கே மதுவிலக்குச் சட்டத்தை அமுல்படுத்துவதால் ஏற்படும் இழப்பில் பாதியை நஷ்ட ஈடாக 18 கோடி ரூபாய் கொடுக்கிறதோ, அதே மத்திய அரசுதான் இங்கே நாம் மதுவிலக்குச் சட்டத்தை அமுல்படுத்தி, அதன்மூலம் 150 கோடி ரூபாய் இழப்புக்கு ஆளாகியிருக்கும்போது, ஒரு பைசா கூட கொடுக்க மாட்டேன் என்று சொல்கிறது. 70, 80 கோடி ரூபாய் என்றெல்லாம் சொல்கிறார்கள். 150 கோடி ரூபாய் இருக்காது; ஒரு உத்தேசமாகத்தான் சொல்கிறேன். 100 கோடி ரூபாய் என்றுகூட காக்டாகச் சொல்ல முடியாது. ஆக, இவ்வளவு இழப்பு நமக்கு இருக்கும்போது, ஏதாவது ஒரு தொகை கொடுப்பதுதான் நியாயம். ஆக, பீஹாருக்குக் கொடுக்கிறார்கள் என்றால், அவர்கள் இந்திக்காரர்கள், ஆகவே, தங்களுடைய மாநிலத்திற்குக் கொடுக்க வேண்டும் என்று கொடுக்கிறார்களா? அப்படிக் கொடுப்பதற்கு என்ன காரணம் என்று புரிந்துகொள்ள முடியவில்லை. இது அநியாயமான போக்கு. ஒரு கண்ணுக்கு வெண்ணையும் ஒரு கண்ணுக்குச் சுண்ணாம்பும் என்று சொல்லுவதைப் போல இது ஒரு அநியாயமான போக்கு. கொடுப்பதும், கொடுக்காததும் அவர்கள் விருப்பம் என்று இருக்கும் இந்த நிலை மாற வேண்டும். ஆகவே, அவர்கள் விரும்பிக் கொடுக்காவிட்டாலும், அவர்களை நிர்ப்பந்தப்படுத்தி அவர்கள் கொடுப்பதற்கு ஒரு போராட்டம் துவங்க வேண்டும் என்ற கருத்தினைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மதுவிலக்குச் சம்பந்தமாக இன்றைக்குப் புதிய சட்டங்கள் வருகின்றன. மதுவிலக்கு என்பதே ஒரு பயங்கரமான சட்டம். நான் புதிய சட்டத்தைப்பற்றிச் சொல்லவில்லை, இந்த மதுவிலக்கு பயங்கரமான ஒரு பூதத்திற்கு சமானம். 'ஃப்ராங்கன்ஸ்டீன்' என்று ஆங்கிலத்திலே ஒரு படம் பார்த்தேன். அதிலே ஒரு விஞ்ஞானி ஒரு பிசாசை உருவாக்கினான். அது யார் யாரையோ அழித்து கடைசியிலே யார் அதை உருவாக்கினானோ அவனையே அழித்து ஒழித்துக் காட்டியது. அதுபோல மதுவிலக்கை இந்த 'ஃப்ராங்கன்ஸ்டீன்'-க்கு ஒப்பிடலாம். இந்த 'ஃப்ராங்

கன்ஸமெனை' ஏற்கப்போய் ஒரு ஆட்சி கவிழ்ந்த காட்சியை நாம் பார்த்திருக்கிறோம். தெளிவாகச் சொல்கிறேன், திராவிட முன்னேற்றக் கழகம் மது விலக்கை ரத்து செய்ததன் காரணமாகத்தான் மக்கள் அவர்களைத் தண்டித்து அவர்கள் கீழே இறக்கப்பட்டிருக்கிறார்கள். ஆங்கிலத்திலே சொல்வார்கள். American gained by the follies of the European nations அந்தமாதிரி AIADMK gains by the follies of the DMK rule என்ற நிலை இருக்கிறது. அவர்கள் மதுவிலக்கை மட்டும் ஒத்திவைக்காமலிருந்திருந்தால், இன்றைக்கும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிதான் இருந்திருக்கும் என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். அந்த ஒரு தவறு, மகத்தான தவறு. அது மக்களிடத்திலே ஒரு வெறுப்பை ஏற்படுத்திவிட்டது. அதனுடைய விளைவாகத்தான் இன்றைக்கு அ.தி.மு.க.-வுக்குச் சாதகமான ஒரு நிலை உருவாகியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஒரு ஏழு மாதங்களுக்கு முன்பு பேரணாம்பட்டிலே இந்து-முஸ்லீம் கலவரம் நடந்தது. அதிலே சேதங்கள் ஏற்பட்டன. அதைப் போய்ப் பார்த்து ஏதாவது நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கை பரவலாகச் சமர்ப்பிக்கப்பட்டது. சென்ற ஒருசில நாட்களுக்கு முன்பு இங்கே பேசிய முதலமைச்சர் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். மத்திய அரசாங்கத்திலேயிருந்து 50 ஆயிரம் ரூபாய் பேரணாம்பட்டு நஷ்டங்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். கலவரம் நடந்து முடிந்து ஏழு மாதங்கள் இருக்கும் என்று நினைக்கிறேன். அய்ம்பது ஆயிரம் ரூபாய் வாங்கி வைத்துக்கொண்டிருக்கிறார்கள், எப்போதுதான் அதனைக் கொடுப்பது? இல்லை, நம்முடைய அரசும் கொஞ்சம் சேர்த்து ஏதாவது கொடுக்கத்தான் வேண்டும் என்று இருக்கிறதா? அதைச் சீக்கிரம் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மைனாரிட்டி கமிஷன்காரர்கள் அங்கு வந்து, பார்த்து சிபார்சு செய்திருக்கிறார்கள். அந்தச் சிபார்சை நம்முடைய அரசு ஏற்க முடியாது என்று சொல்லியிருக்கிறது.

**மாற்றுத் தலைவர் (திரு. க. இராமமூர்த்தி) :** உறுப்பினர் அவர்கள் இன்னும் எத்தனை நிமிடங்கள் பேச விரும்புகிறார்?

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** இன்னும் ஐந்து நிமிடங்களில் முடித்து விடுகிறேன்.

**மாற்றுத் தலைவர் (திரு. க. இராமமூர்த்தி) :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசி முடியும் வரை அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** மைனாரிட்டி கமிஷன் அவர்கள் செய்த சிபார்சை அரசுத் தரப்பில் ஏற்க மறுத்து விட்டார்கள். மறுத்து அறிக்கை விட்டது. வகுப்புக் கலவரத்திலே பாதிக்கப்பட்டவர்களுக்குக் கொடுப்பது

முறையில்லை என்று சொன்னார்கள். நான் கேட்கிறேன், விழுப்புரத்திலே வகுப்புக் கலவரம் நடந்து அங்கே இறந்தவர்களுக்கெல்லாம் கொடுக்கப்படவில்லையா? விழுப்புரத்திற்கு ஒரு முறையும், பேரணாம்பட்டுக்கு ஒரு முறையும் என்பது பாரபட்சம் காட்டுவது ஆகாதா ? இது முறையில்லை. ஆகவே நஷ்டஈடு கொடுப்பதற்கு அரசு விரைவிலே ஏற்பாடு செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை அரசுக்குச் சமர்ப்பித்துக்கொள்ள விரும்புகிறேன். வரக்கூடிய ஏப்ரல் மாதம் 1 ஆம் தேதி அன்றைக்கு மறுபடியும்—அந்த இந்து-முஸ்லீம் கலவரம் நடப்பதற்குக் காரணமாக இருந்த—ஊர்வலம் கோயில் ஊர்வலம், அதே வழியில் போக இருக்கிறது என்ற தகவல் வந்திருக்கிறது. அந்த ஊர்வலம் முன்பெல்லாம் ஊரைச் சுற்றி வந்தது. நடுவில் முஸ்லீம்கள் மட்டும் இருக்கக்கூடிய தெருவில் வந்ததால்தான் கலவரமே ஏற்பட்டது. ஆனால் இந்தக் கலவரத்திற்கு அங்குள்ள இந்துக்களும், முஸ்லீம்களும் காரணம் இல்லை. அங்குள்ள அதிகாரிகள்தான் அதற்குக் காரணம். ஏனென்றால், அவர்கள்தான் வற்புறுத்தி, அந்த பஸ் போகக்கூடிய ரோட்டை விட்டு முஸ்லீம்கள் இருக்கும் ரோட்டில் போக அனுமதித்தார்கள். அதனால்தான் அந்தக் கலவரமே ஏற்பட்டது. அதே தவறை மீண்டும் செய்யக்கூடாது. ஏப்ரல் மாதம் 1 ஆம் தேதி அதே ஊர்வலம் மீண்டும் வரவிருக்கிறது. அந்த ஊர்வலம் முன்பெல்லாம் போவது போல் ஊரைச் சுற்றிக்கொண்டு போக வேண்டும், முஸ்லீம்கள் இருக்கும் தெருவிலே போகக்கூடாது—அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 7-00)

அடுத்து, பெருமானார் நபிகள் நாயகம் ரசூல் அல்லாகு ரசூல் அல்லம்மை முஸ்லீம்கள் எந்த அளவுக்கு மதிக்கிறார்கள் என்பது உலகம் அறிந்த உண்மை. அவர்களைப்பற்றி மேல்நிலை வகுப்புக்கான முதலாண்டு சரித்திரப் பாடப் புத்தகத்தில் தப்பும் தவறுமாகப் போட்டிருக்கிறார்கள். இஸ்லாம் மதத்திற்கு அவமானம் தரக்கூடிய வாசகங்கள் அதிலே இருக்கின்றன. அந்த வாசகங்கள் நீக்கப்பட வேண்டும் என்று பரவலாக முஸ்லீம்கள் அரசுக்கு எழுதியிருக்கிறார்கள். அந்தப் பாடப் புத்தகத்திலேயிருந்து அந்தப் பகுதியை நீக்கிவிட்டு, இஸ்லாம் மதத்தைப்பற்றி நல்ல முறையில் அறிந்த முஸ்லீம் எழுத்தாளரைக் கொண்டு எழுதிச் சேர்க்க வேண்டுமென்ற கருத்தைச் சொல்லிக்கொள்ளுகிறேன்.

இந்த நாட்டின் மக்கள் தொகையில் முஸ்லீம்கள் 12 சதவீதம் இருக்கிறார்கள். தமிழ் நாட்டில் ஆறு சதவீதம் இருக்கிறார்கள். ஆனால் முஸ்லீம்களுக்கு வேலைவாய்ப்பு இரண்டு சதவீதம், மூன்று சதவீதத்திற்கு



மேல் இல்லை. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், காலெஜ், டெக்னிகல் காலெஜ் ஆகியவற்றில் அட்மிஷன் செய்வதற்காக இஸ்லாமியர்களுக்கு என்று ஆறு சதவீதத்தை ரிசர்வ் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை இங்கே சமர்ப்பிக்க விரும்புகிறேன்.

திருச்சியிலும், கோயம்புத்தூரிலும், சர்வகலாசாலைகளை ஆரம்பிக்கப் போவதாக நான்கு, ஐந்து ஆண்டுகளாகவே சொல்லிக் கொண்டு வருகிறார்கள். திருச்சியிலும், யூனிவர்சிட்டி காம்பஸ் என்று கட்டிடங்களையெல்லாம்கூடக் கட்டினார்கள். சென்ற வருடமே துவக்குவதாகச் சொன்னார்கள். இந்த வருடம் துவக்குவோம் என்ற நிலையும் இருந்தது. ஆனால் இன்றைக்கு புதிய சர்வகலாசாலை ஒன்றுமே திறக்கக் கூடாது என்று மத்திய அரசு உத்தரவு போட்டிருப்பதாக அறிகிறேன். இதிலே இன்னும் தாமதம் ஏற்பட்டால், அபாயம் ஏற்படலாம். மத்திய அரசை வற்புறுத்தி இந்த வருடமே கோவையிலும், திருச்சியிலும் சர்வகலாசாலைகளைத் துவக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

சென்ட்ரல் ரயில்வே ஸ்டேஷனை விரிவுபடுத்த வேண்டும் என்பதற்காக மூர் மார்க்கெட்டையும், மிருகக் காட்சிசாலையையும் வேறு இடத்திற்குக் கொண்டு செல்ல இருக்கிறார்கள். மிருகக் காட்சிசாலை வண்டலூருக்குப் போகப் போகிறது என்ற தகவலை இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். இது முறையாக அமையாது என்ற கருத்தைச் சொல்லிக் கொள்ளுகிறேன். டில்லி, கல்கத்தா, பம்பாய், ஆகிய நகரங்களில், எங்கே போனாலும், நகரத்திற்குப் பக்கத்தில்தான் மிருகக் காட்சிசாலைகள் இருக்கின்றன. நகரத்திலிருந்து முப்பது, நாற்பது மைல்களுக்கு அப்பால் மிருகக் காட்சிசாலைகளைக் கொண்டுபோனால், அதைப் பார்க்க வருகிறவர்களில் நான்கில் ஒரு பங்கினர் கூட வரமாட்டார்கள். முன்பு அடையாறிலோ, கிண்டியிலோ இடம் பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்று சொன்னார்கள். மிருகக் காட்சிசாலையை கிண்டியிலோ, அடையாறிலோ வைத்தால் நலமாக இருக்கும். அப்போதுதான் மக்கள் வந்து பார்க்கக் கூடிய நிலை இருக்கும் என்ற கருத்தை நான் சொல்ல விரும்புகிறேன்.

மீனவர்களுக்கு ஒரு கோடி ரூபாய் அளவில் வீடுகளைக் கட்டுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். கேரளத்துடன் நம்முடைய கடற்கரையை ஒப்பிட்டுப் பார்த்தால், கேரளத்தை விட இரண்டு மடங்குக்கு மேல் அதிகமான நீளமுள்ள கடற்கரை தமிழகத்தில்தான் இருக்கிறது. ஆனால் மீனையும், இறாலையும் பிடித்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் பணியை, தமிழ் நாட்டை விட பத்து மடங்கு அதிகமாகக் கேரளத்தில்தான் செய்கிறார்கள். ஆகவே அந்தத் தொழிலை நாமும் செய்தால், அதிகமான அந்நியச் செலாவணி கிடைக்கக் கூடிய வகையில் அமையும்.

நம்முடைய அணுகுமுறை மாற்றாந்தாய் அணுகுமுறை என்றுதான் சொல்ல வேண்டும். கன்னியாகுமரிக்குச் சென்றிருந்தேன். படகுகள் செய்யும் தொழிற்சாலையைப் பார்த்தேன். தமிழ் நாட்டிலே அதுதான் பெரிய படகு கட்டும் தொழிற்சாலை என்று சொன்னார்கள். அங்கே கடன் வாங்கி படகுகளைத் தயார் செய்கிறார்கள். அங்கே பார்த்தால், 'ஆந்திரா பாங்க்' என்று போர்டு இருக்கிறது. தமிழ் நாட்டில் உள்ள, மதுரா பாங்க் போன்ற பாங்குகளுக்கு பிரதிநிதித்துவம் கொடுத்திருக்கக் கூடாதா? ஆந்திராக்காரர்களுக்குத்தான் உதவி செய்ய வேண்டுமா? ஆந்திரா பாங்க் என்று இருந்ததைப் பார்த்ததும் எனக்கு 'வயிற்றெரிச்சலாக' இருந்தது. ஆகவே இந்தத் தொழிலில் சரியான முறையில் அக்கறை எடுத்துக்கொள்ளவில்லை என்ற கருத்தைச் சொல்லி, அதிலே அக்கறை செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு கேள்விக்குப் பதில் சொல்லும்போது, பூம்புகார் கப்பல் நிறுவனத்திற்கு மூன்று கப்பல்கள் சொந்தமாக இருக்கின்றன என்று சொன்னார்கள்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்திற்கு இரண்டு கப்பல்கள்தான் இருக்கின்றன. மேலும் மூன்று கப்பல்களை வாங்க பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் முயற்சியை மேற்கொண்டிருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. வகாப் அவர்கள் ஆந்திரா பாங்க் பற்றிக் குறிப்பிட்டார்கள். ஆந்திரா பாங்க் என்றால், ஆந்திராவிலிருந்து தனியாகப் பணம் கொண்டு வந்து தனியாக நடத்துவதாகப் பொருள் இல்லை. எல்லாப் பகுதிகளிலிருந்தும் பணம் வாங்கி அந்த வங்கி விநியோகம் செய்கின்றது.

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: தலைவர் அவர்களே, என்ன இருந்தாலும் Head office ஆந்திராவில்தானே இருக்கும். சம்பாதிக்கும் இலாபம் எல்லாம் ஆந்திராவுக்குத்தான் போகும் என்று நினைக்கிறேன்.

மேலும் மூன்று கப்பல்களை வாங்கும் அபிப்பிராயம் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்போது இருக்கக்கூடிய கப்பல்கள் மூன்று என்று நான் நினைத்திருந்தேன். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, ஒரு வருஷத்திற்குச் சுமார் ஒரு கோடி ரூபாய் அளவுக்கு நஷ்டம் ஏற்படுகிறது என்று சொன்னார்கள். இப்படிப்பட்ட ஒரு தொழிலால் மக்களுக்கு என்ன நன்மை ஏற்படுகிறது என்று நான் கேட்டேன். கல்கத்தாவிலிருந்து நிலக்கரியைக் கொண்டு வருகிறார்கள் என்று சொன்னார். இந்த ஒரு கோடி ரூபாய் சுமார் மக்களுக்கு



எவ்வளவோ நல்ல காரியங்களைச் செய்யலாம். மாநில நிதி குறைவாக இருக்கும்போது, இப்படி நஷ்டத்தில் நடத்த வேண்டுமா என்று கேட்கிறேன். ஆகவே அந்தப் பூம்புகார் கப்பல் நிறுவனத்தையே close பண்ணுவது நல்லது. ஆகவே அதை மூட வேண்டுமென்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மற்றொரு முக்கியமான விஷயம். மேலவையிலே ஒரு சமயத்தில் நான் ஒரு கேள்வியைக் கேட்டிருந்தேன். தமிழகத்திலே இருந்து மத்திய அரசின் எக்சைஸ் வரி, சென்ட்ரல் டாக்ஸ், சேல்ஸ் டாக்ஸ் போன்ற வரிகளின் மூலம் எத்தனை கோடி ரூபாய் வசூல் ஆகிறது என்ற கேள்வியைக் கேட்டேன். இது பாராளுமன்றத்திலே கேட்க வேண்டிய கேள்வி என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதன் விவரங்கள் எங்களிடத்திலே இல்லையென்றும் சொன்னார்கள். இது திருப்தி அளிக்கக்கூடிய பதில் இல்லை. இந்த மாநிலத்திலிருந்து மத்திய அரசுக்குப் போகக் கூடிய மொத்தத் தொகை எவ்வளவு என்று நாம் தெரிந்து கொண்டாக வேண்டும். அவர்கள் நமக்கு மானியமாகக் கொடுப்பதைப் போலவும், நாம் அவர்களிடம் கெஞ்சுவதைப் போலவும் உள்ள நிலைமை இருக்கக் கூடாது. இவ்வளவு ரூபாயை நாங்கள் வரியின் மூலமாகத் தருகிறோம், அதில் இவ்வளவு பகுதியை எடுத்துக் கொண்டு மீதியைக் கொடுங்கள் என்று நாம் கேட்க வேண்டும். திட்டங்களை அவர்கள் போட வேண்டாம், நாமே போட்டுக் கொள்ளுகிறோம் என்று சொல்ல வேண்டும். ஐந்தாண்டுத் திட்டம், Centrally Sponsored Scheme என்று எல்லாம் சொல்லுவது ஏன்? இந்த மாநிலத்திலிருந்து இன்கம்-டாக்ஸ், சென்ட்ரல் டாக்ஸ், எக்சைஸ் வரி போன்றவற்றின் மூலமாக எவ்வளவு வருமானம் மத்திய அரசுக்குப் போகிறது என்ற விவரம் மாநில அரசுக்கே தெரியவில்லை. தெரிந்திருந்தால், பதில் சொல்லியிருப்பார்கள். ஆகவே அதைப் பற்றி அக்கறை எடுத்துக்கொண்டு எவ்வளவு தொகை நம்முடைய மாநிலத்திலிருந்து மத்திய அரசுக்குப் போகிறது என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். அதிலே 20 அல்லது 25 சதவீதம் அவர்களுக்குப் போக, பாக்கியை நமக்குக் கொடுக்க வகை செய்ய வேண்டுமென்ற கருத்தைச் சொல்லிக் கொள்ளுகிறேன்.

நம்முடைய நண்பர், புதிய உறுப்பினர் டாக்டர் ஜனார்த்தனன் அவர்கள் பேசும்போது ஒரு விஷயத்தைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். "பட்ஜெட்டிலே ஒரு வரியைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த வரிதான் இந்த பட்ஜெட்டின் சாராம்சம். அந்த ஒரு வரிதான் இந்த பட்ஜெட்டினுடைய குறிக்கோள், அந்த ஒரு வரிதான் இந்த பட்ஜெட்டுடைய நோக்கம். ஆணி வேர் அதுதான்" என்ற கருத்துப்படப் பேசினார்கள். "தந்த மாளிகையில் வாழ்பவர்கள்

(பிற்பகல் 7-14)

6. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

*A. Statutory Rules and Orders.*

111. Notification issued in G.O. Ms. No. 1310, Personnel and Administrative Reforms (Personnel-M), dated the 24th November 1978 in regard to an amendment to the Tamil Nadu Public Service Commission Regulations, 1954 for inclusion of Materials Manager and Service Engineer in Central Kitchen Maintenance Workshop in School Education Department within the Commission's purview. [Laid on the table of the House under Article 320 (5) of the Constitution of India.]

***B. Reports, Notifications and Other Papers.***

**Nil.**



இணைப்பு.

[98 ஆம் பக்கத்தில் உடுக்குறியிட்ட வினா எண். 173-க்கான விடையைக் காண்க.]

(a) The convicts in Central prison, Coimbatore refrained from taking food on 18-7-77.

(b) and (c) Their demands and the action taken by the Government are as follows:—

| Demands | Action Taken. |
| --- | --- |
| 1. Special remission granted to the prisoners should be taken into account for placing the cases of the lifers before the Advisory Boards. | Special remission granted to prisoners for undergoing sterilisation operation and that granted for Anna's 69th Birthday are taken into account. |
| 2. Cases should be placed before the Advisory Board when the remission earned and period served together comes to 10 years. | The matter is under correspondence with the Government of India. |
| 3. Police recommendation should be dispensed with for Advisory Board purposes. In other words the recommendation of the police should be ignored and the Government should decide the cases. | Referred to the Jail Reforms Commission, Madras. |

தாழ்வாரத்திற்கு வர வேண்டும்" என்ற தத்துவத்தைத்தான் பெரிய அளவில் பாராட்டிப் புகழ்ந்தார்கள். இதை நான் ஏற்றுக் கொள்ளவில்லை. நான் சொல்லுவது, மேலே இருப்பவனைக் கீழே வரச் சொல்லுவதற்குப் பதிலாக, கீழே இருப்பவனை மேலே வரச் சொல்லுங்கள் என்பதுதான். ரோடு ஓரத்தில் pavement -ல் வாழ்பவர்களைத் தாழ்வாரத்திற்கு வர வேண்டுமென்று பேசுங்கள், பாராட்டுவார்கள்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்** : தலைவர் அவர்களே, 'லெவலிங் அப்' அண்டு 'லெவலிங் டவுன்' என்று அண்ணா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்தத் தத்துவத்தின் அடிப்படையிலேதான் மற்றவர்களும் பேசியிருக்கிறார்கள்.

(பிற்பகல் 7-10)

**டாக்டர் இரா. சனார்த்தனன்** : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அந்த வரியோடு நான் விடவில்லை. தந்த மாளிகையிலே இருப்பவர்கள் தாழ்வாரத்திற்கு வரவேண்டும். அப்போதுதான் தீட்டப்படுகின்ற திட்டங்களின் உண்மைப்படம் தெரியும். இந்த இரண்டாவது வரிக்குத்தான் முதல் வரியை முன்னாலே சொன்னேன்.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப்** : மாற்றுத் தலைவர் அவர்களே, தாழ்வாரத்தில் உள்ளவன் தந்த மாளிகைக்குப் போக வேண்டும் என்றால் நான் வரவேற்பேன். ரோடு ஓரத்திலே குடியிருப்பவன் தாழ்வாரத்திற்கு வரவேண்டும் என்றால் நான் வரவேற்பேன். மேலே இருப்பவனைக் கீழே வரச்சொல்வது நல்லது அல்ல. கீழே இருப்பவனை மேலே போக வைக்க வேண்டும் என்பதுதான் நல்ல தாத்பரியம் என்று சொல்கிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனன்** : நான் குறிப்பிட்டது, தந்த மாளிகைக்கே முதலில் நான் பெரிய விளக்கம் தந்திருக்கிறேன். நீங்கள் நினைப்பதுபோல, இது மாளிகையிலேயிருந்து கீழே வருகின்ற விவகாரம் இல்லை. மக்களிடமிருந்து ஒதுங்கிப்போய் விடுகிறார்கள். மேல் தட்டிலே இருந்து சிந்தனைவாதிகள் எங்கோ ஒரு பக்கம் போய்விடுகின்றார்கள். அவர்கள் சாதாரண மக்களுடைய மன நிலைக்கு வரவேண்டும். அதுதான் தந்த மாளிகையினுடைய. அந்தச் சொல்லினுடைய உண்மையான விளக்கம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சி. இராமலிங்கம்** : மாற்றுத் தலைவர் அவர்களே, தந்த மாளிகையில் இருந்தால், ரோடிலே இருப்பது தெரியும் என்பது அவர்களுடைய சித்தாந்தம். தந்த மாளிகையிலேயிருந்து வெளியிலே வந்தால்தான் தெரியும் என்று சொல்கிறேன்.





**திரு. கே. எஸ். அப்துல் வகாப்** : நீங்கள் சொல்வதற்கும் நான் சொல்வதற்கும் உள்ள மாறுபாடு இதுதான். கோவணம் கட்டியிருப்பவனுக்கு சட்டை கொடுக்கச் சொல்லாமல், கோட்டுப் போட்டு இருப்பவர்கள் சட்டையோடு இருக்க வேண்டும் என்று சொல்கிறீர்கள். இதுதான் உள்ள வித்தியாசம். இந்த தாத்பரியத்திலே எனக்கு மாறுபாடு இருக்கிறது என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இத்துடன் ஒன்றைச் சொல்லி என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

டாக்சி, ஆட்டோ ரிக்ஷா இவைகளுக்கு மைலேஜ் கட்டணத்தை உயர்த்தித் தந்திருக்கிறார்கள். செய்யவேண்டியதுதான். மத்திய அரசு வேறு கூட்டியிருக்கிறார்கள். எப்போதுமே டாக்சிக்காரர்கள், ஆட்டோ ரிக்ஷாக்காரர்கள் உரிய கட்டணம் மட்டும் வாங்குவதில்லை. கூடுதலாகக் கொடுத்தால்தான், அவர்கள் வருகிறார்கள். குறைந்த தூரத்திற்கு வரவேண்டும் என்று கேட்டால், 'வேலையிருக்கிறது, வர முடியாது' என்று சொல்லிவிடுகிறார்கள். அண்ணா சாலைப் பகுதியிலே கூட ஆட்டோ, டாக்சிக்காரர்கள் இருக்கிறார்கள். குறைந்த தூரத்தில் இருக்கின்ற இடத்திற்குப் போகவேண்டும் என்றால், வரமாட்டேன் என்கிறார்கள். மாம்பலம் போன்ற தூரமான இடத்திற்கு என்றால் வருகிறார்கள். எக்மோர் வரை என்றால், வேலையிருக்கிறது என்று சொல்கிறார்கள். அது நாடறிந்த உண்மை. அரசுக்கும் அது தெரியாமல் இருக்க முடியாது. நான் மேலவையிலும் பலமுறை சொல்லியிருக்கிறேன். பேரவையிலேயும்கூடச் சொல்லியிருக்கிறார்கள். பல உறுப்பினர்கள் பேசினார்கள். அரசுக்குத் தெரிந்தும் இப்படி விட்டுக் கொண்டிருப்பதா? அது கையால் ஆகாத்தனமா அல்லது வேண்டுமென்றே விட்டுக்கொண்டிருக்கிறார்களா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்** : அப்படியில்லை. ஜனநாயகம்.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப்** : அநியாயமாகப் போகிற போக்கை விட்டு வைப்பதுதான் ஜனநாயகமா என்று கேட்கிறேன். இதற்கு வழி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**மாற்றுத் தலைவர் (திரு. க. இராமமூர்த்தி)** : இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை மாலை 4 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

| Demands. | Action Taken. |
|---|---|
| 4. Fixation of working hours and wages for the work done by the prisoners in the prisons, Working hours should be from 8 A. M. to 12 Noon and 1 p. m. to 4 p. m. Daily wages for the worker should be fixed. | The Government introduced the "Wage Earning Scheme" for prisoners in the Central Prison, Salem as an experimental measure. The scheme is functioning satisfactorily in the Central Prison, Salem from August 1973. There is also a proposal before the Government to introduce similar scheme to all prisoners. According to the scheme prisoners are classified as skilled, semi-skilled and unskilled and they are paid wages at the rate of 40, 20, 10 paise per day respectively and the prisoners are not expected to work for more than 8 hours. The matter was referred to the Director of Evaluation and Applied Research, His report has been received and it is now being processed. |
| 5. Sanction of Government loan to lifers for rehabilitation in life after release from the Jail. | At present the inmates of Borstal School are getting financial assistance at the time of their discharge from the school under the scheme 'Aid on discharge'. They are supplied with machinery at the following rate:— |

| | Rs. |
|---|---|
| Carpentary .. .. .. .. | 100 cach |
| Tailoring .. .. .. .. | 300 each |
| Weaving .. .. .. .. | 75 each |
| Binding .. .. .. .. | 50 each |
| Blacksmithy .. .. .. .. | 100 each |

The Inspector General has sent proposals to the Government for rendering financial assistance to the discharged prisoners for purchase of Machinery, etc., at the following rates :—



| Trade. | Financial assistance. Rs. |
|---|---|
| Carpentry .. .. .. .. | 400 each |
| Tailoring .. .. .. .. | 600 each |
| Weaving .. .. .. .. | 200 each |
| Binding .. .. .. .. | 200 each |
| Blacksmithy .. .. .. .. | 300 each |
| Dairy animals .. .. .. .. | 400 each |

The question or framing the rules for disbursal of the loan is being processed seperately.

| Demands. | Action Taken. |
|---|---|
| 6. **Diet should be revised as in Kerala and meat should be issued at least once in a week.** | The Prisoners in Central Prison, are classified as 'A' and 'B' class prisoners, Both 'A' and 'B' class prisoners are to be issued diet prescribed in the Prison and Reformatory Manual, Volume-II irrespective of the cost involved. According to the scales of diet now in vogus, the cost per day per head for 'A' class and 'B' class Prisoners works out as follows :— |

**A Class**

| | Rs. | p. |
|---|---|---|
| 1. Vegetarian. | | |
| Labouring .. .. .. .. | 5 | 65 |
| Non-labouring .. .. .. .. | 5 | 40 |
| 2. Non Vegetarian | | |
| Labouring .. .. .. .. | 5 | 35 |
| Non labouring .. .. .. .. | 4 | 60 |

**'B' Class.**

| | Rs. | p. |
|---|---|---|
| Under Nutritious Diet scheme | 2 | 80 |
| Under Partly Nutritious Diet Scheme | 2 | 70 |

| | |
|---|---|
| | Only Vegetarian diet is supplied to 'B' class prisoners. Likewise clothing and bedding are provided to the prisoners according to the provision in Chapter 22 of the Tamil Nadu Prison and Reformatory Manual. Volume-II. Any prisoner while in prison, if he feels that he is not given the facilities for which he is entitled to as per rule may apply to the Superintendent, of Prison during weekly inspection, or to the Jail visitors or the Inspector-General of Prisons during his inspection. Such appeals, if any from the prisoners are looked into by the jail authorities then and there. In view of the sufficient provisions available in the Prison Manual for provision of clothing and diet to the prisoners according to their custom and culture, no separate action on this demand is called for. |
| **7.** Prisoners should not be penalised for representing their grievances to the higher authorities. | No action is taken by the prison authorities against the prisoners whenever representations regarding their grievances are made to the higher authorities. |
| **8.** Transfer of prisoners from one prison to another should not be done unless the prisoner wants it. | Referred to the Jail Reforms Commission. |
| **9.** Condemnation of lack of Medical facilities and ill treatment of prisoners in the Jail hospitals, Improvement of | Thers is a fully equipped and well staffed hospital in each prison with in-patient wards and other facilities. When the prisoners are admitted in the Jail, they are detained in the Quarantine for a period not exceeding 15 days. On the admission of the prisoners, the Assistant Surgeons will verify them and if they have |



| | |
|---|---|
| facilities and humanitarian consideration and treatment by the medical staff. | got any disease, proper treatment will be given by the Doctor. If there is any contageous disease, such prisoners will be segregated from the other prisoners and they are kept in the separate block and necessary treatment given to them. If the Assistant Surgeon finds any of the prisoners dangerously ill and special treatment is to be given to such prisoners, he refers the case to the Medical Officer who is the District Medical Officer of the District or the Professor/Superintendent of the Medical College Hospital. Arrangements are made to send them to Headquarters hospitals for treatment if necessary. The Medical Officer of the Jail is also visiting the Jail daily. Specific instances may be taken to the notice of the Superintendent/Medical Officer during the weekly parade. In the circumstances stated, no action is called for on this demand. |
| **10.** Inadequacy of air in the Cells. Improvement of sanitary conditions in the cells like provision of ventilation. | Every prisoner In a ward shall be allowed not less than 45 sq. ft. of ground space and 600 cubic feet of breathing space. The height of the walls of a ward shall not be less than 13 feet and tn calculating the allowance of cubic feet per man, no account shall be taken on any air space above 13 ft. Every cell built shall be ventilated by an iron grated door in fron '6½ X 2½' and by two windows 4' X 2' one being placed above the door and the other on a level with it on the back wall. All the Central Prisoners are provided with flushout latrines. The Government have proposed to provide flushout Latrines in all sub jails with the financial assistance from the Government of India. |
| **11.** Opening of canteen in prisons. | A canteen was opened at Central Prison, Coimbatore with effect from 21.4.78 with a capital of Rs. 2,000/- taken on loan from the staff canteen. A canteen has also been opened in the |

---

புதன்கிழமை, 1979 மார்ச் 14.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணி அளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

## 1. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### *Loss of lives due to thunder-stroke.*

*180-A. *Q.*—THIRU M. SANKARALINGAM: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the number of persons who lost their lives in thunder-stroke in Kanyakumari District, during April and May, 1978;

(*b*) whether any assistance was given to the families of the deceased; and

(*c*) if so, the quantum of assistance so given?

### இடிவிழுந்து உயிரிழந்தவர்கள்.

திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1978 ஆம் ஆண்டு, ஏப்ரல், மே மாதங்களில் கன்னியாகுமரி மாவட்டத்தில் இடி விழுந்து இறந்தவர்கள் எத்தனை பேர்?

(இ) அவ்வாறு இறந்தவர்கள் குடும்பங்களுக்கு அரசு ஏதும் உதவித் தொகை அளித்ததா?

(உ) ஆம் எனில், அளித்த தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது (மாண்புமிகு முதலமைச்சர் சார்பில்): (அ) மூன்று பேர்.

(இ) & (உ) அவ்வாறு இறந்தவர்களில் சம்பாதித்துக் குடும்பத்தைக் காப்பாற்றும் நிலையிலிருந்த ஒருவரின் குடும்பத்திற்கு மட்டும் ரூபாய் 1,000 நிதி உதவி அளிக்கப்பட்டது.

| Demands | Action Taken |
|---|---|
| | Central Prison. Madras on the Prisoners' Welfare Day i. e. on 2.10.78 and for this a sum of Rs. 750/- was diverted from the staff canteen fund as loan. The Inspector General of Prisons has reported that it is proposed to open similar canteen in other Central Prisons also whenever funds are available for the purpose. |
| 12. Prison aufhorities should move with the prisoners w th courtesy and kind heart and reform the prisoners. | While daaling with the prisoners, the prison authorities are moving with courtesy and kind heart. Hence there is no basis for the demand. |
| 13. Sanction of leave to lifers on their own bond once in a year to go to their native place. | The Superintendents of Prisons are empowered to grant 15 days leave to attend to the serious illness, death or funeral of any of the members of the family of the prisoners. Such leave is granted to prisoners if their conduct and behaviour in the prison are satisfactory and that there is no fear of their escape. Leave exceeding 15 days is sanctioned by the Government on the application of the prisoners after calling for the report of the Superintendent of Police. In certain cases, besides the report of the Superintendent of Police, the report of the Collector and the report of the Probation Officer of the district concerned will also be obtained for considering grant of leave to the prisoner. The request of the prisoners is that the lifer prisoner may be granted one month leave every year as a matter of routine. The Inspector General of Prisons was consulted on this demand and he is of the view that the routine release of lifers on parole for a month every year on their own bond is not at all safe and that the leave may be sanctioned by the Government on |



| Demands | Action Taken |
|---|---|
| | the application of the prisoner based on the recommencations of the Superintendent of Police and the Superintendent of Prisons concerned after passing the formalities in this regard In G. O. Ms. No. 2701 Home dt. 4.11.78 the police authorities were instructed to send their reports whether the convicts including life convicts can be released on their own bond so as to avoid delay in processing their request for grant of leave. Guidelines have also been evolved for grant of leave to convicts. |
| 14. Sanction of general Amnesty in commemoration of a ssumption of charge by the new Government for the releape of the prisoners or for special remission. | No special remission hos been granted to prisoners in commemoration of the assumption of now Government. |

திரு. க. அறிவழகன் : இடி விழுகின்ற சம்பவம் பொதுவாக மின்சாரத்தால் ஏற்படுகிறது. மின்சாரத்தால் இடி உருவாகிறது என்பது தெரியாத நிலையில், அதற்குரிய பாதுகாப்புகளை முதலாவதாக எடுத்துக்கொள்ள முடியாத நிலை ஏற்படுகிறது. ஆகவே இப்படிப்பட்ட விபத்துக்கள் மின் ஆற்றலால் ஏற்படுகிறது என்ற உணர்வைப் பொது மக்களுக்கு அளிக்கிற வகையில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அல்லது ஆட்சி அறிவிக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : மாண்புமிகு உறுப்பினரவர்கள் ஒரு குழப்பத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். (சிரிப்பு) மின்சாரத்தாலே இடி வருகிறதா ? . . .

திரு. க. அறிவழகன் : மின்சாரமே இடிதான்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : இயற்கை என்பது பொதுவாக இரண்டுவிதமாகச் செயல்படுகிறது. Act of God, Vis Major என்று சொல்லுவார்கள். unforeseen event என்று சொல்லி, எதிர்பாராவிதமாக இந்த நிகழ்ச்சிகள் நடந்து விடுகின்றன. இடி சொல்லிக்கொண்டு வந்தால், மாவட்ட ஆட்சித் தலைவரவர்கள் முன்கூட்டியே அறிவிக்க இயலுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## Bootleggers.

* 180-B. Q.—THIRU M. SANKARALINGAM: Will the Hon. the Chief Minister be pleased to state:

(a) whether it is a fact that several persons were injured during the violent clashes between two groups of bootleggers in Madras during 1978; and

(b) the reason for the clash between these two groups?

### சாராயம் காய்ச்சும் கோஷ்டியினர்.

திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1978 ஆம் ஆண்டு, சென்னையில் சாராயம் காய்ச்சும் இரு கோஷ்டியினரிடையே பயங்கர மோதல் ஏற்பட்டதில் பலர் காயமுற்றனர் என்பது உண்மையா ?

(இ) இவ்விரு கோஷ்டியினருக்கிடையே மோதல் ஏற்பட்டதற்குக் காரணம் யாது ?



மாண்புமிகு திரு. கா. இராசா முகமது (மாண்புமிகு முதலமைச்சர் சார்பில்) : (அ) ஒரு உதவி ஆணையாளர், மூன்று ஆய்வாளர்கள், நான்கு உதவி ஆய்வாளர்கள் மற்றும் பதின்மூன்று காவல்துறை காவலர்கள் காயமடைந்துள்ளனர். கலவரத்தின்போது காயமடைந்ததாக பொதுமக்களில் யாரும் புகார் தரவில்லை.

(இ) சென்னை ஓட்டேரி பிரிக்லின் ரோடில் வசிக்கும் கோவிந்தன் என்பவருக்கும், சத்தியப்பமுதலி தெருவில் உள்ள பாலன் என்பவருக்கும் முன் விரோதம் இருந்து வந்திருப்பதாகத் தெரிகிறது. 25 ஜூன் 1978 அன்று காலை சிவசண்முகபுரத்தைச் சேர்ந்த சில சிறுவர்களும் சத்தியப்பமுதலி தெருவைச் சேர்ந்த சில சிறுவர்களும், ஓட்டேரி கால்வாய் ஓரமாக சூதாடிய போது, சிவசண்முகபுரத்தைச் சேர்ந்த இரு சிறுவர்கள் சூதாட்டத்தில் தோற்று விட்டு காசு கொடுக்காததால் சத்தியப்பமுதலி தெருவைச் சேர்ந்த இரு சிறுவர்கள் அவர்களை அடித்துத் துரத்தியிருப்பதாகத் தெரிகிறது. இது சம்பந்தமாக கோவிந்தனின் சகாவாகிய எட்டியப்பன் என்பவர் சத்தியப்ப முதலி தெரு சென்று கேட்ட போது தகராறு ஏற்பட்டு பாலன், சேகர் என்ற இருவர் எட்டியப்பனைத் தாக்கியுள்ளதாகத் தெரிகிறது. இதன் தொடர்பாக இரண்டு கோஷ்டிகளும் ஒன்றை ஒன்று தாக்கிக் கொண்டன.

திரு. ம. சங்கரலிங்கம் : இந்தச் சம்பவம் கலைஞ்கரில் நடந்தது. மாநிலத்திலுள்ள எல்லாச் செய்தித் தாள்களும், பிற மாநிலங்களுக்குச் செல்லும் ஆங்கிலச் செய்தித் தாள்களும் தொடர்ந்து செய்திகள் வெளியிட்டன சாராயம் காய்ச்சிய இரண்டு கோஷ்டிகளிடையே பெரும் தகராறு, சண்டை என்று தொடர்ந்து செய்தி 4, 5 நாட்கள் வந்து கொண்டிருந்தது. ஆனால் துறை அதற்கு எந்தவிதமான மறுப்பும் தெரிவிக்கவில்லை. இன்று அரசு சார்பிலே மாறுபட்ட கருத்தாக, சூதாடியதன் விளைவாக இரண்டு சிறுவர்களுக்கு இடையே ஏற்பட்ட சண்டை என்று கருத்து தெரிவிக்கப்படுகிறது. இது சரியானதுதானா ?

(பிற்பகல் 4-10)

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: இந்த நிகழ்ச்சிக்கு அடிப்படைக் காரணம் என்ன என்பதைத் தெளிவுபடுத்த வேண்டுமென்பதற்காகத் தான் இந்த வினாவே வந்தது. மதுவிலக்குக் குற்றவாளிகளாகிய சென்னை ஓட்டேரி பிரிக்லின் ரோடில் வசிக்கும் கோவிந்தன் என்பவருக்கும், அதே பகுதி சேர்ந்த சத்தியப்ப முதலி தெருவில் உள்ள பாலன் என்பவருக்கு விரோதம் இருந்து வந்திருக்கிறது. அவர்கள் இரண்டு பேருமே ப

[1979 மார்ச் 14

திரு. ம. சங்கரலிங்கம் : தலைவரவர்களே, அந்த விபத்தில் 3 பேர்கள் இறந்தார்கள். அந்த மூவர் யார்? அவர்கள் எத்தனை வயதுடையவர்கள்? அவர்களுடைய குடும்ப நிலை எவ்வாறு இருக்கிறது? மற்ற இரண்டு நபர்களுக்கு நிதி உதவி வழங்காததற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : தலைவரவர்களே, இடி தாக்கியதன் காரணமாக அகஸ்திஸ்வரம் வட்டம் மீனாட்சிபுரத்தில் நரசிம்மன் செட்டியார் என்பவரும், அதே வட்டம் புதூர்சேரிக்குடியிருப்பைச் சேர்ந்த பொன்னாபரணம் என்பவரும் மற்றும் துவாலை வட்டம் காண்டலாவைச் சேர்ந்த செல்லம் என்பவரும் மரணம் மடைந்தனர். மரணம் அடைந்தவர்களுள், நரசிம்மன் செட்டியார் சம்பாதித்து குடும்பத்தைக் காப்பாற்றும் நிலையில், குடும்பத் தலைவர் என்பதால், அவருடைய குடும்பத்திற்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து 1,000 ரூபாய் நிதி உதவி அளிக்கப்பட்டது.

திரு ம. சங்கரலிங்கம் : பின்னால் சொன்ன இரண்டு பெண்மணிகளும் அரிசன வகுப்பைச் சேர்ந்தவர்கள். அவர்கள் தினமும் வயலில் வேலை செய்கிறவர்கள். இந்த நிகழ்ச்சி நடந்த அன்று, நரசிம்மன் செட்டியார் அவர்களுடைய வயலில் நடவு நட்டுக் கொண்டு, விவசாய வேலையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது, இடி விழுந்து இறந்துவிட்டார்கள். நரசிம்மன் செட்டியாரின் குழந்தைகள் பி.ஏ., எஸ்.எஸ்.எல்.சி. படித்துவிட்டு, வேலை வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவரிடம் மனு கொடுத்திருக்கிறார்கள். இந்த இரண்டு பெண்களின் குழந்தைகள், சம்பாதிக்கின்ற தாயை இழந்ததால், தவித்துக்கொண்டிருக்கிறார்கள். எனவே, அரசு இதனைப் பரிசீலனை செய்து, அந்த இரண்டு அரிசனக் குடும்பங்களுக்கும் உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் நரசிம்மன் செட்டியார் குடும்பத்தில் இருக்கிற வேலை பார்க்கத் தகுதியுடையவர்களுக்கு வேலை கொடுக்க அரசு ஆவன செய்யுமா என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் இடி தாக்கியதன் காரணமாக இறந்த இரண்டு பெண்மணிகள் அரிசனக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட விபத்துக்களில் தாக்குண்டு மாண்டுவிடுகிறவர்களின் குடும்பங்களுக்கு நிதி உதவி செய்கின்ற முறைகளை அரசு வரையறை செய்திருக்கிறது. இப்படிப்பட்ட விபத்துக்குள்ளாகி இறந்துபோனவர், குடும்பத் தலைவராகவோ அல்லது குடும்பத்தின் பொறுப்பாளராகவோ இருந்து, அவருடைய சம்பாத்தியத்தை நம்பி அவருடைய குடும்பத்திலுள்ள மற்றவர்கள் இருந்தால்,



1979 மார்ச் 14]

அந்தக் குடும்பத்திற்கு உதவி செய்வதென்ற நியதியைக் கடைபிடித்து வருகிறார்கள். அந்த அடிப்படையிலே இந்த உதவி செய்யப்பட்டு வருகிறது. அந்த பெண்மணிகள் சம்பாதித்துத்தான் அந்தக் குடும்பங்கள் காப்பாற்றப் படும் சூழ்நிலை இருந்தது என்பது உறுதி செய்யப்படும்போது, நிச்சயமாக அந்தப் பெண்மணிகள் சம்பாதித்துத்தான் அந்தக் குடும்பங்கள் காப்பாற்றப் இல்லை. எதிர்க் கட்சித் தலைவரவர்கள் சொன்ன கருத்துக்களின் பேரில், விசாரணை செய்ய முடியுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம் : மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் பொறுப்பு கொடுத்து, 2 பெண்மணிகளின் குடும்ப நிலையையும், அவர்கள் தினமும் உழைக்கும் கூலிகளாக இருந்தார்களா என்பதையும் பரிசீலனை செய்து, அவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இறந்த நரசிம்மன் செட்டியார் குடும்பத்திற்கு 1000 ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். அவருடைய குழந்தைகள் வேலை பார்க்கத் தகுதி உடையவர்களாக இருந்தால், அவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் மனிதாபிமான உணர்வோடு இந்தக் கருத்துக்களைச் சொல்கிறார்கள். அந்த உணர்வு அரசுக்கும் நிரம்ப இருக்கிறது. நிச்சயமாக அவர்கள் சொன்ன கருத்துக்களின் அடிப்படையில் அரசு இந்த விஷயங்கள் குறித்து திரும்பவும் மாவட்ட ஆட்சித் தலைவரவர்களின் கருத்துக்களைப் பெற்று, ஆவன செய்யுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : இயற்கையின் உற்பாதங்களினால் இறந்தவர்கள் என்பதால், இடி விழுந்ததால் இறந்தவர்களுக்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து உதவுவதற்கு அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் முதல்வரவர்களுடைய நிவாரண நிதியிலிருந்து உதவி செய்ய முடியுமா என்று கேட்டிருக்கிறார்கள். இந்த விபத்துக்களைப் பொறுத்தவரையில், மாவட்ட ஆட்சித் தலைவரவர்களின் கருத்துக்களைப் பெற்று, வருவாய்த் துறையினுடைய வரைமுறைகளுக்குட்பட்டு நிதி உதவி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் மனிதாபிமான அடிப்படையிலே சில கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். அதைப் பரிசீலனை செய்கின்றபோது, மற்ற இருவருக்கும் உதவி செய்யும் நிலை ஏற்படும்போது முதல்வர் நிவாரண நிதியிலிருந்து தர அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

கொள்கையைச் சரியாகக் கடைப் பிடிக்காதவர்கள் என்கிற அளவிலே விவரங்கள் அறிக்கையிலே கூட கொடுக்கப்பட்டிருக்கின்றன. மோதலில் ஈடுபட்ட இரண்டு தரப்பினரும் மதுவிலக்குக் குற்றவாளிகள்தான். ஒரு வகையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்து சரிதான். இரண்டு பிரிவினரும் மதுவிலக்குக் குற்றவாளிகள்தான். ஆனால் எப்படி சண்டை ஆரம்பமானது என்பதைப் பார்க்க வேண்டும். இரண்டு சிறுவர்கள் சூதாடியதில் தகராறு ஏற்பட்டு அது இவ்வளவு பயங்கர கோஷ்டிச் சண்டையாகி கலவரமாகியிருக்கிறது.

**திரு. ம. சங்கரலிங்கம் :** வரலாற்றில் போருக்குக் காரணங்கள் பல. இம்மீடியட் காரணம் ஒன்று என்று சொல்வார்கள். இதற்கு இம்மீடியட் காரணம் என்ன, பின்னணிக் காரணம் என்ன என்பதைப் பற்றி மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிடுகையில் இரு சிறுவர்கள் சூதாடியதில் ஏற்பட்ட தகராறுதான் இதற்கெல்லாம் அடிப்படையான காரணம் என்று சொன்னார்கள். ஆனால் சாராயம் விற்பவர்கள் விலை நிர்ணயம் செய்வதில் ஏற்பட்ட தகராறால் தான் இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெற்றன என்று அங்குள்ளவர்கள் சொல்கிறார்கள். சாராய வியாபாரிகளால் இப்படிப்பட்ட பயங்கர மோதல் சம்பவங்கள் நடைபெறுவதைத் தடுக்க, முற்றுப்புள்ளி வைக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** இப்படிப்பட்ட கேள்விக்குப் பதில் சொல்லும் வண்ணம் சட்டமன்றப் பேரவை நேற்றையதினம் மதுவிலக்குச் சட்டத்தைக் கடுமைப்படுத்தி நிறைவேற்றியிருக்கிறது. இங்கேயும் அந்தச் சட்டம் நிறைவேற்றப்படுவதற்காக வர இருக்கிறது. அதற்குப் பிறகு மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் சொல்கிறமாதிரி சம்பவங்கள் நடைபெறாது.

**திரு. க. இராமமூர்த்தி:** இந்தச் சம்பவத்தில் சம்பந்தப்பட்டவர்கள் மதுவிலக்குக் குற்றங்களில் ஈடுபட்டவர்கள் என்று தெளிவாகத் தெரிகிறது. இந்தச் சம்பவம் நடைபெற்றதையொட்டி எத்தனை மதுவிலக்கு வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன? பல இடங்களில், பல வீடுகளில் போலீசார் "தேடினார்கள்" என்ற தகவல் கூட வந்தது. அப்படியானால் எத்தனை பேர்கள் மீது மதுவிலக்கு வழக்கு போடப்பட்டது? ஐ.பி.சி. (I.P.C.) வழக்கு எத்தனை பேர் மீது போடப்பட்டிருக்கிறது? எந்த அளவுக்கு போலீசார் தடியடி நடத்தினார்கள். எந்த அளவுக்கு கண்ணீர்ப்புகை வீசினார்கள் போன்ற விவரங்களையும், எத்தனை நாள் இந்தச் சம்பவம் நடைபெற்றது என்கிற விவரங்களையும் மாண்புமிகு அமைச்சரவர்கள் தருவார்களா?



**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** மாண்புமிகு உறுப்பினரவர்கள் தனிக் கேள்வியைக் கேட்டு, அதற்கு பதில் சொல்லுகின்ற வகையில் பதிலைச் சொல்லிவிடலாம். குறிப்பு கையில் இருக்கிற காரணத்தால், இப்பொழுதே சொல்லி விடலாம் என்று கருதி சொல்கிறேன். ஏற்கெனவே துறையினர் தந்த விவரத்தைச் சொன்னேன். இப்பொழுதும் குறிப்பில் இருக்கிற விவரங்களைப் பார்த்துச் சொல்கிறேன். 208 பேர் அந்தப் பகுதியிலே உள்ளவர்கள் கைது செய்யப்பட்டார்கள். மதுவிலக்குக் குற்றவாளிகள் இருக்கிறார்கள் என்பதை நான் ஏற்கெனவே என்னுடைய பதிலில் சொல்லியிருக்கிறேன். எத்தனை பேர் மதுவிலக்குக் குற்றவாளிகள், எத்தனை பேர் கலவரம் காரணமாகக் கைது செய்யப்பட்டார்கள் போன்றவற்றிற்கான விவரங்களை தனிக் கேள்வி மூலம் கேட்டால் பதில் தர முடியும்.

## *Tiruparankundram Temple.*

* 181 *Q.*—THIRU V. THANGAPANDIAN: Will the Hon. the Minister for Information and Hindu Religious Endowments be pleased to state:

(*a*) whether Tiruparankundram Panchayat has made any representation to the Government, to the effect that the administration of the Tiruparankundram Temple should be segregated from the Arulmigu Madurai Meenakshi Temple administration; and

(*b*) if so, the decision taken thereon?

## திருப்பரங்குன்றம் கோயில்.

**திரு. வே. தங்கப்பாண்டியன்:** மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருப்பரங்குன்றம் கோவில் நிர்வாகத்தை, மதுரை அருள்மிகு மீனாட்சி கோயில் நிர்வாகத்திலிருந்து பிரிக்க வேண்டுமென்று, திருப்பரங்குன்றம் பஞ்சாயத்து வேண்டுகோள் ஏதும் அரசிடம் கொடுத்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுத்த முடிவு என்ன?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** (அ) & (இ) திருப்பரங்குன்றம் பஞ்சாயத்து வேண்டுகோள் எதுவும் அரசுக்கு விடுக்கவில்லை. என்றாலும் நீண்ட நாட்களாக மக்களின் பிரதிநிதிகளிடமிருந்து வேண்டுகோள் வந்து கொண்டிருப்பதை எண்ணி இந்தப் பிரச்சினையை இப்போழுது அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

**திரு. வே. தங்கப்பாண்டியன்:** மதுரை அருள்மிகு மீனாட்சி கோயில் நிர்வாகத்திலிருந்து திருப்பரங்குன்றம் கோவில் நிர்வாகத்தைப் பிரித்து, இரண்டையும் தனித் தனி நிர்வாகங்கள் ஆக்க வேண்டுமென்ற கோரிக்கை நீண்டகாலமாக இருந்து வருகிறது. இதை எந்த வகையில் அரசு பரிசீலித்திருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகின்றேன். இரண்டு பகுதியினருக்கும் இது தனித் தனியாகப் பிரிக்கப்பட்டால், நன்மையளிக்கும் என்ற வகையில் இது விரைவில் பிரிக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** மதுரை அருள்மிகு மீனாட்சி அம்மன் கோயில் நிர்வாகத்திலிருந்துத் திருப்பரங்குன்றம் சுப்பிரமணியசுவாமி கோயில் நிர்வாகத்தைப் பிரிக்க வேண்டுமென்ற வேண்டுகோள் 1969 ஆம் ஆண்டிலிருந்தே தொடர்ந்து இருந்து வருகிறது. அந்த வேண்டுகோள் 2, 3 தடவைகள் ஆய்வு செய்யப்பட்டு, அவைகளைப் பிரிப்பது உகந்ததல்ல என்கிற முடிவுகள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. அரசின் சார்பிலேயும் முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. இப்பொழுது மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் திருப்பரங்குன்றத்தினுடைய சட்டமன்றப் பேரவை உறுப்பினர் என்ற முறையில் ஒரு வேண்டுகோளை கடந்த ஆண்டில் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அனுப்பியிருக்கிறார்கள். அதைத் தொடர்ந்து அரசு அதைப் பரிசீலனை செய்து, அற நிலையத் துறை ஆணையரைக் கேட்டதில், இந்த இரு கோயில் நிர்வாகங்களையும் பிரிக்கலாம் என்று ஆலோசனை வழங்கியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் திட்டங்களை உருவாக்கலாம் என்று அரசு இப்பொழுது அற நிலையத் துறைக்கு ஆலோசனை வழங்கியிருக்கிறது.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** திருப்பரங்குன்றத்தில் இருக்கிற சுப்பிரமணிய சுவாமி கோயிலுக்கு ஏராளமான வருமானம் வருகிறது. மதுரையில் இருக்கிற மதுரை அருள்மிகு மீனாட்சி அம்மன் கோயிலுக்கு வருமானம் அவ்வளவாக இல்லை. திருப்பரங்குன்றத்திலிருக்கிற சுப்பிரமணிய சுவாமி கோயிலிலிருந்து வருகிற வருமானத்தை எடுத்து மதுரையில் இருக்கிற மதுரை அருள்மிகு மீனாட்சி அம்மன் கோயிலின் நிர்வாகச் செலவுக்குக் கொடுக்க

வேண்டியிருக்கிறது. நல்ல சமயத்தில் நல்லதொரு உறுதியான முடிவை இப்பொழுது மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அந்த பகுதி மக்களுடைய நீண்ட நாள் வேண்டுகோளாக இருக்கிற காரணத்தாலும், மதுரை அருள்மிகு மீனாட்சி அம்மன் கோயிலிலிருந்து வரக்கூடிய வரு மானத்தை அந்தக் கோயிலுக்காகத்தான் பயன்படுத்தலாம் என்கிற வகையில் நிர்வாகத்தைப் பிரிப்பதற்கு அரசு முடிவெடுத்திருக்கிற காரணத்தாலும், இரண்டு கோரிக்கைகளையும் ஒருங்கே உடனடியாக நிறைவேற்ற அரசு தயா ராக இருக்கிறதா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மாண்புமிகு உறுப்பினரவர்கள் இங்கே தவறான தகவலின் அடிப்படையில் இந்தக் கருத்தைத் தெரிவித்திருக்கி றார்கள். இரண்டு ஆலயங்களும் ஒன்றாகச் சேர்ந்திருப்பது மீனாட்சி அம்மன் கோயிலுக்கு வருமானம் அவ்வளவாக இல்லை என்ற அடிப்படையில் அல்ல. அந்த எண்ணத்தில் இரண்டு ஆலயங்களும் ஒன்றாகச் சேர்க்கப்பட வில்லை. ஆகமவிதிகளின்படி அவைகள் நீண்ட காலமாகத் தொடர்ந்து ஒன்றாக இருந்து வருகின்றன என்ற அடிப்படையில்தான் சேர்க்கப்பட்டிருக் கின்றன. முன்பெல்லாம் மதுரை அருள்மிகு மீனாட்சி அம்மன் கோயில் தான் அதிக வருமானம் பெற்று வந்தது என்றும், அதை ஒட்டித்தான் திருப்பரங் குன்றம் சுப்பிரமணிய சுவாமி கோயிலின் வருமானம் இருந்து வந்தது என்கிற கருத்தும் வழங்கப்பட்டு வந்தது. என்றாலும் பிற்காலத்திலே இப்பொழுது வளர்ந்து வருகிற நிலையில் மதுரை அருள்மிகு மீனாட்சி அம்மன் கோயில் தரிசிக்கிற ஆலயம் என்றும் திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமி ஆலயம் காணிக்கை செலுத்துகிற ஆலயமாகவும் மாறியிருக்கிற காரணத்தால், நாளடைவில் இதன் வருமானம் வளர்ந்துகொண்டே வருகிறது. ஆகவே, இரண்டையும் பிரிக்கலாம். அதிலே தவறு ஒன்றுமில்லை என்கிற முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும் ஒருவேளை மதுரை அருள்மிகு மீனாட்சி அம்மன் கோயிலின் வருமானம் குறைவாக இருந்தால், தாயாருக்கு மகன் தன்னுடைய வருமானத்திலிருந்து கொடுப்பதைத் தடுப்பதிலே மாண்பு மிகு உறுப்பினர்கள் இவ்வளவு அக்கறை செலுத்த வேண்டாம் (சிரிப்பு). அந்தக் கருத்துக்கு நாம் போகவே வேண்டாம். இருந்தாலும் நிர்வாக வசதிகளையொட்டி இரண்டு ஆலயங்களும் இப்பொழுது தன்னிறைவு பெற்று வருகின்ற காரணத்தால், தனித் தனி நிர்வாக வசதி இருந்தால், இரண்டு ஆலயங்களுக்கும் நல்லது என்ற முடிவிலே தான் அரசு இப்பொழுது இந்த ஆலோசனையை வழங்கியிருக்கிறது.

**புலவர் புலமைப்பித்தன் :** நானும் தாயரிடத்திலிருந்து மகனை எப்படிப் பிரிக்கலாம் என்ற கேள்வியைக் கேட்கலாம் என்று தான் இருந்தேன். மாண்புமிகு அமைச்சரவர்களே பதில் சொல்லி விட்டார்கள்.

[1979 மார்ச் 14

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** தாயையும், மகனையும் எதற்காகப் பிரிப்பதேன்ற கேட்டார்கள். மகன் ஏற்கெனவே தனிக் குடித்தனம் துவங்கி விட்டதால், அதனடிப்படையில் பிரிப்பதென்பது தவறானதல்ல என்று அரசு பிரிப்பதற்கு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** அந்த முடிவைத்தான் முன்பே நான் அறிவித்தேன்.

திரு. ம. சங்கரலிங்கம் : தமிழ்நாட்டிலுள்ள அனைத்துத் திருக்கோயில்களிலுமுள்ள தெய்வங்களை 'அருள்மிகு' என்ற அடைமொழியோடுதான் அழைக்கிறார்கள். இந்த வினாவிற்கான விடையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லும்போதுகூட பல திருக்கோயில்களின் நிதிநிலைமை அவற்றின் நிர்வாகத்திற்கே போதாத நிலையில்தான் இருக்கிறதென்று குறிப்பிட்டார்கள். அந்த அளவுக்கு சில ஏழைத் தெய்வங்களும் தமிழ்நாட்டில் இருக்கின்றன. இப்படி எல்லாக் கோயில்களிலும் உள்ள தெய்வங்களுக்கு 'அருள்' இருந்தாலும், பணம் இருக்கிற ஆண்டவர்கள் சிலராகத்தான் இருப்பதால், பணமிருக்கும் தெய்வங்களைப்பற்றி குறிப்பிடும்போது, 'அருளும் பணமும் மிகு' என்ற அடைமொழியோடு அரசு குறிப்பிட முன்வருமா ?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** அருள் இருக்கிற இடத்திலெல்லாம் செல்வமும் இருக்கத்தான் வேண்டும். ஆனால் என்ன காரணத்தினாலோ பல கோயில்களில் அருள் மாத்திரம்தான் இருக்கிறது. அருளிருக்கிற இடங்களில் செல்வமும் இருந்தால், சேர்த்துச் சொல்லலாம். என்றாலும் இது அவரவர்களுடைய விருப்பத்தைப் பொறுத்தது.

## *Encroachment upon Temple Land.*

* 182 Q.—THIRU V. THANGAPANDIAN: Will the Hon. the Minister for Information and Hindu Religious Endowments be pleased to state:

(*a*) whether there is any land belonging to Arulmigu Ramanathaswamy Temple, Rameswaram at T. Arunachalapuram in Vilathikuam Taluk of Tirunelveli District;

(*b*) if so, whether the temple is getting any income from that land.

(*c*) whether any private individuals have encroached upon that land; and

(*d*) if so, the action taken to evict them from that land?



1979 மார்ச் 14]

## கோயில் நிலம் ஆக்கிரமிப்பு

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருநெல்வேலி மாவட்டம், விளாத்திகுளம் வட்டம், T. அருணாசலபுரத்தில், இராமேஸ்வரத்திலுள்ள அருள்மிகு இராமநாத சுவாமி கோயிலுக்குச் சொந்தமான நிலம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அந்த நிலத்தின் மூலம் கோயிலுக்கு வருமானம் வருகிறதா ?

(உ) தனியார்கள் யாரேனும் அந்த நிலத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளார்களா ?

(எ) ஆம் எனில், அவர்களை நிலத்திலிருந்து அப்புறப்படுத்த எடுத்துக் கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் என்ன ?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** (அ) & (இ) 1370 ஆம் பசலியில் அறிமுகப்படுத்தப்பட்ட செட்டில்மெண்டில், இராமேஸ்வரத்திலுள்ள அருள்மிகு இராமநாதஸ்வாமி கோயிலுக்கு திருநெல்வேலி மாவட்டத்தில் விளாத்திகுளத்தைச் சேர்ந்த T. அருணாசலபுரத்தில் உள்ள ஏக்கர் 30.97 நிலத்திற்கு மேல்வாரம் உரிமை மட்டும் தான் உண்டு என்று நிர்மானித்து, தேவஸ்தானத்திற்கு நஷ்டஈடாக ஆண்டு தோறும் ரூ. 750.82 தஸ்திக் அலவன்ஸாக அளிக்கப்பட்டு வருகிறது. கோவிலின் இருவார உரிமை கோரி தேவஸ்தானம் கொடுத்த மனு செட்டில்மெண்டில் நிராகரிக்கப்பட்டது. ஜமீன் ஒழிப்புச் சட்டத்திற்கு அப்பாற்பட்டு கோவில் பெயருக்கே இந்நிலங்களை பட்டா செய்து கொடுக்க வேண்டுமென்ற தேவஸ்தானத்தின் கோரிக்கை மாவட்ட ரெவின்யூ அதிகாரிகள் முன்னிலையில் நிலுவையில் உள்ளது.

(உ) இந்நிலத்தின் 1385, 1386 & 1387 பசலிகளில் தனியார் பலர் ஆக்கிரமனம் செய்துள்ளனர்.

(எ) இந்த ஆக்கிரமனங்களை வெளியேற்றுவது பற்றி, இந்நிலங்களை கோவில் பெயருக்கு ஜமீன் ஒழிப்பு சட்டத்திற்கு அப்பாற்பட்டு பட்டா செய்து கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையின் மீது முடிவு எடுத்த பின்னர் தான் பரிசீலனை செய்து முடிவு செய்யப்படும்.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** இராமேஸ்வரத்திலுள்ள அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலத்தை T. அருணாசலபுரத்திலுள்ள, ஏற்கெனவே நிலம்படைத்த சிலர் ஆக்கிரமிப்பு செய்து கொண்

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :** வருவாய் குறைவாக உள்ள கோயில்களிலுள்ள ஏழை தெய்வங்களைக் காப்பாற்ற வருவாய் அதிகமாக உள்ள கோயில்களிலுள்ள பணக்கார தெய்வங்கள், நிர்வாகங்கள் முன்வருமா? (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** இந்தக் கோயிலைப் பிரிக்கிற பிரச்சினையைப் பொறுத்தவரையில் கூட, அந்த ஏழை தெய்வங்கள் 22 இருக்கின்றன. இந்தக் கோயில் நிர்வாகத்தில் 22 ஏழைக் கோயில்கள் இருக்கின்றன. இந்தப் பிரச்சினையையொட்டித் தான் இந்தக் கோயில்களைப் பிரித்தால் பல்வேறு சங்கடங்கள் வருமோ என்று அஞ்சுகிறார்கள். அதையொட்டி 15 கோயிலை அன்னையின் பொறுப்பிலும் 7 கோயிலை பிள்ளையின் பொறுப்பிலும் விடலாமா என்று துறை ஆராய்ந்து கொண்டிருக்கிறது. ஆகவே ஏழைக் கோயில்களை பணக்காரக் கோயில்கள் பராமரித்து வருகிற, பாதுகாத்து வருகிற முறை தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

**திரு. க. இராமமூர்த்தி :** மதுரையைப் போலவே திருச்சியில் ஸ்ரீரங்கம் ஆலயமும், சமயபுரம் ஆலயமும் ஒரே நிர்வாகத்தில் இயங்கிக்கொண்டிருக்கின்றன. நிர்வாக சவுகரியத்திற்காகவும், கோயில் பராமரிப்பு, பாதுகாப்பு சவுகரியத்திற்காகவும் இரு வேறு அறங்காவல் அமைப்புகளை ஏற்படுத்துவதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்வி மூலக் கேள்விக்குத் தொடர்பில்லையென்றாலும், விவரம் இருக்கிற காரணத்தால், சொல்லுகிறேன். மதுரை அருள்மிகு மீனாட்சி அம்மன் கோயில் நிர்வாகத்தையும் திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமி கோயில் நிர்வாகத்தையும் பிரிப்பது என்பது அரசினுடைய ஆணைக்கு உட்பட்ட விவகாரமாக இருக்கிறது. ஆனால் ஸ்ரீரங்க ஆலயத்திலிருந்து சமயபுரம் ஆலயத்தைப் பிரிப்பது என்பது நம்முடைய அதிகாரத்தையும் மீறி, அது நீதி மன்றத்தினுடைய ஆணைக்கு உட்பட்டதாக இருக்கிறது. அப்படிப் பட்ட ஒரு உத்தரவு நீதிமன்றத்தின் மூலம் பிறப்பிக்கப்பட்டு, இப்படித்தான் இது அமைக்கப்பட வேண்டுமென்று நீதிமன்றம் உத்தரவில் சொல்லியிருக்கிறது. இப்பொழுது மதுரை அருள்மிகு மீனாட்சி அம்மன் ஆலயமும், திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமி ஆலயம் தன்னிறைவு பெற்று வருவது போல, இந்த ஆலயங்களும் இப்பொழுது தன்னிறைவு பெற்று வருவதால், இந்த வேண்டுகோளை மனதிலே எண்ணி இரண்டு ஆலயங்களையும் பிரிக்கலாம்



என்று முடிவு செய்து, நீதிமன்றத்திற்கு மனுப்போட்டு அவர்களுடைய அனுமதியைப் பெறுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்ற ஆலோசனைகள் அற நிலையத்துறைக்கு வழங்கப்பட்டிருக்கின்றன.

**திரு. ஆ. இராவிடமணி :** ஆறு படை கோயில்களில் ஒன்றாக, சிறப்பிற்குரிய ஒன்றாக, சிறப்புக்குரிய இடமாக திருப்பரங்குன்றம் இருக்கிற காரணத்தால், அதைத் தனியே கவனித்து ஏற்பாடுகளைச் செய்வதற்காக திருப்பரங்குன்றத்தைத் தனியாக நிர்வகிக்க தனி நிர்வாகம் அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மூலக் கேள்வியே அது தான்.

**திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் :** மாண்புமிகு செய்தி அறிநிலையத் துறை அமைச்சரவர்கள் மீனாட்சியினுடைய மகன் சுப்பிரமணியர் என்று சொன்னார்கள். சாஸ்திரங்கள் எல்லாம் பார்வதியினுடைய மகன் சுப்பிரமணியர் என்று தான் சொல்லியிருக்கின்றன. (சிரிப்பு). இரண்டாவது, சொக்கநாதருடைய பெண்டாட்டி மீனாட்சி என்று சரித்திரம் கூறுகிறது. (சிரிப்பு)

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** யாருக்கு யார் பிள்ளை என்பது கேள்வி அல்ல. யாருக்கு வருவாய் அதிகமாக இருக்கிறது என்பது தான் கேள்வி.

**திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் :** வருவாய் இருக்கிறது என்பது பற்றிப் பேச்சல்ல. மாண்புமிகு அமைச்சரவர்கள் விக்னேஸ்வரரும் சுப்பிரமணியரும் இரண்டு பேரும் அண்ணன் தம்பி என்று சொல்லுகிறார்கள். ஆக, இரண்டு பிள்ளைகளும் மீனாட்சியினுடைய பிள்ளைகளா அல்லது பார்வதியினுடைய பிள்ளைகளா என்று அறிய விரும்புகிறேன்.

(பிற்பகல் 4.20)

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** நல்ல ஆராய்ச்சி நடத்தித் தெரிந்து கொள்ள வேண்டிய வினாவை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பியுள்ளார்கள். தக்கவர்களிடம் கேட்டு பதிலளிக்கலாம் என்றாலும் பொதுவாக பெரியவர்கள் சொல்லும்போது, காசியிலே விசாலாட்சி, திருவாரூரில் நீலாயதாட்சி, காஞ்சியிலே காமாட்சி, மதுரையிலே மீனாட்சி என்று சொல்லி, இவர்களெல்லோரும் ஒரே அன்னையைக் குறிப்பிடும் பெயர்கள் என்று சொல்லியிருப்பதால், அதனடிப்படையில்தான் நான் என்னுடைய கருத்தைச் சொன்னேன் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

டிருக்கிறார்கள். எனவே அத்தகைய நிலச்சுவான்தாரர்களை அந்தத் திருக்கோயில் நிலத்திலிருந்து அப்புறப்படுத்தி, மீண்டும் அந்த நிலத்தைக் கோயிலுக்குச் சேர்த்திடவோ அல்லது நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு அளித்து, அந்நிலத்திலிருந்து வரும் வருவாயைத் திருக்கோயிலுக்குச் சேர்க்கத் தக்கவோ வேண்டிய நடவடிக்கையை அரசு மேற்கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** இந்தப் பிரச்சினை ஒரு சிக்கல் நிறைந்த பிரச்சினையாக பல ஆண்டுகளாகவே நீண்ட ஆய்வுக்கு உட்படுத்தப் பட்டது. பொதுவாகவே தமிழ் நாட்டிலுள்ள திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்கள் இப்படித்தான் பலராலும் அபகரிக்கப்பட்டிருக் கின்றன. அவைகளில் இதுவுமொன்று. இந்தக் கோயிலுக்குச் சொந்தமான நிலத்தைப் பலரும் ஆக்கிரமிப்பு செய்து கொண்டிருக்கிறார்கள். அப்படி ஆக்கிரமித்தவர்களில் சிலர் ஏழைகள் என்று குறிப்பிடப்பட்டு அவர்களே அந்த நிலத்தை வைத்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் உண்மையில் அப்படிப்பட்ட ஏழைகளிடம் அந்த நிலம் இல்லை என்று தெரிகிறது. ஆகவேதான் சட்டபூர்வமான நடவடிக்கை எடுத்து, அந்த நிலம் கோயிலுக்குச் சொந்தமான நிலம் என்பதை உறுதிசெய்தாக வேண்டுமென்ற எண்ணத்தில் அரசு முயற்சியை எடுத்துக் கொண்டிருக்கிறது. கோயிலுக்குச் சொந்தமென்ற அனுமதியை, உறுதியைப் பெற்ற பிறகு, உறுப்பினர் அவர்களின் யோசனைகளையும் பரிசீலித்து தக்க நடவடிக்கையை மேற்கொள்ளலாம்.

## *Agricultural Instructors.*

* 183 *Q.*—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state:

(*a*) whether it is a fact that Teachers under Bifurcated courses with B. T. Qualifications are eligible to be promoted as Headmasters; and

(*b*) if so, the reasons for not extending this privilege to Agricultural Instructors with B. T. Qualifications also?

### வேளாண்மை பயிற்றுநர்கள்

திரு. பி. ஆர். தாமஸ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இரு கூறாக்கப்பட்ட பாடமுறையின்கீழ் பி.டி. தகுதிகளைப பெற்றுள்ள ஆசிரியர்கள், தலைமை ஆசிரியர்களாக பதவி உயர்வு பெறுவதற்கு தகுதி உடையவர்கள் என்பது உண்மையா ?



(இ) ஆம் எனில் பி.டி. தகுதிகளைப் பெற்றுள்ள வேளாண்மை பயிற்றுநர்களுக்கும், இந்தச் சலுகை நீட்டிக்கப்படாததற்கான காரணங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

**திரு. பி. ஆர். தாமஸ் :** விவசாயத் தொழிற் பாடத்தைக் கற்றுள்ள ஆசிரியர்கள் பிறகு தொடர்ந்து பி.ஏ., மற்றும் பி.டி. பட்டத்தையும் பெற்று கடந்த 15, 20 ஆண்டுகளாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அத்தகைய ஆசிரியர்களுக்குத் தலைமையாசிரியர் பதவி கிடைப்பதிலே முன் னுரிமை இருக்கவேண்டும். அந்த அடிப்படையில் பட்டம்பெற்ற தகுதியுள்ள விவசாயத் தொழிலாசிரியர்களுக்கும் தலைமையாசிரியர் பதவி பெறும் வாய்ப்பை வழங்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தற்போது அமைந்துள்ள விதி களின்படி, பட்டதாரி ஆசிரியர்கள், பள்ளித் துணை ஆய்வாளர்கள், ஒருங் கிணைந்த பணியமைப்பில் பணியாற்றுகிறவர்களுக்கு மட்டும், தமிழ் நாடு கல்வி சார்நிலைப் பணிகளின்கீழ் தலைமையாசிரியர்களாகப் பதவி உயர்வு அளிக்க முடியும். இருமுனைக் கல்விப் பாடத்திட்டத்தின்கீழ் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு தலைமையாசிரியர் பதவி அளிக்க தற்போதுள்ள விதிமுறை யின்கீழ் இடமில்லை.

**திரு. பி. ஆர். தாமஸ் :** இரு கூறாக்கப்பட்ட பாடமுறையின்கீழ் விவசாயப் பாடம் எடுத்து ஆசிரியர்களாகப் பணியாற்றிக் கொண்டிருப்பவர்கள், பி.ஏ., பி.டி. ஆகிய பட்டங்களையும் பெற்றிருக்கிறார்கள். விதிமுறைகளின்படி பி.டி. பட்டம் பெற்ற 5 ஆண்டு அனுபவமுள்ள ஆசிரியர்கள் தலைமை யாசிரியர்களாகப் பதவி உயர்வு பெறலாம். அந்த அடிப்படையில் பி.ஏ., பி.டி., பட்டம் பெற்று, விவசாயப் பாடம் போதிக்கும் ஆசிரியர்களும், தலைமை ஆசிரியர்களாகப் பதவி உயர்வு பெறுவதற்குத் தகுதி பெறுகிறார்கள். எனவே அந்த முறையில் அத்தகைய விவசாயப் பாடம் போதிக்கும் ஆசிரியர் களுக்கும் தலைமையாசிரியர் பதவி உயர்வு அளிக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அது குறித்துப் பரிசீலிக்கலாம்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** அப்படிப்பட்ட ஆசிரியர்களுக்குத் தலைமை ஆசிரியர் பதவி உயர்வு அளிக்கப்படுகிற தகுதி இருப்பதாக அரசு கருதினால், எவ்வளவு விரைவில் அவர்களைத் தலைமையாசிரியர்களாக நியமிக்க முன்வரும் என்று அறிவிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அது பரிசீலனைக்குப் பிறகு தான் தெரியும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தமிழாசிரியர்களுக்குத் தலைமையாசிரியர்களாகப் பதவி உயர்வு தரப்பட வேண்டுமென்ற வேண்டுகோள் நீண்ட காலமாக இருந்து வருகிறது. அவர்கள் பி.எட். பட்டம் பெற்றிருக்க வேண்டுமென்பதற்குப் பதிலாக தமிழாசிரியர்கள் அக்கவுண்ட் டெஸ்ட் தேர்வில் வெற்றி பெற்றிருந்தாலே, அவர்களைத் தலைமையாசிரியர்களாக நியமிக்கலாம் என்று அரசு ஆணையிட முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இதுகுறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. க. அறிவழகன் : வேளாண்மைப் பயிற்றுநர்கள் பி.டி. கல்வித் தகுதி பெறுவதைப் போலவே தொழிற் கல்வி பெற்ற ஆசிரியர்களையும் தற்போது மேல் நிலைப் பள்ளிகளில் ஆசிரியர்களாக நியமித்து வருகிறார்கள் எனவே தொழிற் கல்வியைக் கற்றுத் தருகிற ஆசிரியர்களும், பி.டி. கல்வித் தகுதி பெற்றிருந்தால், அவர்கள் அனைவரையும் தலைமையாசிரியர்களாக நியமிக்கும் திட்டம் அரசிடம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அது குறித்துப் பரிசீலிக்கலாம்.

திரு. செ. முத்துசாமி : விவசாயக் கல்வியைப் பொறுத்தவரையில், பி.எஸ்ஸி. (அக்ரி.) படித்தவர்கள் சில பள்ளிகளில் ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் உயர்ந்த கல்வித் தகுதி படைத்தவர்கள் என்பதால் அவர்களைத் தலைமையாசிரியர்களாக நியமிக்கும் செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பி.எஸ்ஸி (அக்ரி.) படித்தவர்களானாலும் அல்லது வேறு பட்டம் பெற்றவர்களானாலும், பி.டி. கல்வித் தகுதி பெற்றிருந்தால், அப்படிப்பட்டவர்களுக்குத் தலைமையாசிரியர் பதவி அளிக்கப்படுமா என்பதுதான் கேள்வி. பி.டி. பட்டமே பெறாதவர்களைத் தலைமையாசிரியர்களாக நியமிப்பதுபற்றிப் பரிசீலிப்பதற்கு இடமேயில்லை.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மதுரை மாவட்டத்தில் சோழவந்தான் அரசு உயர்நிலைப்பள்ளியில் பணியாற்றும் பி.டி. பட்டம் பெற்ற விவசாய ஆசிரியர் ஒருவர் பணிமூப்பின் அடிப்படையில் தலைமையாசிரியர் பதவி





உயர்வு பெற தகுதி பெற்றிருந்தும், அவருக்கு அந்தப் பதவி உயர்வு மறுக்கப்பட்டிருக்கிறது. அது குறித்து அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்ய முன் வருவார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இப்போது அவ்வாறு மறுக்கப்பட்டிருப்பதில், எந்தவிதமான ஆச்சர்யமுமில்லை. விதிகளில் இடமில்லாத காரணத்தால் மறுக்கப்பட்டிருக்கிறது. விதிமுறைகளை நாம் திருத்துவோமானால் பிறகு அதைப் பார்த்துக் கொள்ளலாம்.

## *Compulsory Donations in Colleges.*

* 184 *Q.*—THIRU E. S. VENKATESAN: Will the Hon. the Minister for Education be pleased to state with reference to the answer given to question No. 15 on the Floor of the Council on 31st December 1977:

(*a*) whether the Government have since framed any rules for the stoppage of payments of grants to colleges which collect compulsory donations from the students, their parents or guardians not only at the time of admissions but also at other times; and

(*b*) if so, the details thereof?

### கல்லூரிகளில் கட்டாய நன்கொடைகள்

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் 31—12—1977 ஆம் நாளன்று சட்டமன்ற மேலவையில் 15 ஆம் எண் வினாவிற்கு அளிக்கப்பட்ட விடையினையொட்டி, கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கல்லூரி மாணவர்கள், அவர்களுடைய பெற்றோர்கள் அல்லது பாதுகாவலர்கள் ஆகியோரிடமிருந்து, மாணவர்கள் சேர்க்கப்படும் காலத்தில் மட்டுமின்றி, ஏனைய காலங்களிலும் கட்டாயமாக நன்கொடைகளை வசூலிக்கும் கல்லூரிகளுக்கு வழங்கப்படும் மானியத் தொகைகளை நிறுத்திவிட, விதிகள் எவற்றையும் அரசு இப்போது இயற்றியுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் ஒழுங்காற்று சட்டம் 1976 விதி 28-ன் படி தனியார் கல்லூரிகளில் எந்தவிதமான நன்கொடையும் முன் அனுமதி இல்லாமல் வசூல் செய்யக்கூடாது. இவ்விதியை கல்லூரி நிர்வாகம் ஏதேனும் மீறுமானால், அந்த நிர்வாகத்துக்குரிய மானியத்தில் ஒரு பகுதியையோ அல்லது முழுத் தொகையையோ நிறுத்தி வைக்க அரசுக்கு அதிகாரம் உண்டு.

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :** எஸ். ஐ. ஈ.டி. கல்லூரியில் கட்டாயமாக நன்கொடை வசூலிப்பது குறித்து அரசுக்குப் புகார் வந்திருக்கிறதா? அப்படி வந்திருந்தால், அதன் மீது அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, அதுகுறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி கேட்கலாம். எனக்குத் தெரிந்த விவரப்படி, அந்தக் கல்லூரிக்கான அரசு மானியத்தை நிறுத்தி வைத்திருப்பதாக நினைக்கிறேன்.

(பிற்பகல் 4-30)

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** அரசு நிதி வசூலிக்கத் தடை செய்திருந்த போதிலும், தனியார் கல்லூரிகளும், தனியார் பள்ளிகளும், பெற்றோர்கள்—ஆசிரியர்கள் சங்கம் என்று வைத்து, கட்டிடம் கட்டுவதற்கு நிதி, விழாக்கள் நடத்துதல், சீருடை போன்ற இப்படிப்பட்ட பல்வேறு வழிகளில் அரசின் அனுமதியின்றி நிதியை வசூலித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இப்படி அனுமதியின்றி பணம் வசூலிக்கின்ற நிர்வாகங்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** பெற்றோர்கள்-ஆசிரியர்கள் சங்கம் என்ற முறையிலே வைத்து இவைகளைச் செய்தால் நாம் வரவேற்கக் கூடியதுதான். அவர்களே பள்ளியின் நலனுக்காக அவ்வாறு செய்கிறார்கள், வசூலித்துச் செலவு செய்யும் பணத்தை அவர்களே தணிக்கை செய்கிறார்கள். ஆகவே, அவைகள் எல்லாம் வரவேற்கக் கூடியவைகள்தான்.

**திரு. செ. முத்துசாமி :** பள்ளிகளில் நேரடியாக நன்கொடைகள் வசூல் செய்யாவிட்டாலும், அந்தப் பள்ளியை நடத்தக்கூடிய நிர்வாகங்கள் 'ட்ரஸ்ட்'களின் பெயரால் நன்கொடைகள் வசூலிக்கின்றார்கள். அது ஒரு வகையிலே பெற்றோர்களுக்குத் தண்டனையாக இருக்கிறது. 'ட்ரஸ்ட்' வசூலிக்காவிட்டாலும் கூட, கல்லூரியிலே சேருவதற்கு இவ்வளவு தந்தாக வேண்டும் என்று கட்டாயப்படுத்தும் நிலை இருக்கிறது. ஆகவே, இதைக் கட்டுப்படுத்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** நாம் கட்டுப்படுத்தத்தான் விரும்புகிறோம். அப்படியும் மீறி வசூல் செய்கின்ற கல்லூரிகளுக்கு நாம் அளிக்கும் மானியத்தையும் நிறுத்தத் தயாராக இருக்கிறோம். ஆனால் அப்படி நன்கொடைகள் தருகின்ற பெற்றோர்கள் நமது முன்னால் வைத்து அந்தப் புகாரை நிரூபிக்க ஒத்துழைக்கவில்லை என்பது தான் மிகப்பெரிய குறைபாடாக இருக்கிறது. அவர்கள் ஒத்துழைப்புக் கொடுத்தால், எந்தக் கல்லூரியாக இருந்தாலும், நிச்சயமாக அரசு நடவடிக்கை எடுக்கும்.

**திரு. க. அறிவழகன் :** கல்லூரிகளுக்கு வழங்கும் மானியத் தொகைகளை நிறுத்திவிட சட்டப்படி அதிகாரம் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதுவரையிலே எத்தனை கல்லூரிகளுக்கு மானியத் தொகைகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன, முழுமையாகவோ பகுதியாகவோ எத்தனை கல்லூரிகளுக்கு நிறுத்தப்பட்டிருக்கின்றன? அப்படி நிறுத்தப்படவில்லையெனில், இந்தக் கல்லூரிகள் எல்லாம் அரசுக்குத் தெரியாமல் நன்கொடைகள் வாங்கவில்லை என்று பொருளா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** வாங்குகிறார்கள் என்ற குற்றச்சாட்டு மேலவையிலேயும், பேரவையிலேயும் சொல்லப்படுகிறது. ஆனால் நாம் அதுபற்றி நடவடிக்கை எடுக்கின்றபோது, பாதிக்கப்பட்டவர்கள் 'எங்களிடத்திலே இப்படி வசூலித்தார்கள்' என்று சொல்லி நிரூபிப்பதற்குத் துணை செய்யாத காரணத்தினாலே தான், பல கல்லூரிகள் வாங்கியிருந்தாலும், தப்பித்துக்கொள்கிறார்கள். ஆகவே, நாம் விரும்புகின்ற இந்த நிலை வெற்றிபெற முடியாமல் போவதற்கு யார் காரணம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உணர்வார்கள் என்று கருதுகிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் 'பொன் விழா' கொண்டாடியதையொட்டி மாணவர்களிடமிருந்து இந்த ஆண்டு கணிசமாக நன்கொடை வசூலிக்கப்பட்டது. அதனால் மாணவர்கள் கிளர்ச்சி செய்தார்கள். இந்த நிகழ்ச்சி அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதா? அவ்வாறு நன்கொடை வசூலிப்பதற்கு அந்தப் பல்கலைக் கழக நிர்வாகம் அரசின் அனுமதியைப் பெற்றதா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்**: நடவடிக்கை நாம் எடுக்கிறோமோ, இல்லையா, "மாணவர்கள் கிளர்ச்சி" என்ற வகையிலே ஒருவிதமான நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பதைக் குறித்து மகிழ்ச்சி.

**டாக்டர் இரா. சனார்த்தனம்**: சில தனியார் கல்லூரிகள் ஏதோ தொழிலதிபர்கள் நடத்துகின்ற தொழிலைப் போல—கல்லூரியை ஒரு 'இன்டஸ்ட்ரீ' போல நடத்துகிறார்கள். அப்படிப்பட்ட கல்லூரிகளின் பட்டியல் தருவது சிறப்பாக இருக்கும். மேலும் அந்தக் கல்லூரிகள் நடத்துகின்ற விழாக்களிலும், மற்ற நிகழ்ச்சிகளிலும் அரசினைச் சேர்ந்தவர்கள் கலந்துகொள்ளக் கூடாது என்ற நிலைமையை அரசு ஏற்படுத்துமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்**: அப்படிப் பட்ட பட்டியல் எங்களிடம் இல்லை.

*Appointment of Headmasters of Higher Secondary Schools.*

* 185 *Q*.—THIRU M. SANKARALINGAM: Will the Hon. the Minister for Education be pleased to state:

(*a*) whether there is any proposal with the Government for making suitable amendment to the Rules, so as to provide for Teachers working in Technical Wing with the prescribed qualifications, to secure promotion as Headmaster or Assistant Headmaster, on the same lines as the Rules which provide for Teachers with academic qualifications for appointment as Headmasters of Higher Secondary Schools; and

(*b*) if so, the stage at which the matter now stands?

**உயர்இடைநிலைப் பள்ளிகளில் தலைமை ஆசிரியர் நியமனம்**

**திரு. ம. சங்கரலிங்கம்**: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) உயர்இடைநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் நியமனம் செய்வதில், தற்போது கல்விப்பிரிவு தகுதியுடையவர்களுக்கு வழங்க விதிகள் செய்யப்பட்டதுபோல், தொழிற் பிரிவில் பணியாற்றுகிறவர்களில் உரிய கல்வித் தகுதி பெற்றவர்களுக்குத் தலைமை ஆசிரியர் அல்லது துணைத் தலைமை ஆசிரியர் பதவி வழங்கும் வகையில், விதிகளைத் திருத்தும் செயற் குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது தற்பொழுது எந்நிலையில் உள்ளது ?





**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்**: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கிடமில்லை.

**திரு. ம. சங்கரலிங்கம்**: தலைவர் அவர்களே, மேல்நிலைப் பள்ளிகளில் தலைமையாசிரியர்களாக முதுகலைப் பட்டம் பெற்றவர்கள் இருக்க வேண்டுமென்று விதி வைத்திருக்கிறோம். மேல்நிலைப் பள்ளிகளில் இப்போது தொழில் படித்து வந்து மிகச் சிறப்பாக சொல்லிக் கொடுக்கும் நிலையும் இருக்கிறது. எனவே, தொழில் பிரிவில் உள்ள, தகுதி பெற்ற பி.டி. பட்டம் பெற்றவர்களை துணைத் தலைமையாசிரியர்களாக நியமிக்கின்ற செயல் திட்டம் இல்லாமல் இருந்தால், மேல்நிலை வகுப்புகள் தொழில் கல்வியை முக்கியமாகக் கொண்டிருக்கின்றன என்ற கூற்றுக்கே பொருள் இல்லாமல் போகும். ஆகவே, அரசு இதைப் பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்**: இப்போது தொழிற் கல்வி பயிற்றுவிக்கின்ற ஆசிரியர்கள் பெரும்பாலும் சாதாரண பட்டம் படித்தவர்கள் தான். மேல்நிலைப் பள்ளிகளிலே ஆசிரியர்களாக வருவதற்கு முதுகலைப் பட்டம் வேண்டும் என்று நாம் விரும்புகிறோம். அந்த அடிப்படையிலே தான் இந்தப் பிரச்சினை பரிசீலிக்கப்படும்.

**திரு. ம. சங்கரலிங்கம்**: திருநெல்வேலி மாவட்டம் சத்திரம் உயர் நிலைப் பள்ளியில் விவசாயக் கல்வி சிறப்புப் பாடமாக அல்லது தொழில் பாடமாக மேல்நிலைப் படிப்புக்கு வைக்கப்பட்டிருக்கிறது. அங்கே இருக்கிற ஆசிரியர் பி.எஸ்ஸி. (விவசாயம்), பிடி. படித்திருக்கிறார்கள். இப்போது பி.ஏ., பி.டி. வைத்துக்கொண்டு யார் யார் தலைமையாசிரியர்களாக இருக்கிறார்களோ அவர்களை அப்படியே வைத்திருக்கிறோம். துணைத் தலைமையாசிரியர்கள் சம்பளம் பி.டி. ஆசிரியர்களுக்கு இருக்கும் சம்பளத்தைப்போல இருப்பதால், முதுகலைப் பட்டம் பெற்ற யாரும் வரமாட்டார்கள். எனவே, தொழிற் பட்டம் பெற்ற பி.டி. ஆசிரியர்கள் இருந்து, அவர்களுக்கு குறிப்பிட்ட கால வேலை அனுபவமும் இருந்தால், எந்த மேல்நிலைப் பள்ளிகளில் அந்தப் பாடம் சிறப்புப் பாடமாக, தொழிற் பிரிவு பாடமாக இருக்கிறதோ, அந்தப் பாடத்தில் இருப்பவர்களைத் துணைத் தலைமையாசிரியராக நியமிப்பதன் மூலம் அந்தப் பாடங்களைச் சிறப்பாக நடத்த முடியும். ஆகவே, இதற்கான வழிவகைகள் இதுவரை இல்லாவிட்டாலும், இதுபற்றி மீண்டும் அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

*Voluntary Retirement Facility.*

* 186 Q.—THIRU S. MUTHUSWAMY: Will the Hon. the Minister for Education be pleased to state:

(*a*) whether there is any facility for the teachers to go on voluntary retirement with full pension benefits; and

(*b*) if so, the number of years they have to serve for the same?

*விரும்பி ஓய்வு பெறும் வசதி*

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஆசிரியர்களாக பணிபுரிபவர்கள் முழு ஓய்வு ஊதியத்துடன் விரும்பி ஓய்வு பெற வசதி உள்ளதா?

(இ) ஆம் எனில், அதற்கு எத்தனை ஆண்டுகாலம் பணியாற்ற வேண்டும்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு அரசுப் பணியல்லாத ஆசிரியர்கள் ஓய்வூதிய விதிகள், 1958 (The Tamil Nadu Non-Government Teachers Pension Rules 1958) விதி 12 (எ) (1)-ன்படி ஆசிரியர்கள் முழு ஓய்வூதியத்துடன் விரும்பி ஓய்வு பெற 30 ஆண்டுகள் பணியாற்றியிருக்க வேண்டும்.

திரு. செ. முத்துசாமி: சமீபத்தில் 20 ஆண்டுகளில் ஓய்வு பெறுவதற்கு வசதியாக அரசு ஓர் உத்தரவிட்டிருக்கிறது. அரசுத் துறையிலே பணியாற்றுபவர்களுக்கு இருக்கக்கூடிய சலுகைகள் ஆசிரியர்களுக்கும் பொருந்தும் என்ற தத்துவம் ஏற்கெனவே தமிழ் நாடு அரசால் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. அப்படி இருக்கும்போது, ஆசிரியர்களுக்கு மட்டும் ஓய்வு பெறுவதற்கு 30 ஆண்டுகள் என்று வைத்திருப்பது நியாயம் தானா? இப்போது அரசு ஊழியர்களுக்கு 20 ஆண்டுகள் என்று வைத்திருப்பதைப் போல ஆசிரியர்களுக்கும் 20 ஆண்டுகள் என்று வைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படுகின்ற சலுகைகளை ஆசிரியர்களுக்கும் தருவதற்கான கருத்து பரிசீலனையில் இருக்கிறது.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** பி.ஏ., பி.டி., பி.எஸ்ஸி., பி.டி. பட்டம் பெற்றவர்களுக்கு என்ன வாய்ப்புக்கள் இருக்கின்றனவோ அந்த வாய்ப்புக்கள் இவர்களுக்குத் தரப்படலாமா என்பது குறித்து அரசு பரிசீலிக்கும்.

**திரு. பி. ஆர். தாமஸ்:** மேல் நிலைப் பள்ளிகளில் துணைத் தலைமையாசிரியர்களாக நியமிக்கப்படுவதற்கு பட்டப்படிப்பு மட்டும் இருந்தால் போதுமா? அல்லது அவர்களுக்கு மேல் பட்டப்படிப்புத் தகுதி வேண்டுமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மேல்நிலைப் பள்ளி என்று வருகின்றபோது, அவர்களுக்கு மேல் பட்டப் படிப்பு வேண்டும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மேல் பட்டப் படிப்பு படித்து இருந்தால், கல்லூரி ஆசிரியர்களைப் போலவும், மேல்நிலைப் பள்ளிகளிலே பணியாற்றுகின்ற மேல் பட்டப் படிப்புப் படித்த தலைமையாசிரியர்களுக்கு பேராசிரியர்களுக்கு அளிக்கும் ஊதியத்தையும், துணைத் தலைமையாசிரியர்களுக்கு துணைப் பேராசிரியர்களுக்கு அளிக்கும் ஊதியத்தையும் வழங்குவதற்கு அரசு ஆலோசிக்குமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அவர்களுக்கென தனி ஊதிய விகிதங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

**புலவர் புலமைப்பித்தன்:** தமிழ் சொல்லிக் கொடுக்கின்ற புலவர் பட்டம் படித்த ஆசிரியர்கள், புலவர் பட்டத்தோடு, முதுகலைப் பட்டம் பெற்றிருக்கிறார் என்றால், அவர்கள் தலைமையாசிரியர், மற்றும் துணைத் தலைமையாசிரியர், பதவிகளுக்குச் செல்ல வழிவகை செய்யப்படுமா என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தமிழ் சொல்லித் தருகின்றவர்களுக்கு—அவர்கள் மேல்நிலைப் பள்ளிகளில் தலையாசிரியர் பதவிக்கு வருவதற்கும்—எந்தவிதமான தடையும் இல்லை.

**திரு. க. அறிவழகன்:** கல்வி அமைச்சர் அவர்கள், தமிழ் சொல்லித் தருகின்ற முதுகலைப் பட்டம் பெற்ற ஆசிரியர்கள், தலைமையாசிரியர்களாக வருவதிலே தடைகள் எதும் இல்லை என்று சொன்னார்கள். அவர்கள், பி.எட்., பட்டம் பெறாமலேயே தலைமையாசிரியர்களாக ஆகும் தகுதியைப் பெறுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அதற்கென்று விதிகளை நாம் உருவாக்கும்போது, இதைப்பற்றிப் பரிசீலிக்கலாம்

திரு. ம. சங்கரலிங்கம் : மத்திய அரசு 20 ஆண்டுகளில் முழு ஓய்வூதியம் பெறுவதற்கு வழி வகுத்திருக்கிறது. மாநில அரசும் அரசு ஊழியர்களுக்கு 20 ஆண்டுகளில் ஓய்வூதியம் பெறுவதற்கு வழி வகை செய்திருக்கிறது. முழு ஓய்வூதியம் என்று சொல்லும்போது, 1/3 பங்கு. ஆசிரியர்களுக்கு முழு ஓய்வூதியம் பெறுவதற்கு 30 ஆண்டுகள் வைத்திருக்கிறார்கள். அப்படி கூடுதலாக இருந்தால், சம்பளமும் கூடுதலாகப் பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, இவ்வாறு இருப்பினும், தற்போது தனியார் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு 20 ஆண்டு பணிக்காலம் நிரம்பியிருப்பின் ஓய்வூதியம் பெற்றுக்கொள்ளலாம் என்று வைப்பதற்கு அரசு பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : 20 ஆண்டுகள் என்ற அந்தக் கருத்தும் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஒரு ஆசிரியர் 15 ஆண்டுகளில் அல்லது குறிப்பிட்ட சில ஆண்டுகளில் ஓய்வு பெற விரும்பி—தானாக விரும்பி—ஓய்வு பெற முன்வந்தால், அப்போதே அவர் கையிலே ஏதாவது ரொக்கமாக ஒரு தொகையை அளித்து, அவர் ஓய்வு பெற்றதனால் அவருக்குப் பென்ஷனுக்குள்ள தகுதியும் அளித்து, அவர் ஓய்வு பெறுவதற்கான ஒரு வசதியைச் செய்து கொடுக்கும் யோசனை அரசின் பரிசீலனையில் இருக்கிறதா?

(பிற்பகல் 4-40)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அரசுக்கு இலாபமாக இருக்குமானால், நிச்சயமாக அதைச் செய்யலாம். அதைப்பற்றிப் பரிசீலிக்கிற நிலைமை இப்போதில்லை.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : 20 ஆண்டுகள் முடிவுற்றதும் அரசு ஊழியர்கள் ஓய்வு பெறலாம் என்கிற வகையில் வந்திருக்கிற ஆணை ஆசிரியர்களுக்கும் பொருந்துகிற வகையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இருபது ஆண்டுகள் முடிந்த பிறகு ஓய்வு பெற வேண்டும் என்றால், 3 மாதங்களுக்கு முன்பே நோட்டீஸ் தரவேண்டுமென்று விதியிலே இருக்கிறது. 20 ஆண்டு முடிவதை எதிர்பார்த்து முன்னதாகவே மூன்று மாத நோட்டீசைத் தந்தால், அதை அதிகாரிகள் ஏற்றுக் கொள்வதில்லை. அதை ஏற்றுக் கொள்ளுகிற வகையில் விதியைத் திருத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அது குறித்துப் பரிசீலிக்கிறோம்.



திரு. பி. ஆர். தாமஸ் : 58 ஆண்டுகள் முடிந்தவுடன் ஓய்வு பெறலாம் என்று ஏற்கெனவே சட்டம் இருக்கிறது. இருந்தாலும் கல்வியாண்டு முழுவதும், இறுதி மாதம் வரை வேலை பார்க்கலாம் என்று விதி இருந்தாலும், சில தனியார் நிறுவனங்கள் சரியாக 58-வது ஆண்டு நிறைவு செய்கிற அதே நாளில் ஓய்வு பெற வேண்டும் என்று கட்டாயப்படுத்துகிற நிலைமை இருக்கிறது. அதைத் தடை செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அப்படிப்பட்ட புகார் வருமானால் அரசு உரிய நடவடிக்கையை எடுக்கும்.

## *Government Erskine Hospital, Madurai.*

* 187 *Q.*—THIRU P. R. THAMAS: (on behalf of THIRU D. SANTOSAM) Will the Hon. the Minister for Health be pleased to state:

(*a*) whether there was any proposal to start another Government Hospital in the Southern part of Madurai to relieve the unmanageable over-crowding in the Government Erskine Hospital;

(*b*) if so, the details thereof; and

(*c*) the stage at which the matter now stands?

## மதுரை அரசு எர்ஸ்கின் மருத்துவமனை.

திரு. பி. ஆர். தாமஸ் (திரு. டி. சந்தோஷம் சார்பில்) : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசு எர்ஸ்கின் மருத்துவமனையில் கட்டுப்படுத்த இயலாத அளவுக்கு அதிகமான நோயாளிகள் கூட்டம் இருப்பதைக் குறைக்க, மதுரை தென்பகுதியில் மற்றொரு அரசு மருத்துவமனை தொடங்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

(உ) அது தற்போது எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் : (அ) இல்லை.

(இ) & (உ) இவ்வினாக்களுக்கு இடமில்லை.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** மதுரை மாநகரில் அமைந்திருக்கிற எர்ஸ்கின் மருத்துவ மனையில் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே போகிற நிலை இருக்கிறது. மதுரை, இராமநாதபுரம் மாவட்டத்திற்கும் தலைமையிடமாக இருப்பதால், உள்ளிருப்பு மற்றும் புற நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரிப்பதால், இரண்டு மருத்துவர்கள் அங்கே வேண்டுமென்ற கோரிக்கை இருக்கிறது. அதை நிறைவேற்ற செயற்குறிப்பு இருக்கிறதா? அப்படியில்லையென்றால், அப்படிப்பட்ட செயற்குறிப்பை உருவாக்க அரசு தயாராக இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் :** மதுரை எர்ஸ்கின் மருத்துவ மனையில் இப்போது 1394 படுக்கைகள் உள்ளன. அந்த மருத்துவமனையில் சராசரியாக 1563 உள்ளிருப்பு நோயாளிகளும், சுமார் 4683 புற நோயாளிகளும் சிகிச்சை பெறுகிறார்கள். நாளுக்கு நாள் உள்ளிருப்பு நோயாளிகளின் எண்ணிக்கை உயர்ந்து கொண்டே வருவதால், மருத்துவ மனையில் போதிய இடம் இல்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்து அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதை சமாளிக்கத்தான் பாலரங்காபுரத்தில் 1976 ஆம் ஆண்டு கட்டப்பட்ட புதிய மருத்துவ மனை, இன்றைக்குப் பல சிறப்புப் பிரிவுகளோடு இயங்கிக் கொண்டிருக்கிறது. மேலும் நெருக்கடி ஏற்படுமானால், அதைப் பற்றிப் பரிசீலிக்க அரசு தயாராக இருக்கிறது.

**திரு. பி. ஆர். தாமஸ் :** ஏற்கெனவே உள்ள எர்ஸ்கின் மருத்துவ மனையை மேலும் விரிவுபடுத்த போதுமான இட வசதி இல்லை. எனவே மதுரையில் உள்ள ஆற்றுக்குத் தென்புறத்திலே ஏராளமான இடம் இருக்கிறது. திருப்பரங்குன்றத்திற்கும், மதுரைக்கும் இடையிலே உள்ள இடத்தில் ஒரு மருத்துவ மனையைக் கட்டினால், அதனால் அங்குள்ள மக்களுக்குப் பயன்படும். ஆகவே இதை அரசு பரிசீலனை செய்யுமா?

**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் :** தற்போது அந்தத் திட்டம் பரிசீலனையில் இல்லை.

**திரு. ஆ. திராவிடமணி :** மதுரையின் தென்பகுதியில் உள்ள ஜீவா நகர், சுப்பிரமணியபுரம், ஜெய்ஹிந்த் புரம் ஆகிய பகுதிகள் தொழிலாளர்கள் நிறைந்த பகுதியாக இருக்கிறது. அங்கு பெரிய மருத்துவமனை இல்லாததால், அவர்கள் ஏறத்தாழ 4 மைல் தொலைவில் உள்ள கிழக்கு பாலரங்காபுரம் மருத்துவமனைக்குச் செல்ல வேண்டியவர்களாக இருக்கிறார்கள். ஆகவே அங்குள்ள சாதாரண மக்களுக்காகவும், தொழிலாளர்களுக்காகவும் ஒரு மருத்துவமனையை அமைக்க அரசு பரிசீலிக்குமா?





**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் :** மதுரையில் புதிய மருத்துவ மனை கட்டுகிற திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. க. இராமமூர்த்தி :** பாலரங்காபுரம் மருத்துவமனை 1976-லிருந்து இயங்கி வருவதால், அதற்குப் பிறகு எர்ஸ்கின் மருத்துவ மனையில் வருகிற புற நோயாளிகளின் எண்ணிக்கை உயர்ந்து வருகிறதா? அல்லது குறைந்து வருகிறதா? உயர்ந்து வருகிறதென்றால், அதைக் குறைக்க வேறு என்ன நடவடிக்கைகளை அரசு எடுக்கவிருக்கிறது?

**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் :** பாலரங்காபுரத்தில் உள்ள மருத்துவ மனையில் சிகிச்சைகளைத் துவங்கியதற்குப் பின்னால், எர்ஸ்கின் மருத்துவமனையில் புற நோயாளிகளின் எண்ணிக்கை குறைந்திருக்கிறது.

**திரு. ப. சங்கரலிங்கம் :** எர்ஸ்கின் மருத்துவமனை முன்னால் மதுரை-இராமநாதபுரம் தலைமை மருத்துவமனையாகச் செயல்பட்டது. அண்மையில் அது மருத்துவக் கல்லூரியுடன் இணைக்கப்பட்ட பிறகு, அதனுடைய அமைப்பு மாறியிருப்பதால், அங்கே இடம் போதாத நிலை இருப்பதை அறிந்து, அதை விரிவுபடுத்த அரசு திட்டம் வைத்திருக்கிறதா? ஆஸ்டின் பட்டி மருத்துவமனையில் உள்ள காச நோய் படுக்கை எண்ணிக்கையை அதிகப்படுத்தும் கருத்து அரசுக்கு இருக்கிறதா? மதுரைப் பல்கலைக் கழகத்தில் புதியதாகக் கட்டப்பட்ட புதிய மருத்துவ மனை சிறப்பாகச் செயல்படாமலிருப்பதால், அதையும் இந்த மருத்துவ மனையோடு இணைத்துச் செயல்படுத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் :** ஆஸ்டின்பட்டியில் இருக்கிற மருத்துவ மனை முழுக்க முழுக்க காச நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்குச் சிகிச்சையளிப்பதற்காகக் கட்டப்பட்ட மருத்துவ மனையாகும். முன்பொரு காலத்திலே காச நோயால் பாதிக்கப்பட்டால், அவர்களைப் பிரித்து பாதுகாப்பாக வைக்க வேண்டும் என்றும், அவர்கள் வீட்டில் இருக்கத் தகுதியற்றவர்கள் என்றும் கருதப்பட்டது. எனவே அவர்களுக்கு அத்தகைய காற்றுப் போக்கான மேடான பகுதியில் மருத்துவ மனை இருக்க வேண்டும் என்றுதான் அங்கே வைத்திருந்தார்கள். இன்றைக்கு மருத்துவத் துறையின் ஆய்வுக்குப் பின்னால், காச வியாதியால் பாதிக்கப்பட்டவர்களைப் பிரித்து வைக்க வேண்டிய அவசியமில்லை, அவர்கள் வீட்டிலிருந்து கொண்டே நோ to say யாளர்களை உண்டாலே வியாதிகள் தீரும், பிரித்து தனிப்பட்ட undergoing வைத்து சிகிச்சை செய்வதைவிட வீட்டிலிருந்தே சிகிச்சை செய்rain from

சீக்கிரமாக குணம் அடைகிறது என்று கண்டுபிடித்திருக்கிற காரணத்தால், அந்த மருத்துவமனையை விரிவுபடுத்தத் தேவையில்லை. மதுரையிலே மருத்துவ மனையும், மருத்துவக் கல்லூரியும் தனித்தனி இடங்களில் இயங்குகின்றன. புதிதாகக் கட்டப்பட்ட அந்தப் பிரிவு சரியாக இயங்கவில்லை என்றால், தனிக் கேள்வி போட்டால், விரிவாக விளக்கம் அளிக்க முடியும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

டாக்டர் இரா. சனார்த்தனம்: எர்ஸ்கின் மருத்துமனையில் கூட்டம் அதிகமாக வருவதற்குக் காரணம், இராமநாதபுரத்தில் போதிய மருத்துவ மனை இல்லாததுதான். ஆகவே இராமநாதபுரத்தில் ஒரு பெரிய மருத்துவ மனையை ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் இருக்கிறதா? மதுரை எர்ஸ்கின் மருத்துவ மனையில் ஒரு ஓ.பி. சீட்டை வைத்துக்கொண்டு இங்கே, அங்கே என்று போகக் கூடிய நிலைமை இருக்கிறது. எங்கே போவது என்று தெரியாமல் மக்கள் விழிக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமையைத் தவிர்க்கும் பொருட்டு, அங்கு படித்துப் பட்டம் பெற்ற வேலை இல்லாதவர்களை நியமிக்கும் திட்டம் அரசிடம் உண்டா?

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தராசன்: இராமநாதபுரத்திலே பெரிய மருத்துவ மனை இல்லை என்ற காரணத்தால், மதுரை எர்ஸ்கின் மருத்துவ மனையில் அதிகமாக நோயாளிகள் வருகிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கூற்று ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்ட மருத்துவ மனைகள் தேவையான அளவுக்குப் பணியாற்றிக் கொண்டிருக்கின்றன. ஆனால் மருத்துவக் கல்லூரியோடு இணைக்கப்பட்ட மருத்துவமனைகளில் பல்வேறு சிறப்புப் பகுதிகள் இருக்கின்றன என்ற காரணத்தால், சில துறைகளில் தனிப்பட்ட சிகிச்சை பெற வேண்டியவர்கள் அந்த மருத்துவ மனைக்கு அனுப்பப்படுகிறார்கள். இராமநாதபுரத்தில் தலைமை மருத்துவமனை இல்லையென்று மாண்புமிகு உறுப்பினர் சொன்னது சரியல்ல. அங்கே சில சிறப்புப் பகுதிகள் கூட இயங்கிக்கொண்டிருக்கின்றன.

*Incentive Increment for Sterlisation Operations.*

* 188 *Q.*—THIRU C. R. LAKSHMIKANDHAN: Will the Hon. the Minister for Health be pleased to state:

(*a*) whether it is a fact that the Gazetted Officers who have undergone sterilisation operations are not given incentive increment;

(*b*) if so, the action taken thereon to give such concession



அறுவை சிகிச்சைக்கு ஊக்க ஊதிய உயர்வு.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்து கொண்ட அரசிதழ் பதிவுபெற்ற அதிகாரிகளுக்கு ஊக்க ஊதிய உயர்வு தரப்படுவதில்லை என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அவர்களுக்கும் இச்சலுகையை வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தராசன்: (அ) ஆம்.

(இ) அரசிதழ் பதிவு பெறாத பணியாளர்கள் பெறும் சலுகைகள் யாவும் அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகள் பெறுவதில்லை. எனவே அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகளுக்கு குடும்பநல அறுவை சிகிச்சை செய்து கொண்டமைக்காக முன் ஊதிய உயர்த்தம் வழங்க இயலாது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: குடும்பக் கட்டுப்பாடுத் திட்டம் என்பது தேசியத் திட்டம். இந்த அரசினுடைய ஆணையின் மூலமாக 400 ரூபாய்க்கு மேல் வருமானம் பெறுகிற அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகளும், அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் வரம்பு இல்லாமல் குழந்தைகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்பது அரசினுடைய கொள்கையா?

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தராசன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குடும்பக் கட்டுப்பாடு என்று சொன்னார்கள். அந்த வார்த்தை மாற்றப்பட்டு, குடும்பநலம் என்று உருவாக்கப்பட்டுவிட்டது. பிறக்கிற குழந்தைகள் நலமாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் குடும்ப நலம் என்று ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. அரசாணை எண் 3134, மக்கள் நல்வாழ்வு, நாள் 14—12—1976-ல் 3 அல்லது மூன்றுக்குக் குறைவாக குழந்தைகளையுடைய அரசிதழ் பதிவு பெறாத ஊழியர்களுக்கு மட்டும்தான் சலுகையை வழங்க வழிவகை செய்யப்பட்டிருக்கிறது.

THIRU G. VASANTHA PAI: Sir, I was only trying to say the same thing that the Gazetted Officers who had undergoing sterilisation operations should be asked to stop or refrain from making any claim for incentives.

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தராசன் : பொதுவாக இன்றைக்கு குடும்ப நலத் திட்டத்தை எல்லோருமே ஏற்றுக்கொள்ளுகிற நிலைமைப் பெற்றிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : குடும்பநலத் திட்டத்தின் கீழ் சிகிச்சை செய்து கொண்ட பெண் ஊழியர்களுக்கு, 3 குழந்தைகளுக்கு அதிகமாக இருக்குமானால், அவர்களுக்கு மெடர்னிடி விடுப்பு மறுக்கப்படுகிறதா ? அப்படி மறுக்கப்படுமானால், ஒரு குழந்தையுடையவர்கள் சிகிச்சை செய்து கொண்டால் ஈடு செய்யும் வகையில் மேலும் விடுப்பு கொடுக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தராசன் : அப்படிப்பட்ட புகார் ஒன்றும் இதுவரையில் வரவில்லை.

(பிற்பகல் 4-50)

திரு. க. அறிவழகன் : அரசிதழ் பதிவு பெறாத ஊழியர்களுக்குத் தரப்படுகின்ற சலுகையைப் பொதுவாக அவர்களுடைய குடும்பங்களுக்குத் தருவதில்லை. அரசிதழ் பதிவு பெறாதவர்கள் குடும்பநல அறுவை சிகிச்சை செய்து கொண்டால், அவர்களுக்குக் கொடுக்கின்ற சலுகைகள் என்ன என்பதைப் பற்றித் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தராசன் : அரசிதழ் பதிவு பெறாத அரசு ஊழியர்களுக்கு அவர்களது துணைவியாரோ அல்லது அவரோ குடும்ப நல அறுவை சிகிச்சை செய்துகொண்டால், ஒரு முன் ஊதிய உயர்வு அளிக்க வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது.

(திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் எழுந்தார்).

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இது குடும்ப நலம் சம்பந்தப்பட்ட கேள்வி.

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் : தலைவர் அவர்களே, குடும்பக் கட்டுப்பாடு அரசாங்க அதிகாரிகளுக்குதானா ? அவர்களுக்குத்தான் சலுகைகளைப் பெறுகின்ற தகுதியிருக்கிறது என்று சொல்கிறார்கள். இந்தக் கவுன்சிலிலே இருக்கின்றவர்களுக்கும், அசெம்பிளியிலே இருக்கின்றவர்களுக்கும், அமைச்சர்களுக்கும் குடும்பக் கட்டுப்பாடு இருக்க வேண்டும். அவர்கள் குடும்பக் கட்டுப்பாடு செய்துகொண்டால், நன்மையாக இருக்கும் என்பது என்னுடைய கருத்து. அந்த மாதிரி செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் :** மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் எடுத்துச் சொன்ன கருத்து மிக நல்ல கருத்து. அரசு இதை எல்லோரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் குடும்ப நலத் திட்டத்தை வைத்திருக்கிறது. அவையிலே பெரியவராக இருக்கின்ற அங்கத்தினர் போன்றவர்கள் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு, பிரச்சாரம் செய்தால், நிச்சயமாக அரசுக்கும் பயனாக இருக்கும். இந்தத் துறையும் அதற்கு நன்றி செலுத்தும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** ஆசிரியர்கள் குடும்பநலத் திட்டத்திற்காக தீவிரமாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்பு ஒரு பதிலிலே சொன்னார்கள், அவர்களாகவே முன்வந்து இந்தப் பணியை ஆற்றி இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்துகின்றவர்கள் ஆசிரியர்கள் என்று. அரசு ஊழியர்களுக்கு அளிப்பது போன்ற சலுகைகளை குடும்ப நலத் திட்டத்தைச் செயல்படுத்துகின்ற ஆசிரியர்களுக்கும் அளிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் :** அதைப் பற்றி அரசு பரிசீலிக்கும்.

**திரு. பி. ஆர். தாமஸ் :** எந்தத் தேதிக்கு முன்னதாக அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்களுக்கு ஊக்க ஊதிய உயர்வு அளிக்கப்படுகிறது? வருமான வரம்பு இவ்வளவு என்ற அளவிலே இல்லாமல் இந்த உயர்வு அளிக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் :** எந்தத் தேதிக்கு முன்னாலே என்பது பற்றி இல்லை. இந்த உத்தரவு உருவாக்கப்பட்டு, 14—12—1976-ல் அது வந்தது. அதன் பிரகாரம் அந்தச் சலுகை வழங்கப்பட்டு வருகிறது. பொதுவாக அரசிதழ் பதிவு பெறாத ஊழியர்களுக்கு என்றுதான் அரசாணையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** அரசிதழ் பதிவு பெறாத ஊழியர்களுக்கு இந்தத் திட்டத்தினால் பலன் உண்டு என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மாண்புமிகு அங்கத்தினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் குறிப்பிட்டது போல், ஆசிரியர்களும் அரசிதழ் பதிவு பெறாத ஊழியர்களாகக் கருதப்படுவதால், ஆசிரியர் அனைவருக்கும் இச்சலுகையை நீட்டிக்க அரசு முன்வருமா? புதிய ஊதிய விகிதப்படி அடிப்படைச் சம்பளமும் அகவிலைப் படியும் இணைக்கப்பட்டிருப்பதற்கு ஏற்ப ஊக்க ஊதிய உயர்வு கொடுக்கும் ஆணையைத் திருத்த அரசு ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் :** மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுடைய யோசனையை அரசு பரிசீலிக்கும்.

**புலவர் புலமைப்பித்தன் :** அறுவை சிகிச்சை செய்து கொள்வது என்பது குடும்பக்கட்டுப்பாட்டுக்காக, குடும்ப நலத்திற்காக என்று சொல்கிறார்கள். குடும்பம் நலமாக இருக்க, வைத்திய சிகிச்சை செய்துகொள்ளாமலேயே இரண்டு பிள்ளைகளுக்கு மேல் பெறாமல் இருக்கிறார்கள். அறுவை சிகிச்சை செய்வதைக் காட்டிலும், கட்டுப்பாடாக இருப்பதால், அவர்களும் ஊக்க ஊதிய உயர்வு பெறுவதற்குரியவர்கள். அவர்களுக்கு ஊதிய உயர்வு கொடுக்கின்ற முயற்சியிலே அரசு ஈடுபடுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் :** இத்தகைய சட்டத்தின் மூலமாக ஏற்படுகின்ற பலன்களை விட, மனக் கட்டுப்பாடு மூலமாகவே இந்தத் திட்டம் நிறைவேறுவது சாலச்சிறந்ததுதான் என்பதை அரசு ஏற்றுக்கொள்கிறது. அத்தகைய நிலையில் அவர்கள் ஒத்துழைப்பதற்கு அரசு நன்றியைக் காணிக்கையாக அளிக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. செ. முத்துசாமி :** இந்த ஆணை வந்த தேதிக்குப் பின்னால், அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்களுக்கு மட்டும் அரசு சலுகைகள் கொடுக்கின்றது. அதற்கு முன்னாலே தாங்களாகவே முன்வந்து குடும்ப நல அறுவை சிகிச்சை செய்து கொண்டிருப்பவர்களுக்கு இந்தச் சலுகையை ஏன் தரக்கூடாது? அரசு ஊழியர்களிடையே ஏன் இந்த வேறுபாட்டை அரசு உண்டாக்குகிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் :** தனிக் கேள்வி போடுவார்களானால், இது பற்றி விளக்கமாகச் சொல்கிறேன்.

*Artificial Insemination Centres.*

* 189 *Q*.—THIRU M. SANKARALINGAM : Will the Hon. the Minister for Social Welfare be pleased to state:

(*a*) whether it is a fact that the artificial insemination done free of cost in the artificial insemination centres under the High-breed scheme, has been abandoned; and

(*b*) if so, whether steps will be taken to revive the old scheme?

**கால்நடை செயற்கைக் கருத்தரிப்பு நிலையங்கள்.**

**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கால்நடை செயற்கைக் கருத்தரிப்பு நிலையங்களில், உயர்ந்த ரக இனவிருத்தித் திட்டத்தின் கீழ் இலவசமாக செயற்கைக் கருத்தரிப்பு செய்யும் அந்த திட்டம் நிறுத்தப்பட்டுவிட்டது என்பது உண்மையா?





(இ) ஆம் எனில், மீண்டும் பழைய முறையைக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி :** (அ) ஆம்.

(இ) கால்நடை செயற்கைக் கருத்தரிப்பு நிலையங்களில் உயர்ந்த ரக இனவிருத்தித் திட்டத்தின் கீழ், இலவசமாக செயற்கைக் கருத்தரிப்பு செய்வதற்கான குறிப்பு எதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை. ஆனால் குறைந்த கட்டணம் ரூபாய் ஒன்றில் செயற்கைக் கருத்தரிப்புச் செய்வதற்கான குறிப்பொன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. ம. சங்கரலிங்கம் :** கால்நடை பராமரிப்பை மிகச் சிறப்பாகச் செய்ய வேண்டும் என்று அரசு வற்புறுத்துகிறது. நல்ல தரமான பசுக்களை வளர்க்க வேண்டும் என்பதையும் அரசு வற்புறுத்துகிறது. முன்பு உயர்ந்த ரகக் கால்நடைகளை உற்பத்தி செய்ய, செயற்கைக் கருத்தரிப்பு இலவசமாகவே செய்துகொண்டிருந்தனர். நகரங்களிலே ஒரு கருத்தரிப்புக்கு ரூ. 5-ம், கிராமப்புறங்களிலே ரூ. 3-ம் கட்டணம் என்று விதித்திருக்கிறார்கள். அதைக் கொடுப்பதற்குக்கூட கிராமவாசிகள் கஷ்டப்படுகிறார்கள். குறிப்பிட்ட காலத்தை அவர்கள் தவறவிட்டால், கருத்தரிப்புக்கு உகந்த நாளாக இல்லாவிட்டால், கால்நடைகளைப் பெருக்க முடியாது. குறிப்பிட்ட இலக்கை அரசு எட்ட முடியாத நிலைமைகள் ஏற்படும். ஆகவே இன்னும் குறிப்பிட்ட இலக்கை எட்டுகின்ற வகையில் நல்ல இனப் பசுக்களை விருத்தி செய்வதற்கு, இந்த இலவச வசதியை நீட்டிப்பதற்கு அரசு பரிசீலனை செய்யுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, 1976-ம் ஆண்டிற்கு முன்னர் கால்நடைப் பராமரிப்புத் துறையின் கீழ் இயங்கிவரப்பெற்ற கால்நடை மருத்துவ மனைகளில், நாட்டுப்புற இன பசுக்கள் மற்றும் எருமைகளுக்கு கட்டணமேதுமின்றி செயற்கைக் கருத்தரிப்பானது இலவசமாகச் செய்யப்பட்டு வந்தது. இதற்குப் பின்னர் இரண்டாவது கட்ட திட்டத்தின் கீழ் முர்ரா இன எருமைக்காளைகளை வாங்குவதற்கான செயற் குறிப்பைப்பற்றி ஆலோசிக்கும் பட்சத்தில் காளைகளின் பராமரிப்புச் செலவைச் சரிக்கட்டுவதற்காக செயற்கைக் கருத்தரிப்புச் செய்வதற்குக் கட்டணம் வசூலிக்கலாம் எனக் கருதப்பட்டது. இக்கருத்தானது ஒப்புக்கொள்ளப்பட்டு அரசு ஆணை நிலை எண் 1747, வேளாண்மை, நாள் 3—9—1976-ல் முர்ரா இன எருமைக் காளைகளின் விந்துவை செயற்கைக் கருத்தரிப்புக்காகப் பயன்படுத்தும்போது ஒவ்வொரு செயற்கைக் கருத்தரிப்புக்கும் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் செய்யப்படும்போது கட்டணமாக ரூ. 5-ம் நகராட்சி எல்லைக்குட்படாத மற்றப் பகுதிகளில் கட்டணமாக ரூ. 3-ம் விதிக்கப்படும் என ஆணை பிறப்பிக்கப்பட்டது.

இதற்குப்பின்னர் இரண்டாம் தடவையாக, முதல் முறை செயற்கை கருத்தரிப்பு செய்யப்பட்ட 35 நாட்களுக்குள் மீண்டும் கருத்தரிப்பு செய்ய நேர்ந்தால், இவ்வாறு இரண்டாம் முறை செய்யப்படும் கருத்தரிப்பு இலவசமாக அனுமதிக்கப்பட்டது.

இவ்வாறு செயற்கைக் கருத்தரிப்புக்காக 5 ரூபாய், இரண்டு ரூபாய் என கட்டணங்கள் வசூலிக்கப்படுவது, ஏழை மக்களால் அக்கட்டணத்தை கட்ட இயலாத நிலையில் அவர்களுக்கு சிரமத்தையும் கஷ்டத்தையும் விளைவிப்பதோடு இக்கருத்தரிப்பு முறையைப் பயன்படுத்திக்கொள்ள முடியாத சூழ்நிலையை உருவாக்குகின்ற காரணத்தால், இக்கட்டண விகிதத்தைக் குறைப்புச் செய்து எல்லா இடங்களிலும் பொதுவான ஒரு கட்டணத்தை அதாவது ரூபாய் 1 என வசூலிக்கலாமா என்ற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையிலுள்ளது.

திரு. க. இராமமூர்த்தி : இந்தத் திட்டம் கால்நடையை அபிவிருத்தி செய்கின்ற திட்டம். இதில் லாப நோக்கு இல்லாமல், வியாபார நோக்கு என்று இல்லாமல், கால்நடைகளை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்று அரசு செயல்படுமா? அந்த அளவில் இலவசமாக, செயற்கைக் கருத்தரிப்பு செய்வதற்கு அரசு உதவி செய்யுமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : கால்டை பராமரிப்புக்கு என்கின்ற செலவு வருடத்திற்கு ரூ. 18.6 லட்சம் என்று இருக்கிறது. எனவே இந்தக் கட்டணம் கிடைப்பது அந்தச் செலவைச் சரிக்கட்டச் சரியாக இருக்கிறது. ஒரு ரூபாய் கட்டணம் வசூலித்தால், ஓரளவுக்குச் சரிக்கட்ட முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம் : நல்ல இனவிருத்தி செய்கின்ற திட்டத்தின் இம் முதல் கட்டமாக இலவசமாகச் செய்யப்பட்டது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். முதல் கட்டத்திலிருந்து இரண்டாவது கட்டத்திற்கு வரும்போது, கட்டணம் விதிக்கப்பட்டது. முதல் கட்டத்தில் நல்ல இனப் பசுக்களை இத்தனை அளவுக்கு உற்பத்தி செய்ய வேண்டும் என்று ஒரு குறியீட்டை வைத்திருந்தது. அந்தக் குறியீட்டை அடைந்த பிறகுதான் அது மாற்றப்பட்டதா?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் தனிக் கேள்வி போட்டால், விவரங்களைச் சேகரித்துச் சொல்கிறேன்.

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் : இந்தக் காரியம் நம் நாட்டிலே நடந்து கொண்டிருக்கிறது. நாம் பசுக்களை அதிகமாக அபிவிருத்தி செய்ய விவசாயிகளுக்கு உதவ வேண்டும். நல்ல தர்மான் மாடுகளை உண்டு பண்ண வேண்டும். நம்முடைய நோக்கம் அதிகமாகப் பால் உற்பத்தி பண்ண வேண்டும் என்பது. இந்த நோக்கம் நிறைவேற, செயற்கைக் கருத்தரிப்பு மூலம் கால்நடை அபிவிருத்தியை நன்றாகச் செய்ய முடியாமல் இருக்கின்றது. என்னுடைய அனுபவத்திலேயிருந்து நான் சொல்கிறேன். எங்கள் ஏரியாக்களில் எப்படிப் பார்த்தாலும், அது கெட்டுப் போய் வந்து சேருகிறது என்று சொல்கிறார்கள். அதை எங்கோ ஓரிடத்திலிருந்து இங்கே கொண்டு வருகிறார்கள்.

திரு. ம. சங்கரலிங்கம் : அது என்ன என்று சொல்லுங்கள்.

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் : எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொல்லச் சொல்கிறார்கள். எனக்குத் தெரிந்த மாதிரி சொன்னால், எல்லோரும் வருத்தப்படுவார்கள். எங்கள் ஏரியாக்களில் மாடுகளுக்குக் கருத்தரிப்பு செய்தார்கள். ஒன்றும் பயனில்லாமல், ஒன்றுக்கும் லாயக்கில்லாமல் போய்விடுகிறது. கால்நடை வைத்தியர்களை வைத்தே 3, 4 தடவை கூட்டச் செய்தோம். ஒன்றும் பலனில்லை. எங்கள் பகுதிகளில் அது சரியாக நடக்கவில்லை. அது கெட்டுப் போய்விடுகிறது என்றும் அதைக் கொண்டு வருவதற்கு உரிய சாதனம் எங்களிடத்திலே இல்லை என்றும், கொண்டு வருகின்றபோது அது கெட்டுப் போகிறது என்றும் சொல்கிறார்கள். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இப்போது எனக்குச் சொல்கிறார்கள். அதில் உள்ள உயிரணுக்கள் சாகாமல் இருக்க வேண்டுமாம். அவை சாகாமல் கொண்டு வந்து சேர்ப்பதற்குரிய ஏற்பாடுகளை அரசு செய்ய முன்வருமா?

[பிற்பகல் 5.00]

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : தலைவரவர்களே, பெரியவர் இராமகிருஷ்ணத் தேவர் அவர்கள் செயற்கை முறைத் திட்டத்தைப் பற்றிச் சொல்கிறார்கள். புதிய விஞ்ஞானக் கண்டுபிடிப்பின் அடிப்படையிலே உறை விந்துத் திட்டம் ஒன்றை (frozen semen concept) தான் நிறைவேற்றி வருகிறோம். அதன்படி உயர் ரக காளைகளிலிருந்து பெறப்பட்ட விந்துவை முறையாக, விஞ்ஞான ரீதியாகப் பாதுகாத்து, அதை 20 ஆண்டுகளுக்குப் பயன்படுத்தக் கூடிய அளவிற்கு வைத்திருக்கிறோம்.

ஒரு மாட்டிலிருந்து எடுத்த விந்துவை கிட்டத்தட்ட 10 ஆண்டுகளில், 20,000 மாடுகளுக்குப் பயன்படுத்தலாமென்ற அளவிற்கு உறை விந்துத் திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. அது வெற்றிகரமாக நடைபெறுகிறது. ஊட்டியில் சோதனைக்கூடம் செயல்பட்டு வருகிறது. முதலிலே இந்த விழா தர்மபுரியில் தொடங்கப்பட்டு, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் விரிவுபடுத்தப்பட்டு வருகிறது. இப்போது ஆங்காங்கு உள்ள விரிவாக்க அலுவலர்கள், களப் பணியாளர்களிடம் கொடுக்கப்படுகின்ற பிளாஸ்குகளை பாரிஸிலிருந்தும், அமெரிக்காவிலிருந்தும் இந்தியப் பால் வள நிறுவனத்தின் மூலமாக, மானியமாகக் கொடுக்கிறார்கள். அதனால் பாதுகாப்பான முறையில் செயற்கைக் கருவூட்ட முறை நடந்து வருகிறது. எனவே இனிமேல் இப்படிப்பட்ட பிரச்சினைகள், குறைபாடுகள் வராது. இப்போது குடுவையிலே கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே குறைபாடுகள் இனிமேல் வராது. உயிர் அணுக்கள் இறந்துவிடும் சாத்தியக் கூறுகள் இப்போது இல்லை. மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் கேட்டதால், ஒன்றைத் தகவலுக்காகச் சொல்கிறேன். இப்போது நாம் கால்நடை அபிவிருத்தியை இரண்டுவிதமாக வைத்து நிறைவேற்றி வருகிறோம். கால்நடை பராமரிப்புத் துறை மூலமாகவும், தமிழ்நாடு பால் வள நிறுவனத்தின் மூலமாகவும் அந்தப் பணியைச் செய்து வருகிறோம். பால் வள நிறுவனத்தின் மூலமாக கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினர்களாக இருக்கக்கூடியவர்களுக்கு, அவர்களுடைய கறவை இனங்களுக்கு வைத்திய உதவி, பராமரிப்பு வசதி, செயற்கைக் கருவூட்டு முறை ஆகியவற்றை இலவசமாகச் செய்யத் தொடங்கியிருக்கிறோம். இந்த உறை விந்துத் திட்டத்தைச் செயல்படுத்தும்போது, சங்கத்திலே உறுப்பினர்களாக இருக்கிறவர்களுக்கு இலவசமாகச் செய்து கொண்டு வருகிறோம். அவர்கள் கால்நடை மருத்துவ நிலையத்தைத் தேடி வருவதில்லை. மொபைல் ஸ்குவாட்—நடமாடும் கால்நடைப் பிரிவுகளை வைத்திருக்கிறோம். ஒரு மாவட்டத்தில் ஒரு இடம் அல்லது இரண்டு இடங்களில் வைத்திருக்கிறோம். குறிப்பிட்ட சங்கத்திற்கு, குறிப்பிட்ட தேதியில், இத்தனை மணிக்கு நடமாடும் ஊர்தி வரும். அப்போது பருவநிலை அடைந்த கறவை இனங்களுக்குக் கருவூட்டல் செய்கிறார்கள். 'இதைக் கட்டணமில்லாமல் செய்து கொடுக்க வேண்டுமென்பதோடு, ஒரு முறை செயற்கைக் கருவூட்டல் வெற்றிகரமாக அமைந்து, கன்றையும் தாய்ப் பசு ஈன்றுவிட்டால், ஊக்க போனசாக 10 ரூபாயிலிருந்து 40 ரூபாய் வரை கொடுக்கும் திட்டத்தையும் வைத்திருக்கிறோம். இரண்டு துறைகளிலும் வெவ்வேறு முறைகளில் செய்வதால், இதைத் தகவலுக்காகத் தெரிவிக்கிறேன்.





**திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் :** அமைச்சரவர்கள் சொன்னது ரொம்பப் பொருத்தமென்று எண்ணுகிறேன். கிராமங்களில் இருக்கும் கால்நடைகளை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரவேண்டுமென்றால், 10, 15 மைல்கள் வரவேண்டியிருக்கிறது. எப்போது கொண்டு வர வேண்டுமென்றால், மாடு கத்தும்போது கொண்டுவர வேண்டும். கத்திய பிறகு ஓரிரு நாட்களுக்குள் கொண்டுவர வேண்டுமென்று சொல்கிறார்கள். இன்னொன்று, பிறப்பிடத்திலே சளி மாதிரி வரும், அப்போது கொண்டுவர வேண்டுமென்று சொல்கிறார்கள். 15 மைல்களுக்கு அப்பாலுள்ள ஆஸ்பத்திரிக்கு அந்தக் கால்நடையைக் கொண்டு சேர்க்கும்போது, பருவம் தவறிவிட்டதென்று சொல்கிறார்கள். ஒரு சங்கம் வைத்து, ஆங்காங்கே வந்து உதவி பண்ணுவதாக அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். நல்ல யோசனை, அருமையான முறை. ஆனால் நடைமுறையிலே கிராமங்களிலே அரசு போடுகிற திட்டங்களை அமுல்படுத்தி அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறதா என்பதைப் பார்க்க வேண்டும். அமைச்சரவர்கள் கணக்குச் சொன்னார்கள். இதுவரை எத்தனை மாட்டுக்குச் செய்திருக்கிறார்கள்? பஞ்சாயத்து யூனியன்களில் எத்தனை மாடுகளுக்குச் செயற்கை கருவூட்டப்பட்டிருக்கிறது? அதனால் எத்தனை கன்றுகள் பிறந்தன? ஒரு கணக்கு எடுத்து இங்கே இருக்கிறவர்களுக்குத் தெரிவிக்க வேண்டும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** முடிவிற்கு வாருங்கள்.

**திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் :** அந்த மாதிரி செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி :** மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிட்டபடி, 10 அல்லது 15 மைல்களுக்கு கால்நடைகளைக் கொண்டு வருவது பற்றிய சிரமங்கள் எங்கள் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு, கடந்த இரண்டு ஆண்டுகளில் மூன்று மாவட்டங்களில் நடமாடும் கால்நடை வைத்திய ஊர்திகளை நடமாட விட்டிருக்கிறோம். நடப்பு ஆண்டிலேயும் அப்படிப்பட்ட ஊர்திகள் ஏற்படும். அப்போது நிச்சயமாக முகவை மாவட்டத்திலே அப்படிப்பட்ட ஊர்திகளை ஏற்படுத்த, அரசின் பரிசீலனையில் திட்டமிருக்கிறது.

**புலவர் புலமைப்பித்தன் :** கால்நடை இன விருத்திக்காக அரசு பாடுபடுகிறது. ஆனால் அதே நேரத்தில் கோவை, மதுக்கரை வழியாக கால்நடைகளை சொந்தப் பண விருத்திக்காகக் கடத்தியும், நடத்தியும் செல்கிறார்கள். அதைத் தடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி :** அப்படி அனுப்பப்படுகின்ற கால்நடைகள் வயதானவை அல்லது பழுதுபட்டவை அல்லது திறமையற்றவை. இந்த நாட்டிற்குத் தேவையில்லாதவற்றை அப்படி அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். காரணம், நமது மாநிலத்தில் பசுவதைத் தடுப்புச் சட்டம் அமுலில் இருக்கிறது. மேலும் ஒரு மாநிலத்திலிருந்து அடுத்த மாநிலத்திற்குக் கால்நடைகளைக் கொண்டு போவதைத் தடுக்கக் கூடாதென்று மத்திய அரசின் ஆணை, சட்டம் இருப்பதால், அதைத் தடுக்கவில்லை. அதே நேரத்தில் பயனற்ற, திறமையற்ற, வயதான கால்நடைகளை , வைத்திருப்பதால், தீவனங்களுக்குக் கேடு ஏற்படுகிறது என்பதால், அதைத் தடை செய்யாமல் இருக்கிறோம்.

**திரு. பி. ஆர். தாமஸ் :** காளை மாடுகளை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மேல் பயன்படுத்தக்கூடாதென்று தடை விதிக்கப்படுமா ? ஏனென்றால், செயற்கை முறையிலே பிறந்த கன்றுகளில், சில கன்றுகள் சக்தி இழந்தவையாக, சில நாட்கள்கூட உயிர் வாழ முடியாத நிலையில் இருக்கின்றன. எனவே, குறிப்பிட்ட காலத்திற்கு மேலாக காளை மாடுகளைப் பயன்படுத்தக்கூடாதென்று அரசு உத்தரவிடுமா ?

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி :** அப்படிப்பட்ட புகார்கள் அரசுக்கு வரவில்லை. வந்தால், நிச்சயமாக, கவனித்து பரிசீலிக்கப்படும்.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** இப்படிப்பட்ட ' ஹை பிரீட் வெரைட்டீஸ் ' பசுக்களை, முகவை மாவட்டத்தில் அருப்புக்கோட்டை, விருதுநகர் பகுதிகளில் தனி நபர்கள் சிறப்பான முறையில் வைத்திருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு வைத்திய வசதி கொடுக்கவும், செயற்கைக் கருவூட்டல் வசதியும் அரசாங்கத்தின் சார்பில் செய்து கொடுக்கவும் செயற்குறிப்பு உள்ளதா ?

(பிற்பகல் 5-10)

**மாண்புமிகு செல்வி. பி. டி. சரஸ்வதி :** இந்த மாநிலத்தில் பல்வேறு மாவட்டங்களில் பல்வேறு இடங்களில் இயங்குகின்ற தனியாருக்குச் சொந்தமான கால்நடை செயற்கைக் கருத்தரிப்பு நிலையங்களுக்குக் கால்நடை பராமரிப்பு இலாகா உதவி புரிந்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் அரசாங்கத்திற்குச் சொந்தமான கால்நடை செயற்கைக் கருத்தரிப்புப் பண்ணைகளைச் சுற்றி வந்தால், அதை விடச் சிறந்த முறையில் கால்நடைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன என்பதைக் காண்பார்கள்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** தரமான கறவை இன கால்நடைகளின் இனத்தைப் பெருக்க வேண்டுமென்ற அடிப்படையில் கிராமங்களில் தரமுள்ள காளைகள் பயன்படுத்தப்படுவதுண்டு. வயது ஆகி விட்டதாலோ, வேறு காரணங்களாலோ தரமல்லாத காளைகள் பருவமடைந்த உடன் அதன் இனவிருத்திக்காகப் பயன்படுகின்ற இடத்தில் காயடித்தல் என்று தமிழில் சொல்வார்களே (castration) அந்த முறையில் அரசாங்கமே காயடித்தல் செய்கின்ற ஒரு நடைமுறை முன்பு இருந்து வந்தது. இப்பொழுது அதுமாதிரி அரசாங்கம் செய்வதில்லை. இதனால் தரமல்லாத காளைகளையும் பயன்படுத்துகின்ற நிலைமை இருக்கிறது. அரசாங்கம் பரிசீலனை செய்து முன்பு இருந்த அந்தத் திட்டத்தைக் கொண்டு வருவதற்கு முன்வருமா ?

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி :** அதுபற்றிப் பரிசீலித்து அரசு முடிவெடுக்கும்.

**திரு. க. இராமமூர்த்தி :** மூலக் கேள்வி கால்நடை செயற்கைக் கருத்தரிப்பு நிலையங்களில், உயர்ந்த ரக இனவிருத்தித் திட்டத்தின் கீழ் இலவசமாகச் செயற்கைக் கருத்தரிப்பு செய்வது பற்றியது. உயர்ந்த ரக இனவிருத்தித் திட்டத்தின் கீழ் தரமுள்ள உயர்ந்த ரகக் கால்நடைகள் அதிகப்படுத்தப்பட வேண்டுமென்கின்ற அடிப்படையில், கிராமப்புறங்களிலுள்ளவர்களுக்கும், விவசாயிகளுக்கும் இலவசமாகக் கால்நடைகளுக்குச் செயற்கைக் கருத்தரிப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தால்தான், அவர்கள் அதைப் பயன்படுத்த முன்வருவார்கள், பயன்படுத்த முடியும். அப்படி இலவசமாக அரசு செய்து கொடுக்காவிட்டால், அவர்கள் கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய வசதிகளைப் பயன்படுத்திக் கொள்ளத்தான் முயலுவார்கள். அப்படிச் செய்யும் தருணத்தில் உயர்ந்த ரகக் கால்நடைகள் பெருக வாய்ப்பு இருக்காது. கால்நடை செயற்கைக் கருத்தரிப்பு நிலையங்களில் உயர்ந்த ரக இனவிருத்தித் திட்டத்தின் கீழ் கிராமப்புறங்களிலிருக்கின்ற விவசாயிகளின் கால்நடைகளுக்கு இலவசமாகச் செயற்கைக் கருத்தரிப்பு வசதியைச் செய்து கொடுப்பதால், உயர்ந்த ரகக் கால்நடை இனம் பெருகும் என்ற உணர்வோடு எவ்வளவு தொகை செலவானாலும் அந்தச் செலவை கொள்கை அளவிலே அரசு ஏற்று இலவசமாக இந்த வசதியை முன்பு செய்து வந்ததுபோல் செய்ய அரசு முன்வருமா ?

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி :** அதைத்தான் மாண்புமிகு [illegible] தொழில்துறை அமைச்சரவர்கள் மிகத் தெளிவாகச் சொன்னார்கள். இத்தகைய ஏற்பாட்டினை இப்பொழுது கால்நடை பராமரிப்புத் துறையும்,

பால்வள நிறுவனமும் செய்து வருகின்றன. பால்வள நிறுவனத்தார் இதை இலவசமாகச் செய்து வருகிறார்கள். கால்நடை பராமரிப்புத் துறையைப் பொறுத்தவரையில், குறைந்த கட்டணம் ரூபாய் ஒன்றுக்கு செயற்கைக் கருத்தரிப்பு வசதியைச் செய்து கொடுப்பதற்கான செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

## Suppression Immoral Traffic Act.

* 190 *Q.*—THIRU K. RAMAMOORTHI: Will the Hon. the Minister for Social Welfare be pleased to state the number of Hotels in Madras City against which cases have been registered under the Suppression of Immoral Traffic in Women and Girls Act, 1956 (Central Act 104 of 1956), from 1st July 1977 to 6th August 1978?

## விபச்சாரத் தடுப்புச் சட்டம்

**திரு. க. இராமமூர்த்தி:** மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

1956 ஆம் ஆண்டு மகளிர்-சிறுமியர் விபச்சாரத் தடுப்புச் சட்டத்தின்கீழ் (மத்தியச் சட்டம் 104/56), சென்னை நகரில் எத்தனை ஓட்டல்களுக்கு எதிராக 1—7—1977 முதல் 6—8—1978 வரை வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன?

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி:** (1) சோதனை செய்யப்பட்ட மொத்த தங்குமிடங்கள்—35.

(2) விபச்சாரத் தடுப்புச் சட்டம் 1956-ன் கீழ் பதிவு செய்யப்பட்ட மொத்த குற்றங்கள்—361.

**திரு. க. இராமமூர்த்தி:** மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சரவர்கள் 1956 ஆம் ஆண்டு மகளிர்—சிறுமியர் விபச்சாரத் தடுப்புச் சட்டத்தின் கீழ் சென்னை நகரில் சோதனை செய்யப்பட்ட மொத்த தங்குமிடங்கள் 35 என்றும், ஓட்டல்களுக்கு எதிராக 1—7—1977 முதல் 6—8—1978 வரை பதிவு செய்யப்பட்ட மொத்த குற்றங்கள் 361 என்றும் சொன்னார்கள். இதில் 3 நட்சத்திர ஓட்டல்கள் எத்தனை? 5 நட்சத்திர ஓட்டல்கள் எத்தனை? அந்த 5 நட்சத்திர ஓட்டல்கள் மீது எந்தவிதமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி:** 35 ஓட்டல்களின் பெயர்களைத் தான் குறிப்பிலே கொடுத்திருக்கிறார்கள். 3 நட்சத்திர மற்றும் 5 நட்சத்திர ஓட்டல்கள் எத்தனை என்ற விவரம் கொடுக்கப்படவில்லை. அப்படி வேண்டுமானால், தனிக் கேள்வி கேட்டால் விவரம் தரலாம்.

**திரு. வே. தங்கப்பாண்டியன்:** நட்சத்திர ஓட்டல்களிலெல்லாம் திடீர் திடீரென்று போலீசார் சட்டத்தின் பெயரால் சோதனை, ரெய்ட் செய்கிற காரணத்தால், அந்நிய நாட்டுக்காரர்கள், தமிழ்நாட்டில் சுற்றுப்பயணம் செய்வதற்காக வரும் வெளிநாட்டவர்கள் தமிழ்நாட்டிலே தங்களுடைய விடுமுறையை நல்ல முறையில் அமைதியாகக் கழிக்க வருபவர்கள் அப்படிக் கழிக்க முடியாத நிலை ஏற்படுகிறது. வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் தங்கும் ஓட்டல்களில் இதுபோல திடீர் சோதனை நடத்துவதால், அவர்கள் பல இன்னல்களுக்கு ஆளாக்கப்படுகிறார்கள். போலீசார் தங்களுடைய சொந்த நலனுக்காக இப்பேர்ப்பட்ட நட்சத்திர ஓட்டல்களில் திடீர் சோதனை செய்வதை அரசு கவனிக்க முன்வருவதோடு அப்பேர்ப்பட்ட போலீசாரை அரசு கண்காணிக்குமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி:** வெளிநாட்டுக்காரர்கள் தங்குகிற நட்சத்திர ஓட்டல்கள் என்று எடுத்துக்கொண்டால், ஓட்டல் சோழா, தாஜ் கோரமண்டல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இப்பேர்ப்பட்ட ஓட்டல்களில் வெளிநாட்டுக்காரர்கள் தங்கியிருந்தபோது, இதுபோன்ற புகார் எதுவும் வரவில்லை. இப்படிப்பட்ட குற்றங்கள் எதுவும் நடக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன்:** இந்தமாதிரி ரெய்ட் நடத்துவதற்கு முன்னால் கோர்ட்டுகளின் உத்தரவு வாங்கப்படுகிறதா?

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி:** உத்தரவு வாங்கித்தான் செய்யப்படுகிறது.

**புலவர் புலமைப்பித்தன்:** "கற்பு நிலை என்பது பெண்டிர்க்கு மட்டுமல்ல, ஆடவர்களும் வேண்டும்" என்றார் பாரதியார். விபச்சாரச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படும் பெண்களுக்கு மட்டும் தண்டனை விதிக்கப்படுகிறது. அதற்குப் பெரும் காரணமாயிருக்கிற ஆடவர்களைக் கைது செய்யாமலிருப்பது ஓரவஞ்சனையாகாதா? விபச்சாரத்திற்குக் காரணமாயிருக்கிற ஆடவர்களும் கைது செய்யப்பட வேண்டுமென்கிற வகையில் இந்த அரசு சட்டம் கொண்டுவருமா? இன்னொன்றையும் நான் குறிப்பிட வேண்டும். கைது செய்யப்பட்ட பெண்களை அவமானப்

[1979 மார்ச் 14

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : விபச்சாரத் தடுப்புச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட குற்றவாளிகளில் ஆண் குற்றவாளிகள் எத்தனை பேர் ? பெண் குற்றவாளிகள் எத்தனை பேர் என்ற விவரங்களை மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : மாண்புமிகு உறுப்பினர் தயவு செய்து தனிக் கேள்வி போடவும்

திரு. வே. தங்கப்பாண்டியன் : விபச்சாரம் அதிகமாகியிருப்பதற்குக் காரணம் சினிமாக்களில் கற்பழிப்பு, விபச்சாரம் போன்ற காட்சிகள் அதிகமாக இடம் பெற்றிருப்பதுதான் என்று பொதுவாகச் சொல்லப்படுகிறது. ஆகவே சினிமா தணிக்கையைப் பொறுத்த வரையில், தீவிரமான கடுமையான முறைகள் பின்பற்றப்பட வேண்டுமென்கிற வகையில் நமது அரசு மத்திய அரசுக்குச் சிபாரிசு செய்யுமா ?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : இது என்னிடம் கேட்கப்பட வேண்டிய கேள்வி அல்ல.

திரு. சி.ரா. லெட்சுமிகாந்தன் : மராத்திய மாநிலத்திலே விபச்சாரத்திற்கான மூல காரணத்தைக் கண்டறிவதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழுவும் அதற்கான மூல காரணங்களைக் கண்டறிந்து ஒரு நல்ல அறிக்கையைக் கொடுத்தது. அது போல் நம்முடைய மாநிலத்திலும் ஒரு குழுவை அமைக்கவும், விபச்சாரத்திற்கான மூல காரணங்களைக் கண்டறிந்து, அந்த நோயை சமூக இயல் கண்ணோட்டத்தில் அணுகித் தீர்க்கவும் ஏற்ற வகையில் நடவடிக்கை எடுப்பதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : அதுபற்றி அரசு ஆய்ந்து பரிசீலித்து முடிவெடுக்கும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]



1979 மார்ச் 14]

(1) உறுப்பினர் திரு. எல்லமந்தா பேசிய பேச்சை அவை முன்னர் திரித்துக் கூறியதாகச் சொல்லப்பட்ட குற்றச்சாட்டு குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. எல்லமந்தா அவர்கள் ஒரு உரிமைப் பிரச்சினைக்கு முன்னறிவிப்பு கொடுத்துள்ளார்கள். இது எப்படி உரிமைப் பிரச்சினைக்கான விதியின்கீழ் வரும் என்பதை மட்டும் சுருக்கமாகச் சொன்னால் போதும்.

* THIRU P. YELLAMANDA : Hon. Crairman, Sir, while I was participating in the budget discussion on 9th March 1979, our Hon. Leader of the House has stated falsely that I have criticised the D.M.K. and Kalaignar during the Emergency period. I repeatedly told the Hon. Minister that I had not criticised the D.M.K. and its leader. Even then he has stated, "You have criticised the D.M.K. party and its leader" thus endangering and tarnishing my political career outside. Sir, I am requesting leave to move this Privilege Motion.

* மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : மாண்புமிகு தலைவரவர்களே, உறுப்பினர் திரு. எல்லமந்தா அவர்கள் எந்த அடிப்படையில் என் மீது உரிமைச் பிரச்சினை கொண்டுவந்திருக்கிறார்கள் என்பது தெரியவில்லை. அவர்கள் 1976 ஆம் ஆண்டுக்கு முன்பு திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்தார்கள். ஆளுநர் ஆட்சி பிரகடனம் செய்யப்பட்ட உடனேயே திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து விலகி காங்கிரஸ் இயக்கத்தில் சேர்ந்தார்கள். 1977ஆம் ஆண்டில் மத்திய சென்னையில் நான் பாராளு மன்றத் தேர்தலில் போட்டியிட்ட போது, எனக்கு ஆதரவாக அவர்களுடைய வீட்டிலேயே ஆதி ஆந்திரத் தோழர்களை வரவழைத்துப் பேசினார்கள். அப்போது திராவிட முன்னேற்றக் கழக அரசின் தலைவர்கள் ஆதி திராவிடர்களுக்கு, குறிப்பாக ஆதி ஆந்திர மக்களுக்கு, நன்மைகள் செய்யவில்லை, நம்முடைய பெரும் தலைவி இந்திரா காந்தி அவர்கள் தான் அந்த நன்மைகளைச் செய்து வருகிறார்கள் என்கின்ற அடிப்படையில் எல்லாம் பேசி, எனக்கு ஆதரவாக வாக்குகளை எல்லாம் கேட்டார்கள். அப்படி இருக்கும்

(பிற்பகல் 5-30)

போது தற்போது கலைஞர்தான் ஆதிதிராவிட சமுதாயத்திற்கு, குறிப்பாக ஹரிஜன மக்களுக்கு, ஆதி ஆந்திரர்களுக்கு நன்மை செய்திருப்பதைப்போல சொல்வது எந்த வகையிலே உண்மையாக இருக்கும் என்றுதான் கேட்டேன்.

[1979 மார்ச் 14

படுத்துவது போல் பல நோங்களில் பத்திரிகையில் போடுகிறார்கள். ஏதோ விளம்பரப்படுத்தி மீண்டும் அதை வளர்ப்பதற்குரிய வழியை ஏற்படுத்துவது போல் 'இன்னார் தான் பார்த்துக்கொள்ளுங்கள்' என்று சொல்வதுபோல், அவர்கள் விளம்பரப்படுத்தி பத்திரிகைகளில் போடுகிறார்கள். அப்படிப்பட்ட நிலையினைத் தடுப்பதற்கு அரசு முன்வருமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: இந்த விபச்சாரச் சட்டம் 7 (1)-வது பிரிவின்படி ஒரு பெண் குற்றவாளி என முடிவு செய்யப்படும் பொழுது, முதல் இரண்டு தடவைகளில் அவளுக்குச் சிறைவாசம் எதுவும் விதிக்காமல், அவள் தண்டித்து விடப்பட வேண்டுமென்றும் மூன்றாவது அல்லது பிந்திய சந்தர்ப்பத்தில் மூன்று ஆண்டுகள் வரை சிறைவாசம் நீடிக்கலாம் என்றும், கடும் சிறைவாசம் விதித்து அவள் தண்டிக்கப்படுதல் வேண்டுமென்றும் இந்த அரசு மத்திய அரசுக்கு ஆலோசனை தெரிவித்திருக்கிறது. 7 (1)-வது பிரிவின்படி குற்றம் செய்ததாக முடிவு செய்யப்பட்ட ஆடவர்களைப் பொறுத்தமட்டில், குறைந்தபட்சம் 6 மாத கால கடும் சிறைவாசம் விதித்து, அவர் தண்டிக்கப்படுதல் வேண்டும் என்று இந்த அரசு ஆலோசனை தெரிவித்திருக்கிறது. ஏனெனில், ஒரு ஆடவர் பெண்ணின் நற்பெயரைக் கெடுக்க வேண்டுமென்ற உட்கருத்தோடு 7 (1)-வது பிரிவின்படி குற்றத்தைச் செய்யாமல், ஒரு பெண்ணுக்கு ஆசையூட்டி அவளுக்குப் பணத்தைக் கொடுக்கிறான். அத்தகைய ஆடவன் 7(1)-வது பிரிவின்படி ஒரு குற்றவாளி என முடிவு செய்யப்படுவாரானால், அவருக்கு குறைந்தபட்சம் ஓராண்டு கடும் சிறைவாசம் விதிக்கப்பட வேண்டும், அதிகபட்சம் 3 ஆண்டுகள் வரை நீட்டிக்கலாம் என்று இவ்வரசு மத்திய அரசுக்குத் தெரிவித்திருக்கிறது. மத்திய அரசு இதுபற்றி இன்னும் தகவல் தெரிவிக்கவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சகோதரிகளின் படத்தை பத்திரிகைகளில் போடுகிறார்கள் என்று சொன்னார்கள். அதுகுறித்து நிச்சயமாக இந்த இலாகா முடிவு எடுக்கும்.

திரு. க. இராமமூர்த்தி: குறிப்பிட்ட ஓட்டல்களில் மட்டும் இந்த விபச்சாரக் குற்றங்கள் நடைபெறுவதில்லை என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். எந்த அடிப்படையில் இது நிர்ணயிக்கப்படுகிறது? சில ஓட்டல்கள் ஒரு முறைக்கு அதிகமாக இந்தக் குற்றங்களுக்கு ஆளாகியிருக்கின்றன. அத்தகைய ஓட்டல்கள் எத்தனை? அந்த ஓட்டல்கள் மீது எத்தகைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.



1979 மார்ச் 14]

திரு. செ. முத்துசாமி: இது வறுமை மிகுந்த நாடு. வாழ்வதற்கு வழியின்றி தெருக்களிலே மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கிற நிலைமையிருக்கிற இந்த நாட்டிலே 5 ஸ்டார், 3 ஸ்டார் என்று ஓட்டல்கள் தேவைதானா? மக்களுடைய வரிப்பணத்திலிருந்து ஏராளமான பணத்தை, கோடிக்கணக்கான பணத்தை கடனாகக் கொடுத்து அமைக்கப்படுகின்ற இப்படிப்பட்ட உல்லாச ஓட்டல்கள் தேவைதானா? அப்படிப்பட்ட உல்லாச ஓட்டல்களில் இருப்பவர்கள் பெருந்தனக்காரர்கள். அவர்கள் வரி ஏய்ப்பு, கள்ளக்கடத்தல், ஒழுங்கீனமற்ற செயல் போன்றவற்றை செய்யக்கூடியவர்கள். தங்களுடைய பாதுகாப்புக்காக உல்லாச ஓட்டல்களை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இது கண்கூடாக எல்லோருக்கும் தெரிந்த உண்மை. இப்படிப்பட்ட ஓட்டல்களைத் தடை செய்யும் நோக்கம் இந்த அரசுக்கு உண்டா என்று தெரிந்து கொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: துணைக் கேள்வி கேட்கிறபோது, கேட்கப்பட வேண்டிய முறை பற்றி நம்முடைய விதி முறைகளில் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. இவ்வளவு குற்றச்சாட்டுகளை அடுக்கடுக்காகக் கேட்கக் கூடாது.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: கேள்வி இடம் மாறி வந்திருக்கிறது. என்னிடம் கேட்கப்பட்டிருக்கின்ற வினாவில் மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்விக்கான பதில் வராது.

திரு. கு. மா. பாலசுப்பிரமணியம்: முதல் இரண்டு தடவைகளில் மன்னித்து விடப்படும்; மூன்றாவது முறை தண்டிக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். எத்தனை ஆண்டுகள் குற்றம் செய்த பிறகு வழக்கில் பிடிபட்டாலும், இப்பொழுதுதான் முதல் வழக்கு என்று சொல்லுவார்கள். எது முதல், எது கடைசி குற்றம் என்பதை யார் அறிவது, எப்படி அறிவது என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: நானும் ஒரு வழக்கறிஞர் என்ற முறையில், பெயர்களை மாற்றிக்கொண்டு குற்றம் செய்தவர்கள் வருவார்கள் என்பதை அறிவேன். அதோடு இந்த மன்றத்தில் மாண்புமிகு உறுப்பினர்களாக இருக்கின்ற வழக்கறிஞர்களுக்கும் மிக நன்றாகத் தெரியும். காவல் துறையைச் சார்ந்தவர்களுக்கும் அது தெரியும். எனவே, யாரும் தப்பித்துக் கொள்ள முடியாது. பெயரை மாற்றினால் கூட தெரிந்துகொள்வார்கள்

ஒரு 'கிளாரிபிகேஷன்' என்ற அடிப்படையில்தான் நான் அதைக்கூட கேட்டேன். அதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நேரடியான குற்றச்சாட்டாக எடுத்துக்கொள்ள முடியாது.

I have not levelled any charge against him personally. I have offered my comment and I am of the view that it is a fair comment also.

அது மட்டுமல்ல, அவையின் தகவலுக்காகவும் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்தப் பிரச்சினையைப்பற்றிக் குறிப்பிடும்போதே, நான் எப்படிப் பேசியிருக்கிறேன் என்பதை அவைக்குறிப்பைப் பார்த்து, தலைவர் அவர்களேகூட தெரிந்து கொள்ளலாம். அவைக்குறிப்பு அவ்வளவையும் நான் இங்கே படிக்க விரும்பவில்லை. சுருக்கமாகச் சில பகுதிகளை மட்டும் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்தப் பிரச்சினை இவ்வளவு நீண்ட நேரத்திற்கு நடைபெற்றிருக்கிறது என்பதையே அவைக் குறிப்புகளைப் பார்த்தபோதுதான் நானே புரிந்துகொண்டேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவைத் தலைவர் உறுப்பினர்களுக்கு எவ்வளவு நேரம் தருகிறார் என்பதை இதிலிருந்தே புரிந்துகொள்ள வேண்டும். (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** நான் அவையில் அப்போது என்ன பேசியிருக்கிறேன் என்றால் :

"மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்றுதான் நான் இந்தக் கருத்தைச் சொல்கிறேன். நான் சென்றமுறை நாடாளுமன்றத் தேர்தலில் மத்திய சென்னையிலிருந்து போட்டியிட்டபோது, எங்கள் கட்சி தேசிய காங்கிரஸ் கட்சியோடு உறவு கொண்டு போட்டியிட்டேன். அப்போது மாண்புமிகு உறுப்பினர் திரு. எல்லமந்தா அவர்களுடைய வீட்டிற்குச் சென்று அங்கே அவர் ஆதி ஆந்திரத் தோழர்களை வரவழைத்து எனக்கு ஆதரவாக சுமார் 40 நிமிஷங்கள் அவர்களிடையே பேசினார். அப்போது அவர் கூறியதை நான் மனச்சாட்சி வழி நின்று சொல்லுகிறேன். சத்திய பூர்வமாகச் சொல்லுகிறேன். காங்கிரசை ஆதி ஆந்திரத் தோழர்கள் ஏன் ஆதரிக்க வேண்டுமென்று உறுப்பினர் அவர்கள் விளக்கம் கொடுத்துப் பேசினார்கள். அந்த விளக்கங்களின்போது பல்வேறு விதமான குற்றச்சாட்டுகளை முன்னாள் முதலமைச்சர்மீது கூறி இருப்பதை நாடே அறியும்" என்று கூறியிருக்கிறேன். அதற்குப் பிறகு அவர்மீது நான் குற்றம் சொல்லலாமா கூடாதா என்று வருகிறபோது, மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ஆர். தாமோதரன் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். "அவை முன்னவர் நேரடியாகத் தவறு செய்தார்கள் என்று சொல்லாமல் அவருடைய கருத்தைத்தான் இங்கே தெரிவிக்கிறார்கள். அதை உறுப்பினர் அவர்கள் மறுத்துவிட்டால், அதுவும் அவைக் குறிப்பில் பதிவாகிறது" என்று குறிப்பிட்டார்கள். நான் பேசுகிறபோதே அந்தக் கருத்தை மறுக்கும் உரிமை உறுப்பினருக்கு இருக்கிறது. அவர் அவ்வாறு மறுத்த காரணத்தால், நான் அதற்கு மேல் போக விரும்பவில்லை என்று பேசியிருக்கிறேன். அதுவும் அவைக் குறிப்பில் இருக்கிறது. இது விவாதத்திடையே நடந்த ஒரு தவிர்க்க முடியாத சம்பாஷணையே தவிர, அவர் மீது வேண்டுமென்றே தவறான நோக்கத்தைக் கற்பிக்கவோ, அவருடைய அரசியல் எதிர்காலத்தைக் கெடுக்க வேண்டுமென்றோ நான் எதையும் கூறவில்லை. பொதுவாக நல்ல கருத்துக்களைச் சொன்னால், அரசு ஏற்றுக்கொண்டு ஹரிஜன மக்களுக்கு நன்மை செய்ய வாய்ப்பாக இருக்கும் என்றுதான் நான் குறிப்பிட்டேன் என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.



**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. எல்லமந்தா அவர்கள் உரிமைப் பிரச்சினை எழுப்பிய பிறகு, அவருடைய பேச்சையும், மாண்புமிகு அவை முன்னவர் அவர்களுடைய பேச்சையும் அவைக் குறிப்பேட்டிலிருந்து நான் முழுமையாகப் படித்துப் பார்த்தேன். அதைப் பார்த்ததில், மேற்போக்காகக்கூட இதில் உரிமைப் பிரச்சினை ஏதும் எழவில்லை என்று சொல்லி என்னுடைய அறையிலேயே தள்ளிவிட்டிருக்க முடியும். எனினும் அமைச்சர் ஒருவர் சம்பந்தப்பட்ட பிரச்சினையாக இருப்பதால், அவையே இதைத் தெரிந்துகொள்வது நல்லது என்றுதான் நான் இந்த உரிமைப் பிரச்சினையைப் பிரஸ்தாபிக்க அனுமதித்தேன்.

அவைக்கு வேண்டுமென்றே தவறான தகவலை, அவையைத் திசை திருப்பும் நோக்குடன் கூறியிருந்தால்தான், அது அவை உரிமை மீறிய பிரச்சினையாகும். இந்த நிகழ்வில் மாண்புமிகு அமைச்சர், உறுப்பினர் "அவ்விதமாக" வெளியில் பேசியுள்ளார் என்று கூறி, அதற்கு உறுப்பினர் அவையிலேயே தெரிவித்துவிட்டார். இந்த நிகழ்வு வெளியில் நடந்திருக்கின்றபடியால், எது உண்மை என்று அவைக்குத் தெரியாது. எனவே இருவர் கூற்றும் அவைக்குறிப்பில் இருக்கின்றன. இதில் அமைச்சர் வேண்டுமென்றே தவறான தகவலைக் கொடுத்தார் என்று கூறப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. எனவே, இதில் உரிமை மீறல் பிரச்சினை எதுவும் இல்லை என்று தீர்ப்பளிக்கிறேன்.

**(2) திண்டிவனத்தில் பல்லவன் போக்குவரத்துக் கழகத் துரிதப் பேருந்து எண். 504-ல் உறுப்பினர்கள் திருவாளர்கள் க. இராமமூர்த்தி, சி. ரா. லெட்சுமிகாந்தன் ஆகியோரை ஏற்றிக்கொள்ள மறுத்தது குறித்து.**

*மாண்புமிகு மேலவைத் தலைவர்:* மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் க. இராமமூர்த்தியும், சி. ரா. லெட்சுமிகாந்தன் அவர்களும் முன்னறிவிப்பு கொடுத்துள்ள உரிமைப் பிரச்சினை எவ்வாறு உரிமைப் பிரச்சினைக்கான விதியின்கீழ் வருகிறது என்பதைச் சுருக்கமாக விளக்கக் கோருகிறேன்.

THIRU K. RAMAMOORTHI: Hon. Chairman, the Staff in Tindivanam Pallavan Transport Express Depot and the crew of the Pallavan Transport Express No. 504 running between Athur and Madras did not permit us to board the bus in spite of intimation by me and Thiru C. R. Lakshmikandhan, M.L.C that we have to go to Madras for attending the meeting of the Legislative Council. The intimation was made at 10.30 a.m. on 12th March 1979. The bus concerned had vacant seats for 23 passengers. In spite of this, the crew did not care to provide us accommodation and when we protested, with great hesitation the conductor asked us to occupy the seats at the two ends of the bus after making a scene before the travelling passengers. Because of the humiliation it had to abandon the bus and take the next bus resulting in delay in our reaching Madras to attend the business of the House.

அவை நடைபெறுகிற நாளில் இந்தச் சம்பவம் நடைபெற்றது. நாங்கள் சென்னைக்குப் பயணம் செய்ய இருக்கிறோம் என்ற தகவல் தரப்பட்ட பிறகு இந்தச் சம்பவம் நடைபெற்றது. இந்த அவையின் உறுப்பினர்களுக் குத்தரப்படும் உரிமைகள் அல்லது சலுகைகள் எதுவாக இருந்தாலும், அவை களின் அடிப்படையில்தான், பேருந்து நிலையத்தில் இருப்பவர்களுக்குத் தகவல் தந்தோம். அதாவது அந்தப் பேருந்து நிலையத்தில் இருந்த பொறுப்பாளரிடம் எங்கள் பயணம் பற்றிய தகவல் தரப்பட்ட பின்னர், நாங்கள் இருவரும் பஸ்ஸில் ஏறிய பிறகு எங்களுக்கு இடம் தேடுகிற முறையில் பயணிகளை ஏற்கனவே உட்கார்ந்திருந்த இடங்களிலிருந்து இறக்கி வேறு இடத்திற்குப் போகச் சொல்வதைப் போலவும், அவர்களைச் சங்கடத்திற்கு ஆட்படுத்துவது போலவும், நாங்கள் சட்டமன்ற மேலவை



உறுப்பினர்கள் என்ற காரணத்திற்காகச் சில அதிகப்படியான உரிமைகளை
எடுத்துக்கொள்வதைப் போலவும் ஒரு நிலையை உருவாக்கினார்கள்
என்பதையும் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அந்தப் பேருந்து நிலையத்திற்கு வந்தவுடனே குறிப்பிட்ட பேருந்தில் 23
காலியிடங்கள் இருக்கின்றன என்ற தகவல் தரப்பட்டது. உடனே அங்கே
யிருந்த டைம் கீப்பர் அந்த நடத்துநரை அணுகி, இரண்டு எம்.எல்.சி.-க்கள்
சென்னைக்குப் பயணமாவதற்கு இருக்கிறார்கள், அவர்கள் இரண்டு பேருக்கும்
இடத்திற்கு ஏற்பாடு செய்துவிடுங்கள் என்று அறிவித்த பின்னரும் இந்த
சம்பவம் நடைபெற்றது.

எக்ஸ்பிரஸ் பஸ் கண்டக்டர்களைப் பொறுத்தவரையில், எந்தெந்த இடத்
தில் எத்தனை இடம் காலியாகிறது என்ற கணக்குத் தெரியும். அதற்குத்
தகுந்தாற்போல் இடமொதுக்குவது என்பதேகூட மிகச் சாதாரணமாகச்
செய்யக்கூடியதாகும். இந்த எண்ணுள்ள சீட், இன்னாருக்கு என்று நடத்துநர்
ஒதுக்க முடியும். ஆனால் குறிப்பிட்ட நாளன்று இந்தச் சம்பவம் வேண்டு
மென்றே நடைபெற்றது என்பது மட்டுமல்ல, அதற்குப் பிறகு எனக்குக்
கிடைத்த தகவல் என்னவென்றால்,—அது எந்த அளவுக்கு உண்மை என்பது
எனக்குத் தெரியாது—இந்த நடத்துநர் இதைப்போன்ற வேறு சில
சம்பவங்களிலும் ஈடுபட்டிருக்கிறாராம். அங்கே பணியாற்றுகிற பணி
யாளர்கள் என்னிடத்தில் சொன்னார்கள். அந்த நடத்துநர் வேண்டு
மென்றே ஒரு விரும்பத்தகாத சூழ்நிலையை உருவாக்கி, இந்தச் சம்பவத்
திற்குக் காரணமாக இருந்தார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.
இந்த உரிமைப் பிரச்சினையைப்பற்றி நான் அறிவிப்பு கொடுத்த பின்னர்,
நேற்றையதினம் இந்தப் பிரச்சினை வந்த பிறகு, சட்டமன்றப் பேரவை
உறுப்பினர்களும், மேலவை உறுப்பினர்களும் என்னைச் சந்தித்து, பல
நேரங்களில் இதுபோன்ற நிலைமை தங்களுக்கும் ஏற்பட்டதாகவும் இதை
எப்படி வெளியே சொல்வது என்ற எண்ணத்தில் அதைச் சொல்லாமல் விட்டு
விட்டதாகவும் தெரிவித்தார்கள்.

பொதுவாக, பேருந்துகளில் பணியாற்றுகிறவர்கள் பெரும்பாலும் மிகப்
பரிவோடும், அன்போடும் உறுப்பினர்களான எங்களுக்கு உதவுகிறார்கள் என்ற
நிலை இருந்தாலும், ஓரிருவர் வேண்டுமென்றே, சொந்தக் காரணங்கள்
காரணமாகவோ, அரசியல் காரணங்கள் காரணமாகவோ மற்றும் தங்களின்
சொபதாபங்கள் காரணமாகவோ, இது போன்ற நிலைமைகளை உருவாக்கு
கிறார்கள், அதன் மூலம் உறுப்பினர்களுடைய மரியாதையைக் குறைக்

கிறார்கள். இந்தச் சம்பவத்தின் காரணமாக நான் என்னுடைய சட்ட மன்றக் கடமையை அன்றைய தினம் சரியாக ஆற்றுவதிலிருந்து தடுக்கப் பட்டேன். எனவே இதை அவை உறுப்பினர் என்கிற வகையில் என்னுடைய உரிமையைப் பாதிக்கிற செயலாகக் கருதி, இந்தப் பிரச்சினையை உரிமைக் குழுவுக்கு அனுப்ப வேண்டுமென்றும், இதில் 'prima facie case' இருக்கிறது என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

* **திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவர் அவர்களே, இந்தச் சம்பவம் நடைபெற்ற அன்று நானும் அந்தச் சம்பவத்தால் பாதிக்கப்பட்டதன் காரணமாக அதைப்பற்றிச் சுருக்கமாக இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

நான் அன்றைய தினம் பேருந்து நிலையத்திற்கு வந்ததும், அங்குள்ள நிலையப் பொறுப்பாளரிடம் சென்று, எப்போதும் போல் தகவல் கொடுத்தேன். அப்போது அங்கே இருந்த பணியாளர், 'உள்ளே எம். எல். சி. இருக்கிறார். அங்கே சென்று அவருடன் அமருங்கள்' என்று சொன்னார். நான் உள்ளே சென்ற பிறகு, நானும் உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்களுமாக கொஞ்ச நேரத்திற்கு வெளியே வந்து பேசிக் கொண்டிருந்தோம். அப்போது பேருந்து வந்து நின்றது. அதிலிருந்து வந்த நடத்துநரிடம் அங்கேயிருந்த டைம் கீப்பர் எங்கள் இருவரையும் சுட்டிக்காட்டிப் பேசியதிலிருந்து எங்கள் இருவருக்கும் பேருந்தில் இடம் கொடுக்கச் சொன்னது எனக்குத் தெளிவாகத் தெரிந்தது. ஆனால் அந்த நடத்துனர் எந்தவிதமான ஏற்பாடும் செய்யாமல் வேறு எங்கேயோ சென்று விட்டார். பேருந்து புறப்படுகிற நேரத்தில் இந்தச் சம்பவம் நடந்தது. நாங்கள் நடத்துநர் இடத்திற்கு ஏற்பாடு செய்திருப்பார் என்று நினைத்துக் கொண்டிருந்தோம். 23 இடங்கள் அந்தப் பேருந்தில் காலி இடங்களாக இருந்தன. அப்படி இருந்தும் அவர் எங்களுக்கு உரிய மரியாதை கொடுத்து இடமொதுக்க எந்தவிதமான முயற்சியையும் எடுத்துக் கொள்ள

(பிற்பகல் 5-30)

வில்லை. மேலும், அந்த மேலாளர் தனிப்பட்ட முறையில் சொல்லியும் அவர் கேட்கவில்லை. அதுதான் இன்னும் வருந்தத்தக்கது. He simply disobeyed. He was very adament என்னுடைய 10 மாதகால அனுபவத்திலே இப்படிப் பட்ட ஒருவரைப் பார்த்ததில்லை. பொதுவாக V.I.P. என்று போட் டிருப்பதன் பொருளே நடத்துநர்களுக்குப் புரியவில்லை. V.I.P என்றால் என்ன என்று கேட்கிறார்கள். மற்றொன்று, நாங்கள் ஏதோ இலவசமாகப் பேருந்துகளில் பயணம் செய்வதாக அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் பணியாற்றும் ஓட்டுநர்களும், நடத்துநர்களும் நினைக்கிறார்கள். மேலவைத்



துறையிலிருந்து இதற்காகப் பணம் ஒதுக்கப்படுகிறது என்ற எண்ணம் அவர் களுக்கு இல்லை. இந்தக் குறிப்பிட்ட நிகழ்ச்சி நடந்ததன் காரணமாக மேலவை உறுப்பினர் என்ற வகையிலே என்னுடைய உரிமை பாதிக்கப்பட்டது என்ற வகையிலும், என்னுடைய கடமையை ஆற்றும் முயற்சியிலே குறிப் பிட்ட அளவு காலதாமதம் ஏற்படுத்தப்பட்டது என்ற வகையிலும் ஒரு குறிப் பிட்ட கால அளவுக்கு என்னுடைய கடமையைச் செய்ய முடியாமல் தடுக்கப் பட்டேன் என்ற வகையிலும் இதை உரிமைக் குழுவுக்கு அனுப்ப வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மேலவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்களும், மாண்புமிகு உறுப் பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்களும் எழுப்பியிருக்கின்ற இந்தப் பிரச்சினை உரிமைப் பிரச்சினையின்கீழ் எழுகின்றதா என்பதை விதிகளின் அடிப்படையில் முடிவு செய்யலாம். இருந்தபோதிலும் மாண்புமிகு உறுப்பி னர்களுக்கு இத்தகைய சம்பவம் அந்த இடத்தில் நிகழ்ந்தது குறித்து நான் உண்மையிலேயே வருத்தப்படுகிறேன். நானும் தகவலைக் கேட்டதிலிருந்து திண்டிவனத்திலே 26 பயணிகள் இறங்கிய பிறகு, மேலும் 8 பேர்களும் இறங்கி மொத்தம் 34 இடங்கள் காலியாகியிருக்கின்றன. மேலாளர் கூட அதை நடத்துநருக்குக் கூறியபோது, நடத்துநர் குறிப்பிட்ட உறுப்பினர் களுக்கு இடங்களை ஒதுக்கியிருக்கலாம். ஆனால் பயணிகள் ஏற்கெனவே முன்னதாகவே சென்று வி.ஐ.பி.-க்களுக்கான இடங்களிலே உட்கார்ந்திருந் தார்கள் என தகவல் கொடுக்கப்பட்டிருக்கிறது. வருங்காலத்தில். . . . .

**திரு. க. இராமமூர்த்தி :** It is false. எங்களுக்கென ஒதுக்கப்பட் டுள்ள இடங்கள்தான் வேண்டும் என்று கேட்கவில்லை. பஸ்ஸிலே இடம் இருக்கிறது. ஆனால்
He did not take any steps to provide seats and allowed others to fill in.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மேலவைத் தலைவர் அவர்களே, நான் கூறுவது V.I.P. களுக்கென ஏற்கனவே சில இடங்கள் ஒதுக்கப்பட் டிருக்கின்றன. அவர்களுக்கென அவ்வாறு ஒதுக்கப்பட்ட இடங்களுக்கு V.I.P. வருகின்றபோது முன்னுரிமையாக—அந்த இடங்களில் மற்றவர்கள் வந்து அமர்ந்திருந்தாலும் அவர்களை உடனடியாக வேறு இடங்களுக்கு மாற்றிவிட்டு— V.I.P. -களுக்கு என இருக்கும் இடங்களைத் தரவேண்டும் என்று போட வேண்டும் என்று முடிவு எடுத்திருக்கிறோம். அது மட்டுமல்ல,

நூல் விலை குறைப்பு சம்பந்தமாக தமிழக அரசு மத்திய அரசுடன் தொடர்பு கொண்டுள்ளது. கைத்தறிக்கு நியாயமான விலையில் நூல் விற்பனை செய்ய 'டெக்ஸ்டைல்ஸ் கார்ப்பரேஷன்' தமிழ்நாட்டில் பல இடங்களில் கிளைகள் திறந்துள்ளன. சமீபத்தில் கூட்டுறவு நூற்பாலைகளில் உற்பத்தி செய்யப்படுகின்ற நூல்கள் தனியார் துறையில் வேலை செய்கின்ற நெசவாளர்களுக்குக் கிடைக்கின்ற வகையில் மதுரை கூட்டுறவு நூற்பாலையின் கிளை ஒன்றினைத் திறந்திருக்கிறோம். தொழிலாளர்களுக்கு ப்ராவிடன்ட் ஃபண்ட், போனஸ் போன்ற எல்லாம் அளிப்பது குறித்து ராஜா சுப்பிரமணியம் கமிட்டியின் சிபாரிசை அரசு பரிசீலித்து வருகிறது. நெசவாளர்களின் நன்மையைக் கருத்தில்கொண்டு அதற்கென சட்டமுன் வடிவு இந்த சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிவடைவதற்குள்ளாகவே கொண்டு வரவேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் அரசு தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. ஏற்றுமதி தீவிரமாக இருப்பதால் மாஸ்டர் வீவர்களும் நல்ல கூலிகளை வழங்கி வருகின்றனர். கடந்த 20 ஆண்டுகளில் கிடைக்கப்பெற்ற கூலியை விட கூடுதல் அளவில் கூலி வழங்கப் படுகிறது. நெசவுத் தொழில் ஒரு சிறப்பான கட்டத்தை எய்தி வரும் இந்தச் சூழ்நிலையில் நெசவாளர்கள் கிளர்ச்சி, மறியல் போன்றவற்றில் ஈடுபட வேண்டாம் என அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். எனவே இதற்காக அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : அமைச்சர் அவர்கள் விளக்கத்திற்குப் பிறகு, இப்பிரச்சினை குறித்து அவையை ஒத்தி வைத்து விவாதிக்கத் தேவையில்லை என்று நான் கருதுவதால் அனுமதி மறுக்கிறேன்.

**(2) மேற்கு மாம்பலத்தில் இரு குழுக்களிடையே ஏற்பட்ட மோதல் குறித்து.**

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : அடுத்து உறுப்பினர்கள் திருவாளர்கள் எம். சங்கரலிங்கம், தங்கப்பாண்டியன், இராமமூர்த்தி ஆகியவர்கள் மேற்கு மாம்பலத்தில் நடந்த நிகழ்ச்சி குறித்து ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு முன்னறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். அது எவ்வாறு விதிகளின்கீழ் வருகிறது என்று உறுப்பினர்கள் சுருக்கமாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

(பிற்பகல் 5-40)

* **திரு. வே. தங்கப்பாண்டியன்** : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தப் பிரச்னையில் அரசு முழுக் கவனம் செலுத்த வேண்டும் என்ற காரணத்திற்காகத்தான் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறோம்.



தமிழகத்தினுடைய தலைநகரத்திலேயே இரண்டு தினங்களுக்கு முன்னால் சட்டம் ஒழுங்கு மிகவும் பாதிக்கத்தக்க அளவுக்கு நிலைமைகள் கடுமையாக இருந்திருக்கின்றன. மாம்பலம், தி. நகர் பகுதியில் வாழ்கிற மக்கள் சென்னை நகரத்திற்கு மரியாதையும், சிறப்பையும் உண்டாக்கியிருக்கிறார்கள். தலைநகரிலேயே, நிர்வாகமும், போலீசும் கண்காணிக்கிற இந்த இடத்திலேயே கடைகள் நொறுக்கப்பட்டிருக்கின்றன. இரண்டு கோஷ்டிகள் செய்த இந்தக் கலவரத்தின் விளைவாக, பொதுவுடைமைகளுக்குப் பாது காப்பு இருந்தாலும், பொதுமக்கள் எல்லாம் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். தொடர்ந்து சென்னையிலே இப்படிப்பட்ட பதட்டமான நிலை இருந்ததை அரசாங்கம் கண்காணித்துக் கடுமையான நடவடிக்கையை எடுக்காத காரணத்தாலேதான், சில சமூக விரோதிகள் சட்டத்தைக் கையில் எடுத்துக் கொண்டு, ஆளும் கட்சியினுடைய ஆதரவு தங்களுக்கு இருக்கிறது என்று காட்டுகிற வகையில் கலவரத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். யார் தவறு செய்தாலும், அவர்களைத் தண்டிக்க வேண்டும். இப்பேர்ப்பட்ட கலவரத்தினால் அமைதியான முறையில் வாழ்கிற மாம்பலம், தி. நகர் பகுதியில் உள்ள மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இதைக் குறித்து பல பத்திரிகைகள், குறிப்பாக பெரிய பத்திரிகையான இந்துப் பத்திரிகை கூட விமர்சனம் செய்திருந்தும், இந்த விஷயத்தில் அரசாங்கம் மெத்தனமாக இருக்கிறது. இன்றைக்கு அரசாங்கத் தரப்பிலே விளக்கங்களைக் கொடுத்தாலும், கடுமையான நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்களா என்பது தெரியவில்லை. முன்பு ஓட்டேரியில் நடந்தது, அதைத் தொடர்ந்து அதே மாதிரியாக இன்றைக்கு மேற்கு மாம்பலத்திலே சம்பவம் நடந்திருக்கிறது. ஓட்டேரியில் நடந்த கலவரத்தைப்பற்றிச் சரியான முறையில் நடவடிக்கை எடுக்காததால்தான், இன்றைக்கு மேற்கு மாம்பலத்திலே நடந்த பொதுக் கூட்டத்தில் இந்தக் கலவரம் விளைவிக்கப்பட்டு, கடைகள் எல்லாம் தாக்கப்பட்டு, சினிமா கொட்டகையும் தாக்கப்பட்டு, பொதுமக்களும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இங்கே அரசாங்கத்தினுடைய எல்லா அலுவலகங்களும், அரசாங்கமும், போலீசும் இருந்தும் கூட, இவ் விஷயத்தில் மிகவும் மெத்தனமாக இருந்திருக்கிறார்கள். இதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. கிராமங்களில் வேண்டுமானால் இம்மாதிரி கலவரங்கள் வரும்போது உடனடியாக நடவடிக்கை எடுக்க முடியாமல் இருக்கலாம். ஏனென்றால் அங்கே பலவித வசதிகள் இல்லை. உத்தரவுகள் செல்லுவதில் தாமதம் ஏற்பட்டிருக்கலாம். எஸ்.பி.-யிடமிருந்து டி.எஸ்.பி.-க்கு உத்தரவுகள் செல்வதில், போக்குவரத்து அதிகமாக இல்லாததால், தாமதம் ஏற்படலாம். ஆனால் சென்னையிலே அப்படி இல்லை, போலீஸ் கண்காணிப்பு அதிகம் இருக்

இதுபோன்று ஏற்கெனவே பல பிரச்சினைகள் எழுந்து, அதுபற்றிக்கூட அரசுக்குத் தகவல்கள் வந்து அவ்வப்போது உத்தரவுகள் பிறப்பித்துக்கொண்டிருக்கிறோம். இதுகுறித்து, அந்த நடத்துநர் மீது நடவடிக்கை எடுக்க அரசு உத்தரவிட்டிருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்கள் இதை வலியுறுத்துகிறார்களா?

**திரு. க. இராமமூர்த்தி:** I feel there is a prima facie case. ஆனால், இதை உரிமைக் குழுவுக்கு அனுப்ப வேண்டுமா என்பதைத் தலைவர் அவர்களுடைய முடிவுக்கும், அவையின் முடிவுக்கும் விடுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இதைப்பற்றி நாளைக்குத் தெரிவிக்கிறேன்.

(3) திரு. ஜி. வசந்த பை எழுப்பியுள்ள உரிமைப் பிரச்சினை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உறுப்பினர் திரு வசந்த பை அவர்கள் ஒரு உரிமைப் பிரச்சினை கொடுத்திருக்கிறார்கள். அதைப்பற்றி நாளைக்கு தெரிவிக்கிறேன்.

### 3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### (1) ராஜா சுப்பிரமணியம் கமிட்டியின் சிபாரிசை வெளியிடக் கோரி கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் மறியல் செய்வதும் கைதாகி வருவதும் குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் கைத்தறித் தொழிலுக்கான ராஜா சுப்பிரமணியம் கமிட்டியின் சிபாரிசை வெளியிடக் கோரி கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் மறியல் செய்வதும், கைதாகி வருவதும் குறித்து ஒத்திவைப்புத் தீர்மானத்துக்கு முன்னறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். அது எவ்வாறு விதிகளின்கீழ் வருகிறது என்று உறுப்பினர் சுருக்கமாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

* **திரு. ஆ. நல்லசிவன் :** தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் நூற்றுக்கணக்கான கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் கடந்த 3 தினங்க ளாக தங்களுடைய முக்கியமான கோரிக்கைகளை வலியுறுத்தி அரசு அலு வலகங்கள் முன்னே மறியல் செய்து கைதாகி வருகிறார்கள். மதுரை நகரத்தில் மறியல் செய்த 800-க்கு மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட் டிருக்கிறார்கள். சேலம், கோயம்புத்தூர், தென்னாற்காடு, வடாற்காடு போன்ற இடங்களிலும், மாநிலத்தில் பல்வேறு பகுதிகளிலும் இவ்வாறு மறியல் செய்து கைதாகிக்கொண்டு வருகிறார்கள். அவர்கள் கைத்தறித் துணிகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் பொறுப்பை அரசே



ஏற்க வேண்டும். நூலை மில் விலையிலே அரசு கொள்முதல் செய்து நெசவாளர்களுக்குக் கொடுக்க வேண்டும் ; கைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்கு வேலை உத்தரவாதம் வேண்டும் ; ராஜா சுப்பிரமணியம் கமிட்டி சிபாரிசை வெளியிட்டு அதை அமுல்படுத்த வேண்டும் ; அவர்களுக்குச் சம்பள உயர்வு வேண்டும் என்பன போன்ற கோரிக்கைகளை முன் வைத்திருக்கிறார்கள். லட்சக்கணக்கான கைத்தறி நெசவாளர்களின் குடும்பங்களைப் பாதிக்கும் பிரச்சினையாக இப்பிரச்சினை இருப்பதாலும், நூற்றுக்கணக்கான நெசவாளர்கள் கைது செய்யப்பட்டிருப்பதனால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை காரணமாகவும் இப்பிரச்சினையைப் பற்றி விவாதிக்க அவையின் இதர அலுவல்கள் அனைத்தையும் ஒத்திவைக்க வேண்டுகிறேன்.

* **மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, சென்ற 12, 13 ஆகிய தேதிகளில், மதுரை, கும்பகோணம், கோவை, செங்கற்பட்டு, வடாற்காடு ஆகிய மாவட்டங்களில் கைத்தறி நெசவாளர்கள் பல கோரிக்கைகளை முன் வைத்து மறியல் போராட்டத்தில் ஈடுபடுவதாகவும், 14-3-1979 அன்று குறிஞ்சிப்பாடி, பண்ருட்டி, கடலூர் ஆகிய ஊர்களில் நெசவாளர்கள் கிளர்ச்சி செய்யப் போவதாகவும் அரசுக்குத் தகவல் கிடைத்துள்ளது. தவிர, இராமநாதபுரம், திருச்சி, சேலம், திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் இதுவரை நெசவாளர்கள் கிளர்ச்சிகள் எதுவும் நிகழவில்லை. கைத்தறி தீவிர வளர்ச்சி திட்டத்தின் அடிப்படையில் கரூர், காஞ்சிபுரம், ஈரோடு, குறிஞ்சிப்பாடி, சேலம், மதுரை ஆகிய இடங்களில் தீவிர கைத்தறி வளர்ச்சி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றில் சுமார் 6,000 நெசவாளர்கள் வேலை பெற்றுள்ளனர். இந்நிலையங்களின் நெசவாளர்களின் எண்ணிக்கையை 22,000 ஆக அடுத்த இரண்டாண்டுகளில் உயர்த்தப்படும் திட்டமும் பரிசீலனையில் இருக்கிறது. இந்நிலையங்களின் கிளைகள் அந்தந்தப் பகுதிகளில் தேவையான பகுதிகளில் நிறுவப்படும். கைத்தறித் துணியின் ஏற்றுமதியை விஸ்தரிக்க சென்ற ஆண்டு இரண்டு தூதுவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று ஆர்டர் பெற்று இதுவரை ஒரு கோடி ரூபாய் அளவுக்கு மேல் கைத்தறித் துணிகள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. தற்போது கூட கைத்தறி இயக்குநரும், கோ-ஆப்டெக்ஸ் தனி அதிகாரி அவர்களும் ஆஸ்திரேலியா, ஹாங்காங், சிங்கப்பூர் போன்ற இடங்களுக்கு ஏற்றுமதி ஆர்டர் பெறுவர சென்றுள்ளனர். ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் கைத்தறித் துணிகள் ஏற்றுமதி கோ-ஆப்டெக்ஸ் மூலம் சுமார் 10 கோடி ரூபாய் அளவுக்கு ஏற்றுமதி செய்ய திட்டமிட்டுள்ளோம்.

நது: உடனடியாக 'ஒயர்லெஸ்' மூலமாக செய்தியைக் காவல் நிலையத்திற்கு அனுப்பி நடவடிக்கை எடுத்திருக்கலாம். முன்பு ஓட்டேரியில் நடந்தது இன்றைக்கு மேற்கு மாம்பலத்திற்கு வந்திருக்கிறது. இதைத் தொடர்ந்து இன்னும் வேறு பகுதிக்குச் செல்லக்கூடிய நிலைமைகள் எல்லாம் இருக்கின்றன. இந்த நிலைமைகளை கடுமையான நடவடிக்கை எடுத்துத் தடுக்க வேண்டும். தலைநகரிலேயே பொதுமக்களுக்குப் பாதுகாப்பு இல்லாத சூழ்நிலையை சமூக விரோதிகள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு இத்தகைய கலவரங்களில் ஈடுபட்டிருக்கிறார்கள். இதைப்பற்றி விவரமாக பேசி மேற்கொண்டு நடவடிக்கைகளை எடுக்க வேண்டியிருப்பதால், இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து இதைப் பற்றிப் பேச வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

* திரு. க. இராமமூர்த்தி: தலைவர் அவர்களே, என்னுடைய தீர்மானத்தை முதலில் சொல்லிவிடுகிறேன்.

"to adjourn the business of the House to discuss the clashes between two groups in West Mambalam, Madras resulting in violence in the cinema-house, throwing of stones on shops and residential houses as also the consequent tension prevailing in the area".

தலைவர் அவர்களே, இந்தச் சம்பவம் சென்னை நகரிலே திடீரென்று ஏற்பட்ட சம்பவம் இல்லை. இதைப் போன்ற பல சம்பவங்கள் நாட்கணக்கிலே தொடர்வதும், ஒரு குறிப்பிட்ட பகுதியிலே அவர்கள் அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்களோ அல்லது தனிப்பட்ட வேறு தவறான தொழிலில் ஈடுபட்டிருக்கிறவர்களோ, இரு சாராருக்கும் அராஜக உணர்வுகள் ஏற்பட்டு அதன் விளைவாக இப்படிப்பட்ட சம்பவங்கள் தொடர்ந்து இரண்டு, மூன்று நாட்களுக்கு நடைபெறுவதும், அதன் காரணமாக அந்தப் பகுதியிலே தொழில் அமைதி கெடுவதும், அங்கே வாழ்பவர்களுடைய அன்றாட வாழ்க்கை பாதிக்கப்படுவதுமான நிலை தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இதைக் கண்காணிப்பதில் ஒரு மெத்தனப் போக்கு இருக்கிறது என்பதைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். பலமுறை இதை அரசாங்கத்தில் யாருடைய கவனத்திற்குக் கொண்டு வரவேண்டுமோ அவர்களிடம் தெரிவித்த பிறகும், இப்படிப்பட்ட சம்பவங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. சென்னையில் இருக்கிற சாராயம் காய்ச்சுபவர்களும், அரசியல் கட்சியைச் சேர்ந்த வன்முறையாளர்களும், இது போன்ற பல்வேறு





தொழில்களைச் செய்கிறவர்களும், வாய்ப்பும் வசதியும் படைத்தவர்கள் என்பதால் தங்களுடைய செல்வாக்கை வைத்துக்கொண்டு, இப்படிப்பட்ட கலவரங்களை நடத்த முடியும் என்ற நிலை இன்றைக்கு இருக்கிறது. இதுபோன்ற நிகழ்ச்சிகளில் ஈடுபடுகிறவர்கள் சமூக விரோதிகள், அவர்கள் அன்றாடம் காவல் நிலையத்திற்கு வந்து கையெழுத்திட்டாக வேண்டும் என்ற பிரிவு சட்டத்திலே இருக்கிறது. அதைக் கண்டுபிடித்து அவர்களைக் கண்காணிப்புச் செய்ய முடியும். ஆனால் அவர்கள் அதையெல்லாம் தாண்டியிருந்த செல்வாக்கோடு சாதாரண மனிதனுடைய வாழ்க்கையை அவலப்படுத்திவிடக் கூடிய நிலையில் பல நிகழ்ச்சிகளை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். முன்பு ஓட்டேரியில் இப்படி நடந்தது என்ற தகவல். அதைத் தொடர்ந்து பல சம்பவங்கள் நகரத்தின் பல பகுதிகளிலும் தொடர்ந்து நான்கைந்து நாட்களுக்கு நடைபெறுகின்ற நிலை இருந்து வருகிறது. இதன் காரணமாக சென்னை நகரில் அமைதியில்லாத நிலை ஏற்படுகிறது என்பதோடு மட்டுமல்லாமல், வசதி, வலிவு, பணம், அரசியல் செல்வாக்கு ஆகியவற்றை உடையவர்கள் இதுபோன்ற கலவரம், கொள்ளை ஆகிய சம்பவங்களில் ஈடுபடக்கூடிய நிலை வளர்ந்து வருகிறது. இதைத் தவிர்க்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்தாக வேண்டும். இந்த நடவடிக்கை தான் மற்ற எல்லாவற்றையும் விட மிக முக்கியமானது என்பதால், அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இந்த நிலை பற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

* மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய அனுமதியோடு 1-9-1978 அன்று நடந்த பழைய சம்பவத்தையும் குறிப்பிட விரும்புகிறேன். ஆரம்பத்திலிருந்தே இரண்டு குழுக்களுக்கும் இடையே இருந்த சூழ்நிலையில் விளைவாகத்தான் இப்போது இந்த நிகழ்ச்சி நடந்திருக்கிறது. அதனுடைய தொடர்புதான் இது. அதனால் சுருக்கமாகச் சொல்லி இந்த அறிக்கையை வாசிக்க விரும்புகிறேன்.

[திரு. கா. இராசா முகமது] [1979 மார்ச் 14

1-9-1978 அன்று மயிலாப்பூர் கபாலியை ஆறுமுகமும் மற்றவர்களும் கத்தியால் குத்தியதாகவும் அது சம்பந்தமாக அபிராமபுரம் காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு சைதாப்பேட்டை மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் விசாரணை நடந்து வருகிறது. மயிலாப்பூர் ஆறுமுகம் தான் திருப்பி தாக்கப்படுவோம் என்ற அச்சத்தில் மயிலாப்பூர் பகுதியைக்காலி செய்துவிட்டு சைதையில் குடியேறினார். சைதையில் ஏற்கெனவே இரு கள்ளச்சாராய கோஷ்டிகள் இருந்து வருகின்றன. ஒன்று, துரை குமார் கோஷ்டி, இன்னொன்று கடும்பாடி கோஷ்டி. மயிலாப்பூர் ஆறுமுகம் துரை கோஷ்டியின் ஆதரவில் ஜாபர்ககன் பேட்டையில் வசித்து வருகிறார். துரை கோஷ்டிக்கும் கடும்பாடி கோஷ்டிக்கும் முன்பே பகையுணர்வு இருந்து வந்துள்ளது. துரை கோஷ்டியினர் கடும்பாடி கோஷ்டியை 19-11-1978 அன்று தாக்கியதாகவும் அது சம்பந்தமாக சைதை காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. துரை கோஷ்டியினரும் கடும்பாடி கோஷ்டியினரும் அ.தி.மு.க. என்று தங்களைக் கூறி வந்தனர். ஆனால் இந்த சம்பவத்திற்குப் பிறகு துரை கோஷ்டியினர் தங்களை தி.மு.க. என்று கூறி வந்தனர்.

மயிலாப்பூர் கபாலியினுடைய தூண்டுதலின் பேரில் கடும்பாடி கோஷ்டியினர் 8-3-1979 அன்று துரை கோஷ்டியைச் சேர்ந்த குமார் என்பவரைக் கத்தியால் குத்தியதாகவும், அந்த வழக்கு சைதாப்பேட்டையில் பதிவு செய்யப்பட்டு ஆய்வில் இருந்து வருகிறது. குமார் என்பவர் மதுவிலக்குச் சட்டத்தின் கீழ் 10 தடவைகளுக்கு மேலாக அபராதம் செலுத்தியவர்.

சந்திரன் என்கிற சின்னப்பையன் இவ்வழக்கில் கைது செய்யப்பட்டுள்ளார். மயிலாப்பூர் ஆறுமுகமும், துரையும் மதுவிலக்குச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர். அசோக் நகர் 116-வது வட்டத்தில் தி.மு.க.-வினருக்கும், அ.தி.மு.க.-வினருக்கும் பகையுணர்வு வளர்ந்து வந்தது. இவ்வட்டத்தின் தி.மு.க. செயலாளர் எஸ். கே. சாஎ, அ.தி.மு.க; அமைப்பாளர் பட்டாபி 27-2-1979 அன்று நடைபெற்ற தி.மு.க. பொதுக் கூட்டத்தில் அ.தி.மு.க.-விலிருந்து விலகிய சீனு என்கிற சீனிவாசன் தலைமை தாங்கினார். இக்கூட்டத்தில் பட்டாபி பற்றி கடுமையாக விமர்சித்ததால், இருசாராருக்கும் இடையே மோதும் அளவிற்கு நிலைமை முற்றியது.



1979 மார்ச் 14] [திரு. கா. இராசா முகமது]

7—3—1979 அன்று இரவு சமாதானப்படுத்துவதற்காக பட்டாபி என்று அ.தி.மு.க.-வைச் சேர்ந்தவர்கள் இருசாராரையும் மன்றத்திற்கு வர அழைத்தார். தி.மு.க.-வைச் சேர்ந்த எஸ். கே. சாமி மட்டுமே வந்தார். தி.மு.க.-வைச் சேர்ந்தவர்கள் வேறு யாரும் வரவில்லை. ஆகவே, பஞ்சாயத்து நடைபெறவில்லை. அப்போது திடீரென்று தம்பையா ரெட்டித் தெரு, பிருந்தாவன் சாலை சந்திப்பில் சோடா பாட்டில்கள் வீசப்பட்டன. காவல் துறை உடனே அங்கு சென்று நிலைமையைக் கட்டுக்குள் கொண்டு வந்தனர். பிருந்தாவன் சாலை சந்திப்பில் தன் கடையிலிருந்த சோடாபாட்டில்களை வீசியதாக வேதாசலம் புகார் செய்தார்.

9—3—1979 அன்று பட்டாபியும், அவரோடு சேர்ந்த 15 பேரும் தனது கடைக்கு வந்து சீனன் என்பவரைத் தாக்கியதாக தி.மு.க. எஸ். கே. சாமி புகார் செய்தார். தன் சைக்கிள் கடையையும் தாக்கியதாக புகார் செய்தார். சீனன் மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டுள்ளார். வழக்கு பதிவு செய்யப்பட்டு, ஆய்விலுள்ளது.

10—3—1979 அன்று சீனனின் ஆதரவாளர்களான, தி.மு.க.-வினர் என்று கூறப்படுகின்ற சுமார் 100 பேர்கள் இரவு 8-30 மணியளவில் லேக் வியூ ரோடு, சல்வான்கோவில் தெருவில் பிருந்தாவன் சாலையில் கலகம் விளைவித்தனர். கோவிந்தன் என்பவரின் டீக் கடையை சேதப்படுத்தினர். டி.எம்.சி. 1524 என்ற ஆட்டோ ரிக்ஷா சேதமாயிற்று. டிரைவர் மாணிக்கமும் காயமுற்றார். பரமசிவத்தின் வெற்றிலை பாக்கு கடைக்கும் சேதம். மாட்டுக் கொட்டகைக்குத் தீ வைக்க முயற்சித்தனர். லேக் வியூ ரோடில் உள்ள கான்டீன் டியூப் லைட்டுக்கு சேதம் விளைவித்தனர். தியேட்டர் முன்னால் உள்ள டீக் கடையில் வேலை செய்யும் பாஸ்கரன் காயமுற்றார். இக்கலவரத்தில் ஒரு காவலர் காயமுற்றார். காவல்துறை தலையிட்டு நிலைமையைக் கட்டுப்படுத்தியது. கோவிந்தன் புகாரின் பேரில் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. காவல் துறையினர் இப்பகுதியைத் தீவிரமாகக் கண்காணித்து வந்தனர்.

12—3—1979 அன்று 8-30 மணி அளவில் மூர்த்தி என்பவர் ஜோன்ஸ் ரோடு வழியாகப் போகும்போது பூங்காவனமும் மற்றும் 3 பேர்களும் சேர்ந்து புருவத்தையும், மீசையையும் மழித்து விட்டதாகவும் தன்னைத் தாக்கியதாகவும் புகார் செய்தார். மூர்த்தி பொது மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டார். வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(திரு. கா. இராசாமுகமது) [1979 மார்ச் 14

12—3—1979 அன்று 3-30 மணியளவில் எஸ். கே. சாமி என்பவருடைய கடை தீப்பிடித்தது. மின்சாரக் கோளாறினால் தீப்பித்ததாக கூறப்படுகிறது. காவல் துறையினரும், தீயணைக்கும் படையினரும் விரைந்து தீயணைத்தனர். ரூ. 1,000 இழப்பு ஏற்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. சோமநாதன் கொடுத்த புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. 7—3—1979 முதல் 10—3—1979 வரை இக்கலவரத்தின் காரணமாக 40 பேர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். நிலைமை கட்டுக்கடங்கியுள்ளது என்கின்ற காரணத்தால் அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து, விவாதிக்கத் தேவையில்லை என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

(பிற்பகல் 5-50)

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : மாண்புமிகு முன்னவர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, இப்பொருள் குறித்து அவையின் அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்கத் தேவையில்லை என்று என் அனுமதியை மறுக்கிறேன்.

## 4. ஒழுங்குப் பிரச்சினை.

### உறுப்பினர் பேசுவதற்கு அனுமதிப்பது குறித்து.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி** : மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் 'எ பாயின்ட் ஆப் ஆர்டர்' பற்றிக் கேட்க விரும்புகிறேன். சில நிமிடங்களுக்கு முன்னால் மாண்புமிகு அங்கத்தினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் ஒரு உரிமைப் பிரச்சினையை இங்கே கொண்டுவந்தபோது, நான் ஒன்றை விளக்கக்கூடிய வகையில், மேலவை விதி 162-ன்படி நான் ஒரு பிரச்சினையை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர எழுந்தேன். நான் எழுந்து என்ன சொல்லப்போகிறேன் என்று கூடக் கேட்காமல், என்ன காரணத்தினாலேயோ அந்த உரிமைப் பிரச்சினையில் நான் எழுந்துகொள்வது சரி அல்ல என்ற அளவில் நிறுத்திவிட்டீர்கள். பொதுவாகவே ஒரு உரிமைப் பிரச்சினையை எழுப்புவது முறை தானே. எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கூட இதுகுறித்துக் கருத்து சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு அங்கத்தினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் பிரச்சினையைப் பார்க்கும்போது, நேரடியாகவே அதில் பிரைமா பேசி உரிமை மீறல் இருக்கிறது. முன்புகூட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் ரெயிலிலே போகின்றபோது நாடாளுமன்ற உறுப்பினர் என்று தெரியாது தள்ளிவிட்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : உறுப்பினர் அவர்களுடைய பாயின்ட் ஆப் ஆர்டர் என்ன?



**திரு. ஆற்காடு நா. வீராசாமி** : நான் என்ன சொல்ல வருகிறேன் என்றால், விதியில், உரிமைப் பிரச்சினை அவையினாலேயே நேர்முகமாக ஆய்வு செய்யப்பட வேண்டும் என்று ஒரு தீர்மானத்தைக் கொண்டு வருவதற்கு எந்த உறுப்பினரையும் அனுமதிக்கலாம் என்று இருக்கிறது. அந்தப் பிரச்சினையை நான் எழுப்புவதற்கு அனுமதிக்கலாம். அப்படி அனுமதிக்காதது முறைதானா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் அவருடைய பேச்சிலே ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். பல முறை நான் அனுமதித்திருக்கிறேன். அந்த அளவுக்கு நான் நல்லவன் என்பதைக்கூட ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு கட்சித் தலைவரும் அவர்களுடைய அபிப்பிராயத்தைச் சொல்கிறார்கள். இந்தப் பிரச்சினையைக் குறித்து நான் இன்னும் தீர்ப்பே அளிக்கவில்லை. நான் கூட தீர்ப்பை ஒத்திவைத்திருக்கிறேன். தலைவரை வற்புறுத்த முடியாது. தலைவர் விரும்பினால் அனுமதிக்கலாம். தலைவரை ஒவ்வொருவரும் வற்புறுத்தினால், அவையை நடத்தமுடியாத நிலைமை ஏற்படும். அவையை நடத்த வேண்டும். ஆகவே எந்தப் பிரச்சினையிலும் அங்கத்தினர்கள் அவையில் உள்ள ஒரு மரபை ஒட்டியே நடந்துகொள்ள வேண்டும் என்பது நாம் அறியாததல்ல என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்

## 5. மேலவை விதி 82-ன் கீழ் அமைச்சரின் விளக்க அறிக்கை.

### சிம்கோ மீட்டர்ஸ் வேலைநிறுத்தம் குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் சட்ட மேலவை விதி 82-ன் படி அவைக்கு ஒரு அறிக்கையை அளிப்பார்கள்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்** : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

7—3—1979 அன்று சட்டப்பேரவையில் அவை முன்னவர் அவர்கள் அறிவித்தபடி, 8—3—79 அன்று மாலை அனைத்துக் கட்சித் தலைவர்கள், அனைத்துத் தொழிற்சங்கத் தலைவர்கள் கொண்ட கூட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் சிம்கோ மீட்டர் தொழிற்சாலை பற்றிப் பல தலைவர்களும் தங்கள் கருத்துக்களை எடுத்து வைத்த பின்னர், இப்பிரச்சினையை சட்டத்திற்குட்பட்டும் தொழிலாளர்களின் நன்மையைக் கருத்தில் கொண்டும் அரசு எடுக்கும் முடிவை ஏற்றுக்கொள்வது என்றும் முடிவு எடுத்தனர். மாண்புமிகு முதல்வர் அவர்களும் சம்பந்தப்பட்டவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தி விரைவில் தொழிற்சாலை திறப்பதற்கு தக்க நடவடிக்கை எடுப்பதாகக் கூறினார்கள்.

அதன்படி முதலமைச்சர் அவர்கள் நடத்திய பேச்சுவார்த்தையின் பயனாக திருச்சி சிம்கோ மீட்டர் தொழிற்சாலை 16—3—1979 அன்று கதவடைப்பு நீக்கித் திறக்கப்படும் என்ற நற் செய்தியை இந்த அவைக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதற்கு முதல் படியாக இன்று 14—3—1979 அல்லது நாளை முற்பகல் ஐ.என்.டி.யு.சி. தொழிற்சங்கம் உயர்நீதி மன்றத்தில் தொடர்ந்துள்ள உரிமை மனுவை (ரிட் பெட்டிஷன்) திரும்பப் பெறும். 15—3—1979 அன்று மாலை தொழிலாளர்கட்கு கீழ்க்கண்ட சலுகைகள் வழங்கும் ஒப்பந்தம் திருச்சி தொழிலாளர் அலுவலர் முன்பு கையெழுத்திடப்படும்.

1. நிர்வாகம் இன்று தினக் கூலி ரூ. 4.50 பெறும் தொழிலாளர்களில் 102 பேரை நிரந்தரத் தொழிலாளி ஆக 1—3—1979 முதல் நியமிக்கும். இதனால் அந்தத் தொழிலாளிகள் ஒவ்வொருவருக்கும் மாதம் சுமார் ரூ. 75-00 வரை அதிக வருமானம் கிடைக்கும்.

2. இதர கேஷுவல் தொழிலாளர்களுக்குத் தினக்கூலி ரூ. 4-50-க்கு மேலாக ரூ. 1.50 கூடுதலாகக் கொடுக்கப்படும். ஆக தினம் ரூ. 6 பெறுவர்.

3. அடுத்த கட்டமாக 1—5—1979 முதல் மேலும் 113 தொழிலாளர்களை நிர்வாகம் நிரந்தரமாக்கும்.

இவை மட்டுமின்றி நிர்வாகம் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுக்குக் கீழ்க்கண்ட வாக்குறுதிகளும் எழுத்து மூலம் அளித்திருக்கிறது:—

1. தேவைக்கேற்ப 5—11—1978-ல் பணியாற்றிக்கொண்டிருந்த கேஷுவல் தொழிலாளிகள் அனைவருக்கும் வேலை கொடுத்த பின்னரே, வேறு தொழிலாளிகள் பணிக்கு எடுத்துக்கொள்ளப்படுவார்கள்.

2. தற்காலிக வேலை நீக்கத்தில் இருக்கும் 28 தொழிலாளிகள் தவிர, மற்ற அனைத்துத் தொழிலாளிகளும் 16—3—1979-ல் இருந்து ஒரு வாரத்திற்குள் தங்கள் பணியில் சேர்ந்து விடவேண்டும். இது வெளியூரில் உள்ள தொழிலாளிகட்குப் பயன்படும் ஓர் வாய்ப்பு.

3. வேலை நிறுத்தத்தைத் தாண்டி வன்முறையில் ஈடுபட்ட தற்காலிக வேலை நீக்கத்தில் இருக்கும் 28 தொழிலாளிகட்கு சஸ்பென்ஷன் காலத்து ஊதியமாக பாதி சம்பளம் கொடுக்கப்படும். அவர்கள் மீது குற்றச்சாட்டு பிறப்பிக்கப்பட்டு விதிகளின் படி விசாரணை நடத்தப்படும். அந்த விசாரணையில் அவர்கள் மீது சாட்டப்பட்ட குற்றம் நிரூபணம் ஆகவில்லை என்றால் அவர்கள் மீண்டும் முழு ஊதியத்துடன் பணிக்கு எடுத்துக்கொள்ளப் படுவார்கள். குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டவர்கள் மீது தண்டனை விதிப்

பதற்கு முன் தனது தீர்ப்பை நிர்வாகம் ஓர் ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி முன் ஆர்பிட்ரேஷன் வைக்கும். அவருடைய தீர்ப்பு அனைவரையும் கட்டுப்படுத்தும்.

4. வேலையில் சேர்ந்த நிரந்தரத் தொழிலாளிகள் அனைவருக்கும் தொழிற்சாலை திறந்த 6 நாட்கள் ஆனவுடன் ரூ. 300 முன் பணமாக வழங்கப்படும். இத் தொகை அதை அடுத்து வரும் 12 மாத ஊதியங்களில் தவணை முறையில் பிடித்தம் செய்யப்படும்.

5. வேலை நிறுத்தம் செய்த காலம் அந்தந்தத் தொழிலாளிக்கு விடுப்பு உள்ள அளவுக்கு சரி செய்யப்படும்.

மாண்புமிகு முதலமைச்சர் முயற்சியால் அவர்கள் அமைத்துத் தந்த இந்த நல்ல ஒப்பந்தத்தை அனைத்துத் தொழிலாளர்களும் நிர்வாகமும் மன நிறைவுடன் ஏற்றுக்கொள்வார்கள் என நம்புகிறேன். வேலை நிறுத்தம் செய்துள்ள தொழிலாளர்களை வேலைக்குத் திரும்பும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ஆ. நல்லசிவன்:**

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அறிக்கையின் மீது மேலவை விதிகளின் படி அங்கத்தினர்கள் பேசுவதை அனுமதிக்க முடியாது.

**திரு. ஆ. நல்லசிவன் :** * * *

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அப்படியெல்லாம் பேசுவதற்கு அனுமதிக்க முடியாது.

**திரு. ஆ. நல்லசிவன் :** * * *

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மேலவை விதி 82-ல் 'பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பொருளைப்பற்றி, தலைவரின் இசைவினைப் பெற்று, அமைச்சர் அறிக்கை ஒன்றை வெளியிடலாம்; ஆனால் அவ்வறிக்கையின் மீது அப்போது எவ்வித வினாவும் எழுப்பப்படலாகாது' என்று இருக்கிறது.

---

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

**திரு. ஆ. நல்லசிவன் :** * * *

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் ஒன்று தெரிந்துகொள்ள வேண்டும்.

**திரு. ஆ. நல்லசிவன் :** * * *

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இந்த அவைக்கு உறுப்பினர்களாக வருபவர்கள் கட்சி சிம்பல் அடிப்படையிலே தேர்ந்தெடுக்கப்பட்டு வரவில்லை. ஒரு குறிப்பிட்டவர்கள் சார்பில் பிரதிநிதித்துவம் பெற்று இங்கு வருகிறோம்.

**திரு. ஆ. நல்லசிவன் :** * * *

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** விதி முறைகளின்படி அனுமதிக்க முடியாது.

**திரு. ஆ. நல்லசிவன் :** * * *

**திரு. ம. சங்கரலிங்கம் :** * * *

(பிற்பகல் 6-00)

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** * * *

**திரு. ஆ. நல்லசிவன் :** * * *

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** * * *

**திரு. ஆ. நல்லசிவன் :** * * *

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** * * *

**திரு. ஆ. நல்லசிவன் :** * * *

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** * * *

**திரு. க. இராமமூர்த்தி :** * * *

**திரு. ஆ. நல்லசிவன் :** * * *

---

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டன.





**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** * * *

**திரு. ஆ. நல்லசிவன் :** * * *

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** * * *

**திரு. ஆ. நல்லசிவன் :** * * *

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மற்றொரு முறை அவைக்கு நினைவு படுத்துகிறேன். . . .

**திரு. க. இராமமூர்த்தி :** * * *

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** * * * எனவே அமைச்சர் அறிக்கையைப் படித்த பிறகு, பேசிய பேச்சு பதிவேட்டில் இருக்கக் கூடாதென்று தெரிவித்துக் கொள்கிறேன். அவை, பத்திரிகைகளிலும் வரக் கூடாதென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

### 6. கவன ஈர்ப்பு.

(1) அரசு ஆணை எண் 52, நிதித் துறை, நாள் 14—1—1977-ன்படி கீழ் நிலை அரசு ஊழியர்கள் பெறும் சம்பள உயர்வை அரசுத் துறையல்லாத மற்ற நகராட்சி, ஊராட்சித் துறைக்குள், குறிப்பாக விருதுநகர் நகராட்சியில் பணியாற்றும் கீழ் நிலை ஊழியர்கள் பெற இயலாமலிருப்பது குறித்து.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

" அரசு ஆணை எண் 52, நிதித் துறை, நாள் 14—1—1977-ன்படி கீழ் நிலை அரசு ஊழியர்களான காவலர்கள், காங்கிக் கூலிகள், தோட்டப் பணியாளர்கள், பள்ளி ஆயாக்கள் ஆகியோருக்கு ரூ. 180 சம்பள உயர்வு அளித்ததை

---

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டன.

260 அரசு ஆணை எண் 52, நிதித்துறை நாள் 14—1—1977-ன படி கீழ் நிலை அரசு ஊழியர்கள் பெறும் சம்பள உயர்வை அரசுத் துறையல்லாத மற்ற நகராட்சி, ஊராட்சித் துறைகளுள் குறிப்பாக விருதுநகர் நகராட்சியில் பணியாற்றும் கீழ் நிலை ஊழியர்கள் பெற இயலாமலிருப்பது குறித்து

[திரு. வே. தங்கப்பாண்டியன்] [1979 மார்ச் 14

அரசு ஊழியர்கள் மட்டும் பெற்று வருகின்றனர். இப்பயன்களைப் பெற இயலாமல் தவிக்கும் அரசுத் துறையல்லாத மற்ற நகராட்சி, ஊராட்சித் துறைக்குள் குறிப்பாக விருதுநகர் நகராட்சியில் பணியாற்றும் கீழ்நிலை ஊழியர்களின் துயர் பற்றியது குறித்து"

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** தலைவரவர்களே, இது தொடர்பான அறிக்கையை மாண்புமிகு உறுப்பினர்கள் படித்திருப்பார்களென்று நினைக்கிறேன். மூன்றாவது ஊதியக் குழுவின் அறிக்கை வந்த பிறகு முடிவெடுக்கலாமென்று கருதப்பட்டது. நகராட்சி ஆய்வாளரிடமிருந்தும், ஊரக வளர்ச்சி இயக்குநரிடமிருந்தும் இதனால் எத்தனை பேர்கள் பயனடைவார்கள், எவ்வளவு செலவாகுமென்று கேட்கப்பட்டிருக்கிறது. நகராட்சி ஆய்வாளரிடமிருந்து கடிதம் வந்திருக்கிறது. ஆகவே இதை விருதுநகர் நகராட்சி ஊழியர்களின் பிரச்சினை மட்டுமென்று கருதாமல், தமிழ் நாட்டிலுள்ள உள்ளாட்சித் துறையிலுள்ள ஊழியர்களின் பிரச்சினை என்ற முறையிலே விரைவிலே நடவடிக்கை எடுத்து, ஆணைகள் பிறப்பிக்கப்படுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** தலைவரவர்களே, அமைச்சரவர்களின் விளக்கத்திற்கு நன்றி கூறிக்கொள்கிறேன். மூன்றாவது ஊதியக் குழுவின் அறிக்கை வந்துவிட்டது. எனவே இது தொடர்பாக ஊரக வளர்ச்சித் துறை இயக்குநரிடமிருந்து விரைவில் தகவல்களைப் பெற்று, விரைவிலே ஆணையிட்டு, அரசு ஊழியர்களுக்கு—கீழ் மட்டத்திலுள்ளவர்களுக்கு உடனடியாக ஆவன செய்ய அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** தலைவரவர்களே, இது தொடர்பாக நகராட்சி ஆய்வாளர் விளக்கம் கொடுத்திருக்கிறார். அங்கே பணியாற்றும் சிப்பந்திகளின் எண்ணிக்கை 2,701 என்றும், ஆகும் செலவு 7.3 லட்சம் ரூபாய் என்றும் சொல்லியிருக்கிறார். இந்த விவரங்களை அடிப்படையாக வைத்து, வெகு விரைவில் ஆணை பிறப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

---

—இ ஆம் பக்கத்தில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.

(2) 1—3—1979 ஆம் நாளில் நாகர்கோவில், பாளையங்கோட்டை, தூத்துக்குடி மருத்துவ மனைகளில் மருத்துவர்களின் உள்ளிருப்பு வேலை நிறுத்தம் குறித்து.

**திரு. ம. சங்கரலிங்கம் :** தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

"1—3—1979 ஆம் நாளில் நாகர்கோவில், பாளையங்கோட்டை, தூத்துக்குடி மருத்துவ மனைகள் போன்ற இடங்களில் மருத்துவர்கள் அனைவரும் உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்ததினால், அங்கே உள்ள நோயாளிகள் சிகிச்சை பெற முடியாத அவல நிலைக்கு உள்ளாகி இருப்பது குறித்து"

**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் :** தலைவரவர்களே, மதுரை மாவட்ட மருத்துவ அலுவலர் டாக்டர் எம். என். எம். அப்சல்கான் அவர்களை ஒரு நோயாளியை திண்டுக்கல் தலைமை மருத்துவ மனையில் உள்ளிருப்பு நோயாளியாகச் சேர்க்கும் பொருட்டு ரூ. 100 லஞ்சம் வாங்கியதாக குற்றவியல் மற்றும் லஞ்ச ஒழிப்பு புலனாய்வுத் துறை அதிகாரியினர் 24—2—1979 தேதியன்று காலை 10½ மணிக்கு கைது செய்தனர். இதனை அடுத்து பழனி, தேனி, பெரியகுளம், ஆயக்குடி, வத்தலகுண்டு, கொட்டாம்பட்டி, உசிலம்பட்டி ஆகிய மருத்துவ மனைகளில் உள்ள மருத்துவர்களும், பணியாளர்களும் வேலை நிறுத்தம் செய்தனர்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவையின்முன் அறிக்கை வைக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் போதுமே.

**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தராாசன் :** அறிக்கை @ அவையில் வைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. ம. சங்கரலிங்கம் :** தலைவரவர்களே, அமைச்சரவர்கள் தந்திருக்கிற அறிக்கையில், ரெவின்யூ போர்டு மெம்பர் ஒருவர் மூலம் விசாரணை நடத்தப்படுமென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் இத்தகைய நிகழ்ச்சியின் மூலமாக, எல்லா மருத்துவர்களுக்கும் ஒரு அச்சம் ஏற்பட்டிருக்கிறது. தவறான நிலையில், காவல் துறையினர் திட்டமிட்டு ஒருவரைக் கைது செய்துவிடுகின்ற அபாயம் ஏற்படுகிறது என்ற அச்சம் ஏற்பட்டு, அதனால் பணியில் களங்கம் ஏற்படுமென்றால், அதனால் நாட்டில் மோசமான நிலைமைகள் உருவாகும். நோயாளிகள் பாதிக்கப்படுகிறார்கள். அதைத்

---

@ 102 ஆம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

தவிர்க்க வேண்டும். கைது செய்யப்பட்ட மருத்துவர், புற நோயாளிக்கான சீட்டில் ரசாயன அணுக்கள் சேர்க்கப்பட்டிருக்கிறதா இல்லையா என்பதைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டபோது, மறுக்கப்பட்டிருக்கிறது. அப்படி இருக்குமானால் அவருக்கு இருக்கும் ஐயத்தை நீக்குவதற்கு அந்த அதிகாரி தவறிவிட்டார் என்பது பொருள். அது உண்மையாக இருக்கிறதா என்று பார்த்து, முதல் நடவடிக்கையாக காவல் துறை அதிகாரியை சஸ் பெண்ட் செய்து, மருத்துவர்கள் மத்தியில் ஒரு நம்பிக்கையை ஊட்ட அரசு முன்வருமா ?

(பிற்பகல் 6-10)

**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் :** தலைவரவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் இங்கே விளக்கம் கேட்டிருக்கிறார்கள். பொது வாக குற்றவியல் மற்றும் லஞ்ச ஒழிப்பு புலனாய்வுத் துறை ஒரு நடவடிக்கை எடுப்பதற்கு முன்னால், தகுந்த ஆதாரங்களையெல்லாம் பார்த்ததற்குப் பின்னாலே தான், முறையான ஆய்வு எல்லாம் நடத்திய பின்னர்தான், அத்தகைய பணிகளில் ஈடுபடுகிறார்கள். இதனால் மருத்துவர்கள் மத்தியில் பீதி ஏற்பட்டு, மருத்துவர்கள் பீதியடைந்திருக்கிறார்கள் என்று மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். தவறு செய்கின்ற மருத்துவத் துறை அதிகாரிகளை மட்டும் பிடிப்பது இந்தத் துறையின் பணியல்ல. எல்லாத் துறைகளிலும் இப்படிப்பட்ட தவறுகள் இருக்குமிடங்களிலெல்லாம் இதுமாதிரி பிடித்திருக்கிறார்கள். பிடிக்கிறார்கள் என்பதோடு மாத்திரமல்லாமல் ஏற்கனவே பிடித்தும் இருக்கிறார்கள் என் பதற்கான சான்றுகளும் இருக்கின்றன. அப்படி தவறு செய்கின்றவர்களைப் பிடிக்கின்ற நேரத்தில், முறையான இரசாயனப் பரிசோதனை ஆகியவை செய் வதற்கான நடைமுறைகளை எல்லாம் செய்து முடித்த பின்னர் தான் இத் தகைய நடவடிக்கைகளை எடுக்கிறார்கள். கைது செய்யப்பட்ட மருத்துவர், புற நோயாளிக்கான சீட்டில் இரசாயன அணுக்கள் சேர்க்கப்பட்டிருக்கிறதா இல்லையா என்பதைப் பரிசோதனை செய்ய வேண்டுமென்று கேட்டபோது, அது மறுக்கப்பட்டிருக்கிறது என்கின்ற கருத்து இப்பொழுது மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களால் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. இது போன்ற தவறு ஏதாவது நடந்திருக்கிறதா என்பதை ஆய்வதற்காக மாண்புமிகு முதலமைச்சரவர்கள் வருவாய் வாரிய உறுப்பினர் ஒருவரை விசாரணைக்கு நியமித்து உத்தரவிட்டிருக்கிறார்கள். விசாரணை நடந்து கொண்டிருப்பதனால், விசாரணையில் நிச்சயமாக உண்மையான நிலை என்னவென்று தெரிந்து விடும்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு முதல்வர் அவர்கள் விசாரணைக்கு உத்தரவிட்டிருப்பதற்காக அவருக்கு என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். விசாரணைக்கு உத்தரவிட்ட உடனேயே மருத்துவர்கள் மத்தியில் பாதியளவு நம்பிக்கை வந்திருக்கிறது. ஒருவர் வந்து குறை சொல்கிறார். அதை நம்பி அதிகாரி வருகிறார். நீங்கள் புறச் சீட்டை இரசாயன பரிசோதனைக்கு உட்படுத்துங்கள் என்று கேட்கிறார். அந்த மருந்துகளை எப்படிப் பரிசோதனைக்கு உட்படுத்தினார்களோ அது போல அந்தப் புறச் சீட்டையும் பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டுமென்று அவர் கேட்கிறார். தர்மத்தின் அடிப்படையில், நியாயத்தின் அடிப்படையில் அதைச் செய்திருக்க வேண்டும். அதைச் செய்யத் தவறியிருக்கிறார்கள் என்று விசாரணையில் தெரிய வந்தால், அதைச் செய்ய மறுத்தவர்கள் மீது இந்த அரசு தகுந்த நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் :** இது போன்ற இலாகாவினர் குற்றங்களை ஆய்ந்து அறிவிப்பதில் தவறுகள் நடந்திருக்கின்றன என்று நிரூபிக்கப்படும் சந்தர்ப்பத்தில் அவர்கள் மீது எந்தெந்த முறையில் நடவடிக்கை எடுப்பதற்கான வழிமுறைகள் கடைப்பிடிக்கப்பட்டனவோ அந்த வகையில் இதிலும் கடைப்பிடிக்கப்படும்.

## 7. 1979-80 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

**டாக்டர் எச். வி. ஹண்டே :** மதிப்பிற்குரிய மேலவைத் தலைவரவர்களே, இந்த அவையிலே சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற 1979-80 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கைபற்றிச் சில கருத்துக்களை நான் கூற முற்படுகிறேன். இப்பொழுது நம்முடைய மாநிலத்தில் இந்த நிதிநிலை அறிக்கை வெளி வந்ததற்குப் பின்னால், மாநில மக்களுடைய உணர்வுகள் எப்படி இருக்கின்றன, எந்த அளவுக்கு வரவேற்கத் தக்கதாக இருக்கின்றன என்பதை இந்த விவாதத்தின் மூலம் நாம் தெரிந்துகொள்வதற்கும், புரிந்துகொள்வதற்கும் வாய்ப்பாக இருக்கிறது. குறிப்பாக நம்முடைய நிதி நிலை அறிக்கை வந்த கால கட்டத்தில் தான், மத்திய அரசினுடைய "வேதனைக்குரிய நிதி நிலை அறிக்கை என்று சொன்னால் கூட மிகையாகாது", அப்படிப்பட்ட ஒரு மிக பயங்கரமான வகையிலுள்ள ஒரு 'இன்பிளேஷனரி பட்ஜெட்' தாக்கல் செய்யப்பட்டது. கிட்டத்தட்ட அதற்கு 4 நாட்களுக்குப் பிறகு நம்முடைய நிதிநிலை அறிக்கை வந்திருக்கிறது. இப்படிப்பட்ட நெருக்கடியான கால

[டாக்டர் எச். வி. ஹண்டே] [1979 மார்ச் 14

கட்டத்தில் தான் நம்முடைய நிதிநிலை அறிக்கை வந்திருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். இதை மாண்புமிகு உறுப்பினர்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மத்திய அரசாங்கத்தினுடைய பட்ஜெட்டையும் நம்முடைய பட்ஜெட்டையும் ஒப்பிட்டுப் பார்ப்போமேயானால், நாம் எப்பேர்ப்பட்ட பட்ஜெட்டை நாட்டுக்கு அளித்திருக்கிறோம் என்பதை உணர்ந்துகொள்ளலாம். மத்திய அரசாங்கத்தினுடைய பட்ஜெட்டின் காரணமாக கிராமங்களில் ஏறத்தாழ 10 சதவிகிதம் அளவில் inflation என்று சொல்லக் கூடிய விலைவாசி உயர்வு ஏற்பட்டிருக்கிறது. நகரங்களில் 12 சதவிகிதம் inflation ஏற்பட்டிருக்கிறது. இதெல்லாம் மத்திய அரசாங்கத்தினுடைய பட்ஜெட்டின் விளைவுகள். அதே நேரத்தில் நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சரவர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற நிதிநிலை அறிக்கையைப் பார்த்தால், ஒரு சதவிகிதத்திற்குக் குறைவாகத் தான் விலைவாசி உயர்வு, inflation ஏற்பட்டிருக்கிறது. "Not even one per cent inflati-n என்பதை நான் ஆணித்தரமாக, திட்டவட்டமாகச் சொல்ல முடியும். அதிலும் இரண்டே இரண்டு பொருள்களைப் பொறுத்தவரை தான் அந்த "inflation"ஐ நாம் பார்க்க முடியும். குறிப்பாக நாம் பார்ப்போமேயானால் தேங்காய், திப்பெட்டி ஆகிய இரண்டு பொருள்களைப் பொறுத்தமட்டில் மட்டும் கொஞ்சம் வரி போட்டிருக்கிறார்கள். நாட்டிலுள்ள குடிமக்களுக்கு இதனால் ஏற்பட்டிருக்கக் கூடிய விலைவாசி உயர்வு ஒரு பெர்செண்ட்க்கும் குறைவுதான். நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கும் பட்ஜெட்டைப் பொறுத்தவரையில், நாட்டிலுள்ள மக்கள் பாராட்டும் வகையில் அவர்கள் பட்ஜெட்டைத் தந்திருக்கிறார்கள். "This budget had a very sobering influence" அப்படிப்பட்ட ஒரு நிலைமை. இன்னும் சொல்லப்போனால், இதிலே 680 கோடி ரூபாய் வரவு என்றும், 726 கோடி ரூபாய் செலவு என்றும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

The entire difference between Revenue and Expenditure என்ற வகையில் பார்க்கிறபோது கடைசியில் "net deficit" என்பது 4 கோடி ரூபாய்க்கு ஜாஸ்தியாக இல்லாமல், தொல்லைகள் எதுவும் கொடுக்காமல், ஏழை மக்கள்மீது வரிச் சுமையை வைக்காமல் வரி விதிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் பாராட்டுவதாகக் கருத வேண்டாம், எத்தகைய பைனான்ஸ் எக்ஸ்பேர்ட்டாக இருந்தாலும், அவர்கள் எல்லாம் பாராட்டுவார்கள் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரை, நம்முடைய நிதி அமைச்சரவர்களை ஓரளவுக்கு நான் பாராட்டுகிறேன். அவரிடத்தில் இந்த வருவாய் இருக்கின்ற காரணத்தினால்,



1979 மார்ச் 14] [டாக்டர் எச். வி. ஹண்டே]

"Without any tears at all he has been able to produce a budget which is very, very satisfactory from all points of view and satisfactory to all sections of people" என்கிற வகையில் இருக்கிறது.

அடுத்தபடியாக, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் எப்பேர்ப்பட்ட இக்கட்டான சூழ்நிலையில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். நம்முடைய நிதிநிலையைப் பொறுத்தவரையில், நமக்கு "devolution of funds" இருக்கிறது. மத்திய அரசாங்கத்திலேயிருந்து நாம் பைனான்ஸ் கமிஷன் மூலம் பணம் பெற வேண்டும். பைனான்ஸ் கமிஷனிலே இருக்கக்கூடிய "devolution"-க்கு அப்பாற்பட்ட பல லட்சியங்களும் இருக்கின்றன. பைனான்ஸ் கமிஷன் அறிக்கையிலே நம் மாநில சார்பில் தரப்பட்ட அறிக்கையை நாம் படித்துப் பார்ப்போமேயானால், நமக்கு 30 சதவிகிதம் தான் வருகிறது. மத்திய அரசாங்கத்திலேயிருந்து பணம் வாங்குகின்ற நேரத்தில் பலவிதமான சங்கடமான நிலைமைகள் இருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் உணர வேண்டும் என்பதற்காகத் தான் இதை நான் சொல்கிறேன். அதிலும் பணம் ஒதுக்குவதைப் பொறுத்தவரையில் ஒரு 'பார்முலா' இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்களுக்கு இதைப்பற்றி மிக மிக நன்றாகத் தெரியும். திரு. வெங்கட்ராமன் அவர்கள் அமைச்சராக இருந்த போது கூட, காட்கில் பார்முலா முறை மூலம் தான் அவர்களிடமிருந்து பணம் பெற்று வந்தார்கள். அன்றைய நிலையில் திரு. வெங்கட்ராமன் அவர்களுக்கு காட்கில் பார்முலாவை விட்டால் வேறு வழி இல்லை. அன்றைய தினம் அந்த காட்கில் பார்முலா முறையை விட்டால், வேறு பார்முலா முறை இல்லை என்று சொல்கிற அதே நேரத்தில், இன்றையதினம் அந்த பார்முலா முறையைத் தவிர, வேறு பார்முலா முறையைக் கண்டுபிடிக்கிற முறையில் நம்முடைய அரசு முயற்சிகள் செய்திருக்கிறது என்பதை நான் இங்கு சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த ஆட்சி வந்ததற்கு அப்புறம் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் நிதியமைச்சர் அவர்களும் டெல்லிக்குச் சென்றபோது காட்கில் பார்முலா அல்லாத வேறு ஒரு முறையைக் கொடுத்து வந்திருக்கிறார்கள். அந்த காட்கில் பார்முலா அல்லாத வேறொரு முறைக்குப் பெயர் ஐ.ஏ.டி.பி. (Income Adjusted to Population). இதை நம்முடைய மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்களும், உறுப்பினர்களும் பாராட்டுவார்கள் என்பதால், அதைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தேன். ஆனால் அவ்வாறு பாராட்டவில்லை என்பதை நான் இங்கு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். எதிர்க்கட்சி ஆட்சி நடத்துகிறது என்பது அல்ல பிரச்சினை. யார் நல்ல காரியங்கள்

செய்தாலும், பாராட்ட வேண்டும் என்பதற்காகத் தான் சொல்கிறேன். அப்போது அமைச்சராக இருந்த திரு. வெங்கட்ராமன் அவர்கள் இதைச் செய்திருந்தாலும், இல்லை அவர்களுக்குப் பிறகு ஆட்சிக்கு வந்தவர்கள் இதைச் செய்திருந்தாலும், நான் நிச்சயமாகப் பாராட்டியிருப்பேன். இப் பொழுது "I.A.T.P." பார்முலா நடைமுறையில் இருக்கிறது. எவ்வளவு ஜனத்தொகை ஒரு மாநிலத்தில் இருக்கிறதோ அதனுடைய சராசரி வருமானம் எவ்வளவு என்று பார்த்து, "Inverse Ratio" முறை ஒன்றின் கீழ் சராசரி வருமானம் "multiplied by population" என்று கண்டு பிடித்திருக்கிறார்கள். "Income Adjusted to Population" என்ற இந்த முறையினால் சில மாநிலங்களுக்குக் கஷ்டம் இருக்கலாம். ஆனால் நம்மைப் பொறுத்தவரையில், அது லாபகரமாக இருக்கிறது. I.A.T.P. என்ற புதிய தாரக மந்திரத்தைக் கண்டுபிடித்த பெருமை நம்முடைய அமைச்சரவைக்குத் தான் இருக்கிறது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் நாளையதினம் உரையாற்றுகையில் இதைப் பற்றிப் பாராட்டுவார்கள் என்ற

(பிற்பகல் 6–20)

நம்பிக்கை எனக்கு இருக்கிறது. "I.A.T.P."-ன் விளைவாக சில மாநிலங் களுக்குச் சிறிது நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அது உண்மை. அதைப் பற்றி நான் இங்கே பேசவில்லை. தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் "Income Adjusted to Population' என்ற அடிப்படையில் கணக்கைப் பார்த்தால், "Devolution of Funds" என்ற முறையில் இன்றையதினம் 150 கோடி ரூபாய் கிடைக்கிறது.

டாக்டர் காட்கில் பார்முலா அடிப்படையில் பார்த்தால், தமிழ் நாட்டுக்கு ரூ. 131 கோடிதான் கிடைத்திருக்க வேண்டும். ஆனால் I.A.T.P. 'அடிப் படையில் கணக்கிட்டதன் காரணமாக ரூ. 150 கோடி தமிழ் நாட்டிற்குக் கிடைக்கிறதென்றால், இதைவிட ஒரு சாதனை—இந்த நிதிநிலை அறிக்கை யைப் பொறுத்தவரையில்—வேறு என்ன இருக்க வேண்டும் என்று எதிர்க் கட்சியில் இருப்பவர்கள் எதிர்பார்க்கிறார்கள் என்று எனக்குப் புரியவில்லை. டெல்லியில் இதைப்பற்றிய விவாதம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது நான் "It is a hopeless task, Our Chief Minister will not be able to accomplish it." என்று கூட நினைத்தேன். அங்கே நடைபெற்ற கூட்டத்தில் நிலைமைகள் அப்படித்தான் இருந்தன. மகாராஷ்டிர மாநிலத்திற்கும், கருநாடக மாநிலத் திற்கும் இந்த I.A.T.P. காரணமாக நஷ்டம் ஏற்படுகிறது. எனவே அந்த



மாநிலங்களின் முதலமைச்சர்களெல்லாம் ஒன்றாகச் சேர்ந்து, இந்த அடிப் படையில் நிதி ஒதுக்கீடு இருக்கக்கூடாது என்று வற்புறுத்தியும்கூட, நாம் இதில் வெற்றி பெற்றிருக்கிறோம் என்றால், இது ஒரு சாதனையல்லவா? "It is actually, if I may say, only because of the personality of our Chief Minister. He was able to persuade the persons or the persons that be at the Centre. மத்திய அரசில் இருப்பவர்களை மிகவும் வற்புறுத்தி இந்தத் தொகையை நாம் இன்றையதினம் பெற முடிந்திருக் கிறது. இந்து பத்திரிகையிலும், இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையிலும் இதைப்பற்றி The Planning Commission accepts state's thinking about Planning" என்று எழுதினார்கள், மத்திய திட்டக் கமிஷனின் தலைவர் கூட இதை ஏற்றுக்கொண்டிருக்கிறார் என்பதையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இந்த நிதிநிலை அறிக்கையைப்பற்றி இன்னொரு குறையும் சொல்லப் பட்டது. சட்டமன்றப் பேரவையிலும் ஒரு கருத்து சொல்லப்பட்டது, வெளியிலும் அப்படிச் சொல்லப்பட்டது. மாநில அரசு 2 கோடி ரூபாய் அளவுக்குப் புதிய வரிகளை விதித்திருக்கக்கூடாது என்பதுதான் அந்தக் குற்றச்சாட்டு. "An extra effort to tax 2 crores of rupees." இதைப் பொறுத்து நான் அவையிலே ஒரு கருத்தைச் சொல்ல வேண்டிய அவசியத்திலிருக்கிறேன். தமிழ் நாடு அரசு 2 கோடி ரூபாய்க்கு மட்டுமே வரி போட்டது போதாது, இது குறைவான வரி என்பதுதான் மத்திய அரசாங்கத்தின் கருத்தாக இருக்கிறது. மத்திய அரசாங்கத்தைச் சேர்ந்த நிதித் துறை அமைச்சரானாலும் சரி, திட்டக் கமிஷன் ஆனாலும் சரி, இருவருமே தமிழ்நாடு 2 கோடி ரூபாய் அளவுக்கு மட்டும் வரி போட்டது போதாது என்று கூறுகிறார்கள். இன்னும் அதிகமான அளவுக்கு வரியைப் போட்டிருக்க வேண்டும் என்பது அவர்களுடைய வாதம். இதற்கு என்ன 'ஆதாரம்' என்றால் ஒரு பத்திரிகையில் தலையங்கமே எழுதினார்கள் "State's reluctance to raise additional resources and till now ten State Governments have come out with their budgets and all of them are deficit budgets."

"Tamil Nadu with the deficit of 4.25 crores has gone for marginal taxation to net Rs. 2 crores."

இந்த அளவுக்கு மத்திய அரசாங்கத்திலிருந்து மாநில அரசாங்கத்திற்குத் தாக்கீது கொடுக்கிறார்கள். அதிகமாக வரி போடுங்கள் என்று அவர்கள் தாக்கீது கொடுக்கிறார்கள். காரணம் கேட்டால், "Resources mobilisation அதிகமாகச் செய்ய வேண்டும் என்ற கருத்தைச் சொல்கிறார்கள்.

அப்படிச் செய்தால்தான், மத்திய அரசாங்கத்திலிருந்து மாநில அரசாங்கத்திற்கு ஏதாவது உதவி செய்ய முடியும் என்று சொல்லுகிறார்கள். எனவே, மத்திய அரசாங்கம் எதிர்பார்த்த அளவிற்கு தமிழ்நாடு அரசு மக்கள்மீது வரி விதிக்கவில்லை. இது குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் நிச்சயமாக மகிழ்ச்சியடைவார்கள் என்று நான் நம்புகிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** டாக்டர் ஹண்டே அவர்கள் பேசுகிறபோது, மத்திய அரசு அதிகமான வரிகளைப் போட வேண்டுமென்று மாநில அரசுகளுக்கு தாக்கீது விடுக்கிறது என்ற கருத்தைச் சொல்லி, அதற்கு ஆதாரமாக பத்திரிகைத் தலையங்கத்திலே வந்ததையும் படித்துக் காட்டினார்கள். மாநிலங்கள் அதிகமான வரிகளைப் போட வேண்டுமென்று மத்திய அரசு சொல்லிக்கொண்டிருப்பது இன்று நேற்று ஏற்பட்டதல்ல. காலகாலமாக இதைத்தான் அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடம் நான் என்ன கேட்க விரும்புகிறேன் என்றால், தமிழ்நாட்டிலே தீப்பெட்டிக்கும் தேங்காய்க்கும் வரி போடுங்கள் என்று மத்திய அரசு மாநில அரசுக்கு யோசனை சொல்லியிருக்கிறதா என்பதுதான்.

**டாக்டர் எச். வி. ஹண்டே :** வரி போட வேண்டும் என்பதை மட்டும்தான் மத்திய அரசாங்கம் சொல்லுகிறது. எந்தப் பொருள்கள்மீது வரி போட வேண்டும் என்பது மாநில அரசாங்கத்தைப் பொறுத்த விஷயம். மாநில சுயாட்சி கேட்கிற நோக்கில், மாநிலங்களுக்கு இந்த உரிமைகூட இருக்கக் கூடாதா என்ன?

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** அதைத்தான் எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்கள் சொல்லுகிறார்கள். பொதுவாக வரி போடுகிற நோக்கில், இப்படிப்பட்ட சின்னஞ்சிறு பொருள்களுக்கு வரி போடாதீர்கள். தாங்கக் கூடியவர்களின்மீது வரி போடுங்கள் என்றுதான் சொல்லுகிறார்கள்.

**டாக்டர் எச். வி. ஹண்டே :** அது அவரவர் அபிப்பிராயம். யார் யார் தாங்கக்கூடியவர்கள், யார் யார் தாங்க முடியாதவர்கள் என்பது அவரவர் அபிப்பிராயத்தைப் பொறுத்தது. வரி ஏன் போட்டார்கள் என்ற குற்றச்சாட்டுக்குத்தான் நான் பதில் சொல்லிக் கொண்டிருந்தேன். அதை ஒரு வாதமாக இங்கே எழுப்பியதால் நான் இந்தக் கருத்தைச் சொல்ல வேண்டியிருக்கிறது. இப்படி மத்திய அரசைப் பொறுத்தவரையில், additional resources mobilisation செய்ய வேண்டும் என்று சொல்லுகிறார்கள்.



அடுத்து, இன்னொரு குற்றச்சாட்டையும் இந்த நிதிநிலை அறிக்கை குறித்துச் சொல்லியிருக்கிறார்கள். இந்த அவையிலேயே பல அறிவாளிகளும் பேசினார்கள், புள்ளிவிவரம் அறிந்தவர்களும் பேசினார்கள். அவர்கள் என்ன சொன்னார்கள் என்றால் "It is a matter of fact budget" என்றார்கள். அரசாங்கத்திலிருக்கிற அதிகாரிகள் தயாரித்த நிதிநிலை அறிக்கை இது. இதில் முன்னேற்றமான காரியங்களுக்கு என்று எதையும் செய்யவில்லை என்று பேசியிருக்கிறார்கள்.

நாட்டில் வரிவிதிக்கும்போது, மூன்று நோக்கங்கள் இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டுமென்று சொல்வார்கள்.

முதலாவது, Additional Resources Mobilisation

இரண்டாவது, வரிகளைப் போடும்போது, நாட்டினுடைய தேவைகளை மனதில் கொண்டு வரிவிதிப்பைச் செய்ய வேண்டும்.

whether a particular taxation measure will be advantageous for the developmental activities of the State?

நாட்டின் வளர்ச்சிக்காக, குறிப்பாக நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்காக அந்த வரிவிதிப்பு பயன்படக்கூடியதாக இருக்க வேண்டும்.

மூன்றாவதாக, வரிகளைப் போடும்போது, அதன் காரணமாக விலைவாசிகள் உயருகிற நிலைமை ஏற்படாத வகையில் வரி விதிப்பை மேற்கொள்ள வேண்டும். It should not end up in inflationary trends. இப்படி மூன்று அடிப்படைக் கருத்துக்களின் அடிப்படையில்தான் நாட்டில் வரி விதிப்பு செய்யப்பட வேண்டும் என்று பொருளாதார நிபுணர்கள் சொல்லுகிறார்கள்.

கடந்த இரண்டு மூன்று நாட்களாக இந்த் அவையில் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த நிதிநிலை அறிக்கையிலே மாநிலத்தின் வளர்ச்சித் திட்டங்களுக்காக பண ஒதுக்கீடு செய்யவில்லை என்று குற்றம் சாட்டினார்கள். ஏதோ வரி வசூலிக்கிறார்கள், செலவு செய்கிறார்கள்; அவ்வளவுதானே தவிர, எந்தவிதமான முன்னேற்றத் திட்டத்திற்கும் பணத்தை ஒதுக்கீடு செய்யவில்லை என்ற அடிப்படையில் பேசினார்கள். அதை நான் முழுவதுமாக மறுக்க விரும்புகிறேன். இதற்கு என்ன ஆதாரம் என்றால், தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது முன்னேற்றத் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியை விட தற்போது நாம் அதிகமாக ஒதுக்கியிருக்கிறோம்.

பத்திரிகையே பாராட்டுகிறது. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தவறு செய்தால், அந்தப் பத்திரிகை சுட்டிக்காட்டுகிறது. நல்லதைச் செய்தால் அதையும் சுட்டிக்காட்டுகிறார்கள். சில நேரங்களில் இப்படி கடுமையாகவும் எழுதுகிறார்கள். அது எழுதுகிறது :

"The primary objective of the Government's industrial policy is to encourage the development of small scale and village industries and thereby create large employment opportunities in the rural areas. This sentence might well have found a place in Mr. Charan Singh's budget speech. In fact it sets the tone for the Tamil Nadu Budget presented by Mr. K. Manoharan."

எவ்வளவு அழகாக பல நேரங்களில் திரு. சரண்சிங்கைப் பாராட்டி அவரைப் போற்றிய ஒரு பத்திரிகை இப்போது எப்படி எழுதுகிறது என்பதைப் பார்க்க வேண்டும். அவர்களைப் பற்றிப் பாராட்ட வேண்டிய அந்த வாக்கியங்கள் எல்லாம் இங்கே இருப்பவர்களைப் பாராட்டும் விதத்தில் வருகின்றன என்று சொன்னால், இதைவிட என்ன சான்றிதழ் வேண்டும்? அதுமட்டுமல்ல, இன்னொரு பாராவிலே எழுதுகிறார்கள்

"They include erecting a large number of 'sheds' for small industries, a new scheme of "margin money assistance", and the setting up of design centres and modern dye house for handloom. The processing factory for handloom polyster cloth is also to be established. But perhaps the most important scheme is that it will provide capital subsidies for small scale industry."

I would like the hon. Members to mark the expression.

இந்த அளவுக்கு டெவலப்மெண்டைப் பொறுத்தவரையில், எந்தவிதமான அலட்சியப் போக்கும் நாம் காட்டவில்லை என்பதைச் சொல்ல முடியும்.

அடுத்தபடியாக, இன்னும் ஒரு கருத்தை நான் சொல்ல விரும்புகிறேன். ஒரு கூட்டத்திலே முதலமைச்சர் அவர்கள் பேசுகின்ற நேரத்திலே ஒரு கருத்தைச் சொன்னார்கள். நம்முடைய சுப்ரீம் கோர்ட் இருக்கிறதே, அது ஒரு மையமான இடத்திலே வந்தால், நன்றாக இருக்கும் என்று சொன்னார்கள். அந்த விவரங்களிலே நான் நுழைய விரும்பவில்லை. நான் சொல்வதெல்லாம், எந்த அளவுக்கு நம்முடைய தென்னாட்டிலே இருக்கிறவர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். நம்முடைய முதலமைச்சர்



அவர்கள் சொல்கிறபோது, இந்த உணர்வுகளை மையமாக வைத்துக்கொண்டு தான் சொன்னார். இன்று கூட நம்முடைய மாநிலத்திலே நமக்கு வர வேண்டிய வருவாய் வரவில்லை. அது பஞ்சாப், இமாச்சல் பிரதேசம், உத்தரப்பிரதேசம் போன்ற இடங்களுக்குப் போய்க்கொண்டிருக்கிறது. பல மத்திய அரசு நிறுவனங்கள் இன்று தென்னாட்டிலே கிடையாது. நான் கூட பட்டதாரிகள் தொகுதியிலே செல்கிறபோது, சென்னையில் இருக்கும் சில மத்திய அரசின் நிறுவனங்களிலே பணியாற்றுகிறவர்கள் சொன்னார்கள். குறிப்பாகச் சொன்னால் இங்கே 'டிபென்ஸ் ஆடிட் அலுவலகம்' இருக்கிறது. அந்த அலுவலகத்திலே ஏறத்தாழ 6,000 சிப்பந்திகள் வேலை செய்கிறார்கள். அவர்களது தலைமை அலுவலகம் மீரட்டிலே இருக்கிறது. இங்கு ஏதாவது ஒரு பிரச்சினை என்றால் அல்லது ஒரு பிரச்சினை ஏற்பட்டால், அது மீரட்டுக்குச் செல்ல வேண்டும். உங்கள் முதலமைச்சரிடம் சொல்லி ஒரு வழி செய்து, இப்படிப்பட்ட அலுவலகங்கள் தெற்கிலேயும் அமைக்க வேண்டும் என்று வற்புறுத்தச் சொல்லுங்கள் என்று அங்குள்ள சிப்பந்திகள் என்னிடம் சொன்னார்கள். இப்பேர்ப்பட்ட கருத்துக்களை, உணர்வுகளை இந்த நேரத்திலே நம்முடைய மன்றங்களிலே பேசுவதன் மூலம் இவைகள் மத்திய அரசின் காதுகளுக்கு எட்டும் என்ற நம்பிக்கையில் தான் இவைகளைச் சொல்கிறேன்.

அடுத்தபடியாக, நேரம் இல்லை என்பதால் ஒரு முக்கியமான பிரச்சினையில் மட்டும் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இப்போது தமிழகத்திலே அமைதியின்மை நிலவுகிறது என்று பல நேரங்களிலே ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டு பேசப்படுகிறது. ஒத்திவைப்புத் தீர்மானத்திலே மாண்புமிகு எதிர்க் கட்சி உறுப்பினர்கள் பேசுவதற்கு நல்ல வாய்ப்பு இருக்கிறது. அதைப் பயன்படுத்தி அவர்கள் பேசுகிறார்கள். அமைச்சர் அவர்களும் பேசுகிறார்கள். ஆனால் எனக்கு இருக்கக்கூடிய வேதனை எல்லாம் நம்முடைய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் எந்த அளவுக்கு இதிலே பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற நிலையை, அந்த உணர்வை இந்த மன்றத்திலே சொல்லுவதற்கு இந்த மாதிரி நிகழ்ச்சிகள் ஏற்பட்டு பேசக்கூடிய நிலைமைகள் உருவாகின்றதே என்பது தான். உதாரணத்திற்கு 10 ஆம் தேதி அன்று நடைபெற்ற ஒரு சம்பவம், நம்முடைய செஞ்சியிலே நடைபெற்ற சம்பவம். அதிலே பாராளுமன்ற உறுப்பினராக இருக்கும் திரு. வேணுகோபால் அவர்களையும், நம்முடைய சட்டமன்ற உறுப்பினராக இருக்கும் மாண்புமிகு உறுப்பினர் திரு. ராமச்சந்திரன் அவர்களையும் சம்பந்தப்படுத்தி இங்கே பேசப்பட்டது, என்னைப்

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1979 மார்ச் 14

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி முடிகிற நேரத்தில் முன்னேற்றத் திட்டங்களுக்காக—அதிலும் குறிப்பாக Capital Expenditure க்கு ஒதுக்கப்பட்ட பணம் ரூ. 55 கோடியாகும். 55.30 கோடி ரூபாய். அதற்குப் பிறகு இப்போது Capital Expenditure க்காக ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை ரூ. 72 கோடி. ஏறத்தாழ ரூ. 20 கோடி அதிகமாக இந்த ஒரு இனத்தில் மட்டும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதைவிட வேறு யாரும் அதிகமாக Capital Expenditure க்கு ஒதுக்கிவிட முடியாது.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** தலைவர் அவர்களே, தமிழ் நாட்டின் தற்போதைய வருமானத்தின் அடிப்படையில் proportinate ஆகப் பார்த்தாலும், இந்தத் தொகை குறைவான தொகை என்பதை உணர முடியும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் Capital Expenditure என்ற இனத்தின்கீழ் அதிகப்படியாக ஒதுக்கப்பட்டிருப்பதை மட்டும் குறிப்பிட்டால் போதாது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது, 1975-76-ல், தமிழ்நாட்டின் மொத்த வருமானம் 521 கோடி ரூபாய். ஆனால் இந்த ஆண்டு 7-வது நிதி ஆணைக் குழுவின் ஒதுக்கீட்டையும் சேர்த்து—மத்திய அரசின் ஒதுக்கீட்டையும் சேர்த்து—தமிழ்நாட்டின் மொத்த வருவாய் ரூ. 1,126 கோடி ரூபாய். எனவே வருவாய் இரண்டு மடங்காகியிருக்கிறபோது Development Expenditure க்கு ஒதுக்கப்படும் தொகையும் இரண்டு மடங்காக அதிகரித்திருக்க வேண்டும். அதாவது ரூ. 110 கோடி ஒதுக்கப்பட்டிருக்க வேண்டும். இதுதான் எங்களுடைய குற்றச்சாட்டு.

(மாற்றுத் தலைவர் திரு. ஈ. எஸ். வெங்கடேசன் தலைமை)

**டாக்டர் எச். வி. ஹண்டே :** 1975-76-ல் தமிழ்நாட்டின் வருமானம் 521 கோடி ரூபாய் என்பது சரியல்ல. காரணம் திருத்தப்பட்ட வருவாய் அடிப்படையில் பார்த்தால், அது ரூ. 540 கோடி என்றாகியது. தற்போது ரூ. 700 கோடிதான் நமது மாநிலத்தின் வருவாய். இந்த நிலையில்தான் நாம் இந்தப் பிரச்சினையை அணுக வேண்டும்.

(உறுப்பினர் திரு. ஆற்காடு நா. வீராசாமி இருக்கையிலிருந்து எழுந்தார்.)

**மாற்றுத் தலைவர் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன்) :** உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் தாம் பேசும்போது பதில் சொல்லிக் கொள்ளலாம். தற்போது குறுக்கிட வேண்டாம்.



1979 மார்ச் 14]

**டாக்டர் எச். வி. ஹண்டே :** நான் தருகிற புள்ளி விவரம் சரியான புள்ளி விவரம். என்னிடம் இருக்கிற தகவலைத்தான் தருகிறேன். தமிழ்நாட்டின் வருமானம் 1975-76-ல் ரூ. 540 கோடியாக இருந்தது. தற்போது ரூ. 700 கோடி அளவுக்குத்தான் உயர்ந்திருக்கிறது. அதற்கான புள்ளி விவரங்களை இங்கே வைத்திருக்கிறேன். எனவே வரிப் பணத்தை விரயம் செய்கிறார்களே தவிர, முன்னேற்றத் திட்டங்களுக்காகச் செலவிடவில்லை என்று சொல்கிற வாதம் சரியல்ல என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 6-30)

இன்னொன்றையும் இந்த அவைக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சென்ற ஆண்டு Current Out lay 114 கோடி ரூபாய் தான் ஒதுக்கினோம். இந்த ஆண்டு 152 கோடி ரூபாய் அதற்கு மட்டும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது எவ்வளவு மகிழ்ச்சிக்குரிய நிலை என்பதையும் நாம் பார்க்க வேண்டும்.

அடுத்தபடியாக, ஒரு விஷயத்தை இங்கே நான் சொல்ல விரும்புகிறேன். எதற்காகவென்றால், நம்முடைய நாட்டிலே இப்போது இருக்கிற நிலைமையிலே இயன்ற அளவுக்கு முயற்சி செய்து, எந்த அளவுக்கு நிதிநிலையைத் திரட்ட முடியுமோ அதை மையமாக வைத்துப் பார்த்தால், இவ்வளவு தான் செய்ய முடியும். இன்னும் devolution of funds ஜாஸ்தியாக இருந்தால், அதிகமாகச் செய்யலாம். ஆகவே, அந்தத் துறையையும் கவனிக்காமல் இருக்கவில்லை என்பதை என்னால் சொல்லிக்கொள்ள முடியும்.

அடுத்தபடியாக, இன்டஸ்ட்ரீஸ். நான் மீண்டும் சொல்கிறேன். நம்முடைய பட்ஜெட்டைப் பார்த்தால், அக்ரிகல்சுரல் செக்டர், இன்டஸ்ட்ரீஸ் செக்டர் இந்த இரண்டையும் போக மீதி என்ன இருக்கிறது? அக்ரிகல்சுரல் செக்டரிலே நாம் உற்பத்தியைப் பெருக்க வேண்டும். தற்போது இருக்கும் விவசாய அமைச்சர் ரொம்ப ராசிக்காரர். அவர் பொறுப்பு ஏற்ற பிறகு, உணவு நிலைமை நல்ல முறையில் இருக்கிறது. இப்படியே இருக்க வேண்டும் என்று ஆசைபப்டுகிறேன். அது மாதிரி இன்டஸ்ட்ரீஸ் செக்டரைப் பொறுத்த வரையில், நிதிநிலை அறிக்கையில் 15-ல் இருந்து 17-வது பாராக்களைப் படித்தால், எந்த அளவுக்கு வளர்ச்சி இருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ளலாம். இதைத் தெரிந்துகொள்ள நாம் வெகுதூரம் போகவேண்டியதில்லை. இன்றைய தினம் 'இந்தியன் எக்ஸ்பிரஸ்'

திரு. ம. சங்கரலிங்கம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹண்டே அவர்களுடைய அந்த குறிப்பிட்ட பேச்சு குறிப்பிலிருந்து நீக்கப்பட வேண்டும். அதைக் குறிப்பில் வைத்துக்கொள்ளுவதாக இருந்தால் பிறகு நாளைக்கு நாங்கள் சொல்லுவதையும் நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

மாற்றுத் தலைவர் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன்) : டாக்டர் ஹண்டே அவர்கள் தம்முடைய கருத்தை வாபஸ் வாங்கிக்கொள்ளுகிறார்களா ?

டாக்டர் எச். வி. ஹண்டே : ஆமாம். மாண்புமிகு முன்னவர் அவர்கள் சொன்ன மாதிரியாக நான் விஷயத்திற்குள்ளே போக விரும்பவில்லை. ஒத்தி வைப்புத் தீர்மானத்தில் எந்த அளவுக்குப் பேசினார்களோ அந்த அளவுக்கு நானும் பேசுகிறேன். அதற்கு மேலே போக வேண்டியதில்லை என்று கருதுகிறேன்.* * * வார்த்தை வேண்டாம் என்று கருதினால் அதைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடலாம்.

மாற்றுத் தலைவர் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன்): * * அந்த வார்த்தை குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

டாக்டர் எச். வி. ஹண்டே : பாராளுமன்ற உறுப்பினர் அவர்கள் எந்த அளவுக்கு அதிலே பாதிக்கப்பட்டிருக்கிறார் என்பதை நானே நேரில் பார்த்துக் கேட்டு வந்திருக்கிறேன். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கூட பார்த்திருப்பார்கள் என்று கருதுகிறேன். அவர்கள் போய்ப் பார்க்கப் போவதாகச் சொன்னார்கள். அவரிடத்திலே பேசிய போது, எவ்வளவு வேதனைக்குரிய நிலைமை என்பதைக் குறித்து பூரா விவரத்தையும் என்னிடம் கொடுத்திருக்கிறார்கள். கட்சியின் அமைப்புச் செயலாளர் என்ற வகையில், அவரைப் பார்க்க வேண்டியது என்னுடைய கடமை என்ற முறையில் அவரோடு பேசி பல கருத்துக்களைத் தெரிந்துகொண்டேன்.

திரு. ம. சங்கரலிங்கம் : அப்படியானால் திரு. செஞ்சி இராமச்சந்திரன் அவர்களையும் பார்த்துவிட்டுப் பேசியிருக்க வேண்டும். திரு. செஞ்சி இராமச்சந்திரனைத் தெரியாது என்பதால், பார்க்கக் கூடாது என்ற கருத்தல்ல. அவரும் பக்கத்து அறையில்தான் இருக்கிறார். நடுநிலையாகப் பேசுவது போல் சாயம் பூசிக்கொண்டு பேசும்போது, இரண்டு பேரையும் பார்த்து விட்டுப் பேச வேண்டும்.

டாக்டர் எச். வி. ஹண்டே : அந்த விஷயத்தை விட்டுவிட்டு அடுத்த விஷயத்திற்குப் போகிறேன்.

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.



மாற்றுத் தலைவர் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன்) : உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே அரை மணி நேரம் பேசியிருக்கிறார்கள். ஆகவே சுருக்கமாகப் பேசி சீக்கிரமாக முடிக்க வேண்டும்.

டாக்டர் எச். வி. ஹண்டே : இப்படிப்பட்ட கசப்பான நிலைமைகள் வருகிற நேரத்தில், என்ன உண்மை நிலை என்பதை அறிந்து வரவேற்கத்தக்க ஒரு பரிகாரத்தைத் தேடுவது ஆளும் கட்சியினுடைய பொறுப்பு மட்டுமல்ல, எதிர்க் கட்சியினுடைய பொறுப்பும் ஆகும் என்பதை மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ளுகிறேன். என்னைப் பொறுத்த வரையில், நம்முடைய ஆளும் கட்சி இப்பேர்ப்பட்ட சம்பவங்களை விரும்பாது என்று நினைக்கிறேன். நம்முடைய அரசாங்கத்தைப் பொறுத்த வரையிலே, இப்படிப்பட்ட சம்பவம் நடைபெறக் கூடாது என்பது தான் ஆசை. இப்படிப்பட்ட சம்பவங்களை உருவாக்கக் கூடிய சூழ் நிலையை உருவாக்கி, இங்கே பயங்கரமான தகராறுகள் நடக்கின்றன, சென்னையிலே தகராறு, இன்னுமொரு இடத்திலே வன்முறை நடக்கிறது என்ற அடிப்படையிலே சூடான நிலைமையை உருவாக்கி இங்கே சட்டம், ஒழுங்கு இல்லை என்ற நிலைமையைத் திட்டமிட்டு எதிர்க் கட்சிகள் உருவாக்க விரும்புவது ஜனநாயகத்திற்கு ஆபத்தான நிலைமையை உண்டாக்காதா என்று எதிர்க் கட்சித் தோழர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். சுமுகமான நிலைமை தமிழகத்திலே இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் இதைச் சொல்லுகிறேன் என்று சொல்லி, நிதிநிலை அறிக்கையைப் பொறுத்த வரையில், நான் ஏற்கெனவே சொன்ன புள்ளிவிவரத்தின் அடிப்படையிலே பார்க்கும்போது, அகில இந்திய அளவிலே நம்முடைய மாநிலத்தின் நிதிநிலை அறிக்கைதான் சிறந்த அறிக்கை —Probably this is one of the best budgets presented by State Governments என்ற நிலைமை இருக்கிறது என்று சொல்லி, இதை அத்தனை பேரும் வரவேற்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, பேச வாய்ப்பளித்ததற்காக நன்றி கலந்த வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

THIRU A. R. DAMODARAN : Hon. Vice-Chairman, Sir, I am sorry I have to take up the time of the House, almost at the point of adjournment. I shall try to be as brief as possible in my remarks and I hope the House will bear with me, although they must be tired after having sat for more than 2 1/2 hours.

[டாக்டர் எச். வி. ஹண்டே] [1979 மார்ச் 14

பொறுத்தவரையில், தெளிவாகச் சொல்கிறேன், எந்த உறுப்பினர் தாக்கப்பட்
டாலும், நான் மிக்க வேதனையடையக்கூடியவன் என்பது இங்கே உள்ள
மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நன்றாகத் தெரியும். அதிலே கருத்து
வேறுபாடு கிடையாது. நாம் ஒவ்வொருவரும் எப்படிப் பழகுகின்றோம்
என்பதை இங்கே சுட்டிக்காட்டத் தேவையில்லை. அவையின் உள்ளே
இருக்கும்போது சூடாகப் பேசினாலும், அடுத்த இரண்டு நிமிடங்களுக்குப்
பிறகு எவ்வளவு சுமுகமாகப் பழகுகிறோம். இப்படித்தான் பழக
வேண்டும். ஆக, இப்படி ஒரு Civilised method of approach
என்ற ஒரு நிலைமையை வளர்த்துக் கொண்டால், அரசியல்
நன்றாக இருக்கும். ஆகவே, நடைபெற்ற நிகழ்ச்சிகள், சம்பவங்கள் என்ன
என்பதைப் பார்க்க வேண்டும். திரும்பத் திரும்ப நம்முடைய பேரவையிலும்
இங்கேயும் பேசும்போது, பாராளுமன்ற உறுப்பினர் தவறு செய்தார், அவர்
மீது 307-வது செக்ஷன்படி வழக்குப் போட வேண்டும் என்று சொன்னார்
கள். எனக்குத் தெரிந்தவரையில் நான் சொல்கிறேன், போடுவதற்கு எந்த
விதமான காரணமும் கிடையாது. அவர்கள் தான் இதிலே பாதிக்கப்
பட்டவர்கள். முழுக்க முழுக்க பாதிக்கப்பட்டவர்கள். ஒரு பள்ளிக்கூடத்தைத்
திறக்க வேண்டும் என்ற நிலைமை. அந்தப் பள்ளிக்கூடம் யார் எல்லையிலே
வருகிறது? எம். எல். ஏ. எல்லைக்குள் வருகிறதா? அல்லது பாராளுமன்ற
உறுப்பினர் எல்லைக்குள் வருகிறதா? நம்முடைய மதிப்பிற்குரிய
திரு. வேணுகோபால் அவர்களுடைய எல்லைக்குள்ளேயும் வருகிறது,
நம்முடைய மதிப்பிற்குரிய திரு. ராமச்சந்திரன் அவர்களுடைய
எல்லைக்குள்ளேயும் வருகிறது. பஞ்சாயத்தினுடைய பிரசிடென்ட் பணம்
கொடுப்பதில்லை. நிதி ஒதுக்குவது கூட ஒன்றியம். அதிலே அவர்
சொன்னதையெல்லாம் பார்லிமெண்ட் உறுப்பினர் பெயரைப் போடவில்லை
என்பது. ஒரு சின்ன விஷயம் என்னைப் பொறுத்தவரையில் இது.
சென்னையைப் பொறுத்தவரையில் என்றால், வேறு விஷயம். யாரும்
பொருட்படுத்த மாட்டார்கள். கிராமங்களிலே எல்லாம் அப்படி இல்லை.
கிராமங்களிலே எல்லாம் ஒரு எம்.பி. யாக இருந்து கொண்டு அதிலேயும் ஒரு
ஆளுங்கட்சி உறுப்பினராக இருந்து கொண்டு அவர் பெயரைப் போடாமல்,
எதிர்க் கட்சியிலே இருப்பவர்களின் பெயர் போடப்பட்டிருக்கிறதே என்ற ஒரு
வினா எழுப்பப்பட்டு, மதிப்பிற்குரிய இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்
அவர்களின் பெயரைக் கூட அதிலே சம்பந்தப்படுத்தப்பட்டிருக்கிறது.
மட்டப்பாறை என்ற அந்த ஊரிலே செல்வாக்கு மிக்க திரு. பெருமாள்
நயினார் இருக்கிறார்கள். அவருடைய பெயரை முதலில் போட இருந்தது.



1979 மார்ச் 14] (டாக்டர் எச். வி. ஹண்டே)

பிறகு அவருடைய உத்தரவை வாங்கிக்கொண்டு போடவில்லை. திரு.
வேணுகோபால் பெயர் போட வேண்டும் என்று சொல்லி, அதற்காக
இன்னொரு நாள் தள்ளிப் போடுவது என்பதெல்லாம் வேதனைக்கு உரிய
விஷயங்கள். இதுதான் என்னுடைய கருத்து. எனக்கு எதிர்க் கட்சியில
உள்ளவர்கள் நண்பர்களாக இருக்கிறார்கள். ஆனால் இப்படி ஒரு
வேதனைக்கு உரிய விஷயம் நடைபெற்றிருக்கிறது. திரு. வேணுகோபால்—
ஒரு பாராளுமன்ற உறுப்பினர் 10-ம் தேதி

(பிற்பகல் 6-40)

அன்று பேசிக்கொண்டிருக்கிறார்கள். பேசுகிற நேரத்தில், அங்கே டி.எஸ்.பி.
வந்து 144-வது செக்ஷன்படி உத்தரவு போடப்பட்டிருக்கிறது, ஆகவே
நீங்கள் பேசக்கூடாது என்று சொன்னார்கள். பேசவில்லை என்று
உட்கார்ந்து கொண்டார். பிறகு திரு. வேணுகோபால், எம்.பி. அவர்களும்,
திரு. பெருமாள் நயினார் அவர்களும் காரில் வந்து கொண்டிருந்தார்கள்.
திரு. திண்டிவனம் இராமமூர்த்தி அவர்கள் வந்து இருக்கையில் அமர்
கிறார்கள். அவர்களுக்குத் தெரியும். அவர்கள் இரண்டு பேரும் அந்த
ஊருக்கு வருகிறார்கள் என்பதற்காக * * *

திரு. வே. தங்கப்பாண்டியன்: மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த
மன்றத்தில் 'ரூலிங்' கொடுத்திருக்கிறார்கள். வழக்கு இன்வெஸ்டிகேஷன்
ஸ்டேஜில் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். இந்தப் பிரச்சினை
யைப்பற்றி நாங்கள் பேசும்போது பலமுறை தடுக்கப்பட்டிருக்கிறோம்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: மாற்றுத் தலைவர் அவர்களே,
மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹண்டே அவர்கள் இவ்வளவு விளக்கமாக
இவ்விஷயத்திற்குள்ளே செல்ல வேண்டாம் என்று கருதுகிறேன். இந்த
விஷயம் வழக்கில் இருக்கிறது என்பது உண்மை. இது எல்லோருக்கும்
பொதுவானது. அவர்கள் வேறுவிதமாகப் பேசினால், வழக்கையே
பாதிக்கக் கூடும் என்பதைக் கருதி, பொதுவாகச் சொல்லலாம் என்று தெரி
வித்துக்கொள்ளுகிறேன். வழக்கிலே இருப்பதால், அதை மேலும் விஸ்தி
வாக்குவது வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதை விட்டு
விட்டு, மற்ற கருத்துக்களைச் சொல்ல வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளு
கிறேன்.

* [illegible] தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

[Thiru A. R. Damodaran] [1979 மார்ச் 14

The State Budget depends to a large extent on what the Central Budget proposes to transfer to a State by way of devolution, grants-in-aid, loans, etc., and, therefore, it is very right that Dr. Handle should have referred to the Central Budget before he offered his remarks on the State Budget. We have not yet recovered from the very crued and sadistic budget that has been presented by Chowdhary Sahib for 1979-80 and it is not only we in Tamil Nadu who are shocked but the people throughout the length and breadth of this coustry, in all the Janata-ruled States also are shocked. I am sorry the hon. Member Thiru D'Monte is not here. This is one of the harshest budgets that have ever been presented since India gained Independence not only from the point of view of the qquanium of taxes levied but also from the point of view of the wide range of articles on which the Hon. the Finance Minister of the Government of India has chosen to levy the additional taxes which has increased —and it will continue to increase—the inflationary tendencies and the cost of living of people all over India. Many people have characterised Thiru Charan Singh's budget as a farmer-oriented budget and as an anti-urban class budget. I do not wish to get involved in the controversy as to whether it is a farmer-oriented budget or anti-urban class budget but, in all fairness, I hope the Members of Parliament belonging to the ruling party will be able to bring to the notice of the Central Minister that there are many objectionable features in the various levies that have been made. Already from what we read in the newspapers, there are rumblings within the Janata Party itself and perhaps some sense might dawn on the Finance Minister and some of the proposals that he has made are likely to be either withdrawn or whittled down.

(பிற்பகல் 6-50)

Sir, the total taxation envisaged by the Central Government this year is of the order of Rs. 740 crores. Out of the Rs. 740 crores of excise duty, a relief of Rs. 135 crores is being given to the agricultural sector by way of reduction in duties on Urea, Light Diesel Oil and a few other items which are used in the agricultural sector. I am very happy that these concessions have been given to the agricultural sector. One of the reasons why we are having a pronounced feeling of discontent amongst the farming classes in India is that, for years, not only State Governments but also the Central Government have deliberately followed a policy of keeping the prices of farm produce and foodgrains at a low level



1979 மார்ச் 14] [Thiru A. R. Damodaran]

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** சமீபத்திலே சென்னையில் பெரு மழையின் காரணமாக, காஷ்மீரத்திலே மிதந்து கொண்டிருக்கும் படகு வீடுகள்போல, நமது சேரிகள் வெள்ளத்தில் மிதந்து கொண்டிருந்தன. நாம் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டிருந்தோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடல்நிலை சரியில்லாதபோதும், பல்வேறு இடங்களைப் பார்வையிட்டார்கள். அதன் பிறகு, அவர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். 'இதற்கு முன் கூட்டியே நடவடிக்கை எடுக்க வேண்டும், நாம் சுதந்திரம் பெற்று 31 ஆண்டுகள் ஆகியும் இன்றைக்கு தலைநகரிலே இந்தக் குடியிருப்புகளிலே இருந்துகொண்டிருக்கும் குடும்பங்கள் ஒவ்வொரு ஆண்டும் பாதிப்புக்குள்ளாகின்ற நிலைமையை நாம் நிரந்தரமாகப் போக்க வேண்டும்' என்ற கருத்தை வெளியிட்டார்கள். தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் தாழ்வான பகுதிகளுக்கு எல்லாம் சென்று பார்த்து வந்தார்கள். இவ்வாறு மழை பெய்து, நீர் தேங்குகின்ற நிலைமையில், வெள்ளத்தால் பாதிப்பு ஏற்படுகின்ற இடத்தில் இல்லாமல், மேடான பகுதிகளில் இவர்களுடைய குடியிருப்புகளை வைத்துக்கொள்ள அனுமதிக்கலாம். அதுவே பெரிய திட்டமாகும். பாதிப்பு ஏற்படுகின்ற இடங்களில் குடிசைகள் கட்டாமலிருந்தால், இதைத் தடுக்கலாம். லட்சக்கணக்கான பேர்கள் குடிசைகளில்தான் இருக்கிறார்கள். வெள்ளம் ஏற்படுகின்ற சூழ்நிலையில் பாதிப்பு யாருக்கு வருகிறது என்று பார்த்து அப்படிப்பட்ட தாழ்வான பகுதிகளில் இருப்பவர்களை மேடான பகுதிக்கு எடுத்துச் சென்றுவிட்டால், இந்த நிலைமைகளைத் தடுத்துவிடலாம். மற்றபடி பொருளாதார வசதிகளையும் சமூக நிலையையும் இந்திய அளவில் மாற்றுவது என்பது பொதுவான பிரச்சினையாக இருக்கிறது. இந்தப் பிரச்சினை காலப்போக்கிலேதான் மாறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் கூறும்போது, பக்கத்திலே எண்ணூரில் படகு கவிழ்ந்ததைத் தொடர்ந்து உதவித் தொகை தரப்பட்டதாகச் சொன்னார்கள். அதற்கும், கரூரை அடுத்த வெங்கமேட்டிலே ஒரு பள்ளிக் கட்டிடம் இடிந்து விழுந்ததால் ஏற்பட்ட விபத்துக்கும் கொடுத்திருக்கின்ற உதவித் தொகைகளில் வேறுபாடு இருக்கிறது. ஆங்காங்கே உள்ள ரெவின்யூ துறையினர் எடுக்கின்ற முடிவைப் பொறுத்தது உதவித் தொகை என்ற நிலை இருக்கிறது. திருச்சி மாவட்டத்தில் உள்ள ரெவின்யூ அதிகாரி ரூ. 2,000 என்றும், சென்னையிலே இருக்கின்ற அதிகாரி ரூ. 5,000 என்றும் நிர்ணயித்திருக்கிறார்கள். மாணவர்களுடைய உயிர் பெற்றோர்களைப் பொறுத்தவரையில் ஒரே மாதிரிதான். ஆகவே பள்ளி இடிந்ததால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கும் உயர்த்தித் தருவார்களா என்று கேட்டுக் கொள்கிறேன்.



**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** உயிரைப் பொறுத்த வரையில், பொதுவாக ஒரே மாதிரிதான். அதிலே நமக்கு கருத்து வேறுபாடு கிடையாது. அதுபோல உயிர் ஒரு தடவை போனால், அது யாருக்கும் திரும்ப வருவதும் இல்லை. ஆனால் இந்த விபத்துக்களிலே இருக்கின்ற பலவிதமான நிலைமைகளையும் பார்க்கிறார்கள். யாரும் எதிர்பாராத விதமாக, யாராலும் தவிர்க்க முடியாத சூழ்நிலைகளில் விபத்து ஏற்படுகின்றது. அதற்கென்று நாம் திட்டவட்டமான வரையறை வைத்திருக்கிறோம். படகு விட்டது தவிர்க்கப்பட வேண்டிய ஒன்று. அவர்கள் மாணவர்களை படகில் ஏற்றிச் செல்லக் கூடாது. அந்தப் படகு உரிமையாளருக்கு அதற்கு அனுமதி கிடையாது. தவறு தவிர்க்கப்பட்டிருக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அந்த பாதிப்பினுடைய காரணங்களை வைத்து அதிகமாக நிதி உதவி கொடுத்திருக்கிறார்கள்.

**திரு. க. இராமமூர்த்தி :** ஆற்றினுடைய வெள்ளப் பிடிப்புப் பகுதிகளிலே, ஆபத்தான பகுதிகளிலே குடியிருப்பதைத் தடுப்பது பற்றிய கொள்கையை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நெருக்கடி நிலை இருந்தபோது, அடையாறு (சைதாப்பேட்டை) வெள்ளப்பிடிப்புப் பகுதியில், குடிசைகள் கட்டக்கூடாது என்று தடுக்கப்பட்டது. நெருக்கடி காலத்தில் வெள்ளத்திற்குப் பிறகு, நடவடிக்கை எடுக்கப்பட்டு அங்கு யாரும் குடிசை கட்டாமல் தடுக்கப்பட்டது. பிறகு மீண்டும் கட்டாத நிலை இருந்தது. ஆனால் 1977-லிருந்து மீண்டும் குடிசைகள் போடப்பட்டது மட்டுமல்லாமல், சமீபத்தில் வெள்ளத்தின் காரணமாக இந்தக் குடிசைகளுக்கு ஏற்பட்ட பாதிப்புக்கு நிவாரணம், நஷ்டஈடு என்றெல்லாம் கொடுக்கப்படுகிறது. இந்த மாநிலத்தில் வெள்ளத்திற்குப் பிறகு மீண்டும் அதே பகுதியில் குடிசைகள் அமைத்துக்கொள்கின்ற நிலை எப்படி ஏற்பட்டது? அரசு அதனைத் தடுக்க நடவடிக்கை எடுத்திருக்கிறதா?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** நெருக்கடி கால நிலையிலே அப்புறப்படுத்தப்பட்ட குடிசைகள் என்று சொல்கிறார்கள். நெருக்கடி கால ஆட்சியின்போது என்று சொல்கிறார்கள்.

**திரு. க. இராமமூர்த்தி :** அப்புறப்படுத்தப்பட்டது. மீண்டும் குடிசைகள் கட்டவிடாமல் தடுக்கப்பட்டதா என்று கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** நெருக்கடி காலத்தின்போது தடுக்கப்பட்டது, திரும்பவும் கட்டவிடாமல் தடுக்கப்படவில்லை என்று மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சொல்கிறார்கள். இதைப்பற்றிய ஒரு

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** விபத்தின் காரணமாக உயிரிழந்த குடும்பங்களுக்கு நமது அரசு உதவித் தொகையை இடத்திற்கு இடம் மாறுபட்ட வகையிலே அளிக்கிறது. இதை ஏன் சொல்கின்றேன் என்றால், என்னூர்ப் படகு விபத்திலே இறந்த மாணவர்களுடைய குடும்பங்களுக்கு ரூ. 5,000 என்றும், வெங்கமேட்டிலே ரூ. 2,000 என்றும் கொடுக்கிறார்கள். சென்னை பக்கத்திலே இருப்பவர்களுக்கு அதிகமாகவும், மற்ற மாவட்டங்களிலே இருப்பவர்களுக்குக் குறைவாகவும் கொடுக்கின்ற சூழ்நிலை இருக்கிறது. எந்தப் பகுதியிலே உயிர் இழப்பு ஏற்பட்டாலும், அந்தத் தொகையை ஓரே மாதிரியாகக் கொடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** இந்த உதவித் தொகை அளிப்பதிலே குறிப்பிட்ட நியதிகள் இருக்கின்றன. விபத்திலுள்ள பொதுவான நிலைமைகள், தன்மைகள் ஆகியவற்றை கருதித்தான் கொடுக்கப்படுகிறது. சென்னைக்குப் பக்கத்திலே விபத்து ஏற்பட்டால், அதிகமான தொகை, தூரத்தில் உள்ள பகுதியில் விபத்து ஏற்பட்டால், குறைவு என்பதல்ல. இது குறித்து அரசுக்கு ஒரு பொதுவான நிலை இருக்கிறது. வருவாய் இலாகாவிலுடைய ஆணைப்படி, மழைக் காலங்களில் விபத்துக்கள் ஏற்பட்டு குடியிருப்புகள் பாதிக்கப்படுமானால், ரூ. 60 என்று கொடுத்து வந்ததை ரூ. 100 என்று உயர்த்திக் கொடுக்கிறோம். தமிழகம் முழுவதற்கும் இந்தக் கொள்கை இருக்கிறது. தனித்தன்மையில் பெரிய பாதிப்பு ஏற்பட்டு விட்டால், அந்தச் சூழ்நிலையைக் கருதி, அந்த நிலைமைகளைக் கருதி, கூடுதலாகக் கொடுக்கலாம். அண்மையிலே நீலகிரியில் ஏற்பட்ட சேதத்திலே கூட அந்தத் தன்மைகளை வைத்து அதிகமாக அளித்திருக்கிறார்கள். இளம் சிறார்களை இழந்த பெற்றோர்களுக்கு பொருளாதார ரீதியில் ஏற்படும் இழப்பைக் கருதியும், மனோதத்துவ ரீதியில் அவர்களுக்கு எவ்வளவு பெரிய பாதிப்பு ஏற்படுகின்றது என்பதை மனதில் கொண்டும் அவர்களுக்கு ஓரளவுக்கு ஆதரவு சொல்கின்ற தன்மையிலே உதவித்தொகை அளிக்கப்பட்டிருக்கிறது. அந்த விபத்து சென்னைக்குப் பக்கத்திலே நடைபெற்றது என்பதற்காக அப்படி உதவித் தொகை அளிக்கப்படவில்லை. எங்கு நடந்தாலும் இந்த நிலைமைதான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வே. தங்கப்பாண்டியன்:** மாண்புமிகு முன்னவர் அவர்கள் புயல், வெள்ளக் காலங்களிலே ஏற்படுகின்ற விபத்துக்களைத் தடுப்பதற்கு ஒரு நிரந்தரமான திட்டமிடப்பட்டிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்தத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கின்ற முறை என்ன? ஆற்றின் மத்தியிலே, தாழ்வான பகுதிகளிலே வீடுகள் கட்டுவதைத் தடுக்க அரசு முன்வருமா?

கொள்கையை எடுத்துச் சொல்ல வேண்டும் என்றும் கேட்கிறார்கள். இதை ஒரு வேண்டுகோளாகத்தான் சொல்ல வேண்டும். எல்லோரும் சேர்ந்து செய்ய வேண்டும் என்ற அடிப்படையிலேதான் செயல்பட வேண்டும். நெருக்கடி காலத்தில் நடந்தது, இப்போது நடக்கவில்லை என்று சொல்வது தனிப்பட்ட அபிப்பிராயம். அந்தப் பகுதி மக்களுடைய நன்மைக் கருதிச் செய்தால்கூட, அது அரசியல் ஆகிவிடுகிறது என்பதற்காகத்தான் சொல்கிறேன். இனிமேல் நாம் எல்லோரும் சேர்ந்து இந்த மாதிரி விடுதிகளைக் கட்ட வேண்டாம் என்று அவர்களிடம் சொன்னால், இப்படிப்பட்ட பிரச்சினை வராது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. செ. முத்துசாமி:** படகு விபத்தைத் தவிர்த்திருக்கலாம். தவிர்க்க வேண்டியதைத் தவிர்க்காமல் போய்விட்டதால், அப்படி உதவித் தொகை கொடுக்கப்பட்டது. அது போலவே அந்தப் புதிய கட்டிடம் நல்ல முறையிலே கட்டப்பட்டிருக்க வேண்டும். என்ஜினியர்கள் பார்த்ததிலோ, காண்ட்ராக்டர் செய்ததிலோ கோளாறு காரணமாக அந்த விபத்து ஏற்பட்டிருக்கலாம். அந்த விபத்தைத் தவிர்ப்பதற்கும் காரணங்கள் இருப்பதால், அங்கும் அரசு உதவித் தொகையை உயர்த்தித் தருமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** தவிர்க்கக்கூடியது என்று சொல்வது படகு விபத்துக்கும் ஏற்றது. அதிலுள்ள தவறுக்குக் காரணம் என்னவென்றால், அவர்களுக்குப் படகை விடுவதற்கு அனுமதியே இல்லை. அதற்கு மேல் அளவுக்கு அதிகமான மாணவர்களை ஏற்றி இருக்கக் கூடாது. அந்த நிலையைத் தவிர்த்திருக்கலாம். இந்தக் கட்டிட விஷயத்தை எடுத்துக்கொண்டால், அதில் வந்திருக்கக்கூடிய விபத்தையும் தவிர்த்திருக்கலாம். அந்த ஒப்பந்தக்காரரின் தவறு காரணத்தாலோ ஏதோ ஒரு குறைபாட்டின் காரணமாகவோ இந்த விபத்து நடந்திருக்கிறது. அதுவும் எதிர்பாராத சம்பவமாகவே இருக்கிறது. ஆயினும் இளம் சிறார்கள், அவர்கள் பெற்றோர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற அளவிலே கொடுப்பது என்றுதான் கொடுத்தோம்.

## *Electricity Arrears.*

* 191. *Q.*—THIRU *K.* RAMAMOORTHY: Will the Hon. the Minister for Electricity be pleased to state the amount of electricity arrears due to the Tamil Nadu Electricity Board from the Industries in the State, before it was empowered to recover arrears under the provisions of the Revenue Recovery Act?



## மின் கட்டண நிலுவைகள்.

**திரு. க. இராமமூர்த்தி:** மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

நிலவரி வசூல் சட்டத்தின் விதித்துறைகளின்கீழ் நிலுவைகளை வசூலிக்க அதிகாரமளிக்கப்படுவதற்குமுன்பு, இம்மாநிலத்தில் உள்ள தொழிற்சாலைகளிலிருந்து தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குச் சேரவேண்டிய மின் கட்டண நிலுவைத் தொகை எவ்வளவு?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** 1978 ஆம் ஆண்டு தமிழ் நாடு மின்வாரியம் (நிலுவைகளை வசூலித்தல்) சட்டம் 19—6—1978 அன்று காலை அமுலுக்கு வந்தது. 1978 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முடிய தொழிற்சாலைகளிலிருந்து மின்வாரியத்திற்கு வரவேண்டிய நிலுவை மின் கட்டணம் ரூ. 1,318.50 இலட்சமாகும்.

(பிற்பகல் 4-20)

**திரு. க. இராமமூர்த்தி:** 13 கோடியே 18 லட்சம் ரூபாய் நிலுவையில், இந்தச் சட்டம் வந்த பிறகு எவ்வளவு வசூலாகியிருக்கிறது? தொடர்ந்து பல ஆண்டுகளாக கட்டணம் கட்டாத தொழிற்சாலைகள் எத்தனை?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** இந்தச் சட்டத்திற்கான விதிமுறைகள் வகுக்கப்படுகின்றன. ஆகையால் இந்தச் சட்டம் அமுல்படுத்தப்படவில்லை. நீண்ட காலமாக நிலுவையில் இருக்கின்ற தொகைகள் எந்தெந்த அடிப்படையிலே என்று கேட்டார்கள். National Textile Corporation அதாவது Sick மில்களை எடுத்து நடத்துகின்ற National Textile Corporation ரூ. 46.32 லட்சம் பாக்கி; Relief Undertakings சில மில்கள் மோசமாகிவிட்டால், அவைகளை Relief undertaking என்று எடுத்துக்கொள்கிறோம். அந்த முறையில் ரூ. 8.19 லட்சம் பாக்கி; Moratorium granted பின்னி & கம்பெனி போன்ற நிறுவனங்களுக்கு Moratorium கொடுத்ததில் ரூ. 12.75 லட்சம் பாக்கி; Suits pending—High Court-Suits pending ஆக இருக்கிறது. அப்படிப்பட்ட முறையில் MALCO போன்ற நிறுவனங்களின் மூலம் ரூ. 9,44.74 லட்சம் பாக்கி; Waiver Contemplated— ரூ. 12.86 லட்சம், பாக்கி.

கொள்கையை எடுத்துச் சொல்ல வேண்டும் என்றும் கேட்கிறார்கள். இதை ஒரு வேண்டுகோளாகத்தான் சொல்ல வேண்டும். எல்லோரும் சேர்ந்து செய்ய வேண்டும் என்ற அடிப்படையிலேதான் செயல்பட வேண்டும். நெருக்கடி காலத்தில் நடந்தது, இப்போது நடக்கவில்லை என்று சொல்வது தனிப்பட்ட அபிப்பிராயம். அந்தப் பகுதி மக்களுடைய நலனைக் கருதிச் செய்தால்கூட, அது அரசியல் ஆகிவிடுகிறது என்பதற்காகத்தான் சொல்கிறேன். இனிமேல் நாம் எல்லோரும் சேர்ந்து இந்த மாதிரி விடுகளைக் கட்ட வேண்டாம் என்று அவர்களிடம் சொன்னால், இப்படிப்பட்ட பிரச்சினை வராது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. முத்துசாமி : படகு விபத்தைத் தவிர்த்திருக்கலாம். தவிர்க்க வேண்டியதைத் தவிர்க்காமல் போய்விட்டதால், அப்படி உதவித் தொகை கொடுக்கப்பட்டது. அது போலவே அந்தப் புதிய கட்டிடம் நல்ல முறையிலே கட்டப்பட்டிருக்க வேண்டும். என்ஜினியர்கள் பார்த்ததிலோ, காண்ட்ராக்டர் செய்ததிலோ கோளாறு காரணமாக அந்த விபத்து ஏற்பட்டிருக்கலாம். அந்த விபத்தைத் தவிர்ப்பதற்கும் காரணங்கள் இருப்பதால், அங்கும் அரசு உதவித் தொகையை உயர்த்தித் தருமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : தவிர்க்கக்கூடியது என்று சொல்வது படகு விபத்துக்கும் ஏற்றது. அதிலுள்ள தவறுக்குக் காரணம் என்னவென்றால், அவர்களுக்குப் படகை விடுவதற்கு அனுமதியே இல்லை. அதற்கு மேல் அளவுக்கு அதிகமான மாணவர்களை ஏற்றி இருக்கக் கூடாது. அந்த நிலையைத் தவிர்த்திருக்கலாம். இந்தக் கட்டிட விஷயத்தை எடுத்துக்கொண்டால், அதில் வந்திருக்கக்கூடிய விபத்தையும் தவிர்த்திருக்கலாம். அந்த ஒப்பந்தக்காரரின் தவறு காரணத்தாலோ ஏதோ ஒரு குறைபாட்டின் காரணமாகவோ இந்த விபத்து நடந்திருக்கிறது. அதுவும் எதிர்பாராத சம்பவமாகவே இருக்கிறது. ஆயினும் இளம் சிறார்கள், அவர்கள் பெற்றோர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற அளவிலே கொடுப்பது என்றுதான் கொடுத்தோம்.

## *Electricity Arrears.*

*191. *Q.*—THIRU *K.* RAMAMOORTHY: Will the Hon. the Minister for Electricity be pleased to state the amount of electricity arrears due to the Tamil Nadu Electricity Board from the Industries in the State, before it was empowered to recover arrears under the provisions of the Revenue Recovery Act?



## மின் கட்டண நிலுவைகள்.

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

நிலவரி வசூல் சட்டத்தின் விதித்துறைகளின்கீழ் நிலுவைகளை வசூலிக்க அதிகாரமளிக்கப்படுவதற்குமுன்பு, இம்மாநிலத்தில் உள்ள தொழிற்சாலைகளிலிருந்து தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குச் சேரவேண்டிய மின் கட்டண நிலுவைத் தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : 1978 ஆம் ஆண்டு தமிழ் நாடு மின்வாரியம் (நிலுவைகளை வசூலித்தல்) சட்டம் 19—6—1978 அன்று காலை அமுலுக்கு வந்தது. 1978 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முடிய தொழிற்சாலைகளிலிருந்து மின்வாரியத்திற்கு வரவேண்டிய நிலுவை மின் கட்டணம் ரூ. 1,318.50 இலட்சமாகும்.

(பிற்பகல் 4-20)

திரு. க. இராமமூர்த்தி : 13 கோடியே 18 லட்சம் ரூபாய் நிலுவையில், இந்தச் சட்டம் வந்த பிறகு எவ்வளவு வசூலாகியிருக்கிறது? தொடர்ந்து பல ஆண்டுகளாக கட்டணம் கட்டாத தொழிற்சாலைகள் எத்தனை?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இந்தச் சட்டத்திற்கான விதிமுறைகள் வகுக்கப்படுகின்றன. ஆகையால் இந்தச் சட்டம் அமுல்படுத்தப்படவில்லை. நீண்ட காலமாக நிலுவையில் இருக்கின்ற தொகைகள் எந்தெந்த அடிப்படையிலே என்று கேட்டார்கள். National Textile Corporation அதாவது Sick மில்களை எடுத்து நடத்துகின்ற National Textile Corporation ரூ. 46.32 லட்சம் பாக்கி; Relief Undertakings சில மில்கள் மோசமாகிவிட்டால், அவைகளை Relief undertaking என்று எடுத்துக்கொள்கிறோம். அந்த முறையில் ரூ. 8.19 லட்சம் பாக்கி; Moratorium granted பின்னி & கம்பெனி போன்ற நிறுவனங்களுக்கு Moratorium கொடுத்ததில் ரூ. 12.75 லட்சம் பாக்கி; Suits pending—High Court-Suits pending ஆக இருக்கிறது. அப்படிப்பட்ட முறையில் MALCO போன்ற நிறுவனங்களின் மூலம் ரூ. 9,44.74 லட்சம் பாக்கி; Waiver Contemplated— ரூ. 12.86 லட்சம், பாக்கி.

திரு. க. இராமமூர்த்தி : கோடிக் கணக்கிலே நிலுவை வைத்துக்கொண்டு, தொழிற்சாலைகளை நடத்திக்கொண்டிருக்க அரசு அனுமதித்துக்கொண்டிருக்கிறது. ஆனால் விவசாயிகள் மிகக் குறைந்த தொகைதான் நிலுவையாக வைத்திருக்கிற நிலையில், அவர்களை மிகக் கடுமையாக அரசு நடத்துகிறது. எனவே இதனைத் தவிர்ப்பது பற்றி அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இதிலே கோடிக்கணக்கிலே ஒன்றுமில்லை. 'மால்கோ' நிறுவனத்தைப் பொறுத்த வரையில், சுமார் ரூபாய் 9 கோடியே 43 லட்சம் நிலுவையாக இருக்கிறது. அதில் 7 கோடி ரூபாய் 'பெனல்ட்டி'. விவசாயிகளுக்கு பெனல்ட்டியைத் தள்ளிக் கொடுத்தது போல், இவர்களுக்கும் தள்ளிக் கொடுத்தால், 7 கோடி ரூபாய் பெனல்ட்டி போய்விடும். ஆகவே, அதிகமாக 'அரியர்ஸ்' இருப்பதாகக் கணக்கு வராது. இதை வைத்துக்கொண்டு, அதைச் சொல்வதைவிட, இரண்டு வகையினரும் செலுத்துவதில் போட்டி இருப்பது நல்லது.

திரு. க. இராமமூர்த்தி : இரு தரப்பாரிலும், விவசாயிகள் பின் தங்கியவர்கள் என்ற காரணத்தால், அவர்களைச் சலுகையோடு நடத்த வேண்டும். அப்படி இல்லையென்றாலும், இரு சாராரையும் ஒரே தரத்தில் வைத்து நடத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : ஒரே தராசில் வைத்தால், ஏழு கோடி ரூபாய்க்கு மேலே போகுமென்று குறிப்பிட்டேன். அதை மாண்புமிகு உறுப்பினரவர்கள் ஏன் ஒத்துக்கொள்ளவில்லை என்பது தெரியவில்லை. விவசாயிகள் பின்தங்கியவர்கள் என்று சொன்னார்கள். , நிலம் இல்லாதவர்கள் இன்னும் பின் தங்கியிருக்கிறார்கள்.

திரு. ம. சங்கரலிங்கம் : தொழில் நடத்த முடியாத, தொல்லைக்கு ஆளாகியிருக்கும் சிக் மில்களை எடுத்து நடத்தும் டெக்ஸ்டைல் கார்ப்பரேஷன் சிலீப் அன்டர்டேக்கிங்ஸ் சுமார் 54 லட்சம் ரூபாய் மின் கட்டணம் கட்ட வேண்டியிருக்கிறது. விவசாயிகள் 'சிக்' தொழிலாளியாக இருக்கிறார்கள். அவர்கள் தொழில் நடத்த முடியாமல், விவசாய உற்பத்தியைக் கொண்டு வாழ முடியாமல், நிலங்களை விற்றுக்கொண்டிருக்கிறார்கள். சிக் மில்களை எடுத்து நடத்தும் அரசு நிறுவனங்களே மின் கட்டணத்தைக் கட்டாமல் இருப்பதால், இவர்களுடைய நிலையும் சரியாகும்வரை மின் கட்டணம் கேட்காமல் இருக்க அரசு உத்தரவிடுமா ?



மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இதிலே உண்மையாக 'சிக்' இல்லை. விவசாயிகளில் பெரும்பாலானவர்கள் கட்டுகிறார்கள். 'சிக்' என்று சொல்கிறபோது, உண்மையிலேயே தூங்குகிறாரா அல்லது தூங்குவது போல் பாவனை செய்கிறாரா என்பதைப் பார்க்க வேண்டும்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : மால்கோ நிறுவனம் ரூபாய் 9 கோடியே 43 லட்சம் கட்ட வேண்டுமென்று அமைச்சரவர்கள் அறிவித்தார்கள். இந்த அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்தவுடன், இப்படிப்பட்ட ஒரு தனிப்பட்ட நிறுவனம் பல கோடி ரூபாயை அரசாங்கத்திற்குச் செலுத்தாமலிருப்பது என்ன நியாயம் என்று முதலமைச்சரவர்கள் பேசினார்கள். ஆனால் நம்முடைய அமைச்சரவர்கள் 'சூட்' பெண்டிங்காக இருப்பதால், வசூலிக்க முடியவில்லை என்ற தகவல் தந்தார்கள். நம்முடைய அரசாங்கம் 'அப்சல்யூட் ஸ்டே'யை வெகேட் செய்யாததால்தான், இந்த வழக்கு நீதி மன்றத்தில் நடந்துகொண்டிருக்கிறது என்பதால், 'அப்சல்யூட் ஸ்டே'யை வெகேட் செய்ய அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : முயற்சிக்கும்.

### *Electricity Charges of Schools.*

* 192. *Q.*—Thiru S. MUTHUSWAMY: Will the Hon. the Minister for Electricity be please to state—

(*a*) whether electricity charges for consumption in schools are treated on 'commercial basis';

(*b*) if so, the reason therefor ; and

(*c*) whether the Government have any proposal to change this ?

### பள்ளிகளின் மின் கட்டணம்.

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பள்ளிகளில் பயன்படுத்தப்படும் மின்சாரத்திற்கான கட்டணம் வியாபார நோக்குடையது' (Commercial purpose) என்ற அடிப்படையில் வசூலிக்கப்படுகிறதா ?

(இ) ஆம் எனில், காரணம் என்ன?

(உ) இதை மாற்றுவதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) வியாபாரக் காரியங்களுக் என்ற (Commercial purpose) தனி மின் கட்டணம் இல்லை. வீட்டு உபயோகமில்லாமல், மின் விளக்குகள் அல்லது மின் விளக்குகள் மற்றும் மின்

விசிறிகள் அடங்கிய தொகுப்புக்களுக்கு வழங்கப்படும். மின் சப்ளைக்கு பொதுவான ஒரு மின் கட்டண விதம் (General Purpose Tariff) உள்ளது. பள்ளிகளுக்கான மின் சப்ளையும் இதில் அடங்கும்.

(இ) & (உ): இக்கேள்விகளுக்கிடமில்லை.

**திரு. செ. முத்துசாமி :** வீட்டில் உள்ள குழந்தைகள்தான் பள்ளிகளில் படிக்கிறார்கள். எனவே வீடுகளுக்குக் கொடுக்கப்படும் சலுகையை, கல்வி ஸ்தாபனங்களுக்கும் நியாய அடிப்படையில் தர வேண்டும். வீடுகளுக்குக் கொடுப்பதைவிட குறைந்த சலுகை பள்ளிக்கூடங்களுக்குக் கொடுக்காவிட்டாலும், வீடுகளுக்கு வசூலிக்கக்கூடிய மின் கட்டணத்தை, பள்ளிகளுக்கும் வசூலிக்குமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, பள்ளிக்கூடங்களுக்கும் 'பள்ளி' என்று பெயர் ; வீடுகளிலே இருக்கும் அறைகளுக்கும் 'பள்ளி' என்று பெயர். அதில் ஒற்றுமை இருக்கிறது என்று சொல்லலாம். வேறு ஒற்றுமை இருப்பதாகத் தெரியவில்லை. வீடுகள் போக மற்றவை அனைத்தும் ஒரு கட்டண விதத்தில் வருகிறது. கல்விக் கூடங்களுக்குத் தனிச் சலுகைகள் அளிக்க வேண்டுமென்றால், அதுபற்றி ஒட்டுமொத்தமாகப் பரிசீலித்து, அத்தகைய காரியங்களைச் செய்ய வேண்டியது கல்வித் துறை.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** துவக்கப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் ஆகியவற்றிலே இப்போது இலவசக் கல்வி முறை இருக்கிறது. மாணவர்களிடமிருந்து கட்டணம் வசூலிக்கப்படுவதில்லை. பள்ளிகளுக்கு எந்தவிதமான வருமானமும் கிடையாது. ஆகலால் வியாபார நோக்காக இவற்றைக் கருதாமல், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல, இவற்றுக்குச் சலுகை அளிக்க வேண்டும். பாதிக் கட்டணச் சலுகை வேண்டுமென்று முன்பே கோரியிருந்தோம். ஆனால் இப்போதைக்கு வீடுகளுக்கு என்ன வசூலிக்கப்படுகிறதோ அதே தொகையை, இலவசக் கல்வி முறையையும், பண வருமான இன்மையையும் கருத்தில் கொண்டு, பள்ளிகளிடமிருந்து வசூலிக்க பரிவுடன் அமைச்சரவர்கள் பரிசீலிப்பார்களா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** கட்டண விதங்களில் வீடுகளுக்கு என்று Domestic tariff இருக்கிறது. வீடுகள் அல்லாதவற்றுக்கு General Purpose Tariff என்ற வகையில் வருகிறது. பள்ளிக்கூடங்களுக்குச் சலுகைகள் என்று ஆரம்பித்தால், அப்புறம் மருத்துவ மனை வரும். அறநிலையங்கள் வரும். இப்படி போய்க்கொண்டே இருக்கும். இத்தகைய சமூக நலக் காரியங்களை ஏற்றுக்கொண்டு, கட்டண விகிதங்களை [illegible]ன்பது மின்வாரியத்தினுடைய வேலையல்ல.

(பிற்பகல் 4-30)

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** இதே கேள்வியை மாண்புமிகு கல்வியமைச்சருக்குப் போடலாம்.

(திரு. செ. முத்துசாமி இருக்கையை விட்டு எழுந்தார்.)

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மணி ஆகிறது. இரண்டு துணைக் கேள்விகள் கேட்டார்கள். திரும்பவும் திரும்பவும் அதையே கேட்டுக் கொண்டிருந்தால் எப்படி? கேட்கலாம்.

**திரு. செ. முத்துசாமி :** இங்கே ஒரு நல்ல திட்டத்தைக் கொண்டு வருவதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவித்தார்கள். நான் சொல்வது supervisory study கல்வி அறிவு இல்லாத மாணவர்களுக்காக இரவுப் பள்ளியை வைத்து மேற்பார்வைக் கல்வி என்ற முறையில் ஆசிரியர்கள் சொல்லிக் கொடுப்பதைப் பற்றி மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவார்கள். அவர்களுக்குச் சலுகை அளிக்கின்ற வகையில் இந்தத் திட்டத்தை அரசு செயல்படுத்துமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மின். வாரியத்தில் அத்தகைய திட்டம் எதுவும் இல்லை.

## *Amendment of Law.*

*193. *Q.*—Thiru E. S. VENKATESAN: Will the Hon. the Minister for Law be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government to scrap Section 109 of the Criminal Procedure Code and Section 64 of the Madras City Police Act, 1888 ; and

(*b*) if so, the stage at which the matters now stand ?

## சட்டத் திருத்தம்.

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :** மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 109 ஆவது பிரிவையும், 1888 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவலர் சட்டத்தின் 64-வது பிரிவையும் நீக்கிவிடும் செயற்குறிப்பு எதுவும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது தற்பொழுது எந்நிலையில் உள்ளது ?

THE HON. THIRU K. NARAYANASWAMY : (*a*) No, Sir.

(*b*) Does not arise.



**திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :** இந்தச் சட்டப் பிரிவுகளின் கீழ் பதிவு செய்யப்படுகின்ற வழக்குகள் கிட்டத்தட்ட அத்தனையும் ஒரே மாதிரியான வழக்குகள். அவற்றை சந்தேகக் கேஸ்கள், முக்காடு கேஸ்கள் என்று சொல்கிறார்கள். இந்தச் சட்டப் பிரிவுகளின் கீழ் குளிர்காலங்களில் இரவிலே இரண்டாவது ஆட்டம் சினிமா பார்த்துவிட்டு குளிருக்காக முக்காடு போட்டுக் கொண்டு வருகிறவர்களை சந்தேகத்தில் பிடித்துக்கொண்டு போய் வழக்கு போடுகிற நிலைமை இருக்கிறது என்பது அரசுக்குத் தெரியுமா ? இந்தச் சட்டப் பிரிவுகளை மறுபரிசீலனை செய்து அவற்றை நீக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

THE HON. THIRU K. NARAYANASWAMY : Sir, the Government have no information about that.

**திரு. ம. சங்கரலிங்கம் :** இந்த இரண்டு சட்டப் பிரிவுகளின் கீழ் இவ்வளவு கேஸ்கள் போடப்பட்டாக வேண்டுமென்கிற ஒரு quota வை காவல் துறையினருக்கு ஒதுக்குகிறார்கள். அந்த quota வை நிறைவேற்றத்தான் இந்த இரண்டு செக்ஷன்களும் பயன்படுத்தப்படுகின்றன. யார் மீதாவது சந்தேகத்தின் பேரில் கேஸ் போட வேண்டுமென்றால், இந்த இரண்டு பிரிவுகளும் பயன்படுகின்றன. இரண்டாவது காட்சி சினிமா பார்த்து விட்டு வருகிற ஒன்றுமறியாத அப்பாவி மக்கள் மீது இந்த இரண்டு செக்ஷன்கள்படியும் கேஸ் போடப்படுகிறது. இந்த செக்ஷன்களை அப்படியே மாற்றி, வேறு செக்ஷன்களின்படி கேஸ் போட அரசு ஏற்பாடு செய்யுமா ?

THE HON. THIRU K. NARAYANASWAMY : This section has been there even prior to 1898 and it has been used properly in the view of the Government.

**திரு. க. இராமமூர்த்தி :** இந்த இரண்டு சட்டப் பிரிவுகளும் சில நேரங்களில் தவறாகப் பயன்படுத்தப்பட்டாலும்கூட, பல நேரங்களில் கொலைகாரர்கள் போன்ற பெரிய குற்றவாளிகள் பிடிபடுவதற்கும் இந்தச் சட்டப் பிரிவுகள் துணை செய்கின்றன. பாமர மக்கள் மீது வேண்டுமென்றே தவறாக இந்தச் சட்டப் பிரிவுகளைப் பயன்படுத்தக்கூடாது என்ற வகையிலும், தீர விசாரிக்காமல் சந்தேகக் கேஸ் போடக்கூடாது என்ற வகையிலும் காவல் துறைக்கு அரசு ஒரு சுற்றறிக்கை அனுப்புமா ?

THE HON. THIRU K. NARAYANASWAMY : I would like to remind the hon. Member that his party Government, when it was in power at the Centre, has not chosen to make any amendment to this section. Therefore, I take it that this section has been properly used.

திரு. க. அறிவழகன்: வீட்டிலே இருக்கிற 'பள்ளி' தூங்குகிற இடம்; பள்ளிக்கூடம் விழித்துக்கொண்டிருக்கிற இடம். அங்கே மின்சாரக் கட்டணம் இருக்குமானால், மின்சார விசிறியைக் கூட சுற்றவிட மாட்டார்கள். எனவே வீட்டிலே உள்ள 'பள்ளி'யைப் போல் அந்தப் 'பள்ளி'யையும் அமைச்சரவர்கள் கருதுவார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: நான் தூங்குகிற பள்ளி என்றும் சொல்லவில்லை. விழித்துக்கொண்டிருக்கும் பள்ளி என்றும் சொல்லவில்லை. மாண்புமிகு உறுப்பினர் சொன்னது புரிகிறது. பள்ளிக்கூடத்தில் மின்சாரம் இருந்தால், பையன்கள் கூட அதில் மாட்டிக்கொள்வார்களோ என்னவோ.

திரு. செ. முத்துசாமி: பள்ளியிலே ஏழை மாணவர்கள், கிராமப் பகுதிகளிலே இருக்கிற மாணவர்கள் இரவு நேரங்களில் வீட்டில் வசதி இல்லாததால், பள்ளிக்கூடத்திலேயே படிக்கக்கூடிய முறை இருக்கிறது. அப்படி இருக்கும் போது, விடுதியில் இல்லாத வசதிகள் பள்ளிக்கூடத்தில் இருக்கும்போது, பள்ளி மாணவர்கள் படிக்கும் இரவுப் பள்ளிகளுக்கு இந்தச் சலுகையை அளிக்க மின்சாரத்துறை முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் காட்டுகிற கருத்தை இந்த அரசுக்கும் உண்டு. அவர்கள் ஏழை வீட்டுப் பிள்ளைகள் கஷ்டப்படுவதைக் குறிப்பிட்டார்கள். அவர்கள் படிக்க ஏதுவான வகையில் flat-Tariff என்று இந்த வரவு செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. எனவே அவர்களுக்கு விளக்கு போட்டுக் கொடுத்து, அதற்கென நிரந்தரக் கட்டணம் வசூலிக்கலாமென்ற திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: துவக்கப் பள்ளிகளிலும், நடுநிலைப் பள்ளிகளிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும் வானொலி மூலமாகக் கல்வியை ஒலி பரப்ப வேண்டுமென்று திட்டமிட்டு, இப்போது வானொலி வைக்கப்பட்டிருக்கிறது. அந்த வானொலிக்கான மின் கட்டணத்தை ஆசிரியர்கள் தங்கள் செலவிலேயே செலுத்த வேண்டியிருக்கிறது. உயர்நிலைப் பள்ளிகளிலே தலைமை ஆசிரியர்கள் Contingent Bill மூலமாக Claim பண்ணுகிறார்கள். அது டிரஷரிக்குப் போய் பணம் வருவதற்குள், மின் இணைப்பைத் துண்டித்து விடுகிறார்கள். காலதாமதம் ஆகிறது. எனவே இதிலே அரசு சற்று கவனம் செலுத்தி, வசூலித்துத்தான் ஆக வேண்டுமென்று சொன்னால், உயர்நிலைப் பள்ளியிலே இருக்கக்கூடிய Fund Amenity யிருந்து கட்ட, கல்வி அமைச்சரவர்களையும் கலந்து, தக்க ஏற்பாடு செய்வார்களா?

**திரு. கு. மா. பாலசுப்பிரமணியம் :** ஏழை எளிய மக்கள் மீது சந்தேகக் கேஸ் போடப்படுவது என்கிற தகவல் அரசுக்கு வரவில்லையென்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். தகவல் தெரிவிக்க வேண்டுமென்று கூடத் தெரியாத ஏழை அப்பாவி மக்கள்தான் பிடிபடுகிறார்கள். அப்படிப் பட்ட அப்பாவிகளைக் கைதிகளாகக் கண்ட அனுபவத்தால் இந்தக் கேள்வி கொடுத்திருப்பவர் ஒரு முன்னாள் நீதிபதி என்ற முறையில் இதையே தகவலாக ஏற்று உரிய நடவடிக்கை எடுக்க மாண்புமிகு சட்ட அமைச்சரவர்கள் முன் வருவாரா ?

THE HON. THIRU K. NARAYANASWAMY : This power is exercised only by Judicial Magistrates and this power will be used by them fairly and reasonably.

### *Officers of Judicial Department.*

* 194. *Q.*—Thiru V. THANGAPANDIAN: Will the Hon. the Minister for Law be pleased to state—

(*a*) whether the Government have received any complaints regarding cases of corruption against Officers of the Judicial Department in the year 1977-78 ;

(*b*) if so, the number of persons on whom complaints have been received ; and

(*c*) the action taken by the Government against them ?

### *நீதித்துறை அதிகாரிகள்.*

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1977-78-ம் ஆண்டில் நீதித்துறையைச் சேர்ந்த அதிகாரிகள் மீது ஊழல் புகார்கள் ஏதேனும் அரசுக்கு வந்துள்ளனவா ?

(இ) ஆம் எனில், எத்தனை பேர்மீது புகார்கள் வந்துள்ளன ?

(உ) அவர்கள் மீது அரசாங்கம் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் யாவை ?

THE HON. THIRU K. NARAYANASWAMY: (*a*), (*b*) and (*c*) A statement @ is placed on the table of the House.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். அதில் 1977-78 ஆம் ஆண்டில் நீதித் துறையைச் சேர்ந்த 342 அதிகாரிகள்மீது ஊழல் புகார் மனுக்கள் கொடுக்கப்

@ 399-400 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :** ஆங்கிலேயரின் அடக்குமுறை ஆட்சி நாட்டிலே நடைபெற்ற நேரத்திலே ஆட்சியாளர்களின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக, இந்த நாட்டிலே உள்ள மக்களை அடக்குவதற்காக இந்தச் சட்டப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டன. பல முறை இந்தச் சட்டப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டன. பல முறை இந்தச் சட்டப் பிரிவுகளை நீக்க வேண்டுமென்று கோரிக்கை வந்து, செயற் குறிப்பும் அரசின் பரிசீலனைக்கு வந்துள்ளது. மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் சொன்னதுபோல், ஒருசில சமயங்களில் குற்றவாளிகள் பிடிபடுவதற்குப் பயன்படலாம். ஆனால் பெரும்பான்மையான நேரங்களில் ஒன்றுமறியாத அப்பாவி மக்கள்மீது கேஸ் போடுவதற்குத்தான் இந்தச் சட்டப் பிரிவுகள் பயன்படுத்தப்படுகின்றன. மாண்புமிகு சட்ட அமைச்சரவர்களுடைய பதிலிலிருந்து உடனடியாக இந்தச் சட்டப் பிரிவுகளை நீக்குவதற்கான நோக்கம் எதுவும் இல்லை என்று தெரிகிறது. இருந்தபோதிலும் இந்தச் சட்டத்தை நல்ல முறையில் செயல்படுத்துவதற்காக பெரிய போலீஸ் அதிகாரிகளிடமிருந்து, குறிப்பாக எஸ்.பி., டி.எஸ்.பி. போன்றவர்களிடமிருந்து அட்மினிஸ்ட்ரேட்டிவ் பெர்மிஷன்' என்ற முறையில் பெர்மிஷன் வாங்கிய பிறகு தான் சந்தேகக் கேஸ் போடப்பட வேண்டுமென்ற முறையில் ஒரு ஏற்பாட்டினைச் செய்ய அரசு முன்வருமா?

THE HON. THIRU K. NARAYANASWAMY : Sir, for about 30 years or more the Congress Party had been in power. They had not chosen to amend this section. So also the party which is represented by the hon. Member Thiru Sankaralingam, who is the Leader of the Opposition here, had been in power for 9 years and it had not chosen to amend this section. This is a concurrent subject. Inasmuch as the past Governments have not chosen to see difficulty in the existence or the continuance of this section, I am disinclined to put any shackles on the provision by way of any further limitations.

**திரு. பி. ஆர். தாமஸ் :** காலத்தின் மாற்றத்திற்கேற்ப சற்றும் பொருந்தாத, சற்றேனும் ஒத்துக்கொள்ள முடியாத இத்தகைய சட்டங்களை மாற்ற வேண்டியது அரசாங்கத்தினுடைய கடமை. இது மாற்றப்பட வேண்டியது. அந்த அடிப்படையில் நம்முடைய மாநில அரசு மத்திய அரசுக்கு இந்தச் சட்டத்தை நீக்கி விடலாம் என்கின்ற முறையில் பரிந்துரை செய்யுமா?

THE HON. THIRU K. NARAYANASWAMY : In the interests of peace and security of the land, this section is a paramount necessity for any Government.

பட்டிருக்கின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். இதில் எந்தவித ஆதாரமும் இல்லாமல் பல மனுக்களைத் தள்ளுபடி செய்திருக்கிறார்கள். 36 மனுக்கள் நடவடிக்கை எடுப்பதற்காக அனுப்பப்பட்டிருக்கின்றன. 9 மனுக்கள் மீது தான் நடவடிக்கை pending ஆக இருக்கிறது. மற்ற மனுக்களில் ஆதாரம் இல்லையென்று கூறியிருக்கிறார்கள். நடவடிக்கை pending ஆக இருக்கிற எந்த நீதிபதி மீதாவது குற்றம் கண்டுபிடிக்கப்பட்டு தண்டனை வழங்கப்பட்டிருக்கிறதா? வழங்கப்பட்டிருக்கிறது என்றால், எத்தனை பேருக்கு அவ்வாறு வழங்கப்பட்டிருக்கிறது என்கிற விவரத்தை மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMY : Sir, a separate question may be put so that I might get the details for these.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** ஏற்கெனவே நீதிபதிகள் மீது புகார் மனுக்கள் வந்திருப்பதுபற்றித் தலைமை நீதிபதியும் மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களும் ஒரு கூட்டத்தில் பேசியிருப்பதாக, பத்திரிகையில் தகவல் வந்தது. 9 வழக்குகளில் மட்டும் ஆதாரமிருப்பதால், விசாரணை நடக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த 9 வழக்குகளில் ஒன்றிலாவது விசாரணை முடிந்து தண்டனை வழங்கப்பட்டிருக்கிறதா என்று மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMY : As submitted earlier to this House, I would still say that the matters are pending against 9 officers. Further details may be acquired by the Government, if a separate question is put.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** நீதித் துறையைச் சேர்ந்த 342 அதிகாரிகள் மீது பொதுவாக புகார் மனுக்கள் வந்ததாகவும் அதிலே குற்றச்சாட்டுகள் திட்டவட்டமாக அல்லது தெளிவாக இல்லாததாலும், மனுக்கள் அனாமதேயமாக அல்லது புனைப் பெயரில் இருந்ததாலும், ஆரம்ப நிலையிலேயே நடவடிக்கை எடுக்கப்படாமல் விடப்பட்ட அதிகாரிகளின் எண்ணிக்கை 245 என்றும் விளக்கம் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட உடனேயே, கீழ்பாக்கத்திலிருக்கிற மனநோய் ஆஸ்பத்திரியில் நடைபெற்ற ஒரு விழாவில் பேசும்போது, இந்த அரசாங்கம் லஞ்ச ஊழலை ஒழிக்க வேண்டுமென்கிற அக்கறையில் இருக்கிற காரணத்தால், கையெழுத்துப் போடாமல் புகார்களை அனுப்பினால் கூட, அவற்றைப் பரிசீலித்து நடவடிக்கை எடுப்போம் என்று



கூறியிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சரவர்களுடைய அறிக்கையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அறிவிப்புக்கு நேர் மாறாக விவரங்கள் இருக்கின்றன. இது முறைதானா?

THE HON. THIRU K. NARAYANASWAMY : I do not know why the hon. Member has chosen to pick out only one speech delivered in the Lunatic Asylum, Kilpauk. But the Government would make their stand very clear that the entire matter is being investigated only by the Vigilance Cell of the High Court and not by the Government.

THIRU A. R. DAMODARAN : Sir, it is not called "Lunatic Asylum". It is now known as "Institute of Mental Health".

THE HON. THIRU K. NARAYANASWAMY : Sir, I stand corrected.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** நீதித் துறையிலிருக்கிற அதிகாரிகள் மீது லஞ்ச ஊழல் புகார் அல்லது லஞ்ச ஊழல் அல்லாத புகார் இதில் எது வந்தாலும், விசாரிக்கிற பொறுப்பு காவல் துறையிடம்தான் ஒப்படைக்கப்படுகிறது. நீதித் துறை, காவல் துறை ஆகிய இரண்டு துறைக்கும் ஏகப்பட்ட சம்பந்தம் இருக்கிறது. இப்படிப்பட்ட நீதித் துறை அதிகாரிகள் சம்பந்தப்பட்ட வழக்குகளை காவல் துறையிடம் ஒப்படைத்தால், உண்மை நிலை தெரிய வராது என்ற காரணத்தால், காவல் துறை அல்லாத வேறு தனிப்பட்ட அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படுமா?

THE HON. THIRU K. NARAYANASWAMY : Sir, this method is solely adopted for the purpose of ensuring the independence of the judiciary. Therefore, a separate Vigilance Cell was set up in the High Court in 1965. There is a Special Officer in the grade of District and Sessions Judge in charge of Vigilance Cell and he is assisted in the investigation of complaints by the specially selected police personnel.

THIRU G. VASANTHA PAI : Sir, is this Vigilance Officer appointed by the Government or by the High Court?

THE HON. THIRU K. NARAYANASWAMY: I have no material to say either way. But, it must be, I suppose, on a requisition by the High Court, that these officers are sent by the Government.

## Diploma Examination for Teacher Education.

* 195. *Q.*—Thiru P. R. THOMAS: and Thiru S. MUTHUSWAMY: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that representations have been made by the Teacher Trainees undergoing Diploma in Teacher Education, to change the present pattern of writing two examinations in a day; and

(*b*) if so, the action proposed to be taken by the Government thereon ?

## ஆசிரியர் கல்வியில் பட்டயப்படிப்பு தேர்வு.

திரு. பி. ஆர். தாமஸ் & திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) ஒரே நாளில் இரண்டு தேர்வுகளை எழுதும் தற்போதுள்ள முறையை மாற்றுமாறு, ஆசிரியர் கல்வியில் பட்டயப்படிப்புப் பயிற்சிபெறும் ஆசிரியர்கள் முறையீடுகள் செய்துள்ளனர் என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அவைகளின்மீது அரசு எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(இ) ஏப்ரல் 1979 தேர்வு முதல் ஒரு நாளுக்கு ஒரு தேர்வு விதம் ஆசிரியர் கல்விக்கான டிப்ளமோ தேர்வை நடத்துமாறு ஆணைகள் பிறப்பிக்கப் பட்டுள்ளன.

## Non-teaching Staff.

* 196. *Q.*—Thiru M. SANKARALINGAM: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether the Government have received any representation from the Tamil Nadu Private Colleges Non-teaching Staff Association, regarding relaxation of retirement age and other demands ; and

(*b*) if so, the action taken thereon ?



## ஆசிரியர் அல்லாத அலுவலர்கள்.

திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) தமிழ்நாடு தனியார் கல்லூரி ஆசிரியர் அல்லாத அலுவலர் சங்கத்திடமிருந்து, ஓய்வு பெறும் வயதை தளர்த்துதல் சம்பந்தமாகவும், இதர கோரிக்கைகள் சம்பந்தமாகவும் வேண்டுகோள் ஏதும் அரசுக்கு வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(இ) கோரிக்கைகள் அரசின் பரிசீலனையிலுள்ளன.

(பிற்பகல் 4-40)

திரு. ம. சங்கரலிங்கம்: கல்லூரி ஆசிரியர்கள் 58 வயதை அடையும் வரை தங்களின் பணியில் இருக்கலாமென்றும், நிருவாகம் விரும்பினால் அவர்கள் 60 வயதை அடையும் வரை பணியிலிருக்கலாம் என்றுமிருக்கிறது. ஆனால் அலுவலகங்களில் பணியாற்றுகிறவர்கள் 55 வயதை அடையும்போது பணியிலிருந்து ஓய்வு பெற வேண்டுமென்று இருக்கிறது. ஆசிரியர்களைவிட அலுவலகங்களில் பணியாற்றுகிற அலுவலாளர்கள் உடல் வலிவு குறைந்தவர்களாக இருக்கமாட்டார்கள். எனவே அவர்கள் ஓய்வு பெறும் வயதையும் உயர்த்த வேண்டுமென்று நீண்ட காலமாகவே கோரி வருகிறார்கள். அரசும் பரிசீலனை செய்வதாகச் சொல்லிக்கொண்டு வருவதால், அந்தக் கோரிக்கை மறுக்கப்படவில்லை என்று நான் மகிழ்ச்சியடைகிறேன். எனவே இந்தப் பிரச்சினையில் அரசு விரைவில் முடிவெடுக்க முன்வருமா? காலம் கடந்து இப்படிப்பட்ட பிரச்சினைகளில் முடிவெடுக்கும்போது, இடைக்காலத்தில் ஓய்வு பெறுகிறவர்கள் தாங்கள் பாதிக்கப்பட்டதாக நினைக்கிறார்கள். அவர்களுக்கு இந்தப் பயன் கிட்டாமல் போய்விடுகிறது என்ற காரணத்தால், அரசு இதை விரைவிலேயே பரிசீலனை செய்து வரும் கல்வியாண்டிலேயே முடிவைச் சொல்ல முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அரசுக் கல்லூரி ஆசிரியர் அல்லாத ஊழியர் (கடைநிலை ஊழியரைத் தவிர) பணியிலிருந்து பதவி விலகும் வயது வரம்பு 55 ஆக உள்ளது. கடைநிலை ஊழியர்களுக்கு வயது வரம்பு 60 ஆக உள்ளது. தனியார் கல்லூரியில் பணி புரியும் ஆசிரியர் அல்லாத

வர்களுக்கும் இதே விதிமுறைகள் பின்பற்றப்படுகின்றன. ஆகையால் இவர்களுக்கு மட்டும் வயது வரம்பை 60 வயதாக ஆக்கும் கோரிக்கையை ஏற்க இயலவில்லை. மேலும் அரசு ஊழியர் பெறும் பணிக் கொடைக்குப் பதில் தனியார் கல்லூரி ஊழியர்கள் க்ஷேமநல நிதியிலிருந்து சம பங்கு அரசு மற்றும் நிர்வாகத்திடமிருந்து பெறுகின்றனர்.

**திரு. க. அறிவழகன் :** கடைநிலை ஊழியர்கள் ஓய்வு பெறும் வயது 60 ஆக இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். கடைநிலை ஊழியர்களிலும் கடைநிலையில் இருக்கிற துப்புரவுப் பணியாளர்கள் இன்னும் மாதம் 18 ரூபாய் ஊதியத்தில்தான் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களெல்லாம் பகுதி நேர ஊழியர்கள் என்றழைக்கப்பட்டாலும்கூட, முழு நேரத்திற்கும் இன்றைக்குப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய ஊதியத்தை உயர்த்தித் தர வேண்டுமென்று ஏற்கெனவே அமைச்சர் அவர்களிடம் கோரிக்கைவிட்டிருக்கிறார்கள். அதைப்பற்றி அரசு பரிசீலிக்குமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** காவலர், துப்புரவாளர்கள், தோட்ட வேலைக்காரர்கள் போன்ற கடை நிலை ஊழியர்களுக்கும் ஊதிய விகிதங்கள் வழங்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையைப் பொறுத்தவரை, தற்போது மேலே சொன்ன சில பதவிகளுக்கு அந்தந்த மாவட்ட ஆட்சியர் நிர்ணயித்துள்ள விகிதத்தில் ஊதியம் வழங்கப்படுகிறது. இதை மாற்றி 5 ஆண்டுக்கு மேல் பணியிலுள்ள அனைவருக்கும் ஊதிய விகிதங்கள் வழங்கப்பட வேண்டுமென்பது அவர்கள் கோரிக்கை. இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. பி. ஆர். தாமஸ் :** தனியார் கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்களல்லாத ஊழியர்களுக்கு தற்போது குடும்ப நலத்திட்டச் சலுகை வழங்கப்படுவதில்லை. ஆசிரியர்களுக்குத்தான் இந்தச் சலுகை இருக்கிறது. எனவே ஆசிரியரல்லாத ஊழியர்களுக்கும் இந்தச் சலுகை வழங்கும் வகையில், இந்தத் திட்டத்தை அவர்களுக்கும் விரிவாக்கும் திட்டத்தை அரசு பரிசீலனை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தற்போது அரசு ஊழியர்கள் பணியிலிருக்கும்போது இறந்தால், அவர்களுடைய குடும்பத்திற்கு ரூ. 10,000 வழங்கப்படுகிறது. இந்தத் திட்டத்தைத் தனியார் கல்லூரி ஊழியர்களுக்கும் விரிவுபடுத்த, கொள்கை அளவிலே அரசு ஒப்புக்கொண்டுள்ளது என்று [illegible] அந்த சட்டமன்றத்திலே உறுதிமொழி அளிக்கப்பட்டது.



இதைத் தொடர்ந்து தனியார் பள்ளி ஊழியர்களுக்கு உள்ளதைப்போல் கூட்டு வாழ்வுறுதித் திட்டம் கல்லூரி ஆசிரியரல்லாத ஊழியர்களுக்கும் விரிவுபடுத்த கல்லூரிக் கல்வி இயக்குநர் அரசுக்குப் பரிந்துரை செய்தார். இது தற்போது பரிசிலனையில் உள்ளது.

**திரு. செ. முத்துசாமி :** பணியிலிருக்கும் ஊழியர்கள் தங்களின் பணிக் காலத்தில் உயிரிழந்தால் ரூ. 10,000 உதவித் தொகை பெறுவதென்பது, எல்.ஐ.சி. நிறுவனத்தோடு தொடர்பு கொண்டு மாதம் ஒரு ரூபாய் செலுத்துகிற அத்தலை பெருக்கும் வழங்கும் வகையில் உருவாக்கப்பட்ட பாதுகாப்புத் திட்டம். அதனால் எந்த ஊழியரானாலும், அவர்கள் கல்லூரி ஆசிரியர்களானாலும் சரி, ஆசிரியர்கள் அல்லாத ஊழியர்களானாலும் சரி, அவர்கள் அனைவருக்கும் இந்தத் திட்டத்தை விரிவுபடுத்துவதில் அரசுக்கு என்ன சிக்கல் இருக்கிறது ? எந்தக் காரணத்தால் இதுவரையிலும் எல்லா ஊழியர்களுக்கும் இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்படாமல் இருக்கிறது ? சிக்கல் எதுமில்லாமல் இருக்கிற காரணத்தால், எல்லா ஊழியர்களுக்கும் இந்தத் திட்டத்தை விரிவுபடுத்த அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இந்தத் திட்டத்தை விரிவாக்க கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டு அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. பரிசீலனை முடிந்தவுடன் திட்டம் அமுலுக்கு வரும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தனியார் துறையில் கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் பணியாற்றும் ஆசிரியரல்லாத ஊழியர்களுக்கு, ஆசிரியர்களுக்கு அளிக்கப்படும் எல்லாச் சலுகைகளும் அளிக்கப்படுவதில்லை. ஏறத்தாழ பெரும்பாலான சலுகைகள், விடுப்பு, ஓய்வூதியம், குடும்பநலத் திட்டம் போன்ற சலுகைகள், ஆசிரியர்களுக்கு வழங்கப்படுகிற அத்தனைச் சலுகைகளையும் அங்கே பணியாற்றுகிற ஆசிரியரல்லாத ஊழியர்களுக்கும் விரிவுபடுத்த அரசு ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இந்த அரசு வந்த பிறகு, இப்படிப்பட்ட குறைபாடுகளைத் தீர்க்க வேண்டுமென்ற எண்ணத்தோடுதான் செயல்பட்டுக்கொண்டு வருகிறது. அந்த அடிப்படையில்தான் பரிசீலனை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

## *Polytechnic Teachers.*

* 197. *Q*.—Thiru K. ARIVAZHAGAN: Will the Hon. the Minister for Education be pleased to state whether there is any proposal to raise retirement age for teachers in Polytechnics ?

துறைகளுக்கு, 7—11—1978 தேதியிட்ட, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை, அரசு (நிலை) ஆணை எண் 1352-ல் உத்திரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது.

**திரு. கு. மா. பாலசுப்பிரமணியம் :** 7—11—1978 அன்று பிறப்பிக்கப் பட்ட அரசாணை எண் 1352படி, நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில் அங்கீகரிக்கப்பட்ட 5 ஆண்டுக்காலம் பணி நிரப்பப் பெற்றவர்கள் 49 பேரில் 13 பேர் மட்டுமே நிரந்தரப்படுத்தப்பட்டனர். மற்ற 36 பேர்களும் நிரந்தரப் படுத்தப்படவில்லை. அதற்கு அரசிடமிருந்து 'ரெட்டிபிகேஷன்' வர வேண்டும் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். எனவே அங்கே அரசாணையை மீறி பணியாளர்கள் நிரந்தரமாக்கப்படாமல் இருப்பதை அரசு அறியுமா ? அவர்களையும் கட்டாயமாக நிரந்தரப்படுத்த அரசு உத்தரவிடுமா ?

(பிற்பகல் 4.50)

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இது அந்தத் துறை அமைச்சரிடம் கேட்க வேண்டிய கேள்வி.

**திரு சி. ரா. லெட்சுமிகாந்தன் :** வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்து ஒரு பட்டியலை வரவழைத்து, அதிலே இருந்து ஆட்களைத் தேர்ந்தெடுத்து அந்தக் காலியிடங்களை நிரப்பும் முறையினால் தற்போது அதிகமான கால தாமதம் ஏற்படுகிறது. ஆகவே, நிரந்தரமான முறையில், மூன்று மாதங் களுக்கு ஒரு முறை, அல்லது ஆறு மாதங்களுக்கு ஒருமுறை, சீனியாரிட்டி அடிப்படையிலே, தகுதி பெற்ற வேட்பாளர்களுடைய பட்டியலை ஒரு நிறுவனத்திற்கு முன்கூட்டியே அனுப்பி வைத்து, அந்தப் பட்டியலிலிருந்து சீனியாரிட்டி அடிப்படையிலே காலியிடங்கள் ஏற்படும்போது, ஆட்களை நியமிக்க வேண்டும் என்று ஒரு விதி முறையை அரசு வகுக்குமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அந்தத் திட்டம் சரியாக வேலை செய்யாது என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

## *Industrial Centres*

* 199. *Q.*—Thiru V. THANGAPANDIAN: Will the Hon. the Minister for Rural Industries be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government to start Industrial Complex Centres in all the Districts of Tamil Nadu, with the assistance of the Central Government ; and

(*b*) if so, the number of Industrial Centres that would be started during 1978-79, along with the names of the Districts ?



## தொழில் மையங்கள்.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) மத்திய அரசின் உதவியோடு, தமிழ்நாட்டில் உள்ள எல்லா மாவட்டங்களிலும், பல தொழில்கள் அடங்கிய தொழில் மையங்கள் (Industrial Complex Centres) ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், 1978-79 ஆம் ஆண்டில் எத்தனை தொழில் மையங்கள், எந்தெந்த மாவட்டங்களில் ஏற்படுத்தப்படும் ?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** (அ) & (இ) தமிழ்நாட்டில் செங்கல்பட்டு, சேலம், தருமபுரி, இராமநாதபுரம், திருநெல்வேலி, தென்னாற் காடு, புதுக்கோட்டை, கன்னியாகுமரி ஆகிய எட்டு மாவட்டங்களில் மாவட்டத் தொழில் மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மற்ற மாவட்டங்களில் இவ் வாண்டு இறுதிக்குள் தொழில் மையங்கள் அமைக்கப்படும்.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** இந்த ஆண்டு இந்தத் தொழில் மையங் களுக்கு அரசு எவ்வளவு ஒதுக்கியிருக்கிறது? மத்திய அரசின் உதவி எவ்வளவு இருக்கும் என்று அரசு எதிர்பார்க்கிறது?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** இந்தத் தொழில் மையங்களில் பணியாற்றுகின்ற உதவி மேலாளர், மேலாளர் மற்றும் ஊழியர்களுக்கு ஆகக் கூடிய தொடரினச் செலவில் 75 சத விதம் மத்திய அரசு ஏற்கிறது. அந்தத் தொகை கிட்டத்தட்ட 3.75 லட்சம் ரூபாய் என்று உச்சவரம்பு வைத்திருக் கிறார்கள். மீதம் செலவாகின்ற தொகையை மாநில அரசு ஏற்கிறது. தொடரா இனச் செலவில் அந்தந்த மாவட்ட மையங்களுக்கு உரிய அலுவலகக் கட்டிடங்கள், அவற்றுக்கு வேண்டிய சாதனங்கள் furniture போன்ற வைகளுக்காக மொத்தமாக 5 லட்சம் ரூபாய் ஒவ்வொரு தொழில் மையத் திற்கும் மத்திய அரசு வழங்குகிறது.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** அந்தத் தொழில் ஆரம்பிப்பதற்கு முதலீட்டிற்கு மத்திய அரசு ஆண்டுதோறும் எவ்வளவு கொடுக்கிறது ?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** இந்த மாவட்ட தொழில் மையங் களுடைய நோக்கம் அதிகாரங்களைப் பரவலாக்குவது. அந்தந்த மாவட்டத் திற்கும் தேவையான தொழில்களை அந்தந்த மாவட்டத் தொழில் மையங்

[1979 மார்ச் 15

**திரு. ம. சங்கரலிங்கம் :** தமிழகத்திலே சில பள்ளிகள், கல்லூரிகளுக்கு எல்லாம் அங்கிருக்கின்ற விஞ்ஞானக்கூடங்களுக்கு நிறைய கண்ணாடிச் சாதனங்கள் தேவைப்படுகின்றன. இதுபோல மருத்துவ மனைகளிலே கண்ணாடிச் சாதனங்கள் தேவைப்படுகின்றன. ஆகவே, இப்படிப்பட்ட பொருள்கள்கூட செய்யலாம். தனியார் நிறுவனங்களுக்குக் கொடுத்தால் எந்தப் பொருள்களுக்கு 'டிமான்ட்' இருக்கிறது என்று பார்த்து, அவர்கள் அதை உற்பத்தி செய்வார்கள். அரசுத் துறை என்று வருகிறபோது, அவர்களுக்கு எப்படியும் சம்பளம் வந்துவிடுவதால், இருக்கிற pattern -ஐயே வைத்து செய்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே, ஒரு பரிசீலனை செய்து, ஒரு கண்டிஷன் விதித்து விளம்பரம் செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** அப்படி ஒரு விளம்பரம் செய்வதிலே ஆட்சேபணையில்லை. அரசு பரிசீலிக்கும்.

**திரு. சி. இராமலிங்கம் :** எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்ட கேள்வியைத்தான் நானும் கேட்கிறேன். கல்லூரிகளுக்கு, மருத்துவ மனைகளுக்கு கண்ணாடிப் பொருட்கள் செய்வதைவிட—தெரு விளக்குகள் போடுவதற்குத் தேவைப்படும் பல்புகள் இன்றைக்கு நாம் விலை கொடுத்து வாங்குகிறோம்—அந்தக் கண்ணாடித் தொழிற்சாலை மூலமாக தெரு விளக்குகளுக்கு உபயோகப்படுத்தும் பல்புகள் செய்வதற்கு அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** பல்புகள் செய்வது என்பது சிறு தொழிலிலே சாத்தியமா என்பது எனக்குத் தெரியவில்லை. சிறு தொழிலிலே செய்வது சிரமம். அதற்கு பெரிய முதலீடு போட்டுத்தான் செய்ய வேண்டும். இரண்டாவது அவ்வளவு பெரிய விலையுயர்ந்த sophisticated Machines எல்லாம் போட்டு செய்யும் விளக்குகளே சில நேரங்களிலே எரிவதில்லை. ஆகவே இது சாத்தியமாகும் என்று நான் கருதவில்லை. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்டதுபோல, ரசாயனக் கூடங்களுக்கு, விஞ்ஞானக் கூடங்களுக்கு Glassware factory போல வேண்டிய சாதனங்கள் செய்யலாம். இப்போது அங்கு 200-க்கு மேற்பட்ட பணியாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குச் சம்பளம் அளிக்க வேண்டும். மேலும் அதில் உள்ள தேய்மானம் இவைகளைப் பார்க்கும்போது மூன்று கோடி ரூபாய் பெறுமான உற்பத்தி செய்தால்தான், நஷ்டம் இல்லாமல் செயல்படுத்த முடியும். இவைகள்தான் சிரமங்கள். நிச்சயமான ஒரு நல்ல மாற்று ஏற்பாட்டை அரசு விரைவில் எடுக்கும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வினா முடியும் வரை வினாக்கள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.



1979 மார்ச் 15]

**திரு. ஆ. பாலசுப்ரமணியம் :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட பல இடங்களிலே இதுபோன்ற தொழில் மையங்கள் ஏற்படுத்தியிருப்பதாகக் கூறினார்கள். ஆனால் அந்தந்த இடங்களிலே தொழில் துவங்குவதற்கு முன்னதாக அங்கு பல நடைமுறைச் சிக்கல்கள் இருக்கின்றன. அவைகளை எளிமைப்படுத்தும் வகையிலே அரசு உத்தரவு பிறப்பிக்குமா?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** கொள்கை விளக்கக் குறிப்பிலே தெளிவாகச் சில விஷயங்களைக் குறிப்பிட்டிருக்கிறோம். அந்தக் கொள்கை விளக்கக் குறிப்பின் மேல் பதில் சொல்லும் வாய்ப்பு ஏற்படும்போது, தெளிவாக பதில் சொல்கிறேன்.

## *Export of Handloom Cloth.*

*** 200. *Q.*—Thiru K. RAMAMOORTHY and Thiru C. R. LAKSHMIKANDHAN: Will the Hon. the Minister for Handlooms be pleased to state the value of Handloom cloth exported to foreign countries through the Government Handloom Department during 1978 ?**

## கைத்தறித் துணி ஏற்றுமதி.

**திரு. க. இராமமூர்த்தி & திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு கைத்தறி நெசவுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

1978 ஆம் ஆண்டில் அரசு கைத்தறித் துறை மூலமாக அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ள கைத்தறித் துணியின் மதிப்பு எவ்வளவு?

**மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் :** 1978ஆம் ஆண்டில் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் மூலம் ரூபாய் 76.15 லட்சம் அளவிற்கும், கைத்தறி நிதி மற்றும் வர்த்தகக் கழகம் மூலம் ரூபாய் 4.58 இலட்சம் அளவிற்கும் கைத்தறி துணிகள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

(பிற்பகல் 5-00)

**திரு. க. இராமமூர்த்தி :** 1978ஆம் ஆண்டு தமிழகம் முழுவதுமாக எவ்வளவு கைத்தறித் துணி ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது? அதில் அரசுத் துறை "கோ-ஆப்டெக்ஸ்" மூலமாக ஏற்றுமதி செய்தது எத்தனை சதவிதம்?

களே சிபார்சு செய்து அரசின் சார்பிலே உள்ள 'டிட்' நிறுவனம் மூலமாகவோ வங்கிகள் மூலமாகவோ நிதியை காலதாமதம் இல்லாமல் கொடுக்க வேண்டும் என்பதற்காக அந்தந்த மாவட்டத்திலே இருக்கக்கூடிய முதன்மை வங்கிகளுடைய பொறுப்பாளர் இந்த மாவட்ட தொழில் மையங்களிலே மேலாளராக பணியாற்றுவதன் மூலம் பணம் கிடைப்பதில் ஏற்படும் கால தாமதத்தைத தவிர்த்து தொழிலை ஊக்குவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

**திரு. சி. இ. ராமலிங்கம் :** நாம் இப்படி தொழிற்சாலைகளை அமைத்துக் கொண்டு வருகின்ற நேரத்திலே, இண்டியிலே இருக்கக்கூடிய கண்ணாடித் தொழிற்சாலை—தமிழ் நாட்டிலேயே ஒன்றுதான் இருக்கின்றது—கடந்த சில காலமாக வேலையின்றி மூடப்பட்டிருக்கிறது. அது மீண்டும் திறக்கப்படுமா? அப்படித் திறந்தால், கூட்டுறவுத் துறையில் அதை அமைக்கும் வாய்ப்பு இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பில்லை என்றாலும்கூட, ஒரு விளக்கத்திற்காக சுருக்கமாகச் சொல்கிறேன். இங்கே சென்னையில் இண்டியிலே இயங்கிக்கொண்டிருக்கின்ற கண்ணாடித் தொழிசாலை தமிழகத்தினுடைய 'டான்சி'க்குச் சொந்தமானது. அந்தத் தொழிற்சாலையில் உள்ள ஒரு பெரிய சிறப்பு அம்சம் என்று கூற மாட்டேன், வருந்தத்தக்க நிலை என்னவென்றால், அந்தத் தொழிற்சாலையில் தொழில் நடத்துவதானால், 20 லட்சம் ரூபாய் நஷ்டம் வருகிறது. மூடினால் 8 லட்சம் ரூபாய் நஷ்டம் வருகிறது. இந்த நிலையிலே அந்தத் தொழிற்சாலையை என்ன செய்வது என்று அரசு ஆய்ந்து கொண்டிருக்கிறது. காரணம் அரசு நிறுவனம் என்று சொல்லும்போது, அதுவும் பொதுமக்களுடைய பணத்தை அதற்கு வழங்குகின்றபோது, அது சிறப்பாகச் செயல்படவில்லை என்பதால்தான் யோசிக்க வேண்டியிருக்கிறது. மேலும், வேறு ஏதாவது உற்பத்தி செய்வதற்கு இதைப் பயன்படுத்தலாமா என்றும் அரசு ஆய்ந்து வருகிறது.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** தலைவர் அவர்களே, மாவட்டங்கள் தோறும் தொழில் மையங்களை உருவாக்குகின்றபோதும் அதில் பணியாற்றுவதற்கு ஊழியர்கள் நியமிக்கப்படும்போதும் குறிப்பாக பட்டம் பெற்று வேலையில்லாது இருக்கும் பெண்களை நியமித்தால், அவர்கள் பிரச்சினைகளுக்கும் கனிவான முறையில் பதில் தருவதன் மூலம் தொழில் துவங்க வருபவர்களுக்கு உற்சாகம் ஏற்படுகிறது. ஆகவே, இதுபோன்ற இடங்களில் பெண்களை வேலைக்கு அமர்த்த அரசு முன்வருமா?



**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** இப்போது இந்தத் தொழில் மையங்களில் அலுவலர்களையும் மற்ற பணியாளர்களையும் நியமிக்கும்போது, ஏற்கெனவே தொழில் துறையிலே பணியாற்றுபவர்களைத்தான் நியமிக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, தனியாகப் பேச வேண்டும் என்ற ஒரு சூழ்நிலை உருவாகும்போது, அதைப்பற்றி அரசு யோசிக்கும்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** இண்டியில் உள்ள கண்ணாடித் தொழிற்சாலை நடத்தினால், 20 லட்சம் ரூபாய் நஷ்டம் என்றும், அடைத்தால் 8 லட்சம் ரூபாய் நஷ்டம் என்றும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதைத் தனியார் யாராவது ஏற்று நடத்த முன்வருவார்களா என்றும், அவர்கள் இப்போது இருக்கும் இந்தத் தேய்மானத்தை மட்டும் சரிக்கட்டினால் போதும் என்றும் விளம்பரம் செய்தால், திறமையான தனிப்பட்டவர்கள் இதை ஏற்று நடத்த முன்வருவார்கள். அப்படிச் செய்தால், அரசுக்கும் நஷ்டம் இல்லாமல், தொழிலாளர்களுக்கும் வேலை வாய்ப்பு கிடைக்கும். ஆகவே, அரசு இதைப் பரிசீலிக்குமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** இந்தக் கண்ணாடித் தொழிற்சாலையை நாம் தொடர்ந்து நடத்துவதிலே நமக்கு இருக்கும் ஒரு பெரிய சிரமம் என்னவென்றால், technical knowhow நம்மிடம் போதுமான அளவில் இல்லை. இந்தத் தொழிற்சாலையை முதலிலே நாம் நடத்துகின்றபோது, Eagle Flasks நிறுவனத்திற்கு ஒரு ஒப்பந்தத்தின் அடிப்படையிலே குடுவைகளைத் தயாரித்துக் கொடுத்துக்கொண்டிருந்தோம். நாம் தயாரிக்கும் குடுவைகளின் தரத்தைப் பற்றியும், உற்பத்தித் திறன் பற்றியும் பல பிரச்சினைகள் ஏற்பட்டு, அதன் காரணமாகத்தான் இந்தத் தொழிற்சாலை லாபகரமாக நடைபெறவில்லை. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதைப் போல தனியார் இதை நடத்த முன்வருவார்களா என்பதைப் பற்றி அரசு பல்வேறு நிறுவனங்களோடு தொடர்புகொண்டு பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருக்கிறது. 'டான்சி'யின் நிர்வாகக் குழுக் கூட்டத்திலே ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி அந்த 'ஈகிள் குடுவை நிறுவனத்தார்' கூட இதை ஏற்று உற்பத்தி செய்ய முன்வருவார்கள் என்றால், அவர்களுக்கு எடுத்துக் கொள்ள விருப்பம் என்றால், அதைப் பரிசிலனை செய்து, அங்கே பணியாற்றிக்கொண்டிருக்கக்கூடிய ஊழியர்கள் அனைவரையும் அப்படியே எடுத்துக் கொண்டால் கொடுப்பது என்ற அடிப்படையிலே, அரசின் கொள்கைகளைத் தெரிவித்துப் பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருக்கிறோம். விரைவில் இதிலே ஒரு முடிவெடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1979 மார்ச் 15

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : கூட்டுறவு பிரதம நெசவாளர்கள் சங்கத்தின் மூலமாக, அதாவது கோவாப்டெக்ஸ் இன்டர் நேஷனல் நிறுவனத்தின் மூலமாக, 76 இலட்சம் ரூபாய் அளவுக்கு கைத்தறித் துணி ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது. இது தவிர தனியார் துறையிலும் ஏற்றுமதி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

திரு. க. இராமமூர்த்தி : கைத்தறித் துணியை ஏற்றுமதி செய்வதில் பெரும்பாலும் தனியார் துறையைச் சேர்ந்தவர்கள் ஆக்கிரமித்துக்கொண்டிருக் கிறார்கள். இதனால் கைத்தறித் துணியை நெய்யும் நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. இதைத் தவிர்க்க, ஏற்றுமதியைப் பொறுத்தவரையில், அரசினுடைய கூட்டுறவுக் கைத்தறி நிறுவனம்தான ஏற்றுமதி செய்ய வேண்டும் என்ற கட்டுப்பாட்டை ஏற்படுத்தி, அந்தப் பொறுப்பை அரசு ஏற்குமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : கைத்தறித் துணியை அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு அனுமதியை மத்திய அரசுதான் வழங்கு கிறது. தமிழக அரசே ஏற்றுமதியைச் செய்ய வேண்டும் என்ற திட்டத்தின் அடிப்படையில்தான், கோவாப்டெக்ஸ் இன்டர்நேஷனல் என்ற நிறுவனத்தை உருவாக்கி, அதன் மூலம் செக்கோஸ்லோவாகியா, ஜெர்மனி, ருமேனியா, அமெரிக்கா, பிரான்ஸ், பிரிட்டன் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகிறோம். வருகிற ஆண்டில் சுமார் ஒரு கோடி ரூபாய் அளவிற்கு ஏற்றுமதி செய்யும் திட்டமும், ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 10 கோடி ரூபாய் அளவிற்கு ஏற்றுமதியை அதிகரிக்கும் திட்டமும் அரசின் பரிசீலனையில் இருக்கின்றன.

திரு. சி.ரா. லெட்சுமிகாந்தன் : இப்படி ஏற்றுமதி செய்யப்படுகிறபோது, எந்த வெளிநாடுகளில் அதிகமான கைத்தறித் துணிகளை வாங்குகிறார்கள்? கைத்தறித் துணிகளை விற்க ஏதாவது கைத்தறி ஷோ ரூம் போன்றவைகள் அமைக்கப்பட்டிருக்கின்றனவா? அப்படியானால் அதனுடைய விவரங்கள் என்ன?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : ஆஸ்திரேலியா, அமெரிக்கா போன்ற நாடுகளில் நம் நாட்டினுடைய கைத்தறித் துணிகளுக்கு நல்ல வர வேற்பு இருக்கிறது. வெளிநாடுகளில், கோவாப்டெக்ஸ் நிறுவனத்தின் எந்த விதமான விற்பனை நிலையமும் இல்லை. சிங்கப்பூரில் ஒரு கோவாப்டெக்ஸ் விற்பனை நிலையத்தைத் துவக்குவதற்கான வாய்ப்பைப் பற்றி அறியவும்,



1979 மார்ச் 15]

இதற்கு வேண்டிய இடத்தைத் தேர்ந்தெடுக்கவும் கைத்தறித் துறை இயக்குநர் அவர்களும், கோவாப்டெக்ஸ் தனி அதிகாரி அவர்களும் சிங்கப்பூருக்குச் சென்றிருக்கிறார்கள்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தமிழர்கள் பல அயல் நாடுகளில் பரவி யிருக்கிறார்கள். தமிழர்கள் பரவியிருக்கக் கூடிய இடங்களில் எல்லாம் கைத் தறித் துணியை விற்பனை செய்ய ஏற்பாடு செய்தால், நம்முடைய நாட்டு உயர்ச்சியின் அடிப்படையிலே அதிகமான ஆதரவு கிடைக்கலாம். ஆகவே, மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள், தமிழர்கள் மிக அதிகமாக வாழ்கிற பகுதிகளில் கைத்தறித் துணியை விற்பனை செய்வதற்கு ஊக்கம் அளிக்க ஏற்பாடுகளைச் செய்வார்களா?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : இப்போது பரிட்சார்த்தமாக சிங்கப்பூரில் ஒரு கூட்டுறவு விற்பனை நிலையத்தை உருவாக்க அரசு முயற்சி செய்து வருகிறது. இந்த விற்பனை நிலையம் நல்ல முறையிலே செயல்படு மானால், மற்றும் பல நாடுகளில் அதைப் போன்ற விற்பனை நிலையங்களை உருவாக்க அரசு நிச்சயமாகப் பரிசீலனை செய்யும்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : கைத்தறித் துணியை ஆஸ்திரேலியாவுக்கு ஏற்றுமதி செய்வதில் இடர்ப்பாடு இருந்ததாக அறிகிறேன். அந்த இடர்ப்பாடு இப்போது களையப்பட்டுவிட்டதா? முன்பு மலேசியாவில் கோவாப்டெக்ஸ் கடை நடந்தது. பிறகு மாற்றப்பட்டு விட்டது. மீண்டும் மலேசியாவில் அக் கடையைத் துவங்கும் உத்தேசம் உண்டா? வெளிநாடுகளில் கைத்தறித் துணியைப்பற்றி விளம்பரப்படுத்துவதற்காக இந்த மன்ற உறுப்பினர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி விளம்பரம் தேட அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : ஆஸ்திரேலியாவுக்குக் கைத் தறித் துணிகள் தனியார் துறையிலிருந்து அனுப்பப்பட்டன. அங்கே ஓரள விற்குத் தேக்கம் ஏற்பட்டு, இப்போது சரி செய்யப்பட்டு விட்டது. அரசுத் துறையின் சார்பிலே அனுப்பப்பட்ட துணி தேங்கவில்லை. இப்போது சிங்கப் பூரில் ஒரு விற்பனை நிலையத்தை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக் கிறோம். அது நல்ல முறையிலே வெற்றி தருமானால், உறுப்பினருடைய யோசனையும் கருத்தில் கொள்ளப்படும்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மேலவை உறுப்பினர்களை அனுப்பும்போது, யார் கைத்தறி ஆடையை அணிந்திருக்கிறார்களோ அவர்களை அனுப்ப அரசு ஆலோசனை செய்யும்.

**திரு. சி. இராமலிங்கம் :** சிங்கப்பூரில் ஷோ ரூமைத் திறக்க இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நம்முடைய தென்னகத்திலே நெய்யக்கூடிய துணிகளுக்கு 'பழைய காட் சாரம்' என்று பெயர். பழவேற்காட்டில் இருந்து ஏற்றுமதி செய்யப்பட்டு இலங்கை, சிங்கப்பூர், மலேசியா, இந்தோனேசியா, ஜாவா, மணிலா போன்ற நாடுகளில் ஏற்கெனவே அதிகமாக விற்பனை ஆகிக் கொண்டிருக்கிறது. இன்றைக்குப் புதியதாக விற்பனை நிலையத்தை வைக்கத் தேவையில்லை. இன்றைக்கு ஒரு லுங்கியின் விலை இங்கு 18 ரூபாய் என்றால், இலங்கையில் 75 ரூபாய் அளவுக்கு விற்பதற்காக கள்ளத் தோணியில் எடுத்துச் செல்லுகிறார்கள். ஆகவே வெளிநாடு அரசுகளோடு வர்த்தக ஒப்பந்தம் செய்கிற நேரத்திலே . . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** நீங்கள் கேள்வியைக் கேட்கிறீர்களா? பதில் சொல்லுகிறீர்களா ?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமலிங்கம் என்ன சொல்லுகிறார் என்று தெரியவில்லை. வெளிநாடுகளில் விற்பனை செய்வது என்பது நாம் நினைப்பதைப் போல அவ்வளவு எளிதான காரியமல்ல. இரண்டாவது, கைத்தறித் துறையில் கூட்டுறவுச் சங்கங்களை எந்த அடிப்படையிலே உருவாக்குகிறோம் என்றால், புரொடக்ஷன் அண்டு சேல்ஸ் சொசைட்டி (Production and Sales Society) என்ற அளவில் அவர்கள் உற்பத்தியும் செய்ய வேண்டும், விற்பனையும் செய்ய வேண்டும் என்ற அளவில் கைத்தறித் துணி உற்பத்தி மற்றும் விற்பனைக் கூட்டுறவுச் சங்கம் என்று உருவாக்குகிறோம். அந்தக் கூட்டுறவுச் சங்கங்களே தனியார் துறையைப் போல முயற்சிகளில் ஈடுபட்டால் வெற்றி சாத்தியமாக இருக்கும். அரசு இதிலே நேரடியாக ஈடுபடுவதைவிட சங்கங்களை நடத்துகிறவர்களே இந்த முயற்சியை மேற்கொள்ள வேண்டும். அப்படிப்பட்டவர்கள் வெற்றியையும் பெற்றிருக்கிறார்கள் என்பதற்கு ஒரு உதாரணத்தைச் சொல்ல வேண்டுமென்றால், சென்னிமலையில் உள்ள 'சென்டெக்ஸ்' நிறுவனத்தைச் சொல்லலாம். அவர்கள் ஒரு கோடி ரூபாய் அளவிற்கு ஏற்றுமதியைச் செய்திருக்கிறார்கள். அப்படி ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கமும், தனியார் துறையைப் போலவே நேரிடையாக முயற்சியைச் செய்ய வேண்டும். அதற்கு உதவி செய்ய வேண்டுமென்று அரசைக் கேட்டால், அது சரியாக இருக்கும். அந்த அடிப்படையில் இதைப்பற்றிச் சிந்திக்க வேண்டுமென்று சொல்லிக் கொள்ளுகிறேன்.

**திரு. சி. இராமலிங்கம் :** நான் சொல்ல வந்தது, மத்திய சர்க்கார் வர்த்தக ஒப்பந்தம் செய்கிற நேரத்திலே கைத்தறித் துணியைச் சேர்த்துக்கொள்ள வேண்டும். அதற்கு இந்த மாநில அரசு முயற்சி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.



**திரு. க. இராமமூர்த்தி :** கைத்தறித் துணி ஏற்றுமதியைப் பொறுத்தவரையில், வெளிநாடுகளில் தைக்கப்பட்ட ரெடிமேட் ஆடைகளுக்கு நல்ல கிராக்கி இருக்கிறது. கூட்டுறவுச் சங்கங்களில், பட்டன் மிஷின், தையல் மிஷன் ஆகியவற்றை வாங்க வேண்டும் என்றால் மிக அதிகமான விலை கொடுத்து, அதாவது ரூபாய் ஐம்பதாயிரம், ரூபாய் அறுபதாயிரம் என்று கொடுத்து வாங்க வேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே அந்த மிஷின்களை அரசே முன்னோடியாக நின்று கூட்டுறவுச் சங்கங்களுக்கு வாங்கித் தர முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் :** வருகின்ற ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலே 10 கோடி ரூபாய் அளவுக்கு ஏற்றுமதி செய்ய உத்தேசித்துள்ளது அரசு. அப்போது ரெடிமேட் ஆடைகளையும் ஏற்றுமதி செய்யும் வாய்ப்புகள் உள்ளன. மதுரை, சென்னை, திருச்சி ஆகிய மூன்று நகரங்களில் ரெடிமேட் ஆடைகளைத் தயாரிக்கும் 3 நிலையங்களை ஏற்படுத்த அரசு முயற்சித்து வருகிறது.

**திரு. ஆ. திராவிடமணி :** கைத்தறித் துணி ஏற்றுமதி என்ற பெயரால், விசைத் தறியில் உற்பத்தி செய்யப்பட்ட துணியும் 'கைத்தறித் துணி' என்று சீல் வைத்து அனுப்பப்படுகிறது. நாம் இவ்வளவு அக்கறை கைத்தறிக்காக எடுத்துக்கொண்ட போதிலும், விசைத் தறித் துணிகளையும் கைத்தறித் துணிகளாகப் பயன்படுத்துகிறார்கள். ஆகவே அதைத் தடுக்க திட்டமிட்ட முயற்சியை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் :** தமிழகத்தைப் பொறுத்த வரையிலே, விசைத் தறித் துணிகளை, கைத்தறித் துணி என்று ஏற்றுமதி செய்வதில்லை. மற்ற மாநிலங்களில் இப்படிப்பட்ட குறைபாடுகள் நடந்ததாக அறிகிறோம். மத்திய அரசு முழு முயற்சியுடன் ஈடுபட்டு இதைத் தடுக்க வேண்டும்.

**திரு. பி. ஆர். தாமஸ் :** எத்தகைய துணிகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன ? ஏற்றுமதிக்கென்று தனியாக ஏதாவது சிறப்புத் திட்டத்தின் கீழ் உற்பத்தி செய்யப்படுகின்றனவா? வெளிநாடுகளின் தேவையை, அவர்களின் விருப்பத்தை அறிந்து, நம்முடைய நாட்டிலே உற்பத்தி செய்யப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் :** வெளிநாடுகளிலிருந்து ஆர்டர்களைப் பெறுகிறபோது, அவர்களுக்கு எப்படிப்பட்ட ரகங்கள் வேண்டும் என்பதை எழுத்து மூலமாகப் பெற்றுக்கொள்ளுகிறோம். அவ்வாறு

பெற்றுக்கொள்ளுகிற நோக்கில் ஒரு பிரதிநிதியை அவர்கள் இங்கே அனுப்பி வைக்கிறார்கள். அவர்களுடைய மேற்பார்வையில் ஏற்றுமதி ரகங்கள் குறிப்பிட்ட இடங்களில்தான் நெய்யப்படுகின்றன. சாயம் நனைத்தல், தறிகளில் நெய்தல் ஆகியவை நடைபெறும் இடங்களில் அவர்கள் மேற்பார்வையில்தான் பணிகள் நடக்கின்றன. பிறகு அந்தத் துணிகள் ஏற்றுமதியாகின்றன. பெரும்பாலும் டவல், படுக்கை விரிப்புகள் போன்றவைகள்தான் அரசு தரப்பிலேயிலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

(பிற்பகல் 5-10)

**திரு. ஆ. பாலசுப்ரமணியம் :** தலைவர் அவர்களே, பிளீடிங் மெட்ராஸ் என்ற துணிக்கு அயல்நாடுகளிலே கிராக்கி இருந்ததால் முன்பு ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது. தற்போதும் அதுமாதிரி துணிகள் ஏற்றுமதி செய்யப் படுகிறதா இல்லையா? அப்படி இல்லை என்றால் அதற்கான காரணம் என்ன?

**மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் :** பிளீடிங் மெட்ராஸ் என்ற துணி ரகங்களை அயல்நாடுகளுக்கு தனியார் துறையிலிருந்து அனுப்பிக் கொண்டிருந்தனர். அங்கு அந்தத் துணிகள் அதிகமாகிவிட்டதால், அந்த அரசாங்கத்தினால் தடை செய்யப்பட்டதால், இப்போது இந்த ரகங்களை அனுப்பி விடுவதில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU G. VASANTHA PAI : Sir, will the Hon. Minister state whether the Government Handlooms Department is directly exporting or is it through the Handloom Corporation situated at Bombay; and whether there have been complaints from several foreign buyers that commitments which have been made for the export of handloom cloth have not been periodically kept up in time ?

**மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் :** அரசுத் துறையில் அனுப்பப்படுகின்ற துணிகள் நேரடியாக ஏற்றுமதி செய்யப்படுகின்றன. அரசு ஏற்றுமதி செய்யும் துணிகளைக் குறித்து எந்தவிதமான புகார்களும் அரசாங்கத்திற்கு வருவதில்லை. தனியார் துறை அனுப்புகின்ற சில ரகங்கள் குறித்துப் புகார்கள் வருவதாகக் கேள்விப்படுகிறோம்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** இந்தியாவிலேயே பிற மாநிலங்களுக்கும் கைத்தறித் துணி ஏற்றுமதி செய்யப்படுகிறதா? எந்தெந்த மாநிலங்களில் கைத் தறித் துணியை விரும்பி வாங்குகிறார்கள்?



**மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் :** இந்தியாவிலே இருக்கக்கூடிய எல்லா மாநிலங்களிலும் நம்முடைய கூட்டுறவுக் கைத்தறித் துணிகள் விற்பனை நிலையங்கள் இருக்கின்றன.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** 1978 ஆம் ஆண்டில் கைத்தறித் துணிகள் ஏற்றுமதியின் மூலமாக நம் நாட்டிற்குக் கிடைத்த அந்நிய செலாவணி எவ்வளவு? அடுத்த ஆண்டில் எதிர்பார்க்கின்ற அளவு என்ன ?

**மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் :** 1978 ஆம் ஆண்டில் அரசு துறையில் ஏற்றுமதி செய்யப்பட்ட துணிகளைப் பற்றித்தான் மூலக் கேள்வி இருக்கிறது. ஏற்றுமதி ரகங்கள் அரசுத் துறைகள் மட்டுமல்லாது, தனியார் துறை மூலமாகவும் அனுப்பப்பட்டிருக்கின்றன. தமிழகத்தில் மட்டுமல்லாமல், மற்ற மாநிலங்களிலும் ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது. இதன் மூலம் நமக்கு எவ்வளவு அந்நியச் செலாவணி கிடைக்கிறது என்பதைப்பற்றித் தனிக் கேள்வி போட்டால், விவரம் தரலாம்.

**புலவர் புலமைப்பித்தன் :** விசைத்தறி வருவதற்கு முன்பே நம் பண்டைத் தமிழகத்தில் பாலாவி போன்ற துணிகளைக்கூட நெய்திருக்கிறார்கள். அதன் மூலமாக அயல்நாடுகளைக்கூட நாம் கவர்ந்திருக்கிறோம். அது போன்ற மெல்லிய ஆடைகளை துல்லியமாக கவனித்துச் செய்ய அரசு வழி வகைகளை மேற்கொள்ளுமா ?

**மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்:** மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சொன்ன யோசனை பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

## 2. அறிவிப்பு.

### (1) ஆளுநரிடமிருந்து செய்தி குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ஆளுநர் அவர்கள் தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலம் (உச்சவரம்பு கட்டுதலும், முறைப்படுத்துதலும்) குறித்த திருத்தச் சட்டமுன்வடிவு ஆய்விற்கு எடுத்துக் கொள்வதற்கு தனது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## (2) பேரவையிலிருந்து செய்திகள் குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்**. சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு, அரசியலமைப்புச் சட்டப்படி பணச் சட்ட முன்வடிவு என பேரவைத் தலைவரால் தீர்மானிக்கப்பட்டு இம் மேலவையின் பரிந்துரைக்காக பேரவைத் தலைவரால் கையொப்பமிட்டு தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 14/1979) மாண்புமிகு பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளேன்.

சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு சட்டமன்ற மேலவையின் இசைவிற்காக மாண்புமிகு பேரவைத் தலைவரால் கையொப்பமிட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட சட்டமுன்வடிவுகளின் பிரதிகளை மாண்புமிகு பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளேன்.

1. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு மதுவிலக்கு (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 13/1979).

2. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8/1979).

3. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பயிரிடும் குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரண) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/1979).

4. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலம் (உச்ச வரம்பு கட்டுதலும், முறைப்படுத்துதலும்) குறித்த திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10/1979).

5. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 14/1979).

6. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 4/1979.



7. 1979 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் நகராட்சி மன்ற (தனி அலுவலர் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 5/1979).

8. 1979 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/1979).

## 3. உரிமைப் பிரச்சினை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு அங்கத்தினர்கள் திரு. க. இராமமூர்த்தி, திரு. சி. ஆர். லெட்சுமிகாந்தன் அவர்கள் எழுப்பிய உரிமைப் பிரச்சினையின் மீது இன்று தீர்ப்பு சொல்வதாக இருந்தேன். அதை அடுத்த வரும் நாளில் சொல்கிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. வசந்த பை அவர்களின் உரிமைப் பிரச்சினை குறித்த விஷயம் சுப்ரீம் கோர்ட்டிலே விசாரணைக்குச் சம்பந்தப்பட்டு இருப்பதால், அந்தத் தீர்ப்பு முடிந்து வந்தவுடன் அதை எடுத்துக்கொள்ளலாம் என்று சொல்லிக்கொள்கிறேன்.

**THIRU G. VASANTHA PAI:** Sir, on a point of information. .

**திரு. வே தங்கப்பாண்டியன் :** தலைவர் அவர்களே, தங்களுக்கு உறுதுணையாகவும், உதவியாகவும் இருப்பதற்காகவே மாண்புமிகு உறுப்பினர் திரு. வசந்த பை அவர்கள் மீண்டும் அந்த உரிமைப் பிரச்சினை குறித்து ஆட்சேபணை எழுப்பவில்லை என்று சொன்னார்கள். அவர்கள் சுப்ரீம் கோர்ட்டுக்குப் போவதை விரும்பவில்லை. வலுக்கட்டாயமாக சுப்ரீம் கோர்ட்டுக்குப் போகிறது. அங்கத்தினர் அவர்களே இந்த உரிமைப் பிரச்சினை குறித்து தங்களிடம் தனியாகப் பேசி, சமாதானமாக அதைப்பற்றிப் பேசித் தீர்த்துக்கொள்ள விரும்புகிறார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அதைத்தான் அவர் சொல்ல விரும்புகிறார் போல் இருக்கிறது.

**Thiru G. VASANTHA PAI:** Sir, I want to submit to the Hon. Chairman that while I accept . . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் அந்தப் பிரச்சினைக்குள்ளே போகக்கூடாது.

THIRU G. VASANTHA PAI : Sir, I accept the decision of the Hon. Chairman that since this matter is *sub judice*, I should not raise this point concerning the matter which is pending in the Supreme Court. I agree. But I am a Member of this House and the * * * has also........

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள், அந்தப் பிரச்சினை என்ன என்ற விவரத்திற்குள் போகக்கூடாது என்று தெரிவித்துக்கொள்கிறேன். திரு. ஜி. வசந்த பை அவர்கள் ஒத்துழைக்க வேண்டும். அது கோர்ட்டு சம்பந்தப்பட்ட விஷயமாக இருக்கிறது. இங்கே அந்த விஷயத்தை எந்தவிதமாகவும் எழுப்பக்கூடாது என்று பல முறை சொல்லியிருக்கிறேன்.

THIRU G. VASANTHA PAI : I am not talking about the Government. I am not referring to the Government at all. The litigation is pending there. As a Member of this House, am I not entitled to the disbursement of my expenditure from the Government ? That is what I am asking. I want the Hon. Minister to answer that.

(மாண்புமிகு திரு. கா. இராசா முகமது அவர்கள் பேச எழுந்தார்கள்.)

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் அந்த விஷயத்திற்குள்ளே போகவேண்டாம் என்று சொல்லிக்கொள்கிறேன்.

THIRU G. VASANTHA PAI: Sir, I want an answer in English.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வசந்த பை அவர்கள் சொன்ன * * * என்ற வார்த்தையை நீக்கிவிட வேண்டும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** * * * என்று குறிப்பிட்ட வார்த்தையை அவைக் குறிப்பிலேயிருந்து எடுத்து விடுகிறேன். அங்கத்தினர் அவர்கள் ஆங்கிலத்தில் கேட்டால், ஆங்கிலம் தெரியாதவர்கள் தமிழில் பதில் கேட்பார்கள்.

THIRU A. R. DAMODARAN. Sir, I have a submission. It is the convention in the House that when a question 's asked in English, the answer may be given in English. If the Hon. Minister knows English. If he does not know English, he is welcome to give the answer in Tamil.

---

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.





**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். தமிழிலே பேசினால், மாண்புமிகு அங்கத்தினர் திரு. வசந்த பை அவர்களுக்கு விஷயத்தைத் தெரிந்துகொள்ள முடியும். அவரால் பேச முடியாதே தவிர, பேசினால் தெரிந்துகொள்ள முடியும். அவர் ஆங்கிலத்திலே பேசுவதைப் பற்றி ஒன்றும் ஆட்சேபனை இல்லை. இந்த மொழி அவை நடவடிக்கை மொழிகளில் ஒன்று.

**திரு. ஏ. ஆர். தாமோதரன் :** அங்கத்தினர் அவர்களுக்குத் தமிழ் தெரியலாம். மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பொறுத்த வரையில், அவர் ஆங்கிலம் தெரிந்தவராக இருப்பதால், ஆங்கிலத்திலேயே சொல்வதிலே இங்கே யாருக்கும் ஆட்சேபனை இருக்க முடியாது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இது என்னுடைய அபிப்பிராயம். இந்த அவையினுடைய மாண்பைக் காப்பாற்ற, ஆங்கிலம் தெரியாதவர்கள் தமிழில் கேட்பதற்கு உரிமையுண்டு, அதைத் தடுக்க முடியாது. அவையிலே தமிழிலே பேசுவதனால் குறை ஒன்றும் வந்துவிடாது. ஆங்கிலத்திலே பேசுவதா, தமிழிலே பேசுவதா என்பது குறித்து நான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரிமைக்கே விட்டு விடுகிறேன்.

Thiru G. VASANTHA PAI: Sir, for better understanding, I would like the answer to be in English.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** நாம் ரொம்ப நாட்களாகவே ஒரே போக்கிலேயே போய்க்கொண்டிருக்கிறோம்.

THE HON. THIRU K. RAJA MOHAMMED : As a matter of policy and as a matter of fact, though I have been fair enough to put forward my ideas in English, as a vow I am not ready to answer in English. I want to tell the fact in Tamil, in my mother-tongue.

மாண்புமிகு தலைவரவர்களே, இது உச்ச நீதி மன்றத்தில் இருப்பதாலும் இதைப்பற்றிப் பேச வேண்டாமென்று தாங்கள் சொன்னதாலும், இதை இத்துடன் முடித்துவிட வேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 5-20)

THIRU G. VASANTHA PAI: Sir, I want the answer to my question. It is going to cost me Rs. 20,000 for defending this Appeal. As a Member, am I not entitled. . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** திரும்பவும் பிரச்சினைக்குப் போகிறீர்கள்.

**4. கவன ஈர்ப்பு.**

**(1) இராமநாதபுரம் மாவட்டத்தில், குறிப்பாக அருப்புக்கோட்டை தாலுகாவில் விவசாயத்திற்குப் பயன்படும் மோட்டார் பம்ப் செட்டுகளுக்கு மின் சப்ளை சரிவரக் கொடுக்கப்படாததால், விவசாய உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது குறித்து.**

**திரு. வே. தங்கப்பாண்டியன்:** தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:

'இராமநாதபுரம் மாவட்டத்தில் குறிப்பாக அருப்புக்கோட்டை தாலுகாவில் கடந்த 15 தினங்களாக மின்சாரப் பற்றாக்குறை காரணமாக மின்சாரத் தடங்கல் ஏற்பட்டுள்ளது. இதனால் விவசாயத்திற்குப் பயன்படுத்தப்படும் மோட்டார் பம்ப் செட்டுகளுக்கு மின் சப்ளை சரிவரக் கொடுக்கப்படாததால், விவசாய உற்பத்தி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து'

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, தற்போது தமிழ் நாட்டில் இராமநாதபுரம், தர்மபுரி, புதுக்கோட்டை, கன்னியாகுமரி, தஞ்சை நீங்கலாக பிற மின் திட்டங்களில் விவசாயத்திற்கு மின்சாரம் கீழ்க்கண்ட நேரங்களில் அளிக்கப்படுகிறது—

காலை 6 மணி முதல் பகல் 2 மணி வரை ஒரு பகுதிக்கும்,
காலை 10 மணி முதல் மாலை [illegible] மணி வரை இரண்டாவது பகுதிக்கும்
இரவு 10 மணி முதல் காலை 6 மணி வரை இரண்டு பகுதிகளுக்கும்.

மேற்கூறிய முறை இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை மாற்றிக் கொடுக்கப்படுகிறது.

அருப்புக்கோட்டையில் ஒரு குறிப்பிட்ட பகுதியில் உள்ள 12 மின் மாற்றிகளுக்கு மதுரை மின் திட்டத்தைச் சேர்ந்த திருமங்கலம் உபமின் நிலையத்திலிருந்து மின்சாரம் அளிக்கப்படுகிறது. திருமங்கலத்திலிருந்து அருப்புக்

## இராமநாதபுரம் மாவட்டத்தில் குறிப்பாக அருப்புக்கோட்டை தாலுகாவில் விவசாயத்திற்கு பயன்படும் மோட்டார் பம்ப் செட்டுகளுக்கு மின் சப்ளை சரிவாக் கொடுக்கப்படாததால், விவசாய உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது குறித்து



கோட்டைக்குச் செல்லும் 11 கே. வி. மின் கம்பித் தொடரில் மதுரை மின் திட்டத்தை சேர்ந்த 51 மின் மாற்றிகளும் உள்ளன. இந்த 51 மின் மாற்றிகளும் மதுரை மின் திட்டத்திலிருப்பதால் மேலே குறிப்பிட்ட நேரங்களில் மட்டுமே மின்சாரம் பெறுகின்றன. அருப்புக்கோட்டை பகுதியில் உள்ள 12 மின் மாற்றிகளும் அதே கம்பித் தொடரில் இருப்பதால் அவைகளும் அந்த நேரங்களில் மட்டும் மின்சாரம் பெறுகின்றன.

இது சம்பந்தமாக, அருப்புக்கோட்டை பகுதியில் உள்ள மேற்கூறிய 12 மின் மாற்றிகளுக்கு இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள மற்ற பகுதிகளைப் போலவே 20 மணி நேர மின்சாரம் பெற ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** தலைவரவர்களே, திருமங்கலத்திலிருந்து, அருப்புக்கோட்டையில் உள்ள மின் மாற்றிகளுக்கு மின்சாரம் அளிக்கப்படுவ தால், மதுரை மின் திட்டத்தில் மின்சாரம் அளிக்கப்படுவதைப் பின்பற்றி, அருப்புக்கோட்டை பகுதியில் அளிக்கப்படுவதால் அங்கு இருக்கும் விவசாயி களுக்கு, மற்ற விவசாயிகளைப்போல் மின்சாரம் கிடைக்காமல் இருக்கிற அருப்புக்கோட்டையில் உள்ள 12 மின் மாற்றிகளுக்கு திருமங்கலத்திலிருந்து மின்சாரம் கொடுப்பதை மாற்றி, அந்த மாவட்டத்திலேயே கொடுக்கும் முறை இன்னும் பின்பற்றப்படவில்லை. நேற்றுவரை கொடுக்கவில்லை. எனவே உடனடியாக அருப்புக்கோட்டை பகுதியில், இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள மற்ற பகுதிகளைப்போல, மின்சாரம் வழங்க ஏற்பாடு செய்ய முடியுமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** நேற்று வரை கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். இன்று நான் கூறியிருக்கிறேன். உத்தரவு பிறப்பிக் கப்பட்டுள்ளது. நாளை கிடைக்கும்.

**(2) மதுராந்தகம் அருகிலுள்ள எண்டத்தூர் ஏரியில் தண்ணீர் பெருகி அருகிலுள்ள நஞ்சை நிலங்களும் கிராம மக்களும் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து.**

**திரு. ஆ. நல்லசிவன் :** தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு வேளாண்மை மற்றும் நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

'செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகம் அருகிலுள்ள எண்டத்தூர் ஏரியின் கலுங்கை எண்டத்தூர் ஜமீன் பாம்பரையினர் 6 அடி உயரத்தில் கட்டிய

## 342 மதுராந்தகம் அருகில் உள்ள எண்டத்தூர் ஏரியில் தண்ணீர் பெருகி அருகிலுள்ள நஞ்சை நிலங்களும் கிராம மக்களும் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து



தால், ஏரியின் தண்ணீர் அளவிற்கு அதிகமாகப் பெருகி, 40 ஏக்கர் நஞ்சை நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளதால், அவரிமேடு, பையம்பாடி, பெருவேலி கிராம மக்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல் குறித்து "

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு தலைவரவர்களே, செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டம் 17/3 ஜமீன் எண்டத்தூர் கிராம சர்வே செட்டில்மென்ட் ரிஜிஸ்டரின்படி ஜமீன் எண்டத்தூர் ஏரி 498.02 ஏக்கர் ஆயக்கட்டை உடையது . . . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவை முன் வைக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் போதுமே.

*** மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** அறிக்கை @ அவை முன் வைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. ஆ. நல்லசிவன் :** தலைவரவர்களே, எண்டத்தூர் நிலப்பிரபுக்கள் ஏரிக் கரையை 5½ அடி உயர்த்திக் கட்டியதால், அவரிமேடு, பையம்பாடி, பெருவேலி என்ற மூன்று கிராமங்களில் அரசே அறிவித்துள்ளதுபோல், சுமார் 190 ஏக்கர் நிலங்களும், அதில் 60 ஏக்கரிலுள்ள பயிரும் இரண்டு மாதங்களுக்கு மேல் தண்ணீரில் மூழ்கியதால், விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. எனவே அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவரவர்களே, கிராம ஊழியர்கள் வடிகால் தடுப்புக் கரையைப் பாதுகாத்து வருகிறார்கள். அதே நேரத்தில் நீரில் மூழ்கிய நிலங்களிலும் தண்ணீர் வற்றி, இப்போது எந்தவிதமான பாதிப்பும் இல்லை. ஆகவே நஷ்ட ஈடு கொடுக்க வேண்டிய அவசியம் தற்போதில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆ நல்லசிவன் :** கலுங்கை 5½ அடி உயர்த்திக் கட்டியிருப்பது சட்ட விரோதமென்று Government Pleader, legal opinion கொடுத்திருப்பதால், அதை நீக்கி மூன்று கிராமங்களிலுள்ள விவசாயிகளின் நிலங்களும் தண்ணீரில் மூழ்காமல் இருக்க உத்தரவாதம் கொடுக்க அரசு முன் வருமா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

---

@ 401-403 ஆம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.



### 5. அரசின் சட்ட முன்வடிவுகள்.

**(1) தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (வெளியேற்றப் படுவதனின்றும் பாதுகாத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8/1979).**

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவரவர்களே,

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979-ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (வெளியேற்றப் படுவதனின்றும் பாதுகாத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 8/1979) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் " என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** முன்மொழியப்பட்ட தீர்மானம்—

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979-ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (வெளியேற்றப் படுவதனின்றும் பாதுகாத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 8/1979) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் "

**திரு. ஆ. நல்லசிவன் :** தலைவரவர்களே, இரண்டு மசோதாக்கள் அவையின் முன்னால் வைக்கப்பட்டிருக்கின்றன. நான் இரண்டையும் பற்றிச் சேர்த்துப் பேசிவிடலாமென்று நினைக்கிறேன். ஒன்று, 1976 ஜூன் 30ம் தேதியோடு முடியக்கூடிய பசலி வரைக்கும் நிவாரணம் பற்றியது.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவரவர்களே, உறுப்பினர் அவர்கள் இரண்டு மசோதாக்களையும் சேர்த்துப் பேசுகிறேன் என்று சொல்கிறார்கள். எனவே இரண்டு மசோதாக்களையும் சேர்த்து நான் முன்மொழியலாமா ?

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உறுப்பினர்கள் பேசலாம். அமைச்சர் பிறகு இரண்டாவது மசோதாவை முன்மொழியலாம். அப்போது உறுப்பினர்கள் பேச மாட்டார்கள்.

**திரு. ஆ. நல்லசிவன் :** இதிலே ஒரு மசோதா 1976 ஜூன் 30 ஆம் தேதியோடு முடியக்கூடிய பசலி வரையிலும் வார பாக்கி உள்ளவர்கள் வெளியேற்றப் படக்கூடாதென்பதற்காகக் கொண்டு வரப்பட்டதாகும். புதிய மசோதாவின்

---

@ ஆம் பக்கத்தில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மூலம் அவர்கள் வெளியேற்றப்படக்கூடாதென்று சொல்லி, காலத்தை நீட்டிப்பதை நான் வரவேற்கிறேன். அதே நேரத்தில் அரசு இந்த மசோதாவைக் கொண்டு வந்ததன் நோக்கத்தைப் பற்றிச் சொல்லும்போது, வார பாக்கி முழுவதையும் சாகுபடிதாரர்கள் கொடுக்க முடியாது, அவர்களுக்கு நிரந்தர நிவாரணம் கொடுக்கலாமென்பது பற்றி ஒரு நிரந்தரச் சட்டம் கொண்டுவர அவகாசம் வேண்டுமென்பதால், இதைக் கொண்டு வந்திருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறது. ஆகவே, இந்தக் காலக்கெடு முடிவதற்கு முன்பாக நிரந்தரச் சட்டம் கொண்டு வருவோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதிலே ஒரு யோசனை சொல்ல விரும்புகிறேன். சாகுபடிதாரர்கள் 4, 5 வருடங்களாக வார பாக்கி கொடுக்க முடியாததால், பாக்கித் தொகை அதிகமாகி விட்டது என்பது உண்மை. ஆகவே ஒரு வருஷ வார பாக்கியைக் கொடுத்தாலே, மற்ற பாக்கிகளை ரத்து செய்யும் அளவிற்கு சட்டத்தைக் கொண்டு வர வேண்டும். அதன் மூலமாக சாகுபடிதாரர்களை நிரந்தரக் கடனாளி என்று சொல்லும் நிலைமையிலிருந்து அவர்களுக்கு விடுதலை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எனவே பின்னால் கொண்டு வரும் சட்டத்திலே ஒரு நிரந்தர நிவாரணம் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, புயல் பாதிப்புள்ள பகுதியில் உள்ளவர்களுக்கு 1978 ஜூன் முடிய உள்ள பாதுகாப்பை 1979 ஜூலை 15ம் தேதி வரைக்கும் நீட்டிக்கிறார்கள். அதையும் வரவேற்கிறேன். அது குறித்து அமைச்சரவர்களின் கவனத்திற்கு ஒரு விஷயத்தைக் கொண்டுவர விரும்புகிறேன். இன்றைக்குள்ள சட்டப்படி புயலால் பாதிக்கப்பட்ட பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு 12½ சதவிகிதம் என்று கர்ணம் சர்ட்டிபிகேட் கொடுத்தால்தான், நிவாரணம் கிடைக்கும். 12½ சதவிகிதத்திற்கு மேலே விளைச்சல் இருக்கிறதென்று சர்ட்டிபிகேட் கொடுத்தால், புயலால் பாதிக்கப்பட்ட பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு நிவாரணம் கிடைப்பதில்லை. குறிப்பாக 30 சதவிகிதம் விளைச்சல் இருக்கிறதென்று கர்ணம் சர்ட்டிபிகேட் கொடுத்த அடிப்படையில், திருவாரூர் கோர்ட்டில் 50 சதவிகிதம் வாரத்தைக் கட்ட வேண்டுமென்று தீர்ப்பாகியிருக்கிறது. எனவே புயலால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் உள்ள விவசாயிகளுக்கு நிவாரணம் கொடுக்க சட்டம் கொண்டு வரும்போது ஒன்றைப் பரிசீலிக்க வேண்டும். இப்படி 20 சதவிகிதம், 30 சதவிகிதம் விளைச்சல் இருக்கிறது என்று சர்ட்டிபிகேட் கொடுத்தால், எப்படி நிவாரணம் கொடுக்க முடியுமென்று அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். புயலால் பாதிக்கப்பட்ட பகுதியில் உள்ள சாகுபடிதாரர்கள் [illegible]



தில்லை என்று முழு நிவாரணம் கொடுக்கும் அளவில், அந்த மசோதாவைத் திருத்தி, அவர்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். தமிழகத்திலே குத்தகைதாரர்களை வெளியேற்றுவது, வேகமாக வரும் ஆபத்தாக இருக்கிறது. தமிழ்

(பிற்பகல் 5-30)

நாட்டிலே 4 இலட்சம் குத்தகைதாரர்களைத்தான் பதிவு செய்திருக்கிறார்கள். எங்களுக்குள்ள தகவல்படி இன்னும் 4 இலட்சம் குத்தகைதாரர்களுடைய பெயர்கள் பதிவு செய்யப்படவில்லை. மேலும் குத்தகைதாரர்களாக இருப்பவர்கள் எல்லோருமே இன்னும் பதிவு செய்யப்படவில்லை என்பதை ரெகார் ஆப் டெனன்சி ஆணையாளராக இருந்த திரு. பத்ரிநாத் அவர்களே ஒரு அறிக்கையிலே வெளியிட்டிருக்கிறார்கள். ஆகவே இன்னும் இலட்சக்கணக்கான சாகுபடிதாரர்கள் பதிவு செய்யப்படாமலே இருந்துகொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். ஜூலை மாதத்திற்கு முன்பாக, பாக்கியுள்ள இலட்சக்கணக்கான விவசாயிகளையும் பதிவு செய்வதற்கான ஏற்பாடுகளை இந்த அரசு செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். மேற்கு வங்காளத்தைப் பொறுத்தவரை, ஒரு விவசாயி சாகுபடிதாரரா, இல்லையா என்பதை நிரூபிக்க வேண்டிய பொறுப்பு நிலச்சுவான்தாருடையது. ஆனால் தமிழ்நாட்டிலே அந்த விவசாயிதான் அதை நிரூபிக்க வேண்டியிருக்கிறது. மேலும் தமிழ் நாட்டிலே மேற்கு வங்கத்தில் கொடுக்கிற மாதிரி விவசாயிகளுக்கு ரசீது கொடுக்கும் வழக்கம்கூட இல்லை. விவசாயியா, சாகுபடிதாரரா என்பதை நிரூபிக்க வேண்டிய பொறுப்பு நிலச்சுவான்தாருடையது என்கிற முறையிலே தமிழ் நாட்டிலும் மாற்றங்களைச் செய்ய வேண்டும். அரசாங்கத்தினுடைய எண்ணம் உள்ளபடியே இலட்சக்கணக்கான விவசாயிகளுக்குப் பயன்பட வேண்டுமென்றால், இன்னும் பாக்கியிருக்கிற 4 இலட்சம் சாகுபடிதாரர்களுடைய பெயர்கள் பதிவு செய்யப்பட வேண்டும். கடைசியாக இந்த அரசு தமிழ் நாட்டில் ஏற்கெனவே சாகுபடிதாரர்களுக்குக் கொடுத்துள்ள வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்தச் சட்ட முன்வடிவை ஆதரித்து அமர்கிறேன். வணக்கம்.

**திரு. ப. மாணிக்கம் :** மாண்புமிகு தலைவரவர்களே, நானும் இந்த இரண்டு சட்ட முன்வடிவுகளையும் வரவேற்கிறேன். இதிலே வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களில் கர்ணத்திடமிருந்து சர்ட்டிபிகேட் வாங்க வேண்டுமென்று ஒரு நிபந்தனை இருக்கிறதே, அது மிக மிக சங்கடமான விஷயம். அந்த

நிபந்தனையைத் தளர்த்த வேண்டும். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைப் பற்றி ஏற்கெனவே வருவாய்த் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் அறிக்கைகள் சமர்ப்பித்திருக்கிறார்கள். அதையே ஆதாரமாகக் கொண்டு அந்த பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள விவசாயிகளுக்கு நிவாரணம் கிடைக்கின்ற அடிப்படையில் இதிலே மாற்றங்கள் செய்ய வேண்டும். இந்த நிபந்தனையை அதிலேயிருந்து எடுக்க வேண்டும். குத்தகைதாரர்களுக்காக விரைவில் புதிய சட்டத்தை அரசு கொண்டுவரும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. சட்டம் வரும் என்கின்றபோது, ஏற்கெனவே பல அனுபவங்கள் நமக்கு ஏற்பட்டிருக்கின்றன. அது என்னவென்றால், குத்தகைதாரர்களுக்கு அல்லது விவசாயிகளுக்குப் பாதுகாப்பு தருகின்ற ஒரு சட்டம் வருகிறது என்று சொன்ன உடனேயே பல பேர் உண்மையான விவசாயிகளாக இருக்கிறவர்கள், விவசாயிகள் அல்ல என்கிற ஒரு நிலை ஏற்படுத்தப்படும். மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் பேசும்போது, பதிவேட்டிலே குத்தகைதாரர்களுடைய எண்ணிக்கை, உண்மையான எண்ணிக்கை, குறைவாக இருக்கிறது என்று சொன்னார்கள். அது மட்டுமல்ல, இனிமேல் பதிவேட்டில் சேர்க்கவும் முடியாது. இனிமேல் சேர்க்க வேண்டுமென்றால், அதில் பல்வேறு சங்கடங்கள், சிரமங்கள் இருக்கின்றன. ஏற்கெனவே பல அறிவிப்புகள் வந்திருக்கின்ற காரணத்தால், இப்பொழுது அவர்கள் உஷாராக இருந்துகொண்டு, தற்பொழுது கொடுக்கக்கூடிய அந்தப் பாதுகாப்பையும் அவர்களுக்குக் கொடுக்க விடக் கூடாத ஆபத்து இருக்கிறது. கொண்டு வரக் கூடிய மசோதாவில் கூட இம்மாதிரியான ஒரு உத்தரவாதமான வழிவகைகள் இருக்க வேண்டும். பதிவேடு என்று வருகிறபோது, பக்கத்து வயலில் விவசாயம் செய்பவர்களே சொன்னால் போதும் என்கிற வகையில் வழிவகை செய்ய வேண்டும். அதிகாரிகள் குறிப்பிட்ட நிலத்திலே இன்னார் தான் சாகுபடி செய்கிறார் என்பதற்கான ஆதாரம் இல்லையென்று சொல்லி தள்ளுபடி செய்து விடுகிறார்கள். நிரூபிக்க வேண்டிய பொறுப்பு நிலச்சுவான்தாரரிடம் இருக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் கூட சொன்னார்கள். என்னைப் பொறுத்தவரையில், அண்டை நிலங்களிலுள்ளவர்கள் சொன்னாலே போதும் என்கிற ஒரு திருத்தத்தைக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். இல்லாவிட்டால் சட்டம் கொண்டு வந்தாலும், அவர்களுக்குப் பாதுகாப்பு இல்லாத நிலை ஏற்படும் என்று கூறி அமர்கிறேன்.





**திரு. க. இராமமூர்த்தி :** தலைவரவர்களே, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இரண்டு மசோதாக்களையும் நான் மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றேன். பயிரிடும் குத்தகைதாரர்கள் வெளியேற்றப் படுவதினின்றும் பாதுகாத்தல் மசோதாவைப் பொறுத்தவரையிலும் கால தாமதம் எந்த அளவுக்குப் பிரச்சினைகளை வளர்த்து வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் நல்லசிவனும், மாணிக்கமும் மிக தெளிவாக விளக்கினார்கள். இதிலே இன்னார்தான் குத்தகைதாரர்கள் என்பதை எப்படி நிர்ணயம் செய்வது, நிரூபிப்பது என்கின்ற பிரச்சினையைப் பொறுத்தவரை, சங்கடங்கள் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் சொன்னதுபோல், எட்டுக் குறிப்புகளின்படி நாளுக்கு நாள் குத்தகைதாரர்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வருகிறது. யார் உண்மையிலேயே நிலத்திலே பயிரிடுகின்றார்கள் என்பது இன்னொரு பிரச்சினை. உண்மையிலே இன்னார்தான் நிலத்தில் குத்தகைதாரர் என்று பத்திரங்கள் வாயிலாக இப்பொழுதெல்லாம் பதிவு செய்யப்படுவதில்லை. இதிலே ஆதாரம் அல்லது நிரூபித்தல் என்ற வகையில் அதற்கு தொடர்பாக இருப்பது கிராமக் கர்ணத்தினுடைய ஏடுகள்தான். பல இடங்களில் கர்ணத்தினுடைய ஏடுகளைப் பார்ப்போமானால், யார் நில சொந்தக்காரரோ அவருடைய பெயர் தான் இடம் பெற்றிருக்கிறது. உண்மையிலேயே நிலத்தைப் பயிரிடுபவர்களுடைய பெயர் அந்தக் குறிப்பிலே இடம் பெற்றிருக்க வேண்டும். ஆனால் அப்படி கர்ணத்தினுடைய குறிப்பிலே இடம் பெறுவது நடைமுறையில் இல்லை. உண்மையிலேயே நிலத்திலே பயிரிடுகின்றவர்கள் யார் என்று கண்டுபிடித்து அவருடைய பெயரை நிர்ணயிக்கிறபோது பக்கத்து நிலங்களிலே பயிரிடுபவர்கள் சொன்னாலே போதும். அப்படி இல்லாது போனால், அவசியமானால் கர்ணம், மணியக்காரர் போன்றவர்களிடம் நேரடியாகச் சென்று விசாரித்து பெயரை நிர்ணயிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரை நிர்ணயிக்கப்பட்ட உடனேயே சட்டம் கொண்டுவர வேண்டும். பல சமயங்களில், பல சந்தர்ப்பங்களில் இந்தச் சட்டம் தள்ளிப் போடப்பட்டுக் கொண்டே வந்திருக்கிறது. இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரை, தள்ளிப் போடுவது அல்லது ஒத்திப் போடுவது என்பது அவசியமற்றது. அரசு சில விஷயங்களைப் பொறுத்தவரை, ஒத்திப் போடலாம். ஆனால் சிலவற்றில் வேகமாக முடிவு எடுக்க வேண்டும். கால தாமதம் கூடவே கூடாது. இது பிரச்சினையை வளர்க்கின்ற பொருளாதாரப் பிரச்சினை என்பது மட்டுமல்ல, சமூக சீர்திருத்தப் பிரச்சினையும் இதிலே அடங்கியிருக்கிறது. ஏற்கெனவே

கூட நான் கருதுகின்றேன். இந்த நிலை ஏற்படுகின்றபோது, தெய்வாதீனமாக "Act of God" என்கிற முறையிலே இயற்கையினுடைய உற்பாதத்தினால் ஏற்பட்ட இழப்பாகையால் அவசியம் அவர்களது இழப்பை அரசு ஈடு செய்தாக வேண்டும். நிலச்சுவான்தாரர்களுக்கு என் கொடுக்க வேண்டாம் என்று சொல்வேன் என்றால், அவர்களுடைய நிலத்தை அவர்களே நேரடியாகப் பயிரிட்டிருந்தால் கூட, இயற்கையின் உற்பாதத்தினால் அவர்களுக்கு இந்த இழப்பு ஏற்பட்டிருக்கும். அவர்களுக்கு அந்த வருடத்திலே வர வேண்டிய குத்தகை வருமானம் இல்லையென்றால் அது "Act of God" என்கிற வகையிலே அவர்கள் தாங்க வேண்டியவர்கள். அதிலே கூட சிலருக்கு "ஆக்ட் ஆப் காட்" நிலையைத் தாங்க முடியாது. மிகக் குறைவான

(பிற்பகல் 5-40)

நிலத்தை மட்டும் வைத்துக்கொண்டு, அதைத் தவிர பிழைப்பதற்கு வேறு வழியில்லை என்ற நிலையில் இருப்பவர்கள் அல்லது கணவனை இழந்த தாய்மார்கள் அல்லது நிலத்தைத் தவிர சாப்பாட்டுக்கு வேறு வழியே இல்லாதவர்கள் என்ற நிலையில் இருப்பவர்களுக்கு மட்டுமே குத்தகை பாக்கியைத் திருப்பிச் செலுத்த வழி வகை செய்ய வேண்டும். அதைக்கூட பயிரிடுகிறவர்கள் செலுத்த வேண்டும் என்று சொல்லாமல், அந்தப் பொறுப்பை அரசாங்கமே ஏற்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நிலங்கள் எந்த அளவுக்குப் பாழ்பட்டுப் போயின என்பது அரசாங்கத்திற்கே தெரியும். அவைகளைச் சீர் செய்யவும், சமன் செய்யவும் அரசாங்கம் எடுத்த முயற்சிகளைக்கூட நாம் பாராட்டுகிறோம். என்றாலும் இயற்கையின் கொடூரத்தால் ஏற்பட்ட இந்த இழப்பினால் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டார்கள், பயிரிட்டவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டார்கள். எனவே, அவர்களுக்குக் கூடியவரை நிவாரணம் அளிக்க அரசு முன்வர வேண்டும். அல்லது மொத்தமாகவே அந்தக் குத்தகை பாக்கிகளைத் தள்ளுபடி செய்ய அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முற்போக்கான கருத்துக்களை மிக வேகமாக நிறைவேற்ற வேண்டும் என்ற ஆர்வம் காட்டக்கூடிய இந்த அரசு எனது கருத்துக்களை ஏற்கும் என்று நம்பி அமைகிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் இந்த அவையின் முன் கொண்டு வந்திருக்கும் இரண்டு சட்ட முன்வடிவுகளையும் திராவிட முன்னேற்றக்

[திரு. க. இராமமூர்த்தி] [1979 மார்ச் 15

அரசு இதன் மீது நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். இந்த மசோதாவைப் பொறுத்தமட்டில், இன்னும் 3 மாத கால அவகாசம் கேட்கின்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. அரசுக்கு பட்ஜெட் போன்ற சில முக்கியமான பணிகள் இருந்த காரணத்தால், ஒரு வேளை இந்தமாதிரி நிலை ஏற்பட்டிருக்கலாம். இந்தக் காலக்கெடு முடிகிறபோது, மேலும் கால அவகாசம் கேட்காமலிருக்கின்ற வகையில் அதற்கான பொறுப்பினை மாண்புமிகு அமைச்சரவர்கள் ஏற்றுக்கொண்டு அவருடைய பதிலிலேயே அதைப்பற்றித் தெரிவிப்பார்கள் என்று எதிர்பார்க்கின்றேன். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுடைய கடன் பாக்கியைப் பொறுத்தவரையிலும், அதற்கான பாதுகாப்பை அரசு கொடுத்தாக வேண்டும். அரசுக்கு இருக்கின்ற பொறுப்பை மாண்புமிகு அமைச்சரவர்கள் தட்டிக் கழிக்க மாட்டார்கள் என்று நான் கருதுகின்றேன். வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்கவில்லை என்பது போல் உள்ள பிரச்சினை அல்ல இந்தப் பிரச்சினை. வாங்கிய கடனைக் கொடுக்கவில்லையென்றால், தவணையாகக் கொடுக்கலாம் என்று சொல்லி விடலாம். இந்தப் பிரச்சினையைப் பொறுத்தமட்டிலும், சம்பந்தப்பட்ட விவசாயிகள் அவர்களுடைய கைப்பணத்தைச் செலவிட்டு, உழைப்பைச் செலவிட்டு பயிர் செய்திருக்கிறார்கள். இயற்கையினுடைய உற்பாதத்தினால், இயற்கையினுடைய கொடுமையினால் இந்த நஷ்டம் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. கடலில் மீன் பிடிக்கின்ற மீனவர்களுக்கு இது போன்ற இயற்கையினுடைய உற்பாதம் ஏற்படுகின்ற நேரங்களில் அரசே அவர்களுக்கு உதவி செய்கிறது, ஈடு செய்கிறது. வேறு எந்த ஒரு துறையானாலும் இதுபோன்ற இயற்கையினுடைய உற்பாதங்கள் ஏற்பட்டால் அவர்களுக்கு ஏற்படுகின்ற இழப்புகளை எல்லாம் அரசு ஈடு செய்ய தயங்காமல் முன்வருகிறது. விவசாயிகளுக்கு ஏற்பட்டிருப்பதும் இயற்கையினுடைய உற்பாதத்தினால் ஏற்பட்ட கொடுமைதான். அவர்கள் இழந்தவைகளை நிலத்திலிருந்து எடுக்க முடியாத நிலையில், அரசேதான் இழப்பீட்டுத் தொகை தந்தாக வேண்டும். யாருக்கு அவர்கள் குத்தகை அல்லது வாரம் கொடுத்துக் கொண்டிருக்கிறார்களோ அப்படிப்பட்ட நிலச்சுவான்தார்களுக்கு மட்டும்—அப்படிச் சில பேர் இருப்பார்கள்—கொடுக்க வேண்டிய அவசியமில்லை என்று

கழகத்தின் சார்பில் நான் வரவேற்கிறேன். குத்தகைதாரர்களைப் பாது காக்கிற வகையில், அவர்கள் கொடுக்க வேண்டிய பாக்கிகளை வசூலிக்க சட்ட ரீதியான நடவடிக்கை எடுப்பதை இன்னும் சில மாதங்களுக்குத் தள்ளி வைக்கிற முறையில் இந்தச் சட்ட முன்வடிவுகள் கொண்டு வரப்பட்டிருக் கின்றன. குத்தகைதாரர்கள் என்று நாம் குறிப்பிடும்போது, பொதுவாக நிலத்தில் விவசாயம் செய்கிறவர்களைத்தான் குறிப்பிடுகிறோம். அப்படி விவசாயம் செய்கிற குத்தகைதாரர்கள் பெருமளவுக்கு பாதிக்கப்பட்டிருக் கிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒப்புக் கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன். இதன் காரணமாகத்தான் குத்தகைதாரர்களுக்கு உதவி செய்யும் பொருட்டு தற்போது குத்தகை வாரத்தையே 75:25 என்ற அடிப்படையில் மாற்றியிருக்கிறோம்.

கடந்த சில ஆண்டுகளாக, குத்தகைதாரர்கள் மிகவும் பாதிக்கப்பட்ட காரணத்தால், அவர்களிடமிருந்து நிலச் சொந்தக்காரர்கள் தங்கள் பாக்கித் தொகையை வசூலிக்க சட்ட ரீதியான நடவடிக்கை எடுப்பதிலிருந்து பாது காப்புத் தரப்பட்டிருந்தது. இதன் காரணமாக பெருமளவுக்கு குத்தகை பாக்கி குவிந்திருக்கிறது. ஏற்கனவே இதைக் குறித்து ஒரு விரிவான சட்டம் கொண்டு வருவதாக அரசாங்கத்தின சார்பில் சொல்லப்பட்டது. அப்படி ஒரு விரிவான சட்டம் கொண்டு வரும்போது, குத்தகைதாரர்களில் 1 ஏக்கர் அல்லது 2 ஏக்கர் என்ற அளவுக்கு மட்டும் நிலத்தைப் பயிரிட்டு, அதன் காரணமாக அவர்களுக்குக் குத்தகை பாக்கி இருந்தால் அதையெல்லாம் தள்ளுபடி செய்திடுகிற வகையில் சட்ட விதி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

குத்தகைதாரர்களில் 'இண்ட்டர்மீடியரீஸ்' என்று சொல்லப்படுகிற இடைத் தரகர்களும் இருக்கிறார்கள். நிலச்சுவான்தாரர்களிடமிருந்து ஒரு குறிப்பிட்ட குத்தகைக்கு நிலத்தை எடுத்து, அதைத் தானே பயிரிடாமல், வேறு சிலருக்குக் கொடுத்து, அதன் மூலம் அதிகக் குத்தகை பெறும் ஒரு வர்க்கம் உருவாகிக் கொண்டிருக்கிறது. நிலச்சுவான்தாரர்களோடு நேரடி யாகத் தொடர்பு கொள்ளும் சக்தி இவர்களுக்கு இருப்பதால், நிலச்சுவான் தாரர்களின் நிலத்தை 8 கோட்டை, 10 கோட்டை என்று வாரத்திற்கு எடுத்து மீண்டும் அதே நிலத்தை 12 கோட்டை அல்லது 14 கோட்டை என்று குத்தகைக்குத் தருகிறார்கள். இடையில் வரும் அதிகமான நெல்லை அது

பயிரிட்டு வருகிற இடைத்தரகர்களாக இவர்கள் வாழ்ந்து வருகிறார்கள். ஆகவே நிலம் யாரால் பயிர் செய்யப்படுகிறதோ, யார் உண்மையான குத்தகைதாரரோ அவருக்கு அரசாங்கம் உதவி செய்ய வேண்டுமென்ற அடிப்படையில்தான் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் போது இதற்காக 'ரெக்கார்டு' தயாரிக்கவே தனித் தாசில்தார்களை அரசாங்கம் நியமித்தது. யார் குத்தகைதாரரோ அவர் அந்தத் தனித் தாசில்தாரரிடம், தான் ஒரு குத்தகைதாரர் என்று விண்ணப்பித்துக் கொள்ள வேண்டும். அந்த மனுவின்மீது தனித் தாசில்தார் நேரடியாகச் சென்று நிலத்தைப் பார்வையிட்டு, நிலச் சொந்தக்காரர்களுக்கும் நோட்டீஸ் விட்டு, குத்தகைதாரர்களுக்கும் நோட்டீஸ் கொடுத்து, பக்கத்து நிலத்தில் பயிரிடுகிறவர்களையும் பார்த்து விசாரித்து, 'ரெக்கார்டு' தயாரிக்க வேண்டுமென்று அப்போது ஆணையிடப்பட்டது. அதன் அடிப்படையில் ரெக்கார்டு தயாரிக்கப்பட்டது. அப்படியும்கூட இடைத்தரகர்கள் எப்படி நிலச்சுவான்தாரர்களிடம் அதிகமான செல்வாக்கு பெற்றிருக்கிறார்களோ அதைப் போலவே அதிகாரிகளிடமும் ஆதிக்கம் செலுத்தக் கூடியவர்களாக இருக்க முடியும். எனவே தயாரிக்கப்பட்ட இந்த ஏடுகள் ஒழுங்காகத் தயாரிக்கப்பட்டனவா என்பதைப் பார்க்க வேண்டும். நிலத்தை உண்மையாகப் பயிரிடுகிறவர்களிடமிருந்து மேல்முறையீடு வந்தால் ரெவின்யூ போர்டு மெம்பர் நிலையில் உள்ள ஒருவரை அனுப்பி, அப்படிப்பட்ட முறையீடுகளைப் பரிசீலனை செய்யச் சொல்லி, உண்மையில் யார் அந்த நிலத்தில் பயிரிடுகிறார்கள் என்று கண்டறிந்து, அவர்களுக்கு இந்த நிவாரணம் போய்ச் சேருகிற நிலைமையை உறுதி செய்ய வேண்டும். அதை விடுத்து இடைத்தரகர்களுக்கு இந்த நிவாரணம் போய்ச் சேருகிற நிலை வருமானால், நல்லதல்ல. அதை இனி வரும் சட்டத்தில் உறுதி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சொந்த நிலம் ஏதுமில்லாமல் ஒரு ஏக்கர் அல்லது 2 ஏக்கர் நிலத்தைக் குத்தகைக்கு எடுத்து, அந்த நிலத்திலே தன் உழைப்பை நல்கி, அதிலிருந்து கிடைக்கிற வருவாயை மட்டும் நம்பியிருக்கிற விவசாயியாக இருந்தால், குறிப்பாக நெற் பயிர் விவசாயம் செய்யும் விவசாயியாக இருந்தால், அவனுக்குத் தனிச் சலுகை அளிக்க அரசு முன்வர வேண்டும். ஆண்டுதோறும் இப்படிப்பட்ட விவசாயி ரூ. 200 அல்லது 300 அளவுக்குப் பயிர்ச் செலவு என்ற வகையில் தன்னுடைய கைப்பணத்தையும் நாசமாக்குகிறானே தவிர, அவன் எந்த விதத்திலும் வாழ்ந்துவிடவில்லை. இந்த உண்மையை யாரும் மறுக்க முடியாது. எனவே இப்படிப்பட்ட குத்தகைதாரர்களுக்கு தனிச் சலுகை

[திரு. ம. சங்கரலிங்கம்] [1979 மார்ச் 15

அரசு அளிப்பது தவறாகாது. பெரிய பெரிய தொழிற்சாலைகளுக்கெல்லாம் அரசாங்கம் பலவிதமான சலுகையைக் காட்டுகிறது. இவர்களுக்கு தனிச் சலுகை தருவது என்பது தவறாகாது. சில இடங்களில் மாற்றுப் பயிராக ஏதேனும் ஒரு பணப் பயிரைப் பயிரிட்டு, விவசாயிகள் தங்கள் நஷ்டத்தை ஈடு செய்து கொள்ள முடியும். ஆனால் இரண்டு போகமும் நெல் தவிர வேறு எதையும் பயிரிடாத விவசாயிகளைப் பொறுத்தவரையில், அவர்களுக்கு இருக்கிற குத்தகை பாக்கி அவ்வளவையும் ரத்து செய்வதோடு அவர்களின் குத்தகை இனி 75 : 25 அடிப்படையில் இருக்க வேண்டும் என்பதையும் அரசு உறுதி செய்ய வேண்டும். தற்போது அளிக்கப்படும் சலுகை ஏப்ரல் 15-ஆம் தேதியோடு முடிகிறது. நான் சொன்ன நிவாரணத்தை அளிப்பதற்கு கவர்னர் மூலம் அவசரச் சட்டம் கொண்டு வராமல் இதற்காக ஜுன் மாதத்தில் ஒரு தனியான சட்டமன்றத் தொடர்க் கூட்டத்தை ஏற்படுத்தி தெளிவான முறையில் ஒரு சட்டத்தைக் கொண்டு வர நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்த சட்ட முன்வடிவு புயலால் பாதிக்கப்பட்ட இடங்களில் உள்ள குத்தகைதாரர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பது பற்றியதாகும். இதைப் பொறுத்தவரையில், புயலால் பாதிக்கப்பட்ட இடங்களில் அரசே சரியான பாதுகாப்பை அளிக்கவில்லை என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகள் என்று அரசால் அறிவிக்கப்பட்டபோதே பாதிக்கப்பட்ட பல பகுதிகள் விடுபட்டுப் போயிருக்கின்றன. கன்னியாகுமரி மாவட்டத்தில் சில பகுதிகள் அவ்வாறு அறிவிக்கப்படாமல் விடுபட்டுப் போயின. பல்லாயிரக்கணக்கான நிலங்கள் தண்ணீரில் மூழ்கிவிட்டன. பல ஆயிரக்கணக்கான நிலங்களில் மண்மேடிட்டுவிட்டது. அரசுத் துறையிலிருந்து அதிகாரிகள் வந்து பார்க்கிற வரை, சுமார் 1 மாதம் 1½ மாதம் கழித்து அவர்கள் வந்து பார்க்கிற வரை, அந்த விவசாயி அதை அப்படியே வைத்திருக்காமல் தானும் தன்னுடைய மனைவியும், குழந்தையுமாகச் சேர்ந்து அந்த மணலை அப்புறப்படுத்தியிருக்கிறார். அப்படி மணலை ஒதுக்கிவிட்டு விவசாயிகள் விவசாயத்தைத் தொடங்கியிருக்கிறார்கள். அதிகாரிகள் 1½ மாதம் கழித்து வந்து பார்த்தபோது, அங்கே மணல்மேடு இல்லை என்ற காரணத்திற்காக இந்த நிலம் புயலால் பாதிக்கப்படவில்லை என்று சொல்லிவிட்டார்கள். புயலின்போது உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் பல இடங்களைப் பார்வையிட்டார்கள். அவர்களேகூட காரில் போக முடியாமல், பல இடங்களில் தண்ணீர் சூழ்ந்திருந்த காரணத்தால்,



1979 மார்ச் 15] [திரு. ம. சங்கரலிங்கம்]

இறங்கி நடந்துபோய் பல இடங்களைப் பார்க்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. ஆனால், அப்படிப்பட்ட இடங்களையெல்லாம் புயலால் பாதிக்கப்பட்ட இடங்கள் என்று பின்னாலே அரசு அதிகாரிகள் அறிவிக்கவில்லை. அப்படி அவர் சென்ற இடம் ஒன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் இறைச்சகுளம் என்ற ஊருக்குப் பக்கத்தில் இருக்கிறது. அந்த ஊர் விவசாயிகள், மணல்மேட்டை அகற்றி, அந்த நிலங்களை விவசாயத்திற்குக் கொண்டு வந்துவிட்டார்கள் என்ற காரணத்திற்காக, அங்கே வந்து பார்த்த அதிகாரிகள் அங்கே பாதிப்பு ஏற்படவில்லை என்று கூறிவிட்டார்கள். அதைப்போலவே தோவாளை தாலுக்காவில் திருப்பதிசாரம் என்ற இடத்தில் பல இடங்களில் மண்மேடிட்டு விட்டதன் காரணமாக விவசாயிகள் பெருமளவில் பாதிக்கப்பட்டார்கள். அங்கேயிருந்த மணலையெல்லாம் கட்டிட வேலைக்கு காண்ட்ராக்டர்கள் லாரியை வைத்து எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள். விவசாயிகள் ஏக்கர் ஒன்றுக்கு 1000 ரூபாய்க்கு மேல் செலவு செய்து அந்த நிலங்களை விவசாயத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். என்றாலும் அந்தப் பகுதி புயலால் பாதிக்கப்படவில்லை என்று ரெவின்யூ அதிகாரிகள் சொல்லி விட்டார்கள். விவசாயிகளுக்கு அரசு செய்ய வேண்டிய உதவியையும் செய்யவில்லை. பாதிக்கப்பட்ட பகுதிகளை உண்மையாகவும் சரியாகவும் அரசு நிர்ணயிக்கவும் இல்லை. ஆகவே இனிமேல் வருகிற காலங்களிலாவது இந்த குறைபாடுகள் போக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இவைகளையெல்லாம் சரியாகச் செய்யாமல் கொண்டு வரப்படும் தற்போதைய சட்ட முன்வடிவுகள் எல்லாம் பிரச்சாரத்திற்குத்தான் பயன்படுமே தவிர, வேறு எதற்கும் பயனில்லை. எதிர்காலத்தில் புயல், வெள்ளம், மழை என்று வந்து அதனால் நாட்டின் பகுதிகள் பாதிக்கப்படும்போது, பாதிக்கப்படும் பகுதிகளைப் பற்றிய எல்லாத் தகவல்களும் அந்தந்த மாவட்ட ஆட்சியருடைய அலுவலகத்திற்கு ஒரு வார காலத்திற்குள்ளாகவே வந்து சேரவேண்டும் என்று ஏற்பாடு செய்ய வேண்டும்.

அடுத்து, புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிலத் தீர்வையிலிருந்து, நிலவரியிலிருந்து, விதிவிலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டபோது அதையும் தர முடியாது என்று சொல்லிவிட்டார்கள். காரணம் கேட்டபோது இரண்டு போகமும் விளையாமல் இருந்தால்தான் வரியை ரத்து செய்ய முடியும் என்று கூறுகிறார்கள். இது வெள்ளைக்காரன் போட்ட சட்டம். வெள்ளைக்காரனை வெளியேற்றிய பிறகு, நம்முடைய மக்களுடைய கஷ்டம்

விடுபட்டுப் போயிருக்கின்றன என்று அவர்கள் மீண்டும் மீண்டும் சொல்வதனாலே, அவர் வற்புறுத்திக் கேட்பதை இந்த அரசு உணர்கிறது. நான் இங்கே உறுதி அளித்துக்கொள்கிறேன். புயலால், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு எல்லாம் நிவாரணம் கொடுத்து முடிந்துவிட்டது. நிவாரணம் எல்லாம் கொடுத்துவிட்டு, அந்தந்தப் பகுதிகளுக்கு நிரந்தரமான பணிகள் செய்வதிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறோம். அப்படி இருந்தாலும், எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இப்படி வற்புறுத்திச் சொல்வதனாலே, மீண்டும் அந்த இடங்களுக்குச் சென்று பார்க்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்கிறேன். மேலும் ஒன்றைச் சொன்னார்கள். இதனால் நிலச் சொந்தக்காரர்களுக்கு எந்தவித பாதகமும் இல்லை என்றும், உழுபவன் மிகவும் கஷ்டப்படுகிறான் என்றும் இடைத்தரகர்கள்தான் பலனடைகிறார்கள் என்றும் சொன்னார்கள். அந்த இடைத்தரகர்கள் கடுமையாக இருக்கிறார்கள் என்றும் சொன்னார்கள். இந்த நிலைமைகளை யெல்லாம் பார்த்து என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்வதற்கு இந்த அரசு கடமைப்பட்டிருக்கிறது. வெள்ளத்தாலோ, புயலாலோ பாதிக்கப்பட்டவர்களுக்கு எவ்வளவு நிவாரணம் அளிக்கப்படுகிறது என்பதைப்பற்றியெல்லாம் சொன்னார்கள். ஏதோ ஆங்கில ஏகாதிபத்திய காலத்திலே, 3 ஆயிரம் மைலுக்கு அப்பாலிருந்து வந்தவர்கள் வைத்த சட்டத்தின் பின்னாலேயே இன்றைக்கு நாம் போவதாகச் சொல்லும்போது, நான் வருத்தப்படுகிறேன். 30 ஆண்டுகளுக்கு முன்னாலேயே அவ்வாறு போயிருக்கிறோமே என்பது பற்றிதான் வருத்தம். இவைகளையெல்லாம் மாற்றி அமைக்க வேண்டும், சீர்திருத்த வேண்டும் என்ற அக்கறை இந்த அரசுக்கு இருக்கிறது. அதில் உறுப்பினர்களுடைய ஒத்துழைப்பு வேண்டும்.

இதில் நான் நீண்ட நேரம் பேசத் தேவையில்லை. ஏனென்றால் உறுப்பினர்கள் எல்லாம் இதை ஆதரித்திருக்கிறார்கள். ஒவ்வொருவருக்கும் எப்படி பதில் சொல்ல வேண்டும் என்று எண்ணத் தேவையில்லாத அளவுக்கு அனைவரும் பாராட்டியிருக்கிறார்கள்.

நில வரியை B.S.O. அடிப்படையிலே தள்ள வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் சொன்னார்கள். அந்த அடிப்படையிலே தள்ளிக் கொடுக்க முடியாது. இதைச் சொல்கிறபோது "அமைச்சர் 'கட் அண்டு டிரை' ஆகச் சொல்லிவிட்டார்" என்று நினைக்க வேண்டாம். அப்படி தள்ளிக்கொடுத்தால் யாருக்கும் உதவி வராது. இன்றைக்கு இருக்கிற Board's Standing Order படி யாருக்கும் உதவி வராது. ஆகவே,



அதையும் மாற்றியமைக்க வேண்டும் என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்வார்கள் என்று நான் எதிர்பார்த்தேன்.

Board's Standing Orders ஐப் பயன்படுத்திக் கொள்வதைப்பற்றிப் பார்க்கிற போது, வெள்ளைக்கார ஏகாதிபத்திய காலத்தில் வந்த "Board's Standing Orders" தான் இருக்கின்றன. அதிலே 2 அணாவுக்கும் அதற்குக் குறைவாகவும் இருதால்தான், வரியைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று இருக்கிறது. 2 அணாவுக்கும் அதற்குக் குறைவாகவும் என்று பார்த்தால், 'நார்மல் விளைச்சல்' என்னவென்றால், 1 மாவுக்கு 10 கலம். 12 அணாவுக்கு 10 கலம். 2 அணாவுக்கு 1¾ கலம். ஆனால் இன்றைக்கு எந்த நிலத்தை எடுத்துப் பார்த்தாலும், 1 மாவுக்கு 1¾ கலத்துக்குக் குறையாமல் வந்துவிடும். Board's Standing Orders படி பின்பற்ற வேண்டும் என்று வருவாய்த் துறை அதிகாரிகளுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் "2 கலம் விளைந்திருக்கிறது. 3 கலம் விளைந்திருக்கிறது; ஆகவே Board's Standing Orders படி இல்லை" என்று சொல்லிவிட முடியும். ஆனால் இன்றைக்கு இருக்கிற விவசாயிகளுக்கு அது போதாது என்கிற காரணத்தால் . . . . .

திரு. ஆ. நல்லசிவன் : அமைச்சர் அவர்கள் பேசும்போது, Board's Standing Orders பிரகாரம் செய்யப்படவேண்டும் என்று நான் சொன்னதாகச் சொன்னார்கள். அப்படியில்லை. அதற்கு மாறாக, புயலால் பாதிக்கப்பட்ட இடங்களிலே கூட, கர்ணம் சர்ட்டிபிகேட் அடிப்படையிலே வார நிவாரணம் அளிப்பதால்தான் இந்தக் கஷ்டம் என்று நான் சொன்னேன். புயலால் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு 30 சதவீதம் விளைச்சல் என்று கர்ணம் கொடுத்த சர்ட்டிபிகேட் அடிப்படையில், திருவாரூரிலே ஒரு கோர்ட்டில் 50 சதவீதம் வாரம் கட்ட வேண்டும் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. புயலால் பாதிக்கப்பட்ட இடங்களில் கர்ணத்தின் சர்ட்டிபிகேட் இல்லாமல், நிவாரணம் அளிக்க வேண்டும் என்று கூறினேன் என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(பிற்பகல் 6-00)

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, Board's Standing Orders இல்லாமல் இன்றைக்கு விவசாயிகளுக்கு ஒரு நன்மையை விளைவிக்க வேண்டும் என்று இந்த அரசு எண்ணிக்கொண்டிருக்கிறது. கர்ணம் சர்டிபிகேட்டை வைத்துக்கொண்டு இதையெல்லாப்

களைத் தெரிந்த பிரதிநிதிகளைக் கொண்ட ஜனநாயக ஆட்சி நடைபெறும் போதும், சட்டமன்றங்களில் நம்முடைய மக்கள் பிரதிநிதிகள் இருந்து நாட்டைப் பரிபாலிக்கும்போதும் இன்னும் வெள்ளைக்காரனுடைய சட்டத்தைக் காட்டிக் கொண்டிருப்போமானால், இந்த நாட்டில் தேர்தல் முறையில் ஜனநாயக முறையில் அமைச்சர்கள் தேர்ந்தெடுக்கப்படுவது எதற்கு என்று

(பிற்பகல் 5-50)

நான் கேட்க வேண்டியவனாக இருக்கிறேன். நெல் விவசாயம் செய்பவன் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறான். மழையால் பாதிக்கப்பட்ட நிலத்தில் ஒரு நிலத்திற்கு ஆயிரம் ரூபாய் செலவு செய்வதற்கு பதிலாக இப்போது இரண்டாயிரம் ரூபாய் செலவு செய்கிறான். விளைச்சலும் இல்லை. ஒருபோகம் பாதிக்கப்பட்டால் கூட குத்தகை கிடையாது என்ற ஒரு முறையைக் கொண்டு வரவேண்டும். புயலால் பாதிக்கப்பட்ட நிலங்கள் எது எது என்பதை மாவட்ட வாரியாகப் பரிசீலனை செய்து, பகிரங்கமாக அறிவித்து, ஒரு குறிப்பிட்ட நாள் தெரிவித்து, விவசாயிகள் யாராவது அதில் தாங்கள் சேர்க்கப்படவில்லை என்று சொல்வதற்கு ஒரு வாய்ப்பும் அளித்து, அதிகாரிகள், மக்கள் பிரதிநிதிகள் கொண்ட ஒரு கமிட்டி மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்ட அந்தப் பட்டியலை வைத்துக்கொண்டு, புயலால் பாதிக்கப்பட்ட நிலங்களுக்கும் குத்தகையை ரத்து செய்ய வேண்டும், அரசின் தீர்வையையும் ரத்து செய்ய வேண்டும். இந்த அளவுக்கு நன்மைகள் இல்லாவிட்டாலும் கூட, நன்மை செய்ய வேண்டும் என்ற நல்லெண்ணத்தோடு அடியெடுத்து வைத்திருக்கின்ற, கொண்டுவரப்பட்டிருக்கின்ற, இந்த இரண்டு சட்ட முன்வடிவுகளையும் வரவேற்று, நான் குறிப்பிட்ட நல்ல கொள்கைகளை ஏற்று அரசு முழுமையான ஒரு சட்ட முன்வடிவை விரைவில் கொண்டு வரவேண்டும் என்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

* **மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவுகள் இரண்டு பற்றியும் ஒன்றாகப் பேச அனுமதி பெற்றுப் பேசுகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேர்களும் பேசி முடித்து விட்டு 'வரவேற்கிறேன்' என்று சொல்வதற்குப் பதிலாக, பேசி முடித்து விட்ட பின்பு கடைசியிலே சொல்வதற்கு மறந்து போய்விடும் என்பதாலே, எடுத்த எடுப்பிலேயே மிக அழுத்தந் திருத்தமாகச் சொல்ல வேண்டும் என்ற முறையில் வரவேற்றார்கள். அதற்காக என்னுடைய நன்றியை அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அரசின் சார்பிலேயும் நன்றியைத் தெரிவித்துக்



கொள்கிறேன். இப்படிப்பட்ட நல்ல சட்டங்களை நாங்கள் கொண்டு வரு-வதற்கு எங்களையெல்லாம் உற்சாகப்படுத்தத்தான் உறுப்பினர்கள் இப்படிச் சொல்கிறார்கள் என்று நான் எடுத்துக்கொள்கிறேன். இதைப் போல நல்ல சட்டங்கள் இன்னும் கொண்டுவர வேண்டும் என்ற ஆசை இருக்கிறபோது, இதை உறுப்பினர்கள் வரவேற்கிறபோது, உண்மையிலேயே எங்களுடைய உற்சாகம் அதிகமாகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு இருக்கிற நிலையில் ஏன் இப்படி காலதாமதம் ஆகிக்கொண்டிருக்கிறது என்பதை உறுப்பினர்கள் அறியாமல் இல்லை. சொல்கிறபோது சொல்கிறார்கள். இன்றைக்கு இருக்கிற நிலைமையில், சட்டங்கள் கொண்டு வரும்போது, மக்களுக்கு நன்மைகள் செய்ய வேண்டும், அதனால் யாருக்கும் கெடுதல் வரக்கூடாது என்று யோசிக்கின்றபோது, காலதாமதம் ஆகிறது. அப்படி காலதாமதம் ஆகிறபோது, குத்தகையைக் கட்ட வேண்டியவர்கள் கட்ட வேண்டும் என்று சொல்ல வேண்டிய நிலை ஏற்பட்டால், வட்டி கேட்கப் போவதில்லை என்பது நிச்சயம் எல்லோருக்கும் தெரியும். ஆனாலும் குத்தகையைக் கட்டப் போகிறார்களா, எவ்வளவு கட்டப் போகிறார்கள், அல்லது எவ்வளவு தள்ளிக்கொடுக்கப்போகிறார்கள் என்பதெல்லாம் முன்னாலே சொல்ல முடியாது என்பது உறுப்பினர்களுக்குத் தெரியும். உறுப்பினர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன், வருகிற சட்டம் எல்லோராலும் ஏற்றுக்கொள்வதாக, எப்படி இன்று உறுப்பினர்கள் வரவேற்றார்களோ, அப்படிப்பட்ட வரவேற்பை இந்த அரசு மீண்டும் பெறும் என்ற உறுதியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே பல விஷயங்களைச் சொன்னார்கள். முதலிலே, திரு. நல்லசிவன் அவர்கள் 4 லட்சம் பேர் குத்தகைதாரர்கள் பதிவானவர்கள் இருக்கிறார்கள், 4 லட்சம் பேர்கள் விடுபட்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். திரு. இராமமூர்த்தி அவர்கள் சொல்லும்போது அந்த எண்ணிக்கை குறைந்து கொண்டே வருகிறது என்று சொன்னார்கள். திரு. மாணிக்கம் அவர்கள் சொல்கிறபோது, இனிமேல் குத்தகைதாரர் பெயரைப் பதிய வைப்பது மிகக் கடினம் என்று சொன்னார்கள். அதற்காக ஒரு இலகுவான வழியைக் கண்டுபிடித்து பதிவு செய்ய வேண்டும் என்றெல்லாம் சொன்னார்கள். நம்முடைய மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இதை நன்றாக வரவேற்றார்கள். அவர்கள் பல அரிய யோசனைகளைச் சொன்னார்கள், கன்னியாகுமரி மாவட்டத்தில் புயலால் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு [illegible] புயலால் பாதிக்கப்பட்ட இடங்கள்

எப்படி நடைமுறைப்படுத்துவது என்று அரசு நிச்சயமாகக் கவனிக்கும். கணக்குப்பிள்ளைகள், மணியக்காரர்கள் யாருக்கு அத்தகைய சர்ட்டிபிகேட்டுகளைக் கொடுப்பார்கள், யாருக்குக் கொடுக்க மாட்டார்கள் என்பது எங்கள் எல்லோருக்கும் தெரியும். சென்ற ஆண்டு, வெள்ளத்தால், புயலால் பாதிப்பு ஏற்பட்டபோது, கர்ணம், மணியக்காரர் ஆகியவர்களிடத்திலே இருந்து சர்டிபிகேட் வாங்காமலே, பாதிக்கப்பட்ட பகுதியில் உள்ளவர்கள் எல்லோருக்கும், மாவட்ட ஆட்சித் தலைவருடைய அறிக்கையை வைத்துக்கொண்டு, இரண்டு மூன்று மாவட்டங்களில் முழுமையாகவும், அதாவது மதுரையில் சில பகுதிகளிலும், தஞ்சை மாவட்டத்தில் வறக்குறைய முழுப் பகுதியிலும், புதுக்கோட்டையில் ஒரு பகுதியிலும் திருச்சியில் ஒரு பகுதியிலும் உள்ளவர்களுக்கு நிவாரணம் கொடுக்கப்பட்டது. தென்னார்க்காடு மாவட்டத்திலே ஒரு பகுதிக்கும் கொடுக்கப்பட்டது. அப்போது நான் மந்திரியாக இல்லை என்பது எல்லோருக்கும் தெரியும். அப்போதிருந்த மந்திரியே இதைச் செய்து கொடுத்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இந்த மாதிரி கர்ணம், மணியக்காரர் அவர்களுடைய சான்றிதழ்களை வைத்துக் கொண்டு செய்ய வேண்டுமா என்ற நிலைகளைப் பற்றியெல்லாம் அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது. நான் ஒரு உறுதியை அளிக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்களுக்கு இந்த விஷயத்தில் உள்ள சங்கடங்களைப் போக்கி நல்ல முறையிலே செய்ய வேண்டும் என்று எந்த அளவுக்கு ஆர்வம் இருக்கிறதோ, எந்த அளவுக்கு ஆழமாக அவர்கள் உணர்கிறார்களோ, அதைவிட அதிகமான அளவுக்கு என்று சொல்லாவிட்டாலும், அதற்குக் குறையாமல் இந்த அரசும் உணர்கிறது என்று சொல்லி, விரைவிலே இதற்கான ஒரு நல்ல சட்ட முன்வடிவு இங்கே கொண்டு வரப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். "கணவனை இழந்த கைம்பெண்கள் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட அன்புச் சகோதரிகளுக்கு ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் என்று நிலம் இருக்கிறது. அவர்களுடைய நிலைகளையும் நீங்கள் பாருங்கள்" என்று சொன்னார்கள். நாங்கள் எல்லாம் கிராமங்களுக்குப் போகிறபோது, அதிக நிலம் உள்ளவர்களையும் பார்க்கிறோம். இப்படி ஒரு ஏக்கர், அரை ஏக்கர், இரண்டு ஏக்கர் என்று வைத்துக்கொண்டு சாகுபடி செய்ய முடியாமல் குத்தகைக்கு விட்டுக் கொண்டிருப்பவர்களையும் பார்க்கிறோம். நாங்கள் அவர்களையும் பாதுகாக்க வேண்டும், இவர்களையும் பாதுகாக்க வேண்டும். இவைகள்தான் எங்களுக்கு இருக்கிற சங்கடம். அடுத்து, ஒரு சட்ட முன்



வடிவைக் கொண்டு வருகிறபோது எல்லோரையும் பாதுகாத்து, உறுப்பினர் ஏற்றுக்கொள்ளும் அளவுக்கும், வரவேற்கும் அளவுக்கும் ஒரு நல்ல சட்டத்தைக் கொண்டு வந்து இங்கே நிறைவேற்றுவோம் என்று சொல்லி, இந்தச் சட்ட முன்வடிவை இப்போது நிறைவேற்றும்படி அரசின் சார்பாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாது காத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8/1979) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்டமுன்வடிவு, பிரிவுவாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3 ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்** : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாது காத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8/1979) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாது காத்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8/1979) நிறைவேற்றப்பட வேண்டும்."



தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**(2) தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பயிரிடும் குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரண) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/1979).**

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மேலவைத் தலைவர் அவர்களே,

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979-ஆம் ஆண்டு புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பயிரிடும் குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரண) திருத்தச் சட்டமுன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/1979) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் "

என்று முன் மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பயிரிடும் குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரண) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/1979) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் ".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்டமுன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

---

@ 404 ஆம் பக்கத்தில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.





" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979-ஆம் ஆண்டு புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பயிரிடும் குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரண) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/1979) நிறைவேற்றப்பட வேண்டும்."

என்று முன் மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பயிரிடும் குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரண) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/1979) நிறைவேற்றப்பட வேண்டும் "

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**(3) தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலம் (உச்சவரம்பு கட்டுதலும், முறைப்படுத்துதலும்) குறித்த திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 10/1979).**

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலம் (உச்சவரம்பு கட்டுதலும், முறைப்படுத்துதலும்) குறித்த திருத்தச் சட்டமுன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 10/1979) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

என்று முன் மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** முன்மொழியப்பட்ட தீர்மானம்—

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலம் (உச்சவரம்பு கட்டுதலும், முறைப்படுத்துதலும்) குறித்த திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் [illegible]) [illegible] வேண்டும்."

---

@ [illegible] ஆம் பக்கத்தில் இணைப்பு V ஆக அச்சிடப்பட்டுள்ளது.

* Thiru A. R. DAMODARAN: Hon. Chairman, Sir, this Amendment seeks to alter certain provisions of section 20 of the original Act—the Tamil Nadu Urban Land (Ceiling and Regulation) Act of 1978 which came into force on the 17th May 1978.

(மாற்றுத் தலைவர் திரு. ச. எஸ். வெங்கடேசன் தலைமை)

(பிற்பகல் 6-10)

I was very much intrigued when this amendment came, because, although we had heard rumours, we did not know the exact purpose for which this amendment was being brought. I would like to refer to the old Act so that the hon. Members may have a chance of appreciating the implication of the new Amendment that has been brought. Under the old Act—I mean Act 24 of 1978—if any public, charitable or religious trust wanted to dispose of excess land, as defined under that section, an application would have to be made to the competent authority. This was for sale of land. No other thing was contemplated under the old provisions. According to clauses (b), (c), (d), (e) and (f) of sub-section (3) of section 20, it was mentioned that if the competent authority felt that permission need not be granted, it could exercise within 120 days the option of purchasing the said land or the said vacant land in accordance with the Land Acquisition Act of 1894 and the procedure for acquisition is also mentioned. I remember this because under the Central Act of 1976, I was myself a victim of section 27 of the Urban Land Ceiling Act in Pondicherry State where the Central Act was in force. I would like to explain what happened so that the hon. Members may have a chance of understanding how section 27 of the Central Act operated. I had a building in Pondicherry which I wanted to sell and I came to an agreement with a certain party and a price was offered by the party. Before I could register it, I had to apply to the Urban Land Authority for permission to sell this property to the person who was going to buy it. I made the application after getting Income-tax Clearance Certificate which was one of the provisions to be complied with before you could apply for permission. I made an application to the Urban Land Authority for permission to sell that property. Within 60 days, which is the provision in the Central Act, the Competent Authority wrote to me saying that he desired to exercise the option of purchasing that property for a public purpose. After some protracted correspondence, the price which the purchaser had offered, was accepted by the Competent Authority





as the market value under the Land Acquisition Act and a notice was sent to me by the Government of Pondicherry stating that they proposed to acquire the property at the price at which I had offered to sell it to a third party. I accepted the offer because I did not want to make a long-drawn out court process over it and also because I was fairly sure that the next Finance Minister would not continue the provision of Capital Gains Tax exemption. In those circumstances, I decided that discretion was the better part of valour and concluded the transaction with the Pondicherry Government which purchased the property at the price for which I had offered to sell it to another party. Now, Sir, I do not understand why, because of a certain transaction that was reported, the competent authority could not exercise the privilege of acquiring the property or vacant land according to this section for the price that the Vendor wanted to sell to another purchaser. Of course, there is a snag. I do not know whether in this particular case which the Government have in mind anything else has taken place. I would like the Government to explain to the House what particular transaction that had taken place had resulted in bringing in this Amendment within 9 months of the passing of the original Act. In fairness to the Members of this House, the Government could have come out with the information as to what had happened necessitating this amendment and then we would also be in the picture and we would have known what had happened. In the absence of such information, I can only assume things. I am, therefore, surprised that a Competent Authority did not exercise the privilege of purchasing that vacant land within 120 days, when they would have to purchase the land under the Land Acquisition Act. But since the price had been indicated by the purchaser, that price could have been fixed as market value under the Land Acquisition Act and that was my understanding of the law. Anyhow that does not seem to have happened and something else seems to have happened in between and we can only read between the lines. Either the Competent Authority did not exercise his discretion within 120 days or something else has happened, with the result that this Government felt that this section should be amended in the vein in which they have brought forth the amendment. I have dealt with the provisions of the old Act and I would now like to explain to the Members the implications of the new amendment. According to the new amendment, any charitable institution, religious institution or public trust need not make any application to the Government and if the Government feel that the said excess land ceased to be

**(2) தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பயிரிடும் குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரண) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/1979).**

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** மேலவைத் தலைவர் அவர்களே,

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979-ஆம் ஆண்டு புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பயிரிடும் குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரண) திருத்தச் சட்டமுன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/1979) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் "

என்று முன் மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை—

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பயிரிடும் குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரண) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/1979) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் ".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்டமுன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

---

@ 404 ஆம் பக்கத்தில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.



" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979-ஆம் ஆண்டு புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பயிரிடும் குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரண) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/1979) நிறைவேற்றப்பட வேண்டும்."

என்று முன் மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை—

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பயிரிடும் குத்தகைதாரர்கள், (தற்காலிக நிவாரண) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/1979) நிறைவேற்றப்பட வேண்டும் "

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**(3) தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலம் (உச்சவரம்பு கட்டுதலும், முறைப்படுத்துதலும்) குறித்த திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 10/1979).**

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலம் (உச்சவரம்பு கட்டுதலும், முறைப்படுத்துதலும்) குறித்த திருத்தச் சட்டமுன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 10/1979) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் "

என்று முன் மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** முன்மொழியப்பட்ட தீர்மானம்—

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலம் (உச்சவரம்பு கட்டுதலும், முறைப்படுத்துதலும்) குறித்த திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 10/1979) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் "

---

@ 405-406 ஆம் பக்கங்களில் இணைப்பு V ஆக அச்சிடப்பட்டுள்ளது.

required and used' for any public charitable purpose, they can take action. The phrase 'ceases to be required and used' is very vague. No mention has been made as to who is to decide whether a vacant land ceases to be required and used for the public trust. Herein lies the first snag. No application is required and the Government may *suo motu* raise the question as in the case of the Loyola College grounds. For example, they may say, 'You have got 40 acres of land which ostensibly is not used for any educational purposes'. They may also say, 'We require it' or 'It is felt that you do not require it for this particular purpose and, therefore, we propose, under a particular section, to acquire 5 acres or 10 acres of your land'. Not only that. According to the amendment that is now being moved, the compensation payable for the land has been drastically altered. According to the old provision, you have to pay the market value according to the Land Acquisition Act of 1894. According to the new provision, the 'value' or the 'amount' or the 'compensation' for the value of land taken over is only according to the provisions of the Urban Land Ceiling Act, which is Rs. 15 per square metre in the case of urban agglomerations under Schedule III, about Rs. 25 or Rs. 30 in the case of urban agglomerations in Schedule II, and Rs. 50 in the case of urban agglomerations in Schedule I, which is the City of Madras. In other words, according to the definition in the Act—I will not go into intricacies—the excess land in the City of Madras can today be acquired by the Government at a nominal 'price' or 'amount' of Rs. 22,000 to Rs. 23,000 per acre as against a market value of Rs. 5,40,000 or Rs. 6 lakhs which seems to be the current market value in the City of Madras. If this is not expropriation, I do not know what it is. In the case of private individuals, the Hon. Minister may possibly say, with some justification, that this is an egalitarian measure. He may say, 'We do not want people to enjoy the possession of vast areas of vacant land in a crowded metropolitan city like Madras and we think that it should be used for public purposes'. In that case, there would be some justification, from the egalitarian point of view. But we have always taken a different point of view where charitable trusts, educational institutions, religious trusts and also institutions coming under the Wakfs Act are concerned. I feel that the provisions newly introduced are of such a serious nature that various other articles under our Constitution are likely to be taken recourse to by these charitable trusts when land is sought to be taken over by the Government in this fashion. Not only that. Government have stated

1979 மார்ச் 15] [Thiru A. R. Damodaran]

that this amendment will now take effect from the date of the original Act, which is the 17th May 1978, thereby clearly expressing that all transactions and agreements, sales, etc. which have taken place between the 17th of March and the date on which we are going to pass this Bill, that is, 1st February, will be negatived. Government will have the option of setting aside all these transactions that have taken place and, if necessary, they may exercise their option under the new amendment. I think we are throwing open the flood-gates of litigation in passing a measure with such retrospective effect. Not only that. I take very strong exception to the fact that we should seek to negative the benefits that have been conferred after a great deal of thought. When we had the Urban Land Ceiling Act of 1978, we passed it only in May 1978. I would like the Hon. Minister to clearly explain before this House what were the extraordinary circumstances that had resulted in Government changing their mind within six months of passing the parent Act, and also whether this provision will not affect the vacant lands belonging to a number of educational institutions. There is no point in the Hon. Minister saying that Government will act in good faith. All enactments of Government will always say that they will act in good faith. There is a specific clause in every Act which says that no officer of the Government shall be prosecuted, etc. because every act that he does under the Act is assumed to be done in good faith. But in such measures, we have to be cautious because serious interferences with the rights and privileges of a certain class of charitable institutions are involved.

(மாற்றுத்தலைவர் திரு. க. எம். வெங்கடேசன் தலைமை)

(பிற்பகல் 6-20)

Let not my Friends on this side of the House think that it will apply to only isolated religious trusts. They may have their prejudices against religious institutions and Members have not been less vociferous in suggesting that lands of temples should be taken over so that the public might enjoy them. I do not subscribe to that view. Let them not think that only the religious trusts will be affected; it will apply to every charitable trust in Madras City, perhaps even to the trusts formed by political parties. What will happen if the Government *suo motu* decide about the excess land. It is not clear from the amendment as to who is to decide whether a specific excess land ceases to be required and used for charitable purposes. This is where the real snag lies. Under the old Act, the Govenment can determine it, if I made an applicaticn under a

particular provision; and the Government would sit up and take notice and say that it is not being used or it is being used for the particular purpose, and exercise their option. Now the whole thing is vague and this is one point on which I seek a specific clarilcation from the Hon. Minister. As I said, I do not think that this measure is in the public interest. It is a gross interference with the rights, liberties and privileges of charitable institutions, religious institutions, Muslim (Wakf) institutions and it may attract the provisions of Article 30 of the Constitution in that in the case of institutions which are empowered to establish and administer educational institutions of their choice, the establishment and administration will also mean the possession of property required for such purposes. I, therefore, feel that due consideration may be given by the Government to this point of view and I would like them to explain in very clear and categorical terms the reasons that impelled them to bring in this amendment within six months after the passing of the parent Act. When they came to power, it took them one year to evolve an Act—the Urban Land Ceiling Act-in-the place of the Act of 1976 and they must have thought a great deal about it. When they brought this Act as a Bill, we pleaded that it might be referred to a Select Committee. Ever since they assumed power, this Government have no belief at all in the principle of sending any Bill to any Select Committee; they have adopted it only on two occasions, after they came to power. It was in the case of the Water and Sewerage Board Act, which was an inconsequential Act, so far as we are concerned; and the other case was in respect of the Agricultural Income-tax Bill which has been referred to a Select Committee. I wish to caution them that however wise the bureaucrats in the Law Ministry may be, it is never safe for any popular Ministry to assume, at least when they bring in major enactments like the Urban Land Ceiling Act, that all the wisdom is concentrated in the corridors of the Secretariat. When we move resolutions requesting that a particular Bill be referred to a Select Committee, they think that it is a political point of view. This is not so, in so far as I am concerned. I am honestly of the opinion, because I have served on some Select Committees, that a great deal of clarification is obtained in Select Committees, we are able to discuss with members of the legal profession and with members of the public; each and every clause is taken up, the Members of the Board and the Secretaries of the Department's reply to various doubts which we have and this procedure can never be followed in the House, especially when they



present the Bill, as the Hon. the Law Minister did the other day. After the Bill is passed in the other House at 1 O' Clock, the Bill is considered in the Council at 4 O'Clock, it is passed at 4.30 p.m. and the signature of the Governor is obtained at 5 O'Clock.

* The Hon. Thiru K. NARAYANASWAMY: I respectfully submit to this House that I heard the other day-and the Speaker Thiru K. S. Hegde was mentioning-that after the Bills were passed at one O' Clock in the Lok Sabha, at before 6-30 p.m. least half a dozen Bills were passed in the Rajya Sabha.

THIRU A. R. DAMODARAN: That is no compliment to the Rajya Sabha, Sir, and I do not wish the compliment to be repeated as far as the Upper House of this Legislature is concerned. I take legitimate pride in the fact that perhaps we devote more attention and more mature attention to Bills than the hon. Members of the Rajya Sabha. I do not mean to cast any reflection. I only want to mention that if an amendment is brought about like this, the Government do not give us time to study the original Act. This sort of thing should not happen where an important legislation is concerned. Bills should be considered after a certain amount of mature deliberation. I am not referring to Ordinances where the dates are altered. Numerous Bills have come where, as the Hon. the Law Minister said, there are very minor alterations of postponing elections from January 15th to June 15th, to the next January 15th and to the next June. They are very minor according to the conception of Government. But these are major structural alterations. On this will depend whether, for an acre of land taken over, Government will pay Rs. 22,000 or Rs. 5,40,000. Does it not affect the interests of Trusts and charitable institutions? Therefore although I have not made any formal motion in this regard and although I realise that with the Assembly passing the Bill it may be difficult for the Hon. the Law Minister, I would plead that at least he may note this for future guidance.

Thank you.

திரு. க. இராமமூர்த்தி: மாற்றுத் தலைவரவர்களே, நகர்ப்புற நில உச்ச வரம்பு திருத்த மசோதாவைப் பொறுத்தவரையில், கொள்கை அளவிலே இதை எதிர்த்து, ஒன்றும் பேச முடியவில்லை என்றாலும், இதன் நோக்கத்தையும், செயல்படுகிற விதத்தையும் பாராட்டுகிற அளவிலே என்னால் ஒரு வார்த்தை கூடச் சொல்ல முடியவில்லையே என்பதற்காக வருத்தப்படுகிறேன். காரணம், ஒரு திட்டவட்டமான கொள்கையின் அடிப்படையிலே அரசு இயங்காததன் விளைவுதான் இந்த மசோதா என்று நான் கருதுகிறேன். நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டத்தைப் பொறுத்தவரை Religious Trusts, மத சார்பு அறக்கட்டளைகள், தர்மஸ்தாபன அறக் கட்டளைகள் போன்றவைகள் தங்களிடம் இருக்கிற, தங்களுக்கு வேண்டாத அல்லது அதிகமாக இருக்கிற நிலம் எவ்வளவு என்பதை அரசுக்குத் தெரிவித்தால், அதை அரசு ஏற்றுக் கொள்ளும் என்ற அளவிலே அமைந்திருக்கிறது. யாருக்கு அதிகமாக இருக்கின்றது என்பதைத் தெரிவிக்கின்ற பொறுப்பை யார் நிலத்தைக் கொடுக்க வேண்டுமென்று நினைக்கிறார்களோ அவர்களிடமே விட்டுவிடுவதன் மூலமாக, உண்மையாக எங்கே அதிகமாக நிலமிருக்கிறது என்பதை அரசு தெரிந்து கொள்கிற வாய்ப்பு இந்த மசோதாவில் இல்லை. ஒருவேளை அப்படிப் பட்ட மசோதா பின்னால் வரலாம். இந்த மசோதா எந்தக் காரணத்திற்காக வந்திருக்கிறது என்ற சந்தேகத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் தெரிவித்தார்கள். நான் சில மாதங்களுக்கு முன்பு எனக்கு நெருங்கிய தலைவர் மூப்பனார் வீட்டு திருமண நிகழ்ச்சிக்காக மண்டபம் தேடி அலைந்தபோது, 'ஆபட்ஸ்பரி' கிடைக்ுமா என்று கேட்க, அங்கே போனபோது 'இன்னும் கொஞ்ச நாட்களுக்குத்தான் இங்கே திருமணம் நடக்கும், இதை விற்றுவிடுவதாக டிரஸ்டியினர் முடிவு செய்திருக்கிறார்கள்' என்று சொன்னார்கள். 'யாருக்குக் கொடுக்கப் போகிறார்கள்?' என்று கேட்டேன். 'இதை ஒரு பாங்குக்குக் கொடுப்பதாக அரசுக்கு எழுதினோம். அரசு எங்களுக்கே வேண்டுமென்று கேட்டிருக்கிறது. அது பற்றிக் கடிதப் போக்குவரத்தும், பேச்சு வார்த்தையும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது' என்று அறிவித்தார்கள். ஆகவே இந்த மசோதா அறிவிக்கப்பட்ட உடனே, இது எதற்காக வந்திருக்கிறது என்பதை என்னால் புரிந்துகொள்ள முடிந்தது. ஆனால் குறிப்பிட்ட காரணத்திற்காக ஒரு மசோதாவைக் கொண்டு வருவது என்பது ஒரு அரசுக்கு நல்லதல்ல. அதோடு மட்டுமல்ல, ஏற்கெனவே முழுமையான நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டத்தைக் கொண்டு வந்தபோது, இதைப்பற்றிப் பூரணமாக, முழுமையாகச் [illegible]



வேற்றும்போது, இதையெல்லாம் உள்ளடக்க அரசு கவனிக்கத் தவறிவிட்டது என்பதையும், சூழ்நிலைகளுக்கு ஏற்ப சட்டத்தை அமைக்கவில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அரசைப் பொறுத்தவரையில், இதுதான் அரசினுடைய திட்டவட்டமான பொருளாதாரக் கொள்கை என்ற அடிப்படையிலே இயங்காததன் விளைவுதான் இந்தத் திருத்தச் சட்டம் என்பதை நான் மெத்த வேதனையோடு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம், வசதி படைத்தவர்கள் சென்னையிலே மீண்டும் அவர்களுடைய நில ஆதிக்கத்தைத் தொடர்ந்து வைத்துக்கொள்கிற வகையிலேதான் அ.தி.மு.க. அரசின் நில உச்சவரம்புத் திருத்தச் சட்டம் அமைந்திருக்கிறது. சில நாட்களுக்கு முன்பு ஒரு கேள்வியை அவையிலே கேட்டேன். குறிப்பிட்ட எந்தத் தொழிலிலும் எனக்குக் கோபமோ அல்லது தொடர்போ இல்லையென்றாலும் எல்லோருக்கும் தெரிந்திருக்கிறது என்பதால் கேட்டேன். நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டத்தின் விளைவாக ஸ்டூடியோக்களின் வசமுள்ள உபரி நிலத்தில் எவ்வளவு கையகப்படுத்த முடியுமென்று கேட்டபோது, அதுபற்றி அரசுக்கு எந்த விதமான நோக்கமும் இல்லை, அதற்குத் தகுந்த அளவிலே சட்டம் கொண்டு வர எண்ணமில்லை என்று வருவாய்த் துறை அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். எதற்காகச் சொல்கிறேன் என்றால், அதிகப்படியாக நகர்ப்புறங்களில் நிலத்தை வைத்திருப்பவர்களிடமிருந்து நிலத்தைக் கையகப்படுத்த கொள்கை அடிப்படையிலே அரசு இயங்கவில்லை என்பதால்தான். கோவில்கள் அல்லது வேறு ஸ்தாபனங்களுக்குச் சொந்தமான நிலங்களைப் பொறுத்தவரையில், எப்படி கையகப்படுத்தப் போகிறோம் என்பதைப் பார்க்கும்போது யார் யார், எப்படி எப்படி கொடுக்க முடியுமோ அந்த அளவிற்கு வளைந்து கொடுப்பதாக இந்த மசோதா இருக்கிறது. யார் வேண்டாமென்று நினைக்கிறார்களோ அவர்கள் தெரிவிக்காமலிருக்கலாம். அரசு யாரையாவது நியமித்து, அவர்களிடம் அதிகமாக இருக்கிறதா, அவர்களுடைய தேவைக்கு அதிகமாக இருக்கிறதா என்பதை முடிவு செய்யலாம். அதற்குப் பிறகு விலையை நிர்ணயிக்கும் என்ற நிலைமை வரும்போது, இதிலே பேச்சு வார்த்தைகள் எல்லாம் நடக்கும். நான் இந்த அரசின்மீது குறை சொல்லவில்லை. எந்த அரசு வந்தாலும், இந்தச் சட்டத்தின்கீழ் இயங்கும்போது, இதற்குள்ளே புகுந்து வேறு பேரங்களைச் செய்ய முடியும் என்ற நிலை உருவாகும். மேலும் இந்த முடிவுகளை ஏற்க முடியாதென்று நீதி மன்றங்களுக்குச் செல்லும் நிலை, அதன் விளைவாக இது பல ஆண்டுகள் இழுத்தடிக்கப்படும் நிலை, அதன் விளைவாக இது பல ஆண்டுகள் இழுத்தடிக்கப்படும் நிலை ஆகியவை உருவாகும். எனவே எந்த நோக்கத்திற்காகக் கொண்டு வரப்

வேகமாக, சமுதாயச் சீர்திருத்த எண்ணங்களின் அடிப்படையிலே இப்படிப் பட்ட சட்டங்களை இயற்றி, வேகமாக அரசு செயல்படுகிறது என்று பெயர் வாங்குவதற்குப் பயன்படுமே தவிர, உண்மையில் நோக்கம் என்று பார்க்கிற போது, அதனைத் தோற்கடிக்கும் வகையிலேதான் இந்தச் சட்டம் அமைந்திருக் கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கேற்ற வகையில் புதிய

(பிற்பகல் 6-30)

சட்டங்களை இந்த அரசு கொண்டு வரவில்லை என்பதை மெத்த வேதனை யோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

கையகப்படுத்துகின்ற நிலங்களுக்கு (Compensation) நஷ்ட ஈடு தருவதைப் பொறுத்தவரை, நான் ஒன்றைக் கேட்டுக்கொள்ள விரும்பு கிறேன். கிராமப்புறங்களில் விவசாய நிலங்களை நாம் கையகப்படுத்து கின்றோம். அதற்கு முன்னதாக அவர்களுக்கு அவர்களுடைய நிலத்திற்கு ஈடாக மார்க்கெட் விலை கொடுக்க வேண்டுமென்று சொல்கின்றபோது, "நாங்கள் தானே மின்சார வசதி கொண்டு வந்தோம், நாங்கள்தானே நீர்ப் பாசன வசதி செய்து தந்தோம், எங்களுடைய திட்டங்களால் தானே உங்க ளுடைய நிலத்திற்கு மதிப்பும் மரியாதையும் அதிகமாயிற்று" என்று அரசு சொல்கிறது. சென்னையிலே, நகர்ப்புறத்திலே இருக்கிற நிலத்துக்கு எதனாலே விலை ஏற்றமாக இருக்கிறது? கோடம்பாக்கத்தில் மற்றும் அதைச் சுற்றியும் இருக்கிற பகுதி, அதேபோல மாம்பலம் மற்றும் அதைச் சுற்றியிருக்கிற பகுதி இவற்றுக்கெல்லாம் நான் முதன் முதலாக சென்னைக்கு வந்த 1945-46 ஆம் ஆண்டிலே என்ன மதிப்பு இருந்தது, இன்றைக்கு என்ன மதிப்பு இருக்கிறது என்பதை தயவுசெய்து எண்ணிப்பார்க்க வேண்டும். அன்றைக்கு அதற்கு இருந்த விலை என்ன? இன்றைக்கு அதற்கு விலை என்ன? அரசின் நடவடிக்கைகள் எந்த அளவுக்கு விலை உயர்வுக்கு, மதிப்பு உயர்வுக்குக் காரணம் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். நகரின் வளர்ச்சி, வளர்ச்சிக்கு அரசு செலவழித்திருக்கிற பணம், அதனுடைய திட்டங் கள் ஆகியவை காரணமாக விலை ஏறிற்று. அதை மனதிலே வைத்துக்கொண்டு நஷ்ட ஈடு தருகின்ற நிலை வருகின்றபொழுது, இங்கே ஒரு விலை கொடுக்கி றார்கள். விவசாய நிலத்தைக் கையகப்படுத்துகிறபொழுது, ஒரு விலை கொடுக்கிறார்கள். வெஸ்டட் இன்டரஸ்ட் Vested interst என்று சொல்லுவார்களே அந்த முறையில் பணம் படைத்தவர்களுக்கும் செல்வாக்கு படைத்தவர்களுக்கும்தான் சட்டம் பயன்படுகிறது. உண்மையிலேயே அரசு அத்தகையவர்களுக்கு ஏற்ற வகையில்தான் மெதுவாக நடைபோடுகிறது.

[illegible] முறைப்படுத்துதலும்) குறித்த திருத்தச் சட்ட முன்வடிவு
(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 10/1979)

1979 மார்ச் 15] [திரு. க. இராமமூர்த்தி]

செல்வாக்கு படைத்தவர்களிடமும் வேகமாக அரசு உள்ளது மாதிரி காட்டு கிறார்கள். உங்களுடைய திட்டங்களை நல்ல முறையில் நிறைவேற்ற முடிய வில்லை என்றால், அதற்குக் காரணம் அந்தப் பணம் படைத்தவர்களும், செல்வாக்குப் படைத்தவர்களும்தான். இந்த அரசின் எண்ணங்களும், திட்டங் களும், கொள்கைகளும் ஏன் வேகமாக இயங்க முடியவில்லை என்பதை நான் சார்ந்திருக்கிற காங்கிரஸ் கட்சியால் எண்ணிப் பார்க்க முடிகிறது. திட்டங் களைப் பொறுத்தவரையில், கொள்கைகளைப் பொறுத்தவரையில், எண்ணங் களைப் பொறுத்தவரையில், குழப்பங்கள் இருக்கக்கூடாது. இந்த அரசுக்குத் திட்டவட்டமான கொள்கைகளும், திட்டங்களும் இல்லாததால்தான் இத்தகைய குழப்பங்கள் ஏற்படுகின்றன. ஏற்கெனவே 1978 ஆம் ஆண்டில் அண்ணா தி.மு.க. கொண்டு வந்திருந்த நகர்ப்புறச் சட்டத்தின் விளைவாக அதனுடைய உண்மையான நோக்கங்கள் நிறைவேறவில்லை, புறக்கணிக்கப்பட்டன என்கிற அளவிலே தான் இப்பொழுது இந்தப் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. எங்கே நீங்கள் வீரம் பேசுகிறீர்கள்? விவசாயிகளுடைய நிலம் என்றால், வீரம் பேசு கிறீர்கள்; மற்றவர்கள் நிலம் என்றால், வீரம் பேசுகிறீர்கள். ஆனால் நகர்ப் புற நில சம்பந்தப்பட்ட சட்டம் என்று வரும்போது மட்டும், அப்படி அல்ல. ஏற்கெனவே இருந்த சிக்கல்களைத் தீர்ப்பது என்பது வேறு. ஏற்கெனவே இருந்த வலிமையை விட்டுக் கொடுத்திருக்கிறீர்கள் என்பது வேறு. சிக்கல் களைத் தீர்ப்பதில் ஆட்சேபம் இருக்க முடியாது. ஆனால் வலிமையை விட்டுக் கொடுப்பது நல்லதல்ல. யாருக்காக விட்டுக் கொடுத்திருக்கிறீர்கள்? பண மற்றவர்களுக்கோ, ஏழைகளுக்கோ, வீடு இல்லாதவர்களுக்கோ, அறவே நில மற்றவர்களுக்கோ நீங்கள் குடியிருக்க வீட்டு மனை கொடுத்திருந்தால் அதற்கு பொருள் வலிமையை விட்டுக் கொடுப்பதல்ல. ஆனால் நீங்கள் வலிமை உள்ள வர்களுக்கே விட்டுக் கொடுத்திருக்கிறீர்கள். இப்படிச் செய்ததன் மூலம் உங்கள் உள்நோக்கம் நன்றாகத் தெரிகிறது. யாருக்கு நீங்கள் பயப்படுகிறீர்கள் என்பதும் இதிலிருந்து தெரிகிறது. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்ச ரவர்களைப் பொறுத்தவரையில், தனிப்பட்ட முறையில் அவர்கள் நல்ல காரியங்களைச் செய்வதில் எவ்வளவு ஆர்வம் உடையவர்கள் என்பதை நான் மிக மிக நன்றாக அறிந்தவன். கட்சி மட்டத்திலே அவர் இன்றைய தினம் சிக்கியிருப்பதால், அவரால் அவர் நினைப்பது போல் நல்ல காரியங்களைச் செயல்படுத்த முடியவில்லை என்று கருதுகின்றேன். இந்தச் சட்டம் கொள்கை பூர்வில் அவருடைய மனதிற்கேகூட எவ்வளவு ஏற்புடையது என்பதை அவரை அறிந்தவன் என்ற முறையில் நான் திட்டவட்டமாகச் சொல்ல முடியும். என்னைப் பொறுத்தவரையில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை இதுவாக இருந்தால், மெத்த வேதனைப் படுகின்றேன். உங்களுடைய கொள்கை ஏழையெளியவர்களுக்கு நல்லது

ஒரு ராஜ தந்திரம் என்று கூட சொல்ல முடியவில்லை—ஒரு நெருக்கடியான சூழ்நிலையை உருவாக்கி, அதிலேயிருந்து லாபத்தைச் சம்பாதிப்பது என்கிற முறையில் இது உதவுமே தவிர, திட்டவட்டமான கொள்கையை, எண்ணத்தை நிறைவேற்ற இது உதவாது என்று மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு நான் வேதனையுடன் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். சமீபத்தில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக, இன்றையதினம் கட்சியிலே அவர் அந்தப் பொறுப்பிலும் இல்லை என்று நான் நினைக்கிறேன். அவர் முயற்சி செய்து இந்த மசோதாவை வெற்றிகரமாக நிறைவேற்றுகின்ற அதே நேரத்தில் அ.தி.மு.க. கட்சியில் திட்டவட்டமான கொள்கையை அறிவித்து அதன் அடிப்படையில் செயல் புரிய துணை புரிந்து, இனிமேலாவது இம்மாதிரி மசோதாக்கள் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரவர்களுடைய துறையை மட்டும் பொறுத்தவரையிலாவது வரும்போது மனச்சாட்சிக்கு ஏற்ற வகையில், ஏழை எளிய மக்களுக்குப் பயன்படும் வகையில் அவற்றை அவைக்குக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்து அமைகின்றேன்.

(பிற்பகல் 6-40)

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, வருவாய்த் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கும் 1979 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலம் (உச்சவரம்பு கட்டுதலும், முறைப்படுத்துதலும்) குறித்த திருத்தச் சட்ட முன்வடிவின்மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஒரு சில கருத்துக்களைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தச் சட்டத் திருத்தத்தைப் பொதுவாக வரவேற்க வேண்டுமென்ற ஆர்வமிருந்தாலும், எனக்கு முன்னாலே பேசிய பல்வேறு உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப்போல, இந்தச் சட்டத்தின் பின்னாலே இருக்கிற நோக்கத்தை என்னால் கண்டிக்காமல் இருக்க முடியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. வ. ஆர். தாமோதரன் அவர்கள் பேசும்போது, அவருக்கே உரிய நடையில் இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வரவேண்டிய அவசியம் இப்போது என்ன என்ற ஒரு கேள்விக்குறியைத் தொடுத்து விட்டுவிட்டார்கள். ஆனால் அடுத்துப் பேசிய திரு. இராமமூர்த்தி அவர்கள் ஆளும் கட்சிக்கும் அவர் சார்ந்திருக்கிற கட்சிக்கும் உறவு காரணமாக, விட்ட குறை தொட்ட குறை காரணமாக, உள்ளே சென்று விவகாரத்தைச் சொல்லாவிட்டாலும்கூட, சிலவற்றை இங்கே தொட்டுக் காட்டினார்கள். நான் இவைகளைக் குறிப்பிடுவதற்குக் காரணம் மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள்





பேசும்போது, ஒரு கருத்தை வலியுறுத்தினார்கள். இந்த அரசாங்கத்திற்கு இருக்கும் பொருளாதாரக் கொள்கை என்ன என்று கேட்டுவிட்டு, அந்தப் பொருளாதாரக் கொள்கையை அமுல்படுத்த வேண்டுமென்று கேட்டார்கள்.

நான் சொல்ல விரும்புவதெல்லாம் உண்மையிலேயே இந்த அரசாங்கத்திற்கு என்று ஒரு கொள்கை இருந்தால்தானே அதை அமுல்படுத்த முடியும்! ஒரு கொள்கையுமில்லாமல் ஆட்சியிலே அமர்ந்து கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் இந்த அமைச்சரவையைப் பார்த்து, "உங்களுடைய பொருளாதாரக் கொள்கையைச் சொல்லுங்கள், அதை அமுல்படுத்துங்கள்" என்று கேட்டபோது, பாவம் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களைப் பார்த்து நாம் அனுதாபப்பட வேண்டியவர்களாக இருக்கிறோமே தவிர வேறல்ல. காரணம் இந்த ஆட்சிக்கு என்று எந்தக் கொள்கையும் இல்லை. கொள்கை இருந்தால்தானே அமுல்படுத்த.

உண்மையில் நகர்ப்புற நில உச்ச வரம்பு என்பதைப் பொறுத்த, இந்த அரசுக்கு ஒரு கொள்கை இருக்குமானால், 1978 ஆம் ஆண்டு மே மாதத்தில் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தபோதே, அதை அறிவித்திருக்க வேண்டும். அப்போது சென்னை நகரத்திலேயிருக்கிற 'ரியல் எஸ்டேட்' உரிமையாளர்கள் அத்தனை பேரும் நிதியமைச்சரையும், இந்த அமைச்சரவையையும் கவரப் படுத்தக்கூடிய வகையில், அதற்கு முன்னாலே எப்படிப்பட்ட சட்டம் வந்ததோ அதைத் தூக்கி எறிகிற வகையில் அவர்களுக்கெல்லாம் பல சலுகைகளை அளிக்கிற வகையில் பல ஓட்டைகளைக் கொண்ட சட்டத்தைக் கொண்டுவந்து எப்படியோ அன்று நிறைவேற்றிவிட்டார்கள்.

இன்றையதினம் ஒரு ஆண்டுகூட முடிவடையாத நிலையில் இந்த அரசியால் நிறைவேற்றப்பட்ட சட்டத்திற்கு ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டு வருகிறார்கள் என்றால், இந்த அரசுக்குப் பொருளாதாரத் துறையில் மட்டுமல்ல, எந்தத் துறையிலுமே ஒரு கொள்கையும் இல்லை என்பதற்கு இதைவிட வேறு ஆதாரமே தேவையில்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி மனம்விட்டுப் பேசவில்லை என்று இங்கே குறிப்பிட்டார்கள். இந்த அரசைப் பார்த்து நான் கேட்க விரும்புகிறேன் என்றால், இந்தச் சட்டத் திருத்தம் கொண்டு வருவதற்கு என்ன காரணம்? என்ன விவகாரம்? சென்னை நகரத்

## 7 5 தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலம் (உச்சவரம்பு கட்டுதலும், முறைப்படுத்துதலும்) குறித்த திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 10/1979)

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1979 மார்ச் 15

அண்ணா சாலையில் உள்ள 'ஆபட்ஸ்பரி' என்ற இடத்தை, தற்போது திருமண மண்டபமாகப் பயன்பட்டுக் கொண்டிருக்கும் ஒரு இடத்தை, இந்த அரசாங்கம் வாங்க முயற்சித்தது. ஒரு அரசாங்கம் இப்படிப்பட்ட முயற்சியில் ஈடுபடலாமா என்று நான் கேட்க விரும்பவில்லை. அரசாங் கத்திற்குத் தேவைப்பட்டால், எந்த நிலத்தையும் வாங்கவோ, எடுத்துக் கொள்ளவோ அனைத்து உரிமையும் இருக்கிறது. நான் அதை மறுக்க வில்லை. ஆனால் அந்த ஆபட்ஸ்பரிக்குச் சொந்தக்காரர்கள்—அவர்கள் ஒரு அறக்கட்டளையைச் சேர்ந்தவர்கள்—இந்த இடத்தை விற்கப் போகிறோம் என்று அரசாங்கத்திற்கு விண்ணப்பித்தார்கள். நிலச் சீர்திருத்தச் சட்டத்தின் பிரிவு 2 (3) (சி) படி 120 நாட்களுக்குள் அவர்கள் விண்ணப்பித்த விண்ணப்பத்தைப் பரிசீலனை செய்து, "இந்த நிலத்தை நீங்கள் விற்கக் கூடாது, இந்த நிலம் அரசாங்கத்திற்குத் தேவைப்படுகிறது" என்று பதில் அனுப்பியிருந்தால், இன்றையதினம் இந்தப் பிரச்சினையே வந்திருக்காது; இதைப் போன்றதொரு சட்டத் திருத்தத்திற்கே தேவையில்லாமல் இருந் திருக்கும். ஆனால் அரசாங்கம் அதைச் செய்யாமல் விட்டு விட்டது. இந்தச் சட்ட விதியின்படி அவ்வறக்கட்டளையைச் சேர்ந்தவர்கள் தங்கள் நிலத்தை வேறு ஒருவருக்கு விற்பதற்கு அனுமதி கோரி விண்ணப்பித்த 120 நாட்களுக்குள் அவ்வாறு விற்பதற்கு அனுமதி வழங்க மறுக்கப்படாவிட்டால், அல்லது விண்ணப்பதாரர்களுக்கு அந்த அனுமதி மறுப்பைத் தெரிவிக்கா விட்டால், தகுதியுடைய அதிகாரிகள் அந்த விண்ணப்பத்திற்கு அனுமதி அளித்துவிட்டதாகக் கருதப்பட வேண்டுமென்று சட்டத்திலே விதி செய்யப் பட்டிருக்கிற காரணத்தால், அந்த விதியைப் பயன்படுத்திக் கொண்டு அந்த அறக்கட்டளையின் சொந்தக்காரர்கள் இன்றைக்கு வேறு ஒருவருக்கு அந்த இடத்தை விற்க முயற்சி செய்தார்கள். உடனே அரசாங்கத்திற்கு இது ஒரு மானப்பிரச்சினையாகி விட்டது. "நாம் வேண்டுமென்று கேட்கிறோம். ஒரு தனிப்பட்ட அறக்கட்டளை, நமது அரசாங்கத்தையே எதிர்த்து வேறு ஒருவருக்கு இந்த இடத்தை விற்க முனைவதா?" என்று ஆரம்பித்து இதை எப்படியும் தடுத்தாக வேண்டுமென்று அந்த அறக்கட்டளையைச் சேர்ந்தவர் களிடத்தில் அரசாங்கம் தகராறு செய்ய ஆரம்பித்தது. இதன் விளைவாக அவர்கள் இன்றையதினம் நீதிமன்றத்திற்கே சென்று, நீதிக்காக அவர்கள் காத்துக்கொண்டிருக்கும்போது இந்த அரசாங்கம் ஒரு அறக்கட்டளைக்கு இருக்கிற அடிப்படை உரிமையை நசுக்குகிற வகையில் அவசர அவசரமாக இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறது. நீதிமன்றத்தில் இந்தப் பிரச்சினை இருக்கும்போது, இப்படிப்பட்ட சட்டத் திருத்தத்தை அவசர அவசரமாகக் கொண்டு வந்து, அவர்களின் உரிமைகளை, அடிப்படை



1979 மார்ச் 15] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

உரிமைகளை, அதுவும் உங்களுடைய ஆட்சியின் காலத்திலே அளிக்கப்பட் உரிமைகளைப் பறிப்பது நியாயம்தானா என்று எண்ணிப் பார்க்க வேண் மென்று இந்த அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், இது ஒரு அன்றாட நட டிக்கையாகிவிட்டது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது முத வராக இருந்த டாக்டர் கலைஞர் அவர்கள்மீது அவசர காலத்தில் ஒ வழக்குத் தொடர்ந்தபோது, அவர் "நான் ஒரு Public Servant அல்ல என்ற பிரச்சினையைக் கிளப்பி, ஏற்கெனவே இந்த மாநிலத்தி "Publicmen (Criminal Misconduct) Act." என்ற சட்டமிருக்கிறது எனவே என் மீது ஏதாவது வழக்குத் தொடர வேண்டுமென்றால், அந்த சட்டத்தின் அடிப்படையில்தான் வழக்குத் தொடர வேண்டும் என்று உச் நீதிமன்றத்திலே வழக்காடிக் கொண்டிருந்தபோது, எப்படியாவது அவ இந்த வழக்கிலிருந்து தப்பிவிட்டால் என்ன செய்வது, அதற்கு இடப் கொடுக்கக்கூடாது என்று இந்த மாநிலத்திலிருந்து அந்தச் சட்டத்தையே ரத்து செய்தது இந்த ஆட்சி. அன்றையதினமே இப்படி ஒரு அடிப்படை உரிமையை ரத்து செய்வதற்காக முயற்சியை எடுத்தது இந்த ஆட்சி. அதைப் போலவே இன்றையதினம் தனிப்பட்ட ஒரு அறக்கட்டளையின்மீது இந்தச் சட்டத்தைத் தவறாகப் பயன்படுத்த இந்த அரசு முன்வந்திருக்கிறது. எனவேதான் இந்த அரசு தனது அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்கிறது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த அரசாங்கம் உண்மையிலேயே கொஞ்சம் தெளிவாக இருந்திருக்கு மானால், அந்த அறக்கட்டளைக்காரர்களிடத்திலேயேகூட பேச்சு வார்த்தை நடத்தியிருக்கலாம். தனிப்பட்ட ஒரு நிறுவனத்திடம் அரசாங்கம் தோற்று விட்டது, அவமானப்பட்டுவிட்டது என்பதற்காக இதைப் போன்ற ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டு வருவது என்றால், இனி இதைப் போன்ற மன்றங்களுக்கு வேறு வேலையே இருக்க முடியாது. எனவேதான் இப்படிப் பட்ட நடவடிக்கைகளை இன்று மட்டுமல்ல, இனி எதிர்காலத்திலும் கடைப் பிடிக்கக் கூடாது, இவைகளைக் கைவிட வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அந்த அறக்கட்டளை எதற்காக இந்த அளவுக்கு நிலத்தை வைத்துக் கொண்டிருக்கிறது என்பதைக்கூட இந்த அரசாங்கம் தெரிந்து கொள்ளாமல், திடீரென்று ஒரு நாள் அரசாங்கத்திற்கு இந்த இடம் தேவையென்று நினைக்குமானால், இந்த நிலத்தை எடுத்துக்கொள்ளும் வகையில் சட்டத்தில

ஒரு பிரிவையும் இன்றையதினம் சேர்த்திருக்கிறார்கள். இதற்கு முன்னாலே அப்படிப்பட்ட ஒரு உரிமை அரசாங்கத்திற்கு இருந்ததில்லை. ஆனால் இன்றையதினம் விதிவிலக்களிக்கப்பட்ட, இறுதியில் மிகையான எந்தக் காலி நிலத்தையும் அரசாங்கமே கையகப்படுத்திக்கொள்ளும் அதிகாரம் பிரிவு 4-ல் சேர்க்கப்பட்டிருக்கிறது, இதற்கு முன்னாலே ஒரு நோட்டீசாவது கொடுப்பார்கள். இப்போது அதுகூட இல்லை. அரசாங்கம் நினைத்தால், அந்தக் காலியிடத்தைக் கையகப்படுத்திக்கொள்ளும் உரிமை இருக்குமானால், நாம் இன்றையதினம் பேசுகிறோமே, சுதந்திரம், ஜனநாயகம் ஆகியவைகளை உண்மையிலேயே இந்த அரசாங்கம் கேலி செய்து கொண்டிருக்கிறதோ என்று புரியவில்லை. அரசாங்கம் தனக்கு வேண்டிய நிலத்தை வாங்கிக் கொள்ளத் தவறிவிட்டது என்ற காரணத்திற்காக இப்படி ஒரு சட்டத் திருத்தம் தேவைதானா எனபதை இங்கே அமைச்சர்கள் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் பேசும்போது, தனிப்பட்ட முறையில் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் மீது தனக்கு நம்பிக்கையிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். ஆனால் எங்களைப் பொறுத்தவரையில், வருவாய்த்துறை அமைச்சர் ஒரு தனிப்பட்ட மனிதரல்ல. திரு. இராமமூர்த்தி வேண்டுமானால் அவர்மீது நம்பிக்கை வைத்திருக்கலாம். அதை நான் இல்லையென்று சொல்லவில்லை. தனிப்பட்ட முறையில் திரு. எஸ். டி. சோமசுந்தரம் என்றால், நாங்கள்கூட நம்பிக்கை வைக்கலாம். அது வேறு. ஆனால் வருவாய்த் துறை அமைச்சர் என்கிறபோது, இந்த அரசாங்கம் எதைச் செய்தாலும், அதில் கையொப்பமிடக்கூடிய சூழ்நிலையில் வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் இருப்பதால் நாங்கள் அவரை நம்பத் தயாராக இல்லை. எனவே இப்படிப்பட்ட சட்டத் திருத்தங்களைக் கொண்டு வருவதன் மூலம் அடிப்படை உரிமைகளையேகூட இந்த அரசாங்கம் மறுக்கிறது என்ற எண்ணம் மக்கள் மத்தியில் உருவாகக் கூடும்.

இதைப் போலத்தான் அவசர அவசரமாக இந்த அரசு தந்தை பெரியார் அறக்கட்டளையிலும் தலையிட்டு ஒரு தவறைப் புரிந்தது. இன்றையதினம் அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையை எதிர்த்து தந்தை பெரியார் அறக் கட்டளையைச் சார்ந்தவர்கள் நீதி மன்றத்திற்குச் சென்று 'ஸ்டே' வாங்கியிருக்கிறார்கள். அதைக்கூட அரசு Vacate செய்ய வேண்டுமென்று முயன்றது. முடியவில்லை. எந்த தந்தை பெரியார் அவர்களின் நூற்



றாண்டு விழாவை நாடெங்கும் கொண்டாடிக் கொண்டிருக்கிறதோ, அந்த தந்தை பெரியார் அறக்கட்டளையின் சொத்துரிமையைக் கேள்வி கேட்கிற முறையில் இந்த அரசாங்கம் செயல்பட்டதால், இன்றையதினம் ஒரு வழக்கு நீதிமன்றத்திலே இருக்கிறது. அப்படி அந்த அறக்கட்டளையினர் அரசாங்கத்திற்கு எதிராக ஒரு வழக்கைத் தொடர்ந்துவிட்டார்கள் என்பதற்காக அதையும் vacate செய்ய வேண்டுமென்ற விண்ணப்பத்தை இந்த அரசாங்கம் நீதிமன்றத்திலே தாக்கல் செய்தது. நல்லவேளையாக அந்த நீதிபதி அதைப் பரிசீலித்து, எவ்வளவோ அவசரப் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டியிருக்கும்போது, இந்த அரசாங்கம் தீர்க்க வேண்டிய பிரச்சினைகள் நாட்டில் எவ்வளவோ இருக்கும்போது, இதற்கு என்ன அவசரம் என்று கருதி அந்த 'ஸ்டே'ஐயே 'அப்சல்யூட் ஸ்டே' ஆக மாற்றிவிட்டார். இப்படி இந்த அரசாங்கத்திற்குப் பிடிக்கவில்லை என்பதற்காக எதையும் செய்யக் கூடிய அதிகாரத்தை இப்படிப்பட்ட சட்டத் திருத்தத்தின் மூலம் மேற்கொள்வது என்பது நியாயம்தானா என்று கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இதைச் சொல்லுகிறபோது ஏதோ ஒரு நோக்கத்தின் அடிப்படையில் சொல்லுகிறேன் என்று அரசாங்கம் தயவுசெய்து நினைக்கக்கூடாது.

இங்கே பேசிய உறுப்பினர்கள் லயோலா கல்லூரிபற்றியும் குறிப்பிட்டார்கள். இந்த அரசாங்கம் நினைத்தால், நாளைய தினமே பச்சையப்பன் அறக்கட்டளைகளுக்குச் சொந்தமான பச்சையப்பன் கல்லூரியின் முன்னாலே இருக்கிற நிலத்தையும் எடுத்துக்கொள்ளலாம். கேட்டால் அந்த இடத்தில் கடைகள் கட்ட வேண்டுமென்று மாநகராட்சி மன்றம் விரும்புகிறது என்று காரணம் சொல்லி, கையகப்படுத்தும் உரிமை அரசாங்கத்திற்கு இருக்கிறதென்றால், இனி கல்வி நிலையங்களுக்கு எங்கே இருந்து பாதுகாப்பு இருக்கும்? இனி எதிர்காலத்தில் அப்படிப்பட்டவர்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் இருக்க முடியாது.

(பிற்பகல் 6-50)

அது மட்டுமல்ல, அதைப்போல அறக்கட்டளைகள் மதச் சார்பிலே அல்லது தனிப்பட்ட முறையிலே இருக்குமானால், அந்த அறக் கட்டளைகள் வைத்திருக்கின்ற நிலங்களை, அவர்கள் அதை எந்தக் காரணத்திற்காக வைத்திருக்கிறார்களோ அதைக்கூட தெரிந்துகொள்ளாமல், அரசாங்கம் நினைத்த நேரத்திலே எடுத்துக்கொள்ள இந்தப் பிரிவு வகை செய்கிறது. அமைச்சர் அவர்கள் எப்படியும் இதைச் சட்டமாக்கி விடுவார்கள். இருந்தாலும் இவைகளைப் பரிசீலித்து எதிர்காலத்திலே இதற்கு விதிவிலக்கு தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்றை மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் சொன்னார்கள். எப்போதுமே அரசாங்கம் ஒரு சட்டத்தைக் கொண்டு வருகிற நோக்கிலே, இருக்கின்ற, இப்போது இருக்கின்ற உரிமைகளை பெரும்பாலும் பாதிக்காத வகையிலேதான் கொண்டு வருவது வழக்கம். அரசாங்க ஊழியர்களாக இருந்தாலும் கூட, அரசு அவர்களுக்கு என்று ஒரு சலுகை வழங்குகிறது என்று சொன்னால் Existing facilities-ஐ பாதிக்காத வகையில்தான் செய்கிறார்கள். ஆனால் இந்த விவகாரத்தில் ஏற்கெனவே மார்க்கெட் வேல்யூ என்று, எடுத்துக்கொள்கின்ற நிலத்திற்கு அரசாங்கம் விலையை நிர்ணயிக்க வேண்டும் என்று இருக்கின்ற பிரிவுக்கு மாறாக, இன்றைக்கு அந்த உரிமையைப் பறிக்கக் கூடிய வகையில் நிலைமைகள் மாறியிருக்கும்போது, உள்ளபடியே எந்த அளவுக்கு அறக்கட்டளைகள் பாதிக்கப்படும் நிலை இருக்கின்றது என்பதை நாம் பார்க்க வேண்டும். ஏதோ வீராசாமி அல்லது இங்கே இருக்கக்கூடிய மற்ற மாண்புமிகு உறுப்பினர்கள் வைத்திருக்கின்ற நிலங்களை அரசாங்கம் எடுத்துக்கொள்கிறது என்று சொன்னால்கூட, பரவாயில்லை. ஏதோ நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்களை வைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்றாலும், அவர்களுடைய சொத்துக்களை அரசு எடுத்துக்கொள்ளும்போது மார்க்கெட் வேல்யூ கூட கொடுக்க மாட்டோம் என்று சொல்லுமேயானால், இப்போது ஏற்கெனவே இருந்து கொண்டிருக்கும் நிலையிலேயே அந்த அறக்கட்டளைகளைச் செம்மையாக நடத்த முடியவில்லையென்றால், அதில் ஒரு பகுதியை விற்றாவது வைத்துக் கொள்ளலாம் என்ற முறையில் இருந்தாலாவது பரவாயில்லை. ஏதோ பச்சையப்பன் கல்லூரிக்கு 30 ஏக்கர் இருக்கிறது, அந்தக் கல்லூரியை செம்மையாக நடத்த முடியவில்லை, அங்கே இருக்கின்ற ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுக்க முடியவில்லை, எனவே அந்தக் கல்லூரிக்கென்று இருக்கின்ற நிலத்தின் ஒரு பகுதியை விற்று வரும் பணத்தை தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலே போட்டு வைத்தால், அந்தப் பணத்திற்கு கிடைக்கும் வட்டியிலிருந்து ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுக்கலாம் என்றால் கூடப் பரவாயில்லை. ஆனால் அதெல்லாம் கிடையாது. அரசாங்கம்தான் ஒரு விலையை நிர்ணயிக்கும், அந்த விலைக்குத்தான் அவர்கள் ஒத்துக்கொள்ள வேண்டும். ஏற்கெனவே இப்போது இருக்கும் அறக்கட்டளைகளுக்குப் போதிய வருமானம் இல்லாமல், அவர்கள் கஷ்டப்படுகிறார்கள். அமைச்சர் அவர்கள் இப்படிப்பட்ட சிக்கல்களை எண்ணிப் பார்க்க வேண்டும். இன்றைய தினம் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிற அவசரம் எனக்குப் புரியாமல் இல்லை. இன்றையதினம் இந்தச் சட்டத்தை இங்கே கொண்டு வந்திருப்பது ஆபட்ஸ்பரி



திருமண மண்டபத்தை வாங்க வேண்டும் என்பதற்காகத்தானே தவிர வேறு இல்லை. வேண்டுமானால் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்து அந்த ஆபட்ஸ்பரி திருமண மண்டபத்தை அரசாங்கம் எடுத்துக்கொண்டு, அந்தக் காரியத்தை முடித்த பிறகு இந்தச் சட்டத்தை ரத்து செய்ய வேண்டும் என்று தெரிவித்து என்னைப் பேச அனுமதித்ததற்காக நன்றி தெரிவித்து அமைகிறேன்.

**திரு. ஆ. நல்லசிவன் :** மாற்றுத் தலைவர் அவர்களே, முதலிலே இந்த மசோதாவை நான் ஆதரிக்க வேண்டும் என்று நினைத்தபோது, இதற்கு இவ்வளவு முக்கியத்துவம் சேரும் என்று நான் நினைக்கவில்லை. மாண்புமிகு உறுப்பினர்களின் பேச்சைக் கேட்டபோதுதான் என்னுடைய ஆதரவு எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது என்று உணர்ந்து, அந்த அடிப்படையிலே பேசுகிறேன். இங்கே பேசப்பட்ட ஒரு சில விஷயங்களைப் பற்றி எனக்குக் கருத்து மாறுபாடுகள் இருந்தாலும்கூட, இந்தப் பிரச்சினையில் அரசின் நிலையை நான் ஆதரிக்கிறேன். இந்தச் சட்டம் கொண்டு வந்திருப்பது ஆபட்ஸ்பரி கல்யாண மண்டபத்தை எடுப்பதற்கா அல்லது இதற்கு வேறு நோக்கம் இருக்கிறதா என்றெல்லாம் கேட்கிறார்கள். அதுபற்றிய பிரச்சினைக்குள் நான் போக விரும்பவில்லை. இந்த மசோதாவின் கொள்கை என்ன ? அதிலே நல்ல அம்சங்களிலிருந்தால், அதை ஆதரிக்க வேண்டாமா? மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்களுக்கு ஆரம்பத்திலே ஒரு கருத்து, பிறகு ஒரு கருத்து. கொள்கை அடிப்படையிலே பார்க்கின்றபோது, நான் சில விஷயங்களைச் சொல்ல வேண்டியிருக்கிறது. திரு. தாமோதரன் அவர்கள் பேசும்போது, ஒன்றைச் சொன்னார்கள். என்ன காரியத்துக்கு என்று இந்த சாரிட்டபிள் இன்ஸ்டிட்யூஷனுக்கு நிலம் இருக்கிறதோ, அந்தக் காரியம் சரிவர நடக்கவில்லை என்ற முடிவுக்கு அரசு வந்தால், அரசு நிலத்தை எடுத்துக்கொள்ளலாம் என்றால், அப்படி அரசு எடுத்துக்கொள்ள விடலாமா என்று கேட்கிறார்கள். ஒரு கல்வி நிறுவனத்துக்கோ, டிரஸ்ட்டுக்கோ, நகர நிலத்தில் அவர்கள் எவ்வளவு வைத்துக்கொள்ளலாம் என்று நிர்ணயிக்கின்ற பொறுப்பை விடுவதா, அல்லது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட இரு மன்றங்களிலேயும் இப்பிரச்சினையை விவாதங்களுக்கு உள்ளாக்கி இதுபற்றி முடிவெடுப்பதா என்பதை நாம் யோசித்துப் பார்க்க வேண்டும். அவர்கள் சொன்னது, என்ன பர்ப்பஸ்-க்கு என்று இந்த ப்ராப்பர்ட்டி இருக்கிறதோ அந்த பர்ப்பஸ்-க்கு அந்த ப்ராப்பர்ட்டி பயன்படுகிறதா இல்லையா என்பதைத் நிர்ணயிக்கின்ற பொறுப்பு சம்பந்தப்பட்ட இன்ஸ்டிட்யூஷனுக்கே இருக்க வேண்டும். அரசுக்கு இருக்கக்கூடாது என்பதுதான். அரசு, எப்போது அந்த

பர்ப்பஸ்-க்கு நிலம் பயன்படுத்தவில்லை என்று கருதுகிறதோ அப்போதுதான் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நான் சொல்கிறேன். இந்தக் கருத்தை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. இது பப்ளிக்குக்குப் பயன்படுகிறதா, இல்லையா என்று யார் நிர்மானிக்க வேண்டும்? யார் யாருக்குக் கட்டுப் பட்டவர்கள்? ஒரு டிரஸ்டுக்கு இருக்கக்கூடிய பொறுப்புணர்ச்சியைவிட ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்குத்தான் அதிகப் பொறுப்பு இருக்கிறது. திரு. இராமமூர்த்தி அவர்கள் நினைப்பது போலவோ, திரு. வீராசாமி அவர்கள் நினைப்பது போலவோ, திரு. தாமோதரன் அவர்கள் நினைப்பது போலவோ இல்லாமல் அரசின் கையில் இந்த அதிகாரம் இருக்குமேயானால், ஏதாவது தவறு செய்தால், இந்த அரசாங்கத்தை இரு அவைகளிலும் உரி உரி என்று உரிக்கலாம். ஆனால், அவர்களை யார் கேட்பது?

**திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு உறுப்பினர் இது 'ஆப்ஷன்' ஆகவே அரசுக்கு இருக்க வேண்டும் என்று விரும்புகிறாரா அல்லது சட்டப்படி திட்டவட்டமாக இன்னின்ன நிலையிலே கையகப்படுத்த வேண்டும் என்று 'ஆக்ட்' ஆக, சட்டமாக இருக்க வேண்டும் என்று கருதுகிறாரா?

**திரு. ஆ. நல்லசிவன் :** அவர்கள் விற்க விரும்பினால், 120 நாட்களுக்கு முன்பே அரசுக்கு அறிவித்து, அறிவித்த பிறகு அரசு வேண்டுமானால் எடுத்துக்கொள்ளலாம், இல்லையென்றால் அவர்கள் விற்றுக்கொள்ளலாம் என்று இருக்கும் அந்த 'ஆப்ஷனே' தவறு என்பதுதான் என் கருத்து. ஆகவே, ஒரு 'இன்ஸ்டிட்யூஷனை' எடுத்துக்கொண்டால், அதற்கு எவ்வளவு நிலம் தேவை என்பதை அரசே நிர்மானித்துவிட்டு, மீதமுள்ளதை அரசே எடுக்க வேண்டும், அந்த அதிகாரம் அரசுக்கு இருக்க வேண்டும். இதுபற்றி நான் தெளிவாக இருக்கிறேன். குழப்பம் எதுவுமில்லை.

**திரு. க. இராமமூர்த்தி :** இது சரியான தகவல் அல்ல. இதற்கு ஆட்சேபணை பண்ணவில்லை. எங்களுடைய எண்ணமே, கருத்தே, மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம், கையகப்படுத்துவது நியாயம் என்று சொல்லியிருக்கிறோம். 'ரிலிஜியஸ் சாரிட்டீஸ்'-க்கு எவ்வளவு நிலம் என்பதை அவர்கள் தெரிவிக்கிறார்கள். மேலும், எவ்வளவு நிலம் என்பதை அரசு அவர்கள் சார்பிலே நிர்ணயிப்பார்கள் என்று இருக்கிறதே தவிர, விதிப்படி இப்படித்தான் நிர்ணயம் செய்யப்படும் என்று இந்த மசோதாவிலே இல்லை. அதற்கு வழி வகுக்க வேண்டும். அது இல்லாத நிலையிலே இரு வேறு



அடிப்படையிலே அமைந்துவிடும் என்பதுதான் எங்களுடைய கருத்து, எங்களுடைய தெளிவான எண்ணம். அதை வேறு விதமாக திசை திருப்ப வேண்டாம்.

**திரு. ஆ. நல்லசிவன் :** இன்றைக்கு இருக்கிற இந்த அமெண்ட்மென்ட் ஏற்கெனவே இருப்பதைவிட சிறப்பானதா, இல்லையா? இன்றைக்கு அந்த மாதிரி அதிகாரம் சர்க்காருக்குக் கொடுக்க வேண்டுமா, வேண்டாமா என்பதுதான் என்னுடைய பிரச்சினை.

**மாற்றுத் தலைவர் (திரு. ச. எஸ். வெங்கடேசன்):** சட்ட முன்வடிவின் மீது முடிவெடுக்கும் வரை அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. ஆ. நல்லசிவன் :** அந்த அதிகாரத்தை அரசுக்குக் கொடுப்பது சரியா? தனி individual டிரஸ்ட்களுக்குக் கொடுப்பது சரியா? மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்களும் பேசும்போது, அந்த டிரஸ்ட்களுக்குப் போனால் என்ன என்று கேட்டார்கள். The Trust is composed of individuals தனி நபர்கள் தவறு செய்வது ஒப்புக்கொள்ளப்படுகிறது.

THIRU A. R. DAMODARAN : Sir, may I inform the hon. Member that we are not only considering Trusts formed by individulals but we are also referring to religious trust where the entire property is enjoyed by the State and controlled by the Hindu Religious and Charitable Endowments Department ?

(பிற்பகல் 7-00)

**திரு. ஆ. நல்லசிவன் :** தவறு செய்யும் நான்கு தனி நபர்கள் அமைக்கும் டிரஸ்ட் மட்டும் எப்படி சரியான அமைப்பாக இருந்து விடும்?

நம் நாட்டிலே நில உச்சவரம்புச் சட்டம் வந்தபோது, டிரஸ்டுகள் எல்லாம் எப்படி செயல்பட்டன என்பது நமக்கு நன்றாகத் தெரியும். 150 வருஷங்களுக்கு முன் கல்வி டிரஸ்ட் என்று ஏற்படுத்தியது இருக்கட்டும். நில உச்சவரம்புச் சட்டங்கள் வந்தபோது நாட்டிலேயுள்ள நல்ல நிலங்களையெல்லாம் வளைத்துப் போட்டு பிறகு நில உச்சவரம்புச் சட்டத்திலேயிருந்து தப்பித்துக்கொண்டதை நாம் பார்த்திருக்கிறோம். டிரஸ்டுகளை கன்ட்ரோல் பண்ணுகிற அதிகாரம் என்று வருகிறபோது, டிரஸ்ட் பணத்தை அநியாயமாக, சட்டத்திற்குப் புறம்பாக, தனிப்பட்டவர்கள் தங்களுடைய ஆசாபாசங்களுக்காகட்

பயன்படுத்திக் கொள்ளமாட்டார்கள் என்று நாம் ஏன் மனக்கோட்டை கட்ட
வேண்டும்? கல்வி ஸ்தாபனங்களுக்கு நிலம் தேவை என்றாலும்கூட, அரசே
அந்த டிரஸ்ட் அதிகாரிகளுடன் சேர்ந்து பேசி எவ்வளவு நிலம் தேவையென்று
தீர்மானிக்கலாம். அதை மீறிச் சென்று, வஞ்சம் தீர்க்கிற நோக்கத்தோடு
அரசு செய்யுமானால், இந்த இரண்டு சட்டமன்றத்திலும் அவர்களை நாம்
கேட்கலாம். தங்களுக்குத் தேவையில்லை என்றால்கூட, டிரஸ்டுகள் விற்க
விரும்புவதில்லை. ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் அவர்களுக்குத் தேவை
யில்லை என்றால், அரசாங்கம் அதை எடுத்துக்கொள்ளலாம். சில இடங்களில்
300 ஏக்கரை வளைத்து வைத்துக்கொண்டு, ஐந்து ஏக்கரில் மட்டுமே கல்வி
ஸ்தாபனத்தை வைத்துக்கொண்டிருப்பார்கள். மீதியை உபயோகப்படுத்தாமல்,
என்றைக்காவது ஒரு நாளைக்குத் தேவைப்படும் என்று நகரத்திற்குள்ளே
உள்ள நிலத்தையெல்லாம் வளைத்துப் போட்டிருப்பார்கள். அப்படிப்பட்ட
வர்களுடைய ஆதிக்கத்துக்கு விடப்பட வேண்டுமா? அது எப்படி சரியாக
இருக்கும்?

* THIRU A. R. DAMODARAN : I would like to inform the
hon. Member that under the Land Ceiling Act, we have fixed ceilings
for educational institutions, colleges, Universities and Schools. It is
not as if educational institutions can own hundreds of acres. I do
not remember exactly, but I think a ceiling of 20 acres or 40 acres
is fixed under the Land Ceiling Act. This is for the information of
the hon. Member.

திரு. ஆ. நல்லசிவன் : நான் சொல்லுவது, நாம் வரையறுக்கக் கூடிய
லேண்ட் சீலிங் அளவுக்குக் கூட அவர்களுக்கு நிலம் தேவைப்படாமல் இருக்க
லாம். ஏன் சீலிங் அளவுக்கு வைத்துக்கொள்ள வேண்டும்? அவசியம் இருக்
கிறது என்றால், அவர்கள் வைத்துக்கொள்ளட்டும். இல்லாவிட்டால் சரண்டர்
பண்ணலாம். அரசாங்கம் எடுத்துக்கொள்ளலாம். ஆகவே இந்தப் பிரச்சினை
யில் ஒரு டிரஸ்டுக்கு அதிகாரம் இருப்பதைவிட அதைக் கண்ட்ரோல் பண்ணு
கிற அதிகாரம் அரசாங்கத்திற்குத்தான் அதிகமாக இருக்க வேண்டும் என்ற
கருத்தைத்தான் நான் சொல்லுகிறேன். இந்தக் காரணத்திற்காகவே இந்த
மசோதாவை ஆதரிக்கலாம் என்பது என்னுடைய கருத்து.

அடுத்த விஷயம் நஷ்டஈடு சம்பந்தப்பட்ட விஷயம். மாண்புமிகு உறுப்
பினர் திரு. தாமோதரன் அவர்கள், 5,40,000 ரூபாய் விலைக்குப் போகிற
நிலத்தை இருபத்தைந்தாயிரம் 26 ஆயிரம் ரூபாய் என்று வாங்கப் பார்க்கிறார்
கள் என்று சொன்னார்கள். ஐந்து இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் பெறுமான



முள்ள நிலத்தை பொதுநலக் காரியத்திற்காகப் பயன்படுத்தாமல் டிரஸ்
டுக்கு விட்டு வைக்க வேண்டிய அவசியம் என்ன? இந்த நிலத்திற்கு 5,40,000
ரூபாய் என்ற விலை எப்படி ஏற்பட்டது? 37 வருஷத்திற்கு முன் நான் படிக்க
வருகிறபோது, சென்னை நகரத்திலே நிலத்துக்கு இவ்வளவு விலை
கிடையாது என்று திரு. இராமமூர்த்தி அவர்கள் கூறினார்கள். அரசாங்கமும்,
கார்ப்பரேஷனும் சேர்ந்து பல வசதிகளைச் செய்திருப்பதாலும், ஜனத்தொகை
நிறைய ஆகியிருப்பதாலும், பல சௌகரியங்கள் மக்களுடைய வரிப் பணத்தி
லிருந்து செய்யப்பட்டதாலும்தான் அந்த இடத்திற்கு விலை ஏறியிருக்கிறது.
நகரத்திலிருந்து 50 மைல்களுக்கு அப்பால் உள்ள கிராமப்புறத்தில் இந்த நிலம்
இருந்தால், இவ்வளவு விலை இருக்காது. அந்த விலை தனியார் டிரஸ்டுக்கு
ஏன் போக வேண்டும்? அரசாங்கம்தான் இதைக் கண்ட்ரோல் பண்ண
வேண்டும். 25 ஆயிரம் ரூபாய் கூட போகாமல் இருக்க அரசாங்கம் சட்டத்தை
இயற்ற வேண்டும். ஆனால் இந்த மாதிரியான சட்டத்தைக் கொண்டு
வந்து, தனக்கு எதிராகவுள்ள கட்சிகளை வஞ்சம் தீர்க்கிற முறையில் ஆளும்
கட்சி அதைப் பயன்படுத்தினால், அதைப்பற்றிக் கேள்வி கேட்க நாம் தயாராக
இருக்கிறோம். ஆளும் கட்சியினர் அப்படித் தவறாக உபயோகப்படுத்த
மாட்டார்கள் என்று யாரும் சொல்ல முடியாது. அரசியலில் என்னென்ன
விளையாட்டு நடக்குமென்று சொல்ல முடியாது. ஆனால் இது Statute-
இல் இருந்தால், எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும், அதைப் பயன்படுத்தி
நகர்ப்புற உச்ச நிலங்களை மேற்கொள்ள முடியும். தவறுகளை தேர்ந்தெடுக்
கப்பட்டு வந்த பிரதிநிதிகள் விமர்சிக்க முடியும். ஆகவே இந்த அதிகாரம்
அரசாங்கத்திற்குத்தான் இருக்கிறது. டிரஸ்டுகளுக்கு இல்லை என்ற ஒரு
காரணத்திற்காகவே இந்தச் சட்டமுன்வடிவை நான் வரவேற்கிறேன். இச்
சட்டத்தைத் தவறாகப் பயன்படுத்தும்போது இரண்டு சட்டமன்றங்களிலும்
விமர்சிக்கலாம்.

நில உச்சவரம்புச் சட்டத்தில் இருப்பதைப் போல் நகர்ப்புற நிலத்திலும்
பினாமி டிரான்ஸாக்ஷன்கள் இருக்கின்றன. அதையும் கைப்பற்ற அரசாங்கம்
முயற்சி செய்ய வேண்டும். அதையும் கைப்பற்றி பொதுநலக் காரியத்திற்
குப் பயன்படுத்த அரசாங்கம் தீவிரமாக முயற்சிக்க வேண்டும் என்று கேட்டுக்
கொண்டு, இந்தக் கண்ணோட்டத்தின் அடிப்படையிலே இந்த மசோதாவை
நான் ஆதரிக்கிறேன் என்று சொல்லிக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, இந்தச்
சட்டமுன்வடிவைப் பற்றி இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் மிகத்
தெளிவாகவும், ஆழ்ந்தாகவும் தங்களுடைய கொள்கைகளுக்கேற்ப தங்க

ளுடைய கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றுவதற்கு முன், இந்த அரசு கொண்டு வந்த இரண்டு சட்டமுன் வடிவுகளை இங்கே இருக்கிற அத்தனை உறுப்பினர்களும், எதிர்க்கட்சி உறுப் பினர்களும் பாராட்டிவிட்டு, இதை எதிர்க்கிறபோது, நாங்கள் என்ன நம்பு கிறோம் என்றால், இந்த அரசைப் பாராட்டிக்கொண்டே போனால், தவறான பாதையிலே சென்று விடுமோ என்ற அக்கறையின் காரணமாகத்தான் இங்கே யிருக்கிற அருமை உறுப்பினர்கள், இங்கே ஒரு இடத்தில் பாராட்டையும், அங்கே ஓரிடத்தில் எதிர்ப்பையும் தெரிவித்துப் பேசியிருக்கிறார்கள் என்று நம்புகிறோம். ஆனால் எதிர்த்துப் பேசுகிறபோது எவ்வளவு கடுமையாக எதிர்த்தார்களோ, அதைவிட அழுத்தமாக மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்ல சிவன் அவர்கள் இதை ஆதரித்துப் பேசியிருக்கிறார்கள். இந்தச் சட்டத்தைக் கொண்டு வருகிறபோது, "சட்டம் தவறாக இருந்துவிட்டால், வேறு ஒரு அமைச்சரவை வருகிறபோது, தவறான சட்டத்தைத் தவறான முறையிலே பயன்படுத்த முடியாதா ?'' என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் கேட்டார்கள். நான் உங்களுக்கெல்லாம் தெரியாததைச் சொல்ல வில்லை. உங்கள் எல்லோருக்கும் தெரிந்ததைத்தான் சொல்லுகிறேன். ஜனநாயகத்தில் எந்த அரசு வேண்டுமானாலும் வரும். வருகிற அரசு இந்தச் சட்டத்தை எப்படி வேண்டுமானாலும் மாற்ற முடியும். இது சட்டமாக இருக்கிற காரணத்தாலே, அதைப் பயன்படுத்தித்தான் ஆக வேண்டும் என்ப தில்லை. ஆனால் நல்ல சட்டமாக இருந்தால், மக்களுக்குப் பயன்படக்கூடிய சட்டமாக இருந்தால், இதை எப்படியும் பயன்படுத்திக் கொள்ள ஜனநாயக அமைப்பிலே இடம் இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இங்கே பேசுகிறபோது, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர் கள், "வருவாய்த்துறை அமைச்சர் மிக நல்லவர், சீர்திருத்தவாதி, ஆனால் இந்த அரசு கொண்டு வருகிறதே" என்று சொன்னார்கள். ஆனால் மாண்பு மிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் சொல்லுகிறபோது, "இந்த அரசு கொண்டு வருகிறது, இதை வருவாய்த்துறை அமைச்சரானாலும் யாரானாலும் கொண்டு வரும்போது இதை எதிர்க்க வேண்டியதுதானே" என்று சொன்னார்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாற்றுத் தலைவர் அவர்களே, நான் எதிர்க்கவில்லை. சட்டத்தை ஆதரித்திருக்கிறேன். ஆனால் அதன் நோக்கத்தைத் தான் ஆதரிக்கவில்லை.



**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** ஒரு சட்டமுன்வடிவை அரசு கொண்டுவருகிறபோது, அதை அமைச்சர் முன்மொழிந்து பேசுகிறபோது, அமைச்சருக்கு மட்டும் பொறுப்பல்ல, இந்த அரசுக்கே பொறுப்பு இருக்கிறது, இந்த அமைச்சரவைக்கே பொறுப்பு இருக்கிறது. திரு. வீராசாமி அவர்கள் சரியாகத்தான் சொல்லியிருக்கிறார்கள். அதே நோக்கில் இந்தச் சட்டத்தைக் கொண்டு வருகிறபோது, உள்நோக்கம் இருக்கிறதோ என்று கேட்டார்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் பேசும்போது, "எவ்வளவு உள்நோக்கம் இருந்தாலும் சரி, இந்தச் சட்டத்தைப் பொறுத்த வரையிலே, இது ஒரு முன்னேற்றச் சட்டம் இல்லையா? progressive measure இல்லையா?'' என்று கேட்டார்கள். மாண்புமிகு உறுப் பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் பேசுகிறபோது, "ஆறு மாதங் களுக்கு முன்பு கொண்டு வந்த சட்டத்தை இன்றைக்கு மாற்றுகிறார்களே" என்று சொன்னார்கள். நான் பணிவோடு சொல்லிக்கொள்ளுகிறேன், இப்போது பேசிக்கொண்டிருக்கிறபோது எவ்வளவு நல்ல கருத்துக்கள் வருகிறதோ, அதைவிட வெளியே போன பிறகு மேலும் நல்ல கருத்துக்கள், இதைவிட வேகமான முறையிலே நல்ல சீர்திருத்த எண்ணங்கள், நாளைக்கு, அல்லது மறுநாளைக்குக் கூட வரலாம். நான் முன்பே "இந்த அரசு மிக நல்ல சட்டத்தைக் கொண்டு வந்துவிட்டது என்று இறுமாப்போடு பேசமாட்டேன். இதைவிட நல்ல சட்டத்தை பிறகு இதே அரசே கொண்டு வர முடியும்" என்று சொன்னேன். இன்றைக்கு எங்களுக்கு இருக்கிற ஆற்றல், அறிவாற்றல் ஆகிய வற்றுக்கேற்ப, நாங்கள் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம் என்பதைத்தான் சொல்லிக்கொள்ளுகிறேன். இதை இன்னும் நல்ல சட்டமாக மாற்றுவதற்கு இடம் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

(பிற்பகல் 7-10)

அதே நோக்கில் இந்தச் சட்டத்தைப்பற்றி நான் உங்களுக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அரசு நினைத்தவுடனே எதையும் எடுத்துக்கொள்ள முடியாது. மாண்புமிகு அங்கத்தினர் திரு. ஏ. ஆர். தாமோ தரன் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். இன்றைக்கு தனிப்பட்டவர் களுக்கு இருக்கின்ற உரிமையையும் இங்கே இருக்கின்ற இப்படிப்பட்ட ஸ்தாப னங்களின் உரிமையையும் பார்க்கிறபோது, தனிப்பட்டவர்கள் அதிகமாக நிலம் வைத்துக்கொள்ள உரிமையில்லை, ஆனால் இவர்களுக்கு உரிமை கொடுக்கப் பட்டிருக்கிறது. ஆக, எந்தக் காரணத்திற்காக இந்த அமைப்பு அமைக்கப் பட்டதோ அந்த அளவிற்கு, அந்தக் காரியத்தைச் செய்துகொண்டிருக்கின்ற வரையிலே அவர்களுக்குப் பாதுகாப்பு உண்டு. அவர்களிடம் யாரும் போக

முடியாது, ஒன்றும் செய்ய முடியாது. மாண்புமிகு அங்கத்தினர் திரு. நல்லசிவன் அவர்கள்கூட எடுத்துச் சொன்னார்கள். அதை நிர்ணயிக்கின்ற பொறுப்பை அரசு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொன்னார்கள். நான் அவர் சொல்வதை வரவேற்கிறேன். அது ஒரு நல்ல முன்னேற்றமான கருத்துத்தான். அவர் என்னைவிட முன்னேற்றமான ஒரு கருத்தைச் சொல்கிறார். அந்தக் கருத்து அரசினதைவிட வேகமான ஒன்றுதான். அரசு கருதினால், அதைச் செயல்படுத்த முடியும். அதில் யாரும் தலையிட முடியாது. தேவையில்லை என்றால் அதை விட்டு விடுகிறோம். அரசு தலையிடுவதில்லை. அரசினிடத்தில் ஒரு நோட்டீசைக் கொடுத்துவிட்டு, கடிதத்தை எழுதி விட்டு, அரசினைக் கேட்டுவிட்டு, அதற்குப் பிறகு 120 நாட்கள் காத்திருந்து விட்டு, அதன் பிறகு வேறு யாருக்கு வேண்டுமானாலும் விற்று விட முடியும். இந்தக் கொள்கையை இன்றைக்கு ரத்து செய்திருக்கிறோம். வேண்டுமான அளவுக்கு, ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளானாலும், இன்று இருக்கின்ற சட்டப்படி அந்த அமைப்புகளை வைத்துக்கொள்ளலாம். ஆனால், இப்போதே நிலத்தை அரசினிடத்திலே கொடுத்துவிட வேண்டும் என்று சட்டம் இருக்கிறது என்று சொல்கிறார்கள். முதலிலேயே அந்த மாதிரி சட்டம் இருக்கிறது என்றும் சொன்னார்கள். முதலிலே இருக்கிற சட்டம் இருக்கட்டும். இன்று இந்த நிலத்தினுடைய விலை என்ன ? இன்றைக்கு சென்னையிலே என்ன விலை? இன்றைக்கு கோயம்புத்தூரிலே நிலம் என்ன விலை? சட்டத்தில் இன்றைக்கு என்ன மார்க்கெட் விலை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதோ அந்த விலையைக் கொடுத்து வாங்க வேண்டும். முதலிலே மதிப்பு ஒன்றும் இல்லாத நிலங்கள் கூட இன்றைக்கு நல்ல நிலங்களாக, நல்ல விலையுள்ள நிலங்களாக ஆகியிருக்கின்றன. பத்தாயிரம் ரூபாய், இருபதினாயிரம் ரூபாய் என்று இருந்த நிலங்கள் இப்போது ஒரு லட்சம் ரூபாய் என்று சொல்கிறார்கள். அந்த நிலங்களின் மதிப்பு ஒரு லட்சம் ரூபாய் என்று உயர்வதற்குக் காரணம் யார் ? அதைச் செய்தது யார்? இந்த நாட்டிலே வரிப் பணத்தைப் போட்டு, இந்த நகர்த்தை ஒரு பெரிய நகரமாக ஆக்கி, ரோடு வசதி செய்து கொடுத்து, விளக்கு வசதிகள் செய்து, சினிமாக் கொட்டகைகள் எல்லாம் கட்டுகின்ற அளவுக்கு நகரத்தை வளர்ச்சியடையச் செய்திருக்கிறோம். அதற்குப் பிறகுதான் ரூபாய் 2,000 என்ற மதிப்புள்ள நிலம் இன்றைக்கு 2 லட்சம் ரூபாய் மதிப்புள்ளதாக ஆகியிருக்கிறது. அதிலே உரிமை யாருக்கு ? அதையெல்லாம் பண்ணியது யார் ? அரசுதான் செய்தது. ஆகவேதான் "உங்களுக்கு வேண்டுமென்றால் வைத்துக்கொள்ளலாம். வேண்டாமென்றால் அரசினிடத்திலேயே கொடுத்துவிடலாம்" என்று சொல்கிறோம். வேறு ஒன்றுமில்லை.



இன்றைக்கு இருக்கின்ற அரசு பணக்காரர்கள் பக்கம் போய்விட்ட என்கிறார்கள். பணக்காரர்கள் உள்ளே வேலை செய்கிறார்களா என்று கூ சொல்கிறார்கள். பணக்காரர்களைப் பற்றி எனக்கு அதிகம் தெரியு பாவேந்தர் பாரதிதாசன் சிறந்த கவிஞர், 'என்னை நத்துவாய் என எதிரிக கோடிட்டு அழைத்தாலும் தொடேன்! தொடேன்' என்று பாரதிதாச சொன்னார்கள். கோடி என்பது என்ன என்று பாரதிதாசன் குறிப்பி வில்லை. கோடி என்பதற்கு எது வேண்டுமானாலும் இருக்கலாம். மனிதனுக் மண் ஆசை, பொன் ஆசை, பெண் ஆசை என்று ஆசைகள் உண்டு. அதி எதை வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளலாம். ஆனால் எனக்கு இதை பற்றியெல்லாம் கவலை இல்லை. பாரதிதாசன் பாட்டிற்கு நான் விளக்க சொல்லக்கூடாது. நான் சாமானியன். ஆனால் என்னுடைய முற்போக் எண்ணங்களைச் சொல்வதற்கு உரிமை உண்டு. பாரதிதாசன் அவர்கள் என்னை தத்துவாயென எதிரிகள் கோடிட்டு அழைத்தாலும் தொடேன், தொடேன் என்றார்கள். ஆனால் நான் சொல்கிறேன். எதிரிகள் மட்டுமல்ல தாயை போன்ற அன்புள்ளவர்கள் தவறான காரியங்களைச் சொன்னால், நானோ இந்த அரசோ கேட்காது என்பதைப் பணிவன்புடன் இந்த அவையில் தெரி வித்துக்கொள்கிறேன். பணக்காரர்களுக்காக இந்த அரசு இல்லை என்பதை யும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள், இப்படிப் பட்ட சட்டம் வருகிறபோது, சட்ட முன்வடிவை செலக்ட் கமிட்டிக்கு அனுப் பக்கூடாதா என்று கேட்டார்கள். நான் முன்பு சட்ட முன்வடிவு கொண்டு வந்தபோதும் சொன்னேன். நிலச் சீர்திருத்தச் சட்டத்தைப் பொறுத்த வரையில், செலக்ட் கமிட்டிக்கு விடக்கூடாது என்பதல்ல. உறுப்பினர்கள் எல்லாம் நம்பிக்கைக்கு உரியவர்கள்தான். ஆனால் பேச்சுவாக்கில் அதை வெளியே விட்டால் காரியம் கெட்டுவிடுமே என்பதால்தான், இப்படிப்பட்ட சட்டம் அரசின் அவசரச் சட்டமாகத்தான் வரும், மக்களுடைய நன்மையைக் கருதி இப்படித்தான் செய்வோம் என்று சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பின திரு. இராமமூர்த்தி அவர்கள்கூட சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் எனக்கு நெருங்கியவர். அவர் மீது எனக்கு நம்பிக்கையுண்டு. என் மீதும் அவருக்கு நம்பிக்கை உண்டு. இருந்தாலும் பேச்சு வாக்கில் தவறிச் சொல்லிவிட்டால் நிலச்சீர்திருத்தம் பற்றிப் பேச்சுவாக்கிலே சொல்லிவிட்டால், "இங்கே ந மிடத்திலே அமைச்சர் எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் சொல்லிவிட்டா கள்" என்று ஆகிவிடும் என்பதற்காகத்தான் நான் சொல்லவில்லை,

THIRU K. RAMAMOORTHI: Sir, it is an aspersion on my conduct.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** அங்கத்தினர் அவர்கள் நம்பிக்கையானவர், அவர் உண்மையானவர். பேச்சு தலைவர்களாக இப்படிப் பட்ட நிலச்சட்டம் வர இருக்கிறது என்று ஒரு நல்ல நோக்கத்தில் சொல்லி விடலாம். அப்படிக்கூட வெளியாக வேண்டாம் என்பதால்தான் சொல்ல வில்லை. நிலச் சீர்திருத்தம் என்ற அளவிலேதான் சொன்னேன். நீங்கள் எத்தனை கேள்விகள் கேட்டாலும், நிலச்சீர்திருத்தம் பற்றி நான் ஊமை யாகத்தான் இருப்பேன். எங்கே கேட்டாலும் அதைப்பற்றிச் சொல்ல மாட்டேன். அதைச் சொல்வது நல்லதல்ல. 1962-ல் வந்தபோது நிலச் சீர்திருத்தச் சட்டம் 1958-59-லேயே வெளியே தெரிந்து, என்ன ஆயிற்று என்பது பற்றி உங்களுக்குத் தெரியும்

THIRU A. R. DAMODARAN: Sir, when I referred to the reference to a Select Committee, I did not refer to this particular Ordinance where he wanted to introduce it with retrospective effect. We are not so inexperienced as to expect that. I was referring to the parent Act, the Urban Land Ceiling Act, Act 24 of 1978 which could have been referred to a Select Committee without any leakage of any secret proposals because that was an Ordinance of 1976.

**திரு. க. இராமமூர்த்தி:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேள்விகளுக்கு பதில் சொல்லமாட்டேன் என்று சொன்னார்கள். அனுமதிக்காமல் இருப்பது என்பது வேறு. அனுமதித்த பிறகு கேள்வி கேட்டால் பதில் சொல்வதுதான் முறையே தவிர, அந்த பதிலை மறைத்து வைப்பது அவை உறுப்பினர்களை, அவையையே நம்பவில்லை என்ற நிலைமையைத்தான் உருவாக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் இந்தச் சட்டத்தைப்பற்றிச் சொன்னதால் தான், நானும் அதைப்பற்றிச் சொன்னேன். நாம் பேசிக்கொண்டிருப்பது இந்தச் சட்ட முன்வடிவைப்பற்றி. அவர்கள் நீண்டகாலமாக அனுபவம் மிக்க ஒரு பார்லிமெண்டேரியன். இங்கே தேவைப்பட்டதை எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். நான் இந்தச் சட்டத்தைப் பற்றிச் சொன்னதாகத் தான் எடுத்துக்கொண்டேன். திரு. இராமமூர்த்தி அவர்கள் ஒரு கருத்தை தெரிவித்தார்கள். நான் சொன்னது அவையிலே என்பதல்ல, வெளியிலே கேட்கிறபோது நான் சொல்லமாட்டேன் என்பதற்காகச் சொன்னேன்.



களைப் பற்றி எல்லாம் என்னிடம் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அது வரப் போகிறதா, இது வரப்போகிறதா என்று கேட்கிறார்கள். எல்லாவற்று க்கும் வராது, வராது என்று சொல்லிக்கொண்டிருக்கிறேன்.

மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்தச் சட்டத்திலே இருக் ன்ற விஷயங்கள் எல்லாம் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆனால் இன்றைக்கு ிரு. தாமோதரன் அவர்கள் சொன்னதுபோல, எவ்வளவு வேண்டுமானாலும் லம் வைத்துக்கொள்ள முடியாது என்பதல்ல. திரு. இராமமூர்த்தி அ கள் ஒன்றைச் சொன்னார்கள். அவர்களாகவே கொடுக்க வேண்டும் எ று சொன்னார்கள். நிலம் அதிகம் உள்ளவர்கள் தாங்களாகவே கொ க்க வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதிகமான நிலத்தை வைத் ருப் பவர்களிடமிருந்து அதிகமான நிலத்தை எடுத்துக்கொள்ள அரசுக்கு அதிக ரம் இருக்கிறது. தாங்களாகவே முன்வந்து நிலத்தைக் கொடுக்க வேண்டும் எ று உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். நம் அங்கத்தினர் திரு. வீரா மி அவர்கள்கூட சொன்னார்கள்.

(பிற்பகல் 7-20)

அது மட்டுமல்ல, திரு. இராமமூர்த்தி அவர்கள் 'ஆபட்ஸ்பரி' பற் ி சொன்னார்கள். இன்றைக்கு இந்தச் சட்டத்தைக் கொண்டு வரு ற போது, உங்களை ஒன்று கேட்டுக்கொள்வேன். நாமெல்லாம் ஒரு அவை ய் மூலமாக வளர்ந்து வந்திருக்கிறோம். ஒரு சட்டத்தை எண்ணிப் பார்க் ம் போது, பொதுப்படையாக எண்ணிப் பார்க்க வேண்டும். அப்படி இன்றை ந் எப்படிப்பட்ட நிறுவனங்கள் பாதிக்கப்படுகின்றன என்று பார்க்கும்போ ு, எந்த நிறுவனமும் பாதிக்கப்படவில்லை. கல்விச்சாலைகளானாலும், த ம சாலைகளானாலும், மத ஸ்தாபனங்களானாலும், அவர்கள் நிலம் வைத் ்ள கொள்ளலாம். ஆனால் அந்த நிலங்களை மாற்றுகிறபோது அரசு தலைய ி இறது. அதைப்பற்றிச் சொல்லும்போது, முதலிலே என்ன விலை விற்ற . இன்றைக்கு என்ன விலை விற்கிறது என்பதையெல்லாம் சொன்னார்க . 'ஆபட்ஸ்பரி' பற்றியும் சொன்னார்கள். 'ஆபட்ஸ்பரி'யை வாங்கவேண் ு மென்று அரசு எண்ணியது உண்மை. உறுப்பினர் கேள்வி போட்டால், நா விவரங்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். 'ஆபட்ஸ்பரி' பற்றி பேச வேண்டுமென்ற பேச்சு எடுக்கப்பட்டது. அதை 'அக்யுசிஷன்' செய் வேண்டுமென்று ஆர்டர் போட்டார்கள். ஆனால் 'அக்யுசிஷன்' செய்யும்போ என்ன விலையோ அதைவிட 3 லட்சம் ரூபாய்கூட வருகிறது அக்யுசிஷ சார்ஜ். ஆனால் பேச்சுவார்த்தையில் 3 லட்சம் ரூபாய் குறையும். பேச

வார்த்தையில் செய்தால், தவறாகக் கருதுவார்கள், 3 லட்சம் ரூபாய் பணம் போனால் போகட்டும் என்று சொல்லி 'அக்யுசிஷன்' மூலமாக எடுக்க வேண்டுமென்ற கருத்து நிலவியது. நான் அப்போது ஒரு கருத்தைச் சொன்னேன். அரசுக்கு 3 லட்சம் ரூபாய் வருகிறது ; யாராவது தவறாக 3 லட்சம், 4 லட்சம் ரூபாய் வாங்கிக்கொண்டேன் என்று சொன்னால்கூட, அதை சமுதாயத்திற்காக ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். ஆகையால் பேச்சு வார்த்தையில் முடிக்கலாமென்று சொன்னேன். எனவே பேச்சு வார்த்தையில் முடிக்கப்பட்டது. எல்லாம் நடந்துவிட்டது. அதற்கு 42 லட்சம் ரூபாய் கொடுப்பதாகவும் முடிவெடுக்கப்பட்டது. ஆனால் பேச்சு வார்த்தையை நான் நடத்திக்கொண்டிருக்கும்போது, ஒன்றை எண்ணிக்கொண்டிருந்தேன். இந்த நிலம் எவ்வளவு ஏக்கர் இருக்கிறது அக்யுசிஷனில் எவ்வளவு விலையாகும் சிலிங் எவ்வளவு விலையாகும் என்பதையெல்லாம் எண்ணிப் பார்த்துக் கொண்டிருந்தேன். அந்த நிலைமையில் அவசரமாக எல்லோரையும் ஒருநாள் கூப்பிட்டுப் பேசினேன். பிறகு இந்த விஷயங்களையெல்லாம் முதலமைச்சரவர்களிடம் சொன்னேன். அவர் அமெரிக்கா போக இருந்தார். இன்றைக்கு 42 லட்சம் ரூபாய் என்று பேச்சு வார்த்தையில் முடிந்திருக்கிறது. இன்னும் 5 நாட்களுக்குள் செக் தர வேண்டும், அதனால் செக்கைத் தயாராக வையுங்கள் என்று கூடச் சொல்லிவிட்டேன். கடைசியில் அதை யாருக்காவது கொடுத்துவிட்டால் என்ன செய்வது என்பதால் எல்லாவற்றையும் தயாராக வைத்துக்கொண்டேன். இதைச் சொல்வதால் தவறாகக் கருதக்கூடாது. இருந்தாலும் சொல்கிறேன். எல்லாவற்றையும் தயாராக வைத்துக்கொண்டிருந்தேன். முதலமைச்சரவர்கள் அனுமதி கொடுத்துவிட்டார்கள். இன்றைக்கு எவ்வளவு என்றால், 42 லட்சம் ரூபாய். அக்யுசிஷன் செய்தால், 45 லட்சம் ரூபாய். ஆனால் இன்றைக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிற சட்டப்படி எடுத்தால், 12 லட்சம் ரூபாய் அல்லது 13 லட்சம் ரூபாய்தான் வரும் என்று சொல்லும்போது, 'எவ்வளவு அதிகமாகப் பணம் கொடுக்க வேண்டியிருக்கிறது, ஏமாந்துவிட்டீர்களே' என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். "இன்றைக்கு இருக்கிற சட்டப்படி அவ்வளவுதான் கொடுக்க முடியும், இன்றைக்கு இருக்கிற முறையில் 'அக்யுசிஷன்' செய்ய வேண்டுமென்றால், 45 லட்சம் ரூபாய் கொடுக்க வேண்டும். பேச்சுவார்த்தையில் 42 லட்சம் கொடுக்க வேண்டும், இன்றைக்கு இருக்கிற அதிகாரம் அவ்வளவுதான், நீங்கள் கொஞ்சம் சொன்னால் போதும்" என்று முதல்வரவர்களிடம் சொன்னேன். செய்து விடுங்கள் என்று சொன்னார்கள். உடனே டெல்லிக்கு எடுத்துச் சென்று, அங்கேயுள்ள அதிகாரிகளைப் பார்த்து, அங்கே கையெழுத்து வாங்கி, எல்லாம் செய்தோம் என்றால், எக்[illegible] [illegible]



பட்ட முதலமைச்சருக்காகவா அல்லது அமைச்சர்களுக்காகவா? சமுதாயத்தினுடைய பணம். மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்களே கேட்டார்கள். அவருக்கே தெரியும், வருவாய்த் துறை அமைச்சர் பணம் [illegible]யிருக்கமாட்டார் என்று. அவர் மனச்சாட்சிக்குத் தெரியும். இருந்[illegible]லும் செய்தித்தாளில் வர வேண்டுமென்று கேள்வி கேட்பார். பேச்சுவார்த்[illegible]தயில் வருவாய்த் துறை அமைச்சருக்கு எவ்வளவு லாபமென்று கேட்பார்கள். [illegible]னால் இதையெல்லாம் எண்ணிப் பார்த்து, இன்றைக்கு சமுதாயத்திற்கு எது நல்லதென்று எண்ணுகிறோமோ, அதைத் துணிந்து செய்கிறோம். நல்லதைச் செய்கிறோம். திரு. இராமமூர்த்தி போன்றவர்கள் இதில் குறைபாடு இருக்[illegible]றது என்று சொன்னாலும், அவைகளையெல்லாம் எதற்காகச் சொல்கிற[illegible]கள் என்றால், எச்சரிக்கையாகச் சொல்கிறார்கள். ஒரு நல்ல காரியத்[illegible]தச் செய்யும்போது ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமென்று மறைமுக[illegible]கச் சொல்லியிருக்கிறார்கள். எனவே எதிர்காலத்தில் இதைவிட எச்சரிக்[illegible]யா[illegible] இருப்போமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கடைசியாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். சென்னை[illegible]ப் பொறுத்தவரையிலும், ஒரு கிரவுண்ட் விலை 1 லட்சத்து 20 ஆயிரம் ரூ[illegible]யி[illegible]லிருந்து 2 ஆயிரம் ரூபாய்வரை இருக்கிறது. ஆனால் இன்றைக்கு [illegible]நிலம், இன்றைக்கு இருக்கிற நில உச்சவரம்புச் சட்டப்படி 11,140 ரூ[illegible]யி[illegible]லிருந்து 55 ரூபாய் வரை என்ற அளவிற்கு வரும் : இப்படி ரேஷியோ இ[illegible]ந்கிறது. இப்போது சொல்லுங்கள், இந்தச் சட்டம் கொண்டு வந்தது நியா[illegible]மா அல்லது நியாயமில்லையா என்று. மதுரையைப் பொறுத்தவரையிலும், [illegible]ரு கிரவுண்ட் விலை 81,600 ரூபாயிலிருந்து 1,548 ரூபாய் வரை இருக்கி[illegible]. இதைத் திருப்பிச் சொல்ல வேண்டும். 1,548 ரூபாயிலிருந்து 81,600 ரூ[illegible]ய் வரை இருக்கிறது. ஆனால் இப்போதைய சட்டப்படி 22 ரூபாயிலிருந்து 5,[illegible]74 ரூபாய்; கோவையில் 2,000லிருந்து 81,300 ரூபாய் மார்க்கெட் விலை, சட்[illegible]ப்படி 22 ரூபாயிலிருந்து 5,574 ரூபாய்; சேலத்தில் 600லிருந்து 1,32,000 ரூபா[illegible]ய் மார்க்கெட் விலை, சட்டப்படி 27 ரூபாயிலிருந்து 5,574 ரூபாய்; திருச்சி[illegible] 600-லிருந்து 42,300 ரூபாய்வரை ஒரு கிரவுண்ட் விலை இருக்கிறது, இன்றை[illegible] இருக்கும் சட்டப்படி 22 ரூபாயிலிருந்து 5,577 ரூபாய்; திருநெல்வேலியில் [illegible]0 ரூபாயிலிருந்து 19,675 ரூபாய் வரை ஒரு கிரவுண்ட் விலை இருக்கிறது, சட்[illegible]ப்படி 22 ரூபாயிலிருந்து 3,344 ரூபாய். இப்போது எண்ணிப் பார்க்க வேண்டு[illegible]. உங்களுக்கு ஒன்று சொல்லுவேன், ஆ[illegible]ஸ்பரியை வாங்குவது பற்றிய பேச்சு வார்த்தையில் ஏன் சில லட்சங்களை வாங்கியிருக்கக் கூடாது என்று கேட்[illegible]

வார்த்தையில் செய்தால், தவறாகக் கருதுவார்கள், 3 லட்சம் ரூபாய் பணம் போனால் போகட்டும் என்று சொல்லி 'அக்யுசிஷன்' மூலமாக எடுக்க வேண்டுமென்ற கருத்து நிலவியது. நான் அப்போது ஒரு கருத்தைச் சொன்னேன். அரசுக்கு 3 லட்சம் ரூபாய் வருகிறது ; யாராவது தவறாக 3 லட்சம், 4 லட்சம் ரூபாய் வாங்கிக்கொண்டேன் என்று சொன்னால்கூட, அதை சமுதாயத்திற்காக ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். ஆகையால் பேச்சு வார்த்தையில் முடிக்கலாமென்று சொன்னேன். எனவே பேச்சு வார்த்தையில் முடிக்கப்பட்டது. எல்லாம் நடந்துவிட்டது. அதற்கு 42 லட்சம் ரூபாய் கொடுப்பதாகவும் முடிவெடுக்கப்பட்டது. ஆனால் பேச்சு வார்த்தையை நான் நடத்திக் கொண்டிருக்கும்போது, ஒன்றை எண்ணிக்கொண்டிருந்தேன். இந்த நிலம் எவ்வளவு ஏக்கர் இருக்கிறது அக்யுசிஷனில் எவ்வளவு விலையாகும் சீலிங் எவ்வளவு விலையாகும் என்பதையெல்லாம் எண்ணிப் பார்த்துக் கொண்டிருந்தேன். அந்த நிலைமையில் அவசரமாக எல்லோரையும் ஒருநாள் கூப்பிட்டுப் பேசினேன். பிறகு இந்த விஷயங்களையெல்லாம் முதலமைச்சரவர்களிடம் சொன்னேன். அவர் அமெரிக்கா போக இருந்தார். இன்றைக்கு 42 லட்சம் ரூபாய் என்று பேச்சு வார்த்தையில் முடிந்திருக்கிறது. இன்னும் 5 நாட்களுக்குள் செக் தர வேண்டும், அதனால் செக்கைத் தயாராக வையுங்கள் என்று கூடச் சொல்லிவிட்டேன். கடைசியில் அதை யாருக்காவது கொடுத்துவிட்டால் என்ன செய்வது என்பதால் எல்லாவற்றையும் தயாராக வைத்துக் கொண்டேன். இதைச் சொல்வதால் தவறாகக் கருதக்கூடாது. இருந்தாலும் சொல்கிறேன். எல்லாவற்றையும் தயாராக வைத்துக்கொண்டிருந்தேன். முதலமைச்சரவர்கள் அனுமதி கொடுத்துவிட்டார்கள். இன்றைக்கு எவ்வளவு என்றால், 42 லட்சம் ரூபாய். அக்யுசிஷன் செய்தால், 45 லட்சம் ரூபாய். ஆனால் இன்றைக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிற சட்டப்படி எடுத்தால், 12 லட்சம் ரூபாய் அல்லது 13 லட்சம் ரூபாய்தான் வரும் என்று சொல்லும்போது, 'எவ்வளவு அதிகமாகப் பணம் கொடுக்க வேண்டியிருக்கிறது, ஏமாந்துவிட்டீர்களே' என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். "இன்றைக்கு இருக்கிற சட்டப்படி அவ்வளவுதான் கொடுக்க முடியும், இன்றைக்கு இருக்கிற முறையில் 'அக்யுசிஷன்' செய்ய வேண்டுமென்றால், 45 லட்சம் ரூபாய் கொடுக்க வேண்டும். பேச்சுவார்த்தையில் 42 லட்சம் கொடுக்க வேண்டும், இன்றைக்கு இருக்கிற அதிகாரம் அவ்வளவுதான், நீங்கள் கொஞ்சம் சொன்னால் போதும்" என்று முதல்வரவர்களிடம் சொன்னேன். செய்து விடுங்கள் என்று சொன்னார்கள். உடனே டெல்லிக்கு எடுத்துச் சென்று, அங்கேயுள்ள அதிகாரிகளைப் பார்த்து, அங்கே கையெழுத்து வாங்கி, எல்லாம் செய்தோம் என்றால், [illegible]



பட்ட முதலமைச்சருக்காகவா அல்லது அமைச்சர்களுக்காகவா? சமுதாயத்தினுடைய பணம். மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்களே கேட்பார்கள். அவருக்கே தெரியும், வருவாய்த் துறை அமைச்சர் பணம் வாங்கியிருக்கமாட்டார் என்று. அவர் மனச்சாட்சிக்குத் தெரியும். இருந்தாலும் செய்தித்தாளில் வர வேண்டுமென்று கேள்வி கேட்பார். பேச்சுவார்த்தையில் வருவாய்த் துறை அமைச்சருக்கு எவ்வளவு லாபமென்று கேட்பார்கள். ஆனால் இதையெல்லாம் எண்ணிப் பார்த்து, இன்றைக்கு சமுதாயத்திற்கு எது நல்லதென்று எண்ணுகிறோமோ, அதைத் துணிந்து செய்கிறோம். நல்லதைச் செய்கிறோம். திரு. இராமமூர்த்தி போன்றவர்கள் இதில் குறைபாடு இருக்கிறது என்று சொன்னாலும், அவைகளையெல்லாம் எதற்காகச் சொல்கிறார்கள் என்றால், எச்சரிக்கையாகச் சொல்கிறார்கள். ஒரு நல்ல காரியத்தைச் செய்யும்போது ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமென்று மறைமுகமாகச் சொல்லியிருக்கிறார்கள். எனவே எதிர்காலத்தில் இதைவிட எச்சரிக்கையாக இருப்போமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கடைசியாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். சென்னையைப் பொறுத்தவரையிலும், ஒரு கிரவுண்ட் விலை 1 லட்சத்து 20 ஆயிரம் ரூபாயிலிருந்து 2 ஆயிரம் ரூபாய்வரை இருக்கிறது. ஆனால் இன்றைக்கு அந்த நிலம், இன்றைக்கு இருக்கிற நில உச்சவரம்புச் சட்டப்படி 11,140 ரூபாயிலிருந்து 55 ரூபாய் வரை என்ற அளவிற்கு வரும் : இப்படி ரேஷியோ இருக்கிறது. இப்போது சொல்லுங்கள், இந்தச் சட்டம் கொண்டு வந்தது நியாயமா அல்லது நியாயமில்லையா என்று. மதுரையைப் பொறுத்தவரையிலும், ஒரு கிரவுண்ட் விலை 81,600 ரூபாயிலிருந்து 1,548 ரூபாய் வரை இருக்கிறது. இதைத் திருப்பிச் சொல்ல வேண்டும். 1,548 ரூபாயிலிருந்து 81,600 ரூபாய் வரை இருக்கிறது. ஆனால் இப்போதைய சட்டப்படி 22 ரூபாயிலிருந்து 5,[illegible]4 ரூபாய்; கோவையில் 2.000விருந்து 81,300 ரூபாய் மார்க்கெட் விலை, சட்டப்படி 22 ரூபாயிலிருந்து 5,574 ரூபாய்; சேலத்தில் 600லிருந்து 1,32,000 ரூபாய் மார்க்கெட் விலை, சட்டப்படி 27 ரூபாயிலிருந்து 5,574 ரூபாய்; திருச்சியில் 600-லிருந்து 42,300 ரூபாய்வரை ஒரு கிரவுண்ட் விலை இருக்கிறது, இன்றைக்கு இருக்கும் சட்டப்படி 22 ரூபாயிலிருந்து 5,577 ரூபாய்; திருநெல்வேலியில் [illegible]0 ரூபாயிலிருந்து 19,675 ரூபாய் வரை ஒரு கிரவுண்ட் விலை இருக்கிறது, சட்டப்படி 22 ரூபாயிலிருந்து 3,344 ரூபாய். இப்போது எண்ணிப் பார்க்க வேண்டும். உங்களுக்கு ஒன்று சொல்லுவேன், ஆட்டோ கம்பெனியை வாங்குவது பற்றிய பேச்சு வார்த்தையில் ஏன் சில லட்சங்களை வாங்கியிருக்கக் கூடாது என்று கேட்

6. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

## A. Statutory Rules and Orders.

112. Notification issued with G.O. Ms. No. 104, Commercial Taxes and Religious Endowments, dated the 5th February 1979 in regard to an amendment to rule 3 of the Utilisation of Surplus Funds Rules, [Laid on the table of the House under section 116 (3) of the Tamil Nadu Religious and Charitable Endowments Act, 1959 (Tamil Nadu Act 22 of 1959.)]

## *B. Reports, Notifications and Other Papers.*

* 54. The Tamil Nadu Prohibition (Amendment) Bill, 1979 (L. A. Bill No. 13 of 1979), as passed by the Assembly.

& 55. The Tamil Nadu Cultivating Tenants (Protection from Eviction) Amendment Bill, 1979 (L.A. Bill No. 8 of 1979), as passed by the Assembly.

& 56. The Tamil Nadu Cyclone and Flood Affected Areas Cultivating Tenants (Temporary Relief) Amendment Bill, 1979 (L.A. Bill No. 9 of 1979), as passed by the Assembly.

& 57. The Tamil Nadu Urban Land (Ceiling and Regulation) Amendment Bill, 1979 (L.A. Bill No. 10 of 1979), as passed by the Assembly.

& 58. The Tamil Nadu Motor Vehicles Taxation (Amendment) Bill, 1979 (L.A. Bill No. 14 of 1979), as passed by the Assembly.

& 59. The Tamil Nadu Municipal Councils (Appointment of Special Officers) Amendment Bill, 1979 (L.A. Bill No. 4 of 1979), as passed by the Assembly.

& 60. The Coimbatore Municipal Council (Appointment of Special Officer) Amendment Bill, 1979 (L.A. Bill No. 5 of 1979), as passed by the Assembly.

& 61. The Madras City Municipal Corporation (Amendment) Bill, 1979 (L.A. Bill No. 6 of 1979), as passed by the Assembly.

---

* Circulated to all M.L.Cs. on 13th March 1979.

& Circulated to all M.L.Cs. on 14th March 1979.



## இணைப்பு I.

[315 ஆம் பக்கத்தில் உடுக்குறியிட்ட வினா எண் 194-க்கான விடையைக் காண்க.)

(*a*) Yes, Sir.

(*b*) Petitions alleging corruption against 342 Officers and petitions on matters other than corruption against 259 Officers have been received.

(*c*) Details about the action taken on petitions alleging corruption against officers have been furnished in Annexure I. Details about the action taken on petitions on matters other than corruption have been furnished in Annexure II.

## *ANNEXURE-I.*

1977 and 1978 (upto 30—6—1978).

| | |
|---|---|
| Total Number of Officers involved in the petitions received ... ... ... ... ... ... | 342 |
| 1. Number of Officers against whom petitions were lodged at the initial stage itself as the allegations were vague or bald and the petitions were anonymous or pseudonymous ... ... ... ... | 245 |
| 2. Number of Officers against whom petitions were lodged after receiving reports from Chief Judicial Magistrates or District Judges as there were no materials to proceed further ... ... ... | 15 |
| 3. Number of Officers against whom the petitions were forwarded to the Chief Judicial Magistrate or the District Judge for information and necessary action and disposal ... ... ... ... ... | 46 |
| 4. Number of Officers against whom secret probe was ordered ... ... ... ... ... ... | 36** |

---

** Out of 36 secret probes ordered in 1977 and in 1978 (upto 30th June 1978) Departmental Enquiries have been initiated against 2 Officers; action was dropped against 25 officers as sufficient materials, evidence, etc., were not forthcoming to prove the allegations; and such enquiries relating to 9 officers are pending.

*ANNEXURE-II.*

1977 and 1978 (up to 30—6—1978).

| | |
|---|---|
| 1. Number of Officers against whom petitions were received and in which no administrative action can be taken (since the allegations made were relating to Judicial verdicts) ... ... ... | 118 |
| 2. Number of Officers against whom the petitions were received and which were lodged at the initial stage itself as the allegations were vague or bald and the petitions were anonymous or pseudonymous ... | 44 |
| 3. Number of Officers against whom the petitions were received and they were forwarded to the District Judges or Chief Judicial Magistrates for information and for necessary action and disposal ... ... | 53 |
| 4. Number of Officers against whom the petitions were received and lodged after receiving the report from the District Judges\|Chief Judicial Magistrates as there were no materials to proceed further ... | 34 |
| 5. Number of Officers against whom the petitions were received and necessary instructions were issued after receiving reports from the District Judges\|Chief Judicial Magistrates ... ... ... ... ... | 10* |
| Total ... | 259 |

* In two cases the Officers concerned were reverted to their parent Departments.

எதிர்வாய் நீர்ப்பிடி நிலங்களுக்கும் சாதகமான முறையில் சில வேலைகளை ஏரியில் அமைக்கும் பொருட்டு பொதுப்பணித்துறை, வருவாய்த்துறை அதிகாரிகளை தற்சமயம் கலந்தாலோசித்து தக்க நடவடிக்கை எடுக்க உள்ளனர்.

1978 ஆம் வருடம் டிசம்பர் மாதம் பெய்த பெருமழையினால் நீர்ப்பிடிப்பு பகுதியிலிருந்து எண்டத்தூர் ஏரி நீர்வரத்தைப் பெற்றது. மேலும் போலம் பாக்கம் ஏரியின் உபரிநீரையும் பெற்றது. அவுரிமேடு ஏரியின் ஆயக்கட்டு கசிவுநீர் வடிகாலின் மூலம் செல்வதை, எண்டத்தூர் ஜமீன் கிராமத்தினர் அடைத்து அறுவடைக்கு தயாரான பயிர்கள் உள்ள தங்கள் நிலங்களுக்கு திருப்பி விட்டனர். இதனால் கீழ்க்கண்டுள்ளபடி கிராமங்களின் நிலங்களும் பயிர்களும் நீரில் மூழ்கி உள்ளன.

| | கிராமத்தின் பெயர் | மூழ்கியுள்ள நிலங்களின் பரப்பளவு | | மூழ்கியுள்ள பயிர்களின் பரப்பளவு | |
|---|---|---|---|---|---|
| | | ஏக்கரில் | | ஏக்கரில் | |
| 1 | அவுரிமேடு | 90 | 87 | 14 | 28 |
| 2 | பையம்பாடி | 46 | 60 | 15 | 70 |
| 3 | பெருவளி | 53 | 34 | 30 | 60 |
| | மொத்தம் | 190 | 81 | 60 | 58 |

பொதுப்பணித்துறையினர் ஜமீன் எண்டத்தூர் கிராமத்தினர் செய்த அத்து மீறிய அடைப்பை எடுக்க வேண்டும் என்று கூறினர். 8—1—1979 அன்று அடைப்பு, தாசில்தாரால் உடைக்கப்பட்டு, 10 கன அடி தண்ணீர் வடிகால் மூலம் விடப்பட்டது. 18—1—1979 அன்று மீண்டும் ஜமீன் எண்டத்தூர் கிராமத்தினர் அடைப்பு போட்டனர். 25—1—1979 அன்று பையமேடு, அவுரிமேடு, ஜமீன் எண்டத்தூர், பெருவேலி கிராமத்தினர் அடங்கிய கூட்டம் கூட்டப்பட்டு, அவர்களின் குறைகளை வழக்குரைஞர்கள் மூலம் செயற் பொறியாளர், பொதுப்பணித்துறை மற்றும் துணை ஆட்சியர் செங்கற்பட்டு ஆகிய இருவரும் விசாரித்தனர். அத்துமீறிய அடைப்பு உடன் நீக்கப்பட வேண்டும் என்று உத்திரவிடப்பட்டது. 26—1—1979 அன்று அவுரிமேடு நிலத்தையும் எண்டத்தூர் ஏரியையும் பிரிக்கும் எதிர்வாய் (மண்) தடுப்புக் கரை (Foreshore bund) எண்டத்தூர் மிராசுதாரர்களால் உடைக்கப் பட்டது என்று தந்தி வரப்பெற்றது. 27—1—1979 அன்று அத்துமீறிய அடைப்பு முழுவதுமாக நீக்கப்பட்டது.



இரண்டு உடைப்புக்கள் எதிர்வாய் தடுப்புக்கரையில் இருந்தன. அவை களும் மூடப்பட்டன. ஜமீன் எண்டத்தூர் கிராமவாசிகள் எதிர்வாய் மண் தடுப்புக்கரை வெட்டப்பட்டதால் தங்களுடைய ஏரிக்கு நீர்வரத்து குறை திருப்பதால், அதை உடனே மூடவேண்டும் என்று கேட்டுக்கொண்டனர். அத்து மீறிய செயல் மற்றும் மோதல்களை தவிர்க்கும் பொருட்டு தாசில்தார் வடி காலை மூடிவிட்டார். கிராம ஊழியர்கள், வடிகால் தடுப்புக்கரையை பாது காத்து வருகிறார்கள். அவுரிமேடு கிராமத்தில் 20 ஏக்கர் நிலங்களில் இருந்த நீர் வடிந்துவிட்டது.

மேலே கூறியவற்றில் இருந்து கவன ஈர்ப்பு அறிவிப்பில் கண்டபடி 40 ஏக்கர் மூழ்கியதாக சொல்வது சரியல்ல.

துணை ஆட்சியர், செங்கல்பட்டு நிலைமையை உன்னிப்பாக கவனிக்கும் படியும் அத்து மீறிய கலுங்குலா மேலுள்ள தடுப்புகளை சிறுகச் சிறுக நீக்கி விடும்படியும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்.

### இணைப்பு III

343 ஆம் பக்கத்தில் இனம் 5 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

## L.A. BILL No. 8 OF 1979.

(As passed by the Assembly.)

*A Bill further to amend the Tamil Nadu Cultivating Tenants (Protection from Eviction) Act,* 1976.

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirtieth Year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Cultivating Tenants (Protection from Eviction) Amendment Act, 1979.

(2) It shall be deemed to have come into force on the 12th January 1979.

2. *Amendment of section* 1, *President's Act* 36 *of* 1976.—In sub-section (3) of section 1 of the Tamil Nadu Cultivating Tenants (Protection from Eviction) Act, 1976 (President's Act 36 of 1976), for the figures, letters and words " 15th day of January 1979 ", the figures, letters and words " 15th day of July 1979 " shall be substituted.

3. *Repeal.*—The Tamil Nadu Cultivating Tenants (Protection from Eviction) Amendment Ordinance, 1979 (Tamil Nadu Ordinance 1 of 1979), is hereby repealed.

## இணைப்பு II

[342 ஆம் பக்கங்களில் இனம் 4 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டம் 17/3 ஜமீன் எண்டத்தூ கிராம சர்வே செட்டில்மெண்ட் ரிஜிஸ்டரின்படி ஜமீன் எண்டத்தூர் ஏரி 498.0 ஏக்கர் ஆயக்கட்டை உடையது. ஜமீன் எண்டத்தூர் ஏரியின் முழு நீர்மட்ட அளவு 14.59 அடி. ஏரியில் முழு அளவு நீர் நிரம்பினால் ஏரியின் உள்வாயி கீழே கண்டுள்ளபடி கிராம நிலங்கள் நீரில் மூழ்கிவிடும்.

(1) அவுரிமேடு—96.87 ஏக்கர்.

(2) பெருவெளி—இல்லை.

(3) பையம்பாடி—24.53 ஏக்கர்.

இந்தப் பரப்பளவு 1910-ஆம் ஆண்டு ஏரி உள்வாய் புறம்போக்கை நஞ்சையாக மாற்றி பட்டா கொடுக்கப்பட்டவையும் அடங்கும்.

ஒவ்வொரு வருடமும், மழைக்காலங்களில் ஜமீன் எண்டத்தூர் கிராமத்தில் உள்ள விவசாயிகள் எண்டத்தூர் ஏரி கலுங்குலாவை உயர்த்திக் கட்டுவதால் அவுரிமேடு கிராமத்தில் உள்ள நிலங்கள் நீரில் மூழ்கி பயிர்கள் சேதமுறுகின்றன. ஏரி கலுங்குலாவை உயர்த்திக் கட்டுவது 1919-ல் இருந்து சில மிராசுதார்களால் செய்யப்பட்டு வருகிறது. ஜமீன்தாரி முறை ஒழிக்கப்பட்டாலும் இம்மாதிரி கலுங்குலாவை உயர்த்துவது இன்றும் அமுலில் இருக்கிறது. இதற்கான கோர்ட் உத்தரவு ஒன்றும் இருக்கின்றது. சென்னை உயர்நீதி மன்றம் 1919-ல் வழங்கிய தீர்ப்பில் எண்டத்தூர் பெரிய ஏரி ஆயக்கட்டுதாரர்களின் உரிமையை உறுதி செய்து தீர்ப்பு அளித்துள்ளது. அவுரிமேடு விவசாயிகள் இது குறித்து ஒரு சிவில் வழக்கு தொடரலாம் என அரசு அவர்களுக்கு அறிவித்தது. அவுரிமேடு விவசாயிகளின் கோரிக்கையின் பேரில், ஏரியின் எதிர்வாயில் உள்ள அவுரிமேடு என்னும் கிராம நிலங்களை காப்பதற்காக எதிர்வாயில் ஒரு மண் தடுப்புக்கரை அமைத்து எதிர்வாய்வரத்து நீரை எண்டத்தூர் ஏரியின் வடிகாலில் திருப்பிவிட 1971 மார்ச் மாதம் அரசு முடிவெடுத்தது. செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் ஒப்புதல் பெற்று பொதுப்பணித் துறையினர் இவ்வேலையை சிறுபாசனத் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொண்டு வேலை முடிக்கப்பெற்றது. ஆனால், இது இவ்வேரியின் ஆயக்கட்டுதாரர்களுக்கு ஏற்றுக் கொள்ளத்தக்கதாக இல்லாமல் போகவே, அவர்கள் வரத்து நீர், வடிகாலில் போய்சேர அனுமதிப்பதில்லையெனத் தெரிகிறது. எனவே, ஏரியின் கீழ் உள்ள நிலங்களுக்கும்,

not have been entitled to hold out for the exemption under the said claue (iv), shall be acquired by the Government in accordance with the provisions of this Chapter :

Provided that the expression "commencement of this Act" in this Chapter shall be construed as the date on which the land ceases to be required and used for any public charitable or religious purposes.".

3. *Certain things done, actions taken, etc., to be null and void.*—Notwithstanding anything contained in any law for the time being in force, anything done or any action aken under clauses (*a*) to (*f*) of such-section (3) of section 20 of the principal Act as in force immediately before the 1st February 1979, including any permission granted or deemed to have been granted or any option exercised or agreement entered into or order made shall be deemed never to have been done, taken, granted, exercised, agreed upon or made.

4. *Repeal.*—The Tamil Nadu Urban Land (Ceiling and Regulation) Amendment Ordinance, 1979 (Tamil Nadu Ordinance 5 of 1979), is hereby repealed.

## இணைப்பு IV

360 ஆம் பக்கத்தில் இனம் 5 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

### L.A. BILL No. 9 OF 1979.

(As passed by the Assembly.)

*A Bill to amend the Tamil Nadu Cyclone and Flood affected Areas Cultivating Tenants (Temporary Relief) Act,* 1978.

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirtieth Year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Cyclone and Flood Affected Areas Cultivating Tenants (Temporary Relief) Amendment Act, 1979.

(2) It shall be deemed to have come into force on the 12th January 1979.

2. *Amendment of section* 3, *Tamil Nadu Act* 17 *of* 1978.—In section 3 of the Tamil Nadu Cyclone and Flood Affected Areas Cultivating Tenants (Temporary Relief) Act, 1978 (Tamil Nadu Act 17 of 1978) (hereinafter referred to as the principal Act), for the figures, letters and words "15th day of January 1979", the figures, letters and words "15th day of July 1979" shall be substituted.

3. *Amendment of section* 4, *Tamil Nadu Act* 17 *of* 1978.—In section 4 of the principal Act, for the figures, letters and words "15th day of January 1979", the figures, letters and words "15th day of July 1979" shall be substituted.

4. *Repeal.*—The Tamil Nadu Cyclone and Flood Affected Areas Cultivating Tenants (Temporary Relief) Amendment Ordinance, 1979 (Tamil Nadu Ordinance 2 of 1979), is hereby repealed.



## இணைப்பு V

361 ஆம் பக்கத்தில் இனம் 5 (3)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

### L.A. BILL No. 10 OF 1979.

(As passed by the Assembly.)

*A Bill to amend the Tamil Nadu Urban Land (Ceiling and Regulation) Act,* 1978.

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirtieth Year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Urban Land (Ceiling and Regulation) Amendment Act, 1979.

(2) (*a*) The provisions of this Act, except section 2, shall be deemed to have come into force on the 1st February 1979.

(*b*) Section 2 shall be deemed to have come into force on the 17th May 1978.

2. *Amendment of section* 20, *Tamil Nadu Act* 24 *of* 1978.—For sub-section (3) of section 20 of the Tamil Nadu Urban Land (Ceiling and Regulation) Act, 1978 (Tamil Nadu Act 24 of 1978) (hereinafter referred to as the principal Act), the following sub-section shall be substituted, namely :—

"(3) Notwithstanding anything contained in any law for the time being in force,—

(*a*) no public charitable or religious trust (including wakf) referred to in clause (iv) of sub-section (1) holding any vacant land in excess of the extent of land which excess land such trust would not have been entitled to hold but for the exemption under this section shall transfer any such excess land or part thereof by way of sale, mortgage, gift, lease or otherwise and any transfer of such excess land or part thereof in contravention of the provisions of this clause shall be null and void ;

(*b*) if, at any time, the land held by such public charitable or religious trust (including wakf) referred to in clause (iv) of sub-section (1) ceases to be required and used for any public charitable or religious purposes, the provisions of this Act shall, with immediate effect, apply to such land and accordingly any vacant land in excess of the extent of land which excess land such trust would

தமிழ்நாடு சட்டமன்ற மேலவை.

வெள்ளிக்கிழமை, 1979 மார்ச் 16.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. ஸ்ரீலங்கா நாடாளுமன்றத்தின் எதிர்க் கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கத்திற்கு வரவேற்பு.

மாண்புமிகு மேலவைத் தலைவ: ஸ்ரீலங்கா தமிழர் கூட்டணியின் தலைவரும், ஸ்ரீ லங்கா நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவருமான திரு. அமிர்தலிங்கம் அவர்கள் தம் துணைவியாருடன் இங்கே வந்திருக்கிறார்கள். அவர்களை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அறிமுகப்படுத்துகிறேன்.

அந்த நாட்டின், தமிழினத்தின் இணையற்ற தலைவராக அவர்கள் விளங்குகிறார்கள். கலாச்சாரத்தாலும், மொழியாலும் தம்மோடு நெருங்கிய தொடர்புடையவர்கள். அவர்களை இந்த அவையின் சார்பில் வரவேற்கிறேன்.

### 2. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

*Arrest of Police Officer.*

* 200-A. *Q.*—THIRU V. THANGAPANDIAN: Will the Hon the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that the Inspector of Police of South Vasal Circle, Madurai City, was arrested on 18th January 1979 by the Vigilance and Anti-Corruption Department;

(*b*) if so, the charges on which he was arrested; and

(*c*) the action taken against him?

இருக்கும் என்று புரிந்துகொள்ள முடிகிறது. இனிமேல் இப்படிப்பட்ட குற்றவாளிகளைப் பிடிப்பவர்களேகூட 'அரசாங்கம் வருஷக் கணக்கில் வாய்தா வைக்கும்போது, நாம் ஏன்டா பிடிக்க வேண்டும்?' என்று சோர்ந்து விடுவார்கள். எனவே இந்த முறை நல்லதுதானா என்று அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: அரசாங்கத்தைப் பொறுத்த வரையில், சில நடைமுறைகளைத் தொடர்ந்து பின்பற்ற வேண்டியிருக்கிறது. ஒருவர்மீது குற்றம் சாட்டப்பட்ட உடனேயே அவரைக் குற்றவாளி என்று கருதிவிட முடியாது. குற்றம் சாட்டப்பட்டவர் என்றுதான் அவரைச் சொல்லுகிறோம். சில முறைகளையும், சில நியதிகளையும் பின்பற்றும்போது, காலதாமதம் ஏற்படும். இந்த அதிகாரியைப் பொறுத்தவரையில், உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. எட்டு மாத காலத்தில் பதவியிலிருந்து அவர் தாற்காலிகப் பதவி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். வழக்கு, நீதி மன்றத்தில் தொடர்ந்து நடைபெறும். வழக்கு விரைவாக நடக்க வேண்டும் என்று அரசு வலியுறுத்தும்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: மதுவிலக்கு சம்பந்தமாக காவல் நிலையங்களுக்கு 'மாமூல்' போவது என்பது சகஜமாக, உலகமறிந்த விவரமாக இருக்கிறது. தற்போது ஒரு காவல் துறை ஆய்வாளர்மீது மட்டும் நடவடிக்கை எடுத்ததாகச் சொல்லப்படுகிறது. சென்ற ஆண்டு உத்தேசமாக எத்தனை அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்ற தகவலை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

(பிற்பகல் 4-10)

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: அதுதான் நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். தனிக் கேள்வி போட்டால், கேள்விக்குத் தக்கபடி, நான் தெளிவாக விளக்கம் தர முடியும்.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன்: இந்த வழக்கில் 'சார்ஜ் ஷீட்' போடப் பட்டுள்ளதா? அப்படி இல்லையென்றால், எப்போது போடப்படும்?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: உடனடியாக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டியதாக இருக்கிறது.





## State Guests.

* 200-B. *Q.*—THIRU V. THANGAPANDIAN (on behalf of THIRU K. RAMAMOORTHI): Will the Hon. the Chief Minister be pleased to state :

(*a*) whether it is a fact that the State Guests happened to stay in the Private Hotels; and

(*b*) if so, the expenditure incurred therefor by the Government during the last financial year (1977-78)?

## அரசு விருந்தினர்கள்.

திரு. வே. தங்கப்பாண்டியன் (திரு. க. இராமமூர்த்தி சார்பில்): மாண்புமிகு முதல்-அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசு விருந்தினர்கள் தனியார் உணவு விடுதிகளில் தங்க நேர்ந்தது என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதன் விளைவாக அரசுக்கு கடந்த நிதியாண்டில் (1977-78) ஏற்பட்ட செலவு எவ்வளவு?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது (மாண்புமிகு முதல் அமைச்சர் சார்பில்): (அ) ஆம்.

(இ) அரசுக்கு கடந்த நிதி ஆண்டில் (1977-78) அரசு விருந்தினர்கள் தனியார் உணவு விடுதிகளில் தங்க நேர்ந்தபோது ஏற்பட்ட செலவு ரூ. 13,447.20 பைசா.

திரு. வே. தங்கப்பாண்டியன்: இந்த அரசு விருந்தினர்கள் தமிழக அரசின் சார்பிலே வரவழைக்கப்பட்ட விருந்தினர்களா? இல்லை, மத்திய அரசின் சார்பிலே வரவழைக்கப்பட்ட விருந்தினர்களா? மத்திய அரசாங்கத்திலிருந்து அமைச்சர்களோ, ஜனாதிபதியோ, வேறு மாநிலங்களிலுள்ள பிரதிநிதிகளோ இங்கே வந்தபோது, அவர்களை வேறு இடங்களில் தங்க வைத்ததினால் இந்தச் செலவு ஏற்பட்டதா? அப்படியானால், எந்தெந்த விருந்தினர்கள் எங்கெங்கு தங்கினார்கள் என்றும் அவர்களுக்கு எவ்வளவு செலவு ஏற்பட்டது என்றும் விவரங்கள் அமைச்சர் அவர்கள் தருவார்களா?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: சுருக்கமாகக் கேட்டாலும், நிறைய விளக்கங்களை எதிர்பார்க்கின்ற வகையில் கேட்டிருக்கிறார்கள். மத்திய அரசின் சார்பிலே விருந்தினர்களாக வருகின்றவர்கள், தமிழகத்திற்கு

[1979 மார்ச் 16

## காவல்துறை அதிகாரி கைது

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரை நகர், தெற்கு வாசல் வட்டாரக் காவல் துறை அதிகாரி (Inspector of Police) 18—1—1978 ஆம் நாளன்று உஷார் மற்றும் லஞ்சத் தடுப்புத் துறையினரால் கைது செய்யப்பட்டார் என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அவர் எந்தக் குற்றத்திற்காக கைது செய்யப்பட்டார் ?

(உ) அவர் மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது (மாண்புமிகு முதலமைச்சர் சார்பில்) :** (அ) ஆம்.

(இ) மதுரையைச் சேர்ந்த கருப்பண்ணத் தேவர் என்பவரையும், அவருடைய குடும்பத்தினரையும், மதுவிலக்குக் குற்றத்திற்காக நடவடிக்கை எடுக்காமலிருப்பதற்காக அவரிடமிருந்து ரூபாய் 200 லஞ்சம் கேட்டு வாங்கும் போது கைது செய்யப்பட்டார்.

(உ) இ.பி.கோ. பிரிவு 161, லஞ்ச ஒழிப்புச் சட்டம் பிரிவு 5 (2), 5(1)(*d*)-படி அவருக்கு எதிராக வழக்கு பதிவு செய்யப்பட்டு, புலன் விசாரணை முடிந்து அவர் மீது இலாகா பூர்வமான நடவடிக்கை எடுக்கும்படி, காவல் துறைத் தலைவருக்கு அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, காவல் துறை அதிகாரியே மதுவிலக்குக் குற்றத்திற்காக நடவடிக்கை எடுக்காமலிருக்க லஞ்சம் வாங்கியிருக்கிறார். தற்போது அவர் தாற்காலிகப் பதவி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறாரா ? அவர்மீது வழக்கு எப்போது தொடுக்கப்பட்டது ? அவர் மீது நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு எவ்வளவு காலமாகிறது ?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மதுவிலக்குக் குற்றம் புரிந்தவரிடம் லஞ்சம் வாங்க முயற்சித்து, அவரை அக்குற்றத்திலிருந்து தப்புவிக்க உடந்தையாக இருந்தார் அந்தக் காவல்துறை அதிகாரி என்ற அடிப்படையில் காவல் துறையைச் சார்ந்த அந்த ஆய்வாளர் கைது செய்யப்பட்டிருக்கிறார். காவல் துறை அதிகாரியே மதுவிலக்குக் குற்றம் புரிந்தார் என்பதற்காக அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சம்பவம் நடைபெற்றது 18—1—1978-ல், 1—9—1978-ல் அரசு ஆணை பிறப்பித்து அவர்மீது இலாக்கா பூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டு, தற்போது அவர் தாற்காலிகமாகப் பதவி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். மேல் நடவடிக்கை தொடரும்.



1979 மார்ச் 16]

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** லஞ்சத் தடுப்புத் துறையில் "பொறி வைத்துப் பிடிக்கிற முறை" கையாளப்படுகிற காரணத்தால், சிலர் வேண்டுமென்றே பாதிக்கப்படச் செய்வதாகச் சொல்லப்படுகிறதே, அது சரியா ? இந்த முறையில் ஏதாவது குறை இருந்தால், அரசிடம் அதைத் திருத்தும் திட்டமேதேனும் இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** லஞ்ச ஒழிப்பு—விழிப்புணர்ச்சித் துறை மூலமாக நடவடிக்கை மேற்கொள்ளும்போது, ஒருவர் ஒருவரைப்பற்றிப் புகார் கொடுத்தவுடனே, இந்தத் துறையைச் சார்ந்தவர்கள் உடனடியாகப் போய் அந்த அலுவலர்மீது எவ்விதமான நடவடிக்கையும் எடுப்பதில்லை. ஒருவர் ஒரு அலுவலர்மீது புகார் கொடுக்கிறார் என்றால், அதற்கான பொறுப்பை அவர் ஏற்க வேண்டும். சாட்சியம் வைத்துத்தான் இந்தத் துறை நடவடிக்கை மேற்கொள்கிறது. அப்படியும் இதன் காரணமாக அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சில நேரங்களில் பொதுமக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்களும் இப்படிப்பட்ட நடவடிக்கைகளுக்கு உள்ளாகிவிடுவதாகத் தற்போதுதான் அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறது. அதையொட்டித்தான் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள்கூட மதுரையில் பேசும் போது, அப்படிப்பட்ட சில குறைபாடுகளைப் போக்க அரசு தக்க நடவடிக்கை மேற்கொள்ளும் என்று தெரிவித்திருக்கிறார்கள். ஒட்டு மொத்தமாக இப்படி பொறி வைத்துப் பிடிக்கிற நடவடிக்கைகளைப் பொறுத்தவரையில், உள்நோக்கம் அதிகமாக இருப்பதாக இதுவரை அரசுக்குத் தகவல் வரவில்லை.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** தற்போது சம்பந்தப்பட்ட போலீஸ் அதிகாரிமீது இலாக்கா பூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். எந்தவிதமான நடவடிக்கை இலாக்கா பூர்வமாக எடுக்கப்படுகிறது என்ற தகவலை அளிப்பார்களா ? அந்த போலீஸ் இன்ஸ்பெக்டர்மீது நீதி மன்றத்திலே வழக்குத் தொடரப்பட்டிருக்கிறதா ? தொடரப்பட்டிருக்கிறது என்றால், எப்போது தொடரப்பட்டது ?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** தற்போது அந்தக் காவல் துறை ஆய்வாளர்மீது இலாக்கா பூர்வமான நடவடிக்கைதான் எடுக்கப்பட்டிருக்கிறது. இனிமேல்தான் நீதி மன்றத்தில் வழக்குத் தொடரப்படுவது குறித்து ஆராய வேண்டும். குற்றஞ்சாட்டப்பட்ட நபர்மீது சம்பந்தப்பட்ட துறையினர் பின்பற்ற வேண்டிய விதிகளின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, *prima facie* case இருக்கிறது என்றவுடனே, வழக்குத் தொடரப்படுகிறது. F.I.R. itself is part and parcel of Court proceedings. எனவே இன்னும் வழக்கு மன்றத்திற்கே போகவில்லை என்று சொல்ல முடியாது.

வருகின்றபோது, தமிழக அரசுக்குச் சொந்தமான மாளிகையில் அவர்கள் தங்குவதற்கான வாய்ப்பு இல்லாதபோது, மிக உயர்ந்த ஹோட்டல்களிலே தங்குவதற்கு அவர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள். அப்பொழுது அந்தப் பணச் செலவை நாம் ஏற்றுக்கொள்கிறோம். அதுபோல தமிழக அரசின் சார்பிலே இங்கே வரக்கூடியவர்கள், உதாரணமாக, பாண்டிச்சேரி மாநில முதலமைச்சர், மற்ற அமைச்சர்கள், வரும்போது மாநில அரசுக்குச் சொந்தமான விருந்தினர் மாளிகையில் தங்குவதற்கு இடமில்லை என்றால் அவர்களும் ஹோட்டல்களிலே தங்குகிறார்கள். எல்லாம் சேர்ந்து பொதுவான செலவு தான் இது. வெளிநாடுகளிலேயிருந்து வருகின்ற விருந்தினர்கள் கவர்னர் மாளிகையிலே தங்குகிறார்கள். அங்கு இடவசதி இல்லையென்றால் ஹோட்டல்களில் அவர்களுக்கு ஏற்பாடு செய்யப்படுகிறது. அவர்களுக்கு எவ்வளவு செலவு என்று கேட்டார்கள். நிறைய இருக்கின்றன. தலைவர் அவர்களே, வேண்டுமானால், உறுப்பினர் அவர்கள் விரும்பினால் சுருக்கமாக சொல்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : என்ன, ஒரு 50 பக்கம் போகுமா ?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : 1977-78-ஆம் ஆண்டில் வெளிநாடுகளிலிருந்து வந்து இங்கே நம்முடைய ஆளுநர் அவர்களுடைய மாளிகையில் தங்க முடியாமல் வெளியிலே தங்கினார்கள். அதன் நிமித்தம் ஏற்பட்ட செலவினங்கள் எவ்வளவு என்பதற்கான விவரம் மட்டுமே இருக்கிறது. அதற்கு முன்பு அல்லது பின்பு உள்ள தகவல் வேண்டும் என்றால், தனிக் கேள்வி போட வேண்டும். மதுரையைப் பொறுத்த அளவிலே, His Excellency the President of Ireland and his party மதுரை பாண்டியன் ஹோட்டலில் தங்கியதால், ரூ. 9,746.10 செலவு ஏற்பட்டது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU G. VASANTHA PAI: Sir, is it because of certain fadist tendencies which are prevailing in the State Guest House, restricting serving of non-vegetarian food in the Raj Bhavan, that some of the dignitaries have been forced to stay in the hotel ?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : மாநில அரசைப் பொறுத்த வரையில், அந்தமாதிரித் தகவல் இல்லை.

(திரு. ஜி. வசந்த பை மீண்டும் எழுந்தார்)

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அமைச்சர் சொல்லி முடிக்கட்டும்.



மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : மத்திய அரசினர்களுடைய விருந்தினர்களாக இங்கே வருகின்றபோது, அவர்கள் எங்கே தங்க வேண்டும் என்ற முன்னறிவிப்பு, அவர்களுக்கான நிகழ்ச்சிகள் எல்லாம் முன்னதாகவே தயாரிக்கப்பட்டு, மாநில அரசுக்கு அனுப்புகிறார்கள். அவர்கள் இங்கே வருகிறபோது, குறிப்பிட்ட இடத்தில் தங்க வாய்ப்பில்லை என்றால், அவர்கள் வேறு இடம் வேண்டும் என்று கேட்டால், நாங்கள் அதற்கான ஏற்பாடுகளைச் செய்கிறோம்.

THIRU G. VASANTHA PAI: Is the Hon. Minister aware that the President of India made reference to this in a speech which was shown on the television, that there were certain fadist tendencies which were prevailing in the State?

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இது ராஜ் பவன் சம்பந்தப்பட்ட விஷயம். ஆகவே, எச்சரிக்கையாகக் கேட்க வேண்டும்.

Thiru G. VASANTHA PAI: I am only referring to the fact that there are some fadist tendencies prevailing which prevent high-placed dignitaries being accommodated in Raj Bhavan because of the insistence on vegetarian food being served to them.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : நான் அவைகளைப்பற்றிப் பத்திரிகையிலே படித்தேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : அரசு விருந்தினர்களைத் தனியார் ஹோட்டல்களிலே தங்க வைத்ததால் ஏற்பட்ட செலவு ரூ. 13,447.20 என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பொதுவாக வெளிநாடுகளிலேயிருந்து வருகின்ற விருந்தினர்கள் நம்முடைய அரசாங்கத்தாலே மதிக்கப்பட, கௌரவிக்கப்பட வேண்டும் என்ற நிலையிலே அவர்கள் வரும்போது, இப்படி இடப் பற்றாக்குறை என்று இந்த அரசாங்கம் வெளி ஹோட்டல்களில் தங்க வைக்கின்றது. வெளிநாடுகளிலிருந்து வருகின்றவர்களைக் கௌரவிக்கின்ற, மதிக்கின்ற வகையில் இந்த விருந்தினர் மாளிகைகளை விஸ்தரித்து, அதிகமான இட வசதிகளை உண்டாக்கி அவர்கள் தனியார் ஹோட்டல்களில் தங்குகிற நிலை இல்லாமல் அரசினர் விருந்தினராகக் கௌரவித்து நல்ல முறையில் கவனிக்க வேண்டிய நடவடிக்கைகளை அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய இந்த நல்ல யோசனையை அரசு பரிசீலிக்கும்.

[1979 மார்ச் 16

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** வெளி நாடுகளிலிருந்து வருபவர்கள் ஆளுநர் மாளிகையில் தங்குவது சிறப்பு என்று கருதுகிறார்கள். இப்போது சில சந்தர்ப்பங்களில் ஆளுநர் மாளிகையில் தங்குவதில் சில நடைமுறை சங்கடங்கள் இருப்பதால், அங்கே போதிய இடவசதி இருப்பதால், ஒரு பகுதியிலே வெளிநாட்டினர் தங்குவதற்கென்று தனி மாளிகை கட்டும் திட்டம் ஒன்றை அரசு வகுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் இதே கேள்வியைத்தான் கேட்டார்கள். உறுப்பினர்களுடைய கருத்துக்கள் 'எல்லாம் பத்திரிகையிலே வெளிவருகின்றபோது,' ஆளுநர் அவர்கள் படிப்பார்கள் என்று நம்புகிறேன். எனவே, அந்தக் கருத்துக்களுக்கு செயலாக்கம் கிடைக்கும் என்று நம்புகிறேன்.

**திரு. செ. முத்துசாமி :** சமீபத்திலே 'Zambia' நாட்டுப் பிரதமர் தமிழ் நாட்டுக்கு வந்தார். அவர் இங்கே இருக்கும் லயோலா கல்லூரியிலே படித்தவர். வந்தபோது ராஜ் பவனிலே தங்குவதைத்தான் பெருமையாகக் கருதுவார்கள். ஆனால் உணவு வகையிலே, தேவையான உணவுகள் தயாரித்துக் கொடுக்கக்கூடிய நிலைமைகள் இல்லாமல் இருப்பதால், ' அவரை சோழா ஹோட்டலில் தங்கச் சொல்வது கௌரவக் குறைவானது. அப்படிப்பட்ட நிலைமைகளை மாற்றுவதற்கு இந்த அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** வெளிநாடுகளிலேயிருந்து வரக்கூடிய அரசு விருந்தினர்கள் இந்திய அரசினுடைய அழைப்பின் பேரிலே வருகிறார்கள். அவர்களுடைய உணவுப் பழக்கவழக்கங்களுக்குத் தக்கபடி, அவர்கள் விரும்புகின்ற இடங்களிலே அவர்கள் தங்குவதற்கான சூழ்நிலையை ஏற்படுத்திக்கொடுப்பது மத்திய அரசினுடைய தலையாய கடமை. அவர்கள் அந்தக் கடமையைச் செய்ய முடியாத வகையில் சூழ்நிலைகள் எற்பட்டிருக்கின்றபோது, சில நேரங்களிலே நாம் உதவி செய்கின்ற வகையிலே தான் இருக்கிறதே தவிர, இது மாநில அரசு சம்பந்தப்பட்ட விஷயம் அல்ல.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** வெளி மாநிலங்களிலே இருந்து தமிழகத்திற்கு வரக்கூடிய எம்.எல்.ஏ.-க்கள் சேப்பாக்கம், விருந்தினர் மாளிகையிலே தங்க அவர்களுக்கு அனுமதி உண்டா ? அங்கே தங்கக்கூடிய வி.அய்.பி.-க்கள் என்ன தகுதிகள் உள்ளவர்கள் ? ராஜ் பவனிலே இருக்கும் 'கெஸ்ட் அவுஸ்'-லே தங்குவதற்கு வி.அய்.பி.-க்களுக்கு இருக்க வேண்டிய தகுதிகள் யாவை ?



1979 மார்ச் 16]

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மூலக் கேள்விக்கு இது கொஞ்சம் விலகியிருந்தாலும், பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். சேப்பாக்கம் விருந்தினர் மாளிகையில் மற்ற மாநிலங்களிலேயிருந்து வருகின்ற அமைச்சர்கள், முதலமைச்சர்கள் தங்கலாம். சட்ட மன்ற உறுப்பினர்கள் வருகின்றபோது, நம்முடைய சட்ட மன்ற உறுப்பினர்கள் தங்கும் விடுதியில் தான் தங்க வேண்டும். மற்றப்படி இங்கே ஆளுநர் மாளிகையில் தங்குவது என்பது சம்பந்தமாக, மத்திய அரசு விருந்தினர்கள் வரும்போது, அவர்கள் எங்கெங்கே தங்குகிறார்கள் என்பதை முன்கூட்டியே குறித்து அனுப்புகிறார்கள். அந்த அளவிலே தான் இங்கே வந்து தங்குகிறார்கள்.

## *Law Officers' Posts.*

* 201 *Q.*—THIRU C. R. LAKSHMIKANDHAN (on behalf of THIRU D. SANTOSHAM): Will the Hon. the Minister for Law be pleased to state—

(*a*) whether it is a fact that several Law Officers' Posts like Government Pleader, Public Prosecutor, etc., remain unfilled for several months; and

(b) if so, the reasons therefor?

### சட்டத்துறை அதிகாரிகள் பதவிகள்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் (திரு. டி. சந்தோஷம் சார்பில்) :** மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசு வழக்குரைஞர், அரசு வழக்கு நடத்துநர் போன்ற சட்டத்துறை அதிகாரிகள் பதவிகள், பல திங்களாக நிரப்பப்படாமல் உள்ளன என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

The Hon. THIRU K. NARAYANASWAMY (a) No, Sir. Only two posts are remaining unfilled.

(b) Proposals to fill up the posts of Law Officers are under the consideration of the Government.

## Sub-Jails.

*202 Q.—THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Law be pleased to state—

(*a*) whether any complaints have been received by the Government to the effect that the taluk headquarters sub-jails under the control of Deputy Tahsildars are not maintained properly ; and

(b) if so, whether there is any proposal under consideration to change the controlling authority of the sub-jails ?

சார்புச் சிறைகள்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வட்டத் தலைநகரங்களில் துணை தாசில்தார் கட்டுப்பாட்டில் இயங்கும் சார்புச் சிறைகள், சரியாக பராமரிக்கப்படவில்லை என்ற புகார்கள் அரசாங்கத்திற்கு வந்துள்ளனவா ?

(இ) ஆம் எனில், சார்புச் சிறைகளை நிர்வாகம் செய்யும் பொறுப்பை மாற்றும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

The Hon. Thiru K. NARAYANASWAMY: (a) No, Sir.

(b) The Government accepted in principle to take over the administrative control of the Sub-Jails from the Revenue Department to the Jail Department in a *phased manner*. As a first step in G.O. Ms. No. 1745, Home, dated 15th June 1977, the Government transferred the eight Sub-Jails in Chengalpattu district from the administrative control of the Revenue Department to the Jail Department. In the second step, the Inspector-General of Prisons, Madras, submitted a proposal to the Government for taking over the administrative control of all Sub-Jails in South Arcot district from the Revenue Department to the Jail Department. It is under consideration of the Government now.

திரு. வே. தங்கப்பாண்டியன் : இந்த வட்டத் தலைநகரங்களிலே அமைந்திருக்கிற சார்பு சிறைகளிலே உள்ள நிலைமைகள் மிகவும் மோசமாக இருக்கின்றன. ஒருவர் ஒரு குற்றம் சாட்டப்பட்டு கைதியாக அங்கு வந்தால், ஒரு நாளைக்கு அவருக்கு எவ்வளவு செலவழிக்க அரசு அனுமதித்திருக்கிறது ? அங்கு உள்ள நிலைமைகளைத் திருத்துவதற்கு உடனடியாக அரசு நடவடிக்கைகள் மேற்கொள்ளுமா ?



The Hon. THIRU K. NARAYANASWAMY: I regret to say that this supplementary question has nothing to do with the main question.

Thiru V. THANGAPANDIAN: Sir, my main question relates to the conditions of Sub-Jails. How can the Hon. Minister state that this does not relate to the main question? I only stated that the condition prevailing in Sub-Jails was very poor. I said that the Sub-Jails were in a bad condition and wanted to know whether the Government would be pleased to take action about that. How is this not related to the main question?

மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி : கேள்வி கேட்டிருப்பது, வட்டத் தலைநகரங்களில் துணைத் தாசில்தார் கட்டுப்பாட்டில் இயங்கும் . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அப்படியே தமிழில் படியுங்கள்.

மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி : சார்புச் சிறைகள் சரியாகப் பராமரிக்கப்படவில்லை என்ற புகார்கள் அரசாங்கத்திற்கு வந்துள்ளனவா? என்பதுதான்.

To that, I said 'No'. I there are any complaints the hon. Member may please bring them to the notice of the Government.

Thiru V. THANGAPANDIAN: Sir, I want a direct answer from the Minister. அமைச்சர் அவர்கள் இது சார்பாக உள்ளவற்றையெல்லாம் படித்துவிட்டுப் பதில் சொன்னால், நாங்கள் கேள்வியைக் கேட்க முடியும். .. Then only we will be in a position to ask questions.

The Hon. Thiru K. NARAYANASWAMY : The entire papers are with me . . . .

திரு. வே. தங்கப்பாண்டியன் : Sub-Jails are taken over by the Jail Department ஆகவே அந்த சப்-ஜெயில்களில் அடைக்கப்பட்டிருக்கிற கைதிகளுக்கு நாள் ஒன்றுக்குச் செலவாவது போதாது என்ற குறை சொல்லப்படுகிறது. அது உண்மையா இல்லையா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 4-20)

The Hon. THIRU K. NARAYANASWAMY: The hon. Member mentioned about unsatisfactory conditions. My answer was 'No, Sir'. The Government cannot anticipate what is in his mind when he says that there are unsatisfactory conditions.

Even a mosquito in the cell may be an unsatisfactory condition. Unless I am informed about the detailed nature of the unsatisfactory conditions, the Government will not be in a position to throw light on that.

THIRU G. VASANTHA PAI: Are the mosquitoes informed of that? (Laughter)

*திரு. ம. சங்கரலிங்கம் :* தாலுக்கா தலைநகரங்களில் உள்ள சிறைச் சாலைகளில் கழிப்பிடங்கள் இல்லை. சிறையில் உள்ள கைதிகள் சட்டியில் கழிவுப் பொருள்களைத் தேக்கி, மறுநாள் காலையில் கொண்டு செல்லுகிற நிலை இருக்கிறது. நோயாளியான ஒருவர் சிறைச்சாலைக்குள் வந்துவிட்டால், அங்கே இரவு முழுவதும் தூங்க முடியாத நிலை இருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், கன்னியாகுமரி மாவட்டத்தில், தக்கலையில் பிரிசன்ஸ் துறையின் கண்ட்ரோலில் இருக்கக்கூடிய சிறைச்சாலையிலே இதே நிலைதான் இருக்கிறது. அந்தச் சிறைச்சாலையின் உள்ளே போய் இருக்கக் கூடிய ஒருவர் அங்கே எட்டு நாள் தங்கியிருந்தால், சிரங்கு போன்ற நோய்களோடு திரும்பி வருகிற அவல நிலை இருக்கிறது. இதை அகற்ற அரசு முன்வருமா ?

The Hon. Thiru K. NARAYANASWAMY: It is true that in most of the Sub-Jails there are no flush-out latrines. The old type latrines are prevailing. Fortunately, this year the Government of India have made a huge grant. This Government are pressing with the scheme of converting all the latrines into flush-out latrines in due course of time because we are getting a huge amount from the Government of India.

*திரு. வே. தங்கப்பாண்டியன் :* சார்பு சிறைச்சாலைகளை தாசில்தாரிடமிருந்து சிறைச்சாலைத் துறை நேரிடையாக எடுத்துக் கொண்டதால், என்னென்ன புதிய வசதிகள் அந்த சப்-ஜெயிலில் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள் என்று அரசு எதிர்பார்க்கிறது ?

The Hon. THIRU K. NARAYANASWAMY : The hon. Member may await the management by the Jail Department itself in due course of time.

THIRU A. R. DAMODARAN: Sir, may I know if the Hon. Minister has visited any Sub-Jails since he assumed charge of office?



THE HON. THIRU K. NARAYANASWAMY : I have visited the Athur Sub-Jail and I have visited the Chidambaram Sub-Jail. The Chidambaram Sub-Jail is one of the finest and it is very well maintained by the Revenue Department. I have also gone inside the cells. For the sake of information, I may say that at least in one Central Jail I ate the bread which was hotly baked. In another jail, I ate even a little of rice when it was actually cooked and kept on a net platform.

*டாக்டர் இரா. சனார்த்தனம் :* எழும்பூர் நீதி மன்றத்தில் இருக்கிற சிறைச் சாலை, சொந்த அனுபவத்தை வைத்துச் சொல்லுகிறேன், மிகவும் மோசமாக இருக்கிறது. அங்குள்ள குறைகளைத் தீர்க்கும் யோசனை அரசுக்கு உண்டா ?

THE HON. THIRU K. NARAYANASWAMY : If the hon. Member is pleased to describe the defects in the administration of that particular Sub-Jails, the Government will certainly take very expeditious steps to remedy them.

*திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :* சார்புச் சிறைச்சாலையில் உள்ள கைதிகள் நீதிபதிகளால் 'ஜூடிஷியல் கஸ்டடியில்' வைக்கப்பட்டிருப்பதாகச் சொல்லுகிறார்கள். ஆகவே எக்சிகியூடிவ் கன்ட்ரோலை எடுத்துவிட்டு, போலீஸ் காரர்களை நீக்கி, வார்டன் போன்றவர்களைக் காவலுக்குப் போட அரசு முன்வருமா ?

THE HON. THIRU K. NARAYANASWAMY : As one who loves freedom under law, I would very much commend the step of a Warder keeping watch over a prisoner rather than a Police Officer trying to influence the prisoner when he is handed over to his custody. But the problem or the risk of the prisoner escaping even while under the custody of the Police Officers has been ever present and we have encountered a few cases like that.

*திரு. ஆற்காடு நா. வீராசாமி :* மாண்புமிகு அமைச்சர் அவர்கள், சிதம்பரம் சப்-ஜெயில் மிகவும் அருமையாகப் பராமரிக்கப்படுகிறது என்று சொன்னார்கள். அமைச்சர் அவர்கள் வருகிறார்கள் என்ற தகவலை முன்கூட்டியே தெரிந்து, ஒரு சமயம் அப்படிச் செய்தார்களா ? அமைச்சர் அவர்கள் தமிழ் நாட்டில் இருக்கக்கூடிய சப்-ஜெயில்களுக்குச் சென்று 'சர்ப்ரைஸ் இன்ஸ்பெக்ஷன்' செய்து நிலைமை எப்படி இருக்கிறது என்று அறிந்து ஒரு அறிக்கையைத் தர முன்வருவார்களா ?

THE HON. THIRU K. NARAYANASWAMY : I suppose the hon. Member Thiru Veerasami will give me the credit to discriminate between even a pre-announced visit and a surprise visit. But I may say that it is one of the best Sub-Jails maintained by the Revenue Department and there is no gainsaying that fact. In my view, my visit, which was known to the Revenue Officers has not altered the complexion in the neatness and tidiness of that Jail.

**திரு. பி. மாணிக்கம் :** சார்புச் சிறைச்சாலைகளில் கைதிகள் தப்பிக்காமல் இருப்பதற்காக காவல் துறை கண்காணிப்பது என்பது வேறு. ஆனால் சிறைகளிலே கைதிகளைப் பராமரிக்க வார்டன்களைப் போடுவது என்பது வேறு. சார்புச் சிறைச்சாலைகளில் வார்டன்கள் உணவு வழங்குகிறார்கள் என்றால், ரேஷன் ஒழுங்காகத் தரப்படும். நேரிடையாகக் காவல் துறையினரின் கண்காணிப்பில் இருக்கும் இடத்தில் ரேஷனும் கிடைக்காது, கைதிகளை நடத்துவதிலும் நிதானம் இருக்காது. ஆகவே எல்லாச் சிறைச்சாலைகளிலும் வார்டன்களை நியமிக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. THIRU K. NARAYANASWAMY : I would request the hon. Member to give these suggestions either to me or to the Chairman, Prisons Reforms Commission so that the Commission may go into the entire matter and make the necessary recommendations.

THIRU G. VASANTHA PAI : Will the Hon. Minister state whether the scheme for having open air jails in the State will be implemented soon?

The Hon. THIRU K. NARAYANASWAMY : I would very respectfully submit that this question does not arise from the main question at all.

THIRU G. VASANTHA PAI : Sir, I am only asking the Hon. Minister whether such a scheme for having open-air jails will be implemented.

**திரு. ஆ. பாலசுப்ரமணியம் :** சார்புச் சிறைச்சாலைகளில் இருப்பவர்களுக்கு, காலை, மதியம், மாலை ஆகிய நேரங்களில் எந்த வகையான உணவு வழங்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்களே பார்த்திருப்பார்களே.

THE HON. THIRU K. NARAYANASWAMY : Sir, again the hon. Member is requested to put a separate question.



**திரு. ஆ. திராவிடமணி :** அரசியல் காரணத்திற்காகக் கைது செய்யப்படும் அரசியல் கைதிகளை இனிமேல் ஒரு முறையாவது சிதம்பரம் சப்-ஜெயிலுக்கு அனுப்ப வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். (பலத்த சிரிப்பு)

THE HON. THIRU K. NARAYANASWAMY : Sir, the Chidambaram Sub-Jail itself has a limited space. Therefore, Government may not consider such a request.

*Office of Inspectress of Girls Schools, Madurai.*

* 203 *Q.*—THIRU C. R. LAKSHMIKANDHAN (on behalf of THIRU P. R. THOMAS) : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that more than hundred High Schools are under the jurisdiction of the Inspectress of Girls Schools, Madurai; and

(*b*) if so, number of clerical staff allotted to the Office of the Inspectress of Girls Schools?

**மதுரை மகளிர் பள்ளி ஆய்வாளர் அலுவலகம்**

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் (திரு. பி. ஆர். தாமஸ் சார்பில்) :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நூற்றுக்கு மேற்பட்ட உயர்நிலைப் பள்ளிகள், மதுரை மகளிர் பள்ளி ஆய்வாளரது அதிகார வரம்புக்குள் உள்ளன என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், மகளிர் பள்ளி ஆய்வாளர் அலுவலகத்திற்கு ஒதுக்கப்பட்ட எழுத்தர் பணியாளர்கள் எத்தனை பேர் ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) ஆம்.

(இ) மதுரை மகளிர் பள்ளி ஆய்வாளர் அலுவலகத்திற்கு அனுமதிக்கப்பட்ட எழுத்தர் நிலை தட்டச்சர் உள்பட (clerical staff) ஊழியர்கள் பத்து பேர்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** ஆய்வாளர் அலுவலகத்தில் முன்பு ஒரு காலத்தில் எந்த அளவுக்கு எழுத்தர்களும், மற்றவர்களும் இருந்தார்களோ அதே அளவுக்குத்தான் இப்போதும் பள்ளிகளின் எண்ணிக்கை அதிகரித்த போதிலும் இருப்பதால், அங்கே அலுவலகப் பணிகள் தேங்கிக் கிடக்கின்றன.

ஆக்கியிருக்கிறார்கள். அங்கே அதிகக் கட்டணம் எல்லாம் வசூலிக்கின்ற சூழ்நிலைகள் இருப்பதால், நாட்டின் நலன் கருதியும், மக்கள் நலன் கருதியும், அந்த மாதிரிப் பள்ளிகளை அரசு கண்காணிப்பதற்கும், அவைகளை முறைப் படுத்துவதற்கும் அரசு விரைவில் பரிசீலனை செய்யுமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இந்தப் பிரச்சினைகள்பற்றிக் கல்விச் செயலாளர், பள்ளிக் கல்வி இயக்குநர் இவர்களுடன் 7—12—1978 அன்று தனிக் குழுவில் விவாதிக்கப்பட்டது. அறிக்கை ஒன்று கொடுக்கப் பட்டுள்ளது. மாநிலத்தில் எத்தனை பள்ளிகள் அங்கீகரிக்கப்பட்டன? தனியார்கள் பள்ளி, அங்கீகரிக்கப்படாத பள்ளிகள் பற்றியும் விவாதிக்கப் பட்டது. அவைகளை எவ்வாறு கட்டுப்படுத்தலாம் என்று ஆராய்ந்து அரசுக்கு அறிக்கை அனுப்பும்படி கேட்கப்பட்டிருக்கிறது. பள்ளிக் கல்வி இயக்குநரின் பதில் இன்னும் வரவில்லை. அது வந்தவுடன் கவனிக்கலாம்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** நர்சரி பள்ளிகளை ஆய்வு செய்தபோது, அந்தக் குழு மூன்று அம்சங்களைப் பற்றிக் குறிப்பிட்டது. அதிகபட்சக் கட்டணம், ஆசிரியர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம், ஆசிரியர்களுக்குக் குறைந்தபட்சக் கல்வித் தகுதி என்ற மூன்று அம்சங்களை உடனடியாக அமுல் படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று செய்தித் தாளிலே விளம்பரம் செய்யப்பட்டது. இந்த மூன்று விஷயங்களிலே உடனடியாக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். நர்சரி பள்ளிக்கூடங்களை அரசின் கட்டுப்பாட்டிற்குக் கொண்டு வர அரசு என்ன திட்டம் வைத்திருக்கிறது?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இதற்காக என்று நியமிக்கப்பட்ட குழு பல பரிந்துரைகளைச் செய்திருக்கிறது. அது விரிவாக இருக்கிறது. அந்தப் பரிந்துரைகள் ஆராயப்பட வேண்டும் என்று பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களும், செயலாளர் அவர்களும் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். பள்ளிக் கல்வி இயக்குநருடைய அறிக்கை கிடைத்த பிறகு, இந்த அரசு பரிந்துரைகளை ஆராய்ந்து அவைகளை எப்படிச் செயல்படுத்தலாம் என்று முடிவு செய்யும்.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** நர்சரி பள்ளிகளில் அதிகபட்சம் பீஸ் எவ்வளவு? குறைந்தபட்சமாக வாங்கக்கூடிய பீஸ் எவ்வளவு?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இவைகள் நம்முடைய கட்டுப் பாட்டிற்கு இன்னும் வரவில்லை. அதுபற்றிய விவரம் என்னிடம் இல்லை. நர்சரி பள்ளிகள் நிறைய இருக்கின்றன. அது உண்மைதான். இந்தப் பள்ளி களுக்கு மக்களைப் பெற்றோர்கள் அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள் என்பது உண்மைதான். அந்த வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கான கல்விப் பணியை,



தேவையான வசதிகளைச் செய்யவில்லை என்பது உண்மைதான். அந்த முறை யிலேயே அவைகள் வளர்ச்சி பெற்றுக்கொண்டிருக்கின்றன. அவைகள் வியாபாரம் போல் நடந்து கொண்டிருக்கின்றன. அந்தக் குழுவின் பரிந்துரைகள் இப்போதுதான் வந்திருக்கின்றன. இருக்கின்ற நிலைமைகளுக்கு ஏற்ப நாம் முடிவு எடுக்கவேண்டி வரும்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே தமிழ் நாட்டிலே நர்சரிப் பள்ளிகளைப்பற்றிய ஆய்வை கல்வித் துறை மேற்கொண் டிருக்கிறது. இதுவரை மொத்தம் எத்தனை பள்ளிகள் இருக்கின்றன என்ற விவரம் வந்திருக்க வேண்டும். மொத்தம் எத்தனை பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன என்ற விவரம் அமைச்சர் அவர்களிடம் இருக்கின்றதா? அதிலே அரசு அங்கீகாரம் பெற்ற நர்சரி பள்ளிகள் எத்தனை? அங்கீகாரம் பெறாத பள்ளிகள் எத்தனை? அதுபற்றி விவரங்கள் இருந்தால், தெரிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இது பற்றிய விவரங்கள் என்னிடம் இல்லை.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** நர்சரி பள்ளிகள் குறித்து அந்தக் குழுவினுடைய பரிந்துரைகள் வந்த பின்னால், ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கலாம், அதன் பின் அது பற்றிய முடிவுகளை எடுக்கலாம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்தப் பள்ளிகளை நடத்துபவர்கள் பெரும்பாலும் தொழில் ரீதியிலே, வியாபார ரீதியிலே, வியாபார நோக்கத்தோடு நடத்துகின்றார்கள். அங்கு ஆசிரியர்களுக்கு ரூ. 75, ரூ. 100 என்றுதான் ஊதியம் கொடுக்கிறார்கள். நர்சரி பள்ளிகளிலே பயிற்சி பெற்ற ஆசிரியர்களை நியமிக்க வேண்டும். பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்குத் தருகின்ற அதே அளவு ஊதியத்தைக் கொடுக்க வேண்டும். அதைப்பற்றியும் அந்தக் குழு பரிசீலிக்குமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அந்தக் குழுவினுடைய பரிந்துரைகளை ஆய்வு செய்யும்போது, இந்த அடிப்படையிலேயும் பரிந்துரை செய்திருக்கிறார்கள்.

### *Financial Assistance to Aged Sportsmen.*

* 205 *Q.*—Thiru E. S. VENKATESAN: Will the Hon. the Minister for Education be pleased to state :

(a) Whether there is any proposal to grant pension to aged sportsmen who had represented either the State or the Country in some game or other and are in need of financial help; and

(b) if so, the stage at which the matter now stands?

[1979 மார்ச் 16

ஒவ்வொரு ஆய்வாளர் அலுவலகத்திற்கும் உள்ள பள்ளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு அந்தப் பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** திட்டத்திற்கு உட்படாத புதிய பதவிகளைக் கூடுதலாகத் தோற்றுவிக்க அரசு ஒப்புதல் அளிக்க இயலவில்லை. நிதிநிலைமை சீரடைந்தவுடன், கருத்துரு வரும்போது, அதைப் பற்றிப் பரிசீலிக்கலாம்.

(பிற்பகல் 4-30)

**திரு. சி.ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவர் அவர்களே, மூன்று, நான்கு மாவட்டங்களுக்குச் சேர்ந்து ஒரே ஒரு மகளிர் பள்ளி ஆய்வாளர்தான் நியமிக்கப்படுகிறார். அவர்களுடைய நிர்வாகத்தின் கீழ் ஏராளமான மகளிர் பள்ளிகள் இருப்பதனால், நிர்வாகம் மிகத் தாமதமாக நடப்பதுடன், ஊதியம் கொடுப்பதும் மிகவும் தாமதமாக நிகழ்கிறது. இது மாநிலம் முழுவதும் இருக்கிறது. கூடுதலாக இன்னொரு மகளிர் பள்ளி ஆய்வாளர் மதுரைக்குப் போடப்படுவார்களா ? அது போலவே நான்கு மாவட்டங்களுக்கு ஒரு மகளிர் பள்ளி ஆய்வாளர் என்றிருப்பதை இரண்டு மாவட்டங்களுக்கு ஒரு மகளிர் பள்ளி ஆய்வாளர் என்ற முறையில் நியமிக்க அரசு பரிசீலனை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** நிதிநிலைமைகள் சீரமைந்த உடனே இதுபற்றிப் பரிசீலிக்கலாம்.

**திரு. செ. முத்துசாமி :** இந்த அரசினுடைய கொள்கை விரைவாக சிவப்பு நாடா முறையை நீக்கும் காரியங்களைச் செய்ய வேண்டும் என்பது தான். ஏதோ ஒரு காலத்திலே போடப்பட்ட எழுத்தர்கள் எண்ணிக்கையோடு அலுவலகங்கள் இருக்கின்றன. கல்வித் துறையில் டி.ஈ.ஓ. அலுவலகம், சி.ஈ.ஓ. அலுவலகம், மகளிர் பள்ளி ஆய்வாளர் அலுவலகங்களில், முன்பு இருந்த மாணவர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து, குறைவாக இருந்த போது இருந்த எண்ணிக்கையை வைத்து, எழுத்தர்களை நியமித்திருக்கிறார்கள். அதே எண்ணிக்கையில் இப்போது எழுத்தர்கள் இருப்பதால், ஆசிரியர்களுடைய பிரச்சினைகள் தீரவில்லை. பல புகார்கள் இருக்கின்றன. இந்த நிலைமையைப் பொறுத்து, உடனடியாக எழுத்தர்களுடைய எண்ணிக்கையை உயர்த்தக்கூடிய திட்டம் இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, மதுரை மகளிர் பள்ளி ஆய்வாளர் மதுரை-இராமநாதபுரம் அடங்கிய 106 பள்ளிகளை மேற்பார்வை பார்த்து வருகிறார்கள். இதையே இரண்டாகப் பிரிக்க வேண்டும்



1979 மார்ச் 16]

என்ற எண்ணம் அரசுக்கு இருக்கிறது. அந்த யோசனை பரிசீலனைக்கு வந்தபோது, திட்டத்திற்கு உட்படாத பதவிகளை ஏற்படுத்த போதிய நிதியின்மை காரணமாக அது மறுக்கப்பட்டு விட்டது. நிதி நிலைமை சீரடைந்தவுடன் அதைப்பற்றி நிச்சயமாகப் பரிசீலிக்கலாம்.

## Nursery Schools.

* 204. *Q.*—Thiru M. SANKARALINGAM and Thiru C. R. LAKSHMIKANDHAN : Will the Hon. the Minister for Education be pleased to state :

(*a*) whether the Government have taken any decision after considering the Report of the Committee which was set-up to examine the functioning of Nursery Schools :

(*b*) if so, the decision taken ; and

(*c*) whether the Report of that Committee would be placed on the table of the House ?

## நர்சரி பள்ளிகள்.

**திரு. ம. சங்கரலிங்கம் மற்றும் திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) நர்சரி பள்ளிகளின் செயல்நிலை குறித்து ஆராய்வதற்கு அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கையை அரசு பரிசீலித்து ஒரு முடிவு எடுத்துவிட்டதா ?

(இ) ஆமெனில், அம்முடிவு யாது ?

(உ) குழுவின் அறிக்கை சட்டமன்ற மேலவையில் வைக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

(உ) குழுவின் அறிக்கையின் மேல் முடிவு எடுத்த பின்னர், தேவையெனில், அவை முன்னர் வைக்கப்படும்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** தமிழ் நாட்டில் குறிப்பாக நகரங்களில் நர்சரி பள்ளிகளை நடத்துகின்றவர்கள் அதை ஒரு தொழிலாக நடத்துகின்றார்கள். நர்சரி பள்ளிகள் நடத்த வேண்டியது என்பது மிகத் தேவையான ஒன்றுதான். மூன்று வயதிற்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு மான்டிசோரி சிஸ்டப்படி படிப்பு கொடுப்பது நல்லதுதான். ஆனால், அதைத் தொழில் மயமாக

### வயதான விளையாட்டு வீரர்களுக்கு நிதி உதவித் தொகை.

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மாநிலத்தின் சார்பில் அல்லது நாட்டின் சார்பில் ஏதாவது சில விளையாட்டுகளில் பங்கு கொண்ட வயதான விளையாட்டு வீரர்கள் நிதி உதவி தேவைப்படுபவர்களாக இருப்பின், அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவது குறித்த செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(இ) ஆமெனில், அது தற்போது எந்நிலையில் உள்ளது?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) மற்றும் (இ) ஆம். அறுப்து வயதிற்கு மேலான, மாத வருமானம் ரூ. 150-க்குக் குறைவாயுள்ள விளையாட்டு வீரர்கள் 25 நபருக்கு மாதம் ரூ. 75 உதவித் தொகை அளிக்கும் திட்டம் ஒன்றிற்கு அரசு அனுமதி வழங்கி உள்ளது.

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன்:** இதுவரை எந்த விளையாட்டு வீரர்களுக்கு அப்படிக் கொடுக்கப்பட்டிருக்கிறது?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** இந்தத் திட்டம் 1—4—1978 முதல் அமுலுக்கு வந்துள்ளது. யார் யாருக்குக் கொடுக்கப்பட்டது என்ற விவரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால், விவரம் தரப்படும்.

**THIRU G. VASANTHA PAI:** Will the Hon. Minister be pleased to see that this grant is given not only to aged sportsmen but also to those disabled during sports?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அது குறித்துப் பரிசீலிக்கலாம்.

**திரு. கே எஸ். அப்துல் வகாப்:** யார் யாருக்குக் கொடுக்கப்பட்டது என்ற விவரம் இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 1—4—1978 முதல் ஒரு ஆண்டு வரை கொடுத்திருப்பதாகச் சொன்னார்கள். எத்தனை பேருக்கு என்று கேட்டுக்கொள்கிறேன்.

விடையிலேயே 25 பேர் என்று இருக்கிறது. நான் மேற்கொண்டு கேட்கவில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** ஸ்போர்ட்ஸ் மெடிசன் என்ற விளையாட்டு தொடர்பான கல்வி பாரிசிலே மிகப் பிராபல்யமாக இருக்கிறது. அந்தக் கல்வி அறிவை இங்கே பயிற்றுவிக்கின்ற எண்ணம் உண்டா?





**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அது பற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை.

### *Separate Committee to solve Teachers' Problems.*

*206 Q.—**THIRU S. MUTHUSWAMY:** Will the Hon. the Minister for Education be pleased to state:

(a) whether the Government have proposed to constitute a separate Committee to settle the problems of Teachers; and

(b) if so, when it will be constituted?

### ஆசிரியர்கள் பிரச்சினைகளைத் தீர்க்க தனிக்குழு.

**திரு. செ. முத்துசாமி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஆசிரியர்கள் பிரச்சினை தீர்க்கப்பட, தனிக்குழு ஒன்று அமைக்க அரசு உத்தேசித்துள்ளதா?

(இ) ஆமெனில், எப்போது அமைக்கப்படும்?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**திரு. செ. முத்துசாமி:** தமிழ்நாட்டு அரசிலே அரசாங்க ஊழியர்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஜாயிண்ட் சர்வீஸ் கவுன்சில் என்று ஒன்றை வைத்திருக்கிறார்கள். அதிலே ஊழியர்களுடைய பிரச்சினை தீர்க்கப்படாமலிருந்தால், சீப் செக்கரட்டரி இங்கேயே இருப்பதால், அடிக்கடி கூடி முடிவு செய்ய வாய்ப்பாக இருக்கிறது. அதுபோலவே தொடக்கப் பள்ளியிலிருந்து கல்லூரி வரையில் இருக்கக்கூடிய ஆசிரியர்கள் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள, கல்வியமைச்சர் அவர்களைத் தலைவராகவும், துணைத் தலைவராக உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களையும், கொண்ட ஆசிரியர்கள் குழு அமைத்தால், அதில் சங்கப் பிரதிநிதிகளும் வந்து பிரச்சினைகளைச் சொல்லி அவைகளில் ஒரு தீர்வு காண நல்ல ஒரு ஏற்பாடாக இருக்கும். இதை அரசு இப்போது இல்லாவிட்டாலும், பிறகாவது பரிசீலிக்குமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** இது குறித்துப் பரிசீலிக்கலாம்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** என்னுடைய கேள்வியில், தூத்துக்குடி நகர் மன்றப் பள்ளிகளில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற சிலருக்கு, ஓய்வு பெற்று இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகியும் பணிக்கொடை கொடுக்கப்படாமல் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா என்று தெளிவாகக் கேட்டிருக்கிறேன். இலாகா, ஓய்வூதியம் பற்றித் தவறான தகவல் தந்து, இந்த அவைக்கும் தவறான தகவலைத் தரும் சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறார்கள். எனவே அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** விசாரித்து, நடவடிக்கை எடுக்கப்படும்.

### *Mangammal Choultry, Madurai.*

* 208 *Q.*—THIRU V. THANGAPANDIAN: Will the Hon. the Minister for Local Administration be pleased to state:

(*a*) whether it is a fact that the Government have ordered an enquiry into the misappropriation of rent collection of Mangammal Choultry belonging to Madurai Corporation, during the year 1978;

(*b*) if so, the findings of the enquiry; and

(*c*) whether any Officer has been punished?

### மங்கம்மாள் சத்திரம், மதுரை.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1978 ஆம் ஆண்டில் மதுரை மாநகராட்சிக்குச் சொந்தமான மங்கம்மாள் சத்திரம் வாடகை வசூல் பணத்தில் தவறு நடந்துள்ளதுபற்றி, அரசு விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளது என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், விசாரணையின் முடிவு என்ன?

(உ) எந்த அதிகாரியாவது தண்டிக்கப்பட்டுள்ளார்களா?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** (அ) மாநகராட்சி விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளது.

(இ). (உ) சத்திரக் கண்காணிப்பாளர்—மூன்று சிற்றெழுத்தர்கள் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.



**திரு. வே. தங்கப்பாண்டியன் :** மதுரை மாநகராட்சி நிர்வாகத்திற்குக் கட்டுப்பட்டுள்ள மங்கம்மா சத்திரத்தில் எவ்வளவு பணம் கையாடல் செய்ததாகப் புகார் வந்துள்ளது? அவர்கள்மீது இலாகாபூர்வமாக நடவடிக்கை எடுத்து, விசாரணை முடிந்து, அவர்கள் மீண்டும் பணிக்கு அனுப்பப்பட்டிருக்கிறார்களா? இப்படி மீண்டும் ஏற்படாமலிருக்க நம்முடைய அரசு எந்த விதமான நடவடிக்கை எடுக்க இருக்கிறது?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** மாநகராட்சி அளவிலே அந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. மதுரை மாநகராட்சி ஆணையர் அவர்கள் திடீரென்று ஆய்வு செய்யும் நேரத்தில், தங்கிய சில பயணிகளிடமிருந்து வாடகையாக வசூல் செய்த பணத்திற்குத் தக்க ரசீது வழங்கப்படாதது, வசூல் செய்யப்பட்ட தொகைகள் கணக்கில் கொண்டுவரப்படாதது, ஏடுகள் சரிவர பராமரிக்கப்படாதது ஆகிய முறைகேடுகள் இருந்தன. இது குறித்துக் கண்காணிப்பாளர் திரு. எ. டி. அப்பாசாமி, மற்றும் அங்கு பணியாற்றிய மூன்று சிற்றெழுத்தர்கள் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை தொடரும்.

### *Expenditure on Relief Works.*

* 209. *Q.*—THIRU S. RAMAKRISHNA THEVAR (on behalf of THIRU K. RAMAMOORTHI): Will the Hon. the Minister for Agriculture and Irrigation be pleased to state the expenditure so far incurred in the execution of Minor Irrigation Works in South Arcot district, under the Cyclone and Flood Relief Work from 1st July 1977 to 30th July 1978?

### நிவாரணப் பணிகளுக்கான செலவு

**திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் (திரு. க. இராமமூர்த்தி சார்பில்):** மாண்புமிகு வேளாண்மை-நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

தென் ஆற்காடு மாவட்டத்தில், புயல்-வெள்ள நிவாரணப் பணிகளின் கீழ் 1—7—1977 முதல் 30—7—1978 வரை நடைபெற்றுள்ள சிறுபாசனப் பணிகளை நிறைவேற்றுவதற்கு செலவிடப்பட்ட தொகை எவ்வளவு?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சிறுபாசனத்திற்காக தென் ஆற்காடு மாவட்டத்தில் 1—7—1977-ல் இருந்து 30—7—1978 முடிய 8,755 லட்சம் ரூபாய் செலவிடப்பட்டது.

## Distribution of Cauvery Waters.

* 210 Q.—THIRU V. THANGAPANDIAN: Will the Hon. the Minister for Agriculture and Irrigation be pleased to state:

(*a*) whether the Chief Ministers of Southern States (Karnataka, Kerala and Tamil Nadu) had discussed about the distribution of the Cauvery Waters at Bangalore during the second week of October 1978;

(*b*) if so, whether any agreement was reached in their discussion;

(*c*) the views expressed on behalf of the Tamil Nadu Government;

(*d*) whether the Tamil Nadu Government had made any agreement with the Karnataka Government during the President's Rule in 1976; and

(*e*) if so, the terms of such agreement?

### காவேரி நீர் பரிமாற்றம்

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** மாண்புமிகு வேளாண்மை நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) 1978 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் இரண்டாம் வாரத்தில், தென் மாநில (கர்நாடகம், கேரளா, தமிழ்நாடு) முதலமைச்சர்கள், காவேரி நீர் பரிமாற்றம் பற்றி பெங்களூரில் பேச்சு வார்த்தை நடத்தினார்களா?

(இ) ஆம் எனில், அந்தப் பேச்சு வார்த்தையில் ஏதாவது உடன்பாடு ஏற்பட்டதா?

(உ) தமிழ்நாடு அரசின் சார்பாக தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் யாவை?

(எ) 1976 ஆம் ஆண்டு குடியரசுத் தலைவர் ஆட்சியின்போது, தமிழ் நாடு அரசு, கர்நாடக அரசோடு ஏதாவது உடன்பாடு செய்து கொண்டதா?

(ஐ) ஆம் எனில், அதன் ஷரத்துக்கள் யாவை?



**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** (அ) ஆம்.

(இ) இல்லை.

(உ) தமிழ்நாட்டின் தற்போதுள்ள பாசனத்துக்குப் பாதுகாப்பு அளிக்கும் வகையில் காவிரி நீரைப் பங்கிட வேண்டுமென்று இப்பேச்சு வார்த்தைகளின்போது வலியுறுத்தப்பட்டது.

(எ) இல்லை.

(ஐ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** தலைவரவர்களே, தென் மாநிலங்களின் முதலமைச்சர்கள், காவிரி நீர்ப் பங்கீடு சம்பந்தமாக பெங்களூரிலும், அதன் தொடர்பாக பல்வேறு இடங்களிலும் கூடிப் பேசியது குறித்து பத்திரிகை களில் செய்திகளைப் பார்த்தோம். கருநாடக அரசாங்கம், காவிரி நீர்ப் பங்கீடு விஷயத்தில் நம்முடைய மாநிலத்தோடு செய்து கொண்டிருக்கும் உடன்பாட்டை ஒத்துக்கொள்ளாமல் இருக்கிறது. எனவே இந்த விஷ யத்தை டிரிபியூனலுக்கு அனுப்ப தமிழக அரசு முடிவு செய்திருக்கிறதா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** காவிரி நீர்ப் பங்கீட்டுப் பிரச் சினைப் பொறுத்த அளவில், இந்த அரசு பொறுப்பு ஏற்றுக்கொண்டதற்கும் பின்னாலே 5—8—78-ல் டெல்லியிலும், அதற்குப் பின்னிட்டு 3—9—78-ல் டெல்லியிலும், 9—10—78-ல் பெங்களூரிலும் பேச்சு வார்த்தைகள் நடை பெற்றன. அந்தப் பேச்சு வார்த்தைகளின்போது, தமிழக அரசைப் பொறுத்த அளவில், தமிழ் நாட்டின் பழைய பாசனத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்றும், அதே நேரத்தில் 100 டி.எம்.சி. தண்ணீரை இன்-ஃப்ளோவாகக் கொடுக்க முடியுமென்றும் பேச்சு வார்த்தைகள் நடந்து, இன்னும் பேச்சு வார்த்தைகள் முடிவடையவில்லை. ஆகவே டிரிபியூனலுக்கு அனுப்ப வேண்டுமா என்ற பிரச்சினை குறித்து இந்த அரசு முடிவெடுக்க வில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** காவிரி நீர்ப் பங்கீட்டுப் பிரச்சினையில் தமிழ் நாட்டினுடைய உரிமைகள் மறுக்கப்படுகின்றன. 1924-ல் செய்யப்பட்ட உடன்படிக்கையை, குறிப்பாக கருநாடக அரசு ஏற்றுக்கொள்ளாமல், அதை மீறிச் செயல்படுகிறது. அதைத் தடுக்க தமிழக அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? பேச்சு வார்த்தைகளிலேயே காலம் தாழ்த்தினால், பின்னால் நாம் பாதிக்கப்படுவோம். காவிரியில் அணைகள் கட்டப்படுகின்றன. எனவே அணைகளைக் கட்டுவதைத் தடுக்க, இந்தப் பிரச்சினை குறித்து டிரிபியூனலுக்குக் கொண்டு செல்ல, விரைவில் அரசு முடிவு செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: எங்கே ஓடுகிறது, எங்கே போகிறது என்கின்ற விவரங்களையெல்லாம் சொல்ல வேண்டுமென்றால், அரை மணி நேரம் பதில் சொல்ல வேண்டியிருக்கும்.

THIRU G. VASANTHA PAI: Sir, the Hon. Minister has said that the river flows through three States and that there are several States having the same problem. In view of that, will the Hon. Minister consider discussing this at a national level and having a National River Tribunal for settling all these disputes? Sir, I am pointing out to the Hon. Minister that there is provision in the Constitution for nationalisation of rivers. Will the Government take up this matter at a national level and see that a National Tribunal is constituted?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: நதிகளை தேசிய உடைமையாக்க வேண்டுமென்ற கொள்கையினை மத்திய அரசுதான் பரிசீலிக்க வேண்டும். நேஷனல் ரிவர்ஸ் ட்ரிப்யூனல் என்கின்ற ஒரு அமைப்பை ஏற்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். இந்த காவிரி தண்ணீர் பிரச்சினையிலேயே இன்னும் முடிவு காணாமல் இருக்கின்ற நேரத்தில், இதைப்பற்றியெல்லாம் சிந்திப்பதற்கு நேரமில்லை.

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தம் 1974 ஆம் ஆண்டுடன் காலாவதியாகிவிட்டது. 1974 ஆம் ஆண்டில், அதாவது காலாவதியாவதற்கு முன்பாக காவிரியில் எவ்வளவு தண்ணீர் விட்டார்களோ அதே அளவு தண்ணீர் இப்பொழுது விடுகிறார்களா? இல்லை, குறைத்துவிட்டார்களா? அப்படிக் குறைத்து விட்டார்கள் என்றால், எவ்வளவு சதவிகிதம் குறைத்து விட்டார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சரவர்களிடமிருந்து அறிய விரும்புகின்றேன். இரண்டாவதாக, கோர்ட்டுக்குப் போன கேஸை அரசு ஏன் வாபஸ் வாங்கியது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: காவிரி நீர்ப் பிரச்சினையிலே தீர்வு காண்பதற்காக "காவிரி பேக்ட் பைன்டிங் கமிட்டி" என்ற ஒரு கமிட்டியை மத்திய அரசு நியமித்தது. காவிரி பேக்ட் பைன்டிங் கமிட்டி தன்னுடைய அறிக்கையைக் கொடுத்தது. அவர்கள் அறிக்கையில் 666 டி.எம்.சி. தண்ணீரைத் தமிழகம் உபயோகப்படுத்திக் கொண்டிருக்கிறது என்று எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். 38 ஆண்டுக் கணக்குகளை எல்லாம் கணக்கெடுத்து, அவர்கள் 566 டி.எம்.சி. தண்ணீரைத் தமிழகம் உபயோகப்படுத்திக் கொண்டிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். மத்திய அரசு அதை ஏற்றுக்கொள்ளாமல், கடைசி 5 ஆண்டுக் காலக் கணக்கை





மட்டும் கணக்கில் எடுத்துக்கொண்டு, 489 டி.எம்.சி. தண்ணீர்தான் தமிழகம் உபயோகப்படுத்திக்கொண்டிருக்கின்றது என்று சொன்னார்கள். அதைப் பொறுத்தவரை, நமக்கும் மத்திய அரசுக்கும் கருத்து வேறுபாடு இருக்கிறது, 485 டி.எம்.சி. தண்ணீரைத்தான் நாம் உபயோகப்படுத்திக் கொண்டிருக்கின்றோம் என்கின்ற மத்திய அரசின் கருத்தை நாம் ஒத்துக்கொள்ளவில்லை. 666 டி.எம்.சி. தண்ணீரை நாங்கள் உபயோகப்படுத்திக் கொண்டிருக்கிறோம் என்று காவிரி பேக்ட் பைன்டிங் கமிட்டியே எடுத்துச் சொல்லிய பிறகு, மத்திய அரசு இவ்வாறு சொல்வது சரியல்ல என்பதை எடுத்துச் சொல்லியிருக்கிறோம். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நடைபெற்ற நேரத்தில், இதுகுறித்து அவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். நீதிமன்றத்திற்குச் சென்ற நேரத்தில் அன்றையதினம் பிரதமராக இருந்த திருமதி இந்திரா காந்தி அவர்களுடைய அறிவுரையின் காரணமாக, திராவிட முன்னேற்றக் கழக அரசு அந்த வழக்கை வாபஸ் பெற்று விட்டது. அதற்கு அவர்கள் கூறிய காரணம் கருநாடக மாநிலத்தில் பொதுமக்களின் அரசு இல்லை, ஆளுநர் ஆட்சி நடந்துகொண்டிருக்கிறது என்பதுதான். "இந்த நேரத்தில் நீங்கள் இதை வலியுறுத்த வேண்டாம், வழக்கை வாபஸ் பெறுங்கள்" என்று அறிவுரை சொன்னார்கள். அதன் காரணமாக அந்த வழக்கு வாபஸ் பெறப்பட்டிருக்கிறது.

திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு அமைச்சரவர்களுடைய பதிலில் 1974 ஆம் ஆண்டுடன் ஒப்பந்தம் முடிவடைந்து விட்டது என்றும், அதன் பிறகு 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தை அமுல் படுத்துவதற்கு கருநாடக அரசு மறுக்கிறது என்றும் சொன்னார்கள். அதன் மூலம் நமக்குக் கிடைக்க வேண்டிய தண்ணீர் கிடைக்காமல் போகக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது என்றும் சொன்னார்கள். 1974 ஆம் ஆண்டிலிருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு சர்வ கட்சித் தலைவர்களைக் கலந்து பேசி, ஒரு முடிவெடுத்து, அந்த முடிவின் அடிப்படையில் வழக்குமன்றத்திற்கு இந்த விஷயத்தைக் கொண்டு சென்றது. பிறகு மத்திய அரசு கொடுத்த வாக்குறுதியின் பேரில், சர்வ கட்சித் தலைவர்களுடைய முடிவிற்கேற்ப, வழக்கை வாபஸ் பெற்றோம். அதையே திரும்பத் திரும்ப மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்லிக்கொண்டிருக்க வேண்டாம். நாம் இப்பொழுது 1979 ஆம் ஆண்டில் இருக்கிறோம். இந்தப் பிரச்சினையில் தமிழகத்தின் உரிமை மீறப்பட்டுள்ளது. இந்த நிலையில் வழக்குமன்றத்திற்குப் போக வேண்டுமா அல்லது டிரிப்யூனலுக்குப் போக வேண்டுமா என்பதுபற்றி உடனடியாக முடிவெடுக்க வேண்டும். தமிழகத்தின் உரிமை மீறப்பட்டுள்ள நிலையில், அதைத் தடுக்கும் எண்ணத்துடன், பேச்சு வார்த்தையில் காலந்தாழ்த்தாது, "டிரிப்யூனல்"லுக்கு இந்தப் பிரச்சினை விரைவில் அனுப்பப்பட வேண்டும். பொதுவாக 2 ஆண்டுகள்

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** காவிரி நீர்ப் பிரச்சினையைப் பொறுத்த அளவில், அது தமிழக மாநிலத்திற்கு மட்டுமேயுள்ள தனிப்பட்ட பிரச்சினையல்ல. கருநாடகம், கேரளா, தமிழ் நாடு போன்ற அனைத்து மாநிலங்களுக்குமுண்டான பிரச்சினை அது. இந்த அனைத்து மாநிலங்களிலும் காவிரி ஓடுகிறது. இதற்காக 1892-லும், அதற்குப் பின்னிட்டு 1924-லும் ஒப்பந்தங்கள் தமிழகத்திற்கும், மைசூருக்கும் இடையே ஏற்பட்டன. அதற்குப் பின்னிட்டு கருநாடக மாநிலத்தில் அணைகள் கட்டப்பட்டன. அதுவும் குறிப்பாக என்ன ஒப்பந்தம் ஏற்பட்டதோ அதற்கு எதிராக இந்த நடவடிக்கைகள் நடைபெற்றன. மீண்டும், அதற்காக நமக்கு மேட்டூர் அணையைக் கட்டுவதற்குண்டான ஒரு ஒப்பந்தம் கிடைத்தது. அதன் மூலமாக மேட்டூர் அணை கட்டப்பட்டது. அதற்குப் பின்னிட்டு 1960-ல் பல்வேறு திட்டங்களை மைசூர் (கருநாடக) மாநிலத்தில் கட்ட ஆரம்பித்தார்கள். குறிப்பாக ஹேமாவதி, கபினி, சாரங்கி, ஸ்வர்ண முகி போன்ற திட்டங்களை அமுல்படுத்த ஆரம்பித்தார்கள். அதற்குப் பின்னாலேதான், 1974-லே, 1924-லே ஏற்பட்ட ஒப்பந்தம் முடிவடைகிற தேதியை எட்டியது. அப்போது திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பிலே இருந்தது. அதற்காக பல நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு வந்தார்கள். இந்தப் பிரச்சினை குறித்து, கோர்ட்டு, நீதிமன்றம் வரையிலும் சென்றார்கள். ஆனால் நீதி மன்றம் சென்றதற்குப் பின்னாலே அந்த வழக்கை வாபஸ் பெற்றிருக்கிறார்கள். இது குறித்து விவரமாகப் பேசுவது நமக்குக்கூட தீங்கை விளைவிக்கக்கூடியதாக இருக்கும். காவிரி நதி நீர்ப் பிரச்சினை முக்கியமானது. தமிழகத்தைப் பொறுத்தவரையில், ஏறத்தாழ 19 லட்சம் ஏக்கர்கள் இதனால் பாசன வசதியைப் பெறுகின்றன. இந்த நிலையிலே, யார் தவறு செய்தார்கள் என்று சுட்டிக் காட்டினால், அது நமக்கே தீங்கு விளைவிக்கக்கூடியதாக இருக்கும். எனவே இத்துடன் இது குறித்துப் பேசுவதை நிறுத்திக்கொள்வது நலமென்று கருதுகிறேன்.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** இது ஒரு மாநிலத்தினுடைய நீண்டகால ஜீவாதாரப் பிரச்சினை. இதுபற்றி சம்பந்தப்பட்ட எல்லாச் சட்ட மன்றங்களிலும் பேசப்படுகிறது. ஆந்திர மாநிலத்திலும், கருநாடக மாநிலத்திலும் இதுபற்றிப் பேசப்படுகிறது. எனவே பேசுவதால் தீங்கு வராது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** பாதிக்காத அளவிற்குச் சொன்னால் நல்லது.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** நம்முடைய அரசாங்கம் காவிரி நீர்ப் பங்கீட்டுப் பிரச்சினையில் ஒரு திட்டவட்டமான கொள்கையை உருவாக்கி, சர்வ கட்சித் தலைவர்களின் கூட்டத்தை, ஒவ்வொரு சட்டமன்றக் கூட்டத்திற்கும் முன்னாலே கூட்டி, மத்திய அரசுக்கு முடிவைத் தெரிவிக்கும்



முறையை இனிமேலும் பின்பற்றுமா? மீண்டும் மத்திய அரசின் உதவியோடு, குறிப்பிட்ட காலவரம்பிற்குள் இதற்கு முடிவு காண நம்முடைய அரசு முன் வருமா? பருவ காலத்தில் மழை பெய்ததால், இரண்டு ஆண்டுகளாகத் தண்ணீர் வந்தது. காவிரி வறண்டுவிட்டால், என்ன செய்வது என்பதை எண்ணி, அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா?

(பிற்பகல் 4-50)

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** இந்த அரசினுடைய கொள்கை காவிரி நீர்ப் பிரச்சினையிலே முடிவானதாக இதுவரையிலும் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் தமிழ்நாட்டினுடைய ஆயக்கட்டுப் பகுதிகளுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்பதுதான். மேலும் 1976 ஆம் ஆண்டிலே ஆளுநர் ஆட்சிக் காலத்திலே ஆளுநர் அவர்கள் ஒரு கூட்டத்திலே கலந்து கொண்டார்கள். அதிலே ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டதாக மத்திய அரசு நமக்குத் தகவல் அனுப்பியது. ஆளுநர் அவர்கள் அதிலே கையெழுத்து இடவில்லை என்பதையும் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆளுநர் ஆட்சிக் காலத்திலே ஏற்பட்ட ஒப்பந்தம் குறிப்பாக இந்த அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசைக் கட்டுப்படுத்தாது என்பதை நாம் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறோம். 1974 ஆம் ஆண்டுக்கு முன்பு இதேபோல ஒரு ஒப்பந்தம் ஏற்பட்ட நேரத்தில் கருநாடக மாநிலத்தில் ஆளுநர் ஆட்சி பிரகடனப்படுத்தப்பட்டது. அப்போது கருநாடக அரசு "ஒரு நல்ல பொது மக்களின் அரசு ஆட்சியில் இல்லாத நேரத்தில் ஏற்படக் கூடிய ஒப்பந்தங்கள் எங்களைக் கட்டுப்படுத்தாது" என்று சொல்லியது. நாமும் அதே கருத்தை எடுத்துச் சொல்லியிருக்கிறோம். பொது மக்களுடைய அரசு ஆட்சியில் இல்லாத காலத்தில் ஆளுநர் அவர்கள் ஒரு கொள்கை முடிவை ஏற்றுக்கொண்டாலும் ஏற்றுக்கொள்ளாது இருந்தாலும், அந்தக் கொள்கை முடிவு நம்மைக் கட்டுப்படுத்தாது என்று சொல்லியிருக்கின்றோம். அதன் அடிப்படையில் பழைய பாசனத்திற்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்கிற திட்டத்தை நாம் திட்டவட்டமாக இதுவரை சொல்லியிருக்கின்றோம். தமிழ்நாட்டின் பழைய பாசனத்திற்கு முக்கியத்துவம் அளித்து 100 டி.எம்.சி. தண்ணீர் inflow and not from utilisation, அதாவது பயன்படுத்தக்கூடிய அளவு தண்ணீர் கொடுக்கப்பட வேண்டுமென்று தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கின்றோம். நம்மைப் பொறுத்தவரை, இதை மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கின்றோம்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது, காவிரியாறு கருநாடகம், கேரளம், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் ஓடுகிறது என்றார்கள். காவிரி ஆறு கேரளாவிலே எங்கேப் ஓடுகின்றது என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் விளக்க வேண்டுமென

பாட நூலுக்குப் பிற்சேர்க்கையாக வருகிற ஆண்டிலிருந்து அதை வெளியிட முடிவு செய்யப்பட்டுள்ளது. இது தமிழ் நாடு பாட நூல் வெளியீட்டு நிறுவன இயக்குநருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

...

5. கவன ஈர்ப்புத் தீர்மானம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ம. சங்கரலிங்கம் அவர்களும் திரு. வே. தங்கப்பாண்டியன் அவர்களும் கொடுத்த கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் ஒத்தி வைக்கப்படுகின்றன.

6. அரசின் சட்ட முன்வடிவு.

தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 13/1979.)

The Hon. THIRU K. NARAYANASWAMY: Mr. Chairman, Sir, I beg to move—

> "That the Tamil Nadu Prohibition (Amendment) Bill, 1979 (Legislative Assembly Bill No. 13 of 1979), as passed by the Assembly, be taken into consideration."

The cases of illicit distillation and sale of intoxicating liquors and drugs, it was found, were on the increase every year. It had therefore become necessary to take immediate action to enforce prohibition vigorously and to award deterrent punishment for the offenders.

To achieve the above object, and as the State Legislature was not in session then, the Tamil Nadu Prohibition (Second Amendment) Ordinance, 1978 (Tamil Nadu Ordinance No. 13 of 1978) was promulgated by the Governor of Tamil Nadu on the 30th September, 1978.

Section 4-A of the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act X of 1937) provides punishment for being found in a state of intoxication. As per the said section as amended by the Tamil Nadu Ordinance No. 13 of 1978, whoever is found in a state of intoxication in any public place and whoever not having been permitted to consume any liquor or intoxicating drug in pursuance of this Act, is found in a state of intoxication in any

@ 492-506 ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



private place shall be punished with rigorous imprisonment, which may extend to six months or with fine which may extend to one thousand rupees or with both.

In the light of the experience gained in the working of the Tamil Nadu Prohibition (Second Amendment) Ordinance, 1978 it is found that the Prohibition policy of the Government cannot be fully implemented unless a deterrent punishment is provided for offences under section 4-A of the Act. Accordingly section 4-A of the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act X of 1937) has been amended to provide for higher penalty, namely, rigorous imprisonment for a term which may extend to three years and with fine which may extend to three thousand rupees. Minimum punishment has also been provided for offences under section 4-A.

Sir, I now commend the motion for the acceptance of this House.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: முன்மொழியப்பட்ட தீர்மானம்—

> "சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 13/1979), ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் எம். சங்கரலிங்கம், ஏ. நல்லசிவன், ஏ. ஆர். தாமோதரன் ஆகியோர் திருத்தங்கள் கொடுத்துள்ளார்கள். அவர்கள் தங்கள் திருத்தங்களை முன்மொழிவார்கள்.

திரு. எம். சங்கரலிங்கம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, "சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 13/1979) ஆய்வுக் குழுவிற்கு அனுப்பப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

திரு. வே. தங்கப்பாண்டியன்: தலைவர் அவர்களே, நான் இதை வழிமொழிகிறேன்.

திரு. ஏ. நல்லசிவன்: மாண்புமிகு தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 13/1979) ஆய்வுக் குழுவிற்கு அனுப்பப்பட வேண்டும்." என்று முன்மொழிகிறேன்.

*திரு. க. மீனாட்சிசுந்தரம்:* தலைவர் அவர்களே, மேற்கண்ட திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

THIRU A. R. DAMODARAN : Sir, I move— (L.A. Bill No. 13 of 1979) be circulated for eliciting public opinion."

*திரு. ஆ. பாலசுப்ரமணியம் :* தலைவர் அவர்களே, இந்தத் திருத்தத்தை நான் வழி மொழிகிறேன்.

*மாண்புமிகு மேலவைத் தலைவர்:* இந்தச் சட்ட முன்வடிவின்மீது பேசுவதற்கு அதிகமான உறுப்பினர்கள் தங்கள் பெயர்களைக் கொடுத்திருக்கிறார்கள். இது இன்றைக்கே முடிந்தாக வேண்டும். ஒரே கருத்தைத்தான் திரும்பத் திரும்பச் சொல்ல வேண்டியிருக்கும். எனவே உறுப்பினர்கள் 10 நிமிஷத்திற்குள் தங்கள் பேச்சை முடித்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

THIRU A. R. DAMODARAN : Sir, the Prohibition Act was in force from 1937; during a brief period between 1971 and 1974 the Prohibition Act had been repeated and then it was brought into force again in 1974. To-day this Government have brought in serious amendments to the Act and the Amending Bill contemplates very rigorous changes in the punishments to be awarded to the offenders under the Act. Sir, I do not wish to go into the question of the policy of Prohibition at present because this is a Bill merely dealing with rigorous punishment. I wish to state that the changes contemplated in the Bill are of such a nature that it produces a great risk of innocent people being brought within the mischief of the provisions of the Amending Bill.

I would like to mention very briefly the changes contemplated so that we may comprehend how rigorous the measures contemplated are No. 1: The original Act comtemplated simple imprisonment or fine. The present amendment contemplates rigorous imprisonment, compulsory rigorous imprisonment, instead of simple imprisonment and threre is no provision for a Judicial Magistrate to impose a fine on the offenders. No. 2: there is increase in the period of imprisonment. The original periods of imprisonment are doubled, trebled or even quadrupled. No. 3: a distinction is sought to be made between a private offender and a public servant. I will deal with this point a little later. No. 4: all persons who were found in a state of intoxication were liable to be punished with simple imprisonment and this has been converted into rigorous imprisonment. No. 5: With regard to the confiscation of the vehicle the owner shall be deemed to be guilty of such offence, unless he satisfies the court that he has exercised due care in the prevention of the commission of such offence. The next thing is about new section 41B, i.e., presumption that the liquor examined is of illicit variety and the onus of proof is thrown on the person who consumes such liquor.



(பிற்பகல் 5-10)

Seventhly, under the amendment to the Act, banishment is contemplated. This was not contemplated in the original Act.

THE HON. THIRU K. NARAYANASWAMY : Though I am disinclined to interrupt the hon. Member, particularly when it is such a pleasent thing to hear him and his English, I am sorry to say that the word 'banishment' is totally inappropriate in the context of the legal term employed in the Act, namely, 'removal'. The hon. Member knows, perhaps much more than I do know, that English is English. Even, sometimes, a synonym does not do justice to the appropriate word, when a synonym is used for the original word.

THIRU A. R. DAMODARAN: Sir, I accept the correction. We will say that it is a removal from the area in which the offender is. By 'banishment' I did not mean anything else. That was just a word which, in my opinion, corresponded to removal from a district for a period of two years. So, this is limited banishment from the district. Banishment from the country is different. It is being substantiated that this banishment is for a limited period of time. I will accept that this is removal from the area in which the offence is committed.

நல்ல மழை பெய்தால், அடுத்து வரக்கூடிய இரண்டு ஆண்டுகளில் சரியாக மழை இல்லாமலிருப்பது இயற்கையினுடைய நியதி. அதனால் அடுத்து வரக்கூடிய ஆண்டுகளில் தமிழகத்திற்கு அவல நிலை வரக்கூடிய சூழ் நிலையில், அரசு அதைச் சமாளிக்க என்னென்ன நடவடிக்கைகள் எடுத்திருக் கிறது? 1974 ஆம் ஆண்டிலே திராவிட முன்னேற்றக் கழக அரசு வழக்கை வாபஸ் வாங்கியது என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் 2 தடவை சொல்ல வேண்டிய தேவையில்லை. அது எங்களுக்குத் தெரிந்த விஷயம்தான்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** நான் பழைய அரசின் முடிவின் மீது ஏதோ காழ்ப்புணர்ச்சியுடன் அல்லது களங்கம் விளைவிக்க வேண்டு மென்ற எண்ணத்தில் சொல்லவில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் வகாப் அவர்கள் அந்தக் கேள்வியைக் கேட்டார்கள். அதுபற்றிச் சொல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அதன் காரணமாக அந்த விஷயத்தைச் சொன்னேன். ஏதோ வேண்டுமென்று 2 தடவை சொல்ல வேண்டுமென்றோ, 20 தடவை மீண்டும் மீண்டும் சொல்ல வேண்டுமென்றோ எனக்கு ஆசையும் இல்லை, அப்படிப்பட்ட எண்ணத்தில் சொல்லவுமில்லை. இந்தப் பிரச்சினை யைப் பொறுத்தவரை, 1974 ஆம் ஆண்டில் ஒப்பந்தம் முடிவடைந்தது. சர்வ கட்சித் தலைவர்கள் கூட்டம் 1975 ஆம் ஆண்டிலே தான் கூட்டப்பட்டது என்பதை நான் நினைவுபடுத்த விரும்புகின்றேன். 1974 ஆம் ஆண்டுக்குப் பின்னால் 1975 ஆம் ஆண்டில் சர்வ கட்சித் தலைவர்கள் கூட்டம் கூட்டப் பட்டதே, அதற்குப் பின்னால்தான் நீதிமன்றத்தில் வழக்குப் போடப் பட்டது. மத்திய அரசு கூறிய அறிவுரையின் காரணமாக வழக்கு திரும்பப் பெறப்பட்டது. இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரை, இதுவரை மாநிலங்களுக்கிடையே ஒரு 'கார்டியல் ரிலேஷன்சிப்' இருந்துகொண்டிருக் கின்ற காரணத்தால், நாம் உட்கார்ந்து பேசியே நல்லதொரு தீர்வு காணலாம் என்ற எண்ணம் தமிழக அரசுக்கு நிரம்ப இருக்கிறது. அதனால் நடுவர் தீர்ப்புக்குச் செல்லாமல், பேசி முடிவெடுக்கலாம் என்ற எண்ணத்தில் இருக் கிறோம். இருக்கக்கூடிய நிலைமை என்னவென்றால் இயற்கையினுடைய அனுகூலத்தின் காரணமாக நம்முடைய குளம் குட்டைகள் எல்லாம் நீர் நிரம்பியிருக்கின்றன. வருகிற காலக் கட்டத்திலே கூட நமக்கு இயற்கை ஒத்துழைக்கும் என்று நம்புகிறோம். மேட்டூரிலும் தண்ணீரைச் சேமித்து வைத்திருக்கிறோம். இதனால் இந்த அரசு எச்சரிக்கையாகத்தான் இருந்து கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]



(பிற்பகல் 5-00)

## 3. அறிவிப்பு.

### போலவையிலிருந்து செய்தி குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** சட்டமன்றப் பேரவையால் நிறை வேற்றப்பட்டு, சட்டமன்ற மேலவையின் இசைவிற்காக மாண்புமிகு பேரவைத் தலைவரால் கையொப்பமிட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகளின் பிரதிகளை மாண்புமிகு பேரவைத் தலைவரிடமிருந்து பெற் றுள்ளேன்:

1. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 34/1978).

2. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு தனியார் காடுகள் பாதுகாப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 25/1978.)

3. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நாடக நிகழ்ச்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 26/1978.)

4. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு உணவகங்கள் (திருத்த) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 40/1978).

## 4. மேலவை விதி 82-ன்படி அமைச்சரின் விளக்க உரை.

### மேல்நிலைக் கல்வி முதலாண்டு வரலாற்றுப் பாட நூலில் சில பகுதிகளை நீக்குதல் குறித்து.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

தற்போது மேல்நிலைக் கல்வி முதலாவது ஆண்டுக்குரிய வரலாற்றுப் பாட நூலில் இருக்கும் இஸ்லாம் சமுதாயத்தைப் பற்றியும் நபிகள் நாயகம் அவர்களைப்பற்றியும் உள்ள பகுதிகள் சில தவறான கருத்துக்களைக் கொண் டுள்ளதாக அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

இதை அரசு பரிசீலித்து மேல்நிலைக் கல்வி முதலாவது ஆண்டின் வர லாற்றுப் பாடத்தில் உள்ள இஸ்லாம் சமயத்தைப்பற்றியும் நபிகள் நாயகம் அவர்களைப்பற்றியும் உள்ள பகுதியை உடனடியாக நீக்கிவிட வேண்டுமென்று தமிழகப் பாட நூல் வெளியீட்டு நிறுவன இயக்குநருக்கு ஆணையிடப்பட் டுள்ளது. தவறான அந்தப் பகுதிகளுக்குப் பதில் கலாச்சாரத்தைப்பற்றி நன்கு அறிந்தவர்களைக் கொண்டு ஒரு புதிய பகுதி எழுதப்பட்டு வரலாற்றுப்

Then, certain offences have been made non-bailable, and rigorous imprisonment for three years or more has been stipulated. When we are dealing with an Act of this kind, we must bear in mind that it is not the Hon. the Chief Minister or the Hon. the Law Minister who is going to catch hold of offenders and prosecute them in this regard. Every Act has to be carried out by the officers of the Government, by the Executive, and in this particular Act a heavy responsibility is cast on the Police, especially our State. In regard to the definitions that have been made, even the definition of 'public servant' relates to all those who are in charge of the administration of this Act. As a responsible citizen, I do not wish to state that all Police officers are corrupt, etc. I would never make that claim, as a responsible citizen. But I must point out to the Government that, from their own experience, they have found it necessary to impose very severe sentences on police officers or officers who are found to act in defiance of the provisions of the Act. Therefore, I must say, with all the honesty at my command, that the amount of trust that the Government seek to place in the Police establishment in the State is, in my opinion, misplaced in so far as the administration of this Act is concerned. I know that every Government that comes to power has to defend the Police esablishment. Unfortunately, without the Police, no Government can function. Whether it is the Congress Government during the Anti-Hindi riots in 1965, whether it is the D.M.K. Government during its period of rult from 1967 to 1975 or whether it is the present Government, all Governments are on the defensive when Members of the Opposition point out that in certain places the Police have exceeded their authority. In the administration of this Act, we are afraid of certain consequences. It will work harshly on those people who distil illicit liquor. I am not coming in defence of them. Whatever punishment is contemplated, if they are really guilty of the offence, they deserve it. Nobody will have any sympathy with the illicit distillers. But, you have a second class of offenders: those who are found in possession of liquor. They are given another rigorous sentence. Then, you have a third class of offenders: those who are found under the influence of drink or those who are intoxicated. There also, the sentence has been altered from simple imprisonment to rigorous imprisonment. Sir, we know that in regard to the administra-



tion of every Act, whether it is the Suppression of Immoral Traffic Act or whether it is the Motor Vehicles Administration Act, the Police always work on certain targets. They are asked to book so many cases per month and the efficiency of the Police administration is judged by the number of cases booked. In the administration of the Prohibition Act also, when statistics are called for and when charges are made that it is not being properly administered, the fiat goes right down to the bottom and what happens is that invariably in every district, in every firka and in every area, the Police will book alleged offenders under the Act. It has been made extremely easy to book innocent people by hook or crook which is the normal procedure which the police will adopt in regard to this measure. I speak with due restraint and I would not accuse them with all these things in the administration of other Acts. But, in this Act, from the experience that we have gained and known, it is very dangerous to arm the police with sweeping powers. I have always believed that especially in this century when we are having a different concept of crime and punishment and when in other countries, for crimes which were punishable with capital punishment over a century ago they have commuted it to much easier sentences, the present imposition of heavy sentences is not correct. Even today in some of the Middle-East countries, if a person commits theft, his hands are cut off. Except such ideas in penological administration, we have pleaded for greater humanism in our approach to such problems. I am not for a moment asserting that drink is acceptable or that it is a good practice. There may be difference of opinion whether it is an evil or only a bad habit. But that is all I can say about it. Therefore, I feel that these provisions authorising rigorous imprisonment, etc., will bring great misery not to the richer sections of our poplation but to the poorer sections of our populatiin, because imprisonment means deprival of livelihood, starvation for the family, loss of employment for the person affected and serious consequential effects which will ultimately lead to disastrous impoverishment of the very family which you are trying to help. Not only that; I must confess I am not able to understand the 3rovision regarding public servants and I would request the Hon. the Law Minister to explain this. It is stated that a public servant for the first offence will be convicted and sentenced to three months rigorous imprisinment; ond I am not able to undtrstand the other provision that for the second offence, a public servant

(Thiru A. R. Damodaran) [1979 மார்ச் 16

will be given six months' regirous imprisonment. How does a public servant remain a public servant after the first offence? Under the Conduct Rules, if a public servant, especially a police officer or a prohibition enforcement official, or even a District Collector, according to this Bill, is found guilty and is awarded three months' rigorous imprisonment, does it mean that he will continue to be a Collector with leave and rejoin duty after undergoing three months' rigorous imprpisonment; or is it meant, as the Hon. Minister may have in mind—I am not able to find out from this Bill—that a public servant, the is convicted for the second time, will get the higher punishment? Then the definition of 'public servant' should be made clear in the Act to the effect that those who have been public servants and who have been convicted of the first offence, will as far as this Act is concerned, be considered or deemed to be public servants, even after their conviction, for the purpose of the second offence. This is something on which I would like the Hon. Minister to clarify.

The next thing is the punishment contemplated for persons found in on intoxicated state. I live on tht border. Everyday I find a number of people coming in an intoxicated state at 7 p.m. Sir, I live in Cuddalore which is just across from Pondicherry State. I see a number of such people coming in the evening, including policemen. All of them go there because it is easily available there. I think you are moving away from the very object. I state that the Prohibition Act should be administered in a capable manner so that the society may be protected; but this rigorous imprisonment for a person who is intoxicated is too much. Intoxication can be defined in so many ways, as drunkenness, falling on the road with a smell of liquor, etc.

(பிற்பகல் 5-20)

In such cases also, I am surprised that the Government headed by a humane Chief Minister should resolve that this person should also be convicted and sentenced to three months' rigorous imprisonment.

THIRU KU. MA. BALASUBRAMANIAM : Three years.



1979 மார்ச் 16]

THIRU A. R. DAMODARAN : The minimum punishment is three months. Offenders of the age between 20 and 30 would be sent to jail or a foolish mistake of having imbibed a glass of intoxicating liquor. I will not say whether it is illicit liquor or legalised liquor because in the border one does not have to purchase illicit liquor and one could take legal liquor in Pondicherry State. I would ask the Hon. the Law Minister who has himself been a Judge : "what do you think will be the consequence of this punishment?" If you send a young boy of the age between 20 and 30 to jail sentencing him to rigorous imprisonment, when he comes back from jail, he will be a hardened criminal and will be prepared to commit any crime under the sun. This goes against all canons of justice, fair play and equity and I would even say that it goes against all modern concepts of dealing with crime. It is an extremely harsh sentence. The Government may be interested in administering the Act. I know the Government have been under attack from various parties. Perhaps, the mistake has come from this side because even during the last session, we have been criticising the Government on what is perhaps a very sensitive issue so far as the Chief Minister is concerned. Probably, as a reaction to that, this harsh and rigorous Act has been brought into force. I believe that if these amendments are implemented in the manner in which they are being sought to be implemented, all our jails will be over-full. Apart from that, we will also be, instead of preventing crime, intensifying the crime to such a degree that all of us will be at the mercy of bootleggers.

Sir, there is one more thing that I would like to say. I shall not refer to the experiences of the United States of America, Sweden and other countries in Europe because we have our own traditions of dealing with such problems. But I have a great fear today and it is a legitimate fear. I can see from my own experience, both visual and otherwise, that there is a steady deterioration in the morale of the Police force in so far as the administration of this Act is concerned. In many villages, bootleggers are operating in conjunction with officers entrusted with the enforcement of the law and it has reached such proportions that the general public dare not report any offence of illicit distillation to the Government. If we do so, our lives are in danger. When such is the situation, how can the Government expect public co-operation in the administration of this Act and how can they

leave it to a Police force that today is far from reliable in so far as the administration of this Act is concerned? How do you really expect a constable drawing Rs. 350 per month to enforce it? And why blame constables only? I know officers in the Police Department, very much higher up, who are involved in this particular aspect of sharing the profits of bootlegging. I cannot name the officers and I cannot even give the names to the Chief Minister because I know what will happen. But, this much I would like to say. Any Government which depends solely on such personnel for the administration of this Act is in grave danger of its prestige and reputation being at stake. I would therefore, plead with the Government to have this Bill circulated so that public opinion could be obtained as to how best we can improve the administration of the Act. It is not as if the policy of prohibition will fail if these rigorous punishments are not brought into force. All that I plead is that advocates, people from various strata of society will have to give the Government their opinion of what is happening so that they may have a correct picture before venturing into the field of imposing rigorous imprisonments even on small offenders who are found in an intoxicated condition. I request that the Government may take into consideration my plea.

Thank you.

***திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :** மேலவைத் தலைவர் அவர்களே, பல்லாயிரக்கணக்கான மதுவிலக்கு வழக்குகளை விசாரித்தவன் என்ற முறையிலும், கீழ்க் கோர்ட்டு தீர்ப்புகளுக்கு மேல் வந்த பல அப்பீல்களுக்குத் தீர்ப்புக் கொடுத்தவன் என்ற முறையிலும், மதுவிலக்கு விசேஷ நீதிபதியாகச் சில காலம் பணிபுரிந்தவன் என்ற முறையிலும் இந்தச் சட்டத்தைப் பற்றிப் பேசுகிற நல்ல வாய்ப்புக் கிடைத்தது குறித்து மகிழ்ச்சியடைகிறேன்.

எனக்குப் பின்னால் பலர் பேசவிருப்பதாலும், தலைவர் அவர்கள் சீக்கிரம் முடிக்க வேண்டுமென்று சொல்லியிருப்பதாலும், ஒரு சில கருத்துக்களை மட்டும் விபரம் அதிகமில்லாமல், points களாகச் சொல்லி முடித்துக்கொள்ளுகிறேன். சில கருத்துக்களை மட்டும் சொல்லுவதால் மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் கவனிக்காமல் விட்டுவிட வேண்டாம். அதையெல்லாம் நன்றாகக் கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.





முதலிலே சொல்லிக் கொள்ளுகிறேன், இந்தச் சட்டத்தை நான் வரவேற்கிறேன். ஏற்கெனவே இருந்த சட்டம் மேலும் கடுமையாக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே உள்ள சட்டத்தை எல்லா அரசியல் கட்சிகளும் ஒப்புக்கொண்டிருக்கின்றன. மதுவிலக்குச் சட்டத்தை எல்லா அரசுகளும் ஏற்றுக்கொண்டிருக்கின்றன. இப்போது சில பிரிவுகள் கடுமையாக்கப்பட்டிருக்கின்றன. கடுமையாக்கப்பட்டிருக்கிற ஒன்றிரண்டு பிரிவுகளைத் தவிர, மற்ற பிரிவுகள் அப்படியே இருக்கின்றன. குறிப்பாக கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள், கடத்தல் செய்பவர்கள், சாராயம் விற்பவர்கள், வேறு பல வகைகளில் மற்றவர்களை உபயோகப்படுத்தி மற்றவர்கள் வாழ்வைக் கெடுத்தாலும் தங்களுடைய வாழ்வை நல்வாழ்வாக ஆக்கிக்கொள்ள வேண்டும், பணந்தான் முக்கியம் என்று செயல்படுபவர்களுக்குக் கடுமையான தண்டனையைக் கொடுக்க சட்டத்தைக் கடுமையாக்கியிருப்பது, நல்லது, போற்றத்தக்கது. பல ஏழைக் குடும்பங்கள் நிச்சயமாக இந்தச் சட்டத்தால் நன்மை அடைந்திருக்கின்றன. குறிப்பாக பெண்கள் நல்ல முறையிலே இதை வரவேற்கிறார்கள். எனக்குத் தெரியும், பல ஏழைக் குடும்பங்களில் இதைப்பற்றிச் சிறப்பாகப் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

சுருக்கமாகச் சொல்ல வேண்டியிருப்பதால், ஒருசில பிரிவுகளைப்பற்றி மட்டும் சொல்லிவிடுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் பேசுகிறபோது, போலீசாரைப் பற்றிச் சொன்னார்கள். ஆகவே இவ்வளவு கடுமையான தண்டனையைக் கொடுக்க வேண்டும் என்ற அதிகாரத்தை நிறைவேற்றுகிற பொறுப்பை அவர்கள் கையில் கொடுத்திருப்பதால், அவர்கள் தங்கள் வேலையைச் சரியாகச் செய்கிறார்களா என்று கண்காணிக்க வேண்டும். அவர்கள் சிறந்த முறையிலே, உண்மையான முறையிலே செயல்பட வேண்டுமானால், மதுவிலக்கிலே உண்மையான எண்ணம் கொண்டவர்களை, மதுவிலக்கைத் தீவிரமாகச் செயல்படுத்த வேண்டும் என்ற நல்லெண்ணம் உடையவர்களை, குடிப் பழக்கம் இல்லாதவர்களை, இது போன்ற வேலைகளுக்கு நியமிக்க வேண்டும்.

இந்தச் சமயத்தில் ஒன்று எனக்கு ஞாபகத்திற்கு வருகிறது. சில வருடங்களுக்கு முன்னால் எனது நண்பர், ஒரு நீதிபதி, ஒரு ஊரிலிருந்து மற்றொரு ஊருக்குக் காரில் போய்க்கொண்டிருந்தார். வழியில் சில போலீஸ் அதிகாரிகள் காரை நிறுத்தி 'லிப்ட்' கேட்டார்கள். அவர்களுக்கு அவர் நீதிபதி என்று தெரியாது. அவர் சாதாரண டிரஸில் இருந்தார். அவர் குடும்பத்தோடு போய்க்கொண்டிருந்தார். குடும்பத்தில் உள்ளவர்கள் காரின் முன் சீட்டிலும், பின் சீட்டிலும் உட்கார்ந்திருந்தார்கள். திடீரென்று

[திரு. ஈ. எஸ். வெங்கடேசன்] [1979 மார்ச் 16

காரை நிறுத்தி 'லிப்ட்' கொடுக்க வேண்டுமென்று அதிகாரத்தோடு கேட்டார்கள். இவர் நீதிபதியாகையால், நான் ரிப்போர்ட் பண்ணுகிறேன் என்று சொன்னார், அவர்கள் விட்டுவிட்டார்கள். பிறகு எஸ்.பி.யிடம் சொன்னார். நீதிபதி என்று தெரியாவிட்டாலும், அவர் தங்களிடம் கோபித்துக்கொண்டதிலிருந்து அவர் ரிப்போர்ட் செய்துவிடுவார் என்ற எண்ணம் கொண்டு, தங்கள் பாக்கட் டயரியில் "Stopped the vehicle for prohibition search" என்று எழுதிக்கொண்டார்கள். இந்த மாதிரியான முறைகேடுகள் நிச்சயமாக நடக்கும். ஆகவே தாலுக்கா மட்டத்திலும் மாவட்ட மட்டத்திலும் குழுக்களை ஏற்படுத்தி, அக்குழுவில் மதுவிலக்கில் நம்பிக்கையுள்ளவர்களை, மதுவிலக்குக் கேஸ்களைப் பற்றிய பணியில் திறம்பட வேலை செய்து ஓய்வு பெற்றவர்களை, போலீஸ் தயவுக்கு எதிர்பார்க்காதவர்களை, அரசியல்வாதிகள் மட்டுமல்லாமல் யாருக்கும் கட்டுப்படாமல் மதுவிலக்கிலே முழு நம்பிக்கையுடையவர்களையெல்லாம் நியமித்து, போலீஸ்காரர்களுடைய நடவடிக்கையைக் கண்காணிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

இப்போதுள்ள சட்டத்திலே பல பிரிவுகள் இருக்கின்றன. முன்பு இரண்டாவது வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டு விசாரித்து வந்தார்கள். இப்போது அநேகமாக எல்லாப் பிரிவுகளின் கீழுள்ள வழக்குகளையும் முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்தான் விசாரிக்க வேண்டுமென்று இருக்கிறது. தமிழ்நாட்டில் இப்போது அதிகமானவர்கள் இரண்டாவது வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டாகத்தான் இருக்கிறார்கள். பல இடங்களில் முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டுக்கள்தான் ஐ.பி.சி. போன்ற முக்கியமான கேஸ்களை விசாரிக்கிறார்கள். அவர்களுடைய கோர்ட்டில் இது போன்ற கேஸ்களையும் விசாரிக்க வேண்டுமென்றால், அவர்களால் வழக்குகளைச் சீக்கிர பைசல் செய்ய முடியவில்லை. அதனால் மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே உடனே எல்லா இரண்டாவது வகுப்பு கோர்ட்டுகளையும், முதல் வகுப்பு கோர்ட்டுகளாக மாற்ற ஆவன செய்ய வேண்டும். உண்மையிலேயே இந்த அரசு மதுவிலக்கைச் சரியாக அமுல்படுத்த வேண்டும் என்று நினைத்தால், மதுவிலக்கு சம்பந்தப்பட்ட வழக்குகளை விசாரிக்க வேண்டியது முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட் என்பதால், எல்லா கோர்ட்டுகளையும் உடனடியாக முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுகளாக ஆக்க வேண்டுமென்று சொல்லுகிறேன். எல்லா கோர்ட்டுகளையும் முதல் வகுப்பு கோர்ட்டுகளாக உயர்த்த வேண்டுமென்று ஜீ.ஓ. எம்.எஸ். எண் 202, ஹோம் டிப்பார்ட்மெண்ட்டில் 1976 ஆம் ஆண்டிலே உத்தரவிடப்பட்டிருக்கிறது. இப்போது இதைப் பரிசீலனை செய்து, துரிதப்படுத்தி சீக்கிரமாக நடைமுறைக்குக் கொண்டுவர ஏற்பாடு செய்யும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

மேல் விட்டுவிட அரசு வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த மாதிரி நிலைமைகளைப்பற்றி மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் ஆராய்ந்து பார்த்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது ஜெயிலிலே அந்த மாதிரி டிரீட்மெண்டுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். 52-பி-யிலே இப்போது இவ்வாறு இருக்கிறது.

"Notwithstanding anything contained in the Code of Criminal Procedure, 1973 (Central Act 2 of 1974) or the Probation of Offenders Act, 1958 (Central Act 20 of 1958) when any person is found guilty of—(*a*) any offence punishable under section 6".

என்று இருக்கிறது. இதில் 4–(i)(J) -யையும் 4-(A) யையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று விரும்புகிறேன். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கு வரவேற்புக் கொடுப்பார்கள் என்று கருதுகிறேன். அதைச் செய்தால், இந்த மாதிரிக் குற்றவாளிகளுக்கெல்லாம் ஒரு நல்ல வாய்ப்புக் கிடைக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து, வேண்டுமென்றே கேஸ் போடுபவர்கள் மீது 8-வது செக்ஷன்படி தண்டனை கொடுக்கப்படுகிறது. இதில் "imprisonment" என்று ஏற்கெனவே இருந்தது rigorous imprisonment என்று மாற்றப்பட்டிருக்கிறது. அதாவது, அவர்களுக்கு ஜெயில் தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் கொடுக்கலாம் என்று ஏற்கெனவே இருந்தது. shall be punished with imprisonment என்றால் கோர்ட்டுக்கு ஒரு அதிகாரம் இருக்கிறது. simple அல்லது rigorous தண்டனை கொடுக்கலாம். இவ்வளவு மோசமான எண்ணமுள்ள போலீஸ் அதிகாரிகள், யாரையாவது அவமானத்திற்குள்ளாக்க வேண்டும் என்று கருதி, பொய்யான கேஸ் போடுகின்றவர்களுக்கு இவ்வளவு குறைந்த தண்டனை கொடுப்பது சரியல்ல என்று கருதுகிறேன். கடுங்காவல் தண்டனை என்று சொல்லுவது போதாது.

"Punishment for vexatious search or arrest.—Any officer or person exercising powers under this Act, who—

(*a*) without reasonable ground of suspicion, enters or searches or causes to be searched, any closed place; or

(*b*) vexatiously and unnecessarily seizes the property of any person on the pretence of seizing or searching for anything liable to confiscation under this Act; or

(*c*) vexatiously and unnecessarily detains, searches or arrests any person; or

இரண்டு செக்ஷன்களைப்பற்றி மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். அதாவது செக்ஷன் 52 (பி) மற்றும் எட்டாவது செக்ஷனைப்பற்றிப் பேசுகிறேன். கள்ளக்கடத்தல்காரர்கள், கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள், அதை விற்பனை செய்பவர்கள் ஆகியவர்களுக்குக் கடுமையான தண்டனை கொடுப்பது நல்லது என்று ஏற்கெனவே சொன்னேன். சில சமயங்களில் சிலர் பழக்கத்தின் காரணமாக, சேர்கிற சில நண்பர்களின் காரணமாக தவறுதலாகக் குடித்துவிடுகிறார்கள். அந்த ஒரே ஒரு குற்றத்திற்காக, அவர்கள் செய்த முதல் குற்றத்திற்காக 3 மாதங்கள் ஜெயிலில் போட்டால், அவர்கள் பிறகு நிரந்தரக் குற்றவாளியாக (பெர்மனென்ட் கிரிமினலாக) ஆகிவிடுவார்கள். இதைப் போன்றவர்களுக்கெல்லாம், 52 (பிபி) பிரிவின் கீழ் "புரபேஷன் ஆக்ட் கிரிமினல் புரசீஜர்" சட்டம் கீழுள்ள நன்னடத்தை பற்றிய பிரிவுகள் எடுத்துவிடப்படுகின்றன என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது புதிய அமெண்ட்மெண்ட். இப்போது புதிதாக வந்திருக்கின்ற சட்டம்

(பிற்பகல் 5-30)

சி.ஆர்.பி.சி. (Cr. P.C.) செக்ஷன் 360-ன்படி முதன் முறையாகக் குற்றம் செய்பவர்களை எச்சரிக்கை செய்து அல்லது நன்னடத்தை ஜாமீனில் விட்டுவிடலாம் என்று இருக்கிறது. முதன் முறையாகக் குற்றம் செய்பவர்களை நன்னடத்தை ஜாமீனில் எச்சரிக்கை செய்து விட்டுவிடலாம் என்ற கருத்து இருக்கிறது. இந்தத் திருத்தச் சட்டத்தில் செக்ஷன் 52-பி-ல் என்ன இருக்கிறது? அது அவ்வளவு சரியல்ல. குறிப்பாக குடிக்கு அடிமைப்பட்டவர்கள் (addicts) பைத்தியக்காரர்களைப் போன்றவர்கள். அவர்கள் சீக்காளிகள், நோயாளிகள் போன்றவர்கள். அவர்கள் நல்லவர்களாக இருந்தாலும், அந்தப் பழக்கத்திற்கு அடிமையாகிவிட்டவர்கள். அந்தப் பழக்கத்தின் காரணமாக அப்படி 'அடிக்ட்ஸ்' ஆக ஆகிவிட்டவர்கள். அப்படி அடிமையாகி பைத்தியக்காரர்களைப்போல இருப்பவர்கள் பரிதாபத்துக்குரியவர்கள். நாம் பைத்தியக்காரர்களைச் சிறைக்கு அனுப்புவதில்லை. மனோதத்துவ முறை சிகிச்சைக்கு ஆஸ்பத்திரிக்கு அனுப்புகிறோம். அது போன்ற 'அடிக்ட்ஸ்' களுக்கு சைக்கலாஜிகல், சைக்கியாட்ரிக் மெடிகல் டிரிட்மெண்ட் என்ற முறையிலே சிகிச்சை கொடுக்க வேண்டும். நம் அரசினுடைய கொள்கை குடிக்களை ஜெயிலுக்கு அனுப்புவதாக இருக்கக் கூடாது. எவ்வளவோ பேர்கள் ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். குடும்பத்தைக் காப்பாற்றுகின்ற அவர்களை, இதுபோன்று பழகி விட்ட அவர்களை, சிறைக்கு அனுப்பிவிடாமல், சைக்கியாட்ரிக் மெடிகல் டிரிட்மெண்ட் மூலம், நல்வழிப்படுத்தி, குடிக்கின்ற பழக்கத்தை அவர்கள் இனி

(*d*) maliciously and falsely lays information leading to a search, seizure, detention or arrest; or

(*e*) in any other way maliciously exceeds his lawful powers,

shall be punished with imprisonment which may extend to six months, or with fine which may extend to five hundred rupees, or with both." என்று கிளாஸ் 8-ல் இருக்கிறது.

இந்த மாதிரிக் குற்றத்துக்கு ஆறு மாதம் சிறைவாசம் அல்லது அபராதம் என்று போடப்பட்டிருக்கிறது. இந்த மாதிரி பொய் கேஸ் போடுகின்றவர்களை நிச்சயமாக விட்டுவிடக்கூடாது. குறைந்த பட்சம் ஆறு மாதம் சிறைவாசம் என்று போடவேண்டும். அபராதத்தோடு விட்டுவிட வகையிருக்கக் கூடாது. இதை அமைச்சர் அவர்கள் கவனிப்பார்கள் என்று கருதுகிறேன். அவர்கள் பதில் சொல்லும்போது, அவருடைய எண்ணத்தைச் சொல்வார்கள் என்று நம்புகிறேன். இன்னும் பலர் பேச இருக்கிறார்கள். தலைவர் அவர்கள் மணி அடிக்கப் பார்க்கிறார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உறுப்பினர் அவர்கள் இங்கே உட்கார்ந்து மணி அடிக்க வேண்டிய வேலை இருக்கிறது.

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :** ஆகவே, இந்தக் கருத்துக்களைச் சொல்லி என் பேச்சை இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் :** தலைவர் அவர்களே, மதுவிலக்கைப் பற்றிப் பலமுறை பேசிப் பேசி, ரொம்ப சிரமப்பட்டுப் பேசிப் பேசி ஓய்ந்து விட்டேன். எதற்காக இந்த நாடகத்தை அரசு நடத்துகிறது என்று எனக்குச் சொல்வதற்கே முடியவில்லை. முன்னவர் அவர்கள் இங்கே வந்ததனால், எனக்கும் கொஞ்சம் தெம்புவந்தது. யார் கேட்டு யார் பதில் சொல்வது? மதிப்பிற்குரிய சட்ட அமைச்சர் அவர்கள் மிக உயர்ந்த பண்பாடு உடையவர்கள். நான் இப்போது என்ன சொல்லப்போகிறேன் என்பதைப் பார்த்து, என்னுடைய கருத்துக்களையெல்லாம் கேட்டு அவருடைய கருத்தைச் சொல்ல வேண்டும். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் தெரிவிக்க வேண்டும். இந்த ரிப்போர்ட்டிலே இருப்பதைப் பார்த்துக்கொள்ள வேண்டும். [illegible] ரிப்போர்ட்டில் என்ன உண்மைகள் இருக்கின்றன என்பதை அறிந்துகொள்ள வேண்டும். நீங்கள் இரண்டு தடவைகள் மணி அடித்து 'உட்காருங்கள்' என்று சொல்லிவிட்டீர்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இரண்டு தடவைகள் என்று சொல்கிறீர்களே.

**திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் :** தலைவர் அவர்களும் ரொம்ப அனுபவம் உடையவர்கள். பல காலம் ஜெயிலில் இருந்தவர்கள்தான் தாங்களும். நீங்கள் என்னைச் சொல்லவிடாமல் மணி அடித்தால், நான் என்ன சொல்ல முடியும்?

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** நீங்கள் ஏன் அதைப்பற்றியே பேசுகிறீர்கள்? விஷயத்தைச் சொல்லுங்கள்.

**திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் :** நாங்கள் படும் கஷ்டம் அரசுக்கு எப்படித் தெரியும்? நாங்கள் பேசி என்ன பிரயோஜனம் இருக்கிறது என்று தான் சொல்கிறேன். கிராமப்புறங்களில் ஒரு பழமொழி சொல்வார்கள். 'நண்டைச் சுட்டு வைத்து, நரியைக் காவல் வைத்ததுபோல' என்பார்கள். அதுபோல இந்தச் சட்டம் இருக்கிறது. இந்தச் சட்டத்தைப் பற்றி எங்கேயும் பேசிக்கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொருவரும் அதைப்பற்றி இங்கேயும் பேசுகிறார்கள். அவரவருடைய அபிப்பிராயங்களை, எண்ணங்களையெல்லாம் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையில், "இதுவரைக்கும் எத்தனை பெரிய ஆபீசர்களைப் பிடித்து ஜெயிலிலே போட்டிருக்கிறார்கள்? எத்தனை வருடங்களுக்கு தண்டித்திருக்கிறார்கள்? எத்தனை பேர்கள் ஜெயிலுக்குப் போயிருக்கிறார்கள்? என்று லிஸ்ட் கேட்டால், அதற்கும் தனிக் கேள்வி போட வேண்டும் என்று சொல்வார்கள். ஒன்றும் இல்லாத சங்கதி என்றுதான் நாமும் அதற்குத் தனிக் கேள்வி போடாமல் பேசாமல் இருப்போம். ஆளுங்கட்சி உறுப்பினர்கள் சம்பிரதாயத் திற்குப் பேசுவார்கள். நாமும் பேசுவோம். அவையை 4 மணிக்குக் கூட்டுகிறோம், பேசுகிறோம், 7 மணிக்குக் கலைக்கிறோம். இதுவரைக்கும் நடைமுறைப்படுத்தியதில் மதுவிலக்குச் சட்டம் என்ன ஆயிற்று? இந்தச் சட்டம் வந்த பிறகு, வலுவுடையவர்களிலே எத்தனை பேர்களைத் தண்டித்திருக்கிறார்கள்? நாம் பேசுவதையெல்லாம் வெளி உலகுக்குக் கொண்டு போகிறார்கள் இந்த நிருபர்கள். இவர்களும் பேசினதை வைத்துக்கொண்டு கேட்பார்கள். பெர்மிட் கொடுக்கவில்லை என்று சொல்வார்கள். (பலத்த சிரிப்பு) கொடுத்தால் நல்லது என்று சொல்லிக்கொண்டிருப்பார்கள். இல்லை யென்றால், நாம் பேசியதையெல்லாம் இருட்டடிப்பு பண்ணுவார்கள். 'கருப்பன்' என்று சொன்னதற்குப் பதிலாக 'அறுப்பன்' என்று எழுதி வைத்துவிடுவார்கள், சொல்லிவிடுவார்கள். அவர்களுக்கும் பெர்மிட் கொடுத்து விடலாம்.



**மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி :** மாற்றுத் தலைவர் அவர்களே, பெரியவர் அவர்கள் சொன்னதை அரசு பரிசீலிக்கும்.

**திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் :** ரொம்ப நன்றி. அமைச்சர் அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பது எனக்குத் தெரியவில்லை.

(மாற்றுத் தலைவர் திரு. ஈ. எஸ். வெங்கடேசன் தலைமை)

(பிற்பகல் 5-40)

**டாக்டர் இரா. சனார்த்தனன் :** மாற்றுத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் நிருபர்களைப்பற்றிப் பேசும்போது, அவர்கள் மனம் புண்படுவதாக இருக்கக்கூடாதென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் :** நிருபர் என்று சொல்லவில்லை. பெர்மிட் கொடுத்தால் நல்லதென்று அவர்கள் சந்தோஷப்படுகிறார்கள். வெளியில் சாப்பிட்டுவிட்டு, ரோடில் விழுவதைவிட, பெர்மிட் கொடுத்தால், வீட்டில் அறையிலேயே வைத்துக் கொள்ளலாம். மாண்புமிகு உறுப்பினரவர்கள் அவர்களுக்காகப் பரிந்து பேசியதால், அவர்கள் பேச்சைப் பத்திரிகையில் போட மாட்டார்கள். (சிரிப்பு) இதையெல்லாம் முதலமைச்சரவர்களிடம் சொல்ல வேண்டும். கட்டுப்பாடாக இதை அமுல் நடத்த வேண்டுமென்று அவர்கள் நினைக்கிறார்கள். இருநூறு கோடி ரூபாயை நஷ்டப்படுத்திக் கொண்டு, பாழாக்கிவிட்டு, இதை அமுலாக்க வேண்டுமா? குறைகளைச் சொல்வது யார்? ராமகிருஷ்ணத் தேவர் சொல்கிறார். ஒரு இடத்தில் சாராயம் காய்ச்சுகிறார்கள், தப்புப் பண்ணுகிறார்கள் என்று சொல்லுகிறேன். ராமகிருஷ்ணத் தேவர் விருப்பு, வெறுப்பு வைத்துச் சொல்கிறாரா? இல்லை. உண்மையிலேயே இதை அடியோடு ஒழிக்க வேண்டுமென்ற நோக்கத்தில் சொல்கிறார் என்பதை நீங்கள் அறிந்துகொள்ளலாம். ஒரு நாளைக்கு ஒரு பிராந்தி பாட்டில் கேட்கிறான் என்பதை ஊர் பூராவும் சொல்கிறார்கள். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நோட்டீஸ் அடித்து வெளியிட்டிருக்கிறார்கள். தேவகோட்டை முனிசிபாலிட்டியில் இப்படி நடக்கிறது, இதைக் கேட்பவர்கள் இல்லையா என்று நோட்டீஸ் அடித்திருக்கிறார்கள். அதைத் தலைவரிடம் கொடுக்கிறேன். இதையெல்லாம் நாங்கள் சொல்கிறோம். அதற்குப் பரிகாரம் இல்லாமலிருந்தால், இதை யாரிடம் சொல்வது? மதுவிலக்குக் கமிட்டி என்று ஒன்று இருக்கிறது. பார்மாலிட்டிக்காக இருக்கிறது. உண்மையாக அது என்ன [illegible] வேண்டுமென்ற சொல்லவில்லை. நான் தப்பாகச் சொல்ல மாட்டேன். [illegible] காரணத்தைக் கொண்டும், இல்லாத ஒன்றைச் சொல்கிறேன் என்று

நினைக்க வேண்டாம். நான் தவறாகச் சொன்னேன் என்று 'ப்ரூவ்' பண்ணி விட்டால், என்னுடைய நாக்கை நான் வெட்டிக்கொள்கிறேன். அங்கே எஸ்.அய். குடித்துக்கொண்டிருக்கிறார் என்று சொன்னால், அதைக் கேட்க நாதியில்லை. என்ன மதுவிலக்கு? என்ன சட்டம்? எத்தனையோ செக்ஷன்களைப் போடுகிறார்கள். நாள் பூராவும் பேசுகிறார்கள். இந்தியன் பீனல் கோட் என்றெல்லாம் இருக்கிறது. பேசியே நாளைப் போக்குகிறார்கள். இது முறையா? ஒரு முனிசிபல் நகரத்தில் யாரைப் பிடிக்க வேண்டும்? தெருக் கூட்டிக்கொண்டிருக்கிறவர்களைப் பிடிக்கவா சட்டம்? தவறு செய்பவர்களைப் பிடிக்க வேண்டுமென்று யாரைக் காவல் வைத்திருக்கிறார்களோ, அவர் பிராந்தி பாட்டில் வாங்குகிறார், அதைக் கவனிக்கவில்லை, அது குறித்து ஒன்றும் செய்யவில்லை என்றால், சட்டத்தை வைத்துக்கொண்டு என்ன பிரயோசனம்? சட்டம் என்று அதற்குப் பெயரா? நான் முன்பே பேசினேன். தப்புப் பண்ணுகிறார்கள் என்று சொல்லுகிறோம். நீங்கள் சும்மா இருந்தால், பிள்ளையாரும் நீங்களும் ஒன்றுதான். (சிரிப்பு) பிள்ளையார் பாட்டுக்கு இருப்பார். போகிறவன் தலையில் குட்டிக்கொண்டே போவான். அவன் மண்டைதான் வலிக்கும். அவர் அப்படியேதான் இருக்கிறார். அந்த மாதிரி நிலை இருக்கிறது. பப்ளிக்காக ஒருவர், ஒரு நாளைக்கு ஒரு பிராந்தி பாட்டிலும், ஒரு கோழியும் வாங்கிச் சாப்பிட்டுக்கொண்டிருக்கிறார் என்றால், உடனே அவரைத் தந்தி மூலம் வேறு ஊருக்கு மாற்ற வேண்டாமா? இந்த மாதிரி அரசு பண்ணவில்லை என்றால், ஏன் எங்களைப் போட்டு அலைக்கழிக்கிறீர்கள்? வேறு ஏதாவது பேசுங்கள். கதா காலட்சேபம் கேட்கலாம். கிருபானந்த வாரியாரை வைத்து, கதா காலட்சேபம் நடத்தி, கேளுங்கள். (சிரிப்பு) அது நல்லதாக இருக்கும். எதற்காக இந்தக் கூத்து? இப்படி ராமகிருஷ்ணத் தேவர் பேசியிருக்கிறார் என்று தகவல் போகும். இவனா பணம் கொடுத்தான், இவனா பிராந்தி, கோழி வாங்கிக் கொடுத்தான், இவன் ஏன் சட்டசபையில் சொல்கிறான் என்று அங்கே சொல்வார்கள். எனக்கு வேண்டாதவர்கள், 'சட்டசபையிலே சிரிக்க வைத்துவிட்டான்' என்று சொல்வார்கள் நாளைக்கு. பத்திரிகைக்காரர்கள் ஒன்றுக்கு நாலாக எழுதி, அவர்கள் அதைப் படித்துவிட்டு, பேசுவார்கள். பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் ஜாமீன் கேசில் ஒரு லட்சம் ரூபாய் செலவு செய்தேன். கள்ளுக் கடைக்கு இடம் விடவில்லை. தனி சர்க்கார் வைத்திருக்கிறான் என்று கேஸ் போட்டார்கள். ஒரு வருஷம் நடந்தது. ஒரு லட்சம் ரூபாய் செலவாயிற்று. ஆயிரம் பேர்களை டிபன்ஸ் சாட்சிகளாகப் போட்டேன். பெரிய மனிதர் களெல்லாம் வந்து சொன்னார்கள், டெபுடி கலெக்டர் வந்து சொன்னார். இந்த மாதிரி நொந்துபோய் இருக்கிறவனிடம், புண்ணிலே வேலைக் குத்துவது





போல், மது விலக்கு கொண்டு வருகிறோம் என்றால், கேலி பண்ணுவதாக இருக்கிறது. ஒரு பாவமும் அறியாத முதலமைச்சரவர்கள் அந்தத் துறையை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அவரால் தனியாகச் செய்ய முடியுமா? அமைச்சர்கள் எல்லோருக்கும் கூட்டுப் பொறுப்பு உண்டு. யார் வேண்டுமானாலும் செய்யலாம். உடனடியாகச் செய்ய வேண்டாமா? இல்லையென்றால் கேலி பண்ண மாட்டார்களா? நோட்டீஸ் அடித்து பப்ளிசிட்டி பண்ணுகிறார்கள். சர்க்கார் என்ன பண்ணுகிறது? சர்க்காரைக் குறை சொன்னால் எங்களுக்கும் கேவலம். சர்க்கார் நன்றாக நடக்கிறது என்றால், எங்களுக்கும் பெருமை. இல்லாததை நான் பேசவில்லை. இதையெல்லாம் ஆளுங் கட்சிக் காரர்கள் சொன்னால், என்ன? உங்கள் தொகுதியிலும் நடக்கும். மாண்புமிகு உறுப்பினர் திரு. அறிவழகன் அவர்கள்கூட ரொம்ப வேதனையோடு இருக்கிறார்கள். அவர்கள் தொகுதியிலும் அப்படியிருக்கும். அதுதான், அது தான் என்று சொல்லுகிறார்கள். (சிரிப்பு) இந்த நிலைமையிலே என்ன சொல்வதற்கு இருக்கிறது? முதலமைச்சரவர்களிடம் இதைச் சொல்லியாக வேண்டும். நாங்கள் சொல்ல வாய்ப்பில்லை. நீங்களாவது போய் இப்படி நடக்கிறது என்று சொல்லுங்கள். ஒரு ஊரைவிட்டு இன்னொரு ஊருக்கு அவர்களை மாற்றினால், அடுத்த ஊரிலும் இதைத் தான் செய்வார்கள். ஒவ்வொரு மாதத்திற்கும் ஒரு ஊர் என்று மாற்றுங்கள். ஆள் பிடிப்பதற்குள் அடுத்த ஊருக்குப் போகட்டும். இப்படிச் செய்யாவிட்டால், அரசு செய்வது நியாயமா? கட்சி அடிப்படையிலே நான் பேசவில்லை. இருக்கிற மந்திரிகள் தப்பு பண்ணுகிறார்கள் என்று சொல்வது என் நோக்கமல்ல. முதலமைச்சரவர்களிடம் அன்பு வைத்திருக் கிறேன். அன்பு வைத்திருந்து என்ன பண்ணுவது? கொள்ளிக் கட்டையை எடுத்து தலையைச் சொறிந்துகொண்டால் என்னவாகும்? தலைதான் போகும். என் தலையோ மொட்டைத் தலை. நான் என்ன செய்ய முடியும்? மதுவிலக்கால் 200 கோடி ரூபாய் பாழாகிறது. அதைக் கொண்டு என்ன என்னவோ செய்யலாம். இந்தக் கோட்டையை இடித்து, நான்கு கோட்டைகள் கட்டலாம் பணத்தையும் தொலைத்துவிட்டு, கெட்ட பெயர் வாங்க வேண்டுமா? சரியான கண்காணிப்பு செய்ய வேண்டும். நான் இதை 4, 5 வருடங்களாகச் சொல்லிக் கொண்டிருக்கிறேன் என்று அங்கே பேசுகிறார்கள். ஒரு எஸ்.பி.-யிடம் எம்.எல்.ஏ. "ஏன் அய்யா, இந்த நாடகத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்?" என்று சொன்னாராம். அதற்கு அவர் ஏப்ரல் மாதத்தில் ஜெனரல் மாறுதல் வரும், அப்போது மாற்றுகிறோம் என்று சொன்னாராம். இந்த மாதிரி நிலையை வைத்திருந்தால், அரசு லட்சம் லட்சமாகச் செய்தாலும் பிரயோசனமில்லை. அந்த ஊரை விட்டு அந்த

நான் ஒன்றைச் சொல்லிக்கொள்வேன். சிறந்த இலட்சிய நோக்கும், அரசியல் போதனையும், நல்ல தெளிவும், தியாக உணர்வும் கொண்ட உறுப்பினர்களைக் கொண்ட எங்கள் கட்சியின் அமைப்பிலே கூட, இந்த விதி நல்லமுறையில் அமுல்படுத்தப்படுகிறபோது, சமுதாயத்திலே இருக்கிற சூழ்நிலையின் காரணமாக, எங்கள் இயக்கத்தில் கூட கட்சி விதிகளை மீறி, சில வாலிபர்கள் குடித்தால், குடித்த உடனேயே அத்தகையவர்களை கட்சியை விட்டே வெளியேற்றியிருக்கிறோம். சிறந்த இலட்சிய நோக்கும், அரசியல் போதனையும், நல்ல தெளிவும், தியாக உணர்வும் ஒருங்கே அமையப் பெற்ற கட்டுக்கோப்பான எங்களுடைய கட்சியிலுள்ள வாலிபர்களுக்கே கூட சமுதாயத்திலுள்ள சூழ்நிலையின் காரணமாக, இப்படிப்பட்டதொரு நிலைமை வருகிறது என்றால், பல்வேறு சமூக, பொருளாதார ஏற்றத்தாழ்வுகளின் காரணமாக, குடும்பச் சூழ்நிலையின் காரணமாக, சந்தர்ப்ப சூழ்நிலை எப்படி எப்படியெல்லாம் சாதாரண மக்களைக் குடிக்க வைக்கும் என்பதைப்பற்றி நான் இங்கே சொல்லிக்கொண்டிருக்க ஆசைப்படவில்லை. சமுதாயத்தில் குடிப் பழக்கத்திற்கு அவர்கள் ஆளாகியிருப்பதற்கு மூல காரணம் என்ன என்பதை ஆராய்ந்து, அதை "டாக்கிள்" பண்ணுவதற்குரிய வழிவகையைத் தேடாமல், இன்றைக்குக் கடும்தண்டனை கொடுத்தால் மட்டும் இந்தக் கொள்கையை வெற்றிகரமாக நிறைவேற்றி விடலாம் என்ற தவறான அடிப்படையில் அரசு இந்தச் சட்டமுன்வடிவு குறித்து முடிவெடுத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். 1937 ஆம் ஆண்டு இராஜாஜி காலத்திலிருந்து, 42 ஆண்டுகளாக, இடையிலே சில காலம் தவிர, மதுவிலக்குக் கொள்கை தமிழ் நாட்டிலே கடைப்பிடிக்கப்பட்ட போதிலும் கூட, அது முழு வெற்றியுடன் நிறைவேறாமல் போனதற்குக் காரணம் என்ன என்பதை ஆராய்ந்தறிந்து, அதன் அடிப்படையில் இதற்குப் பரிகாரம் கண்டிருக்க வேண்டும். கடுமையான தண்டனை இந்த 42 ஆண்டுகளாக, மதுவிலக்குச் சட்டத்தை மீறுபவர்களுக்குக் கொடுக்கப்படாததால் தான், இதை வெற்றிகரமாக முந்தைய அரசுகளால் நிறைவேற்ற முடியாமல் போய்விட்டது என்ற அடிப்படையில், இந்த அரசு இந்தக் கடுமையான தண்டனையைக் கொடுத்து, வெற்றிகரமாக இப்பொழுது நிறைவேற்றிவிடலாம் என்ற ஒரு முடிவுக்கு வந்திருக்குமேயானால், அது நல்ல முடிவல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அரசின் இப்படிப்பட்ட ஒரு பரிதாபகரமான நிலையைப் பார்த்து, அரசின் முடிவைப் பார்த்து நான் வேதனைப்படுகிறேன். நம்முடைய சமூக, பொருளாதாரத்திற்கு ஏற்ற வகையில் இதைப்பற்றி தொடர்ச்சியான பிரச்சாரம் செய்து, அதன் மூலம் தான், "Specified propaganda மூலம் தான் இதை நிறைவேற்றி வைக்க முயற்சிக்க முடியும். அரசியல் கட்சிகளும்,





சமூக ஸ்தாபனங்களும் பொதுமக்களுக்கு இதைப்பற்றி தொடர்ச்சியான பிரச்சாரம் செய்து, அவர்கள் இதை ஏற்றுக்கொள்ளும் வகையில், அவர்களைக் கவரும் வகையில், ஏற்பாட்டினைச் செய்து அதன் மூலம் இதை வெற்றிகரமாக நிறைவேற்ற முயற்சிக்க வேண்டும். சமுதாயத்திலுள்ள அனைவரும் தேவையான கல்வி அறிவு பெற்று, கண்ணியமான வேலை செய்து, குறைந்தபட்ச சம்பளம் வாங்கி திருப்தியான வாழ்க்கை நடத்த முடிந்தால்—அவர்களை தங்களுக்கு மிச்சமிருக்கிற நேரத்தை சமூகத்திற்குப் பயனுள்ள காரியங்களில் செலவிட தம்மால் தூண்டமுடிந்தால்—அப்போதுதான் மதுவிலக்குக் கொள்கையை வெற்றிபெறச் செய்ய முடியும். மக்களில் பலர் இப்பொழுது தங்களுக்கு நேரம் போகவில்லை, பொழுது போகவில்லை, போர் அடிக்கிறது என்ற காரணத்திற்காகவே குடிக்கக்கூடிய நிலை இருக்கிறது. அவர்கள் மதுவைக் குடித்து தங்களை பாழாக்கிக் கொள்வதுடன், மதுவிலக்குக் கொள்கைக்கும் எதிராக இருக்கிறார்கள். அவர்கள் மிச்சமிருக்கிற நேரத்தில், "Socially useful work" என்ற முறையில், சமுதாய நற்பணி என்ற வகையில் மதுகுடிப்பதால் ஏற்படும் தீமையை மக்களிடம் எடுத்துச் சொல்லி, பிரச்சாரம் செய்து, இதை ஒழிப்பதற்கான முயற்சி செய்து பார்க்கலாம். சாதாரண மக்களுக்காக மட்டுமல்ல, சமுதாயத்திலுள்ள அனைத்து மக்களுக்காகவும் இதைச் செய்யலாம். மதுவிலக்கை வெற்றிகரமாக நிறைவேற்ற முடியாமல் போனதற்கான காரணத்தைக் கண்டுபிடித்து, அதை "டேக்கிள்" பண்ணப் பார்க்காமல், குற்றத்திற்கான தண்டனையை மட்டும் அதிகமாக்கி விட்டால், பிரச்சினையைத் தீர்க்கலாம் என்று அரசாங்கம் நினைப்பதனால், வருங்காலத்தில் சமுதாயத்தில் எந்தவிதமான பின் விளைவுகளை அது ஏற்படுத்தப் போகிறது என்பதை நான் இங்கே சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மதுவிலக்குச் சட்டப்படி முதல் குற்றத்திற்கு அபராதம் மட்டும் இருந்தது. இப்போது முதல் குற்றத்திற்கு "கம்பல்சரியாக" மூன்று மாத சிறைத் தண்டனை என்று வைத்திருக்கிறார்கள். அப்படிப் பார்க்கின்றபோது, சமுதாயத்திலுள்ள எல்லாப் பிரிவினருக்கும் அந்தமாதிரிச் சட்டம் இருந்திருக்க வேண்டும். ஆனால் அதிகாரி என்றால், ஆறு மாத சிறைத் தண்டனை என்று வைத்திருக்கிறீர்கள். மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் ஒன்றைப் பற்றி எனக்கு விளக்கிக் கூற வேண்டும். அரசியல் சட்டத்திலே "Equality before law" என்று சொல்லப்பட்டிருக்கிறது. சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படிப் பார்க்கின்றபோது, ஒரு சாதாரண குடிமகனும் குடிக்கிறார்,

[திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர்] [1979 மார்ச் 16

அதிகாரியை வேறு ஊருக்கு மாற்ற வேண்டும். வேண்டாத முறையில், தப்பாகச் சொல்கிறேன் என்று அந்த அதிகாரியைச் சொல்லச் சொல்லுங்கள். அரசுக்குத் துரோகமாக நடக்க எவன் முற்பட்டாலும், அரசிடம் சொல்லித் தான் ஆக வேண்டும். யாரிடம் சொல்வது? முதலமைச்சர் அவர்களிடம் சொல்லியாக வேண்டும். சட்ட மந்திரி அவர்கள் நான் பேசுவதைக் கேட்டு, பதில் சொல்ல வேண்டும். எப்படி இருக்கும்? மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் பேசினார்கள். அதற்கு பதில் சொல்வார்கள். ஆனால் ராமகிருஷ்ணத் தேவர் அவர்கள் பேசியதற்கு, சட்ட மந்திரி பதில் சொல்வது என்றால், எவ்வளவு கஷ்டம்? அவர்களை வைத்துவிட்டு முதலமைச்சர் சுற்றுப்பயணம் போய்விட்டால் எப்படி? அதற்குத் தொழிலாளர் மந்திரியை விட்டால் அருமையாக இருக்கும். நாடகம் மாதிரி இருக்கும் . . . தொழிலாளர் நல மந்திரியை விட்டால், நன்றாக இருக்கும். இரண்டு எழுத்துக்கள் விட்டுப்போய்விட்டது. (சிரிப்பு)

மாற்றுத் தலைவர் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன்) : சீக்கிரம் முடியுங்கள்.

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் : நீங்கள் மணி அடிக்க வேண்டியது, எழுந்து போக வேண்டியது. உங்களுக்கு நல்லதாக நடந்தாலும் சரி, கெட்டதாக நடந்தாலும் சரி, அதைப்பற்றிக் கவலையில்லை. இந்த

(பிற்பகல் 5-50)

நிலைமையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் சொல்லி இதற்கு உடனடியாக ஒரு பரிகாரம் காண வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். இந்த பட்ஜெட் கூட்டத் தொடர் இன்னும் பல நாட்கள் நடைபெறவிருக்கிறது. அதற்குள்ளாகத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : மாற்றுத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமகிருஷ்ணத் தேவர் அவர்கள், அவர்களுடைய தொகுதியிலே, தேவகோட்டைப் பகுதியிலே காவல் துறை பற்றிய குறிப்புகளைப்பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் சொல்ல வேண்டுமென்று சொன்னார்கள். ஏற்கெனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் இதுபற்றிப் பேசப்பட்டு விட்டது. தகவல் கொடுக்கப்பட்டிருக்கிறது. நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கிறது. சட்டமன்றம் நடந்துகொண்டிருப்பதாலே, அந்த நல்ல செய்தி அவர்களுக்கு அறிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.



[திரு. ஆ. நல்லசிவன்]

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் : இப்பொழுது அவையில் மாற்றுத் தலைவர் அவர்கள் தான் உட்கார்ந்திருக்கிறார்கள். அவர் இருப்பதும் நல்லது தான். ஆனாலும் மாண்புமிகு தலைவர் அவர்கள் இல்லாமல் போய் விட்டார் என்று தான் எனக்கு வருத்தம். அந்தப் பகுதியிலே நடைபெறுகிற உண்மையான கருத்தை உங்களிடம் சொல்லுவேனே தவிர, தவறான கருத்தை எந்தக் காரணத்தைக் கொண்டும் சொல்ல மாட்டேன். அதை அமைச்சர்கள் உணர வேண்டும். நான் சொல்வதை அவர்கள் உறுதியாக நம்பலாம். அவர்கள் சொல்கிறார்கள், இவர்கள் சொல்கிறார்கள், கட்சிக்காரர்கள் சொல்கிறார்கள் என்றால் நம்ப வேண்டாம். எதையும் மனச்சாட்சியோடு அணுக வேண்டும். நான் சொல்லுகின்ற காரியங்களினால் யாருக்கும் தீங்கு வாராது, கஷ்டமும் வாராது.

அடுத்தபடியாக, மதுவிலக்கை செயல்படுத்துவதில் ஒரு தீவிரமான முயற்சியை எடுத்துக்கொள்ள வேண்டும். மாண்புமிகு அவை முன்னவர் அவர்களிடம் நான் அன்றைக்கு ஒன்றைக் குறித்துக் கொடுத்தேன். அது சம்பந்தமாக மாண்புமிகு அமைச்சரவர்கள் நேரடியாகத் தலையிட்டு நீதி வழங்க வேண்டும். அங்கே இரண்டு சப்-இன்ஸ்பெக்டர்கள் இருக்கிறார்கள். ஒருவர் டவுனில் இருக்கிறார். இன்னொருவர் தாலுக்காவில் இருக்கிறார். இரண்டு பேரும் உத்தமமானவர்கள். இந்த இரண்டு பேரும் அங்கே பிடித்துக் கொண்டு வருபவர்களையெல்லாம் "விட்டுவிடுங்கள்" என்று சொல்லுகிறார்கள். அப்படிச் சொல்லுகிறவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கூறி, என்னுடைய பேச்சை இத்துடன் முடித்துக்கொள்கின்றேன்.

* திரு. ஆ. நல்லசிவன் : மாற்றுத் தலைவரவர்களே, எங்கள் கட்சியின் சார்பில் இந்த மதுவிலக்குச் சட்ட திருத்தச் சட்டமுன்வடிவை நான் எதிர்க்கிறேன், ஆட்சேபிக்கிறேன். "மதுவிலக்குக் கொள்கை சமூக சீர்திருத்தக் கொள்கை ஆயிற்றே, அதை நீங்கள் எதிர்க்கலாமா?" என்று சொல்வதில் அர்த்தமில்லை என்பதை முதலில் நான் தெரிவித்துக்கொள்கின்றேன். எங்களுடைய கட்சியைப் பொறுத்தவரை, கட்சியினுடைய சட்ட திட்டங்களில், விதிகளில், நாங்கள் மதுவிலக்குக் கொள்கை சம்பந்தப்பட்ட விதியை ஒரு முக்கிய விதியாக வைத்திருக்கின்றோம் என்பதை நான் இங்கு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். மதுவிலக்குக் கொள்கைக்கு எதிராக இருப்பவர்கள், அதாவது குடிப்பவர்கள், யாரும் எங்கள் கட்சியில் உறுப்பினராக இருக்கக் கூடாது என்று சட்ட திட்டங்களை வைத்திருக்கிறோம். இன்றைக்கு தமிழகத்தை ஆளுகின்ற அரசாங்கத்திற்கு

[திரு. ஆ. நல்லசிவன்] [1979 மார்ச் 16

ஒரு அதிகாரியும் குடிக்கிறார். சட்டப்படி இருவருக்கும் ஒரே விதமான தண்டனை தான் வழங்கப்பட வேண்டும். ஆனால் இந்தப் புதிய மதுவிலக்குச் சட்டத் திருத்தத்தைப் பொறுத்தவரை, சாதாரண குடிமகன் என்றால், மூன்று மாத சிறைத் தண்டனையும் அதிகாரி என்றால், ஆறு மாத சிறைத் தண்டனையும் கிடைக்கும். அது எப்படிப் பொருந்தும்? இந்தச் சட்டத்தின் மூலம், சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற தத்துவம் அடிபட்டுப் போய்விடுகிறது. இப்படிச் சட்டம் போட்டால், அந்த அதிகாரிகள் எந்த அளவுக்குச் சட்டத்தை மதிப்பார்கள்? நான்கு ஆண்டுகள் அல்லது அய்ந்து ஆண்டுகள் கழித்து, எத்தனை அதிகாரிகள் மீது வழக்குத் தொடரப்பட்டு தண்டனை வழங்கப்பட்டிருக்கிறது, எத்தனை சாதாரண மக்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு தண்டனை வழங்கப் பட்டிருக்கிறது என்கிற விவரத்தை, புள்ளிவிவரத்தைப் பார்ப்போமேயானால், நான் நிச்சயமாகச் சொல்கிறேன், தண்டனை அடைந்த அதிகாரிகளின் எண்ணிக்கை இரண்டு சதவிகிதம் அல்லது அய்ந்து சதவிகிதத்திற்கும் குறைவாகத்தான் இருக்கும். அப்படிப் பார்க்கின்றபோது, சட்டத்தை அவர்கள் முழுமையாக நிறைவேற்றவில்லை என்கிற உண்மையை அரசினர் புரிந்துகொள்வார்கள். குற்றவாளிகளுக்குக் கடுமையான தண்டனையை வழங்குவதற்குப் பதிலாக, அதிகாரிகளைப் பிரச்சாரத்திற்குப் பயன் படுத்தலாம்.

இன்றைய சமுதாயத்தில் குடிக்கிற அதிகாரிக்கு தண்டனை கொடுப்பதற்கான சூழ்நிலை இருக்கிறதா என்பதையும் எண்ணிப்பார்க்க வேண்டும். சாதாரண குடி மக்கள், குடிக்கிற அதிகாரிக்கு எதிராக சாட்சி சொல்ல முன் வருவார்களா? சட்டமன்ற உறுப்பினர்களே கூட அதுமாதிரி சாட்சி சொல்ல முன்வருவார்களா என்பது சந்தேகம் தான். மாண்புமிகு அமைச்சர்கள் கூட அது போல பெரிய பெரிய அதிகாரிகள் குடித்தால், சாட்சி சொல்ல முன்வருவார்களா? இப்படிப்பட்ட நிலையில் சாதாரண குடி மக்கள் எப்படி சாட்சி சொல்ல முன்வருவார்கள்? போலீஸ் அதிகாரிகள் குடித்தாலும், அவர்களுக்கும் தண்டனை கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்களே, அது நடைமுறையில் நடக்கக் கூடிய காரியமா? கடுமையான தண்டனை கொடுப்பதன் மூலம் மட்டுமே இந்த மதுவிலக்குச் சட்டத்தை தீவிரமாக அமுல்படுத்தி வெற்றிகரமாக நிறைவேற்றிவிடலாம் என்று அரசாங்கம் கருதுவது தவறான கண்ணோட்டம் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக் கின்றேன். அதிகாரிகளுக்கு மட்டும் இரண்டு மடங்கு தண்டனை, சாதாரண



1979 மார்ச் 16] [திரு. ஆ. நல்லசிவன்]

மக்களுக்கு என்றால் ஒரு பங்கு தண்டனை என்று வைத்தால், இந்தச் சட்டத்தைப்பற்றி அதிகாரிகள் என்ன நினைப்பார்கள்? வழக்கைப் பதிவு செய்கின்ற போலீஸ் அதிகாரிக்கு இரண்டு மடங்கு தண்டனை என்றால், இதை அவர் அமுல்படுத்துவாரா? மேலும், இதுவரையில் சாதாரண சிறைத் தண்டனை என்று இருந்ததை இப்பொழுது கடுங்காவல் சிறைத்தண்டனை என்று மாற்றியிருக்கிறார்கள். ஜாமீன் கொடுப்பதிலும் கடுமையான கண்டிஷன் விதிக்கப்பட்டிருக்கிறது.

(பிற்பகல் 6-00)

ஜாமீன் கொடுக்கிற கண்டிஷனை மிகவும் கடினமாக்குவதன் மூலம் யார் பாதிக்கப்படுவார்கள்? மேஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் ஜாமீன் கிடைக்கவில்லை என்றால், செஷன்ஸ் கோர்ட்டுக்குப் போய் ஜாமீனில் வெளியே வருகிறவர்கள், எப்போதும்போல் இந்தச் சட்டத்தால் பாதிக்கப்படப் போவதில்லை. மாறாக ஏழை எளியவர்கள்தான் கண்டிப்பாக இதனால் பாதிக்கப்படுவார்கள். அவர்களாலேதான் செஷன்ஸ் கோர்ட்டுக்குப் போய் ஜாமீன் கோர முடியாது. முதல் கோர்ட்டுக்குப் போகவே வழியில்லாதவர்கள் அவர்கள். ஆகவே, இந்த அளவுக்கு ஜாமீன் கொடுப்பதற்கான கண்டிஷனை "stringent" ஆக ஆக்குவதால், எந்த ஏழை எளிய மனிதனும் செஷன்ஸ் கோர்ட்டுக்குப் போகப் போவதில்லை. நடைமுறையில், சாதாரணமாக, முதல் கோர்ட்டுக்கு மேலே போக முடியாத ஏழை எளிய மக்களுக்குத்தான் இதனால் பெருத்த சங்கடம் ஏற்படும். செஷன்ஸ் கோர்ட்டுக்குப் போகக்கூடிய வசதி படைத்தவர்களுக்கு அரசு போடுகிற இந்த ஜாமீன் கண்டிஷன் எல்லாம் சாதாரண 'கொசு' மாதிரிதான். எனவே ஜாமீன் கண்டிஷனை "stringent" -ஆக ஆக்கி யிருப்பது வசதி படைத்தவர்களைப் பாதிக்காது; மாறாக ஏழை எளிய மக்களைத்தான் பாதிக்கும்.

அடுத்து, exterminent அல்லது banishment என்று சொல்லக் கூடாது; இதை removal என்ற வார்த்தையால் குறிப்பிட வேண்டு மென்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த நாட்டு அரசியல் சட்டத்தின்படி, ஒரு பிரஜை இந்தியாவின் எந்தப் பகுதியிலும் போய் வாழலாம், எங்கேயும் போய்த் தொழில் செய்யலாம் என்று உரிமையளிக்கப் பட்டிருக்கிறது. அந்த உரிமைகளின் மீது இந்த அரசாங்கம் மதுவிலக்குச் சட்டத்தின் பேரால் எப்படி கை வைக்க முடியும் என்பதுதான் என்னுடைய கேள்வி. அரசாங்கத்தின் சார்பில், "தொடர்ச்சியாகக் கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களை ஏன் இப்படிச் செய்யக்கூடாது?" என்று கேட்கலாம்.

[திரு. ஆ. நல்லசிவன்] [1979 மார்ச் 16

ஒரு அதிகாரியும் குடிக்கிறார். சட்டப்படி இருவருக்கும் ஒரே விதமான தண்டனை தான் வழங்கப்பட வேண்டும். ஆனால் இந்தப் புதிய மதுவிலக்குச் சட்டத் திருத்தத்தைப் பொறுத்தவரை, சாதாரண குடிமகன் என்றால், மூன்று மாத சிறைத் தண்டனையும் அதிகாரி என்றால், ஆறு மாத சிறைத் தண்டனையும் கிடைக்கும். அது எப்படிப் பொருந்தும்? இந்தச் சட்டத்தின் மூலம், சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற தத்துவம் அடிபட்டுப் போய்விடுகிறது. இப்படிச் சட்டம் போட்டால், அந்த அதிகாரிகள் எந்த அளவுக்குச் சட்டத்தை மதிப்பார்கள்? நான்கு ஆண்டுகள் அல்லது அய்ந்து ஆண்டுகள் கழித்து, எத்தனை அதிகாரிகள் மீது வழக்குத் தொடரப்பட்டு தண்டனை வழங்கப்பட்டிருக்கிறது, எத்தனை சாதாரண மக்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு தண்டனை வழங்கப் பட்டிருக்கிறது என்கிற விவரத்தை, புள்ளிவிவரத்தைப் பார்ப்போமேயானால், நான் நிச்சயமாகச் சொல்கிறேன், தண்டனை அடைந்த அதிகாரிகளின் எண்ணிக்கை இரண்டு சதவிகிதம் அல்லது அய்ந்து சதவிகிதத்திற்கும் குறைவாகத்தான் இருக்கும். அப்படிப் பார்க்கின்றபோது, சட்டத்தை அவர்கள் முழுமையாக நிறைவேற்றவில்லை என்கிற உண்மையை அரசினர் புரிந்துகொள்வார்கள். குற்றவாளிகளுக்குக் கடுமையான தண்டனையை வழங்குவதற்குப் பதிலாக, அதிகாரிகளைப் பிரச்சாரத்திற்குப் பயன் படுத்தலாம்.

இன்றைய சமுதாயத்தில் குடிக்கிற அதிகாரிக்கு தண்டனை கொடுப்பதற் கான சூழ்நிலை இருக்கிறதா என்பதையும் எண்ணிப்பார்க்க வேண்டும். சாதாரண குடி மக்கள், குடிக்கிற அதிகாரிக்கு எதிராக சாட்சி சொல்ல முன் வருவார்களா? சட்டமன்ற உறுப்பினர்களே கூட அதுமாதிரி சாட்சி சொல்ல முன்வருவார்களா என்பது சந்தேகம் தான். மாண்புமிகு அமைச்சர்கள் கூட அது போல பெரிய பெரிய அதிகாரிகள் குடித்தால், சாட்சி சொல்ல முன்வருவார்களா? இப்படிப்பட்ட நிலையில் சாதாரண குடி மக்கள் எப்படி சாட்சி சொல்ல முன்வருவார்கள்? போலீஸ் அதிகாரிகள் குடித்தாலும், அவர்களுக்கும் தண்டனை கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்களே, அது நடைமுறையில் நடக்கக் கூடிய காரியமா? கடுமையான தண்டனை கொடுப்பதன் மூலம் மட்டுமே இந்த மதுவிலக்குச் சட்டத்தை தீவிரமாக அமுல்படுத்தி வெற்றிகரமாக நிறைவேற்றிவிடலாம் என்று அரசாங்கம் கருதுவது தவறான கண்ணோட்டம் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக் கின்றேன். அதிகாரிகளுக்கு மட்டும் இரண்டு மடங்கு தண்டனை, சாதாரண



1979 மார்ச் 16] [திரு. ஆ. நல்லசிவன்]

மக்களுக்கு என்றால் ஒரு பங்கு தண்டனை என்று வைத்தால், இந்தச் சட்டத்தைப்பற்றி அதிகாரிகள் என்ன நினைப்பார்கள்? வழக்கைப் பதிவு செய்கின்ற போலீஸ் அதிகாரிக்கு இரண்டு மடங்கு தண்டனை என்றால், இதை அவர் அமுல்படுத்துவாரா? மேலும், இதுவரையில் சாதாரண சிறைத் தண்டனை என்று இருந்ததை இப்பொழுது கடுங்காவல் சிறைத்தண்டனை என்று மாற்றியிருக்கிறார்கள். ஜாமீன் கொடுப்பதிலும் கடுமையான கண்டிஷன் விதிக்கப்பட்டிருக்கிறது.

(பிற்பகல் 6-00)

ஜாமீன் கொடுக்கிற கண்டிஷனை மிகவும் கடினமாக்குவதன் மூலம் யார் பாதிக்கப்படுவார்கள்? மேஜிஸ்ட்டிரேட் கோர்ட்டில் ஜாமீன் கிடைக்கவில்லை என்றால், செஷன்ஸ் கோர்ட்டுக்குப் போய் ஜாமீனில் வெளியே வருகிறவர்கள், எப்போதும்போல் இந்தச் சட்டத்தால் பாதிக்கப்படப் போவதில்லை. மாறாக ஏழை எளியவர்கள்தான் கண்டிப்பாக இதனால் பாதிக்கப்படுவார்கள். அவர்களாலேதான் செஷன்ஸ் கோர்ட்டுக்குப் போய் ஜாமீன் கோர முடியாது. முதல் கோர்ட்டுக்குப் போகவே வழியில்லாதவர்கள் அவர்கள். ஆகவே, இந்த அளவுக்கு, ஜாமீன் கொடுப்பதற்கான கண்டிஷனை "stringent" ஆக ஆக்குவதால், எந்த ஏழை எளிய மனிதனும் செஷன்ஸ் கோர்ட்டுக்குப் போகப் போவதில்லை. நடைமுறையில், சாதாரணமாக, முதல் கோர்ட்டுக்கு மேலே போக முடியாத ஏழை எளிய மக்களுக்குத்தான் இதனால் பெருத்த சங்கடம் ஏற்படும். செஷன்ஸ் கோர்ட்டுக்குப் போகக்கூடிய வசதி படைத்தவர்களுக்கு அரசு போடுகிற இந்த ஜாமீன் கண்டிஷன் எல்லாம் சாதாரண 'கொசு' மாதிரிதான். எனவே ஜாமீன் கண்டிஷனை "stringent" -ஆக ஆக்கி யிருப்பது வசதி படைத்தவர்களைப் பாதிக்காது; மாறாக ஏழை எளிய மக்களைத்தான் பாதிக்கும்.

அடுத்து, externment அல்லது banishment என்று சொல்லக் கூடாது; இதை removal என்ற வார்த்தையால் குறிப்பிட வேண்டு மென்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த நாட்டு அரசியல் சட்டத்தின்படி, ஒரு பிரஜை இந்தியாவின் எந்தப் பகுதியிலும் போய் வாழலாம், எங்கேயும் போய்த் தொழில் செய்யலாம் என்று உரிமையளிக்கப் பட்டிருக்கிறது. அந்த உரிமைகளின் மீது இந்த அரசாங்கம் மதுவிலக்குச் சட்டத்தின் பேரால் எப்படி கை வைக்க முடியும் என்பதுதான் என்னுடைய கேள்வி. அரசாங்கத்தின் சார்பில், "தொடர்ச்சியாகக் கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களை ஏன் இப்படிச் செய்யக்கூடாது?" என்று கேட்கலாம்.

காவல் துறை நிரூபித்தாக வேண்டும். இந்த நடைமுறைதான் இன்றுவரை நாட்டில் பின்பற்றப்படுகிறது. அப்படி இருக்கும்போது மதுவிலக்குக் குற்றங்களில் ஈடுபடுத்தப்படுகிற வாகனங்களைப் பொறுத்தவரையில், onus of proof lies on the owner of the vehicle " " என்று சொல்வது எப்படி நியாயமாகும் என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். குற்றஞ்சாட்டுகிற பிராசிகியுஷன் தரப்பு நிரூபிக்க வேண்டியதை குற்றஞ்சாட்டப்பட்டவர் ஆட்சேபித்து நிரூபிக்க வேண்டும் என்று சொல்லுவது எப்படி முறையாக இருக்க முடியும்? இதைத்தான் பெரிய புரட்சி என்று சொல்லுகிறீர்களா என்று கேட்கத் தோன்றுகிறது. ஏதாவது புரட்சி செய்ய வேண்டும் என்பதற்காக இப்படியெல்லாம் செய்வதா?

அடுத்து, மது விலக்குக் குற்றங்களைப் பொறுத்தவரையில், 'ரெசிடன்ஷியல் பகுதியில்' குடித்திருப்பதாகத் தகவல் கிடைத்தாலும், போலீஸ் அங்கே சென்று பிடிக்கலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதன் விளைவு என்ன ஆகும் என்பதை நாம் சிறிது சிந்தித்துப் பார்க்க வேண்டும். ரோட்டில் குடித்துவிட்டு விழுந்துகிடக்கிறவர்களைப் பிடித்துப் போவதைப்பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் குடியிருக்கிற அல்லது வசிக்கிற பகுதிகளில் குடித்துவிட்டிருக்கிறார்கள் என்ற தகவல் இருந்தால், போய் பிடிக்கலாம் என்ற அதிகாரத்தை போலீஸ்காரர்களுக்குக் கொடுத்தால், அதனால் என்ன நடக்கும் என்று எண்ணிப் பார்க்க வேண்டும். இந்தச் சமயத்தில் ஒரு விஷயத்தை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இந்த மன்றத்தில் ஒரு வாரத்திற்கு முன்னால்தான் 'உரிமைக் குழுவின்' அறிக்கை வைக்கப்பட்டது. அதன் விவாதத்திற்குள் நான் போகவில்லை என்றாலும், ஒன்றை நான் தெளிவாகக் குறிப்பிட விரும்புகிறேன். இந்த மன்றத்தின் உறுப்பினர் ஒருவர் மதுவிலக்குச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டது தொடர்பாக, அந்த உரிமைப் பிரச்சினை வந்தது. இந்த மன்றத்தின் எல்லைக்குள்ளாக ஒரு உறுப்பினர் தலைவரின் அனுமதியில்லாமல் கைது செய்யப்பட்டார் என்பதால், உரிமைப் பிரச்சினை எழுந்து, அதை உரிமைக் குழுவில் விவாதித்தோம். எதற்கு அதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன் என்றால், இந்த அவையின் உறுப்பினர் ஒருவரையே கைது செய்ய வேண்டும் என்று ஒரு போலீஸ் அதிகாரி விரும்பியபோது, அவருக்கு உதவியாக இருந்தது இந்த மதுவிலக்குச் சட்டம்தான். அந்தப் போலீஸ் அதிகாரியைப் பார்த்துக் கேட்டோம். உறுப்பினர் மயக்கமடைந்து கீழே விழுந்திருந்தால், அவரை அவைக்கு அருகில் உள்ள ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்றிருக்கலாமே என்று கேட்டபோது, அந்தப் போலீஸ் அதிகாரி என்ன பதில் சொன்னார் என்றால், 'இந்த



ஆஸ்பத்திரியில் மதுவிலக்குக் குற்றத்தைப் பரிசீலனை செய்து சான்றிதழ் வழங்குவதில்லை, ஆகவேதான் உறுப்பினரை ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றேன்' என்று குறிப்பிட்டார். ஆக, ஒரு எம்.எல்.சி.-யைக் கைது செய்யக்கூட ஒரு போலீஸ் அதிகாரிக்கு அடைக்கலம் கொடுப்பது இந்த மதுவிலக்குச் சட்டம்தான் என்கிறபோது, மற்றவர்கள்மீது இந்தச் சட்டம் எந்த அளவுக்குப் பாயும் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். ஒரு வாரத்திற்கு முன்புதான் அந்தப் போலீஸ் அதிகாரி உரிமைக் குழுவால் மன்னித்து அனுப்பப்பட்டார். சட்டசபை நடக்கும்போது, ஒரு உறுப்பினரைக் கூட இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி, போலீஸ் அதிகாரிகள் கைது செய்ய முடியும் என்றால், மற்றவர்கள் நிலை என்ன என்று எண்ணிப்பார்க்க வேண்டும். ஆக வீடுகளில் குடிக்கிறார்கள் என்ற பெயரால் போலீஸ் அதிகாரிகள் இந்தச் சட்டத்தை எந்த அளவுக்கு துஷ்பிரயோகம் செய்ய முடியும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

1978 ஆம் ஆண்டு அக்டோபர் முதல் 1979 ஆம் ஆண்டு பிப்ரவரி வரை சுமார் 30,000 வழக்குகள் ரிஜிஸ்டர் செய்யப்பட்டதாகச் சொல்லப்பட்டது. இந்த அவசரச் சட்டம் அமுலுக்கு வந்த பிறகு, இந்த 30,000 பேர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது என்றால், இவர்களெல்லாம் யார்? மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் பேசும்போது, மது காய்ச்சுகிறவர்கள், மது விற்பனை செய்பவர்கள், மது குடிப்பவர்கள் என்று மூன்று பிரிவினராகப் பிரித்துச் சொன்னார்கள். இந்த 30,000 பேரில் மேலே சொல்லப்பட்ட 3-வது பிரிவினர்தான் மிக மிக அதிகம். காரணம் குடிப்பவர்கள்தான் அகப்பட்டுக்கொள்வார்கள். கள்ளச் சாராயத்தைக் காய்ச்சுகிறவர்களுக்கும், விற்பனை செய்கிறவர்களுக்கும் தப்பித்துக் கொள்ளத் தேவையான 'modus operandi' தெரியும். இந்த 3-வது பிரிவினருக்கு அது

(பிற்பகல் 6-10)

தெரியாது. கள்ளச் சாராயம் காய்ச்சுபவனுக்கு இந்த modus operandi எல்லாம் நன்றாகத் தெரியும். ஆனால் அப்பாவி குடித்துக்கொண்டு போகிறானே அவன் தான் மாட்டிக் கொள்வான். இப்போது 30,000 வழக்குகள் போட்டிருக்கிறார்கள், இதைப் பார்த்தாவது யார் அதிகமாக உபயோகிக்கிறார்கள் என்று தெரிந்துகொள்ளவேண்டாமா? உங்களது 5 மாத 'எக்ஸ்பெரிமெண்ட்'-லே இதைத் தெரிந்துகொள்ள முடியவில்லையா? அய்ந்து மாதங்கள் 'எக்ஸ்பெரிமெண்ட்' செய்து, 30 ஆயிரம் கேஸ்கள் ரிஜிஸ்டர் செய்திருக்கிறார்கள். அதிலே குடிப்பவர்கள் எத்தனை பேர்கள், உற்பத்தி [illegible] எத்தனை பேர்கள் என்பது தெரியும். உற்பத்தி

[திரு. ஆ. நல்லசிவன்] [1979 மார்ச் 16

இந்த வகையில் நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், இந்த அரசு மது குடிப்பதை ஒரு பெரிய தவறாக, மது காய்ச்சுவதை ஒரு பெரிய குற்றமாகக் கருதுவதைப்போல், இந்தச் சமுதாயம் ஆயிரக் கணக்கான வருஷங்களாகக் கருதவில்லையே! ஏதோ கொலைக் குற்றத்தைப் போல் இந்தக் குற்றத்தை அரசாங்கம் கருதுவதற்கு என்ன காரணம் என்றுதான் எனக்குப் புரியவில்லை. மனிதன் தோன்றிய காலத்திலிருந்து மது குடிப்பதை இந்த அளவுக்குத் தீவிரமான குற்றமாகக் கருதாதபோது, இந்த அரசாங்கம் திடீரென்று இதை மாபெரும் குற்றமாகக் கருதி, சாராயம் காய்ச்சுகிறவர்களை அவர்கள் குடியிருக்கிற பகுதியிலிருந்து வெளியேற்றலாம் என்று சட்டம் கொண்டுவருவது எந்த வகையில் நியாயம் என்றுதான் கேட்க விரும்புகிறேன்.

சுதந்திரப் போராட்ட காலத்தில் banishment என்னும் நாடுகடத்தல் முறை கையாளப்பட்டது. வெள்ளைக்காரனுக்கு எதிராக இந்த நாட்டு மக்கள் கொதித்து எழுந்தபோது, இந்த நாட்டிலிருந்த தேசபக்தர்கள் திரண்டெழுந்த போது, இந்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன் காரணமாக சுப்பிரமணிய பாரதியாரைப் போன்றவர்கள்கூட இங்கிருந்து வெளியேறி புதுவையிலே போயிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. banishment எமது காலத்திய ஆட்சியில், உத்தரவு போடுவதற்கு ஒரு நியாயம் வேண்டாமா? அதிலும், போயும் போயும் குடிகாரர்கள்மீதா சரித்திரம் படைத்த, கவுரவம் படைத்த தேசபக்தர்கள் மீது போடப்பட்ட இந்த உத்தரவைப் போடுவது? தேசபக்தர்கள்மீது போடப்பட்ட ஆர்டரை இன்றையதினம் போயும் போயும் குடிகாரர்கள்மீது போடவா இந்த அரசாங்கம் முன்வர வேண்டும்?

அடுத்து, முன்பெல்லாம் மதுவிலக்குக் குற்றத்திற்காகக் கைதானவர்களைக் கண்டித்து, மன்னித்து விடுவது வழக்கம். இந்தத் திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் இனிமேல் அந்த முறைகள் இல்லை. அப்படியானால், இந்த அரசு மது விலக்குக் குற்றத்தை அவ்வளவு பெரிய பாபமாகக் கருதுகிறதா என்பது தெரியவில்லை. கிரிமினல் குற்றத்தில் ஈடுபட்டவர்களுக்குக்கூட இந்த அளவுக்குக் கடுமையான தண்டனை விதிக்கப்படுவதில்லை. கிரிமினல் குற்றத்தைவிடக் கொடுமையான குற்றமா மது விலக்குக் குற்றம்? மது விலக்குக் குற்றத்தைவிட எத்தனையோ கொடுமையான குற்றங்களெல்லாம் இருக்கின்றன. அவைகளுக்கெல்லாம்கூட குற்றவாளிகளை மன்னித்து விடுதலை செய்யலாம் அல்லது 'புரபேஷனில்' வைக்கலாம் என்று சொல்லியிருக்கும்போது, மது விலக்குக் குற்றவாளிகளுக்கு மட்டும் இந்தச் சலுகை இல்லை என்பது நியாயமா என்பதை மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆகவே, இந்த அரசாங்கம் இந்தப்



1979 மார்ச் 16] [திரு. ஆ. நல்லசிவன்]

பிரச்சினையை 'சப்ஜெக்டிவ்'-ஆக அணுகக் கூடாது. "It is only a subjective assessment of the Government" இதை "Objective"-ஆக ஆராய அரசு முன்வர வேண்டும். மது குடிப்பது என்பது அவ்வளவு பெரிய பாபமான காரியமல்ல. நம் நாட்டுக் காவியங்களிலேகூட மது குடிப்பதைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. மது குடிப்பதைப்பற்றிப் பலர் பாடியிருக்கிறார்கள். அந்த அளவுக்கு, மிகப் பழமையான காலத்திலிருந்து அருந்தப்படும் மதுப் பழக்கத்தை திடீரென்று சட்டம்போட்டு மாற்றிவிடலாம் என்று இந்த அரசாங்கம் நினைப்பது சரியில்லை. புலவர் புலமைப்பித்தன் அவர்களைப் போல், அந்தப் பாடல்களை எல்லாம் என்னால் பாட முடியாது. வள்ளுவரைப்பற்றி அவர் இங்கே குறிப்பிடலாம். ஆனால் கிரிமினல் புரோசிஜுர் கோடில் இருக்கிற பல குற்றங்களைவிட இதை மிகக் கடுமையான குற்றமாகக் கருத வேண்டிய நியாயமேயில்லை என்பதுதான் என்னுடைய கருத்து. அந்த நிலையில் இதில் 'புரோபேஷன்' அல்லது 'அட்மானிஷனுக்கு' வழி இருக்க வேண்டும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எந்த வகையிலும் அரசாங்கத்தின் அணுகுமுறை இந்தப் பிரச்சினையில் சரியாக இல்லை என்பதைக் குறிப்பிடுகிறபோது, அரசாங்கத்தின் 'சப்-ஜெக்டிவ் திங்கிங்' தான் இதில் பிரதிபலிக்கிறதே தவிர, 'அப்ஜெக்டிவ்' திங்கிங்-க்கு இடமிருப்பதாகவே தெரியவில்லை.

அடுத்து, மதுவிலக்குக் குற்றத்தில் ஈடுபடுத்தப்படும் வாகனத்தை அரசாங்கம் பறிமுதல் செய்ய வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அது மாத்திரமல்ல, அந்த வாகனம் யாருக்குச் சொந்தமோ அவர்மீதும் நடவடிக்கை எடுத்து அவரையும் சிறையில் தள்ளலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவ்வாறு ஒரு மதுவிலக்குக் குற்றத்தில் ஒரு வண்டி அல்லது வாகனம் உபயோகப்படுத்தப்பட்டிருந்தால், அதற்காக அந்த வாகனத்தின் சொந்தக்காரர்மீது அரசாங்கம் வழக்குத் தொடர்ந்தால், அந்த வாகனத்தின் சொந்தக்காரர் நீதிமன்றத்திலே ஒன்றை நிரூபிக்க வேண்டும். அது என்னவென்றால், 'இந்த வாகனத்தை தவறாகப் பயன்படுத்தக்கூடாது என்று நான் எவ்வளவோ முயற்சி செய்து பார்த்தேன். என்னையும் மீறி இவர் எடுத்துக் கொண்டுபோய், இந்தக் குற்றத்திற்கு இதை ஈடுபடுத்தியிருக்கிறார்' என்று நிரூபிக்க வேண்டும். வெள்ளைக்காரன் காலத்திலேயிருந்து இந்த நாட்டிலே நாம் ஒரு முறையைப் பின்பற்றி வருகிறோம்; அதாவது ஒருவன் மீது குற்றம் சாட்டப்பட்டால், அது கொலைக் குற்றமாக இருந்தாலும் சரி, வேறு எந்தக் குற்றமாக இருந்தாலும் சரி, அந்தக் குற்றத்தைக் குற்றவாளிதான் செய்தார் என்பதைச் சந்தேகத்திற்கு இடமின்றி நீதிமன்றத்தில் வழக்குத் தொடரும்

பண்ணினவர்கள் அதிகம் இல்லை. குடிப்பவர்கள் தான் அதிகம் இருக்கிறார்கள். ஆகவே, இதைச் சட்டமாக்கினால், அதிகம் பாதிக்கப் படுபவர்கள் குடிப்பவர்கள் தான். இப்படி குடிப்பவர்களில் அதிகம் பேர்கள் இந்த நாட்டிலே இருக்கும் சாதாரண ஏழையெளிய மக்கள் என்பது உங்களுக் கெல்லாம் தெரியவில்லையா? தெரியவில்லை என்றால், இந்த 5 மாதத்தை ஒரு 'எக்ஸ்பெரிமென்ட்'-ஆகக் கூட வைத்துப் பார்க்க வேண்டாமா? இதைக் கொண்டு யார் இதிலே அதிகம் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று தயவு செய்து பாருங்கள். உங்களுக்குத் தெரியாமலா இருக்கும்? எக்ஸ்பெரி மென்ட்-லே அப்பட்டமாகத் தெரிந்திருந்தும், ஏன் இப்படி ஒரு சட்டத்தை நீங்கள் கொண்டு வருகிறீர்கள்? இன்னும் சொல்லப்போனால், தமிழ் நாட்டிலே இருக்கக்கூடிய ஏழையெளிய மக்கள்தான் இந்தச் சட்டத்தினால் அதிகம் பாதிக்கப்படுவார்கள். ஏற்கெனவே இந்தப் பழக்கவழக்கங்களுக்கு அதிகமாக அடிமையானவர்கள் ஏழையெளிய மக்கள்தான். கொஞ்ச நஞ்சம் இல்லை, பெரும்பாலானவர்கள் அப்படித்தான் இருக்கிறார்கள். சமூக நிலைதான் அதற்குக் காரணம். ஆகவே, என்ன சொல்ல வருகிறேன் என்றால், இந்தச் சட்டம் ஏழையெளிய மக்களைத்தான் பாதிக்கும் நிலை இருக்கிறது. இந்தச் சட்டத்தை அமுல்நடத்துவதை போலீஸ் இலாகாவிடம் ஒப்படைக்கின்றீர்கள். உங்களது குறிக்கோளே இந்த ஏழையெளிய மக்களை இஷ்டம்போல் பந்தாட வேண்டும் என்பதுதானா? இந்தச் சட்டத்தைப் போலீஸ் இலாகாவினரிடம் ஒப்படைக்கின்றீர்கள் என்றால், இதுதான் அதற்கு அர்த்தம். இதை அமுல்படுத்துவதன்மூலம் உங்களுக்கு, உங்கள் அரசுக்குத் தான் கெட்ட பெயர் ஏற்படும். இன்றைய சூழ்நிலையில் உங்களுக்குக் கெடுதல் விளைவிக்க வேறு யாரும் வேண்டாம். எதிர்க் கட்சிகளே வேண்டாம். நான், நண்பன் என்ற முறையில் திரும்ப திரும்பச் சொல்கிறேன், "அரசியலில் நீங்கள் செய்வது எல்லாம் சரி என்று தயவு செய்து நினைக்க வேண்டாம். இது சாதாரண மக்களிடையே ஒரு பெரும் விளைவை ஏற்படுத்தப்போகிறது". ஒரு சமூகச் சீர்திருத்தம் செய்வதற்கு போலீசுக்கு என்ன அருகதை இருக்கிறது? சமூகச் சீர்திருத்தத்தைச் செய்வதற்கு போலீஸ் டிப்பார்ட்மென்ட் பயன்படுமா? அதற்கென்று ஒரு பக்குவம் வேண்டாமா? போலீசாருக்கு அதற்கு வேண்டிய பக்குவமோ, பயிற்சியோ கிடையாது. ஏனென்றால் அவர்களுடைய பிறப்பும், வளர்ப்பும் அப்படி. அப்படிப்பட்டவர்களிடம் இந்தச் சட்டத்தைக் கொடுத்து மக்களிடம் ஆதிக்கம் செலுத்தச் சொல்கிறீர்கள். இப்படி போலீஸ் அதிகாரிகளிடம் இந்தச் சட்டத்தை ஒப்படைத்தால், அவர்கள் இதை எப்படி துஷ்பிரயோகம் செய்வார்கள் என்று யோசித்துப் பாருங்கள், இந்த நாட்டிலே



21 மாதமாக இருந்த எமர்ஜென்சி கால ஆட்சியைத்தான் கண்டோமே, "எமர்ஜென்சி காலத்திலே வசதி உள்ளவர்கள் கூட கோர்ட்டுக்குப் போக முடியாத நிலை இருந்தது. ஆனால் இந்தச் சட்டப்படி கோர்ட்டுக்குப் போகலாம். அதற்குரிய வாய்ப்பு வசதிகள் இருக்கின்றன" என்று நீங்கள் சொல்லலாம். எமர்ஜென்சியிலே சுப்ரீம் கோர்ட்டுக்கும் போக முடியாது. உடம்புக்கு ஆபத்து இருந்தாலும், உயிருக்கு என்ன ஆபத்து வந்தாலும், கோர்ட்டுக்குப் போக முடியாது. ஆனால் இந்தச் சட்டத்தைப் போலீசாரிடம் ஒப்படைத்தால், இதனால் பாதிக்கப்படும் கோடிக்கணக்கான மக்களுக்கு நியாயம் கிடைக்கப் போவதில்லை. கோர்ட்டுக்குப் போவதற்குக் கூட வக்கில்லை. எமர்ஜென்சியிலே எந்தெந்த அதிகாரங்கள் போலீசுக்குக் கொடுக்கப்பட்டனவோ, அந்த வகையான அதிகாரங்கள் தான் இன்றைக்கும் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

மதுவிலக்கை அமுல்படுத்துவதால், இந்த மாநிலத்தினுடைய பட்ஜெட்டில் கோடிக்கணக்கான ரூபாய் வருமான இழப்பு ஏற்படுகிறது. ஆனால், இவ்வளவு இழப்புகளை நாம் எதற்காக ஏற்றுக்கொள்ளுகிறோம்? இந்த சமுதாயம் முன்னேற்றமடைய வேண்டும் என்பதற்காக! இந்த நஷ்டத்தை ஈடுகட்டும் அளவுக்கு இந்த மாநிலத்தினுடைய சமூக, பொருளாதாரத் துறையிலே ஏதாவது முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறதா என்றால், அதுதான் இல்லை. இன்றையதினம், ஏதோ கிடைக்கிறது என்று நினைத்து, சும்மா நல்ல சரக்கு என்று குடித்துவிட்டுப் போவான். அது உண்மையில் காட்டமான சரக்காக இருக்கும். கள்ளத்தனமாக அவசர அவசரமாகப் பண்ணுவதனால், அதை சோதித்துப் பார்க்காமல் கூட கொடுக்கிறான். அதை இவன் வாங்கிக் குடித்து, செத்த பின்னால்தான் விஷயம் தெரிகிறது. ஆக, இப்படி ரகசியமாக சாராயம் தயாரிக்கிறவன், அதை விற்பவன், வேண்டாத பொருள்களை அதனுடன் கலந்து இப்படிப்பட்ட மோசமான பொருள்களை விற்று, அதை வாங்கிக் குடிக்கிற மக்களுடைய ஹெல்த் இன்றையதினம் வெகுவாக பாதிக்கப்படும் நிலை தான் இருக்கிறது. ஆகவே, இந்தச் சட்டமுன்வடிவை அரசு உடனடியாக வாபஸ் வாங்க வேண்டும். இந்தச் சட்டத்தை, இந்த சமுதாயத்திலே எவ்வளவு சக்தி இருக்கிறதோ அவ்வளவு சக்தியும் சேர்ந்து எதிர்க்க வேண்டும் என்ற எனது கருத்தைத் தெரிவித்து, முடித்துக்கொள்கிறேன்.

*THIRUMATHI MANDAKINI KRISHNAMOORTHI: Hon. Vice-Chairman, Sir, as a social worker and as a person interested in women's welfare, I was rather sorry to hear some of the

speeches which were very lightly made against such a progressive reform. At the last meeting, we went on saying that the law was very lenient and at this meeting we are saying that it is very rigorous. I hope we do not follow the pattern of Doubting Thomases. When Prohibition was suspended in 1974 or so, the women were very unhappy.

திரு. வே. தங்கப்பாண்டியன் : 'ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர்' தி.மு.க. கட்சி சார்பாக நிறைய பேர் பெயர் கொடுத்திருக்கிறார்கள். பொதுவாக ஆளும் கட்சி வரிசையிலே ஒருவர் பேசினால், அடுத்தது எதிர்க்கட்சி வரிசையிலே இருப்பவர்கள் பேசுவார்கள். அதுதான் மரபு. அப்படி இருக்க ஏன் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இன்னும் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுக்கவில்லை. இந்தமாதிரி மரபைப் பின்பற்றாதது மிகப் பெரிய தப்பு. இந்த முறையை . . .

மாற்றுத் தலைவர் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன்) : இங்கே யார் யார் பேசுவது என்று பெயர்கள் எழுதப்பட்டிருக்கின்றன.

திரு. வே. தங்கப்பாண்டியன் : நாங்களும் பெயர் கொடுத்திருக்கிறோம்.

மாற்றுத் தலைவர் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன்) : இங்கே எழுதியிருக்கிற வரிசைப்படி தான் நான் பேச அழைத்தேன். எழுதியிருப்பதைப் பார்க்கலாம்.

திரு வே. தங்கப்பாண்டியன் : பின்பற்ற வேண்டும் என்று ஒரு முறை இருக்கிறதே, அதைப் பின்பற்ற வேண்டாமா?

Thirumathi MANDAKINI KRISHNAMOORTHI: Sir, I am willing to withdraw.

THIRU V. THNGAPANDIAN: Sir, I am not objecting to the hon. Lady Member making her speech.

Vice-Chairman (Thiru E. S. Venkatesan): The hon. Member Thiru Thangapandian's name is far below in the list of speakers given to me. I am calling the names of the speakers according to the list given to me.

THIRU V. THANGAPANDIAN: It does not matter whether it is written there or not. The main Opposition Party, the D.M.K. should be given its proper place.



VICE-CHAIRMAN (Thiru E. S. Venkatesan): In the list with me, the first name is that of the hon. Lady Member. Then the names of Thiruvalargal Manickam and Pulamaipithan are there. Then only the name of Thiru Thangapandian is written. Hon. Chairman has fixed the order. I am only Vice-Chairman and I have to follow the list given.

THIRU V. THANGAPANDIAN: The members from the Ruling Party and from this side have been called. I was ready to speak expecting that I would be called next, on behalf of the Opposition Party, the D.M.K.

VICE-CHAIRMAN (Thiru E. S. Venkatesan): If the hon. Member wants, he may speak even now

THIRU V. THANGAPANDIAN: Because the hon. Lady Member has already been called, let her speak now.

VICE-CHAIRMAN (Thiru E. S. Venkatesan): I have followed only the list of speakers to be called and in the order in which it is written.

THIRU V. THANGAPANDIAN: The list is not a gospel which cannot be altered.

திரு. ம. சங்கரலிங்கம் : மாற்றுத் தலைவர் அவர்களே, ஒரு பார்ட்டியில் ஒருவர் பேசினால் அடுத்து அடுத்த பார்ட்டியில் உள்ள ஒருவருக்குக் கொடுப்பது தான் முறை.

மாற்றுத் தலைவர் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன்) : நல்லசிவன், மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி, மாணிக்கம், மீனாட்சிசுந்தரம், புலமைப்பித்தன், வீராசாமி, தங்கப்பாண்டியன் என்று ஏற்கெனவே எழுதப்பட்டிருக்கிறது. அதன்படிதான் நான் கூப்பிட்டேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : எழுதப்பட்டிருக்கிறதா என்பதைப்பற்றி அவர் கேட்கவில்லை. பொதுவாக ஆளும் கட்சி சார்பிலே ஒருவர் பேசினால், அடுத்து எதிர்த் தரப்பிலே இருக்கும் ஒருவர் பேசவேண்டும்.

மாற்றுத் தலைவர் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன்) : இப்போது பேசியது திரு. நல்லசிவன் அவர்கள்.

(Thirumathi Mandakini Krishnamoorthi) [1979 மார்ச் 16

speeches which were very lightly made against such a progressive reform. At the last meeting, we went on saying that the law was very lenient and at this meeting we are saying that it is very rigorous. I hope we do not follow the pattern of Doubting Thomases. When Prohibition was suspended in 1974 or so, the women were very unhappy.

*திரு. வே. தங்கப்பாண்டியன் : 'ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர்' தி.மு.க. கட்சி சார்பாக நிறைய பேர் பெயர் கொடுத்திருக்கிறார்கள். பொதுவாக ஆளும் கட்சி வரிசையிலே ஒருவர் பேசினால், அடுத்தது எதிர்க்கட்சி வரிசையிலே இருப்பவர்கள் பேசுவார்கள். அதுதான் மரபு. அப்படி இருக்க ஏன் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இன்னும் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுக்கவில்லை. இந்தமாதிரி மரபைப் பின்பற்றாதது மிகப் பெரிய தப்பு. இந்த முறையை . . .*

*மாற்றுத் தலைவர் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன்) : இங்கே யார் யார் பேசுவது என்று பெயர்கள் எழுதப்பட்டிருக்கின்றன.*

*திரு. வே. தங்கப்பாண்டியன் : நாங்களும் பெயர் கொடுத்திருக்கிறோம்.*

*மாற்றுத் தலைவர் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன்) : இங்கே எழுதியிருக்கிற வரிசைப்படி தான் நான் பேச அழைத்தேன். எழுதியிருப்பதைப் பார்க்கலாம்.*

*திரு வே. தங்கப்பாண்டியன் : பின்பற்ற வேண்டும் என்று ஒரு முறை இருக்கிறதே, அதைப் பின்பற்ற வேண்டாமா ?*

Thirumathi MANDAKINI KRISHNAMOORTHI: Sir, I am willing to withdraw.

THIRU V. THNGAPANDIAN: Sir, I am not objecting to the hon. Lady Member making her speech.

Vice-Chairman (Thiru E. S. Venkatesan): The hon. Member Thiru Thangapandian's name is far below in the list of speakers given to me. I am calling the names of the speakers according to the list given to me.

THIRU V. THANGAPANDIAN: It does not matter whether it is written there or not. The main Opposition Party, the D.M.K. should be given its proper place.



1979 மார்ச் 16]

VICE-CHAIRMAN (Thiru E. S. Venkatesan): In the list with me, the first name is that of the hon. Lady Member. Then the names of Thiruvalargal Manickam and Pulamaipithan are there. Then only the name of Thiru Thangapandian is written. Hon. Chairman has fixed the order. I am only Vice-Chairman and I have to follow the list given.

THIRU V. THANGAPANDIAN: The members from the Ruling Party and from this side have been called. I was ready to speak expecting that I would be called next, on behalf of the Opposition Party, the D.M.K.

VICE-CHAIRMAN (Thiru E. S. Venkatesan): If the hon. Member wants, he may speak even now

THIRU V. THANGAPANDIAN: Because the hon. Lady Member has already been called, let her speak now.

VICE-CHAIRMAN (Thiru E. S. Venkatesan): I have followed only the list of speakers to be called and in the order in which it is written.

THIRU V. THANGAPANDIAN: The list is not a gospel which cannot be altered.

*திரு. ம. சங்கரலிங்கம் : மாற்றுத் தலைவர் அவர்களே, ஒரு பார்ட்டியில் ஒருவர் பேசினால் அடுத்து அடுத்த பார்ட்டியில் உள்ள ஒருவருக்குக் கொடுப்பது தான் முறை.*

*மாற்றுத் தலைவர் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன்) : நல்லசிவன், மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி, மாணிக்கம், மீனாட்சிசுந்தரம், புலமைப்பித்தன், வீராசாமி, தங்கப்பாண்டியன் என்று ஏற்கெனவே எழுதப்பட்டிருக்கிறது. அதன்படிதான் நான் கூப்பிட்டேன்.*

*திரு. ஆற்காடு நா. வீராசாமி : எழுதப்பட்டிருக்கிறதா என்பதைப்பற்றி அவர் கேட்கவில்லை. பொதுவாக ஆளும் கட்சி சார்பிலே ஒருவர் பேசினால், அடுத்து எதிர்த் தரப்பிலே இருக்கும் ஒருவர் பேசவேண்டும்.*

*மாற்றுத் தலைவர் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன்) : இப்போது பேசியது திரு. நல்லசிவன் அவர்கள்.*

*திரு. வே. தங்கப்பாண்டியன் :* பேசட்டும். அதுபற்றி ஒன்றுமில்லை, ஆனால் மரபைப் பின்பற்ற வேண்டும்.

*மாற்றுத் தலைவர் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன்) :* உறுப்பினர் வேண்டுமானால் இப்போது பேசலாம்.

THIRUMATHI MANDAKINI KRISHNAMOORTHI : Sir, I am not willing to talk now.

*திரு. ஆற்காடு நா. வீராசாமி :* திரு. தங்கப்பாண்டியன் அவர்கள் எழுப்புவது, அந்த அம்மாளை அடுத்துப் பேச அனுமதித்தீர்கள் என்பதல்ல பிரச்சினை. இருக்கின்ற பிரச்சினை எல்லாம், எதிர்க்கட்சி என்றால், அதற்குரிய ஒரு முக்கியத்துவத்தைக் கொடுக்கவில்லை . . .

*மாற்றுத் தலைவர் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன்) :* இப்போதே வேண்டுமானால் பேசலாம்.

*மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :* மாற்றுத் தலைவர் அவர்களே, இதைப் பெரிய விஷயம் ஆக்க வேண்டாம். எதிர்க்கட்சியில் உள்ள ஒருவரைப் பேசச் சொல்லலாம்.

*திரு. வே. தங்கப்பாண்டியன் :* ஏற்கெனவே சொல்லியிருந்தேன், என்னை கூப்பிட வேண்டும் என்று.

*மாற்றுத் தலைவர் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன்) :* சொல்லியிருந்தால் கூப்பிட்டிருப்பேன்.

*மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :* மன்னிக்க வேண்டும். மாற்றுத் தலைவர் அவர்களே, பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன், அடுத்து முக்கியமான எதிர்க்கட்சியாக இருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் யாராவது ஒருவர் பேசட்டும். மேலும், பலர் பேச இருக்கிறார்கள். அவர்களுக்கும் வாய்ப்புக் கொடுக்க வேண்டும்.

(பிற்பகல் 6-20)

THIRUMATHI MANDAKINI KRISHNAMOORTHI : Mr. Vice-Chairman, about 5 to 10 minutes have been taken from the time allotted to me and I hope you will allow me five minutes more. I will not take much time.



Both when the Law is lenient and when the law is very rigorous, we find opinions being expressed doubting the sincerity of the Act. As a social worker and as one who is connected with women's welfare, I find that the disturbances and noises at midnight have considerably stopped and the safety of women has improved now. Therefore, I would say that we welcome this law *in toto*. In every law there may be deficiencies and we can overcome them. The Government should appoint an Advisory Committee and that Committee should be a broad-based one. People who belong to a system which has faith in Prohibition should be made Members of that Committee. There should be Advisory Committees at the district level also. We have heard quite a number of complaints that if we go and complain to the Police, they take it amiss. Therefore, in the Advisory Committee, we should have a Prohibition Complaints Officer to whom the complaints could be made and who could keep the complaints as well as the sources of the complaints absolutely secret. Even at the Panchayat-level, Advisory Committees should be formed and equal representation should be given to all parties in those Committees so that the Members of those Committees might give their impression and also express their difficulties regarding the implementation of the law.

(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை)

Sir, I think that most of the hon. Members would have read a recent report of the World Health Organisation which says that 28 per cent of murders, nearly 50 per cent of rapes, nearly 28 per cent of thefts and nearly 60 to 70 per cent of the total crimes were committed when the offenders were under the influence of drink. This clearly shows that whatever income we may get by way of excise revenue on liquor is nothing when compared to the type of criminals who would grow in this world when they commit offences under the influence of liquor. Most of the people, nearly 70 per cent of them, are law-abiding. Only 25 to 30 per cent of the people are addicts or are beyond any improvement and beyond law. They may not be corrected. But, for the 70 per cent of people who are law-abiding some kind of strong reform and some strong treatment is necessary. Only then we can bring this law into action in a successful manner.

(Thirumathi Mandakini Krishnamoorthi) [1979 மார்ச் 16

Sir. I am very happy that this law has come into existence. Wherever there are difficulties, I am quite sure that the Hon. the Chief Minister and the Hon. the Law Minister would take note of them. I hope that they would make the law more flexible, more workable and more social welfare-oriented so that this law might be made a real success. Country after country is now thinking of introducing Prohibition. But, when we are making such a law, some of us are thinking otherwise. I would request my brothers here to think of the welfare of women and children. As a social worker, I would say that in most cases the women who come for assistance are those whose husbands are addicts and I know that they suffer very much. Therefore, in the interests of women's welfare and children's welfare, I plead that we should not treat this welfare law very lightly. We sometimes laugh over certain jokes in this Council when a very serious law is being considered. I would like this to be treated as a very very essential law. We have to learn a lesson from other countries so that we may become a forward State and also a model State for other States in India to follow.

Thank you.

திரு. வே. தங்கப்பாண்டியன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, அரசின் சார்பாக இங்கே தாக்கல் செய்யப்பட்டிருக்கிற மதுவிலக்கு சம்பந்தப்பட்ட மசோதாவின் மீது என்னுடைய கட்சியின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்லுவதற்கு மகிழ்ச்சியடைகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மதுவிலக்கில் பூரண நம்பிக்கையுண்டு. பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற காலத்திலே, தமிழகத்திலே மது விலக்குக் கொள்கை பின்பற்றப்பட வேண்டும் என்ற நல்ல உள்ளத்தோடுதான் மதுவிலக்குக் கொள்கையைத் தமிழக அரசு அமுல்படுத்தி வந்தது. அண்ணல் காந்தியடிகள் பிறந்த குஜராத்திலும், பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த இந்த மண்ணிலும்தான் மதுவிலக்குக் கொள்கையை ஏற்க வேண்டும் என்ற எண்ணம் தலைதூக்கி, இரண்டு அரசாங்கங்களும் அதைப் பின்பற்றி வருகின்றன. ஆனால் இன்றையதினம் புதிதாகக் கொண்டுவரப்பட்டிருக்கிற இந்தச் சட்டத்திலே பல்வேறு திருத்தங்களை உருவாக்கி, இந்த அரசாங்கம் இந்த மசோதாவைச் சட்டமன்றப் பேரவையிலே நிறைவேற்றி, மேலவையின் ஒப்புதலுக்காக வைத்திருக்கிறது. சட்டமன்றப் பேரவையிலே மக்களுடைய எண்ணங்களைப் பிரதிபலிக்கின்ற, மக்களுடைய உணர்வுகளுக்கு மதிப்பளிக்கிற



1979 மார்ச் 16] [திரு. வே. தங்கப்பாண்டியன்]

எதிர்க் கட்சிகள் எல்லாம் வெளிநடப்பைச் செய்திருக்கிறார்கள். அதற்கு மேலும் கூட, ஆட்சியில் இருக்கிற கட்சியின் சார்பாக, இருக்கிற பலத்தைக் காண்பித்து இந்த மசோதா நிறைவேற்றப்பட்டு, மேலவையின் பரிசீலனைக்கு இப்போது வந்திருக்கிறது. இதில் ஏற்கெனவே பல்வேறு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் ஒரு கருத்தைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். இந்த மசோதாவினுடைய நோக்கத்தைக் குறித்து, இந்த ஆட்சி பின்பற்றுகிற முறையைக் குறித்து, பலருக்குச் சந்தேகம் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். நானும் மிகத் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். இது ஒரு நல்ல சட்டம். நல்ல சட்டத்தை உருவாக்குவதிலே இந்த ஆட்சிக்கு இருக்கிற உள்நோக்கத்தை நாங்கள் ஒத்துக்கொள்ள முடியாது. இந்த சட்டத்தை அரசாங்கம், தூய நோக்கத்தோடு, புனித உள்ளத்தோடு, தமிழகத்தை ஒரு தவத்திரு நாடு போல ஆக்க வேண்டுமென்ற உணர்வோடு கொண்டு வந்திருக்கிறது என்றாலும், கொண்டுவந்த சட்டத்தை எந்த அளவுக்கு அவர்களால் பின்பற்ற முடிந்தது, எப்படி அதை நடைமுறைப்படுத்தியிருக்கிறார்கள் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். இவ்வளவு பிடிவாதமாக கடுமையான ஷரத்துக்களை உள்ளடக்கி இந்தச் சட்டத்தைக் கொண்டுவரும் இந்த அரசாங்கத்தைப் பார்த்துக் கேட்கிறேன், 'இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துகிறபோது, அதிகாரிகள் எந்த அளவுக்கு தங்களுக்குச் சாதகமாக இதைப் பயன்படுத்திக் கொள்ளுவார்கள் என்பதில் உள்ள சில சந்தேகங்களைக் கேட்க விரும்புகிறேன். இதைச் சொல்லுவதற்குக் காரணம், மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் சொன்னதைப் போல, அவசர நிலை காலத்திலே அதிகாரிகள் எப்படியெல்லாம் தங்கள் விருப்பம் போல் சட்டத்தை மாற்றியமைத்துக் கொண்டு தங்களைத் தாங்களே வளர்த்துக் கொண்டார்களோ அதே நிலைமைதான் வரும். இம் என்றால் வனவாசம், ஏன் என்றால் சிறைவாசம் என்று சொன்னார்களே, அதைப்போலவே இப்போது குவிக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தை வைத்துக்கொண்டு மற்றுமொரு எமர்ஜென்சியை உருவாக்க இந்தச் சட்டம் உதவி செய்யாதா என்று கேட்க விரும்புகிறேன். கடுமையான ஷரத்துக்கள் எல்லாம் சமுதாயத்தில் உள்ள தவறுகளைக் களைய வேண்டும் என்பதற்காகத்தான் என்று புனிதமாகப் பேசலாம். அறிஞர் அண்ணா அவர்கள் காலத்திலேகூட, கலைவாணரைப் பயன்படுத்திப் பிரச்சாரம் செய்தார்கள். மக்களுடைய மனத்தை மாற்ற, புதுமையான கருத்துக்களைத்

தோற்றுவிக்க, மது என்ற அரக்கன் ஒழிக்கப்பட வேண்டும், இல்லாவிட்டால் அது சமுதாயத்தைக் கெடுத்துவிடும் என்று பிரச்சாரம் செய்து, புதிய பாதையில் மக்களை அழைத்துச் சென்றார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக கோவையிலே நடைபெற்ற மாநாட்டில், மதுவிலக்கை ஓராண்டுக் காலத்திற்கு ஒத்தி வைக்க வேண்டும் என்று தீர்மானம் வந்தபோது, இன்றைய முதலமைச்சர் அவர்கள் அன்றைய தினம் மதுவிலக்கை ஒத்தி வைக்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்திப் பேசினார்கள். பொதுக் கூட்டத்திலே கூட அதைப்பற்றிப் பேசினார்கள். ஆனால் மதுவிலக்கைத் தமிழகத்திலே கொண்டுவர வேண்டும் என்பதில் யாருக்கும் இருவேறுபட்ட கருத்துக்கள் இல்லை. தமிழகத்திலே ஏற்பட்டிருக்கிற பொருளாதாரச் சீர்கேட்டைத் தொடர்புபடுத்தி, சமுதாயத்தில் ஏற்பட்டிருக்கக்கூடிய சில சமுதாய விரோதிகள் கள்ளச் சாராயம் காய்ச்சுவதைத் தடுக்க வேண்டும் என்பதற்காக, வீதியில் இருக்கும் ஏழை மக்களைப் பாதிக்கக் கூடிய வகையில் கடுமையாக்கப்பட்டிருக்கிற இந்தச் சட்டம், உல்லாசபுரியில் பாதுகாப்பாக வாழ்ந்துகொண்டு தப்பித்துக் கொள்ளுகிறார்களே, அவர்கள் மீது பாயாதே என்றுதான் நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளுகிறேன். ஒன்றைத் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சி வந்த பிறகும், ஏன் மதுவிலக்குச் சட்டம் கவர்னருடைய பெயரால் அவசரச் சட்டமாக அறிமுகப்படுத்தப்பட்டது? அப்போதே சொன்னார்கள்.

(பிற்பகல் 6-30)

கவர்னர் அவர்கள் தம்முடைய உரையிலே கூட பேசியிருக்கிறார்கள். மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அது இந்த அரசாங்கத்தினுடைய கொள்கை என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். 'எதிர்பார்த்த பலனை ஓரளவுக்கு இந்த அவசரச் சட்டம் அளித்துள்ளது. அந்த அளவுக்கு மக்கள் வாழ்வு உயரும். மதுவிலக்குத் திட்டத்தைச் செம்மையாகச் செயல்படுத்துவோம். இந்த அவசரச் சட்டத்தில் இடைக்காலத்தில் ஏற்பட்ட அனுபவத்தைக் கொண்டு சில மாற்றங்களைச் செய்து சட்டமாக்குவோம்' என்று சொன்னார்கள். அதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா? நான் மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன். ஏறத்தாழ அக்டோபர் மாதத்திலேயே போடப்பட்ட அவசரச் சட்டம், இன்று 4, 5 மாதங்களாக ஏற்பட்ட அனுபவத்தின் அடிப்படையில் மாற்றப்பட்டிருக்கிறதா? கவர்னர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அரசின் கருத்துதான் கவர்னர் உரையிலே சொல்லப்பட்டிருக்கிறது. அரசின் கருத்துக்களைத்தான்



கவர்னர் அவர்கள் உரையின் மூலமாக எடுத்து வைத்திருக்கிறார்கள். நாட்டிலே கிடைக்கின்ற அனுபவத்தைப் பயன்படுத்திக்கொண்டு, பொதுமக்கள் பிரதிநிதிகள் வாதப் பிரதிவாதங்களை வைத்துக்கொண்டு, இந்த மன்றத்திலே மக்கள் மன்றத்திலே பேசி, இந்த அரசாங்கம் அவசரச் சட்டத்திலே பல மாறுதல்களைச் செய்யும் என்று சொன்னார்கள். என்ன மாறுதல்களைச் செய்தார்கள்? இந்தச் சட்டம் அரசியல்வாதிகள் மீது பாயும், எதிர்க்கட்சிகள் மீது பாயும் என்று சொன்னபோது, இல்லை என்று சொன்னார்களே. உதாரணத்திற்குச் சொல்கிறேன், சென்னையிலே ஒரு நாள் ரெய்ட் நடத்தியிருக்கிறார்கள். ரெய்ட் யார் மீதெல்லாம் நடைபெற்றது? சென்னையிலே ரெய்ட் நடத்தப்பட்டபோது, ஒரே நேரத்திலே ரெய்ட் நடைபெறுகிறது என்றால், சென்னையிலே கிட்டத்தட்ட 20 லட்சம் மக்கள் வாழ்கின்றார்கள். அப்படி ரெய்ட் நடத்தியிருந்தால், ஏறத்தாழ ஒரு 10 ஆயிரம் வீடுகளிலாவது ரெய்ட் பண்ணியிருக்க வேண்டும். ஒரு 10 பேர்களையாவது கைது செய்திருக்க முடியும். அப்படி இருந்தாலும், சரி என்று சொல்லலாம். சில குறிப்பிட்ட நபர்கள் மீது நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். ஒரு டைரக்டர் மீது, ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் மீது, சினிமாத் துறையில் ஈடுபட்டிருப்பவர் ஒருவர் மீது எல்லாம் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். யாரெல்லாம் இந்த அரசாங்கத்திற்குப் பிடிக்காதவர்கள் என்று கருதுகிறார்களோ அவர்களெல்லாம் இந்த சட்டத்தால் பாதிக்கப்படுகிறார்கள். முந்தைய உதவி சபாநாயகர் திரு. சீனிவாசன் அவர்கள் அரசாங்கத்தைப்பற்றிக் கடுமையாக விமர்சிக்கிறார் என்பதற்காக அவருடைய வீட்டை இந்தப் பிரச்சினைக்காகச் சோதனை செய்யவில்லையா? ஆகவேதான் நீங்கள் இந்தச் சட்டம் கொண்டு வந்ததாலே நாங்களும் சந்தேகப்படுவதற்குக் காரணம் இருந்தது. இந்தச் சட்டத்திற்கு நீங்கள் தங்க முலாம் பூசி, இது நாட்டு மக்களுக்காக உங்களால் கொண்டுவரப்பட்ட ஒரு அற்புதமான சட்டம், இந்தச் சட்டத்தை நிறைவேற்றத்தான் இந்த ஆட்சி உருவாகியிருக்கிறது என்று சொன்னீர்கள். இப்படிச் சொல்லிவிட்டு, நீங்களும் இந்த அதிகாரிகளும் எப்படி இந்தச் சட்டத்தைத் துஷ்பிரயோகம் செய்துகொண்டிருக்கிறீர்கள் என்பதற்கு நூற்றுக்கணக்கான சான்றுகளை எங்களாலே தர முடியும். நாம் என்ன தபோவனத்திலா இருக்கிறோம், வாழ்ந்துகொண்டிருக்கிறோம்? மரவுரி தரித்துக்கொண்டா இருக்கிறோம்? மதுவிலக்கைக் கடுமைப்படுத்திவிடுவதனாலே மட்டும் நாட்டைச் சரிப்படுத்த முடியுமா? ஒழுக்கம் உருவாகிவிடுமா? குஜராத்தும் தமிழ்நாடும் ஒழுக்கத்தின் உச்ச கட்டத்தில் இருக்கின்றனவா? கருநாடக[illegible] பயன் போன்ற மாநிலங்கள் எல்லாம் சட்டமும் ஒழுங்கும் கெட்ட [illegible], அவர்கள் மதுவிலக்குச் சட்டத்தைக் கடுமைப்படுத்திவிட்டால் மட்டும், [illegible]றன.

ஒழுக்கத்தினுடைய ஒய்யாரமான இடத்திலே இருந்துவிடுவதாகச் சொல்ல முடியுமா? அல்லது இமாலயத்தின் சிகரத்திலே இருக்கிறது என்று சொல்ல முடியுமா? உலகத்திலேயே தனிப் பிரதிநிதித்துவம் வாய்ந்தது என்று சொல்லிக்கொள்ள முடியுமா? அப்படி அல்ல. நம் சமுதாயத்தைச் சீர் திருத்துவதற்குத்தான் நாம் சட்டம் கொண்டு வருகிறோம். ஒரு சட்டத்தின் மூலம் எதையுமே சரி செய்துகொள்ள முடியும் என்றால், நான் கேட்கிறேன்; இந்தத் தமிழகத்திலே எவ்வளவோ தவறுகள் நடக்கின்றனவே? குதிரைப் பந்தயம் தடுக்கப்பட வேண்டியது என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு திட்டம்தானே. அதைப் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒத்துக்கொண்டார்களா? அது நடைபெறுவதற்கு அனுமதித்திருக்கிறோமே.

நாட்டிலே விபச்சாரத் தடைச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு நடவடிக்கைகள் கடுமையாக எடுத்திருக்கிறோம். அந்த விபச்சாரத் தடைச் சட்டத்தின் மூலமாக விபச்சாரத்தை ஒழித்து விட்டோமா? சமுதாயத்தைத் திருத்த வேண்டும் என்று எண்ணும்போது, சில சட்டங்களைச் கொண்டு வருகிறோம். அந்தச் சட்டம் எல்லோருக்கும் ஒரே மாதிரியாக, சமமாக, இருக்க வேண்டும். காஷ்மீரத்திலிருந்து கன்னியாகுமரி வரை நாம் ஒரு சட்டத்தைப் போடுகிறோம் என்றால், அது ஒரே மாதிரி இருக்க வேண்டும். மத்திய அரசாங்கம் போடுகின்ற சட்டத்திற்கு ஒத்துவருகின்ற வகையிலே இந்தச் சட்டங்களை உருவாக்க வேண்டும். அரசியல் சட்டப்படி ஒவ்வொரு மனிதனுக்கும் ஜீவாதாரமான உரிமைகள் இருக்கின்றன. கொண்டுவரும் சட்டங்கள் மனிதனுடைய உரிமைகளைப் பாதிக்கின்ற அளவுக்கு இருக்கக் கூடாது. அவனுக்கு இருக்கின்ற Fundamental rights -க்கு பாதிப்பு வரக்கூடாது. கேரளத்திலே இருப்பவன், கருநாடகத்திலே இருப்பவன், பக்கத்திலே இருக்கின்ற பாண்டிச்சேரியில் இருப்பவன்—உங்கள் ஆட்சியிலே இருந்தபோது, அங்கே நீங்கள் கொண்டுவர முடியவில்லை—அதனால் பாதிக்கப்படவில்லை. அந்த மாநிலத்திலேயே உங்களால் அதை நடைமுறைப்படுத்த முடியவில்லை. அங்கேயும் நம் சட்டம் செல்லவில்லை. இங்கே ஆந்திராவைச் சுற்றிலும் வைத்துக்கொண்டு, மது விலக்குச் சட்டத்தை நம்மால் அமுல் செய்ய முடியாமல் இருக்கும்போது, இந்த மாநிலத்திலே மட்டும் அமுல் செய்கிறோம்.

மாண்பு... ...ன் ஒரு பிற்பட்ட சமுதாயத்திலே பிறந்தவன். மதுவினுடைய
ஏறத்தாழ ...யா என்னைப் பெற்ற பெரியோர்கள் அனுபவித்ததைப் பார்த்திருக்
4, 5 மாதங்க... எனக்கு மூத்தவர்கள் கூட இந்த சமுதாயத்தில் மிகப் பெரிய
கிறதா? கவ... ...ம் பட்ட. கஷ்டம், அவர்கள் இவர்களுக்குச் செய்த அட்டகாசங்கள்
கவர்னர் உ... ...தெரியும். சட்டத்தின் மூலம் ஒரு காரியத்தை [illegible]





தடுக்கலாம். சட்டத்தைக் காண்பித்து ஒரு சிலரை பயமுறுத்தலாம். நாம் சட்டத்தைக் கடுமையாக நாட்டிலே கொண்டு வந்து அதன் மூலமாகவே தனி மனிதனைச் சீர்திருத்தி விடலாம், சமுதாயத்தைச் சீர்திருத்தி விடலாம் என்று எண்ண முடியாது. இரண்டாயிரம் ஆண்டுகளாக முடியாமல் இருந்த ஒன்றை, ஒரு புதிய சட்டத்தைக் கொண்டு வந்து இந்த 2 வருடங்களிலேயே இந்த ஆளுங்கட்சி இருக்கும்போதே, செய்துவிட முடியும் என்று நம்புகிறார்களா என்று கேட்கிறேன். எமர்ஜென்சி இருந்தபோது, குடும்பநலத் திட்டத்தைக் கடுமைப்படுத்திவிட்டு, இந்தியா முழுமையும் அத் திட்டத்தின் மூலம் குடும்ப நலம் பெற்றுவிடும் என்ற நோக்கத்தோடு, எண்ணத்தோடு திரு. சஞ்சய் காந்தி முயற்சி எடுத்துக்கொண்டார். அந்தச் சட்டத்தைக் கொண்டு வந்து, அதை அமுல்படுத்த அதிகாரிகளிடம் கொடுத்துவிட்டார்கள். நல்ல நோக்கத்துடன்தான் அந்தச் சட்டத்தை அதிகாரிகளிடம் ஒப்படைத்தார்கள். அவர்கள் என்ன ஆட்டம் போட்டார்கள்? அவர்கள் அந்த அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்ததன் காரணமாக, அன்றைய ஆட்சியையே அது உருட்டிவிட்டது. இங்கும் அந்த நிலைமைதான் உருவாகும். நோக்கம் நல்ல நோக்கமாக இருக்கலாம். ஆனால் செயல்படுத்துபவர்கள் அதை எப்படிச் செயல்படுத்துகிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். இன்றைக்குப் போடப்பட்டிருக்கின்ற நம் சட்டத்தைப் பார்க்க வேண்டும். இங்கிலாந்திலே, அமெரிக்காவிலே இருக்கும் பார்லிமெண்டரி முறைதான் நம் நாட்டிலேயும் இருக்கிறது. அந்த அடிப்படையிலேதான் சட்டங்கள் போடப்படுகின்றன. ஆனால், இந்தச் சட்டத்தை வைத்து நீங்கள் என்ன செய்ய மாட்டீர்கள்? ஒருவரைப் பிடிக்கவில்லை என்றாலும், ஊரிலுள்ள பெரிய மனிதர்கள் இந்தக் கட்சிக் கருத்துக்கு ஒத்துவரவில்லை என்றாலும், ஒரு சப்-இன்ஸ்பெக்டரைக் கூப்பிட்டு அவர் மீது கள்ளச் சாராய வழக்கைப் போட்டோ, பாட்டில் வைத்திருந்ததாகவோ அவர்களைக் கைது செய்ய முடியும். நீங்கள் எதிர்க் கட்சியாகப் போய்விட்டால் நிலைமை என்ன ஆகும்? ஆளுங் கட்சியாக இருக்கும்போது, அந்தச் சட்டம் பாதுகாப்பாக இருக்கும். எதிர்க் கட்சியாக வரும்போது அந்தச் சட்டம் உங்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்படாதா? இருக்கின்ற ஆட்சி பழி வாங்குவதாக இருந்தால், என்ன ஆகும் என்பதைப் பார்க்க வேண்டும். நாம் போடுகின்ற சட்டத்தின் இரண்டு பக்கத்தையும் பாருங்கள். அது இரண்டு பக்கமும் தீட்டப்பட்ட கத்தியாக, வாளாக இருக்கிறது. நாம் அதைச் சரியாக நடத்துகின்ற முறையிலே, லாவகமாக நடத்துகின்ற முறையிலே, பயன்படுத்த வேண்டும் என்று அதிகாரிகளிடம் கொடுத்தாலுங்கூட, அவர்கள் இரண்டு பக்கமும் திரும்புவார்கள் என்று சொல்லிக்கொள்கிறேன்.

இதிலே ஒரு பிரிவு, அரசாங்க ஊழியர்கள் தவறு இழைத்தால், இந்த மதுவிலக்குக் குற்றத்தைச் செய்ததாகக் கண்டுபிடிக்கப்பட்டால், அவர்களுக்கு மூன்று மாதம் சிறைத் தண்டனை, அபராதம் என்று இருக்கிறது. இன்றைக்கு அரசாங்க அலுவலர்கள் மதுவிலக்கு சட்டத்தின்படி, ஒரு கிரிமினல் சட்டத்தின் பிரகாரம் தண்டிக்கப்பட்டுவிட்டார்களானால், அவர்கள் தொடர்ந்து பதவியில் இருக்க முடியாது. பதவியை இழக்க வேண்டிய நிலைதான் ஏற்படும். ஒருநாள் கிரிமினல் சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட்டால் கூட, தொடர்ந்து அரசாங்க அதிகாரியாக இருக்க முடியாது. மறுபடியும் தவறு செய்தால், அந்தத் தண்டனை இரட்டிக்கப்படும். மதுவிலக்குச் சட்டத்தின் கீழ் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டு, தண்டனை அளிக்கப்பட்டுவிட்டால், தொடர்ந்து அவரை அதிகாரியாக ஏற்றுக்கொள்ள முடியாது. அப்புறம் அவர் இரண்டாவது சாதாரண பிரஜையாகி விடுகின்றார். அவருக்கு இரண்டாவது முறையாகக் குற்றம் செய்தால், தண்டனை கொடுக்கப்படும் என்று சொல்கிறார்கள். அவர்களாகவே தங்களுடைய சட்டத்திலே ஒரு மிகப் பெரிய முரண்பாட்டை உருவாக்கியிருக்கிறார்கள்.

இன்னொன்றை நான் வேதனையோடு சொல்லிக்கொள்கிறேன். சில குடும்பங்களிலே குடும்பத்தினுடைய தலைவர், குடும்பத்தைக் கட்டிக் காக்கின்ற முதன் முகனாக இருப்பவர், மதுவிலக்குச் சட்டக் குற்றத்திற்காக தண்டிக்கப்படுகிறார். அவர் வளரும்போதே, இளம்பிராயத்திலிருந்தே குடிப்பழக்கத்திற்கு ஆளாகியிருப்பவர். அவர் அகப்பட்டுவிட்டால், என்ன ஆகும்? அவர் தான் சம்பாதித்து அந்தக் குடும்பத்தைக் காப்பாற்றுகின்றவராக முழுமுதல் பொறுப்பிலே இருப்பார். அப்பேர்ப்பட்டவர் இந்தக் குற்றத்திற்கு ஆளாக்கப்பட்டு சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டுவிட்டால், அந்தக் குடும்பம் நடுத் தெருவிலே நிற்காதா? அந்தக் குடும்பத்தைப் பாதுகாப்பதற்கு நிதி உதவி கொடுக்கப்படுகிறதா? மதுவிலக்குச் சட்ட அமுலைத் தீவிரப்படுத்துவதற்கு, கண்காணிப்பதற்கு என்று இந்தச் சட்ட முன்வடிவை அரசாங்கம் கொண்டு வருகிறது. அந்தக் குடும்பத்திற்கு இந்த அரசாங்கம் உதவி செய்ய முடியுமா? இந்தச் சட்டத்தின் காரணமாக தனிப்பட்ட மனிதனைக் கொடுமைக்குள்ளாக்குகின்றார்கள். இந்தச் சட்டத்தின் மூலமாக அந்தக் குடும்பத்தை அழிப்பதற்கு புதிய வழிமுறைகளை அரசாங்கம் வகுத்துக் கொடுத்திருக்கிறது. அதை இந்த அரசுக்கு எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தத் தனி மனிதனை மட்டும் குற்றவாளி ஆக்கும் கொடுமை மட்டுமல்ல, அவனுடைய குடும்பத்தையே நிர்மூலமாக்கும் நிலைமைகளை ஏற்படுத்தவே இந்தச் சட்டத்தை உருவாக்குகின்றீர்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





பக்கத்து மாநிலங்களில், தமிழகத்தில் மட்டுமல்லாமல், இந்தியா முழுவதிலும் இந்தச் சட்டம் பின்பற்றப்படுகிறது என்று இருக்கவேண்டும். அப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்ட பிறகு, நம் மாநிலத்திலும் இப்பேர்ப்பட்ட சட்டம் கொண்டுவர வாய்ப்பிருக்கிறது. இருக்கின்ற சட்டத்தை வைத்து மிரட்டுங்கள். ஏற்கெனவே இருந்த சட்டம்தான் இது என்று சொல்கிறார்கள், குடித்துவிட்டு ரோட்டிலே ஒருவன் அட்டகாசம் செய்கிறான் என்றால், அதைத் தடுப்பதற்குச் சட்டம் இருக்க வேண்டும். சமுதாய விரோதிகள் இதைப் பயன்படுத்துகிறார்கள், அவர்களைப் பிடியுங்கள். இந்தச் சட்டத்தினாலே மட்டும் நாம் ஒரு மிகப் பெரிய புனித சாம்ராஜ்யத்தை, ஒழுக்கமான நிலைமைகளை உருவாக்கிவிட முடியும் என்றால், நமக்கு முன்பு ஆண்டவர்கள் எல்லாம் விவரம் தெரியாமல் இருந்தவர்களா? இந்த 2 ஆண்டுகளில்தான் நாம் புதிய விவரங்களைக் கண்டுபிடித்து, நம்முடைய நாட்டிலே சமுதாயச் சீர்திருத்தங்களை உருவாக்குகிறோம் என்று நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளத் தயாராக இல்லை. எனக்கு ஞாபகம் வருகிறது.

"When wealth is lost, nothing is lost; when health is lost, something is lost; when character is lost everything is lost."

குணத்தை இழந்தால் நாம் எதையும் இழந்தவர்கள் என்பார்கள். மதுவிலக்குக் குற்றம் செய்துவிட்டால், அவர்கள் ஒழுக்கச் சீலர்கள் அல்ல என்றும் அவர்கள் கெட்டவர்கள் என்றும் இந்த நாட்டிலே கருத முடியுமா? எத்தனையோ தீய பழக்கங்கள் இருக்கின்றன. எத்தனையோ தீய பழக்கங்களை இந்த அரசாங்கம் தடுத்து நிறுத்தியிருக்க வேண்டும். போடுகின்ற சட்டம் ஒரு பெரிய அதிகார நோக்கோடு, சர்வாதிகார நோக்கோடு இருக்கக் கூடாது. இரண்டு முறை தவறு செய்துவிட்டால், நாடு கடத்துவோம் என்று சொல்கிறார்கள். 'காபிபோசா' சட்டத்தில் கூட கள்ளக்கடத்தல்காரர்கள், அயல்நாட்டுக்காரர்கள் வருகிறார்கள். அவர்கள் இந்த நாட்டிலே தவறு செய்கிறார்கள். அவர்கள் இந்த நாட்டிலே சிறைச்சாலையில் வைக்கப்படுகிறார்கள். அவர்கள் மீண்டும் தவறு செய்தால், அவர்களை அந்தமானுக்கு அனுப்புவது கிடையாது. தவறு செய்தவர்கள் திருந்த வேண்டும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள். அதன் காரணமாக ஒருவன் மீண்டும் தவறு செய்தால், அவன் இந்த மாநிலத்திற்கே தேவையில்லை என்ற அளவில் அவனை அனுப்பி விடுவது எப்படி சரி? அந்தக் குடும்பத்தையும் அவனோடு அனுப்பி வைத்துவிட்டு, அந்தக் குடும்பத்தினுடைய பாரம்பரையையே அழித்துவிடுவதா? இதையெல்லாம் நம்முடைய சட்டத்திலே போட்டுவிட்டு அதை அமுல் நடத்த முயற்சிப்பதைவிட, நடைமுறையிலே பிராக்டிகலாக என்ன நடக்கிறது என்று பார்க்க வேண்டும்.

[திரு. வே. தங்கப்பாண்டியன்] 1979 மார்ச் 16]

சபலங்கள் இருக்கின்றன. அங்கு இருக்கிறவர்களுக்கு அந்தப் சபலங்கள் இல்லை என்று சொல்ல முடியாது. இங்கிருந்து டெல்லிக்குப் போகிற அதிகாரிகள், டெல்லிக்குப் போனவுடன் தங்களை மாற்றிக்கொள்கிறார்கள். ஆனால் அவர்கள் மீண்டும் தமிழ் நாட்டிற்கு வரும்போது, எப்படி தங்களைத் திருத்திக்கொள்ள முடியும்? சில சட்டங்கள் வளைந்து கொடுக்க வேண்டும். பாதிக்கப்பட்ட குடும்பத்திலே பிறந்தவன் நான். ஒருவன் குடித்துவிட்டு, தெருவிலே அலைந்து, அந்தச் சமுதாயத்திற்கு, அந்தப் பகுதிக்கு நியூசன்சாக இருக்கிறான் என்றால், சட்டத்தின் மூலம் அதைத் தடுக்க வேண்டும். உறங்கிக் கொண்டிருக்கிறவனைப் பிடிக்க, சட்டம் துணையாக இருக்கிறது என்று சொல்லி, அதற்குத் துணையாக இருக்கக்கூடாதென்று கேட்டுக்கொள் கிறேன். அரசை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இதைப் புனர்பரிசீலனை செய்யுங்கள். செலக்ட் கமிட்டிக்கு அனுப்புங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் திருத்தம் கொடுத்திருக்கிறார்கள். இது கௌரவப் பிரச்சினையில்லை. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்த போதுகூட, கௌரவப் பிரச்சினையாக சட்டம் கொண்டுவந்தபோது, பேரவையில் டாக்டர் ஹண்டே போன்றவர்கள் கேட்டுக்கொண்டபோது, அது செலக்ட் கமிட்டிக்கு அனுப்பப்பட்டது. எனவே இதைப்பற்றி மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், பிற மாநிலச் சட்டங்கள், பிற நாட்டுச் சட்டங்கள் இதனுடன் ஒத்து வருகிறதா என்று பார்க்க வேண்டும். அண்ணா அவர்கள் காலத்தில்கூட சட்டம் இருந்தது, இப்படிப்பட்ட கடுமையில்லை. இந்திரா காந்தி அவர்கள் பிரதம அமைச்சராக இருந்தபோது, கருத்தடைத் திட்டம் கொண்டு வந்தார்கள். அது அந்த ஆட்சியே கவிழக் காரணமாக இருந்தது என்பதைச் சொல்லி, அதைப் போன்ற கடுமையான சட்டமாக இது இருக்கக்கூடாதென்று கேட்டு, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

